வெளியீடு: 28-10-2004 Issued: 28-10-2004

28 2005

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஜூலை 23, 2004—தொகுதி 58—எண் 2

Friday the 23rd July, 2004—Volume 58—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Chennai - 600 009

D
V211,31'P04
P04.58.2
226194

[Price Rs. 3.00

## 23-7-2004

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. அரசினர் தீர்மானம்—** | |
| விதி 32-ஐத் தளர்த்துதல் | 19-20 |
| **2. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிடாத வினாக்கள் பட்டியல்கள் 1 முதல் 7 | 20-513 |
| **3. அறிவிப்புகள்—** | |
| (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல் | 513 |
| (ஆ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆஇ) | 513 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—** | |
| (அ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004 | 514 |
| (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004 | 515 |
| **வரவு-செலவுத் திட்டம், 2004-2005, பொது விவாதம்—** | 516-650 |
| திரு. எச். ராஜா | 516-531, 532 |
| திரு. எம்.ஏ. ஹக்கீம் | 532-551 |
| திரு. கு. அன்பழகன் | 551-556 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. **வரவு–செலவுத் திட்டம், 2004–2005, பொது விவாதம்**—தொடர்ச்சி | |
| * திரு. பி.கே. சேகர்பாபு | 557-562 |
| * செல்வி சி. கனகதாரா | 563-570 |
| * திருமதி தமிழ்மொழி ராஜதத்தன் | 570-578 |
| திரு. எம். சக்திவேல் முருகன் | 579-595 |
| திரு. பி.எஸ். அருள் | 596-608 |
| * திரு. செ.கு. தமிழரசன் | 608-624 |
| * திரு. லா. சந்தானம் | 533, 624-636 |
| மாண்புமிகு திரு. சி. பொன்னையன் | 518, 519-520, 521, 522, 525-526, 531, 636-650 |
| 6. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 650-653 |


22/6/96

D.
V2'',31'P04
P04.58.2

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**ஆடி 8, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2035**

**2004 ஜூலை 23, வெள்ளிக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை".

வருமானம் வரக்கூடிய வழிகளை விரிவாக்கி, வளங்களையும் பெருக்கி, இடையூறுகளையும் ஆராய்ந்து நீக்கிட வல்லவரே செயலாற்றும் திறனுடையவர்.

### 1. அரசினர் தீர்மானம்

**விதி 32—ஐத் தளர்த்துதல்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று வினாக்கள்—விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையில் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்—விடைகள் என்றுள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ இன்று தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ள வேண்டும்"

எனக் கோருகிறேன்.

[2004 ஜூலை 23

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை. தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

இன்று வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

### @பட்டியல்கள் 1 முதல் 7

### பட்டியல் 1

**1—**

### குளங்கள் தூர் வாருதல்

**வினா எண் 1788—திரு. ஆர். சக்ரபாணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் சத்திரப்பட்டி கரிசல் குளம், பழனி சீரணூர், வடபருத்தியூர் குளங்கள் தூர் வாரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) ஒட்டன்சத்திரம் தொகுதியில் சத்திரப்பட்டி கரிசல் குளம் என்கிற கருங்குளம் வரத்து கால்வாய்களில் தூர் வாரும் பணி 2001-2002 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி நிதி மேம்பாட்டின்கீழ் ரூ.10.00 இலட்சம் ஒதுக்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேலும் பழனி சீரணூர் ஆலாங்குளம், வடபருத்தியூர் குளம் என்கிற கரிசல் செங்குளம் ஆகிய குளங்களில் 2002-2003 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஒதுக்கீட்டின் மூலம் ஒவ்வொரு குளத்திலும் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் தூர் வாரப்பட்டுள்ளது.

**2—**

### கசிவு நீர்க் குட்டை

**வினா எண் 23849—திரு. கி. பாரிமோகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மெணசி கிராமம், மேட்டுப்பட்டியில் கசிவு நீர்க் குட்டை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி வட்டம், மெணசி கிராமம், மேட்டுப்பட்டியில் கசிவு நீர்க் குட்டை அமைக்க கேட்கும் தளமானது பாதுகாக்கப்பட்ட கவரமலை வனப் பகுதியில் படுவக்காடு என்னுமிடத்தில் புளிய மரத்துப் பள்ளம் ஓடையின் குறுக்கே அமைந்துள்ளது. இத்தளத்தில் சுமார் 3 மி.க. அடி தண்ணீர்தான் கிடைக்கும். இதில் 4.5% பயன்பாட்டிற்கு எடுத்துக் கொண்டால் மீதமுள்ள தண்ணீர் 30 ஏக்கர் புன்செய் நிலத்தை நன்செய் நிலமாக மாற்றலாம். இதற்காக ரூ.25 இலட்சம் செலவிடப்பட

[2004 ஜூலை 23

வேண்டும். 3 ஏக்கர் பாதுகாக்கப்பட்ட வன நிலம் கையகப்படுத்தப்பட வேண்டும். இத்திட்டத்தின் பயன் செலவு விகிதம் 0.6:1 என மிகவும் குறைவாக உள்ளது. எனவே, இத்திட்டம் பொருளாதார ரீதியாக லாபகரமற்ற திட்டமாகும். மேலும் திட்டப் பகுதி வனப் பகுதியில் உள்ளதால் இத்திட்டத்தினை செயல்படுத்த சாத்தியம் இல்லை.

**3—**

## அமுதம் அங்காடிக்கு கட்டடம்

**வினா எண் 29322—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 56. வள்ளுவக்குடியில் அமுதம் அங்காடி (நியாய விலைக் கடை) கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:.**

(அ) மற்றும் (ஆ) வள்ளுவக்குடி கிராமத்தில் நியாய விலைக் கடை கட்டடம் கட்டுவதற்கு 2004-2005 ஆம் நிதியாண்டில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (அ) சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**4—**

## பொது விநியோகம்

**வினா எண் 31272—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்களுடன் வேறு பொருட்களை வாங்க வேண்டுமென நியாய விலைக் கடை ஊழியர்கள் கட்டாயப்படுத்துவதாக அரசிடம் புகார் ஏதாவது வந்ததா?



2004 ஜூலை 23]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நியாய விலைக் கடைப் பணியாளர்கள் குடும்ப அட்டைதாரர்கள் கட்டுப்பாட்டுப் பொருட்களை வாங்கும்போது கட்டுப்பாடற்ற பொருட்களான உப்பு, சமையல் எண்ணெய் வாங்க வற்புறுத்துவதாக அரசுக்கு புகார்கள் வரப்பெற்றுள்ளது. இனிவரும் காலங்களில் அம்மாதிரியான புகார்கள் பெறப்படாமல் கண்காணிக்குமாறு பொது விநியோகத் திட்ட அலுவலர்களுக்கும் நியாய விலைக் கடை பணியாளர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**5—**

## மலிவு விலை அரிசி

**வினா எண் 33474—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளவர்களுக்கு எவ்வளவு அட்டைதாரர் குடும்பத்திற்கு அரசு மலிவு விலையில் அரிசி வழங்கி வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

1-12-2003 அன்றைய நிலவரப்படி சேலம் மாவட்டத்தில் 29,102 நபர்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளதாக கருதப்பட்டு கிலோ ஒன்றிற்கு ரூ. 3.50 வீதம் மாதம் ஒன்றுக்கு 35 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது.

6—

## நியாய விலைக் கடை தணிக்கை

**வினா எண் 34703—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்ட வழங்கல் அலுவலரால் 2001-2002 ஆம் ஆண்டில் நியாய விலைக் கடைகளில் கண்டுபிடிக்கப்பட்ட குற்றங்கள் எத்தனை ?

(ஆ) அதனடிப்படையில் பணியிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எத்தனை ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்ட வழங்கல் அலுவலரால் 2001-2002 ஆம் ஆண்டில் 60 நியாய விலைக் கடைகளில் தணிக்கை செய்யப்பட்டது. அதனால் குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் காரணமாக பணியிலிருந்து எவரும் நீக்கப்படவில்லை.

7—

## நியாய விலைக் கடைகள் (பொருட்கள்)

**வினா எண் 43315—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் நியாய விலைக் கடைக்கு வந்து இறங்கும் உணவுப் பொருட்களை நியாய விலைக் கடைக்கு அனுப்பும் சமயத்தில் எடை போட்டு சீட்டு விபரம் எழுதி அனுப்பும் திட்டம் அரசு செயல்படுத்துமா ?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

கூட்டுறவுத் துறையினரிடமிருந்து பெறப்படும் தேவைப் பட்டியலின்படி நுகர்பொருள் வாணிபக் கிடங்குகளில் இருந்து அத்தியாவசியப் பொருட்களான அரிசி, கோதுமை மற்றும் உணவுப் பொருட்கள் கூட்டுறவுத் துறையினரால் பணிக்கப்பட்ட அலுவலர்கள் முன்னிலையில் தரம் பார்க்கப்பட்டு, பின்னர் ஒவ்வொரு மூட்டைகளும் சமச்சீர் எடை செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சமச்சீர் செய்யப்பட்ட பொருட்களை எடை மற்றும் தரத்துடன் பெற்றுக் கொண்டதற்கான பதிவுகள் வழங்கல் சீட்டில் பதியப்பட்டு கூட்டுறவு பிரதிநிதியின் கையொப்பம் பெறப்படுகிறது. மேலும் நியாய விலைக் கடைகளுக்கு செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் எடை, தரம் குறித்து கூட்டுறவுத் துறையினர் பார்வையிட்டு, அதனை வழங்கல் சீட்டில் குறித்து நியாய விலைக் கடைகளுக்கு அனுப்பப்படுகிறது.

8—

## கலப்பட தேயிலை விற்பனை

**வினா எண் 46726—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்பட தேயிலை விற்பவர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டத்தில் 2001 ஆம் ஆண்டில் 30 தேயிலை தொழிற்சாலைகளில் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, 14 இனங்களில் கலப்படம் கண்டறியப்பட்டு, நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதேபோல் 2002 ஆம் ஆண்டில் 45 தேயிலை தொழிற்சாலைகளிலும், 2003 ஆம் ஆண்டில் 15 தேயிலை

தொழிற்சாலைகளிலும் திடீர் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு, முறையே 2002 ஆம் ஆண்டில் 27 இனங்களிலும், 2003 ஆம் ஆண்டில் 5 இனங்களிலும் கலப்படம் கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

(2) 2003 ஆம் ஆண்டு சனவரி முதல் டிசம்பர் முடிய அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்து கைப்பற்றப்பட்ட தேயிலை மற்றும் தூள் மற்றும் கைப்பற்றுதலின் விலை ஆகியவை பின்வருமாறு:-

| மாதம் | அளவு குவிண்டாலில் பொருளின் விலை | கைப்பற்றப்பட்ட மதிப்பு ரூ. |
|---|---|---|
| ஜனவரி 2003 | 8050 கிலோ | 8,05,000 |
| பிப்ரவரி 2003 | 9001.50 கிலோ | 9,00,150 |
| மார்ச் 2003 | 10352.40 கிலோ (தேயிலைத் தூள் மற்றும் இதர பொருட்கள்) | 11,00,264 |
| ஏப்ரல் 2003 | 5000 கிலோ | 5,00,000 |
| மே 2003 | 4920 கிலோ | 4,92,000 |
| ஜூன் 2003 | .. | .. |
| ஜூலை 2003 | 9474 கிலோ (தேயிலை மற்றும் தேயிலைத் தூள்) | 1,98,977 |
| ஆகஸ்ட் 2003 | 4649.250 கிலோ (தேயிலை மற்றும் தேயிலைத் தூள்) | 5,28,901 |
| செப்டம்பர்2003 | 1300 கிலோ | 1,08,000 |
| அக்டோபர் 2003 | .. | .. |
| நவம்பர் 2003 | .. | .. |
| டிசம்பர் 2003 | .. | .. |



9—

## சிறுசேமிப்பு வசூல்

**வினா எண் 47491—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் சிறுசேமிப்பு வசூலில் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, வளர்ச்சிப் பணிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டில் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் சிறுசேமிப்பு வசூலில் உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, வளர்ச்சிப் பணிகளுக்காக 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.43.02 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அரசாணை எண் 607, நிதி (சே.சே)த் துறை, நாள் 5-12-2003-ல் சிறுசேமிப்பு நிகர வசூல் செய்ததன் அடிப்படையில் சேலம் மாவட்டத்திற்கு உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு வளர்ச்சிப் பணிகளுக்காக அரசு இத்தொகை அனுமதித்துள்ளது. இத்தொகை உள்ளாட்சி மன்றங்களைச் சார்ந்த பள்ளிகள், விடுதிகள், சத்துணவு மையங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றை பழுதுபார்க்கவும், குடிநீர் விநியோகம் தொடர்பான பணிகளைச் சீர்செய்யவும், சாலைகள், தெருக்கள், சமுதாய கட்டடங்களின் பழுது நீக்கி சீர்படுத்தவும் பயன்படுத்தப்படுகிறது.

10—

## உயர் நீதிமன்றத்தில் கழிப்பிட வசதி

**வினா எண் 35656—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) உயர் நீதிமன்றத்தில் புதிய கழிப்பறைகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) பழைய கழிப்பறைகள் பழுதுபார்க்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உயர் நீதிமன்றத்தில் பழைய கழிப்பறைகளுக்குப் பதிலாக புதிய கழிப்பறைகள் கட்டுவதற்கு ரூ. 9.68 லட்சம் செலவினத்துக்கு அரசாணை (நிலை) எண் 423, உள் துறை, நாள் 21-5-2003-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு புதிய கழிப்பறைகள் கட்டப்பட்டுவிட்டன.

**11—**

## மின்சார விநியோகம்

**வினா எண் 43048—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூரில் விவசாயத்திற்கு வழங்கும் சுழற்சி முறை இலவச மின்சாரத்தை மாற்றி 20 மணி நேரம் மின்சாரம் விநியோகம் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூர் பகுதிக்கு ஆதனக்கோட்டை 66/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து பகலில் 6 மணி நேரமும்/இரவில் 8 மணி நேரமும் மொத்தம் 14 மணி நேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. ஆலங்குடி பகுதி காவிரி ஆற்றுப் பாசன கிராமங்களுக்கு ஆலங்குடி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து பகலில் 12 மணி நேரமும்/இரவில் 8 மணி நேரமும் மொத்தம் 20 மணி நேரம் மும்முனை மின்சாரம் தமிழக அரசு ஆணைப்படி (அரசு ஆணை எண். 760, நாள் 24-4-1989) வழங்கப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 23]

இடையில் சிறிது காலம் ஆலங்குடி துணை மின் நிலையத்தில் திறன் மின் மாற்றியின் திறன் போதுமானதாக இல்லாத காரணத்தால் (2X10 எம்.வி.ஏ) ஆலங்குடி பகுதிக்கு மின்சாரம் ஆதனக்கோட்டை துணை மின் நிலையத்திலிருந்து வாராப்பூர் மின் பாதை மூலமாக நீட்டிக்கப்பட்டது. அப்போது ஆலங்குடி பகுதிக்கு வழங்கப்பட்ட 20 மணி நேர மும்முனை மின்சாரப் பயனை வாராப்பூர் பகுதியிலுள்ள நுகர்வோர்களும் பெற்றார்கள். ஆலங்குடி துணை மின் நிலையத்தில் (2X16 எம்.வி.ஏ.) புதிதாக திறன் மின்மாற்றி (2X10 எம்.வி.ஏ) திறன் மாற்றிகளுக்கு பதிலாக அமைக்கப்பட்ட பின்னர் ஆலங்குடி பகுதி கிராமங்களுக்கு ஆதனக்கோட்டை மின் நிலையத்திலிருந்து ஆலங்குடி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்திற்கு மாற்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. வாராப்பூர் பகுதிக்கு ஆதனக்கோட்டை 66/22 கி.வோ. துணை மின் நிலையத்திலிருந்து அந்தப் பகுதிக்குரிய 14 மணி நேர மும்முனை மின்சாரம் முறைப்படி தற்பொழுது வழங்கப்படுகிறது.

(ஆ) இப்போது உள்ள விதிகளின்படி புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், வாராப்பூர் பகுதிக்கு 20 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கும் சாத்தியக்கூறு இல்லை.

**12—**

## கோயில் திருப்பணி

**வினா எண் 10805—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, இராமக்கொண்டஅள்ளி ஊராட்சி, கோரிப்பாடி அருள்மிகு வீரபத்திரசுவாமி திருக்கோயிலின் மிகவும் பழுதடைந்துள்ள கட்டடங்களை செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி,

இராமகொண்டஅள்ளி ஊராட்சி, கோரிப்பாடி அருள்மிகு வீரபத்திரசுவாமி திருக்கோயில் திருப்பணிக்கு ரூ.1.70 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதியும், தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. திருப்பணிக்கான நிதிப் பங்கீட்டில் பொதுமக்கள் நன்கொடை ரூ.1,20,000/- எனவும், பொது நல நிதி ரூ.50,000/- எனவும் நிதி பங்கீடு செய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள் நன்கொடை வசூல் செய்தபின் பொது நல நிதி ரூ.50,000/- விடுவிக்கப்படும்.

**13—**

## கிரிவலப் பாதை சீரமைத்தல்

**வினா எண் 31060—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், திருவக்கரை கோயிலில் பௌர்ணமிக்கு பக்தர்கள் கூட்டம் கிரிவலம் வர சிரமப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆமெனில், கோயில் மூலம் கிரிவலப் பாதை சீரமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், திருவக்கரை, அருள்மிகு சந்திரமௌளீஸ்வரர் திருக்கோயிலின் மதிற்சுவருக்கு வெளிப்புறத்தில் உள்ள கிரிவலப் பாதை செப்பனிட்டு, கடந்த சித்திரா பௌர்ணமி (2002) அன்று போதிய மின் விளக்குகள் மற்றும் மண் சாலை அமைக்கப்பட்டு புதிதாக கிரிவலப் பாதை சீர் செய்யப்பட்டது.

**14—**

## கோயில் திருப்பணி

**வினா எண் 31699—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) திருவொற்றியூர் பெருமாள் கோயில் முழுவதும் பழுதடைந்துள்ளது. அது சரிசெய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் தொகுதி, காலடிப்பேட்டை, அருள்மிகு கல்யாண வரதராஜப் பெருமாள் திருக்கோயிலின் திருப்பணிகள் முடிவுபெற்று பொதுமக்கள் ஆதரவுடன் ரூ.1,65,281/- செலவில் 4-6-2003 அன்று கும்பாபிஷேகம் விமரிசையாக நடைபெற்றுள்ளது.

**15—**

## கோயில்களுக்கு இலவச மின்சாரம்

**வினா எண் 32142—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிடர்களின் கோயில்களுக்கு ஒரு விளக்கு அமைத்துத் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்து சமய மற்றும் அறநிலைய ஆட்சித் துறையின் ஆளுகையின்கீழ் உள்ள திருக்கோயில்களில் ஒரு விளக்கு கூட இல்லாத திருக்கோயில்களில், ஒரு விளக்காவது எரிய வேண்டுமென்ற சீரிய நோக்கில் இலவச மின்சாரம் வழங்கும் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. இதன்படி 2000-2001 ஆம் ஆண்டில் 1000 திருக்கோயில்களுக்கும், 2001-2002 ஆம் ஆண்டில் 1000 திருக்கோயில்களுக்கும் இலவச மின் திட்டம்

ஏற்படுத்தப்படுமென அரசால் அறிவிக்கப்பட்டது. இதன்படி 2000-2001 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 1000 திருக்கோயில்களில் ஆதிதிராவிடர்கள் பகுதியிலுள்ள 77 திருக்கோயில்களையும் சேர்த்து மொத்தம் 997 திருக்கோயில்களிலும், 2001-2002 ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்ட 1000 திருக்கோயில்களில் ஆதிதிராவிடர்கள் பகுதியில் உள்ள 92 திருக்கோயில்களையும் சேர்த்து மொத்தம் 919 திருக்கோயில்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேற்கூறியபடி 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்ட 2000 திருக்கோயில்களில், 1916 திருக்கோயில்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 84 திருக்கோயில்களில் மின் இணைப்பு பெற தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தின்கீழ் 2000-2001 மற்றும் 2001-2002 ஆம் ஆண்டுகளில், ஆதிதிராவிடர்கள் பகுதியிலுள்ள 169 திருக்கோயில்களில் இலவச மின் இணைப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின்படி திருக்கோயில்களில் மின் இணைப்பு பெற, மின் உபகரணங்கள் பொருத்த திருக்கோயில் ஒன்றுக்கு ரூ.1,200/- வீதம் 2000 திருக்கோயில்களுக்கு ரூ.24,00,000/- இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மூலம் மின் வாரியத்திற்குச் செலுத்தப்பட்டுள்ளது.

**16—**

## திருக்குளங்கள் தூர் வாருதல்

**வினா எண் 34969—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி, அருள்மிகு ரெங்கநாதர் கோயில் திருமங்கை ஆழ்வார் திருக்குளங்களை தூர் வார அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருநகரி, அருள்மிகு ரெங்கநாதர் திருக்கோயிலுக்கு (1) பொய்கை புஷ்கரணி, (2) தோடிக் குளம் மற்றும் (3) தாமரைக்குளம் என்ற மூன்று திருக்குளங்கள் சொந்தமாக உள்ளன.



மேற்படி மூன்று திருக்குளங்களும் திருநகரி ஊராட்சி மன்றத்தின் மூலம் வேலைக்கு உணவு திட்டத்தின் மூலம் தூர் வாரி சுத்தம் செய்யப்பட்டுள்ளது.

**17—**

## கோயில் திருப்பணிக்கு நிதி உதவி

**வினா எண் 34971—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருத்தோணிபுரத்திலுள்ள அருள்மிகு கன்னியம்மன் கோயில் கட்டி முடிப்பதற்கு இந்து சமய அறநிலையத் துறையால் வழங்கப்படும் ரூ. 25,000/- நிதி உதவி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருத்தோணிபுரத்திலுள்ள அருள்மிகு கன்னியம்மன் கோயில் கட்டி முடிக்கப்பட்டு, 23-5-2003 அன்று குடமுழுக்கு செய்யப்பட்டு, நல்ல நிலையில் உள்ளதால் திருப்பணிக்காக நிதி உதவி செய்யும் அவசியம் எழவில்லை.

**18—**

## திருக்கோயில் குடமுழுக்கு

**வினா எண் 37559—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கல்வராயன்மலை ஒன்றியம், வெள்ளிமலை முருகன் கோயிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் நடத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், கல்வராயன்மலை ஒன்றியம், வெள்ளிமலை அருள்மிகு முருகன் திருக்கோயில் பழங்குடியினர் நிர்வாகத்தில் உள்ளது. இத்திருக்கோயில் 19-6-1995-ல் குடமுழுக்கு செய்யப்பட்டு, தற்போது நல்ல நிலையில் உள்ளதால், இத்திருக்கோயிலை புதுப்பிக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.

19—

## கோயிலுக்கான சொத்து, மதிப்பு

**வினா எண் 39340—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு, சிங்கப்பெருமாள் கோயிலிலுள்ள நரசிங்கர் கோயிலுக்குரிய நிலங்கள் எவ்வளவு? அதன் மதிப்பு என்ன?

(ஆ) அதிலிருந்து பெறப்படும் குத்தகை பணம் அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு, சிங்கப்பெருமாள்கோயிலிலுள்ள நரசிங்கர் கோயிலுக்கு 35.47 ஏக்கர் நன்செய் நிலமும், 84.97 ஏக்கர் புன்செய் நிலமும் உள்ளது. இதன் மதிப்பு சுமார் ரூ.5 கோடி.

(ஆ) மேற்படி திருக்கோயில் நிலங்கள் ஆண்டுதோறும் பொது ஏலத்தின் மூலம் குத்தகைக்கு விடப்பட்டு அதன் அடிப்படையில் வருவாய் உயர்த்தி ஈட்டப்படுகிறது. மேலும் திருக்கோயிலுக்கு சொந்தமானதும், சிங்கப்பெருமாள்கோயில் கிராமத்திலுள்ளதுமான 43.69



ஏக்கர் நிலங்கள் தற்போது கரம்பாக உள்ளதால் அரசு சார்பு நிறுவனமான தமிழ்நாடு காகிதத்தாள் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. செங்குன்றம் கிராமத்திலுள்ள நிலத்தில் திருக்கோயில் நிர்வாகம் மூலம் பலன் தரும் மரங்கள் நட்டு வருவாய் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

20—

## திருக்கோயில்கள் எண்ணிக்கை

**வினா எண் 39346—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்கள் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) இதில் புகழ்பெற்ற ஸ்தலங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள திருக்கோயில்கள் மொத்தம் 1146.

(ஆ) இதில் புகழ்பெற்ற ஸ்தலங்கள் 276.

21—

## திருக்கோயில்கள் பராமரிப்பு

**வினா எண் 39347—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் உள்ள திருக்கோயில்கள் எத்தனை?

(ஆ) இக்கோயில்களின் பராமரிப்பிற்கு எவ்வளவு செலவாகிறது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு தொகுதியில் அறநிலையத் துறையின் நிர்வாகத்தில் 158 திருக்கோயில்கள் உள்ளன.

(ஆ) இத்திருக்கோயில்களின் வருமானம் கணக்கிடப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் செயல் அலுவலர் சம்பளம், சிப்பந்திகள் சம்பளம், செயல் அலுவலர் பயணப்படி மற்றும் சிப்பந்திகள் பயணப்படி, எழுதுபொருள், அச்சு செலவு, மின் கட்டணம், நித்திய பூஜை செலவுகள், மாதாந்திர மற்றும் வருடாந்திர உற்சவ செலவுகள், நில வரி, இலாகா உதவித் தொகை மற்றும் தணிக்கைக் கட்டணம் போன்ற அத்தியாவசிய செலவுகள் உட்பட ஒவ்வொரு திருக்கோயிலும் வருமானத்திற்கேற்ற வகையில் இதர செலவுகளான வழக்கு செலவு, சில்லரை மராமத்து போன்ற செலவுகளுக்கு, வரவு—செலவுத் திட்டம் தயாரித்து உதவி ஆணையர்/இணை ஆணையர் மற்றும் ஆணையர் ஆகியோரின் அங்கீகாரத்திற்கு அனுப்பி அங்கீகாரம் பெற்று மேற்கொள்ளப்படுகிறது. மேலும் விலைவாசிக்கேற்ப சில தலைப்புகளில் நிர்வாக காரணங்களால் கூடுதல் செலவுகள் ஏற்படக்கூடிய வாய்ப்புகள் உண்டு. மேலும் சட்ட விதிகளின்படி நிர்வாக செலவுகளுக்கேற்ற ஒரு குறிப்பிட்ட சதவீதம் திருக்கோயில் வருமானத்திற்கேற்ப நிர்ணயிக்கப்பட்டு அதற்குள் மேற்கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**22—**

## ஆலயத்தின் வருமானம்

**வினா எண் 39351—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத்தின் மூலம் வரும் ஆண்டு வருமானம் எவ்வளவு?





விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் ஆலயத்தின் மூலம் கடந்த மூன்று பசலிகளின் (ஆண்டுகளின்) வருமானம் பின்வருமாறு:—

| வ.எண். | பசலி | மொத்த வரவினம் ரூ. |
|---|---|---|
| 1. | 1410 | 13,86,115.60 |
| 2. | 1411 | 11,71,459.00 |
| 3. | 1412 | 12,38,244.15 |

**23—**

## கோயில் வருமானம்

**வினா எண் 39352—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு நகரம், அருள்மிகு சித்தி விநாயகர் கோயிலில் உண்டியல் மற்றும் அன்பளிப்பு மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் எவ்வளவு வருமானம் கிடைத்துள்ளது?

(ஆ) அதில் கோயில் பராமரிப்புக்கு எவ்வளவு தொகை செலவிடப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம் மற்றும் நகர், அருள்மிகு சித்தி விநாயகர் திருக்கோயிலில் 2001-2002 ஆம் நிதியாண்டில் உண்டியல் மூலம் ரூ.4,17,323.35-ம், நன்கொடையாக ரூ.4,939/-ம், ஆக மொத்தம் ரூ.4,22,262.35 வருமானம் வரப்பெற்றுள்ளது. அதில் ரூ.1,05,320/- பராமரிப்பு செலவு செய்யப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 23

24—

## கோயில் வருமானம்

**வினா எண் 39354—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டின் திருப்போரூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி கோயிலில் உண்டியல் வருமானம் எவ்வளவு?

(ஆ) அர்ச்சனை சீட்டு, சிறப்புக் கட்டணம் மூலம் பெறப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) ரூ.16,35,869.70

(ஆ) அர்ச்சனை சீட்டுகள் மூலம் ரூ. 2,05,460/-ம், சிறப்புக் கட்டணம் மூலம் ரூ.3,05,830/-ம் வருமானமாக வரப்பெற்றுள்ளது.

25—

## விடுதிகள்

**வினா எண் 39358—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு விடுதி ஏற்படுத்தித்தர அரசு முன் வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வரும் பக்தர்கள் தங்குவதற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய இரு அறைகளைக் கொண்ட தங்கும் விடுதி ஒன்று உள்ளது. மேலும் இத்திருக்கோயிலில் போதிய நிதி ஆதாரமில்லை என்பதால் பெரிய அளவில் பக்தர்களுக்காக தங்கும் விடுதி கட்ட இயலாத நிலை உள்ளது.



2004 ஜூலை 23]

26—

## ஆசிரியர் நியமனம்

**வினா எண் 36726—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, "வினாயகம் பள்ளிக்கு" கூடுதலாக இரண்டு ஆசிரியர்கள் நியமிக்க வேண்டிய நடவடிக்கைக்கு அரசு இசைவு அளிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு தொகுதி, காஞ்சிபுரம் மாவட்டத்தில் "வினாயகம் பள்ளி" என்ற பெயரில் பள்ளி ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

27—

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 37138—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பணிக்கன்குப்பம் ஊராட்சியிலுள்ள ஆர்சி. மிடில் பள்ளிக்கு கூடுதலாக ஆசிரியர் இருவர் பணியில் அமர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) பணிக்கன்குப்பம், ஆர்.சி. நடுநிலைப் பள்ளியில் 1-8-2002–ல் உள்ளபடி மாணவர் சராசரி வருகைக்கேற்ப 18 ஆசிரியர்கள் பணிபுரிகின்றனர். எனவே, இப்பள்ளியில் கூடுதலாக ஆசிரியரை அமர்த்த வேண்டிய தேவை எழவில்லை.*

*(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.*

**28—**

**பயிற்சி மையம்**

**வினா எண் 38066—திரு செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டத்தில், இந்திய ஆட்சிப் பணிக்கு தேர்வு எழுத பயிற்சி மையம் ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை. தமிழ்நாட்டிலுள்ள மகளிர் ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். போட்டி தேர்வுகளில் கலந்துகொள்ள ஏதுவாக சிறப்பு இலவச பயிற்சி மையங்கள் சென்னை-4, இராணி மேரி கல்லூரி மற்றும் மதுரை, அருள்மிகு மீனாட்சி அரசு மகளிர் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் 2001-2002 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகின்றன. மாநிலத்தில் உள்ள அனைத்து பகுதிகளில் இருந்தும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் வகுப்பை சேர்ந்தவர்கள் ஐ.ஏ.எஸ்/ஐ.பி.எஸ். போன்ற உயர் பதவிக்கான தேர்வுகளில் வெற்றி பெறுவதற்கு ஏதுவாக சென்னையில் தனித்தனி சிறப்பு பயிற்சி மையங்கள் உள்ளன.*

*இப்பயிற்சி மையங்களில் அகில இந்திய பணி மற்றும் மத்திய அரசுப் பணிகளுக்கான (All India Service and Central Services Examinations) தேர்வில் மகளிர் கலந்து கொள்ளும் பொருட்டு இலவச பயிற்சி அளிக்கப்பட்டு*



*வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டிற்கும் மேற்காண் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. உயர் கல்வி பயின்ற ஆண், பெண், இரு பாலரும் பயிற்சி பெறும் வகையில் அரசு பயிற்சி மையங்கள் ஏதும் இல்லை. ஆனால் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் ஆதிதிராவிடர், பழங்குடியினர் பயிற்சி பெற அரசு பயிற்சி மையங்கள் உள்ளன. மேற்கண்ட நிலையில் இந்திய ஆட்சிப் பணி தேர்வு எழுத சேலம் மாவட்டத்தில் பயிற்சி மையங்கள் அமைக்க உத்தேசம் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.*

*(ஆ) இக்கேள்வி எழவில்லை.*

**29—**

**ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்**

**வினா எண் 28253—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கேற்ப போதுமான அளவில் 1412 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், எருக்கூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.*

**30—**

**மருத்துவமனையில் கூடுதல் வசதி**

**வினா எண் 34137—திரு. ஜெ. குரு (எ) குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை அரசு மருத்துவமனையில் கூடுதல் வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டிமடம் தொகுதி, செந்துறை அரசு மருத்துவமனையில் கூடுதல் வசதி செய்து தரும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

**31—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 34462—திரு. ஜெ. குரு (எ) குருநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிமடம் தொகுதி, மருதூர் கிராமத்திற்கு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கேற்ப 1412 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் பெரம்பலூர் மாவட்டம், ஆண்டிமடம் ஊராட்சி ஒன்றியம், மருதூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.



2004 ஜூலை 23]

**32—**

## இலவச கணினிப் பயிற்சி

**வினா எண் 19876—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட சீர்மரபினருக்கு, இலவச கணினிப் பயிற்சி அளிக்க எந்தெந்த மாவட்டங்களில் மாணவ, மாணவியர்களைத் தேர்ந்தெடுக்க அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) சேலம் மாவட்டத்தில் எவ்வளவு பேரைத் தேர்ந்தெடுக்க அரசு உத்தேசித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 2001-2002 ஆம் ஆண்டில் அனைத்து மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 4077 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மாணவ, மாணவியர்களுக்கு இலவச சிறப்பு உயர்நிலை கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மேலே அ-வில் குறிப்பிடப்பட்ட திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்தில் 190 மாணவ, மாணவியர்கள் பயற்சி பெற்றுள்ளனர்.

**33—**

## இலவச கல்வித் திட்டம்

**வினா எண் 41544—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள மிகவும் பிற்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்களுக்கு இலவச கல்வித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எவ்வளவு?

[2004 ஜூலை 23

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஏற்காடு தொகுதியில் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர்கள் 639 பேருக்கு ரூ.1,82,875/- கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

**34—**

## விதவை, முதியோர் உதவித் திட்டம்

**வினா எண் 33095—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் ஆதரவற்ற விதவை, முதியோர் உதவித் திட்டம் மூலம் பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் சராசரியாக மாதம் ஒன்றுக்கு முதியோர் உதவித் தொகை மற்றும் தொடர்புடைய இதர உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ் பயன்பெற்ற பயனாளிகளின் எண்ணிக்கை மொத்தம் 22,390 நபர்கள். புதுக்கோட்டை தொகுதியில் மட்டும் 5024 நபர்கள்.

(ஆ) அதன் விவரம் பின்வருமாறு:

| திட்டத்தின் விவரம் | பயனாளிகளின் எண்ணிக்கை புதுக்கோட்டை மாவட்டத்தில் | பயனாளிகளின் எண்ணிக்கை புதுக்கோட்டை தொகுதியில் |
|---|---|---|
| 1. முதியோர் உதவித்தொகை | 9,695 | 2,321 |
| 2. உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை | 1,088 | 303 |
| 3. விதவை உதவித் தொகை | 8,692 | 1,842 |
| 4. ஆதரவற்ற விவசாயக் கூலி உதவித் தொகை | 1,331 | 208 |
| 5. கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை | 1,584 | 350 |
| மொத்தம் | 22,390 | 5,024 |



**35—**

## மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

**வினா எண் 35706—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் எத்தனை?

(ஆ) இக்குழு மூலம் பயன் அடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை தொகுதியில் மொத்தம் 620 மகளிர் சுய உதவிக் குழுக்கள் உள்ளன. மொத்தம் 9760 உறுப்பினர்கள் உள்ளனர்.

(ஆ) இக்குழுக்களுக்கு அளிக்கப்பட்ட பல்வேறு பயிற்சிகள் மூலம் பயன் அடைந்தோர் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| தொழில் முனைவோர் மேம்பாட்டுப் பயிற்சி பெற்றவர்கள் | - | 120 |
| வாழ்க்கைத் தொழில் பயிற்சி பெற்றவர்கள் | - | 756 |
| சுயஉதவிக் குழு பயிற்சி பெற்றவர்கள் | - | 5840 |
| ஊக்குநர் மற்றும் பிரதிநிதி பயிற்சி பெற்றவர்கள் | - | 8216 |

| | | |
|---|---|---|
| கடன் தொடர்பு ஏற்படுத்தப்பட்ட மொத்த உறுப்பினர்கள் | .. | 3810 |
| மொத்தம் வழங்கப்பட்ட கடன் தொகை | .. | ரூ.60.72 இலட்சம் |

36—

## மலைவாழ் மக்கள் நலன்

**வினா எண் 37437—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், மலைவாழ் மக்களுக்காக ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்காடு தொகுதியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டம் செயல்படுகிறது.

(ஆ) 56 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்களில், 239 எண்ணிக்கையில் உள்ள 0-36 மாத குழந்தைகள், 185 கர்ப்பிணி பெண்கள் மற்றும் 201 பாலூட்டும் தாய்மார்கள் இணை உணவு பெறுகிறார்கள். மேலும், 3-5 வயது உள்ள 1270 குழந்தைகள் மதிய உணவு மூலம் பயன்பெறுகிறார்கள். 462 முதியோர்களும் மதிய உணவு பெறுகிறார்கள்.

37—

## ஊனமுற்றோர் ஒய்வூதியத் திட்டம்

**வினா எண் 37441—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) ஏற்காடு தொகுதியில், ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம், ஏற்காடு தொகுதியில் ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) 330 பயனாளிகள் பயனடைந்துள்ளர்.

38—

## ஒய்வூதியத் திட்டம்

**வினா எண் 37442—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஏற்காடு தொகுதியில் ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர் ஓய்வூதியத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) 230 பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

[2004 ஜூலை 23

39—

### அரசு உதவிபெறும் முதியோர் இல்லங்கள்

**வினா எண் 37945—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டத்தில் செயல்படும் முதியோர் இல்லங்களில் அரசு உதவி பெறும் நிறுவனங்கள் எங்கெங்கு செயல்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போது அரசு மானிய உதவியுடன் செயல்படும் முதியோர் தொண்டு நிறுவனங்கள் ஏதும் இல்லை. மானியம் கோரிய கருத்துருக்களும் ஏதும் பெறப்பட்டு பரிசீலனையில் இல்லை.

40—

### மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கூட்ட அரங்கம்

**வினா எண் 39327—திரு. ப. அரசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் கலந்து விவாதிக்க கூடும் அரங்கம் கட்டித் தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சுயஉதவிக் குழுக்களின் கூட்டம் அங்கன்வாடி மையங்களில் நடக்க அனுமதிக்கலாம் என அரசு ஆணை (நிலை) எண் 33, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 8-3-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மாலை நேரங்களில் குழந்தை நல மையங்களை மூடுவதற்கு முன்பு அம்மையத்தில் உள்ள பெரிய அறையில் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கூடிப் பேசவும், கூட்டங்கள் நடத்திடவும் அரசு அனுமதி அளித்துள்ளது. எனவே, சுயஉதவிக் குழுக்கள் கலந்து விவாதிக்க கூடும் அரங்கம் கட்டித் தரும் திட்டம் எதுவும் இல்லை.



2004 ஜூலை 23]

41—

### அங்கன்வாடிக் கட்டடம்

**வினா எண் 43022—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தவர்க்கோட்டை ஒன்றியம், அண்டனூர் ஊராட்சி, வேலாடிப்பட்டி, மஞ்சம்பட்டி ஆகிய மூன்று கிராமங்களில் அங்கன்வாடிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கு கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

### அங்கன்வாடிக் கட்டடம்

**வினா எண் 43023—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தவர்க்கோட்டை ஒன்றியம், நெப்புகை ஊராட்சி மற்றும் ஒத்தவீடு ஆகிய கிராமங்களில் அங்கன்வாடிக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது புதிய அங்கன்வாடி மையக் கட்டடம் கட்டுவதற்கு கருத்துருக்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 ஜூலை 23

43—

## மகளிர் கூடம்

**வினா எண் 43960—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, பனைக்குளம் ஊராட்சியில், காட்டுக்குளம் புதூர் மற்றும் திருக்காணையில் மகளிர் கூடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுயஉதவிக் குழுக்களின் கூட்டம் அங்கன்வாடி மையங்களில் நடக்க அனுமதிக்கலாம் என அரசு ஆணை (நிலை) எண் 33, சமூக நலம் (மற்றும்) சத்துணவுத் திட்டத் துறை, நாள் 8-3-2002-ல் ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மாலை நேரங்களில் குழந்தை நல மையங்களை மூடுவதற்கு முன்பு அம்மையத்தில் உள்ள பெரிய அறையில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கூடிப் பேசவும், கூட்டங்கள் நடத்திடவும் அரசு அனுமதி அளித்துள்ளது. எனவே சுயஉதவிக் குழு உறுப்பினர்களுக்கென தனியாக மகளிர் கூடம் கட்டித் தரும் திட்டம் எதுவும் இல்லை.

44—

## மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு கட்டடம்

**வினா எண் 45708—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அகர வட்டாரம் ஊராட்சி, தோப்பு வட்டாரம் மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு கட்டடம் கட்டித் தருவதற்கு அரசு முன் வருமா?



2004 ஜூலை 23]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுயஉதவிக் குழுக்களின் கூட்டம் அங்கன்வாடி மையங்களில் நடக்க அனுமதிக்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் மாலை நேரங்களில் குழந்தை நல மையங்களை மூடுவதற்கு முன்பு அம்மையத்தில் உள்ள பெரிய அறையில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கூடிப்பேசவும், கூட்டங்கள் நடத்திடவும் அரசு அனுமதி அளித்துள்ளது. எனவே, மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு தனியாக கட்டடம் கட்டித் தரும் திட்டம் எதுவும் இல்லை.

45—

## ஆதிதிராவிட மாணவர்களுக்கு சீருடை வழங்கல்

**வினா எண் 20269—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதிதிராவிட மாணவ-மாணவியருக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர் பயன் அடைந்துள்ளனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பயனடைந்த மாணவ-மாணவியர் எண்ணிக்கை 412 பேர்கள்.

[2004 ஜூலை 23

46—

## செவிலியர் பயிற்சி

**வினா எண் 36440—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் எவ்வளவு பேருக்கு தொழிற்பயிற்சி திட்டத்தின் கீழ் செவிலியர் பயிற்சி அரசு அளித்தது?*

*(ஆ) செவிலியர் பயிற்சியின்போது பயிற்சியாளருக்கு அரசு அளித்த உதவித் தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு தொழிற்பயிற்சி திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 65 பேர்களுக்கு செவிலியர் பயற்சி அளிக்கப்பட்டது.

(ஆ) செவிலியர் பயிற்சியின்போது பயிற்சியாளர்களுக்கு ரூ.5.04 இலட்சம் உதவித் தொகை வழங்கப்பட்டது.

47—

## இலவச பாடப் புத்தகம்

**வினா எண் 41583—திரு. கா.தி. இளையகண்ணு:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவர்களுக்கு பாடப் புத்தகம் மற்றும் குறிப்பேடுகள் இலவசமாக வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2898 மாணவ-மாணவிகள் பயனடைந்துள்ளனர்.*

48—

## உயர் கல்வி கற்க கடனுதவி

**வினா எண் 41589—திரு. கா.தி. இளையகண்ணு:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஏற்காடு தொகுதியில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் உயர் கல்வி படிக்க கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) இரண்டு மாணவிகளுக்கு தலா ரூ.6,500 வீதம் ரூ.13,000 வழங்கப்பட்டுள்ளது.*

49—

## சுயதொழில் செய்ய கடனுதவி

**வினா எண் 43210—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் காந்தி நகரிலுள்ள ஆதிதிராவிட மக்களுக்கு சுயதொழில் புரிந்திட கடனுதவி அளித்திட அரசு முன்வருமா?*

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) விண்ணப்பங்கள் பெறப்பட்டால் அவை உரியவாறு பரிசீலிக்கப்பட்டு, தகுதிபெறும் விண்ணப்பதாரர்களுக்கு கடன் உதவிகள் வழங்கப்படும்.

**50—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா எண் 11188—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம்-பெரும்பாலை வரை வரும் ஒரு நகரப் பேருந்தை பெரும்பாலை அடுத்த புதூர் (5 கி.மீ.). வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பெண்ணாகரம் முதல் பெரும்பாலை வரை நகரப் பேருந்து ஏதும் இயக்கப்படவில்லை. பெண்ணாகரத்திலிருந்து பெரும்பாலை வழியாக சாமத்தான் வரை தடம் எண் என்.03 நகரப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. இத்தடத்தின் நீளம் 33.0 கி.மீ ஆகும். இத்தடத்தை பெரும்பாலையிலிருந்து புதூர் வரை நீட்டித்து இயக்கினால் தடத்தின் நீளம் 42.0 கி.மீ. ஆகிறது. அரசு ஆணை (நிலை) எண் 1206, உள் (போக்குவரத்து) துறை, நாள் 05-08-1993-ன்படி யாதொரு பேருந்து வசதியும் இல்லாத கிராமங்களுக்கு மட்டும் 25 கி.மீ. வரை நகரப் பேருந்து நீட்டித்து இயக்க இயலும். புதூர் கிராமத்திற்கு ஏற்கெனவே பேருந்து வசதி உள்ளதாலும், நீட்டித்து இயக்க கோரும் தடத்தின் நீளம் 42.0 கி.மீ. ஆக உள்ளதாலும், என். 03 நகரப் பேருந்தை புதூர் வரை நீட்டித்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**51—**

## பேருந்தை மீண்டும் இயக்குதல்

**வினா எண் 14188—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, எடப்பாடி-ராயவேலூர் பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

எடப்பாடியிலிருந்து ராயவேலூருக்கு நேரடி பயணிகள் போக்குவரத்து போதுமான அளவு இல்லாத நிலையில் பகுதிவாரியாக கீழ்க்கண்டவாறு பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது:

| பகுதி | பேருந்துகளின் எண்ணிக்கை | நடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| எடப்பாடி-சேலம் | 15 | 140 |
| சேலம்-ராயவேலூர் | 40 | 80 |

மேற்கண்ட பேருந்து வசதியே இவ்வழித்தடத்தின் போக்குவரத்து தேவையைப் பூர்த்தி செய்யப் போதுமானதாக உள்ளது. எடப்பாடி-ராயவேலூருக்கு விரைவுப் பேருந்து எதுவும் இயக்கப்படவும் இல்லை, நிறுத்தப்படவும் இல்லை. நீண்ட தூரப் பயணிகளின் நலனை கருத்திற்கொண்டு, பயணிகளின் தேவைக்கு ஏற்ப மாவட்டம் மற்றும் முக்கிய நகரங்களுக்கு விரைவுப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் எடப்பாடி-ராயவேலூர் தடத்தில் விரைவுப் பேருந்து இயக்குவதற்கான திட்டம் ஏதுமில்லை.

**52—**

## பேருந்து வசதி

**வினா எண் 14862—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், சிவன்மலை, கோவில்பாளையம், வேலாயுதம்பாளையம், பொட்டாரப்பாளையம், பூமாண்டவலசு, கீரனூர் ஆகிய ஊர்கள் வழியாக மாலை 7 மணிக்கு மேல் பேருந்து வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* காங்கேயத்திலிருந்து சிவன்மலை, கோவில்பாளையம், வேலாயுதம்பாளையம், பொட்டாரப்பாளையம், பூமாண்டவலசு, கீரனூர் வழியாக தடம் எண் சி 12 மற்றும் சி 14 ஆகிய இரு பேருந்துகள் மூலம் முறையே 2 தனி நடைகள் மற்றும் 2 தனி நடைகள், ஆக 4 தனி நடைகள் இயக்கப்படுகின்றன. இதில் சி 12 வழித்தடப் பேருந்து காங்கேயம்-சென்னிமலை காலை 7–20-க்கும், சென்னிமலையில் இரவு 9-45 மணிக்கும், கோரிக்கை வழியே இயங்குகிறது. மேலும் சென்னிமலையிலிருந்து வடுகபாளையம், வழி–வெப்பிலி, ராமலிங்கபுரம், ஒரத்துப்பாளையம், பாப்பம்பாளையம், தேனீஸ்வரம்பாளையம் (அ) கரட்டுப்பாளையம் வழித்தடத்திலும், சென்னிமலையிலிருந்து உப்பிலிபாளையம், கே.ஜி. வலசு, புதுவலசு வழியாக குப்பிச்சிபாளையம் வழித்தடத்திலும் இயக்கப்படுகிறது. இதில் மாலை 7-15-க்கு சென்னிமலையில் புறப்பட்டு வடுகபாளையம் வரை இயங்கி வருகிறது. தடம் எண் சி 12 பேருந்தின் பயணிகள் அடர்வு 36.84% ஆகும். தடம் எண் சி 14 பேருந்தானது காங்கேயத்தில் காலை 6 மணிக்கும், சென்னிமலையில் இரவு 9-15 மணிக்கும் புறப்பட்டு கோரிக்கை வழியே இயங்குகிறது. மேலும், சென்னிமலையிலிருந்து பிடாரியூர், பனையம்பள்ளி, வாய்பாடிபுதூர், முருகம்பாளையம், வாய்பாடி, தலையம்பாளையம், மேட்டுக்கடை, ஊத்துக்குளி வழியாக ஊத்துக்குளி இரயிலடி வரையிலும், சென்னிமலையிலிருந்து இச்சிப்பட்டி, பனையம்பள்ளி,





வாய்பாடி, இரயிலடி, வேட்டைக்காரன் கோவில் வழியாக விஜயமங்கலம் வரையிலும் இயக்கப்பட்டு வருகின்றது. இதில் மாலை 7-10 மணிக்கு ஊத்துக்குளி ஆர்.எஸ்-ல் புறப்பட்டு சென்னிமலை வரை இயங்கி வருகிறது. தடம் எண் சி 1டி பேருந்தின் பயணிகள் அடர்வு 30.96% ஆகும். எனவே, மேற்படி இரு பேருந்துகளையும் மாலை 7 மணிக்கு கோரிக்கை வழித்தடத்தில் மாற்றம் செய்து இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும், புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**53—**

## பேருந்து வழித்தடத்தினை நீட்டித்தல்

**வினா எண் 14893—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி முதல் அதகப்பாடி வழியாக ஏரிக்கரசு, தின்னம்பட்டி வரை இயங்கும் நகரப் பேருந்தை அதே வழித்தடத்தில் குறளம்பட்டி, கருப்பனம்பட்டி, பள்ளிப்பட்டி வழியாக பாப்பாரப்பட்டி வரை நீட்டிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்துகள் தடம் எண் டி23ஏ மற்றும் டி33-ன் மூலம் தினசரி நான்கு நடைகள் தருமபுரி-சின்னகாம்பட்டி தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றன. நீட்டித்து இயக்க கோரும் வழித்தடம் குறளம்பட்டி, கருப்பனம்பட்டி, பள்ளிப்பட்டி வழியாக பாப்பாரப்பட்டி வரையிலான வழித்தடத்தின் நீளம் 110 கி.மீ. ஆகும். மேற்கண்ட பேருந்துகள் தலா நான்கு முனை வழித் தடங்களில் இயக்கப்பட்டு வருவதால், தருமபுரி-சின்னகாம்பட்டி வரை இயங்கும் நடைகளை பாப்பாரப்பட்டி வரை நீட்டித்து இயக்கினால் ஏற்கெனவே இயக்கப்பட்டு வரும் மற்ற தடங்களின் நடைகள் குறையவும், காலநேரம் மாறவும் வாய்ப்புள்ளது. இதனால் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் மற்றும் பயணிகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். மேற்படி கோரப்பட்ட தடத்தில் மினி பேருந்துகள் மூலம் 22 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. எனவே, மேற்படி தடத்தினை நீட்டித்து இயக்க இயலாத நிலை உள்ளது.

54—

## பேருந்து வசதி

**வினா எண் 14894–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியிலிருந்து இண்டூர், சோம்பட்டி, ஒசஅள்ளிபுதூர், சோளப்பாடி, பேடறஅள்ளி மூக்கனஅள்ளி, பாப்பாரப்பட்டி வரை செல்லும் 31 எண் நகரப் பேருந்தை சோளப்பாடியில் இருந்து போயர் தெரு வரை மீண்டும் மேற்கண்ட வழித்தடங்களில் அனைத்து நடைகளும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து தடம் எண் டி31 கீழ்க்கண்ட பல்முனை வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன.

1. தருமபுரி-பாப்பாரப்பட்டி (வழி) இண்டூர், சோம்பட்டி, சோளப்பாடி 26 கி.மீ.—10 நடைகள்.

2. தருமபுரி-பாப்பாரப்பட்டி (வழி) காணம்பட்டி 22 கி.மீ.—6 நடைகள்.

தற்சமயம் இயங்கி வரும் நடைகளை கோரப்பட்டுள்ளவாறு போயர் தெரு வழியாக மாற்றி இயக்கினால் ஏற்கெனவே பயன்பெற்று வரும் பொதுமக்கள்/பள்ளி செல்லும் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். மேலும் போயர் தெரு கிராமமானது சோளப்பாடியிலிருந்து 1.0 கி.மீ. தொலைவில் நடை பயண தூரத்திலேயே உள்ளது; மற்றும் மக்கள் தொகை சுமார் 500 மட்டுமே உள்ளது. எனவே, மேற்படி கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகவே கருதப்படுகிறது. எனவே, தற்சமயம் இயங்கி வரும் டி 31 நகரப் பேருந்தை போயர் தெரு வரை சென்று வருமாறு இயக்க இயலாத நிலை உள்ளது.



55—

## புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்குதல்

**வினா எண் 14905–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரியிலிருந்து பாப்பாரப்பட்டி செல்லும் எண் 33 நகரப் பேருந்தை கூடுதலாக 4 நடைகள் தருமபுரி, இண்டூர், மாரியப்பட்டி, காணப்பட்டி, பாலவாடி, சிட்டலாகாரப்பட்டி வழியாக பாப்பாரப்பட்டி வரை இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரியிலிருந்து பாப்பாரப்பட்டி செல்லும் தடம் எண் 33 நகரப் பேருந்து கீழ்க்கண்ட பல்முனை வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருகின்றன:—

| | | |
|---|---|---|
| 1. தருமபுரி-சின்னகாம்பட்டி | 12 கி.மீ. | 2 நடைகள் |
| 2. தருமபுரி-பரிகம் | 32 கி.மீ. | 8 நடைகள் |
| 3. தருமபுரி-மாக்கனூர் | 24 கி.மீ. | 4 நடைகள் |

இதில் அனைத்து நடைகளும் தருமபுரி-மாக்கனூர் வழித்தடத்தில் இயக்க கோரப்பட்டுள்ளது. இத்தடத்தின் பயணிகளின் அடர்வு 60% ஆகும். அவ்வாறு இயக்கினால் தருமபுரி-சின்னகாம்பட்டி மற்றும் தருமபுரி-பரிகம் தடத்தில் இயக்கப்பட்டு வந்த நடைகள் அனைத்தும் விடுபடும். இதனால் ஏற்கனெவே பயன்பெற்று வந்த பயணிகள், பள்ளி குழந்தைகள் மிகவும் பாதிக்கப்படுவார்கள் என்பதால் அனைத்து

நடைகளும் ஒரே தடத்தில் இயக்க இயலாத நிலை உள்ளது. மேலும் தருமபுரியிலிருந்து இண்டூர், காணப்பட்டி வழியாக பாப்பாரப்பட்டி வரை தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகர் பேருந்துகள் டி 31 மற்றும் டி 46 மூலம் தினசரி 8 நடைகள் இயக்கப்படுகிறது. மற்றும் தற்சமயம் உள்ள நிதிநிலைமையில் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**56—**

## நகரப் பேருந்தை நீட்டித்தல்

**வினா எண் 14928–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பெண்ணாகரத்திலிருந்து மஞ்சாரப்பட்டிக்காடு வரை செல்லும் நகரப் பேருந்தை பாலிக்காடு வரை நீட்டிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழக நகரப் பேருந்து எண் 04 இயங்கும் பெண்ணாகரம்-மஞ்சாரப்பட்டி தடத்தில் பாலிக்காடு என்ற கிராமம் இல்லை. மேலும் தடம் எண் டி.17 பேருந்து இயங்கும் தருமபுரி-நெக்குந்தி தடத்தில் நெக்குந்தியிலிருந்து 4.0 கி.மீ. தொலைவில் பாலிக்காடு கிராமம் உள்ளது. மேற்கூறிய கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 400 மட்டுமே உள்ளது. நெக்குந்தி முதல் பாலிக்காடு வரையிலான 4.0 கி.மீ. தூரமுள்ள சாலை சரியில்லாததால் நிலைப் பேருந்துகள் இயக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே, பாலிக்காடு வரை நகரப் பேருந்தை நீட்டித்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.





**57—**

## அரசு பேருந்து வசதி

**வினா எண் 17739–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* பண்ருட்டி தொகுதி-வழுதலம்பட்டு, வடக்கு கிருஸ்துவ தெருவில் வசிக்கும் மக்கள் பேருந்து போக்குவரத்து போதுமானதாக இல்லாமல் இருக்கும் குறையை களைந்திட அரசு பேருந்து வசதியை தர இயலுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* பண்ருட்டி தொகுதி-தடம் எண் டி.34 மற்றும் டி.11 ஆகிய இரு பேருந்துகளும் கடலூர்-குள்ளஞ்சாவடி இடையே நாளொன்றுக்கு முறையே 4 மற்றும் 2 நடைகளில் வழுதலம்பட்டு, கிருஸ்துவ தெருவின் வழியாக இயக்கப்பட்டு அவ்வூர் மக்களுக்கு பேருந்து வசதி அளிக்கப்பட்டுள்ளது. இவ்விரு பேருந்துகளும் பல்திசை வழித்தடங்களில் இயக்கப்பட்டு வருவதால் தடம் எண் டி.34 மற்றும் டி.11 ஆகிய இரு பேருந்துகளின் மூலம் கூடுதல் நடைகள் இயக்கிட வாய்ப்பில்லை.

*(ஆ)* கேள்வி எழாது.

**58—**

## பேருந்து வசதி

**வினா எண் 18322—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி—பத்திரக்கோட்டைக்கு கடலூரிலிருந்து வரும் அரசு பேருந்து தடம் எண் 35-ஐ அருகில் உள்ள சாத்தமாம்பட்டு கிராமத்திற்கு வந்துபோக அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டைக்கு கடலூரிலிருந்து வரும் பேருந்து தடம் எண் 35 நகரப் பேருந்து இயங்கும் தட நீளம் 30 கி.மீ. ஆகும். நீட்டித்திட கோரிடும் பகுதியான பத்திரக்கோட்டை சாத்தமாம்பட்டு பகுதியின் நீளம் 3.3 கி.மீ. கோரிக்கையின்படி. தட நீட்டிப்பு அளித்திடும் தட நீளம் 33.3 கி.மீ. 21-5-1990 நாளிட்ட உள் (போக்குவரத்து) துறை அரசாணை எம்.எஸ். 1032, இதுவரை பேருந்து வசதியே பெறாத நிலையிலிருக்கும் பகுதிக்குத் தான் வழித்தட நீளம் 35.0 கி.மீ. வரை நகரப் பேருந்து வசதி அளித்திட அனுமதி அளிக்கிறது. பத்திரக்கோட்டை-சாத்தமாம்பட்டு வரையிலான 3.3 கி.மீ. தூரப்பகுதி, கடலூர்-பத்திரக்கோட்டை வழியாக சாத்தமாம்பட்டு, புதுப்பாளையம் வரையில் இயக்கப்படும் தடம் எண் டி.15 நகரப் பேருந்தின் மூலம் வசதி பெற்றுள்ளதால் தடம் எண் டி.35 பேருந்தை பத்திரக்கோட்டையிலிருந்து சாத்தமாம்பட்டு வரை நீட்டித்து இயக்க இயலாது.

**59—**

## பேருந்து வசதி

**வினா எண் 18326—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, குறிஞ்சிப்பாடியிலிருந்து பண்ருட்டிக்கு செல்ல காலை 8 மணிக்கு பேருந்து வசதியை ஏற்படுத்தி தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி-பண்ருட்டியிலிருந்து குறிஞ்சிப்பாடிக்கு இடையே இயங்கும் பேருந்துகளின் விவரம் கீழ்வருமாறு:—

| வ.எண் | வழித்தடம் | நடைகள் |
|---|---|---|
| 1. | டி3/ஏ பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி வடலூர் | 11 |
| 2. | டி3/பி பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி வடலூர் | 10 |
| 3. | டி20/ஏ பண்ருட்டி-குறிஞ்சிபாடி வழி சத்திரம் | 12 |
| 4. | டி20/பி பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி சிறுதொண்டமாதேவி | 4 |
| | பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி காடாம்புலியூர், ஏ.புதூர் | 4 |
| | பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி காடாம்புலியூர், சத்திரம் | 2 |
| | பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி காடாம்புலியூர், கானாஞ்சாவடி | 2 |
| 5. | டி 21 பண்ருட்டி-மேல்புதுப்பேட்டை வழி குறிஞ்சிப்பாடி | 6 |
| | பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி வேகாக்கொல்லை | 2 |
| | பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி வடலூர் | 2 |
| 6. | டி 23 பண்ருட்டி-குறிஞ்சிப்பாடி வழி சாத்திப்பட்டு, கீழ்மாம்பட்டு, சத்திரம் | 6 |

மேற்காணும் பேருந்துகளில், தடம் எண் டி20/ஏ நகரப் பேருந்து 07-45 மணிக்கும், தடம் எண் டி21 நகரப் பேருந்து 08-10 மணிக்கும், தடம் எண் டி20/பி நகரப் பேருந்து 08-30 மணிக்கும் குறிஞ்சிப்பாடியில்

புறப்படுமாறு அமைந்துள்ளன. இந்நிலையில் 08-00 மணிக்கு குறிஞ்சிப்பாடியில் புறப்பட்டு பண்ருட்டி செல்லும் வகையில் தனியாக ஒரு நடை இயக்குவது அவசியமில்லை என அரசு கருதுகிறது.

60—

## மணல் லாரிகள்

**வினா எண் 22547—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மணல் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் அதிகப்படியான (ஓவர்லோடு) சரக்குகளை கொண்டு செல்வதை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) லாரிகளில் அதிகப்படியாக மணல் ஏற்றிச் செல்வது முதலான குற்றங்கள் அன்றாட தணிக்கை மூலமும், மாதாந்திரச் சிறப்புத் தணிக்கை மூலமும் கண்டறியப்பட்டு, குற்றங்கள் மீது தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 206-ன்கீழ் அதிகபட்சத் தண்டனையாக இணக்கக் கட்டணமும், அபராதமும் விதிக்கப்படுகின்றன.

61—

## அபராதத் தொகை வசூல்

**வினா எண் 32111—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) 2001-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஸ்பாட் பைன் (Spot fine) முறையில் வாகன ஓட்டிகளிடம் போக்குவரத்து காவல் துறையினரால் வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?*





*(ஆ) அதிகப்படியான அபராதத் தொகை வசூலிப்பதாக அரசுக்கு புகார் ஏதாவது வந்துள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் 2001—2003 ஆம் ஆண்டுகளில் ஸ்பாட் பைன் எதுவும் வசூலிக்கப்படுவதில்லை.

(ஆ) அவ்வாறான புகார் எதுவும் இல்லை.

62—

## நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

**வினா எண் 15514—திரு. க. முருகவேல் ராஜன்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வந்தவாசி தொகுதி, தென்மாவந்தல் கிராமத்தில் பொது விநியோக கடை கட்டடம் இல்லையென்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், பொது விநியோக கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், அனக்காவூர் ஒன்றியத்திலுள்ள முளகிரிப்பட்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் தென்மாவந்தல் முழு நேர நியாய விலைக் கடை 132 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கடைக்கு புதிய நியாய விலை கடைக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்குமாறு முளகிரிப்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் தனி அலுவலருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

[2004 ஜூலை 23

63—

### நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 15529—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, எருமைவெட்டி-எச்சூர் ஊராட்சி மற்றும் ஆலந்தூர், நெடுங்கல், புரிசை, வடஆங்கூர்-மேல்மா ஊராட்சி சேனல் கிராமம் ஆகிய இடங்களில் பொது விநியோக கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியில் எருமைவெட்டி ஆலந்தூர், நெடுங்கல், புரிசை, பள்வ எச்சூர், வடஆங்கூர், மேல்மா ஆகிய ஏழு நியாய விலைக் கடைகள் சொந்த கட்டடங்களில் செயல்பட்டு வருகிறது. வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வரும் சேனல் கிராம முழுநேர கூட்டுறவு நியாய விலைக் கடைக்கு 2003-2004 ஆம் ஆண்டில் சொந்த கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

64—

### நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 15542—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, நடுக்குப்பம், இரும்புலி ஆகிய கிராமங்களில் பொது விநியோக கடை கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதி, தெள்ளார் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் நடுக்குப்பம் பகுதியில் 186 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேரக் கடை வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடைக்கு ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும் என்ற வரையறைக்குட்பட்டு பகுதிநேரக் கடை அமைக்க அனுமதி வழங்கப்படுவதால், அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை. சு.காட்டேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் இரும்புலி பகுதியில் 186 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேரக் கடை வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. அரசு திட்டங்களின்கீழ் இரும்புலி நியாய விலைக் கடைக்கு சொந்த கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

65—

### சத்துணவுப் பணியாளர் கூட்டுறவு சிக்கன (மற்றும்) கடன் சங்கம்

**வினா எண் 22524—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்ட சத்துணவுப் பணியாளர் கூட்டுறவு கடன் சங்கத்தில் (எப்.சி.2895) பல்வேறு முறைகேடுகள் நடப்பதையும், குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமே கடன் வழங்கப்படுவதையும் அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்ட சத்துணவுப் பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கத்தில் 30-05-2000 முதல் பொறுப்பிலிருந்த நிர்வாகக் குழுவினால் ஜூலை 2001-ல் புவனகிரி ஒன்றிய உறுப்பினர்களிடமிருந்து வரப்பெற்ற கடன் மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதில் காலம் தாழ்த்தப்பட்டது குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. துணைப் பதிவாளர் அவர்களால் தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டதன் அடிப்படையில் கடன்கள் வழங்குவது முறைப்படுத்தப்பட்டது. 30-05-2003 முதல் தனி அலுவலரின் கட்டுப்பாட்டில் சங்கம் செயல்படுவதால் கடன் கோரும் உறுப்பினர்களுக்கு கடன்கள் முறையாக தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

**66—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 26222—திரு. கே.கே. சிவசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், கீழ்குடியில் புதிய நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி வட்டத்தில், செங்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் கீழ்க்குடி நியாய விலைக் கடை ஒரு முழு நேரக் கடையாகும். இக்கடைக்கு சொந்த கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



2004 ஜூலை 23]

**67—**

## கூட்டுறவு சங்க கடன் நிலுவைத் தொகை வசூல்

**வினா எண் 27212—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகர கூட்டுறவு சங்கத்தில் 25 இலட்ச ரூபாய்க்கு மேல் கடன் தொகை எத்தனை நபர்களுக்கு 1996 முதல் 2001 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) வழங்கிய கடன் தொகை நிலுவையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், நிலுவைத் தொகையை வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 15 நபர்களுக்கு ரூ.7.67 கோடி வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆம். வழங்கப்பட்ட ரூ.7.67 கோடியில் 2.73 கோடி வசூல் செய்யப்பட்டு ரூ.4.94 கோடி கடன் நிலுவையில் உள்ளது.

(இ) தவணை தவறாமல் உள்ள கடன்கள் வாய்தாபடி முறையாக செலுத்தப்பட்டு வரும் கடன்கள் — 7

**தவணை தவறிய கடன்கள்**

| | |
|---|---|
| 1. பதிவு தபால் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கடன் | 1 |
| 2. தாவா தொடரப்பட்டு விசாரணையில் உள்ள கடன்கள் | 4 |
| 3. நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு ஏல நடவடிக்கையில் உள்ள கடன்கள் | 3 |
| மொத்தம் | 15 |

[2004 ஜூலை 23

68—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 28440—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், வல்லம் கிராமத்திலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைக்கு அரசு கட்டடம் கட்டித் தர முன்வருமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு வட்டம், வல்லம் ஊரிலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடை மேலேரிபாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் முழுநேரக் கடையாகும். இக்கடை 884 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்படுகிறது. இக்கடைக்கு அரசு நிதியுதவி பெறும் திட்டங்களின் மூலம் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

69—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 28627—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் 32—வது வார்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் நியாய விலைக் கடைக்கு அரசு சொந்தமாக ஒரு கட்டடம் அமைத்துத்தர முன்வருமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது ?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகராட்சி 32– வது வார்டில் ஆண்டிக்குப்பம், சீரன்குப்பம் மற்றும் இருளங்குப்பம் ஆகிய மூன்று பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன. பண்ருட்டி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின்கீழ் தாய்க்கடையாக திருவதிகை-மேற்குப்பகுதி கடை எண் 4 செயல்படுகிறது இதன் பகுதிநேரக் கடை சீரன்குப்பம் தனியார் கட்டடத்தில் வாடகையின்றி செயல்படுகிறது. இதே சங்கத்தின்கீழ் தாய்க்கடையாக திருவதிகை-மையப்பகுதி கடை எண் 6 செயல்படுகிறது இதன் பகுதிநேரக் கடையாகிய ஆண்டிக்குப்பம், பண்ருட்டி நகராட்சியால் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்படுகிறது. இருளங்குப்பம் பகுதி மக்கள் ஆண்டிக்குப்பம் பகுதிநேரக் கடையில் அத்தியாவசியப் பொருட்கள் பெற்று வருகிறார்கள். அரசு வரையறைகளின்படி பகுதிநேரக் கடைகளுக்கு அப்பகுதி மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும். அரசு திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டிக் கொடுப்பதில்லை.

70—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 28704—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி ஊராட்சி, மட்டம்பட்டியில் உள்ள நியாய விலைக் கடைக்கு அரசு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா ?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம், எருமைப்பட்டி ஊராட்சியில் 329 குடும்ப அட்டைகளுடன் மட்டம்பட்டி பகுதிநேரக் கடை சேலம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த

விற்பனைப் பண்டகசாலையால் நடத்தப்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடைக்கு ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்து தர வேண்டும். மட்டம்பட்டி பகுதிநேர நியாய விலைக் கடை வாடகையில்லா இலவசக் கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**71—**

### நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 28913—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நல்லாண்பிள்ளைபெற்றாள் கிராமத்திலுள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், நல்லாண்பிள்ளைபெற்றாள் பகுதியிலுள்ள நியாய விலைக் கடை பெருமாளேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்படும் பகுதிநேரக் கடையாகும். பகுதிநேரக் கடை அமைக்க ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும் என்ற வரையறைக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது. எனவே, மேற்கண்ட பகுதிநேரக் கடைக்கு அரசு நலத் திட்டங்களின்கீழ் கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

**72—**

### நியாய விலைக் கடைக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 29670—திரு. சே. இராசேந்திரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ)* கோவில்பட்டி தொகுதி, சுரைக்காய்ப்பட்டி ஊராட்சி, குளத்துள் வாய்ப்பட்டி கிராமத்தில் பொது விநியோகக் கடை கட்டும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோவில்பட்டி தொகுதி, குளத்துள்வாய்ப்பட்டி பகுதியில் இளம்புவனம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியினால் ஒரு முழுநேர நியாய விலைக் கடை 185 குடும்ப அட்டைகளுடன் வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது. இந்த நியாய விலைக் கடைக்கு சொந்த கட்டடம் கட்டுவதற்கு 2002-2003 ஆம் நிதியாண்டில் நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இருப்பினும் குளத்துள்வாய்ப்பட்டி நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**73—**

### நியாய விலைக் கடை

**வினா எண் 30770—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியிலுள்ள வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சி 17-வது வார்டு சரளப்பகுதியில் நியாய விலைக் கடை கட்டி முடிக்கப்பட்டு இன்னும் திறக்கப்படவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சிக்குட்பட்ட சரளப்பகுதியில் ஒரு பகுதிநேரக் கடை 102 குடும்ப அட்டைகளுடன் 1-3-2003 ஆம் தேதி

முதல் செயல்பட்டு வருகிறது. இந்த பகுதிநேர நியாய விலைக் கடையை சரளப்பகுதியில் சமூக நலக் காடுகள் கோட்டம் வனத் துறையால் கட்டி முடிக்கப்பட்டுள்ள கட்டடத்தில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

**74—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 32612—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், அரியூர் கூட்டுறவு அங்காடிக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், அரியூர் நியாய விலைக் கடை ஒரு பகுதிநேரக் கடையாகும். பகுதிநேரக் கடைக்கு ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்து தர வேண்டும் என்பதால் அரியூரில் பகுதிநேரக் கடையாக செயல்படும் நியாய விலைக் கடைக்கு அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**75—**

## கூட்டுறவு வங்கிக் கடன் வசூல்

**வினா எண் 33921—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் நகர கூட்டுறவு வங்கியில் 1996-2001 ஆம் ஆண்டு வரையில் ரூ. 10 இலட்சத்திற்கு மேல் கடன் வழங்கிய தொகை ரூ. 18.97 கோடியில் இதுவரை வசூல் செய்ய முடியாத நிலையில் உள்ள நபர்கள் எத்தனை பேர்?





(ஆ) அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் நகரக் கூட்டுறவு வங்கியில் 1996-2001ஆம் ஆண்டு வரையில் ரூ.10 இலட்சத்திற்கு மேல் கடன் வழங்கிய தொகை ரூ.18.97 கோடியில் ஜூன் 2003 முடிய ரூ.6.95 கோடி வசூல் செய்யப்பட்டு ரூ.12.02 கோடி நிலுவையில் உள்ளது. அதில் 66 கடன்கள் தவணை தவறி உள்ளன. அக்கடன்தாரர்கள்மீது கீழ்க்கண்டவாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| 1. பதிவு தபால் அனுப்பப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட கடன்கள் | 27 |
| 2. தாவா தொடரப்பட்டு விசாரணையில் உள்ள கடன் | 1 |
| 3. நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டு ஏல நடவடிக்கையில் உள்ள கடன்கள் | 38 |
| மொத்தம் | 66 |

**76—**

## கூட்டுறவு வங்கிக் கடன் வசூல்

**வினா எண் 33922—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், செவ்வாய்ப்பேட்டை நகர கூட்டுறவு வங்கியில் 1996-2001 ஆம் ஆண்டு வரையில் ரூ.10 இலட்சத்திற்கு மேல் கடன் வழங்கிய தொகை ரூ.1.76 கோடியில் இதுவரையில் வசூல் செய்ய முடியாத நிலுவையிலுள்ள நபர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 9 நபர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.1.76 கோடியில் ரூ.105.28 இலட்சம் வசூல் செய்யப்பட்டது. ரூ.70.72 இலட்சம் நிலுவையில் உள்ளது. இதில் சிறுகச்சிறுக வட்டியும் அசலும் செலுத்தி வருகிறார்கள். ஒருவர் மட்டும் கடன் தொகை ரூ.45,00,000/-த்தினை திரும்ப செலுத்தவில்லை. அவர்மீது நிறைவேற்றல் மனு எண் 82/82-03, தேதி 6-6-2002 நிலுவையில் உள்ளது. மேலும் ரூ.5.00 இலட்சத்திற்கான அவரது காசோலை வங்கியில் போதிய பணமின்றி திருப்பப்பட்டதால் நீதிமன்றத்தில் குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது.

**77—**

### நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம்

**வினா எண் 34091—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பழைய கந்தர்வக்கோட்டை ஊராட்சி, மெய்க்குடிப்பட்டி கிராம அங்காடி பழுதடைந்த வாடகை கட்டடத்தில் இருப்பதால் புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், பழைய கந்தர்வக்கோட்டை ஊராட்சியில் 219 குடும்ப அட்டைகளுடன் மெய்க்குடிப்பட்டி நியாய விலைக் கடை முழுநேரக் கடையாக வடுகப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியுடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது இக்கடை தற்போது



பழுதுபார்க்கப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினருக்கான தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 2003-2004 ஆம் நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**78—**

### பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 34092—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள பள்ளஈகை கிராமத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்றினை உடனடியாக துவக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் ஈகை நியாய விலைக் கடையில் மொத்தம் 237 குடும்ப அட்டைகள் உள்ளன. பள்ளஈகை பகுதியில் 110 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. 15-10-1998 ஆம் நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசு ஆணை (நிலை) எண் 214-ல் வகுக்கப்பட்ட வரையறைகளில் பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற வரையறை நிறைவு பெறாததால், பள்ளஈகை பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**79—**

### பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 34097—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

அறந்தாங்கி தொகுதி, அத்தாணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்திற்குட்பட்ட தட்பான்வயலில் பகுதிநேர அங்காடி திறக்கும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி தொகுதி, அத்தாணி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் கலக்கமங்கலம் நியாய விலைக் கடை 254 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேரக் கடையாக செயல்பட்டு வருகிறது. கலக்கமங்கலம் நியாய விலைக் கடையிலிருந்து 1-1/2 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள 96 குடும்ப அட்டைகளை கொண்டுள்ள தட்பான்வயல் பகுதி கலக்கமங்கலம் பகுதிநேரக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் இரண்டு நியாய விலைக் கடைகளுக்கு இடையே குறைந்தது 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் தட்பான்வயலில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**80—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 34198—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், நம்புரான்பட்டி ஊராட்சி, ஆண்டியப்பட்டியில் கிளை நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், நம்புரான்பட்டி ஊராட்சியில் ஓம்புரான்பட்டி



2004 ஜூலை 23]

பகுதி நேரக்கடை 280 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ள ஆண்டியப்பட்டி பகுதியில் 40 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை நிறைவு பெறாததால் ஆண்டியப்பட்டியில் பகுதி நேரக்கடை அமைக்க வாய்ப்பில்லை.

**81—**

## நியாய விலைக் கடைகள் விபரம்

**வினா எண் 34601—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை மூலம் நடத்தப்பெறும் நியாய விலைக் கடைகள் எத்தனை?

(ஆ) அவைகள் இலாபத்தில் இயங்குகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு பண்டகசாலை (தற்போது காஞ்சிபுரம் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலை) யானது காஞ்சிபுரம் மாவட்டத்தில் 62 நியாய விலைக் கடைகளையும், சென்னை மாவட்டத்தில் 157 நியாய விலைக் கடைகளையும், ஆக மொத்தம் 219 நியாய விலைக் கடைகளை நடத்தி வருகிறது.

இவற்றில் 189 நியாய விலைக் கடைகள் இலாபத்திலும், 30 நியாய விலைக் கடைகள் நட்டத்திலும் இயங்கி வருகின்றன.

**82—**

## இணைப் பதிவாளர் அலுவலகம்

**வினா எண் 35396—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

சேலம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியில் காலியாக உள்ள 5 மற்றும் 6-வது தளத்தில் இணைப் பதிவாளர் அலுவலகம் இயங்குவதற்கு அரசு ஆவண செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இணைப் பதிவாளர் அலுவலகத்திற்குப் போதுமான காலியிடம் ஏதும் இக்கட்டடத்தில் இல்லை.

**83—**

**நியாய விலைக் கடைக்கு கட்டடம்**

**வினா எண் 37761—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம் இருட்டளை ஊராட்சியில் அரசு பொது விநியோக கடை கட்டடம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி பரமத்தி ஒன்றியம், இருட்டளை ஊராட்சியில் இயங்கும் நியாய விலைக் கடை 238 குடும்ப அட்டைகளுடன் கூடச்சேரி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் முழுநேரக் கடையாகும். வாடகைக் கட்டடத்தில் செயல்படும் இக்கடைக்கு சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 23]

**84—**

**பகுதிநேர நியாய விலைக் கடை**

**வினா எண் 37784—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், தோரணம்பதி, கொரட்டி வேளாண்மை கூட்டுறவு வங்கி உட்பட்ட தாதக்குள்ளனூர் கிராமத்தில் கூடுதல் பகுதிநேர கூட்டுறவு கடையை அரசு புதியதாக அமைத்து தருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தாலுகா, நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி வட்டாரத்தில் தோரணம்பதி, கொரட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் தோரணம்பதி நியாய விலைக் கடை 642 குடும்ப அட்டைகள் கொண்டு முழு நேர கடையாக செயல்பட்டு வருகிறது. தாதக்குள்ளனூர் பகுதியில் 153 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை பூர்த்தியடையாததால் தாதக்குள்ளனூர் பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**85—**

**கூட்டுறவு வங்கி கடன் விவரம்**

**வினா எண் 39500—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி நகர கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற முறைகேடுகளின் மீது நடவடிக்கை என்ன?

[2004 ஜூலை 23

(ஆ) மேலும் கடன் பெற்று இதுவரை திருப்பி செலுத்தாதவரின் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா?

(இ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) வங்கி வரவு கணக்கினை பயன்படுத்தியதிலும் வங்கியின் பவழ விழாவிற்கு செலவு செய்ததிலும் ரூ.9,52,226.66 அளவிற்கு முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. இது தொடர்பாக முன்னாள் தலைவர் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் மீது தண்டத் தீர்வை நடவடிக்கையும் பிரிவு 36-ன்கீழ் தகுதியின்மையாக்குதல் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வங்கியின் முன்னாள் செயலாளர் பணி நீக்கம் செய்யப்பட்டு பணி ஓய்வு மறுக்கப்பட்டு அவரின் நிதிப்பயன்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

(ஆ) மற்றும் (இ) தவணை தவறிய கடன்களை வசூலிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்—

| | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| 1. ஏல நடவடிக்கையில் உள்ளவை | 149 | 92,23,960.00 |
| 2. 'டிகிரி' பெறப்பட்டவை | 60 | 47,32,059.00 |
| 3. தாவா மனு தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கையில் உள்ளவை | 107 | 2,12,06,538.00 |
| 4. 'நோட்டீஸ்' அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளவை | 276 | 1,08,68,959.00 |
| மொத்தம் | 592 | 4,60,31,516.00 |



2004 ஜூலை 23]

86—

## கூட்டுறவு வங்கியில் விளம்பரச் செலவு

**வினா எண் 39501—திரு. வி. ஜெயராமன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சி நகர கூட்டுறவு வங்கியில் கடந்த ஆட்சியில் 5 ஆண்டுகாலம் செய்த விளம்பரச் செலவு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

பொள்ளாச்சி நகர கூட்டுறவு வங்கியில் கடந்த ஐந்தாண்டு காலம் செய்த விளம்பர செலவு விவரம் பின்வருமாறு—

| வரிசை எண் | வருடம் | விளம்பரச் செலவு |
|---|---|---|
| 1. | 1996-97 | 7450.00 |
| 2. | 1997-98 | 70350.00 |
| 3. | 1998-99 | 43686.00 |
| 4. | 1999-2000 | 68302.00 |
| 5. | 2000-2001 | 31758.00 |
| | மொத்தம் | 221546.00 |

87—

## நிலுவைத் தொகை வசூல்

**வினா எண் 39743—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலைக்கு, கிராம அங்காடிகளிலிருந்து வரவேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு?

(ஆ) இதை வசூலிக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைக்கு, கிராம அங்காடிகள் மற்றும் ஆலைத் தொழிலாளர்கள் கூட்டுறவு பண்டகசாலையிலிருந்து வரவேண்டிய தொகை ரூ.23,85,278.55 மேற்படி பண்டகத்திற்கு வரவேண்டிய தொகையினை வசூலிக்க தாவா நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கான விவரங்கள் அடங்கிய பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் ஆலைத் தொழிலாளர் கூட்டுறவு பண்டகசாலைகளிடமிருந்து வரவேண்டிய நிலுவை.

| வ. எண். | சங்கத்தின் பெயர் | நிலுவை | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | கோடங்கிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 69,258.40 | தாவா நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |
| 2. | ஜெ. கிருஷ்ணாபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 36,318.90 | " |
| 3. | நகரக்களந்தை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 1,84,722.70 | " |
| 4. | இராசிபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 20,723.98 | தாவா நடவடிக்கை மேற்கொளளப் பட்டுள்ளது. |
| 5. | கோவில் வழி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி | 3,08,661.00 | " |
| 6. | கோவை ஸ்பின்னிங் வீவிங் மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 1,35,000.00 | " |
| 7. | திருமூர்த்தி மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 20,951.20 | " |
| 8. | நரசிம்மா மில்ஸ் பி கூட்டுறவு பண்டகம் | 26,004.55 | " |
| 9. | ராஜலஷ்சுமி மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 1,80,050.00 | " |
| 10. | தாமரை மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 19,604.00 | " |
| 11. | கோபால்டு மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 93,431.45 | " |
| 12. | டி.டி.பி. மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 1,50,663.72 | " |
| 13. | பொங்கலூர் கூட்டுறவு பண்டகம் | 1,60,270.27 | " |
| 14. | முருகன் மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 1,20,278.49 | " |
| 15. | குவாலிட்டி மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 10,000.00 | தாவா தொடர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது |
| 16. | பிரசாந்த் மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 56,546.45 | " |
| 17. | கோத்தாரி பி மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 1,00,959.75 | " |
| 18. | கோத்தாரி ஏ மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 36,846.10 | தாவா தொடர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| 19. | ஸ்ரீபாலசுப்ரமணியா மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 43,646.20 | " |
| 20. | தனலட்சுமி மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 1,73,036.99 | தாவா நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| 21. | கங்கா டெக்ஸ்டைல்ஸ் கூட்டுறவு பண்டகம் | 41,568.50 | தாவா நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |
| 22. | எஸ்.ஆர்.சி.மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 2,30,156.27 | தாவா நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. |
| 23. | கஸ்தூரி மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 77,705.65 | தாவா தொடர நடவடிக்கை. |
| 24. | கார்த்திகேயா மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 30,146.79 | தாவா தொடர நடவடிக்கை. |
| 25. | அட்சயா மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 30,364.15 | தாவா தொடர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| 26. | ஸ்ரீராம நாராயணா மில்ஸ் கூட்டுறவு பண்டகம் | 28,362.95 | தாவா தொடர நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| | | 23,85,278.55 | |

**88—**

## கூட்டுறவு வங்கி

**வினா எண் 42505—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் வால்பாறையிலுள்ள கூட்டுறவு வங்கியில் முறைகேடுகள் தொடர்ந்து நடைபெற்று வருவது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை நகர கூட்டுறவு வங்கியில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன்கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. இவ்விசாரணை அறிக்கையில் வங்கிப் பணியாளர்கள் 6 பேர் மற்றும் முன்னாள் தலைவர் உள்ளிட்ட 7 பேர் மீது ரூ.1,89,411.27 வங்கிக்கு நிதியிழப்பு ஏற்படுத்தியதற்கு தண்டத் தீர்வை நடவடிக்கை எடுக்கவும், 6 பணியாளர்கள் மீது குற்றவியல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்கப்பட்டது. இவர்களில் 5 பணியாளர்கள் கையாடல் தொகைகளை வங்கியில் முழுமையாக திருப்பி செலுத்தியபடியால் அவர்கள் தண்டத் தீர்வை நடவடிக்கையிலிருந்தும் குற்றவியல் நடவடிக்கையிலிருந்தும் விடுவிக்கப்பட்டுள்ளனர். கையாடல் தொகையினை செலுத்தாத ஒரு பணியாளர் நிரந்தர பணி நீக்கம் செய்யப்பட்டார். முன்னாள் தலைவருக்கு பொள்ளாச்சி துணைப் பதிவாளரால் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. துறையின் முன் அனுமதியின்றி ஈப்பு கொட்டகை கட்டப்பட்டது, ரூ.1,48,500/-க்கு முறையான விலைப்புள்ளி பெறாமல் கணினி வாங்கியது மற்றும் வங்கிக்கு சொந்தமான ஈப்பு ஒன்றுக்கு ரூ.35,320/-க்கு பழுதுபார்த்தது தொடர்பாக சரியான வழிகாட்டுதல்களை நிர்வாகக் குழுவிற்கு தெரிவிக்கத் தவறியமைக்காக திரு. ப்பி. இராமகிருஷ்ணன், மேலாண்மை இயக்குநர்/கூட்டுறவு சார் பதிவாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இவரது ஊதிய உயர்வு 3 மாதங்களுக்கு திரண்ட பயனின்றி நிறுத்தி தண்டனை வழங்கப்பட்டுள்ளது. வங்கி செயலாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு எச்சரித்து விடப்பட்டுள்ளது.

**89—**

## கூட்டுறவு வங்கி கடன்

**வினா எண் 42506—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள கூட்டுறவு வங்கியில் போலி பட்டாவை காட்டி கடன் பல இலட்சம் ரூபாய் வழங்கப்படுவது குறித்து அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திரு. ட்டி.வி. ராஜன் என்பவரது புகார் மனுவினைத் தொடர்ந்து வால்பாறை கூட்டுறவு நகர வங்கியினை ஆய்வு செய்தபோது கடன் விண்ணப்பங்களில் குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது. மனைப்பட்டா ஏதுமின்றி திரு. என். கணேசன் என்பவருக்கு ரூ.5.00 இலட்சம் கடன் அனுமதிக்கப்பட்டு முதல் தவணையாக ரூ.2.00 இலட்சம் 19-02-2003-ல் வழங்கப்பட்டுள்ளது. இது குறித்து வங்கியின் தனி அலுவலர் திரு. ஆர். சுந்தர்ராஜ், கூட்டுறவு சார் பதிவாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவரது காலத்தில் வழங்கப்பட்ட அனைத்து வகைக் கடன்கள் குறித்தும் கண்டறிய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 81-ன்கீழ் விசாரணை நடைபெற்று வருகிறது.

**90—**

### வனச்சரக பணியாளர்களின் விவரம்

**வினா எண் 41456—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வனச்சரகத்தில் பணிபுரியும் பணியாளர் மற்றும் அதிகாரிகளின் எண்ணிக்கை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் வனச்சரகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் விவரம் கீழ்வருமாறு:—



| | | | |
|---|---|---|---|
| 1. | வனச்சரகர் | : | 1 |
| 2. | வனவர் | : | 5 |
| 3. | வனக்காப்பாளர் | : | 15 |
| 4. | வனக்காவலர் | : | 8 |
| 5. | உதவியாளர் | : | 1 |
| 6. | அலுவலக உதவியாளர் | : | 1 |
| 7. | லாரி ஓட்டுநர் | : | 2 |
| 8. | டிராக்டர் ஓட்டுநர் | : | 1 |
| 9. | லாரி கிளீனர் | : | 1 |
| | மொத்தம் | : | 35 |

**91—**

### வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் கட்டுதல்

**வினா எண் 37567—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் குடியிருப்புகள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

92—

## தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி

**வினா எண் 33847—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லில் பணிபுரிந்து இறந்த தொழிலாளர் குடும்பங்களில் எவ்வளவு பேருக்கு வருங்கால வைப்பு நிதி வழங்க அரசு ஏற்பாடு செய்துள்ளது?

(ஆ) இன்னும் எவ்வளவு குடும்பங்களுக்கு நிதி வழங்கப்பட வேண்டும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மில்லில் பணிபுரிந்த மொத்தமுள்ள 3,052 தொழிலாளர்களின் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்களாகி இறந்துவிட்ட 110 தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு வருங்கால வைப்பு நிதி மற்றும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

(ஆ) எந்த கேட்பு மனுவும் வருங்கால வைப்பு நிதி அலுவலகத்தில் நிலுவையாக இல்லை.

93—

## தொழிலாளர் நல மருத்துவமனைக்கு மருந்துகள்

**வினா எண் 46253—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிங்கநல்லூரில் உள்ள தொழிலாளர் நல மருத்துவமனைக்கு (இ.எஸ்.ஐ.) போதிய மருந்துகள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

சிங்கநல்லூரில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்தில் காப்பீட்டு நபர்களுக்கும் அவர்களின் குடும்ப நபர்களுக்கும் தேவையான மருந்துகளை அவ்வப்பொழுது எந்தவிதமான தடைகளுமின்றி வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிதியாண்டில் ரூ.7,20,083 மருந்துகள் செலவிடப்பட்டுள்ளது. தேவையான அனைத்து வகை மருந்துகளும் மத்திய கொள்முதல் (Central Purchase Committee E.S.I. Corporation, New Delhi) மற்றும் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் (Tamil Nadu Medical Services Corporation) மூலமாகவும் பெறப்பட்டு எந்தவித புகார்களுக்கும் இடமின்றி சிகிச்சைக்கு வரும் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது.

94—

## வாழை ஆராய்ச்சி நிலையம்

**வினா எண் 38383—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதியில் பல்லவகுப்பம் பகுதியில் வாழை ஆராய்ச்சி நிலையத்தை கார்கூர், செண்டத்தூர், மேல்பட்டி போன்ற இடங்களில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் திருச்சியிலுள்ள தேசிய வாழை ஆராய்ச்சி நிலையத்திலும், கோவையில் வேளாண் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரியைச் சேர்ந்த பழத் துறையிலும் வாழை பற்றிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், வாழை சாகுபடியில் ஏற்படும் சந்தேகங்களுக்கு விவசாயிகள் வேலூர் அருகிலுள்ள விரிஞ்சிபுரத்தில் இருக்கும் வேளாண் ஆராய்ச்சி நிலையத்தையும் அணுகி

பயன் பெறலாம். எனவே, வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு தொகுதியில், பல்லவகுப்பம் பகுதியில் தனியாக வாழை ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்த திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**95—**

**விளையாட்டுக் கருவிகள் வழங்குதல்**

**வினா எண் 37135—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, அரசடிக்குப்பம் கிராமத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டு கருவிகள் விநியோகம் செய்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) பண்ருட்டி தொகுதி, அரசடிக்குப்பம் கிராமத்தில் இளைஞர்களுக்கு விளையாட்டு கருவிகள் விநியோகம் செய்திட திட்டங்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**96—**

**விளையாட்டு அரங்கம் அமைத்தல்**

**வினா எண் 40553—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் உள்விளையாட்டு மற்றும் விளையாட்டு அரங்கம் அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*





**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) விழுப்புரம் மாவட்டம், சங்கராபுரத்தில் உள்விளையாட்டு மற்றும் விளையாட்டு அரங்கம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) கேள்வி எழவில்லை.*

**97—**

**உடற்பயிற்சி கூடம் அமைத்தல்**

**வினா எண் 43196—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, மனம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) பண்ருட்டி தொகுதி, மனம்தவிழ்ந்தபுத்தூர் கிராமத்தில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர அரசிடம் திட்டங்கள் பரிசீலனையில் இல்லை.*

*(ஆ) நிலை எழவில்லை.*

**98—**

**உடற்பயிற்சி கூடம் அமைத்தல்**

**வினா எண் 43646—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடியில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடியில் இளைஞர் மன்றங்கள் உருவாக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**99—**

### உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

**வினா எண் 43647—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வீரபெருமாநல்லூர் காலனியில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, வீரபெருமாநல்லூர் காலனியில் இளைஞர் மன்றங்கள் உருவாக்கும் திட்டங்கள் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2004 ஜூலை 23]

**100—**

### உடற்பயிற்சிக் கூடம் அமைத்தல்

**வினா எண் 43650—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தரும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

## பட்டியல் 2

**1—**

### நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 17652—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கன்னியாக்குடி ஊராட்சியில் ஒரு நியாய விலைக் கடை கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 23

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கன்னியாக்குடி கிராமத்தில் நியாய விலைக் கடை கட்டடம் கட்டுவதற்கு 2004-2005 ஆம் நிதியாண்டில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் (அ) சட்டமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**2—**

### நியாய விலைக் கடைகள்

**வினா எண் 20194—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்விற்கு விடையளிப்பாரா—

2001-2002 ஆம் நிதியாண்டில் சேலம் மாவட்டத்தில் எத்தனை புதிய நியாய விலைக் கடைகள் அக்டோபர் மாதம் முடிய திறக்கப்பட்டுள்ளன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 1-4-2001 முதல் 31-3-2002 வரையிலான நிதியாண்டில் 5 முழுநேர நியாய விலைக் கடைகளும், 30 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் புதிதாக திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 1-4-2001 முதல் 31-10-2001 வரையிலான காலத்தில் 5 முழுநேர நியாய விலைக் கடைகளும் 24 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் இம்மாவட்டத்தில் புதியதாக திறக்கப்பட்டன.

**3—**

### நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 26230—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், இரும்புபாலம் கிராமத்தில் நியாய விலைக் கடை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், இரும்புப்பாலம் என்பது குன்னமலை கிராமத்தில் உட்பட்ட குக்கிராமமாகும். இப்பகுதி'ில் 80 குடும்பங்களே உள்ளன. 69 குடும்ப அட்டைகள் உள்ளன. அரசு ஆணை எண் 214, கூ.உ. (ம) நு.பா. துறை நாள் 15-10-1998-ன்படி, பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு 200 குடும்ப அட்டைகள் மற்றும் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலும் இருக்க வேண்டும். ஆனால் இந்த இனத்தில், நியாய விலைக் கடை கோரும் இரும்புப்பாலம் என்னும் பகுதிக்கும், தற்போது நியாய விலைக் கடை அமைந்துள்ள குன்னமலை பகுதிக்கும் இடைப்பட்டுள்ள தூரம் 1 கிலோ மீட்டர் முதல் 1.5 கிலோ மீட்டர் ஆகும். எனவே, மேற்குறிப்பிட்ட காரணங்களினால், இரும்புப்பாலம் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

**4—**

### அங்காடியில் அத்தியாவசியப் பொருள் வழங்குதல்

**வினா எண் 34223—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நிம்மேலி ஊராட்சி, குமாரநத்தம் கிராம குடும்ப அட்டைகளுக்கு வரவக்குடி அங்காடியில் அத்தியாவசிய பொருள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், குமாரநத்தம் கிராமம் மருதங்குடி ஊராட்சியைச் சேர்ந்த வரவக்குடி, ஆலஞ்சேரி, குமாரநத்தம் மற்றும் மருதங்குடி ஆகிய நான்கு கிராமங்களுக்கும் மையப்பகுதியான வரவக்குடி கிராமம் அமைந்துள்ளது. மருதங்குடி ஊராட்சிக்குரிய அங்காடி வரவக்குடி கிராமத்தில் இயங்கி வருகிறது. குமாரநத்தம் கிராமத்தில் உள்ள 72 குடும்ப அட்டைதாரர்களுக்கு, வரவக்குடி அங்காடியில் தான் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டு வருகிறது.

**5—**

## குடும்ப அட்டைகள்

**வினா எண் 34292—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் 3 முதல் 13 வரையுள்ள, 11 வட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகள் எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு குடிமைப் பொருட்கள் வழங்கும் கடைகளின் எண்ணிக்கை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் 3 முதல் 13 வரையுள்ள 11 வட்டங்களிலுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் அந்த 11 வட்டங்களிலும் இயங்கிவரும் நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை ஆகியவை குறித்த விபரங்கள் பின்வருமாறு:—



| சென்னை மாநகராட்சி வட்ட எண். | புழக்கத்திலுள்ள மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | இயங்கிவரும் மொத்த நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 3 | 9,107 | 7 |
| 4 | 4,186 | 4 |
| 5 | 11,091 | 12 |
| 6 | 4,368 | 5 |
| 7 | 6,330 | 6 |
| 8 | 9,159 | 7 |
| 9 | 3,252 | 3 |
| 10 | 8,725 | 6 |
| 11 | 6,079 | 4 |
| 12 | 4,869 | 4 |
| 13 | 5,022 | 4 |
| **மொத்தம்** | **72,188** | **62** |

**6—**

## நியாய விலைக் கடைகள் தணிக்கை

**வினா எண் 34704—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு வட்ட வழங்கல் அலுவலகத்தின் மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் நியாய விலைக் கடைகளில் கண்டு பிடிக்கப்பட்ட குற்றங்கள் எத்தனை?

[2004 ஜூலை 23

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

செங்கற்பட்டு வட்ட வழங்கல் அலுவலகத்தின் மூலம் 2001-2002 ஆம் ஆண்டில் 297 நியாய விலைக் கடைகளை தணிக்கை செய்து குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**7—**

## பூச்சித் தடுப்புப் பணி

**வினா எண் 39082—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மூலம் செயல்படும் பூச்சித் தடுப்புப் பிரிவின் பணியை அரசு விளக்குமா?

(ஆ) அதன் மூலம் கடந்த 2001–2002 ஆம் ஆண்டில் அரசுக்கு வந்த லாபம் எவ்வளவு என்பதை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் மூலம் செயல்படும் பூச்சித் தடுப்புப் பிரிவின் பணியின் விளக்கம்:—

அதிநவீன அறிவியல் முறையில் சேமிப்புகளை இலட்சியமாகக் கொண்டு உள்ள தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் சேமிப்புக் கிடங்கு விதிகள் 1962, பிரிவு 24—ன்படி இதர அறிவிக்கப்படும் பணிகளையும் மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டு இருப்பதைத் தொடர்ந்து மத்திய அரசு பூச்சித் தடுப்புப் பணியை கிடங்குகளுக்கு வெளியேயும் நடத்திட, அறிவியல் சேமிப்புப் பணியினை விரிவுபடுத்த ஆணை எண் 26 366–11, நாள் 18-3-1968—ல் ஆணை பிறப்பித்தது. தமிழக அரசு இந்நிறுவனத்தின் பூச்சித் தடுப்புப் பணிகளை பயன்படுத்திட அரசு, அரசுத் துறை ஆகியவைகளைக் கேட்டுக்கொண்டது.



2004 ஜூலை 23]

இதன்படி கீழ்க்கண்ட பூச்சித் தடுப்புப் பணிகள் அரசு நிறுவனங்கள், சார்பு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை நிறுவனங்களுக்கும் செய்யப்பட்டு வருகிறது.

1. கரையான் தடுப்பு பணி - புதிய கட்டடங்கள் பழைய கட்டடங்கள்

2. கரையான் மருந்து தெளிப்பு - ஆவணங்கள், பதிவறைகள், நூலகங்கள், கிடங்குகள்

3. எலி தடுப்புப் பணி

4. கரப்பான் மற்றும் இதர பூச்சிகள் தடுப்புப் பணி

5. கொசு தடுப்புப் பணி

6. புகையான் மருந்து பாய்ச்சுதல் (தானிய மூட்டைகளுக்கு)

இப்பணியினால் அலுவலகங்கள், பதிவறைகள், நூலகங்கள் மற்றும் இதர இடங்கள் தூய்மையாக இருப்பதுடன் அங்கு பணிபுரியும் அலுவலர்களின் நலனும் மற்றும் பொதுமக்கள் நலனும் பாதுகாக்கப்படுகிறது.

இப்பணியினால் தானியங்கள் சேதாரம் குறைவதும், பொதுநலன் ஆரோக்கியம் மேலும் நாட்டின் நலனும் பாதுகாக்கப்படுகிறது. இப்பணி சேவை மனப்பான்மையுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) பூச்சித் தடுப்புப் பணியின் மூலம் கடந்த 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.22,74,340 (ரூபாய் இருபத்திரண்டு இலட்சத்து எழுபத்தி நான்காயிரத்து முன்னூற்று நாற்பது மட்டும்) வருவாய் ஈட்டப்பட்டது.

இதில் ரூ.13,64,604 (ரூபாய் பதின்மூன்று இலட்சத்து அறுபத்தி நான்கு ஆயிரத்து அறுநூற்று நான்கு மட்டும்) பூச்சி மருந்து தெளிப்புக்காகச் செலவு செய்யப்பட்டது.

ரூ.9,09,736 (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஒன்பது ஆயிரத்து எழுநூற்று முப்பத்து ஆறு மட்டும்) இலாபத் தொகையாக ஈட்டப்பட்டுள்ளது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226196
சென்னை-600 008

[2004 ஜூலை 23

8—

## பகுதிநேர நியாய விலைக் கடைகள்

**வினா எண் 43319—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் பகுதிநேர நியாயவிலைக் கடைகள் புதிதாக எத்தனை திறக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் 1-4-2002 முதல் 1-4-2003 முடிய 4 பகுதி நேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. (மேலும் இரண்டு கடைகள் 1-4-2003 முதல் 30-11-2003-க்குள் திறக்கப்பட்டன).

9—

## நிலத்தடி மின்வடக் கம்பிகள் அமைத்தல்

**வினா எண் 22787—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகர பகுதிகளில் வாகனங்கள் மோதி உயிர் இழப்பு ஏற்படுவதை தவிர்க்க நிலத்தடி மின்வடக் கம்பிகள் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எடப்பாடி நகர பகுதியில் மின் தளவாடங்களில் வாகனங்கள் மோதி மின் விபத்து ஏற்பட்டு எவ்வித உயிர் இழப்பும் அல்லது உயிர் இழப்பு அல்லாத எந்தவித விபத்தும் இதுவரை ஏற்படவில்லை. மேலும் மின் சாதனங்களில் மேற்கண்ட விபத்து ஏற்படாவண்ணம் தக்க பாதுகாப்புடன் மின் பாதைகள் அமைக்கப்பட்டு வருகிறது. எடப்பாடி நகர் பகுதியில் நிலத்தடி மின் வடக்கம்பிகள் அமைக்கும் திட்டம் மின் வாரியத்தின் பரிசீலனையில் இல்லை.



2004 ஜூலை 23]

10—

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 28747—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில், கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சிபாரிசு செய்தும் 300 தெரு விளக்குகள் இன்னும் வழங்கவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் ஏற்கெனவே 115 தெரு மின் விளக்குகள் அமைக்க வேண்டி 20-3-2002 அன்று பெறப்பட்ட விண்ணப்பம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து மதிப்பீட்டுத் தொகை ரூ.6,94,450 செலுத்த வேண்டி சிறப்பு நிலை செயல் அலுவலர், வால்பாறை, அவர்கட்கு கடிதம் கொடுக்கப்பட்டது. ஆனால் ரூ.5,00,000 மட்டும் சட்டமன்ற தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து செலுத்தப்பட்ட தொகைக்கு 75 தெரு மின் விளக்குகள் மட்டும் 8-8-2002 அன்று ஒளிர்விக்கப்பட்டன. மீதமுள்ள 40 தெரு விளக்குகளுக்கான விண்ணப்பம் நிலுவையில் உள்ளன. இதற்கான மதிப்பீட்டுத் தொகையை செலுத்தினால் உடனடியாக தெரு மின் விளக்குகள் அமைத்துத் தரப்படும்.

மேலும் தற்போது 15-11-2002 அன்று கூடுதலாக 200 தெரு மின் விளக்குகள் அமைக்க விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.15,52,475 மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய தொகை சிறப்பு நிலை செயல் அலுவலர், வால்பாறை, அவர்கட்கு 31-12-2002 அன்று தெரிவிக்கப்பட்டது. மதிப்பீட்டுத் தொகையை செலுத்தினால் உடனடியாக தெரு மின் விளக்கு அமைத்துத்தரப்படும்.

[2004 ஜூலை 23

**11—**

## சார்பு நீதிமன்றம்

**வினா எண் 34887—திரு. டி. மணி:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை சார்பு நீதிமன்ற வழக்கறிஞர் பிப்ரவரி 11 ஆம் தேதியிலிருந்து புறக்கணித்து ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) நீதிமன்ற நடவடிக்கைகள் பாதிப்படைந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(இ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ), (ஆ) மற்றும் (இ) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை சார்பு நீதிமன்ற நீதிபதி அவர்கள் மாற்றப்பட்டு மற்றுமொரு சார்பு நீதிபதி 2-5-2003 முதல் பணியமர்த்தப்பட்டுள்ளார். தற்போது குழித்துறை சார்பு நீதிமன்றம் நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**12—**

## வீட்டிற்கு மின் இணைப்பு

**வினா எண் 40374—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவொற்றியூர் நகரத்தில் வீட்டு மின் வசதி இல்லாதவர்களுக்கு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் நகரத்தில் வீட்டு மின் வசதி இல்லாதவர்கள், மின் இணைப்பு வேண்டி அதற்குரிய விண்ணப்பப் படிவத்தில், அதற்குரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்தால், தமிழ்நாடு மின்சார வாரிய விதிகளுக்குட்பட்டு மின் இணைப்பு வழங்குவதற்குண்டான தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**13—**

## தெரு மின் விளக்கு அமைத்தல்

**வினா எண் 40466—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருவொற்றியூர் நகரம், 39—வது வட்டம், கட்டபொம்மன் நகரிலுள்ள கீரை தோட்டத்திற்கு மின் விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் நகரம் 39—வது வட்டம், கீரைத்தோட்டம் என அழைக்கப்பட்டு வந்த வரதராசன் தெருவிற்கு திருவொற்றியூர் நகராட்சி ஆணையர் அவர்களிடமிருந்து மூன்று தெரு விளக்குகளுக்கு விண்ணப்பம் கடந்த 8-8-2003 ஆம் தேதியன்று பெறப்பட்டு தேவையான மதிப்பீடு ரூ.14,400/-க்கு செய்யப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட மதிப்பீட்டு தொகையான ரூ.14400/-ஐ ஆணையர், திருவொற்றியூர் நகராட்சி அவர்கள் மின்வாரியத்திற்கு செலுத்திய உடன் பணி எடுக்கப்பட்டு முடிக்கப்படும்.

[2004 ஜூலை 23

**14—**

## தங்கும் விடுதி முன்பதிவு செய்தல்

**வினா எண் 39116—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு வசதியாக தங்கும் விடுதியை விழா நாட்கள் தவிர மற்ற நாட்களில் பதிவு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான தங்கும் விடுதிகளில் முன்பதிவு செய்தால் அச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி சிலர் வியாபார நோக்குடன் முக்கிய பிரமுகர்களின் சிபாரிசின் அடிப்படையில் முன்பதிவு மூலம் விடுதியை வாடகைக்கு எடுத்துக்கொண்டு உள் வாடகைக்கு விட்டு பணம் சம்பாதிப்பதற்கான நிலை உருவாகுவதோடு, முன்பதிவு ஒருவர் பெயரிலும் அறையில் தங்குபவர் வேறு ஒருவராகவும் இருக்கும் நிலை உருவாவதால் இதனைப் பயன்படுத்தி சமூக விரோத செயல்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. முன்பதிவு செய்யப்படும் முறை பரிசார்த்தமான முறையில் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் இத்திருக்கோயிலில் நடைமுறைப்படுத்தப்பட்டு மோசமான விளைவுகள் ஏற்பட்டதன் காரணமாக நிறுத்தப்பட்டுவிட்டது. முன்பதிவு கேட்கும் நபர் யார் என அறியாமல் முன்பதிவு செய்வது திருக்கோயிலுக்கும், திருக்கோயில் சொத்துக்களுக்கும், பக்தகோடிகள் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம் இல்லாததால், திருக்கோயில் நிர்வாக நலன், பக்தர்களின் பாதுகாப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு இத்திருக்கோயில் தங்கும் விடுதிகளை எல்லா நாட்களிலும் முன்பதிவு செய்வது நடைமுறை செயல்பாட்டிற்கு உகந்ததாக இல்லை என்பதால் திருக்கோயிலின் விடுதிகளை பக்தர்களுக்கு முன்பதிவு செய்து தருவது குறித்து ஆவன செய்ய இயலாத நிலை உள்ளது.



2004 ஜூலை 23]

**15—**

## முதுகலை ஆசிரியர் நியமனம்

**வினா எண் 16554—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் பட்டதாரி முதுகலை ஆசிரியர்களை தேர்வு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அல்லது பதிவு மூப்பு அடிப்படையில் பணி வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டு, தகுதி அடிப்படையில் பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் நியமனம் செய்யப்படுகின்றனர்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**16—**

## பல்கலைக்கழகம் பெயர் மாற்றம்

**வினா எண் 34885—திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னைப் பல்கலைக்கழகம் மட்டும் "Chennai University" என்று குறிப்பிடாமல் இன்னும் மெட்ராஸ் பல்கலைக்கழகம் என்றே குறிப்பிடுவதன் காரணம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு சட்டம் 28/1996-ன்படி மதராஸ் என்பதை சென்னை என்ற பெயர் மாற்றம் செய்வது தொடர்பான சட்டம் இயற்றப்பட்டதன் நோக்கம் மதராஸ் நகரத்தினை சென்னை என்று பெயர் மாற்றம் செய்திட ஆகும். மதராஸ் பல்கலைக்கழகத்தினை சென்னை பல்கலைக்கழகம் என

பெயர் மாற்றம் செய்யாமல் தொடர்ந்து பழைய பெயரில் அழைக்கப்படும் வகையில் சட்டத் திருத்தம் செய்திட அரசினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. சென்னைப் பல்கலைக்கழகத்தின் பெயர், பாரம்பரியம் அனைத்து உலகப் புகழ்பெற்று விளங்குவதால் அதனை மெட்ராஸ் யூனிவர்சிட்டி என்றே அழைக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எனவே மேற்கண்ட மாற்றம் சென்னை நகரத்திற்கு மட்டும் பொருந்தும்.

**17—**

**பள்ளியை தரம் உயர்த்துதல்**

**வினா எண் 35022—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையப்பாளையம் ஊராட்சியின் கொடக்கார மூலை கிராமத்திலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**18—**

**+2-ல் மதிப்பெண் மேம்படுத்தும் திட்டம்**

**வினா எண் 42286—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் ப்ளஸ் 2—வில் (இம்ப்ரூவ்மெண்டு) மேம்படுத்தும் தேர்வை எழுதியவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதில் வெற்றி பெற்றவர்கள் எத்தனை பேர்?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் 2002 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் ப்ளஸ் 2—வில் மதிப்பெண் மேம்படுத்தும் திட்டத்தின்கீழ் தேர்வு எழுதியவர்கள் 249 பேர்.

(ஆ) வெற்றி பெற்றவர்கள் 229 பேர்.

**19—**

**சலவையகம் அமைக்க நிதி உதவி**

**வினா எண் 34314—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு சலவை நிலையம் அமைக்க 2002 ஆம் ஆண்டில் எத்தனை பேருக்கு நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

2002-2003 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் சலவையகம் அமைத்திட மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 2 நபர்களுக்கு ரூ.3000 (தலா ரூ.1500 வீதம்) அரசு மானியம் நிதியுதவியாக அளிக்கப்பட்டது.

**20—**

**இலவச தொழிற்கருவிகள் வழங்குதல்**

**வினா எண் 40998—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் சலவையாளர், முடிதிருத்துவோர், கல் உடைப்போர் ஆகியோருக்கு இலவச தொழிற்கருவிகள் வழங்க அரசு முன்வருமா?

[2004 ஜூலை 23

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆண்டுதோறும் பூர்வீகத் தொழிலில் ஈடுபட்டுள்ள மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வரையறுக்கப்பட்ட வருமானத்திற்கு உட்பட்டு இலவச தொழிற்கருவிகள் வழங்கப்படுகின்றன.

(ஆ) சங்கராபுரம் வட்டத்தில் 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டுகளில் 27 சலவைப் பெட்டிகளும், 30 முடிதிருத்துவோர் கைப்பெட்டிகளும், 45 கல்லுடைக்கும் கருவிகளும் தகுதியுடைய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன.

**21—**

## சத்துணவுக் கூடம்

**வினா எண் 27353—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், புதுசத்திரம் ஒன்றியம், நவளி ஊராட்சி, பள்ளிப்பட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் பழுதடைந்துள்ள சத்துணவுக் கூடத்தை பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், புதுசத்திரம் ஊராட்சி ஒன்றியம், நவளி ஊராட்சி, பள்ளிப்பட்டி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் 2000-2001 ஆம் நிதியாண்டில், ரூ.3550 மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்போது இம்மையத்தில் எவ்வித பழுதும் இல்லை. கட்டடம் தற்போது நல்ல நிலையில் உள்ளது.



2004 ஜூலை 23]

**22—**

## குழந்தைகள் நலக் காப்பகம்

**வினா எண் 30306—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியில் குழந்தைகள் நலக் காப்பகம் புதுப்பிக்க திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொள்ளிடம் ஒன்றியம், அரசூர் ஊராட்சியிலுள்ள குழந்தைகள் காப்பகம், உலக வங்கி ஊட்டச்சத்து மையங்கள் பழுது நீக்கம் செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது புதுப்பிக்கப்படும்.

**23—**

## முதியோர் உதவித் திட்டம்

**வினா எண் 31018—திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் முதியோர் உதவி திட்டத்தினால் பயன் பெறுவோர் எத்தனை பேர்?

(ஆ) இதுவரை விண்ணப்பித்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறுவோர் 73932 பேர்.

(ஆ) 1-1-2003 முதல் 30-6-2003 வரை விண்ணப்பித்தவர்கள் எண்ணிக்கை 4845.

[2004 ஜூலை 23

24—

## சத்துணவுக் கூடம்

**வினா எண் 32345—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு மேலச்சாலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சத்துணவுக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, மேலச்சாலை ஒன்றிய நடுநிலைப் பள்ளி சத்துணவு சமையல் கூடம் 2000-2001 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஆர்.சி.சி. கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட்டது.

25—

## திருமண நிதியுதவித் தொகை

**வினா எண் 35710—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டத் தொகையை அதிகரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

அரசின் திருமண நிதி உதவித் திட்டங்களின்கீழ் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவைகளின் மகள் திருமண நிதியுதவித் திட்டமும் ஒன்றாகும். அனைத்து திருமண உதவித் திட்டங்களின்கீழ் வழங்கப்படும் நிதி உதவித் தொகையினை அரசு ஆணை (நிலை) எண் 124, சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை, நாள் 1-10-2001-ன்படி ஒரே சீராக ரூ.10,000/- என உயர்த்தி பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் தொகையை அதிகரிக்க அரசிடம் திட்டம் எதுவும் இல்லை.





26—

## இலவச சமையல் எரிவாயு இணைப்பு

**வினா எண் 37425—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். ஏற்காடு தொகுதியில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம் 2001-2002 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) 31-7-2003 வரை, ஏற்காடு தொகுதியில் வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் 62 சுயஉதவிக் குழு புதுமணத் தம்பதிகளுக்கு (உறுப்பினர் மற்றும் அவர்களது மகள்) இலவச சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

27—

## கலப்புத் திருமண நிதியுதவி

**வினா எண் 37428—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். ஏற்காடு தொகுதியில் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.*

*(ஆ) 1 தம்பதியர் மட்டுமே பயனடைந்துள்ளனர்.*

*(இ) வழங்கப்பட்ட நிதி ரூ.20,000/-*

**28—**

### விதவை மறுமணத் திட்டம்

**வினா எண் 37429—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயன் அடைந்தோர் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். ஏற்காடு தொகுதியில், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால் 2002-2003 ஆம் நிதியாண்டில் விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை.*

*(ஆ) உதவி கோரி யாரும் விண்ணப்பிக்கவில்லை. எனவே, பயனடைந்தோர் யாருமில்லை.*

*(இ) பயனடைந்தோர் யாருமில்லாததால் இவ்வினா எழாது.*



**29—**

### திருமண நிதியுதவி

**வினா எண் 38625—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) சேலம் மாவட்டத்தில் 2002-2003 ஆம் ஆண்டில் அன்னை தெரசா நினைவு ஆதரவற்ற பெண்கள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை 7 (ஏழு) பேர்*

**30—**

### திருமண நிதியுதவி

**வினா எண் 38627—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு ஏழை விதவையரது மகள் திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டு பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ஈ.வெ.ரா. மணியம்மையார் நினைவு, ஏழை விதவையரது மகள் திருமண உதவித் திட்டத்தின்கீழ் பயனடைந்தோரின் எண்ணிக்கை 50 பேர்.*

[2004 ஜூலை 23

31—

## கலப்புத் திருமண நிதியுதவி

**வினா எண் 38628—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் அரசின் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டில் பயன் அடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் அரசின் கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின்கீழ் பயனடைந்தோர் எண்ணிக்கை 42.*

32—

## சமையல் எரிவாயு இணைப்பு

**வினா எண் 38644—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், கடந்த ஆண்டில் பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம். சேலம் மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள புதுமணத் தம்பதிகளுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்புத் திட்டம் 2001-2002 முதல் செயல்படுத்தப்படுகிறது.*



2004 ஜூலை 23]

*(ஆ) சேலம் மாவட்டத்தில் 31-7-2003 வரை மகளிர் திட்டத்தின்கீழ் இயங்கி வரும் சுய உதவி குழு உறுப்பினர்/உறுப்பினரது மகள் 253 பேர் (புதுமணத் தம்பதிகள்) இத்திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளனர்.*

33—

## சத்துணவு மையத்திற்கு சமையல் கூடம்

**வினா எண் 41944—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி பொன்விளைந்தகளத்தூரில் உள்ள ஒன்றியப் பள்ளிக்கு சமையல் அறை கட்டித்தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம் பொன்விளைந்தகளத்தூரில் உள்ள பள்ளி சத்துணவு மையத்திற்கு சமையல் கூடம் கட்டித்தர 2004-2005 ஆம் ஆண்டில் முன்னுரிமை கொடுத்து பணி மேற்கொள்ளப்படும்.*

34—

## சத்துணவு மையத்திற்கு சமையல் கூடம்

**வினா எண் 41947—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வீராபுரம் அமைஞ்சக்கரை ஊராட்சியில் சத்துணவு சமையல் கூடம் கட்ட அரசு ஆணையிடுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த வீராபுரம் அமைஞ்சக்கரை கிராமங்களில் பள்ளி சத்துணவு சமையல் கூடம், அங்கன்வாடி சமையல் கூடம் ஆகியவை நல்ல நிலையில் செயல்படுகின்றன.*

**35—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 44591—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், செவந்திலிங்கபுரம் ஊராட்சி, மாங்கரைப்பேட்டை மற்றும் குணசீலம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், செவந்திலிங்கபுரம் ஊராட்சி தொடக்கப் பள்ளி சத்துணவு மையம் ரூ.50,000/- மதிப்பீட்டில் "எஸ்.ஜி.ஆர்.ஒய்." சம்பூர்ண கிராமின் ரோஜ்கர் யோஜனா 5 சதவீத இயற்கை இடர்பாடுகள் திட்டத்தின் மூலம் 2002-2003 ஆம் ஆண்டில் கட்டப்பட்டுவிட்டது. மாங்கரைப்பேட்டை மற்றும் குணசீலம் சத்துணவு மையங்களுக்கு கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் ரூ.50,000/ மதிப்பீட்டில் சத்துணவுக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.*



2004 ஜூலை 23]

**36—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 46427—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் 22-வது வார்டு துறையூரில் அமைந்துள்ள சத்துணவுக் கூடத்தை புதுப்பிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) 2003-2004 ஆம் ஆண்டு துறையூர் பள்ளிக் கட்டடம் மற்றும் சத்துணவு மையம், கழிப்பறை வசதியுடன் ரூ200 இலட்சம் மதிப்பீட்டில், மேம்பாடு செய்ய 17-6-2003 அன்று பணி உத்தரவு (Work Order) வழங்கப்பட்டுள்ளது.*

**37—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 46682—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், செம்மங்குடி ஊராட்சி ஒன்றிய, நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம், 2004-2005 ஆம் ஆண்டில், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.*

**38—**

**மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு கட்டடம்**

**வினா எண் 46886—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம் வள்ளுவக் குடியில் மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சுயஉதவிக் குழுக்களின் கூட்டம் அங்கன்வாடி மையங்களில் நடக்க அனுமதிக்கலாம் என அரசு ஆணையிட்டுள்ளது. மேலும் மாலை நேரங்களில் குழந்தை நல மையங்களை மூடுவதற்கு முன்பு அம்மையத்தில் உள்ள பெரிய அறையில் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் கூடிப் பேசவும், கூட்டங்கள் நடத்திடவும் அரசு அனுமதி அளித்துள்ளது. எனவே மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு தனியாக கட்டடம் கட்டித் தரும் திட்டம் ஏதுமில்லை.*

**39—**

**சத்துணவு சமையல் கூடம்**

**வினா எண் 46895—திரு. நா. சந்திரமோகன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*





*(அ) சீர்காழி தொகுதி, அகர வட்டாரம் ஊராட்சி, நல்லநாயகபுரம் ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சமையல் கூடம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, அகர வட்டாரம் ஊராட்சி, நல்லநாயகபுரம் ஊராட்சியிலிருந்து, ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சமையல் கூடம் 2004-2005 ஆம் நிதியாண்டில், புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**40—**

**சத்துணவுக் கூடம்**

**வினா எண் 46931—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை காஞ்சமலை எஸ்டேட்டில் அரசு உதவி பெறும் ஆரம்பப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை காஞ்சமலை எஸ்டேட்டில் உள்ள அரசு உதவி பெறும் ஆரம்பப் பள்ளி சத்துணவுக் கூடத்தினை முழுவதும் அகற்றிவிட்டு பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி மூலம் ரூ.1,00,000/- செலவில் தற்போது கட்டப்பட்டு வருகிறது. கருங்கல் கட்டுமானப் பணி முன்னேற்றத்தில் உள்ளது.*

[2004 ஜூலை 23

41—

## சத்துணவுக் கூடம்

**வினா எண் 47295—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, பள்ளப்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில் புதியதாக சத்துணவுக் கூடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, பள்ளப்பாளையம் ஆதிதிராவிடர் காலனியில், தற்போது "அனைவருக்கும் கல்வி" திட்டத்தின்கீழ் புதிய பள்ளி துவக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு பெறப்படும்போது சத்துணவுக் கூடம் கட்டும் பணி துவக்கப்படும்.

42—

## சத்துணவுக் கூடம்

**வினா எண் 47335—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி 18-வது வார்டு தலகண்டியம்மன் கோயில் ஆரம்பப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சி 18-வது வார்டு, கன்னியம்மன் கோயில் வீதி ஆரம்பப் பள்ளிக்கு



2004 ஜூலை 23]

வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சித் திட்டத்தில், (2003-2004) ரூ.75,000/- மதிப்பீட்டில் சத்துணவுக் கூடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

43—

## ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா எண் 12284—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி எத்தனை?

(ஆ) அவர்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் மொத்தம் 33 ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 16 விடுதிகள் மட்டும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவ்வாறு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் விடுதிகளுள் 11 ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் ஹட்கோ கடனுதவி மூலம் அரசு கட்டடம் கட்ட 23-3-2002 அன்று அரசு ஆணைகள் வெளியிடப்பட்டு தற்போது கட்டடப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விடுதிகளுக்கும் படிப்படியாக அரசு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

44—

## ஆதிதிராவிடர் மாணவர் விடுதிக்குக் கட்டடம்

**வினா எண் 12484—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி எத்தனை?

(ஆ) அவை சொந்தக் கட்டடத்தில் இயங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 32 ஆதிதிராவிடர் நல விடுதிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 13 விடுதிகள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இவ்வாறு வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் விடுதிகளுள் 5 ஆதிதிராவிடர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் ஹட்கோ கடனுதவி மூலம் அரசு கட்டடம் கட்ட 23-3-2002 அன்று அனுமதித்து ஆணைகள் வெளியிடப்பட்டு தற்போது கட்டடப் பணிகள் துவக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள விடுதிகளுக்கும் படிப்படியாக அரசு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**45—**

## மயானக் கொட்டகை கட்டுதல்

**வினா எண் 34928—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், நிம்மேலி ஊராட்சி புதுப்பேட்டை ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு சுடுகாடு கொட்டகை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நிம்மேலி ஊராட்சி புதுப்பேட்டை ஆதிதிராவிடர் காலனி மக்களுக்கு மயான கொட்டகை அமைத்திட ரூ.30,000/- மதிப்பீட்டில் 2004-2005 ஆம் ஆண்டில் MPLADP திட்டத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**46—**

## மயானப் பாதையை சீர்செய்தல்

**வினா எண் 34958—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நல்ல நாயகபுரம் ஆதிதிராவிட காலனியில் மயான பாதையை சீர்செய்து தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி கொள்ளிடம் ஒன்றியம், நல்லநாயகபுரம் ஆதிதிராவிடர் காலனி மயானப் பாதையைச் சீர்செய்து தர 11-வது நிதிக் குழு ஊராட்சி நிதியில் இப்பணியினை செய்ய முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

**47—**

## குடியிருப்புகளுக்கு மின் வசதி

**வினா எண் 38297—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) சேலம் மாவட்டத்தில் பாரத பிரதமர் கிராமோதய யோஜனா திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கும் திட்டம் செயல்பட உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்பட உள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில் பாரதப் பிரதமர் கிராமோதயா யோஜனா திட்டத்தின்கீழ் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கும் திட்டம் ஏதும் செயல்படுத்தப்படுவதில்லை. அடிப்படை வசதிகள், குடியிருப்பு கட்டமைப்பு வசதிகள் செய்யப்படும்பொழுது, மதிப்பீட்டிலேயே மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மூலம் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்கப்படுகிறது.

**48—**

## பள்ளிக்கு புதிய கட்டடங்கள்

**வினா எண் 44430—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராணிப்பேட்டை தொகுதி, வாலாசா ஒன்றியம், கடப்பேரி மற்றும் இராமாபுரம் காலனி ஆதிதிராவிடர் பள்ளிக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதால், புதிய கட்டடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், ராணிப்பேட்டை தொகுதி, வாலாசா ஒன்றியம், கடப்பேரி மற்றும் இராமாபுரம் குடியிருப்புகளில் உள்ள ஆதிதிராவிடர் நலத் துறை ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களில், இராமாபுர பள்ளிக் கட்டடம் மங்களூர் ஓடுகள் வேய்ந்த விராண்டாவுடன் கூடிய கட்டடங்களிலும், கடப்பேரி பள்ளி மங்களூர் ஓடு வேய்ந்த கட்டடம் மற்றும் கான்கிரீட் கட்டடம் ஆகியவற்றிலும் நல்ல நிலையில் செயல்பட்டு வருவதால், தற்போது புதிய கட்டடங்கள் கட்டும் தேவை ஏற்படவில்லை.



2004 ஜூலை 23]

**49—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 5664—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கற்பகநாதர்குளம் ஊராட்சியில் நியாய விலைக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், கற்பகநாதர்குளம் ஊராட்சியில் உள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டும் திட்டம் தற்போது ஏதுமில்லை. எனினும் இந்நியாய விலைக் கடைக்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் அரசு திட்ட நிதியிலிருந்து கட்டடம் கட்டுவதற்கு தேவையான தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**50—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 15535—திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வந்தவாசி தொகுதி, பாப்பநல்லூர்-கூணம்பாடி, கோத்தவேடு அக்ரகார்கொட்டாய், சிங்கம்பூண்டி-மலையூர், கொரசல்வாடி-தென்கரை, அரியாம்பூண்டி-பெருங்கடபுத்தூர், வயலாமூர்-படூர் ஆகிய ஊராட்சிகளிலும் மற்றும் எடகுப்பம் கிராமத்திலும் பொது விநியோக கடை கட்டடம் கட்ட அரசு ஆவண செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி தொகுதியைச் சார்ந்த கூனம்பாடி, அக்ரகோட்டை மற்றும் மழையூர் ஆகிய நியாய விலைக் கடைகள் அரசு திட்டங்களின்கீழ் கட்டப்பட்ட கட்டடங்களில் இயங்கி வருகின்றன. சிங்கம்பூண்டி, கொரசல்வாடி, தென்கரை, பெருங்கடபுத்தூர் மற்றும் படூர் ஆகிய நான்கு நியாய விலைக் கடைகளுக்கு அரசு திட்டங்களின்கீழ் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை அமைக்க அப்பகுதி மக்கள் இலவசமாக கட்டட வசதி செய்துதர வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால், பாப்பநல்லூர், கூத்தவேடு மற்றும் அரியம்பூண்டி ஆகிய பகுதிநேரக் கடைகளுக்கு அரசுத் திட்டங்களின்கீழ் சொந்தக் கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை. வயலாமூர் கிராமத்திற்கு கிராம மக்களால் கட்டடம் கட்டப்பட்டு சொந்த கட்டடத்தில் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. எடகுப்பம் என்ற கிராம நியாய விலைக் கடை, வந்தவாசி தாலுகாவில் எதுவுமில்லை.

**51—**

### கூட்டுறவு வங்கியின் கிளை

**வினா எண் 19334—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதி, கலவை பேரூராட்சியில் புதியதாக கட்டப்பட்ட கூட்டுறவு கிளை வங்கி திறக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும்?





**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): வேலூர் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் கலவை கிளையின் புதிய கட்டடம் 4-2-2003 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

**52—**

### மகளிர் சிறு வணிகக் கடன்

**வினா எண் 22991—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலம் 1-வது தொகுதியில் மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தில் எவ்வளவு மகளிர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது?

(ஆ) அதன் மொத்தத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், சேலம் 1-வது தொகுதியில் மகளிர் சிறு வணிகக் கடன் திட்டத்தில் 1843 மகளிர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) அதன் மொத்த தொகை ரூ.41.90 இலட்சம் ஆகும்.

**53—**

### நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 26466—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) தருமபுரி தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், கம்மம்பட்டி பஞ்சாயத்து பாம்பன்பாடியில் உள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஒன்றியம், கம்மம்பட்டி பஞ்சாயத்து, பாப்பம்பாடியில் உள்ள நியாய விலைக் கடைக்கு 2002-2003 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது கட்டடம் கட்டப்பட்டு வருகிறது.

**54—**

### தவணை முறையில் கடன் வசூல்

**வினா எண் 27716—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக விவசாயிகளின் நிலுவையிலுள்ள எல்லா கூட்டுறவுச் சங்கக் கடன்களையும் மூன்று மாதத்திற்கு பதிலாக ஒரு வருட தவணை முறையில் வசூல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விவசாயிகளின் விவசாயக் கடன்கள் ஏதும் மூன்று மாதங்களில் வசூல் செய்யப்படுவதில்லை. வேளாண் கடனைப் பொறுத்தமட்டில் பொதுவாக பலதரப்பட்ட பயிர்களின் அறுவடை காலத்திற்கு பிறகு இரண்டு மாதத்திற்குள் அதிகபட்சமாக ஒரு வருடத்திற்குள் வசூல் செய்யப்படுகிறது. கரும்புப் பயிரை பொறுத்த மட்டில் 15 மாத காலத்தில் வசூல் செய்யப்படுகிறது.



2004 ஜூலை 23]

**55—**

### நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 28442—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதிக்குட்பட்ட திருக்கழுக்குன்றம் வட்டம் பட்டிக்காடு நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதியில், திருக்கழுக்குன்றம் வட்டம், பட்டிக்காடு நியாய விலைக் கடை, புலியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. பட்டிக்காடு நியாய விலைக் கடை முழுநேரக் கடையாக 258 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே அரசுக் கட்டடத்தில்தான் இயங்கி வருகிறது.

**56—**

### நியாய விலைக் கடைக்கு கட்டிடம்

**வினா எண் 28971—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், ஏகாபுரம் நியாய விலைக் கடைக்கு ஏகாபுரத்தில் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி வட்டாரத்திலுள்ள ஏகாபுரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டிலுள்ள ஏகாபுரம் நியாய விலைக் கடை 1998-99 ஆம் ஆண்டில் அரசினால்

[2004 ஜூலை 23

வேலை உறுதி அளிப்புத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, இக்கடைக்கு வேறொரு கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**57—**

### நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 29028—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஒன்றியம் வெள்ளாலபுரம் ஊராட்சி, பாச்சாலியூர் நியாய விலைக் கடைக்கு அரசு கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆமெனில் அது பற்றிய விவரத்தை அரசு தெரிவிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் ஒன்றியத்தில் சின்னப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் பாச்சாலியூர் நியாய விலைக் கடை 577 குடும்ப அட்டைகளுடன் முழுநேர அங்காடியாக வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்கு அரசு புறம்போக்கு நிலத்தில் இலவசத் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டிக் கொடுக்க சேலம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு சேலம் மண்டல இணைப்பதிவாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**58—**

### பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 30506—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுகா, கோடநாடு ஊராட்சி கேராட மட்டத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிகவரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி தாலுகா, கோடநாடு ஊராட்சியில் வெற்றிநகர், கேராட மட்டம் மற்றும் ஈளாடா ஆகிய சிற்றூர்களில் 284 குடும்ப அட்டைகள் உள்ளன. இவர்களது குடும்ப அட்டைகள் 1½ கிலோ மீட்டர் தொலைவில் ஈளாடா என்ற இடத்தில் உள்ள கோத்தகிரி கூட்டுறவு பண்டகசாலையால் நடத்தப்படும் 630 குடும்ப அட்டைகளை கொண்டு செயல்படும் நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளன. பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் இரு கடைகளுக்குமிடையே 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் கேராட மட்டத்தில் பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**59—**

### தினக்கூலிகள் பணி நிரந்தரம் செய்தல்

**வினா எண் 30520—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* புதுக்கோட்டை அரசு அங்காடியில் வேலை செய்யும் தினக்கூலிகளை நிரந்தர ஊழியர்களாக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மண்டலத்திலுள்ள நியாய விலைக் கடைகளில் தினக்கூலி அடிப்படையில் எவரும் பணிபுரியவில்லை.*

**60—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 31566—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செங்கற்பட்டு தொகுதி, மேலமையூர் காமராஜ் நகரில் நியாய விலைக் கடை ஒன்றினை திறக்க அரசு உடன் நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கற்பட்டு வட்டம், மேலமையூர் தாய் நியாய விலைக் கடையில் உள்ள 833 குடும்ப அட்டைகளிலிருந்து 200 குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்டு, மேலமையூர் காமராஜர் நகர் பகுதியில் ஒரு பகுதிநேரக் கடை அமைக்க காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரால் 24-12-2003 ஆம் நாளன்று உத்தரவிடப்பட்டு அங்கு பகுதிநேரக் கடை நடைபெற்று வருகிறது.*

**61—**

**நியாய விலைக் கடை**

**வினா எண் 31695—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





*(அ) திருவொற்றியூர் தொகுதியிலுள்ள சத்தியமூர்த்தி நகரில் உணவுப் பொருள் வழங்கல் கடை அமைக்கப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திருவொற்றியூர் மண்டலத்தில் செயல்பட்டு வரும் கலைஞர் நகர் (2) நியாய விலைக் கடையில் 1677 குடும்ப அட்டைகள் உள்ளன. தாய் நியாய விலைக் கடையிலிருந்து 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள சத்தியமூர்த்தி நகரில் 302 குடும்ப அட்டைகள் உள்ளன. புதிய நியாய விலைக் கடை திறப்பதற்கு குறைந்தது 800 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதால் 302 குடும்ப அட்டைகளை கொண்டுள்ள சத்தியமூர்த்தி நகரில் புதிய நியாய விலைக் கடை திறக்க வாய்ப்பில்லை.*

**62—**

**கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு கட்டடம்**

**வினா எண் 31991—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகம் தனியார் கட்டடத்தில் வாடகைக்கு இயங்கி வருவதால் அதற்கு சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தற்போதுள்ள நிதி நெருக்கடியில், ஈரோடு மாவட்ட கூட்டுறவு இணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு அரசு செலவில் சொந்தக் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

63—

## நியாய விலைக் கடை

**வினா எண் 32663—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தை சேர்ந்த ஊ. ரெட்டிபட்டி ஊராட்சியை சேர்ந்த சென்னப்ப நாய்க்கனூரில் புதிய நியாய விலைக் கடை (பகுதி நேரம்) திறக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரை வட்டத்தை சேர்ந்த ஊ. ரெட்டிபட்டி ஊராட்சியை சேர்ந்த சென்னப்ப நாய்க்கனூரில் ஏற்கெனவே ஒரு பகுதி நேரக் கடை 320 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. எனவே புதிதாக நியாய விலைக் கடை திறக்கும் திட்டம் அரசிடம் இல்லை.

64—

## நியாய விலைக் கடை

**வினா எண் 34090—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், நம்புரான்பட்டி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், நம்புரான்பட்டி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடை 280 குடும்ப அட்டைகளைக் கொண்டு பகுதிநேர கடையாக செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடைக்கான கட்டடத்தை அப்பகுதி மக்கள் இலவசமாக வழங்க வேண்டும் என்ற நிபந்தனை உள்ளதால், நம்புரான்பட்டி ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்கு அரசு கட்டடம் கட்டித் தர வழிவகையில்லை.

65—

## நியாய விலைக் கடை

**வினா எண் 34197—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், மேலகம்மங்காடு ஆதிதிராவிடர்களுக்கு புதிய கிளை நியாய விலைக் கடை அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஒன்றியம், கூழியான்விடுதி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் மணவிடுதி நியாய விலைக் கடை 590 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. மேலகம்மங்காடு பகுதியில் 146 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. இப்பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க கிராம பொது மக்கள் இலவசமாக கட்டடம் தர முன்வரவில்லை. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். பகுதிநேரக் கடை அமைக்க ஊர் மக்கள் இலவச கட்டட வசதி செய்து

[2004 ஜூலை 23

தர வேண்டும் மற்றும் பகுதி நேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர் தாய்க் கடையில் 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் மேலகம்மங்காடு பகுதியில் பகுதி நேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

**66—**

## அங்காடிக்கு புதிய கட்டடம்

**வினா எண் 34578—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம் மங்களத்துப்பட்டியில் செயல்படும் பகுதிநேர அங்காடி கடைக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குன்னாண்டார் கோயில் ஒன்றியம், மங்களத்துப்பட்டியில் ஒரு பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை அமைக்க ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும். அரசு திட்டங்களின்கீழ் பகுதிநேரக் கடைக்கு கட்டட வசதி செய்து தர சாத்தியக்கூறுகள் இல்லை.

**67—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 35151—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி - முத்தரசன்குப்பம் கிராமத்தில் உள்ள தனியார் கட்டடத்தில் உள்ள நியாய விலைக் கடைக்கு சொந்தமாக ஒரு கட்டடம் அமைத்து அதில் மாற்றித்தர அரசு முன்வருமா?



2004 ஜூலை 23]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதியில் முத்தரசன்குப்பம் பகுதியில் உள்ள நியாய விலைக் கடை சிலம்பிநாதன்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் ஒரு பகுதிநேரக் கடையாகும். இக்கடை வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை அமைக்க ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்து தர வேண்டும். எனவே, இந்தப் பகுதிநேரக் கடைக்கு அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

**68—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 37050—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி–காட்டாண்டிகுப்பம் கிராமத்தில் நியாய விலைக் கடைக்கு சொந்தமாக அரசு கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, காட்டாண்டிக்குப்பம் பகுதி 210 குடும்ப அட்டைகளுடன் காடாம்புலியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் பகுதிநேரக் கடையாக தனியார் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. ஊர் மக்களே சொந்த கட்டட வசதி செய்து தர வேண்டும் என்ற நிபந்தனையின்படிதான் பகுதி நேரக் கடைக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மேலும் அரசு திட்டங்களின் கீழ் பகுதிநேரக் கடைக்கு சொந்த கட்டடம் கட்ட வழிவகை இல்லை.

[2004 ஜூலை 23

69—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 37783—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், குமாரப்பட்டி கிராமத்தில் கூடுதல் பகுதிநேரக் கடை அமைக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் தாலுகா, நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி வட்டாரத்தில் 172 குடும்ப அட்டைகளை கொண்டுள்ள குமாரப்பட்டி பகுதி 642 குடும்ப அட்டைகளை கொண்டுள்ள கோரனாம்பதி தாய் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் மற்றும் பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவடையாததால் குமாரப்பட்டியில் பகுதிநேரக் கடை அமைக்க வாய்ப்பில்லை.

70—

## நியாய விலைக் கடை கட்டடம்

**வினா எண் 38757—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஆரியப்பட்டி பஞ்சாயத்து, ஆரியப்பட்டியில் நியாய விலைக் கடை வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே சொந்த கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, ஆரியப்பட்டி பஞ்சாயத்து, ஆரியப்பட்டி கிராம குடும்ப அட்டைதாரர்கள் அருகிலுள்ள கும்பணம்பட்டி நியாய விலைக் கடையில் குடிமைப் பொருட்களை பெற்று வருகின்றனர். எனவே, ஆரியப்பட்டி கிராமத்தில் தனியாக நியாய விலைக் கடை இல்லாததால் மேற்படி ஊரில் புதிய கட்டடம் கட்ட தேவையில்லாத நிலை உள்ளது.

71—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 38759—திரு. ஸா. சந்தானம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, ஆரியப்பட்டி பஞ்சாயத்து, கன்னியம்பட்டி பகுதியில் உள்ள நியாய விலைக் கடை வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே சொந்த கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, ஆரியப்பட்டி பஞ்சாயத்து, கன்னியம்பட்டி பகுதியிலுள்ள நியாய விலைக் கடை பஞ்சாயத்திற்கு சொந்தமான கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. மேற்படி கட்டடம் ஊரின் மையப் பகுதியில் அமைந்துள்ளதால் கிராம மக்கள் குடிமைப் பொருட்களை சிரமமின்றி பெற்று வருகின்றனர். இந்நிலையில் மேற்படி நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட தேவையில்லை.

[2004 ஜூலை 23

72—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 38761—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, சிந்துப்பட்டி பஞ்சாயத்து போத்தம்பட்டிக்கு நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, சிந்துப்பட்டி பஞ்சாயத்துக்குட்பட்ட எஸ். போத்தம்பட்டி நியாய விலைக் கடை, எஸ். போத்தம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் சொந்த கட்டடத்தில் செயல்பட்டு வருவதால் மேற்படி நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

## நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 39514—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலைப்பேட்டை தொகுதி, சின்னப்பொம்மன் சாலையில் நியாய விலைக் கடை கட்ட அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* உடுமலைப்பேட்டை தொகுதி, சின்னப்பொம்மன் சாலையில் செயல்படும் நியாய விலைக் கடை செல்லப்பபாளையம்



2004 ஜூலை 23]

தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியால் நடத்தப்படும் பகுதி நேரக் கடையாகும். பகுதிநேரக் கடை அமைக்க ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும். இருப்பினும் இக்கடைக்கு இந்த நிதி ஆண்டிலேயே கட்டடம் கட்டி முடிக்க ரூ.1.68 இலட்சம் கோவை மாவட்ட ஆட்சித் தலைவரால் ஒதுக்கீடு செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

74—

## வாகனம் வழங்குதல்

**வினா எண் 44368—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையை மையமாகக் கொண்டு செயல்படும் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு நான்கு சக்கர வாகனம் (ஜீப்) வழங்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறையயை மையமாகக் கொண்டு செயல்படும் கூட்டுறவு துணைப் பதிவாளர் அலுவலகத்திற்கு வாகன வசதி செய்து கொடுப்பது தொடர்பாக மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறையின் பொது சேர்மத்தில் மற்ற துறைகளிடமிருந்து சரண் செய்யப்படும் வாகனங்களில், நல்ல நிலையில் உள்ள வாகனம் ஒன்றை ஒதுக்கீடு செய்ய மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

75—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 45442—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

அறந்தாங்கி ஒன்றியம், அத்தாணி அங்காடி மையத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி ஒன்றியம், அத்தாணி நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித்தரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. எனினும் காரக்கோட்டை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வரும் அத்தாணி மற்றும் அழகன்வயல் ஆகிய இரண்டு நியாய விலைக் கடைகளுக்கும், அரசின் பல்வேறு சமூக நலத் திட்டங்களின்கீழோ அல்லது பாராளுமன்ற/சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழோ புதிய கட்டடம் கட்ட தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**76—**

## தொழிற் பயிற்சி நிலையம்

**வினா எண் 35519—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில், 2001–2002 ஆம் ஆண்டில் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில், 6 மாத கால பயிற்சி (State Council for Vocational Training) நிலையம் அமைக்க விண்ணப்பம் செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதன் விவரம் என்ன?

(இ) அவர்கள் அனைவருக்கும் உரிமம் வழங்கப்பட்டு விட்டதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 4 பேர்



2004 ஜூலை 23]

| (ஆ) தொழிற்பள்ளியின் பெயர் | | தொழிற் பிரிவு |
|---|---|---|
| 1) சேதுராய்ஸ் இன்ஸ்டிடியூட் ஆப் கேட்டரிங் டெக்னாலஜி அண்டு ஹோட்டல் மேனேஜ்மென்ட், ஏற்காடு | — | இல்லப் பராமரிப்பு (House Keeping) |
| 2) அரசன் இன்ஸ்டிடியூட் ஆப் கேட்டரிங் டெக்னாலஜி அண்டு ஹோட்டல் மேனேஜ்மெண்ட் | — | இல்லப் பராமரிப்பு (House Keeping) |
| 3) செல்வன் டெக்னிக்கல் இன்ஸ்டிடியூட், சென்னை | — | தொலைபேசி இயக்குபவர் (Telephone Operator) நிகரி இயக்குபவர். (Telex Operator) |
| 4) ஈவிஸ் ஸ்கூல் ஆப் பியூட்டி தெரபி | — | 1. அழகுக் கலை மற்றும் மூலிகை பொருள் ஒப்பனை (Beauty Culture and Herbal Cosmetology) 2. முடி திருத்துதலும், சிகை அலங்காரமும் (Hair Cutting technics and Hair Dressing) |

(இ) மேற்கண்ட தொழிற்பள்ளிகளுக்கு அங்கீகாரமும் வழங்கப்பட்டு விட்டது.

**77—**

## உடலமாக்களுக்கு ஓய்வூதியம்

**வினா எண் 40235—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, முஸ்லிம் உலமா ஓய்வூதியம் பெற பக்ஃபு வாரியத்தில் பதிவு செய்தவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் எத்தனை பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு தொகுதியில், உலமா ஓய்வூதியம் பெற வக்ஃபு வாரியத்தில் 4 பேர் பதிவு செய்துள்ளனர்.

(ஆ) செங்கற்பட்டு தொகுதியில் உலமா ஓய்வூதியம்பெற வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்துள்ள 4 நபர்களில் ஓய்வூதியம் பெற்று வந்த ஒருவர் 2003 நவம்பர் மாதம் இறந்துவிட்டார். தற்போது 2 பேர் மாதம் ரூ.500 வீதம் உலமா ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். ஒருவருக்கு உலமா ஓய்வூதிய ஆணை 29-10-2003-ல் அனுப்பப்பட்டுள்ளது.

**78—**

## உலமாக்களுக்கு ஓய்வூதியம்

**வினா எண் 45507—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் முஸ்லீம் உலமா ஓய்வூதியம் பெற வக்ஃபு வாரியத்தில் பதிவு செய்துள்ளவர்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்கள் அனைவருக்கும் மாதம் ரூ.500 ஓய்வூதியம் வழங்கப்படுகிறதா?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதியில் உலமா ஓய்வூதியம் பெற தமிழ்நாடு வக்ஃபு வாரியத்தில் 6 பேர் பதிவு செய்துள்ளனர். இதில் ஏற்கெனவே



2 பேர் உலமா ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். மீதி 4 நபர்களுக்கு 20-8-2003-ல் ஒப்பளிப்புக் குழுவால் உலமா ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆணைகள் விரைவில் வெளியிடப்படும்.

(ஆ) சீர்காழி தொகுதியில் சீர்காழி சார்நிலைக் கருவூலம் மூலமாக தற்போது 2 பேர் மாதம் ரூ.500 வீதம் உலமா ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். 20-8-2003-ல் உலமா ஓய்வூதியம் அனுமதிக்கப்பட்ட 4 பேருக்கு ஆணைகள் அனுப்பப்பட்டபின், அவர்களுக்கும் மாதம் ரூ.500 வீதம் உலமா ஓய்வூதியம் வழங்கப்படும்.

**79—**

## அலுவலகத்திற்கு மின்சார வசதி

**வினா எண் 34836—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரத்தில் மீன் வளத் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு மின்சார வசதி செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஆம். இராதாபுரத்திலுள்ள மீன் துறை உதவி இயக்குநர் அலுவலகத்திற்கு மின்சார வசதி டிசம்பர் 2002-ல் பொதுப் பணித் துறையால் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

(ஆ) மின்சார வசதி செய்து முடிக்கப்பட்டு விட்டது.

**80—**

## மீனவர்களுக்கு வீடுகள்

**வினா எண் 39265—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, பொன்னகரம், அந்தோணியார்புரம், ஆயிப்பட்டினம் ஆகிய கிராம மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, பொன்னகரம், அந்தோணியார்புரம், ஆயிப்பட்டினம் ஆகிய கிராம மீனவர்களுக்கு வீடுகள் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**81—**

## மின் இணைப்பு

**வினா எண் 47136—திரு. நா. சந்திரமோகன்**: மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் அமைக்கப்பட்டுள்ள டீசல் வங்கிக்கு மின் இணைப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்குச் சொந்தமான டீசல் விற்பனை நிலையம் அமைந்துள்ள இடம் முல்லைநாதசாமி தேவஸ்தானத்துக்குச் சொந்தமானதாகையால் இவ்விடத்திற்கு மின் இணைப்பு பெற தர்மபுரம் ஆதினம் மற்றும் தமிழ்நாடு அறநிலையத் துறையினர் அவர்களிடம் தடையின்மை சான்று பெறுவதில் சிறிது காலதாமதம் ஏற்பட்டது. தற்போது தர்மபுரம் ஆதினம் மற்றும் தமிழ்நாடு அறநிலையத் துறையினர் அவர்களாலும் தடையின்மைச் சான்று வழங்கப்பட்டு ஆகஸ்டு 2003-ல் மின் இணைப்பு பெறப்பட்டு 25-10-2003 முதல் டீசல் விற்பனையும் துவங்கப்பட்டு நல்லமுறையில் செயல்பட்டு வருகிறது.





**82—**

## மீன் அங்காடி அமைத்தல்

**வினா எண் 47140—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, தொடுவாய் கிராமத்தில் மீன் அங்காடி கட்ட அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, தொடுவாய் கிராமத்தில் மீன் அங்காடி அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடமில்லை.

ஆ) எழாது.

**83—**

## மீன் ஏற்றுமதி மையம்

**வினா எண் 47144—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி பழையார் துறைமுகத்தில் மீன் ஏற்றுமதி மையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மீன் ஏற்றுமதி மையம் அமைக்கும் புதிய திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

84— [2004 ஜூலை 23

## மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள்

**வினா எண் 47146—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, நாயக்கர்குப்பம், மடத்துக்குப்பம் (கடைக்காடு) ஆகிய மீனவர் கிராமங்களில் உள்ள மக்களுக்கு மீன் வளத் துறை மூலம் தொகுப்பு வீடுகள் கட்டி கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, நாயக்கர்குப்பம், மடத்துக்குப்பம் (கடைக்காடு) ஆகிய மீனவர் கிராமங்களில் உள்ள மக்களுக்கு மீன் வளத் துறை மூலம் வீடுகள் கட்டித்தரும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

85—

## மீனவர்களுக்கு காலனி வீடுகள்

**வினா எண் 47147—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், கொடியம் பாளையத்தில் வசித்து வரும் மீனவ மக்களுக்கு காலனி வீடுகள் கட்டி கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் கொடியம் பாளையத்தில் வசித்து வரும் மீனவ மக்களுக்கு காலனி வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

86—

## மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள்

**வினா எண் 47148—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, கூழையாறு திருமுல்லைவாசல் ஊராட்சி, தொடுவாய் மற்றும் திருமுல்லைவாசல் கிராமத்தில் வசிக்கும் மீனவர்களுக்கான தொகுப்பு வீடுகளை புதுப்பித்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மீனவர்களின் வீடுகளை புதுப்பிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.

(ஆ) வினா எழாது.

87—

## மீனவர்களுக்கு தொகுப்பு வீடுகள்

**வினா எண் 47151—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) சீர்காழி தொகுதி, தாண்டவன்குளம் ஊராட்சி, சின்ன கொட்டாய்மேடு, மடவாமேடு மற்றும் பெருந்தோட்டம் ஊராட்சியில் நாயக்கர் குப்பம் மீனவர் கிராமத்தில் உள்ள தொகுப்பு வீடுகளை புதுப்பித்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மீனவர் இலவச வீடுகள் பழுதுபார்ப்பு திட்டம் எதுவும் தற்போது அரசால் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) வினா எழாது.

**88—**

**கரும்பு பயிர்**

**வினா எண் 34482—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டுவாரியாக பயிரிடப்பட்ட கரும்பின் பரப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலைப் பகுதியில் கடந்த ஐந்து சர்க்கரைப் பருவத்தில் ஆண்டு வாரியாக பயிரிடப்பட்ட கரும்பின் பரப்பு கீழ்வருமாறு:—



2004 ஜூலை 23]

| வரிசை எண். | கரும்புப் பருவம் | பயிரிடப்பட்ட கரும்பின் பரப்பு (ஏக்கரில்). |
|---|---|---|
| 1. | 1998-1999 | 11,245 |
| 2. | 1999-2000 | 9,190 |
| 3. | 2000-2001 | 9,087 |
| 4. | 2001-2002 | 9,555 |
| 5. | 2002-2003 | 9,828 |
| | மொத்தப் பரப்பு | **48,905** |

**89—**

**மதிப்புக் கூட்டிய பயிர் சாகுபடி**

**வினா எண் 40766—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப் பகுதியில் தோட்டக்கலை, மலரியல் போன்ற மதிப்புக் கூட்டிய பயிர் வகைகளை சாகுபடி செய்ய அரசு சிறப்புத் திட்டம் ஒன்று தயாரித்து செயல்படுத்த முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தோட்டக்கலைத் துறை மூலமாக, உடுமலைப்பேட்டை பகுதிகளில் தோட்டக்கலைத் துறை மூலமாக மதிப்புக் கூட்டிய பயிர் வகைகளை மலரியல் மற்றும் வெனிலா போன்ற மதிப்புக் கூட்டிய பயிர் வகைகளை சாகுபடி செய்ய, நிழல் வலை அமைத்து அதன் மூலம் மலர்கள் அபிவிருத்தி செய்யும் திட்டம், வெனிலா, குருமிளகு போன்றவற்றின் சாகுபடியை பெருக்க நறுமண சுவைப்பயிர் அபிவிருத்தித் திட்டம், கோகோ பரப்பு விரிவாக்கத்திற்கு கோகோ அபிவிருத்தித் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. மேலும், பயிர் பாதுகாப்பு கருவிகள், நுண்ணுயிர் உரம், உயிரியல் பூச்சிக் கொல்லி மருந்துகள் தோட்டக்கலைத் துறையின் மூலம் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படுகின்றன. எனவே, உடுமலைப் பகுதியில், ஏற்கனவே தோட்டக்கலைத் துறை மூலம் மதிப்புக் கூட்டிய பயிர் வகைகளை சாகுபடி

செய்ய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருவதால், தற்போது தனியாக சிறப்புத் திட்டம் அமைத்து செயற்படுத்த தேவை எழவில்லை.

**90—**

## கரும்புச் சாலை அபிவிருத்தித் திட்டம்

**வினா எண் 41076—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம் கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை) கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தில் *2001-2002, 2002-2003* ஆண்டில் எடுக்கப்பட்ட மொத்த பணிகள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சாலை அபிவிருத்தித் திட்டத்தில் 2001-2002, 2002-2003 ஆம் ஆண்டுகளில் புதிய சாலைப் பணிகள் எதுவும் எடுத்துச் செய்யப்படவில்லை.*

**91—**

## எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி

**வினா எண் 43310—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டையில் செயல்படும் விதைப் பண்ணையில் 2001-2002 ஆம் ஆண்டு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி எத்தனை டன் செய்யப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டத்தில் செயல்படும் டேனிஷ்பேட்டை அரசு விதைப் பண்ணையில் 2001-2002 ஆம் ஆண்டு 0.380 டன் ஆதார விலை (I)எள்விதை சுத்திகரிப்பு செய்து (VRI SVI) உற்பத்தி செய்யப்பட்டது.*



**92—**

## தென்னை மரத்திற்கு இழப்பீட்டுத் தொகை

**வினா எண் 43345—திரு. ஐ. கணேசன்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

தென்னை விவசாயிகளின் பாதிப்பால் பட்டுப்போன தென்னை மரத்திற்கு அரசு வழங்கும் இழப்பீட்டுத் தொகையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*முழுவதும் பாதிக்கப்பட்ட தென்னை மரம் ஒன்றிற்கு ரூ.150/-ம் பகுதி பாதிக்கப்பட்ட தென்னை மரம் ஒன்றிற்கு ரூ.50/-ம் என நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்படும் நிவாரணத் தொகையினை உயர்த்துவது குறித்து அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.*

**93—**

## தொலைபேசி நிலையம் அமைத்தல்

**வினா எண் 8917—திரு. மா.ப. ரோகிணி (எ) கிருஷ்ணகுமார்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) பேரூர் தொகுதி, குனியமுத்தூர் பேரூராட்சியில் தொலைபேசி நிலையம் அமைக்க அந்நிர்வாகம் முடிவு செய்துள்ளது. அரசு தேவையான இடத்தை ஒதுக்கித் தருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ):பேரூர் தொகுதி, குனியமுத்தூர் பேரூராட்சியில் தொலைபேசி நிலையம் அமைக்க அந்நிர்வாகம் கோரும் இடம்.*

பேரூராட்சி உபயோகம் போக வேறு உபயோகத்திற்காக பயன்படுத்தக்கூடிய சாத்தியக்கூறுகள் நிலவவில்லை என பேரூராட்சி மன்றம் கூறுவதால் மேற்படி நிலத்தை தொலை தொடர்புத் துறைக்கு வழங்க இயலாத நிலை உள்ளது.

94—

## சுடுகாட்டில் கருமாதித் துறை அமைத்தல்

**வினா எண் 13926—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரில் ஆண்டிக்குப்பத்தில் சுடுகாட்டில் கருமாதித்துறை அமைத்துதர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சியில் போதிய நிதி ஆதாரம் இல்லாததால் பண்ருட்டி நகரைச் சேர்ந்த ஆண்டிக்குப்பத்தில் உள்ள சுடுகாட்டில் கருமாதித் துறை அமைக்க நகராட்சியால் இயலவில்லை.

95—

## பூங்காவை அழகுபடுத்துதல்

**வினா எண் 27544—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, எடப்பாடியில் உள்ள ராஜாஜி பூங்காவை அழகுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டே அழகுபடுத்த அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 2001-2002 ஆம் ஆண்டு 11—வது நிதிக் குழுவின் மானியம் ரூ.4.00 இலட்சம் பெற்று நகராட்சிக்கு சொந்தமான ராஜாஜி பூங்காவை சீரமைத்து அழகுபடுத்தும் பணிகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டது.

96—

## புதிய பாலம் கட்டுதல்

**வினா எண் 29712—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் பேரூராட்சி மயானச் சாலையில் உள்ள பாலத்தை முழுமையாக இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் பேரூராட்சி மயானச் சாலையில் உள்ள பாலத்தை முழுமையாக இடித்துவிட்டு புதிய பாலம் அமைக்க எட்டயபுரம் பேரூராட்சியில் நிதி ஆதாரம் இல்லாததால் புதிய பாலம் அமைக்கும் திட்டம் இல்லை.

97—

## குடிநீர் வசதி

**வினா எண் 33784—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) பட்டுக்கோட்டை நகரத்தில் பெருமாள் கோவில் சாலையில் **உள்ள** செங்கம்மேடு என்ற பகுதியில் குடிநீர் வசதியில்லாமல் இருப்பதை **அரசு** அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.32-ல் செங்கம்மேடு பகுதி அமைந்துள்ளது. இப்பகுதியில் 24 வீடுகள் உள்ளன. இப்பகுதியின் முன்புறம் நீரேற்று நிலையம் அமைந்துள்ளது. பொது மக்கள் குடிநீர் பிடிக்க ஏதுவாக நீரேற்று நிலைய வளாகத்தில் ஒரு பொதுக் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழாயில் காலை, மாலை, இரு நேரங்களில் இப்பகுதி மக்கள் தண்ணீர் எடுத்துச் செல்கிறார்கள். தற்பொழுது கடும் வறட்சி நிலவி வருவதால் தினமும் இப்பகுதிக்கு நகராட்சி குடிநீர் லாரி மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**98—**

## வருமான விவரம்

**வினா எண் 34826—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதி, மாமல்லபுரத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற வருமானம் இனம் வாரியாக எவ்வளவு?

(ஆ) அதனை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டு சட்டமன்றத் தொகுதியில் மாமல்லபுரம் பேரூராட்சியில் கடந்த ஐந்தாண்டுகளில் (1998-99 முதல் 2002-2003 வரை) இனவாரியாக கிடைக்கப்பெற்ற வருமான விவரம்:



2004 ஜூலை 23]

***சொத்து வரி:*** 1-10-1998 ஆம் ஆண்டு முதல் அரசு ஆணையின்படி சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டு, கேட்பு ரூ.2,71,694/-லிருந்து ரூ.7,97,425/-க்கு உயர்த்தப்பட்டது. சீராய்வின் மூலமாக ரூ.5,15,731/- ஆக உயர்வு செய்யப்பட்டது.

***தொழில் வரி:*** தொழில் வரி கேட்பு, 2002-2003 ஆம் ஆண்டுக் கேட்பு ரூ.1,80,420/- 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் திருத்தச் சட்டம், 1998, பிரிவு 124டி, உட்பிரிவு (13)ன்படி ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை 25% குறையாமலும் 35% மிகைப்படாத அளவில் திருத்தி அமைக்கப்பட, இப்பேரூராட்சி மன்ற தீர்மான எண் 176,நாள் 28-3-2003-ல் உயர்த்தி வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி 2002-2003 ஆம் ஆண்டு கேட்பு ரூ.1,80,420/- ஆகும். 25% உயர்வு செய்ய மேற்கொள்ளப்பட்டதில் 2003-2004—க்கு கூடுதலாக ரூ.45,105/- அதிக வரவாகும்.

***வரியில்லா இனங்கள்:***

***கட்டட உரிமம் வசூல்***

ஏற்கனவே உள்ள கட்டட உரிமம் குறைவாக உள்ளதை திருத்தம் செய்வதற்காக மன்றக் கூட்டத்தில் பொருள் வைக்கப்பட்டுள்ளது.

***கடைகள், தங்கும் விடுதி, தள்ளுவண்டி, கட்டணக் கழிப்பிடம், வாகன நுழைவு மற்றும் நிறுத்துமிட கட்டணம்***

பேரூராட்சிக்கு சொந்தமான கடைகளுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை 15% உயர்த்தி வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் வாகன நுழைவு மற்றும் நிறுத்துமிட கட்டணம் வசூல் செய்தல், பிளாட்பார கடைகள் வசூல் செய்தல், மச்ச மகசூல், மர மகசூல் போன்ற ஆண்டு குத்தகைகள் ஒவ்வொரு ஆண்டும் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது.

***இதர வரவுகள்:***

சொத்து வரி பெயர் மாற்றம் செய்தல், பிறப்பு, இறப்பு சான்றிதழ் வழங்குதல் மூலம் சான்று வழங்கல் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

(ஆ) மாமல்லபுரம் பேரூராட்சி 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 12049 மக்கள் தொகையை கொண்டதும், 12.85 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட கிராம சூழல் கொண்ட சரித்திர புகழ்வாய்ந்த பேரூராட்சியாகும். இப்பேரூராட்சியின் ஆண்டு சராசரி

வருவாய் ரூ.57,00,000/- இப்பேரூராட்சியில் உள்ள சரித்திர புகழ்பெற்ற நினைவு சின்ன பகுதிகளையெல்லாம் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. புறநகர் வளர்ச்சி குழுமத்தால் இப்பேரூராட்சியின் வளர்ச்சி பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பேரூராட்சி கடற்கரை பகுதியில் அமைந்துள்ளதால் கட்டட சம்பந்தமான வகையில் கட்டட உரிமம் மற்றும் இதன் மூலம் சொத்து வரி விதிப்பின் மூலம் வருவாய் பெருக்கத்திற்கு வாய்ப்பு இல்லை. மேலும் கல்பாக்கம் அணுமின் நிலையம் அருகில் உள்ளதால் தொழிற்கூடங்கள் ஏதும் அமைக்கவும் வாய்ப்புகள் இல்லை. இதன் மூலம் வருவாய் பெருக்கத்திற்கு சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை.

**99—**

## பேரூராட்சிக்கு வருவாய்

**வினா எண் 36100—திரு எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள பேரூராட்சிக்கு வருவாய் வரும் திட்டங்கள் என்னென்ன?

(ஆ) அதற்காக பேருந்து நிலைய அபிவிருத்தித் திட்டம் ஏதேனும் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி பேரூராட்சியில் கீழ்க்காணும் வருவாய் வரும் திட்டங்கள் உள்ளன:

1. வாரச் சந்தை
2. தினசரி சந்தை
3. பேருந்து நிலைய சங்கம்
4. டெம்போ, ஆட்டோ, கார் ஆகியவை தங்குமிட வாடகை வசூல்
5. பழைய பேருந்து நிலைய கடைகள்
6. கிராம அங்காடி வாடகை
7. பாராளுமன்ற உறுப்பினர் நிதி மூலம் கட்டிய கடைகள் வாடகை
8. சட்டமன்றப் பேரவை உறுப்பினர் தொகுதி நிதி மூலம் கட்டப்பட்ட கடை வாடகை
9. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் கட்டப்பட்ட கடைகள் வாடகை
10. பொது நிதி மூலம் கட்டப்பட்ட கடைகள் வாடகை
11. காலி மனைகள் வாடகை

(ஆ) பேருந்து நிலைய அபிவிருத்தித் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**100—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 37607—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரம், 24-வது வார்டு அகரதிருக்கோலக்கா தெருவில் சமுதாயக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரம், 24-வது வார்டு அகரதிருக்கோலக்கா தெருவில் அரசு மற்றும் நகராட்சிக்குச் சொந்தமான நிலங்கள் இல்லை என்பதால் அப்பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட இயலாது.

[2004 ஜூலை 23

## பட்டியல் 3

1—

### ஏரியைத் தூர் வாருதல்

**வினா எண் 29786—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி-விசூர் செம்பேரி ஏரியை தூர் வாரி ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, விசூர் செம்பேரி ஏரியை 2003-2004 ஆம் ஆண்டு நிதிநிலைமைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் தூர் வாரி சீரமைப்புப் பணி மேற்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2—

### சிறுசேமிப்பு

**வினா எண் 32130—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறுசேமிப்பை மாணவ-மாணவிகளிடையே ஊக்கப்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

பள்ளி மாணவ, மாணவியரிடையே சிறுசேமிப்பை ஊக்கப்படுத்த அரசு "சஞ்சாயிகா திட்டம்" மற்றும் "அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம்"



2004 ஜூலை 23]

ஆகியவற்றை செயல்படுத்தி வருகிறது. அரசு சிறுசேமிப்புத் துறை, மாநகராட்சி ஆணையர் மற்றும் அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மூலம் தமிழகத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும், இச்சேமிப்பு திட்டங்களை தீவிரமாக செயல்படுத்த தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. சென்ற ஆண்டு சிறுசேமிப்பு வசூலில் மாவட்ட/மாநில அளவில் அதிகம் வசூல் செய்து சாதனை புரிந்த பள்ளி மாணவர்/மாணவியரின் பெற்றோர்களுக்கு அரசு விருது வழங்குதல் மற்றும் அனைத்து மாவட்ட பள்ளி மாணவ, மாணவியர்களிடையே சிறுசேமிப்பை ஊக்கப்படுத்த சிறுசேமிப்பு சம்பந்தமான பேச்சுப்போட்டி, பாட்டுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு அதில் சிறப்பாகக் கலந்து கொண்டவர்களுக்கு பரிசுகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உலக சிக்கன நாள் நடைபெற்ற 31-10-2003 அன்று வழங்கி கவுரவித்தல் போன்றவற்றின் மூலம் தமிழகத்தில் உள்ள அனைத்து பள்ளி மாணவ, மாணவிகளிடையே சிறுசேமிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்த அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

3—

### மின் கம்பங்களை அகற்றுதல்

**வினா எண் 33091—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை நகரம், எம்.ஜி.ஆர். சிலையிலிருந்து மகளிர் அரசு கல்லூரி வரையில் உள்ள சாலையின் ஓரத்தில் நடைபாதையில் நடக்கும் பாதசாரிகளுக்கு இடையூறாக உள்ள மின் கம்பங்களை அகற்றி மாற்று இடத்தில் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை நகரம், எம்.ஜி.ஆர். சிலையிலிருந்து மகளிர் அரசு கலைக்கல்லூரி வரையில் சாலையின் ஓரத்தில் உள்ள மின் கம்பங்களை அகற்றி மாற்று இடத்தில் அமைக்க புதுக்கோட்டை நகராட்சியிடமிருந்து விண்ணப்பம் எதுவும் இதுவரை பெறப்படவில்லை. அவ்வாறு விண்ணப்பம் பெறப்பட்டவுடன் உரிய நடவடிக்கை வாரிய நடைமுறைகளின்படி செய்யப்படும்.

4—

## தெருவிளக்கு அமைத்தல்

**வினா எண் 40467—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*திருவொற்றியூர் குப்பம், மயான பூமி எதிரிலுள்ள குடிசை பகுதிக்கு அரசு தெரு விளக்கு அமைத்துத் தருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

திருவொற்றியூர் குப்பம், மயான பூமி எதிரிலுள்ள குடிசை பகுதி திருவொற்றியூர் நகராட்சியை சேர்ந்ததாகும். திருவொற்றியூர் நகராட்சியிடமிருந்து அப்பகுதிக்கு தெரு விளக்கு அமைப்பதற்காக விண்ணப்பம் எதுவும் பெறப்படவில்லை. உரிய விண்ணப்பம் பெறப்படின், தமிழ்நாடு மின்சார வாரிய விதிகளின்படி அப்பகுதிக்கு தெரு விளக்கு அமைத்துத்தர தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

5—

## மின் கட்டண நிலுவைத் தொகை

**வினா எண் 42037—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகள் மின் வாரியத்திற்கு கட்ட வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு?*



**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சிகள் மின்சார வாரியத்திற்கு 2001-2002 ஆம் ஆண்டிற்கு கட்ட வேண்டிய நிலுவைத் தொகை தற்பொழுது ஏதுமில்லை.

6—

## சீரான மின்சாரம் வழங்குதல்

**வினா எண் 43049—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், ஆதனக்கோட்டை மற்றும் புனல் குளம் துணை மின் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் சீரான மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், ஆதனக்கோட்டை மற்றும் புனல் குளம் துணை மின் நிலையங்களுக்குட்பட்ட பகுதிகளில் சீரான மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. புதுக்கோட்டை மின் திட்டம் ஆதனக்கோட்டை துணை மின் நிலையம் தற்பொழுது 66/22/11 கேவியாக இயங்கி வருகிறது. 110/11 கேவியாக உயர்த்துவதற்கான பணிகள், தற்பொழுது நடைபெற்று வருகிறது. மேலும், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், புதுப்பட்டியில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க நிலம் கையகப்படுத்தப்பட்டு பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் முடிவடையும்பொழுது கந்தர்வக்கோட்டை ஒன்றியப் பகுதி மேலும் சீரான மின்சாரத்தைப் பெறும்.

**7—**

### பள்ளியை தரம் உயர்த்துதல்

**வினா எண் 12701—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி ஒன்றியம், செறுவாவிடுதி வடக்கிலுள்ள அரசு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தித்தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

இல்லை.

**8—**

### பள்ளியை தரம் உயர்த்துதல்

**வினா எண் 16498—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், நெப்பத்தூர் குரலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், குரலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை மாணவ/ மாணவியர் வருகை 65. இப்பள்ளிக்கு இரண்டு ஆசிரியர் பணியிடங்கள்





அனுமதிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இப்பள்ளிக்கு 5 கி.மீட்டருக்குள் திருநகர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி மற்றும் அன்னப்பன்பேட்டை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. எனவே குரலூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்த சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**9—**

### பள்ளியை தரம் உயர்த்துதல்

**வினா எண் 20407—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆயிங்குடி தெற்கிலுள்ள நடு நிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டம், ஆயிங்குடி தெற்கிலுள்ள நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 84, பள்ளிக் கல்வி நாள் 20-6-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**10—**

### குடிநீர் வசதி

**வினா எண் 25554—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உடுமலைப்பேட்டை, சாமராயப்பட்டி மற்றும் மடத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை செப்பனிட்டு குடிநீர் வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

ஆம். உடுமலைப்பேட்டை, சாமராயப்பட்டி மற்றும் மடத்தூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளுக்கு அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் கட்டட பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.5,000 வழங்கப்பட்டுள்ளது. ரூ.15,000 செலவில் குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது.

**11—**

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 36485—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரி ரெங்கபுரம் அரசு உயர்நிலைப் பள்ளிக்கு கணித ஆசிரியர் மற்றும் தலைமை ஆசிரியரை நியமனம் செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்கபுரம் அரசு உயர்நிலைப் பள்ளி 2001-2002 கல்வி ஆண்டில் தரம் உயர்த்தப்பட்ட பள்ளியாகும். இப்பள்ளியில், தலைமையாசிரியர் பணியிடமும், ஒரு அறிவியல் பாட பட்டதாரி உதவி ஆசிரியர் பணியிடமும் அளிக்கப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். இப்பள்ளியில் 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளில் சேர்த்து மொத்தம் 45 மாணவர்கள் பயின்று வருகின்றனர். பள்ளித் தலைமையாசிரியரே கணிதம் கற்பித்து வருகிறார். மேலும், மாணவர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளதால், விதிகளின்படி புதியதாக கூடுதல் கணித ஆசிரியர் பணியிடம் வழங்க இயலாது.



**12—**

## துவக்கப் பள்ளிக்கு கட்டடம்

**வினா எண் 36702—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாசலம் ஒன்றியம், சிறுவம்பூர் ஊராட்சியில் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு கட்டட வசதி இல்லாமல் இருப்பதால் புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

விருத்தாசலம் ஒன்றியம், சிறுவம்பூர் (மெயின்) ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 1 முதல் 5 வகுப்புகளில் பயிலும் 58 மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கட்டடம் உள்ளது. சிறுவம்பூர் (காலனி) பள்ளியில் 1 முதல் 5 வகுப்பு பள்ளியில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 100 (இப்பள்ளியிலும் 105 பிள்ளைகளுக்கு போதுமான இடவசதி உள்ளது). மேலும் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் கட்டடங்கள் கட்டுதல் யாவும் விருத்தாசலம் ஊராட்சி ஒன்றிய ஆணையரின் கட்டுப்பாட்டில் உள்ளது. பிற்காலத்தில் கட்டட வசதி தேவையெனில் கூடுதல் வகுப்பறை கட்டுவது குறித்து விருத்தாசலம் ஒன்றிய ஆணையருடன் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**13—**

## பள்ளியை தரம் உயர்த்துல்

**வினா எண் 37495—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, எழுமகளூர் ஊராட்சியிலுள்ள ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

விடை—　　[2004 ஜூலை 23

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

குத்தாலம் ஒன்றியம், எழுமகளூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 65 மாணவ, மாணவியர் சராசரியாக வருகை புரிகின்றனர். இப்பள்ளிக்கு இரண்டு ஆசிரியர் பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு இரண்டு ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகின்றனர். இப்பள்ளிக்கு 2 கி.மீ. தூரத்தில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியும் (நன்னிலம் ஒன்றியம்) மற்றும் 4 கி.மீ. தூரத்தில் மாந்தை ஆர்.சி. நடுநிலைப் பள்ளியும் செயல்பட்டு வருகிறது. இக்கிராமத்தின் மொத்த மக்கள் தொகை 1377. இப்பள்ளியில் பயிலும் மாணவர்கட்கு மட்டுமே போதுமான இடவசதி உள்ளது. எனவே குத்தாலம் தொகுதி, எழுமகளூர் ஊராட்சியிலுள்ள ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

14—

## பெற்றோர்—ஆசிரியர் கழகம்

**வினா எண் 38478—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிகளில் செயல்படும் பெற்றோர்-ஆசிரியர் கழகங்களின் அதிகாரங்கள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 242, கல்வி, நாள் 28-3-1994-ல் ஒப்புதல் அளித்துள்ள பள்ளிப் பெற்றோர்-ஆசிரியர் கழக விதிகளில் விதி எண் 4(ஆ) வில் பள்ளிப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் செயல்பாடுகள் குறித்து பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

1. பள்ளியில் மாணவர்கள் பெற்ற அறிவினையும், திறமைகளையும் ஆற்றல்களையும் வெளிப்படுத்தப் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்களின் ஒத்துழைப்போடு விழாக்கள், பொருட்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆகியவற்றைத் திட்டமிட்டு ஏற்பாடு செய்து நன்முறையில் நடத்துதல்.



2. மாணவர்களுக்காக சொற்பொழிவுகள், கருத்தரங்குகள், பணிமனைகள் ஆலோசனை மற்றும் வழிகாட்டுப் பேரவைகள் நடத்துதல்.
3. பள்ளி மலர், செய்தி மலர் ஆகியவற்றை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்தல், ஆர்வமூட்டுதல் மற்றும் பணி மேற்கொள்ளல்.
4. தனிச் சிறப்போடு பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் படிக்கும் மாணவர்களுக்கும் உற்சாகமூட்டும் வகையில் பரிசுகளும், விருதுகளும் நிறுவி வழங்குதல்
5. மாணவர்களின் முழு வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உதவும் வகையில் பள்ளிச் சீரமைப்பு நிகழ்ச்சிகள், பள்ளி இணைப்புத் திட்டங்கள் ஆகியவற்றை திட்டமிட்டு ஏற்பாடு செய்து நடத்துதல்.
6. விரிவாக்கத் திட்டங்களாகிய புரவலர் திட்டம், பயன்தரும் மரங்கள் நடும் திட்டம் மற்றும் அரசால் அவ்வப்போது அறிமுகப்படுத்தப்படுகின்ற திட்டங்களை வடிவமைத்து ஏற்பாடு செய்து நடத்தி முடித்தல். இத்திட்டங்களின் மூலம் பெறப்படும் வருவாய்த் தொகை கழக நிதிக்குச் சேரும். அத்தொகை பள்ளி வளர்ச்சித் திட்டங்களுக்காக கழகத்தால் செலவிடப்படுமேயொழிய அரசுக் கணக்கிற்கோ அன்றி பொதுப் பணித் துறைக்கோ செல்லாது.
7. சஞ்சாயிகா திட்டத்தினை மாணவர்களிடையே ஊக்குவித்து சேமிப்பு மனப்பான்மையை வளர்த்தல்.
8. அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை நன்கொடையாளர் களிடமிருந்து பெற்று அதைக் கல்வி வளர்ச்சிக்குரிய நோக்கத்திற்காகப் பயன்படுத்துதல்.
9. பள்ளி வளர்ச்சிக்குத் தேவையான பள்ளி மனை, பள்ளிக் கட்டடம், நூலகக் கட்டடம், அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள், கழிப்பிடங்கள், விளையாட்டு மைதானம் ஆகிய வசதிகளைத் திட்டமிடுதல், கையகப்படுத்துதல், விலைக்கு வாங்குதல், கட்டி முடித்தல், பராமரித்தல், விரிவாக்கம் செய்தல், பொறுப்பு மேற்கொள்ளல்.

10. பள்ளிக்கு வேண்டிய தளவாடங்கள், நூலகப் புத்தகங்கள், அறிவியல் கருவிகள், விளையாட்டுப் பொருள்கள் ஆகியவற்றைப் பெற்றுத் தருதல்.

11. கூடுதலாகத் தேவைப்படும் ஆசிரியர்கள் அல்லது விடுமுறை பதிலி ஆசிரியர்களை கல்வித் தகுதி மற்றும் கழக நிபந்தனைகளுக்கு உட்பட்டு முற்றிலும் தற்காலிகமாக பணியமர்த்தி தொகுப்பூதியம் அளித்தல்.

12. பள்ளி மாணவர்களின் முழு வளர்ச்சிக்கு உதவும் செயல்முறைகளில் ஒன்றிய/கல்வி மாவட்ட/வருவாய் மாவட்ட மற்றும் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்துடன் இணைத்து, ஒத்துழைத்து, இணைப்புப் பாலமாக செயல்படுதல்.

13. அவ்வப்போது ஏற்படும் தேவைக்கேற்ப தமிழ்நாடு மாநிலப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்திற்கும் வருவாய் மாவட்ட பெற்றோர்-ஆசிரியர் கழகத்திற்கும், கல்வி மாவட்ட பெற்றோர்-ஆசிரியர் கழகத்திற்கும் மற்றும் ஒன்றிய பெற்றோர்-ஆசிரியர் கழகத்திற்கும், இணைப்புத் தொகை மான்யத்தொகை ஆகியவற்றை வழங்கி ஆதாரமாக இருத்தல்.

14. அறக்கட்டளை ஏற்று, நிர்வகித்து அவற்றினின்று பெறப்படும் வட்டித் தொகையை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காகப் பயன்படுத்துதல்.

15. நிதி வரவு-செலவினங்களைப் பராமரித்தல், நிதியைக் கூட்டுறவு வங்கிகள் கொள்ளல் அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வைத்துக் கொள்ளல்—அதிகப்படியாக தொகை இருப்பில் நீண்ட கால வைப்பீடாக வைத்தல்.

16. காசோலை, கேட்புக் காசோலை மற்றும் காசாக்கக் கூடிய முறிகள் முதலானவற்றைப் பெறுதல், வழங்குதல், காசாக்குதல் மற்றும் மேற்கையொப்பமிடல்.

17. கழகத்தின் நோக்கங்களை மேலும் விரிவுபடுத்தும் எண்ணத்துடன் தேவையான அனைத்து வழிகளையும் செயல்களையும் மேற்கொள்ளுதல்.

மேற்கண்டவாறு பள்ளிகளில் செயல்படும் பெற்றோர்-ஆசிரியர் கழகங்களின் அதிகாரங்கள் உள்ளன.



**15—**

**பள்ளியை தரம் உயர்த்துதல்**

**வினா எண் 38597—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் சன்னியாசிகுண்டு போகும் வழியில் உள்ள மாநகராட்சி ஆரம்ப தொடக்க/நடுநிலைப் பள்ளியை உயர் நிலைப் பள்ளியாக உயர்த்த அரசிடம் கருத்துரு பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**16—**

**பள்ளியை தரம் உயர்த்துதல்**

**வினா எண் 38887—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, நிலையூர் நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்திடும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

இல்லை.

**17—**

**பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்**

**வினா எண் 38889—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அமரசிம்மேந்திரபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அமரசிம்மேந்திரபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு கூடுதல் கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) 3 வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட ரூ.4.5 லட்சம் (ரூபாய் நான்கு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அனுமதிக்கப்பட்டுள்ளது.

**18—**

## இளநிலை எழுத்தர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 46118—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் இளநிலை எழுத்தர் பணியிடம் காலியாகவுள்ளது என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், உடனடியாக அதை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசினர் ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளர் பணியிடம் 5-9-2003-ல் நிரப்பப்பட்டுவிட்டது.



**19—**

## உதவித்தொகை வழங்குதல்

**வினா எண் 17722—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்திலுள்ள மொடையூர் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவிகளுக்கு 1999-2000 மற்றும் 2000-2001 வரை வழங்கப்படாத உதவித் தொகையை வழங்க அரசு முயலுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்போது 1999-2000 மற்றும் 2000-2001 ஆம் ஆண்டில் ஊக்கப் பரிசுத் தொகை வழங்கப்படாத விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தொகுதி, வல்லம் ஒன்றியத்திலுள்ள மொடையூர் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சேர்ந்த மாணவியர்களுக்கு ஊக்கப் பரிசுத் தொகை வழங்க வழிவகை ஏதும் இல்லை.

தற்போது மொடையூர் ஊராட்சி ஒன்றிய பள்ளியில் 3 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர்களுக்கு 2002-2003 மற்றும் 2003-2004 ஆகிய 2 ஆண்டுகளுக்கும் விதிமுறைகட்குட்பட்டு ஊக்கத் தொகை வழங்கிட விழுப்புரம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலருக்கு தனியே தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**20—**

## உதவித் தொகை வழங்குதல்

**வினா எண் 30399—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

தமிழகத்தில் மிகவும் பிற்பட்ட ஊரக பகுதியைச் சேர்ந்த மாணவியர்கள் எவ்வளவு பேருக்கு அரசு 2001-2002 ஆம் ஆண்டு உதவித் தொகை வழங்கியுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*2001-2002 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களிலுள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 3, 4, 5 மற்றும் 6 ஆம் வகுப்புகளில் பயின்ற 61999 மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவியர்களுக்கு மொத்தம் ரூ.416.91 இலட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டது. கீழ்க்கண்ட விகிதங்களில் ஊக்க உதவித் தொகைகள் வழங்கப்பட்டன:*

| | | |
|---|---|---|
| *3, 4, 5 ஆம் வகுப்புகள்* | : | *ஆண்டிற்கு ரூ.500/-* |
| *6 ஆம் வகுப்பு* | : | *ஆண்டிற்கு ரூ.1000/-* |

**21—**

## நிதியுதவி

**வினா எண் 34313—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டத்தில் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு முடி திருத்தகம் ஏற்படுத்துவதற்கு எத்தனை பேருக்கு நிதியுதவி 2002 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*2002-2003 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் முடிதிருத்தகம் அமைத்திட மிகப் பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்த 59 நபர்களுக்கு ரூ.89,000/- அரசு மானியமாக நிதியுதவி அளிக்கப்பட்டது.*



2004 ஜூலை 23]

**22—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 34493—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, திருவாமூர் ஊராட்சியில் உள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வாங்கித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) பண்ருட்டி தொகுதி, திருவாமூர் கிராமத்தில் வசிக்கும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.*

*(ஆ) தகுதிவாய்ந்த நபர்களை தெரிவு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. அப்பணி முடிவுற்றதும் மாவட்ட ஆட்சியரால் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

**23—**

## இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல்

**வினா எண் 34586—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் உள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச இஸ்திரி பெட்டி வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2002-2003 ஆண்டிற்கு எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2002-03 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் 4 சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.*

**24—**

**இலவச சலவைப் பெட்டிகள் வழங்குதல்**

**வினா எண் 36633—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியிலுள்ள சலவைத் தொழிலாளர்களுக்கு இலவச சலவைப் பெட்டிகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதியில் 2003 ஆம் ஆண்டில் 8 சலவைத் தொழிலாளர்களுக்கு சலவைப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.*

**25—**

**இலவசக் கருவிகள் வழங்கும் திட்டம்**

**வினா எண் 41541—திரு. கா.தி. இளையகண்ணு:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



2004 ஜூலை 23]

*(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர் மற்றும் போயர்களுக்கு இலவசக் கருவிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், 2001-2002 மற்றும் 2002-2003 ஆம் ஆண்டில் பயனடைந்தோர் எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) திட்டம் செயல்பாட்டில் இருந்தபோது இலவசக் கருவிகள் கோரி மனுக்கள் ஏதும் பெறப்படாததால் ஏற்காடு தொகுதியில் பயன் அடைந்தோர் யாருமில்லை.*

**26—**

**மகளிர் தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி**

**வினா எண் 42790—திரு. கா.தி. இளையகண்ணு:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) ஏற்காடு தொகுதியிலுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மகளிருக்கு தொழில் முனைவோர் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப் படுகிறதா?*

*(ஆ) ஆம் எனில், பயிற்சி பெற்றவர்களுக்கு கடனுதவி வழங்கப்பட்டுள்ள தொகை எவ்வளவு?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் 150 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் இன மகளிருக்கு தொழில் முனைவோருக்கான மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. இதில*

ஏற்காடு தொகுதியை சார்ந்தவர்கள் எவரும் இல்லை. 2002-2003 மற்றும் 2003-2004 ஆம் ஆண்டுகளில் மேற்படி பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) ஏற்கெனவே பயிற்சி பெற்றவர்களுக்கு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலம் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**27—**

## இலவச வீட்டுமனைப் பட்டா

**வினா எண் 46390—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, பெரிய கோட்டை ஊராட்சி, சலைநாயக்கனூர் ஊராட்சியில் மலையாண்டிக்கலனூர், பள்ளிவலசு பகுதி, குறிஞ்சேரி கிராமம், தின்னப்பட்டி சாலையூர், பாப்பாகுளம் கிராமம், ரெட்டிபாளையம், மடத்துக்குளம் கே.டி.எல். கழகளை பகுதி ஆகிய இடங்களில் நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டத்தின்கீழ் இதுவரையில் சுமார் 1,50,000 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட ஏழை மக்களிடம் வீடு கட்டிக் கொள்ளப் போதிய பணவசதி இல்லாமை, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதி குடியிருப்பை விட்டு தொலைவில் அமைந்திருப்பது, இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளான சாலை / தெருவிளக்கு / குடிநீர் / வடிகால் வசதிகள் இல்லாமை போன்ற காரணங்களினால் அவர்களால் வீடுகள் கட்டிக்கொள்ள இயலாத நிலை உள்ளது. எனவே, புதிதாக வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தும் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டு ஏற்கெனவே இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்ட பகுதிகளில் மேலே குறிப்பிட்ட அடிப்படை வசதிகளை அமைக்கும் திட்டம் ஊரக வளர்ச்சி முகமைகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. எனவே, கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை, பெரியகோட்டை ஊராட்சி, சலைநாயக்கனூர் ஊராட்சியில் மலையாண்டிக்கலனூர், பள்ளிவலசு பகுதி, குறிஞ்சேரி கிராமம், ரெட்டிபாளையம், மடத்துக்குளம் கே.டி.எஸ். கழகளை பகுதி ஆகிய இடங்களில் நில எடுப்பு செய்து வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் ஏதும் இல்லை.



**28—**

## இலவச பட்டா வழங்குதல்

**வினா எண் 46992—திரு நா. சந்திரமோகன்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், 11. எருக்கூர் கிராமத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், கொள்ளிடம் ஒன்றியம், 11, எருக்கூர் கிராமத்திலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இலவச பட்டா வழங்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**29—**

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 10177—திரு. பி.எஸ். அருள்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) புவனகிரி தொகுதி, சிங்காரக்குப்பம் கிராமத்திலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டித்தரும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், கிள்ளை பேரூராட்சியை சேர்ந்த சிங்காரக்குப்பம் ஆரம்பப் பள்ளி சத்துணவு மையக் கட்டடம் 2003-2004 ஆம் ஆண்டு எஸ்.ஜி.ஆர்.ஓய்.-2 திட்டத்தின் மூலம் மேற்கொள்ள ரூ.60,000/- நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டது.

**30—**

## ஊனமுற்றோர் நலவாழ்வு

**வினா எண் 10321—திரு. கே.என். இலட்சுமணன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கு அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

ஊனமுற்றோர் நல்வாழ்வுக்கு அரசு கீழ்க்கண்ட சலுகைகளை வழங்கி வருகிறது:

(1) சிறப்புக் கல்வி;

(2) கல்வி உதவித் தொகை;

(3) பார்வையற்ற மாணவர்கள் தேர்வு எழுத உதவுபவர்களுக்கு உதவித் தொகை;

(4) வேலை கிடைக்காத பார்வையற்றோருக்கு வேலை வாய்ப்பற்றோர் நிவாரணத் தொகை;



2004 ஜூலை 23]

(5) சுய வேலைவாய்ப்பிற்கு அரசு மானியம்;

(6) இலவச உதவி உபகரணங்கள்;

(7) திருமண உதவிச் சலுகைகள்;

(8) இலவச பேருந்து பயண சலுகை;

(9) கடும் ஊனமுற்றோரை பராமரிக்க பராமரிப்பு உதவித் தொகை;

(10) சட்டப்படிப்பு முடித்த பட்டதாரிகள் வழக்கறிஞர் மன்றத்தில் பதிவு செய்துகொள்ளவும், சட்டப் புத்தகங்கள் வாங்கவும் உதவித் தொகை மற்றும்

(11) ஊனமுற்றோருக்கு வேலைவாய்ப்பில் 3 சதவீதம் இடஒதுக்கீடு.

**31—**

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 34897—திரு. டி. மணி:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை, புளியந்தோப்பு ஆதிதிராவிட நலப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் புதியதாக கட்ட அரசு என்ன நடவடிக்கை மேற்கொண்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

சென்னை, புளியந்தோப்பு அரசு ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளிக்கு, பூங்கா நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து சத்துணவுக் கூடம் கட்டி முடிக்கப்பட்டு, அது 1-10-2003 அன்று திறந்து வைக்கப்பட்டு, சத்துணவுக் கூடம் அதில் இயங்கி வருகிறது.

**32—**

## ஊனமுற்றோருக்கு கல்வி உதவித் தொகை

**வினா எண் 37424—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) ஏற்காடு தொகுதியில் ஊனமுற்றோர்க்கான கல்வி உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், பயனடைந்தோர் எவ்வளவு?

(இ) அவர்களுக்கு வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மாநிலத்தின் மற்ற பகுதிகளில் செயல்படுத்தப்படுவதுபோல் ஏற்காடு தொகுதியிலும் ஊனமுற்றோருக்கான கல்வி உதவித் தொகை திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் 2002-2003 ஆம் ஆண்டில் ஏற்காடு தொகுதியில் 3 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

(இ) அப்பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட உதவித் தொகை ரூ.2,600/-

33—

## மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வசதி

**வினா எண் 38279—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரில் "மகளிர் சுயஉதவிக் குழுக்கள்" எத்தனை நபர்களுக்கு கடன் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது?

(ஆ) 2003-2004 ஆம் ஆண்டில் எத்தனை நபர்களுக்கு வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாநகரில் 146 குழுக்கள் உள்ளன. 2533 உறுப்பினர்கள் உள்ளனர். இதுவரை ஒரு குழுவிற்கு தொகை ரூ.12000/- வழங்கப்பட்டுள்ளது. மேற்படி கடன் தொகை இக்குழுவில் மொத்தமுள்ள 17 உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து வழங்கப்பட்டுள்ளது.



2004 ஜூலை 23]

(ஆ) 2003-2004 ஆம் ஆண்டில் 41 குழுக்களுக்கு கடன் வழங்கப்படவுள்ளது.

34—

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 41948—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பொன்பதிர்கூடம் மேட்டு வீரக்குப்பத்தில் சத்துணவுக் கூடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பொன்பதிர்கூடம் ஊராட்சியில் அடங்கிய மேட்டு வீரக்குப்பத்தில் சத்துணவுக் கூடம் அமைக்கப்படவில்லை. காரணம், இங்கு போதிய மக்கள் தொகை இல்லை. குழந்தைகள் நல மையம் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு (25 குழந்தைகள்) இல்லை. ஆனால், 1 கி.மீ. தூரத்தில் உள்ள வீரக்குப்பம் அங்கன்வாடி மையத்திலிருந்து உணவு தயாரித்து எடுத்துச் சென்று அங்குள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது.

35—

## சத்துணவு சமையல் கூடம்

**வினா எண் 41954—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியம், பட்டிக்காடு கிராமத்தில் உள்ள சத்துணவு சமையல் கூடத்தை புதுப்பித்து கட்டும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—** [2004 ஜூலை 23

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியம், பட்டிக்காடு கிராமத்தில் உள்ள சத்துணவு சமையல் கூடம் சமீபத்தில் கட்டப்பட்டு நல்ல நிலையில் உள்ளதால், சமையல் கூடத்தை புதுப்பிக்க வேண்டிய அவசியமில்லை.*

**36—**

## பால்வாடி பள்ளி பராமரிப்பு

**வினா எண் 46927—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை பால்வாடி பள்ளிக்கு சன்னல், கதவு உடைந்து பாதுகாப்பின்றி இருப்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, ரொட்டிக்கடை பால்வாடி பள்ளியில் சன்னல், கதவு நல்ல நிலையில் உள்ளது.*

**37—**

## ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம்

**வினா எண் 20681—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



*(அ) தாம்பரம் தொகுதி, தாம்பரம் கடப்பேரியில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் நலத் துறை நடுநிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி, கடப்பேரி ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளிக்கு நாடாளுமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியைக் கொண்டு புதிய கட்டடம் கட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட அலுவலர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

**38—**

## மயானத்திற்கு சாலை அமைத்தல்

**வினா எண் 34537—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பாதிரிவேளூர் ஊராட்சி, பூங்கொடி கிராமத்தில் ஆதிதிராவிடர் மக்கள் மயானத்திற்கு செல்ல சாலை வசதி செய்துக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பாதிரிவேளூர் பூங்கொடி கிராமத்தில் ஆதிதிராவிடர் மக்கள் மயானத்திற்கு செல்ல சாலை வசதி 11-வது நிதிக்குழு 2000-01 ஆம் ஆண்டில் ரூ.40,000/- செலவில் செய்து கொடுக்கப்பட்டுள்ளது.*

[2004 ஜூலை 23

39—

### ஆதிதிராவிடர் விடுதி மாணவர் நலன்

**வினா எண் 35420—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பிற்பட்ட மாணவ விடுதிகளில் மாணவர்களுக்கு இரண்டு முட்டைகள் கொடுப்பது போல் ஆதிதிராவிட விடுதி மாணவர்களுக்கும் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆதிதிராவிட நல விடுதிகளிலும் மாணவ/மாணவியர்களுக்கு வாரம் 2 முட்டைகள் வீதம் மாதத்திற்கு 8 முட்டைகள் ஏற்கெனவே வழங்கப்பட்டு வருகிறது.*

40—

### மயானக் கொட்டகை கட்டுதல்

**வினா எண் 35616—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், புங்கலூர் ஊராட்சி, புங்கலூர் வரவக்குடி ஆதிதிராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புங்கலூர் ஊராட்சி, வரவக்குடி ஆதிதிராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை அமைத்திட ரூ.30,000/- மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் M.P.L.A.D.P. திட்டத்தில் சேர்த்து நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப மயானக் கொட்டகை அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*





41—

### மயானத்திற்கு கொட்டகை மற்றும் பாதை வசதி

**வினா எண் 36899—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழைய பாளையம் ஊராட்சி, கொடுக்காரமூலை காடுவெட்டி ஆதிதிராவிட காலனி மக்களுக்கு சுடுகாட்டுக் கொட்டகை மற்றும் பாதை அமைத்துத்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பழைய பாளையம் ஊராட்சி, கொடுக்காரமூலை காடுவெட்டி ஆதிதிராவிடர் மக்களுக்கு சுடுகாட்டுக் கொட்டகை மற்றும் பாதை அமைக்கும் பணி எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தின்கீழ் 2002-03-ல் செய்யப்பட்டுள்ளது.*

42—

### பேருந்து புதிய வழித்தடம்

**வினா எண் 14283—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து பெங்களூருக்கு ஜலகண்டாபுரம், மேச்சேரி, தருமபுரி, கிருஷ்ணகிரி வழியாக அரசுப் பேருந்து ஒன்று இயக்க அரசு செயல்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடியிலிருந்து பெங்களூருக்கு ஜலகண்டாபுரம், மேச்சேரி, தருமபுரி, கிருஷ்ணகிரி வழியாக அரசுப் பேருந்து இயக்கக் கோரிய வழித்தடங்கள் தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய இரு மாநிலங்களை உள்ளடக்கிய தடமாகும். தற்போதுள்ள இரு மாநிலங்களுக்கிடையேயான ஒப்பந்தத்தில் மேற்கூறிய வழித்தடம் இடம் பெறவில்லை. எனவே, கோரியுள்ள வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**43—**

## பேருந்து வசதி

**வினா எண் 14903—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் கூடுதலாக புதிய வழித்தடங்களில் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதியில் தற்பொழுதுள்ள நிதிநிலைமையில் கூடுதலாக பேருந்துகள் இயக்க இயலாத நிலை உள்ளது. எனினும், தருமபுரி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலம் பெண்ணாகரத்தில் பணிமனை துவக்கப்பட்டு 17 நகரப் பேருந்துகள் மற்றும் 16 புறநகர் பேருந்துகள் மூலம் பெண்ணாகரம் தொகுதி முழுவதும் அனைத்து கிராமங்களுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டு இயக்கப்பட்டு வருகின்றன.



**44—**

## சுண்ணாம்புக் கிளிஞ்சல்

**வினா எண் 27934—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சியிலுள்ள உப்பனாற்றில் சட்டத்துக்கு புறம்பாக தனி நபர்கள் கிளிஞ்சல்கள் லாரி மூலம் எடுத்துச் செல்வதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், தனி நபர்கள் கிளிஞ்சல்கள் எடுப்பதை தடை செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், தொழில் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், திருநகரி மற்றும் திருக்கருக்காவூர் ஊராட்சி பகுதிகளில் உள்ள உப்பனாற்றில் சுண்ணாம்பு கிளிஞ்சல் சேகரித்து எடுத்துச் செல்ல சிதம்பரத்தைச் சேர்ந்த திரு. ஆர். நந்தகோபால் என்பவருக்கு அரசாணை எண் 741, தொழில் துறை (எம்எம்சி-2) நாள் 23-7-1990-ல் 10 ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி குத்தகை உரிமத்தை மேலும் 20 ஆண்டுகளுக்குப் புதுப்பித்து ஆணை வழங்கக் கோரி மேற்படி குத்தகைதாரர் திரு. ஆர். நந்தகோபால் விண்ணப்பித்திருந்த அவ்விண்ணப்பம் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி குத்தகை உரிமதாரர், திருநகரி ஊராட்சி பகுதிகளிலுள்ள உப்பனாற்றில் சுண்ணாம்பு கிளிஞ்சல் சேகரித்து புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் உரிய முறையில் நடைசீட்டு அனுமதி பெற்ற லாரி மூலம் எடுத்துச் செல்கிறார். வேறு தனி நபர் யாரும் கிளிஞ்சல் எடுத்துச் செல்லவில்லை.

(ஆ) கிளிஞ்சல் எடுக்க குத்தகை உரிமம் பெற்றவர் அவ்வப்போது அனுமதி நடைசீட்டு பெற்று லாரி மூலம் எடுத்துச் செல்கிறார். வேறு தனி நபர் மூலம் கிளிஞ்சல் எடுக்கவில்லை. அவ்வாறு தனி நபர் கிளிஞ்சல் எடுக்கிறார்களா என்பது கண்காணிக்கப்படுகிறது. அவ்வாறு எடுத்தால் கிளிஞ்சலை லாரியுடன் கைப்பற்றுகை செய்து விதிகளின்படி அபராதம் விதிக்கப்படுகிறது.

[2004 ஜுலை 23

**45—**

## கதர் கிராமத் தொழில் உதவி இயக்குநர் அலுவலகம்

**வினா எண் 19927—திரு. வீ. சந்திரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சிவகங்கையில் இயங்கி வந்த காதி உதவி இயக்குநர் அலுவலகம் விருதுநகரிலிருந்து மீண்டும் சிவகங்கையில் செயல்பட அரசு பரிசீலனை செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*விருதுநகர் கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலகத்துடன் இணைக்கப்பட்ட சிவகங்கை கதர் கிராமத் தொழில்கள் உதவி இயக்குநர் அலுவலகத்தை மீண்டும் சிவகங்கையில் செயல்பட ஏற்பாடு செய்திட தற்போது திட்டம் ஏதுமில்லை.*

**46—**

## பட்டு நூல் உற்பத்தித் தொழிற்சாலை

**வினா எண் 27538—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கிருஷ்ணகிரி அணை- பெரியமுத்தூரில் அரசிற்கு சொந்தமான பட்டு நூல் உற்பத்தி தொழிற்சாலை லாபகரமாக இயங்கி வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) கிருஷ்ணகிரி அணை- பெரியமுத்தூரில் அரசுக்கு சொந்தமான பட்டு நூல் உற்பத்தித் தொழிற்சாலை லாபகரமாக இயங்காததால் 4-1-2002 அன்று மூடப்பட்டது.*



2004 ஜுலை 23]

*(ஆ) எழவில்லை.*

**47—**

## சோதனை ஆய்வுக்கூடம்

**வினா எண் 36123—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சிறுதொழில் நிறுவனங்கள் தங்களின் உற்பத்தியை சோதனை செய்ய குறைந்த கட்டணத்தில் சோதனை மையம் அமைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*தொழில் வணிகத் துறையின் வேதியியல் பிரிவின்கீழ், கீழ்க்கண்ட ஐந்து பரிசோதனை ஆய்வகங்கள் செயல்பட்டு வருகின்றன:—*

1. *இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வகம், திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை-32.*
2. *மண்டல சோதனை ஆய்வுக்கூடம், தொழிற்பேட்டை, கே. புதூர், மதுரை-625 007.*
3. *மண்டல சோதன ஆய்வுக்கூடம், அவினாசி சாலை, கோயம்புத்தூர்-641 014.*
4. *மண்டல சோதனை ஆய்வுக்கூடம், சூளைமேடு, சேலம் - 636 001.*
5. *மண்டல சோதனை ஆய்வுக்கூடம், கடற்கரைச்சாலை, தூத்துக்குடி-628 001.*

*இந்த ஆய்வகங்களில் ஆய்வுக் கட்டணமாக, தமிழக அரசால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்த அளவு கட்டணமே வசூலிக்கப்படுகிறது.*

*மேலும் திருவள்ளூர் மாவட்டம், காக்களூரிலுள்ள மத்திய மின்பொருள் சோதனைக்கூடம், தற்போது 160-க்கும் மேற்பட்ட மின் உபகரணங்களை பரிசோதனை செய்யும் ஆய்வுக்கூடமாக இயங்கி வருகிறது. இச்சோதனைக்கூடத்தில் அரசால் அவ்வப்போது*

நிர்ணயிக்கப்படுகின்ற குறைந்த அளவு ஆய்வுக் கட்டணமே வசூலிக்கப்படுகிறது.

48—

## தொழிற்பேட்டை அமைத்தல்

**வினா எண் 40242—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் கூட்டுறவு மூலம் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் கூட்டுறவு மூலம் தொழிற்பேட்டை அமைக்க கோரிக்கை ஏதும் இதுவரை பெறப்படவில்லை. அவ்வாறு தொழிற்பேட்டை அமைக்க தொழில் முனைவோர் முன்வந்தால் தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

49—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 5656—திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனம் ஊராட்சி, கற்பகநாதர்குளம் தெற்கு தெருவில் நியாய விலைக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடத்தில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், இடும்பாவனம் ஊராட்சி, கற்பகநாதர் குளம் தெற்கு தெருவில் உள்ள நியாய விலைக் கடைக்கு இடும்பாவனம் ஊராட்சியில் கட்டடம் கட்ட இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்ட 2003-2004 ஆம் ஆண்டு கட்டடம் கட்டும் திட்டப் பணியில் சேர்க்க திருவாரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

50—

## பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 26414—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஜெல்மாரப்பட்டி நியாய விலைக் கடையைப் பிரித்து பவளந்தூர் கிராமத்திற்கு புதிய பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு துரித நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட ஜெல்மாரப்பட்டி பகுதியில் 334 குடும்ப அட்டைகளுடன் ஜெல்மாரப்பட்டி பகுதிநேரக் கடை செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் இணைக்கப்பட்டுள்ள பவளந்தூர் பகுதியில் 116 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; மற்றும் பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர், தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும்; ஆகிய நிபந்தனைகள்

்ர்த்தியாகவில்லை. மேலும் ஒரு பகுதிநேரக் கடையிலிருந்து இன்னொரு பகுதிநேரக் கடை திறக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

51—

## நியாய விலைக் கடை

**வினா எண் 28618—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, சின்னமருதூர் ஊராட்சி மக்கள் நியாய விலைக் கடை இல்லாமல் சிரமப்படுவது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பிலிக்கல்பாளையம் நியாய விலைக் கடையிலிருந்து 110 குடும்ப அட்டைகளையும், ஆனங்கூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் ஆனங்கூர் நியாய விலைக் கடையிலிருந்து 41 குடும்ப அட்டைகளையும் பிரித்து சின்னமருதூர் பகுதியில் 151 குடும்ப அட்டைகளுடன் ஒரு பகுதிநேரக் கடை அமைக்க 4-6-2002 நாளிட்ட கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அரசாணை எண் 123-ல் ஆணையிடப்பட்டு, 1-7-2002 முதல் 151 குடும்ப அட்டைகளுடன் சின்னமருதூரில் ஒரு பகுதிநேரக் கடை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

52—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 31540—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரையிலுள்ள நாய..னூர் ஊராட்சியை சேர்ந்த பகுதியில் உள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித் தரும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் தொகுதிக்குட்பட்ட ஊத்தங்கரையில் உள்ள நாயக்கனூர் ஊராட்சியில் அமைந்துள்ள நியாய விலைக் கடை சிங்காரப்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் முழுநேரக் கடையாக 602 குடும்ப அட்டைகளுடன் வாடகை கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. 2003-2004 ஆம் நிதியாண்டில் நாயக்கனூர் நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படாததால் முழுநேரக் கடைகளுக்கு அரசு நிதியுதவிபெறும் திட்டங்களின் மூலமோ அல்லது சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலமோ கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ள மண்டல இணைப் பதிவாளருக்கு தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

53—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 31601—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, குன்னாண்டார் கோயில் ஒன்றியம், வத்தனக்கோட்டை நியாய விலைக் கடையை பிரித்து ராவுசாபட்டிக்கும் நல்லபுடையான்பட்டிக்கும் நடுவில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—** [2004 ஜூலை 23

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், குண்ணாண்டார் கோவில் ஒன்றியத்தில் உள்ள கின்னனூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் 522 குடும்ப அட்டைகளுடன் வத்தனாக்கோட்டை முழுநேரக் கடை செயல்படுகிறது. 70 குடும்ப அட்டைகளைக் கொண்டுள்ள நல்லபுடையான்பட்டி மற்றும் 90 குடும்ப அட்டைகளை கொண்டுள்ள ராவுசாப்பட்டி பகுதியிலும் மொத்தம் 160 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற வரைமுறை நிறைவு பெறாததால் நல்லபுடையான்பட்டி மற்றும் ராவுசாப்பட்டிக்கும் நடுவில் புதிய பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**54—**

### பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 33244—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், இராமகிருஷ்ணம்பதி ஊராட்சி, சா. முத்தம்பட்டிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், குன்னத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் இராமகிருஷ்ணம்பதி முழுநேர நியாய விலைக் கடை 247 குடும்ப அட்டைகளுடன் செயல்படுகிறது. சா. முத்தம்பட்டி பகுதியில் 135 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. தாய் நியாய விலைக் கடையில் 500-க்குக் குறைவான



குடும்ப அட்டைகள் உள்ளதாலும், பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை நிறைவு பெறாததாலும் சா. முத்தம்பட்டி பகுதிக்கு பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**55—**

### தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி

**வினா எண் 33538—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூரில் உள்ள வேளாண்மை தொடக்கக் கூட்டுறவு வங்கியில் 2002 செப்டம்பர் வரை பொது மக்களிடம் இருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, சித்தூரில் உள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் செப்டம்பர் 2002 வரை பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்புத் தொகை ரூ. 1,32,27,740/- ஆகும்.

**56—**

### விவசாயிகளுக்கு கடன்

**வினா எண் 33630—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதியிலுள்ள கிராமக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகளில் விவசாயிகள் கடன் பெறுவோருக்கு காலதாமதம் செய்வதை தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 23

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதியிலுள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகளுக்கு விவசாய கடன் அட்டை திட்டத்தின்கீழ் காலதாமதமின்றி தேவைக்கேற்ப அவ்வப்போது கடன் வழங்கப்படுகிறது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**57—**

## விவசாயிகளுக்குப் பயிர்க் கடன்

**வினா எண் 33631—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் பயிர்க் கடன்கள் உரிய காலத்தில் விவசாயிகளுக்கு வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, சிலம்பிநாதன்பேட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், விவசாய கடன் அட்டை திட்டத்தின்கீழ் கடனை திருப்பிச் செலுத்தும் உறுப்பினர்களுக்கு காலதாமதமின்றி கடன் வழங்கப்பட்டு வருகிறது. கடன் உடனுக்குடன் வழங்கப்படுகிறது.



2004 ஜூலை 23]

**58—**

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 34093—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த மங்கலம் கிராமத்தில் (சதுரங்கப்பட்டினம்) பகுதிநேர நியாய விலைக் கடை ஒன்றினைத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.**

திருக்கழுக்குன்றம் வட்டம், மங்கலம் கிராமத்தில் 502 குடும்ப அட்டைகளில் இருந்து 204 குடும்ப அட்டைகளைக் கொண்டு மங்கலம் கிராம தெற்கு பகுதியில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியாளரால் 26-5-2003-ல் உத்தரவிடப்பட்டு 10-10-2003 முதல் செயல்பட்டு வருகிறது.

**59—**

## நியாய விலைக் கடை

**வினா எண் 37093—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி-பண்ருட்டி நகரில் உள்ள 2-வது வார்டில், புதியதாக அமைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடையைத் திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி நகராட்சி. வார்டு எண் 2-ல் புதியதாக அமைக்கப்பட்டுள்ள நியாய விலைக் கடை அப்பகுதியில் அரசு நிதியிலிருந்து கட்டப்பட்ட புதிய கட்டடத்திற்கு 25-9-2003 அன்று இடம் மாற்றம் செய்யப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

**60—**

## நியாய விலைக் கடைக்கு சொந்த கட்டடம்

**வினா எண் 38758—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, குறவகுடி பஞ்சாயத்து, குறவகுடியில் உள்ள நியாய விலைக் கடை வாடகை கட்டடத்தில் இயங்கி வருகிறது. எனவே, சொந்த கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, குறவகுடி பஞ்சாயத்து, குறவகுடியில் உள்ள நியாய விலைக் கடைக்கு அரசுக்கு சொந்தமான இடத்தில் கட்டடம் கட்டித்தர, மதுரை மண்டல இணைப் பதிவாளர், மாவட்ட ஆட்சியருக்கு பரிந்துரை செய்துள்ளார். இது பரிசிலனையில் உள்ளது.

**61—**

## விற்பனை வரி ஏய்ப்பைக் கண்காணித்தல்

**வினா எண் 39486—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் விற்பனை செய்வதில், விற்பனை வரி ஏய்ப்பு நடைபெறுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் ஜவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் விற்பனை வரி ஏய்ப்பு நடைபெறுவதை அரசு அறிந்துள்ளதால், இப்பொருள் வரி ஏய்ப்பு பெருமளவு நிகழக்கூடிய வணிகப் பொருள்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டு வணிக வரித் துறையின் தொடர் கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு வருகிறது. செயலாக்கப் பிரிவிலும் இப்பொருட்களின் போக்குவரத்து தீவிர தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

(ஆ) 1. ஜவ்வரிசி மற்றும் மாவுப் பொருட்களின் போக்குவரத்துகளின் அனைத்து வாகனங்களும் வணிக வரி சோதனைச் சாவடிகளில் தீவிர தணிக்கைக்கு உட்படுத்தப்பட்டு தேவையான இனங்களில் முன்வரி வசூலிக்கப்பட்டு வரி ஏய்ப்பு தடுக்கப்பட்டு வருகிறது.

2. சேகோசர்விலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு, வெளிமாநிலங்களுக்கு போக்குவரத்து செய்யப்படும் இனங்களிலும் தீவிர தணிக்கையிட்டு சேகோசர்விலிருந்து கொள்முதல் செய்யப்பட்டதற்கான கொள்முதல் ஆவணங்களில் பிரதிகளைப் பெற்று சரிபார்ப்பு செய்யப்பட்டு வரிவிலக்கு கோரியது சரியானதுதானா என்பது உறுதி செய்யப்பட்ட பின்னரே சோதனைச் சாவடிகளின் வழியே இச்சரக்குகளின் போக்குவரத்து அனுமதிக்கப்படுகிறது. இவ்வாறு தீவிர தணிக்கை மற்றும் சரிபார்ப்பு செய்வதின் மூலம் தவறான வரிவிலக்கு மற்றும் விற்பனை வரி ஏய்ப்பு செய்யப்படுவது ஆரம்ப நிலையிலேயே தடுக்கப்படுகிறது.

3. சோதனைச் சாவடிகளைத் தவிர்த்து, வரி ஏய்ப்பு நோக்கத்துடன் புறவழிச் சாலைகளில் செல்லும் வாகனங்களை, சுற்றும் குழுக்கள் மற்றும் நடமாடும் குழு செயற்பிரிவு அலுவலர்களால் புறவழிச் சாலைகளில் வாகனத் தணிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

4. வாகனத் தணிக்கைகளைத் தொடர்ந்து, சந்தேகிக்கப்படும் இனங்களில் அவ்வப்பொழுது வணிக இடங்கள் செயற்பிரிவு அலுவலர்களால் தணிக்கையிடப்படுகிறது. இவையன்றியும் இப்பொருட்களை அரவை செய்யும் ஆலைகள் தனியார் சேமிப்புக் கிடங்குகள் ஆகிய இடங்களிலும் அவ்வப்பொழுது தணிக்கைகள் மேற்கொள்ளப்படுகிறது.

5. வணிக இட தணிக்கைகளின்போது பதுக்கல் கண்டு பிடிக்கப்படுவதின் பேரில் டி3 பிரேரணைகள் செயற்பிரிவு அலுவலர்களால் உருவாக்கப்பட்டு, வரிவிதிப்பு சரகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அவை அமலாக்கம் செய்யப்படுவதும் கண்காணிக்கப்படுகிறது.

6. சேகோசர்வ் மற்றும் இதர உற்பத்தி நிறுவனங்களிலிருந்து அவ்வப்பொழுது கொள்முதல்/விற்பனைகள் குறித்த வடிப்பு நகல்கள் எடுக்கப்பட்டு, அவை விற்பனையாளர்களது கணக்குகளுடன் ஒப்பிட்டு சரிபார்ப்பு பணியும் செய்யப்பட்டு வருகிறது.

7. வெளிமாநில நேரடி விற்பனை செய்யப்படும் இனங்களிலும், ஒப்படைப்பு விற்பனை செய்யப்படும் இனங்களிலும், பிற மாநில வணிகர்களின் கணக்குகளிலிருந்து வடிப்புகள் சேகரிக்கப்பட்டு அவற்றை இக்கோட்டத்திலுள்ள வணிகர்கள் கணக்குகளுடன் ஒப்பிட்டு சரிபார்க்கும் பணியும் மேற்கொள்ளப்படுகிறது.

மேற் சமர்ப்பித்துள்ளவாறு, வரி ஏய்ப்புத் தடுப்பு நடவடிக்கைகள் வணிக வரித் துறை அலுவலர்களால் 2002-2003-ல் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் விளைவாக கீழ்க்கண்டவாறு வரி ஏய்ப்புகள் கண்டுபிடிக்கப்பட்டுத் தொகைகள் வசூலிக்கப்படுகிறது.



**கடைத் தணிக்கை:**

25 இனங்களில் கடைத் தணிக்கைப் பணி மேற்கொள்ளப்பட்டு வரி ஏய்ப்புச் செய்யப்பட்ட ரூ.7,82,208 வசூலிக்கப்பட்டது.

வடிப்பு நகல்கள் சேகரிக்கப்பட்டு சரிபார்ப்புப் பணி மேற்கொண்டதின் பலனாக மூன்று இனங்களில் வரி ஏய்ப்பு ரூ.4,13,033 வசூலிக்கப்படுகிறது. மேலும் இரண்டு மாவு அரவை ஆலைகளைத் தணிக்கையிட்டு பதுக்கல் தொகை கண்டுபிடிக்கப்பட்டதில் ரூ.77,049 வசூலிக்கப்பட்டது.

**புறவழிச் சாலைகளில் வாகனத் தணிக்கை:**

புறவழிச் சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட வாகனத் தணிக்கைகளின் மூலம் 4089 வாகனங்கள் தணிக்கையிடப்பட்டு 26 இனங்களில் குற்றம் கண்டுபிடிக்கப்பட்டு ரூ.1.60 இலட்சங்கள் இணக்கத் தொகையும், ரூ.1.90 இலட்சங்கள் முன்வரித் தொகையும் வசூலிக்கப்படுகிறது. மேலும் புறவழிச் சாலைகளில் மேற்கொள்ளப்பட்ட வாகனத் தணிக்கைகளின் மூலம் ரூ.54.18 கோடி விற்பனைத் தொகைக்கான பில்கள் மற்றும் டெலிவரி தாட்கள் சேகரிக்கப்பட்டு இவ்வினங்களில் வரி ஏய்ப்பு நிகழ்வது தடுக்கப்படுகிறது.

ஆத்தூர், நாமகிரிப்பேட்டை, இராசிபுரம், செல்லம்பட்டி மற்றும் சேலம் ஆகிய இடங்களில் ஈரமாவு போக்குவரத்துக்களின்மீது தீவிர தணிக்கை மேற்கொள்ளப்பட்டதின் மூலம் முன்வரி ரூ.1,08,187 மேலும் ரூ.127.24 இலட்சங்கள் ஈரமாவு விற்பனைத் தொகைக்கான பில்கள் மற்றும் டெலிவரி தாட்கள் சேகரிக்கப்பட்டு அவ்வினங்களில் வரி ஏய்ப்பு நிகழ்வது தடுக்கப்படுகிறது.

2003-2004 ஆம் ஆண்டில் இதுவரை செயல்பிரிவு அலுவலர்களின் தீவிர தணிக்கை மற்றும் கண்காணிப்புப் பணிகளில் ரூ.4.59 இலட்சங்கள் வசூலிக்கப்பட்டது. மேலும் செயற்பிரிவு அலுவலர்களின் தீவிர தணிக்கை மற்றும் கண்காணிப்பு செயல்பாடுகளினால் சேகோசர்விற்கு நடப்பாண்டில் கீழ்க்கண்டவாறு மாதத்திற்கு மாதம் மூட்டைகளின் வரவுகள் உயர்ந்து வருகிறது:-

| மாதம் | | சேகோசர்விற்கு வரவு (மூட்டைகள்) |
|---|---|---|
| ஏப்ரல் 2003 | : | 38,071 |
| மே 2003 | : | 53,556 |

| | | |
|---|---|---|
| *ஜுன் 2003* | : | *90,968* |
| *ஜுலை 2003* | : | *96,104* |

மேலும் *13-8-2003* அன்று சேகோசர்வ் தனி அலுவலர் அவர்களை நேரில் சந்தித்து வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை தடுத்திட உரிய தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள கீழ்க்காணும் பட்டியல்கள் பெறப்பட்டது:-

*(1)* சேகோசர்வில் உறுப்பினர்களாக இருந்தும், சேகோசர்வினால் நடத்தப்படும் ஏலங்களில் கலந்து கொள்ளாதவர்கள் பட்டியல்

*(2)* சேகோசர்வில் உறுப்பினர்களாக இருந்தும், சேகோசர்விற்கு சரக்குகள் அனுப்பாத உற்பத்தியாளர்களின் பட்டியல்

*(3)* வணிக நிறுத்தம் செய்யப்பட்டு சேகோசர்வ் உறுப்பினர்களிலிருந்து விலகிக் கொண்ட வணிகர்கள்/உற்பத்தியாளர்கள் பட்டியல்.

மேலும் சமர்ப்பித்துள்ள விவரங்களின் அடிப்படையில் சேலம் செயற்கோட்டத்தில் ஜவ்வரிசி மற்றும் மாவு பொருள் விற்பனை செய்வதில் வரி ஏய்ப்பு நிகழாமல் அரசுக்கு வருவாயை ஈட்டித் தருவதில் வணிக வரித் துறை முனைப்புடன் செயலாற்றி வருகிறது.

**62—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 40913—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், ஏரியூர் அன்சாகரம் பகுதிக்கு ஒரு நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி தொகுதி, ஜோலார்பேட்டை ஒன்றியம், ஏரியூர் மற்றும் அன்சாகரம் பகுதிகளை உள்ளடக்கிய ஏரியூர் பகுதிநேர நியாய விலைக் கடை *181* குடும்ப அட்டைகளைக் கொண்டு திருப்பத்தூர் கூட்டுறவு விற்பனைச் சங்க கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இந்த பகுதிநேரக் கடை ஊர் மக்களால் அளிக்கப்பட்டுள்ள இலவச கட்டடத்தில் செயல்பட்டு வரும் நிலையில், பகுதிநேரக் கடைக்கு அரசு திட்டங்களின்கீழ் புதிய கட்டடம் கட்டுவதற்கான அவசியம் எழவில்லை.

**63—**

## நகைக் கடன்

**வினா எண் 41125—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியில் அதிகபட்ச தனி நபர் நகைக் கடன் உச்சவரம்பு எவ்வளவு?

*(ஆ)* *2002-2003* ஆம் ஆண்டு எவ்வளவு பேருக்கு நகைக் கடன் வழங்கப்பட்டது?

*(இ)* நகைக் கடன் வட்டி எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ)* சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியின் அதிகபட்ச தனி நபர் நகைக் கடன் உச்சவரம்பு *24-5-2002* முதல் ரூ.*2.00* இலட்சமாகும். இது *9-1-1998* முதல் *23-5-2002* வரை ரூ.*1.00* இலட்சமாக இருந்தது.

[2004 ஜூலை 23

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் 1,26,065 நபர்களுக்கு நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

(இ) நகைக் கடனுக்கான வட்டி தற்போது (1-11-2003 முதல்) 11% ஆகும்.

**64—**

## கூட்டுறவு வங்கியின் பொது நல நிதி

**வினா எண் 41129—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை மத்திய கூட்டுறவு வங்கியில் பொது நிதியிலிருந்து பாரதி மகளிர் கல்லூரிக்கு கூடுதல் கட்டடம் கட்ட எவ்வளவு தொகை ஒதுக்கப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் பொது நல நிதியிலிருந்து பாரதி மகளிர் கல்லூரிக்கு கூடுதல் கட்டடம் கட்ட ரூ.10 இலட்சம் ஒதுக்கப்பட்டது.

**65—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 42553—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், இருட்டணையிலுள்ள கூட்டுறவு நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கடச்சேரி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் 207 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் இருட்டணை முழுநேர நியாய விலைக் கடைக்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.1.75 இலட்சத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. கட்டடம், பணி முடியும் தருவாயில் உள்ளது.

**66—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 44379—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியிலுள்ள வழுதலைக்குடி கிராமத்தில் நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் உள்ள வழுதலைக்குடி பகுதியில் உள்ள 41 குடும்ப அட்டைகள் அனைத்தும் அருகிலுள்ள ராதாநல்லூர் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. வழுதலைக்குடி கிராமத்தில் நியாய விலைக் கடை ஏதும் இல்லாத நிலையில் சொந்தக் கட்டடம் கட்டும் கேள்வி எழவில்லை.

[2004 ஜூலை 23

67—

பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 44549—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பாதிரிவேளூர் ஊராட்சி, கீழவாடியில் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், பாதிரிவேளூர் ஊராட்சி, கீழவாடியில் பகுதிநேர அங்காடி அமைப்பது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண் டபிள்யு.பி.எண். 10661/97 மற்றும் 17048/97 என வழக்குகள் நடைபெற்று வருவதால், வழக்கு முடிவுற்ற பிறகு தீர்ப்பின் அடிப்படையில் பகுதிநேர அங்காடி அமைக்க ஆவன செய்யப்படும்.

68—

பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 44554—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எலத்தூர் ஊராட்சி, பணங்காட்டாங்குடியில் பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், எலத்தூர் தாய் நியாய விலைக் கடையில் 560 குடும்ப அட்டைகள் உள்ளன. 1.8 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பணங்காட்டாங்குடியில் 102 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் மற்றும் இரு நியாய விலைக் கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால், பணங்காட்டாங்குடியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

69—

பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 45351—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், பாதிரிவேளூர் ஊராட்சி, சென்னியநல்லூரில் பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி வட்டம், பாதிரிவேளூர் ஊராட்சி, சென்னியநல்லூரில் பகுதிநேர அங்காடி அமைப்பது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு எண். டபிள்யு.பி. 10661/97 மற்றும் 17048/97 என வழக்குகள் நடைபெற்று வருவதால், வழக்கு முடிவுற்ற பிறகு தீர்ப்பின் அடிப்படையில் சென்னியநல்லூரில் பகுதிநேர அங்காடி அமைக்க ஆவன செய்யப்படும்.

[2004 ஜூலை 23

70—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 45440—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*அறந்தாங்கி தொகுதி, ஆயிங்குடி மைய அங்காடிக்கு கட்டடம் கட்டித்தரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆயிங்குடி நியாய விலைக் கடை, ஆளங்குடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டின்கீழ் முழுநேரக் கடையாக பஞ்சாயத்து கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகின்றது. எனவே, இக்கடைக்கு புதியதாக கட்டடம் கட்டும் வினா எழவில்லை.*

71—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 46374—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்துக்குளம் பகுதி 5-ல் உள்ள பெரிய வட்டாரத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டாரம், மடத்துக்குளம் பேரூராட்சியிலுள்ள 5, 6, 7 மற்றும் 8 ஆகிய வார்டுகளில்*



2004 ஜூலை 23]

*1230 குடும்ப அட்டைதாரர்கள் மேற்கு நீலம்பூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் செயல்படும் மடத்துக்குளம் கடை 2-ல் பொருட்கள் பெற்று வருகின்றனர். மேற்படி அங்காடி 6-வது வார்டில் செயல்பட்டு வருகிறது. பகுதிநேரக் கடை கோரும் 5-வது வார்டிலுள்ள பெரிய வட்டாரம் பகுதியில் சுமார் 200 குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே உள்ளனர். பெரிய வட்டாரம் பகுதிக்கும், மடத்துக்குளம் கடை எண். 2க்கும் 1/2 கிலோ மீட்டர் தொலைவு மட்டுமே உள்ளது. இரண்டு கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும் என்கிற வரையறை நிறைவு பெறாததால் மடத்துக்குளத்தைச் சேர்ந்த பெரிய வட்டாரம் பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வாய்ப்பில்லை.*

72—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 46375—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலைப்பேட்டை, குரல்குட்டை மடத்தூரில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், குரல்குட்டை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கும் போகிகவுண்டன் நாசர்பட்டி நியாய விலைக் கடையில் 886 குடும்ப அட்டைகள் உள்ளன. 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மடத்தூர் பகுதியில் 102 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் மற்றும் இரு நியாய விலைக் கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் குரல்குட்டை கிராமம் மடத்தூரில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.*

[2004 ஜூலை 23

73—

## பகுதிநேர நியாய விலைக் கடை

**வினா எண் 46376—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலைப்பேட்டை, விலாமரத்துப்பட்டி, பெரியபாப்பனூத்து பகுதி தோட்டத்து சாலை, பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், செஞ்செல்லகவுண்டன் புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின்கீழ் விலாமரத்துப்பட்டி நியாய விலைக் கடை 600 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகிறது. ஒரு கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ள பெரிய பாப்பனூத்து பகுதியில் தோட்டத்து சாலை பகுதியை சேர்ந்த 80 குடும்ப அட்டைகள் உள்ளன. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மற்றும் இரு நியாய விலைக் கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கிலோ மீட்டர் தொலைவு இருக்க வேண்டும். இந்த நிபந்தனைகள் நிறைவு பெறாததால் தோட்டத்து சாலை பகுதியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*

74—

## நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 48004—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

*(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, புதூர் கி. ...த்தில் இயங்கி வரும் முழுநேர நியாய விலைக் கடைக்கு நிரந்தர கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, மூக்கனூர் ஊராட்சி, புதூர் பகுதியில் 391 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வரும் நியாய விலைக் கடை ஒரு பகுதிநேரக் கடையாகும். பகுதிநேரக் கடை அமைவதற்கு ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்துதர வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளது. புதூர் பகுதியில் உள்ள பகுதிநேரக் கடை ஊர் மக்களால் இலவசமாக அளித்த கட்டடத்தில் செயல்படுவதால் அரசு திட்டங்களின்கீழ் கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.*

75—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 27176—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மணமை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*காஞ்சிபுரம் மாவட்டம், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள மணமை கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்பொழுது செயற்குறிப்பு ஏதும் இல்லை.*

[2004 ஜூலை 23

76—

## கால்நடை மருத்துவமனைக்கு கட்டட வசதி

**வினா எண் 36672—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கோட்டேரியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு கட்டட வசதி செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாசலம் தொகுதி, கோட்டேரி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை ஏதும் இயங்கவில்லை. கால்நடை மருந்தகக் கிளை நிலையம் தற்போது வாடகையில்லா கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த கால்நடை மருந்தகக் கிளை நிலையத்துக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

(ஆ) எழாது.

77—

## கால்நடை மருத்துவமனை

**வினா எண் 36673—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், மேலக்குப்பத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாசலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், மேலக்குப்பத்தில் கால்நடை மருந்தகம் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

78—

## கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம்

**வினா எண் 43920—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கூடச்சேரியிலுள்ள கால்நடை மருத்துவமனைக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கூடச்சேரியிலுள்ள கால்நடை கிளை நிலையம் தற்போது வாடகையில்லாத கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்தக் கால்நடை கிளை நிலையத்திற்கு புதிய கட்டடம் கட்டும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

[2004 ஜூலை 23

79—

## கால்நடை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 48632—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஒன்றியம், குன்னிப் பாளையம், எல்லைக்காட்டுப்புதூர் கிராமங்களில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஒன்றியம், குன்னிப்பாளையம், எல்லைக்காட்டுப்புதூர் கிராமங்களில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

80—

## குழந்தைத் தொழிலாளர் நலத் திட்டம்

**வினா எண் 34476—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் தேசியக் குழந்தைத் தொழிலாளர் நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதா?





(ஆ) ஆம் எனில், எத்தனை சிறப்புப் பள்ளிகள் அமைக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் தேசியக் குழந்தைத் தொழிலாளர் நலத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) 40 சிறப்புப் பள்ளிகள் சேலம் மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

81—

## தொழிற்பயிற்சி திட்டம்

**வினா எண் 36441—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு தொழிற் பயிற்சி திட்டத்தின்கீழ் எலக்ட்ரானிக் மற்றும் மெக்கானிஸம் பயிற்சிக்கு சேலம் மாவட்டத்தில் எத்தனை மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது?

(ஆ) அதற்கு அரசு, மாணவர்களுக்கு அளித்த பயிற்சி உதவித்தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில், 2000-2001 ஆம் ஆண்டு தொழிற் பயிற்சி திட்டத்தின்கீழ் எலக்ட்ரானிக் மற்றும் மெக்கானிக் பிரிவில் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படவில்லை.

(ஆ) எழாது.

82—

## மகளிர் தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 38531—திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் மகளிருக்கென தனியாக தொழிற்பயிற்சி நிலையம் துவங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

83—

## வேலைவாய்ப்பு அலுவலகம் இடம் மாற்றம்

**வினா எண் 40115—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை டவுனில் குறுகலான இடத்தில் இயங்கி வரும் அரசு வேலைவாய்ப்பு அலுவலகத்தை மாற்றி அமைத்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது வேறு இடத்திற்கு மாற்ற வாய்ப்பில்லை.

(ஆ) பதில் அளிக்கும் நிலை எழவில்லை.



84—

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்திற்குக் கட்டடம்

**வினா எண் 43945—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கொத்தளம் ஊராட்சி, கருக்கம்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கொத்தளம் ஊராட்சி, எஸ்.எம்.டி. 71. கருக்கம்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமாக அடிமனை எதுவும் இல்லாததாலும், கட்டட நிதியில் போதுமான இருப்பு இல்லாததாலும் சங்கத்திற்கு சொந்தமாக அலுவலகக் கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடையளிக்கும வாய்ப்பு எழவில்லை.

85—

## வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள்

**வினா எண் 30594—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1999-2000 ஆம் ஆண்டில் புதுக்கோட்டை தொகுதியில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் என்ன?

(ஆ) அதன் மூலம் பயன் அடைந்த விவசாயிகள் எத்தனை பேர்?

(இ) 2000-2001 ஆம் ஆண்டில் செயல்படுத்தும் திட்டங்கள் என்ன?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (இ) 1999-2000 மற்றும் 2000-2001 ஆண்டுகளில் புதுக்கோட்டை தொகுதியில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பெயர் விவரம்:—

1. ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தித் திட்டம்
2. தேசிய பயறு பெருக்கத் திட்டம்
3. எண்ணெய்வித்து உற்பத்தித் திட்டம்
4. தென்னை வளர்ச்சித் திட்டம்
5. பயறு வகைப் பயிர்களுக்கு டிஏபி தெளித்தல்
6. பயறு கொள்முதல்
7. நெல் மற்றும் சிறுதானியம் கொள்முதல்
8. எண்ணெய்வித்து கொள்முதல்
9. நீலப் பச்சைபாசி கொள்முதல் மற்றும் வினியோகம்
10. உயிர் உரங்கள் வினியோகம்
11. நுண்சத்து வினியோகம்
12. அசோலா வினியோகம்
13. பசுந்தாள் வினியோகம்

(ஆ) இத்திட்டங்கள் மூலம் பயன் அடைந்த விவசாயிகள் எண்ணிக்கை விவரம்:—



2004 ஜூலை 23]

| | 1999-2000 ஆம் ஆண்டில் | 2000-01 ஆம் ஆண்டில் |
|---|---|---|
| புதுக்கோட்டை வட்டாரம் | 5140 | 5387 |
| கந்தர்வக்கோட்டை வட்டாரம் | 4425 | 4671 |
| மொத்தம் | 9565 | 10058 |

86—

**தோட்டக்கலை அலுவலகத்திற்கு கட்டடம்**

**வினா எண் 38049—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி நகரில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தோட்டக்கலை அலுவலகத்திற்கு சொந்தமாக கட்டட வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. ப அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசின் நிதிநிலையைக் கருத்திற்கொண்டு வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் தோட்டக்கலை அலுவலகங்களுக்கு சொந்தமாகக் கட்டட வசதி செய்துதரும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

87—

**வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நிதியுதவி பெறும் திட்டங்கள்**

**வினா எண் 40906—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் செயல்படும் ஆராய்ச்சித் திட்டத்தின்கீழ் இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் நிதியுதவி பெறும் 146 திட்டங்கள் எந்தெந்த மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது?

(ஆ) என்னென்ன பணிகள் செயல்படுத்தப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ)

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | பணிகளின் விவரம் |
| --- | --- | --- | --- |
| 1. | கோவை<br>கோவை-90,<br>ஆவீஸ்ஷெழியார் நகர்-3,<br>மேட்டுப்பாளையம்-2 | 95 | நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள்,பருத்தி மற்றும் இதர வேளாண் மற்றும் தோட்டக் கலைப் பயிர்களில் அதிக விளைச்சல் இரகங்கள்/வீரிய ஒட்டு இரகங்கள் மற்றும் இதர தொழில் நுட்பங்கள் உருவாக்குதல்.<br><br>எண்ணெய்வித்து மற்றும் பருத்தியில் வல்லுநர் விதை உற்பத்தி.<br><br>பயிர் சுழற்சி முறைகள், களை மற்றும் நீர் நிர்வாகம் ஆராய்ச்சிகள்.<br><br>மண்ணில் நுண்ணூட்டச் சத்துக்கள், உரநிர்வாகம், கழிவு நீர்களால் பாதிக்கப்பட்ட நிலசீர்திருத்தம். |



2004 ஜூலை 23]

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | பணிகளின் விவரம் |
| --- | --- | --- | --- |
| | | | உயிரியல் தொழில்நுட்ப மையத்தில் நோய் எதிர்ப்புத் திறன் மற்றும் கட்டுப்பாடு பற்றிய ஆராய்ச்சி.<br><br>உயிரியல் கட்டுப்பாட்டு முறை ஆராய்ச்சிகள்.<br><br>மூலிகைப் பயிர்களில் விதை நுட்பங்கள் ஆராய்ச்சி.<br><br>வேளாண்மையில் வானிலை பற்றிய ஆராய்ச்சி.<br><br>நீர் வழி உர மேலாண்மை மற்றும் நீர் மேலாண்மை ஆராய்ச்சி.<br><br>திராட்சை இரகங்கள் தேர்வு ஆராய்ச்சி.<br><br>சடுதி மாற்றம் மூலம் வாழை இரகம் உருவாக்குதல்.<br><br>பண்ணைக் கருவிகள், எரிசக்தி மற்றும் கழிவுப் பொருட்களை மறுபடியும் பயன்படுத்துல் போன்ற ஆராய்ச்சி.<br><br>வீரிய ஒட்டு நெல், எண்ணெய் வித்துக்கள், சிறுதானியம், பயறுவகைகள், பண்ணைக் கருவிகள், நுண்ணுயிர் உரம், திறன் பற்றி முன்னோடி செயல் விளக்கத் திடல் விவசாயிகளின் நிலங்களில் அமைத்தல்.<br><br>வீரிய ஒட்டு நெல் சாகுபடி பயிற்சிகள் நடத்துதல். |

[2004 ஜூலை 23

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | பணிகளின் விவரம் |
|---|---|---|---|
| | | | வேளாண் காடுகள் பற்றிய ஆராய்ச்சி. |
| | | | மலர் பயிர்களில் ஒருங்கிணைந்த நூற்புழு, கட்டுப்பாடு மற்றும் காய்கறிப் பயிர்களில் உயிரியல் கட்டுப்பாடு முறை பற்றிய ஆராய்ச்சி. |
| | | | தென்னை மற்றும் நிலக் கடலையில் ஆராய்ச்சி. |
| | | | அறுவடைக்குப்பின் தொழில் நுட்பங்கள், பண்ணைக் கருவிகள் மற்றும் எரிசக்தி பற்றிய ஆராய்ச்சி. |
| | | | தோட்டக்கலைப் பயிர்களில் புதிய இரகங்கள் மற்றும் தொழில் நுட்பங்கள் உருவாக்குதல். |
| | | | மக்காச்சோளம், கம்பு, பருத்தி, பயறுவகை தீவனப் பயிர்கள், நெல் மற்றும் இதர பயிர்களில் இரகம் இதர தொழில்நுட்பங்கள் உருவாக்குதல். |
| | | | விதை தொழில்நுட்ப ஆராய்ச்சி. மண்ணில் உரம் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் பற்றிய ஆராய்ச்சி. |
| | | | நுண்ணியிர்கள் மூலம் தழைச்சத்து நிலை நிறுத்துதல். |
| | | | உற்பத்தியான பொருட்களில் பூச்சிக்கொல்லி இருப்பு பற்றிய ஆராய்ச்சி. |



2004 ஜூலை 23]

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | பணிகளின் விவரம் |
|---|---|---|---|
| | | | காளான், சிலந்திப் பூச்சி, நூற்புழு மற்றும் உயிரினப் பூச்சி நோய் மற்றும் களை நிர்வாகம். |
| 2. | ஈரோடு<br>பவானிசாகர்-4 | 4 | நில்க்கடலையில் ஆராய்ச்சி மற்றும் வல்லுநர் விதை உற்பத்தி மற்றும் முன்னோடி செயல் விளக்கம்.<br>நீர் மேலாண்மை பற்றிய ஆராய்ச்சி. |
| 3. | மதுரை | 7 | களை நிர்வாகம் மற்றும் ஊடுபயிர் தொழில்நுட்பம்<br>நீர் மேலாண்மை ஆராய்ச்சி.<br>சத்துள்ள உணவுப் பொருட்கள் மற்றும் குழந்தை வளர்ப்பு பற்றிய ஆராய்ச்சி.<br>உள் நிலப் பகுதிக்கு கடல் உட்புகுதல் பற்றிய ஆராய்ச்சி மற்றும் நிலக்கடலை, முன்னோடி செயல் விளக்க பரிசோதனை. |
| 4. | தேனி<br>பெரியகுளம்-3 | 3 | வெப்ப பிராந்திய பழப்பயிர்களில் ஆராய்ச்சி மற்றும் தோட்டக்கலை பயிர்களின் வல்லுநர் விதை உற்பத்தி. |
| 5. | சேலம்<br>சந்தியூர்-4<br>ஏற்காடு-1<br>எத்தாப்பூர்-1. | 6 | ஆமணக்கு மற்றும் மணமூட்டும் பயிர்களில் ஆராய்ச்சி.<br>வேளாண் அறிவியல் நிலையம் செயல்பாடு. |

[2004 ஜூலை 23

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | பணிகளின் விவரம் |
|---|---|---|---|
| 6. | தூத்துக்குடி<br>கிள்ளிக்குளம்-1<br>கோவில்பட்டி-5 | 6 | பருத்தி, நிலக்கடலை மற்றும் ஆமணக்கு பயிர்களில் முன்னோடி செயல் விளக்கம்.<br>மானாவாரி பயிர்கள் அதற்கு தேவையான தொழில் நுட்பங்கள் மற்றும் வேளாண் வானிலை பற்றிய ஆராய்ச்சி.<br>பருத்தி மற்றும் பயறு வகைகளில் முன்னோடி செயல் விளக்கப் பரிசோதனை நடத்துதல். |
| 7. | புதுக்கோட்டை<br>வம்பன்-3 | 3 | பனை மரம் பற்றிய ஆராய்ச்சி.<br>துவரை மற்றும் இதர பயறு வகைப் பயிர்களில் ஆராய்ச்சி மற்றும் முன்னோடி செயல் விளக்கம். |
| 8. | இராமநாதபுரம் | 1 | கரும்பு பயிரில் சொட்டுநீர் ப்பாசன ஆராய்ச்சி. |
| 9. | திருச்சி<br>திருச்சி-3<br>சிறுகமணி-3 | 6 | வெற்றிலை மற்றும் நெல் பயிர்களில் ஆராய்ச்சி.<br>களர் உவர் நிலங்களுக்கேற்ற தொழில்நுட்ப ஆராய்ச்சி<br>வாழையில் நூற்புழு கட்டுப்படுத்துதல் வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் முன்னோடி செயல் விளக்கங்கள் அமைத்தல். |



2004 ஜூலை 23]

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | திட்டங்களின் எண்ணிக்கை | பணிகளின் விவரம் |
|---|---|---|---|
| 10. | தஞ்சாவூர்<br>வேப்பங்குளம்-2<br>ஆடுதுறை-3 | 5 | நெல், தென்னை, சணல் மற்றும் எண்ணெய் பனை பற்றிய ஆராய்ச்சி. |
| 11. | விருதுநகர்<br>அருப்புக்கோட்டை-1<br>ஸ்ரீவில்லிபுத்தூர்-2. | 3 | வறட்சிப் பகுதிக்கேற்ற பழப்பயிர்கள் சம்பந்தமான ஆராய்ச்சி<br>புதிய நடுத்தர இழை பருத்தி இரகங்கள் மற்றும் இதர தொழில் நுட்பங்கள் உருவாக்குதல் மற்றும் விவசாயிகள் நிலத்தில் செயல் விளக்கம் செய்தல். |
| 12. | கடலூர்<br>விருத்தாசலம்-10<br>கடலூர்-1. | 11 | எண்ணெய்வித்து, முந்திரி, கரும்பு பயிர்களில் ஆராய்ச்சி வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் அதன் மூலம் முன்னோடி செயல் விளக்கங்கள் செய்தல். |
| | மொத்தம் | 150. | |

88—

## பயிர் அபிவிருத்தித் திட்டம்

**வினா எண் 42561—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் மூலிகை மற்றும் நறுமண சுவை பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டத்தில், மத்திய அரசின் நிதி உதவியுடனும், மாநில அரசின் பங்களிப்புடனும் மூலிகை அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு "மூலிகை மற்றும் மருத்துவப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டமும்" நறுமண சுவைப் பயிர்களின் அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு "நறுமண சுவைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டமும்" செயல்படுத்தப்படுகிறது. இந்நிதியாண்டில் சேலம் மாவட்டத்திற்காக மூலிகை மற்றும் மருத்துவப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்திற்கு ரூ.3.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் நறுமண சுவைப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.13-50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மத்திய அரசின் வழிகாட்டு நெறிகளின்படியும், விவசாயிகளின் தேவைகளை கருத்திற்கொண்டும், மூலிகை மற்றும் மருத்துவப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் கீழ்க்காணும் விதமாக பல்வேறு இனங்களாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு இனத்திற்கும் தனித்தனியே அரசின் உதவிகள் வழங்கப்படுகிறது.

**1. பரப்பு விரிவாக்கம்.**

இத்திட்டத்தின்கீழ், மூலிகை பயிர்கள் சாகுபடி பரப்பினை அதிகரிக்கும் பொருட்டு, 25 சத நிதி உதவியுடன் ஒரு எக்டருக்கு ரூ. 12,500/- மதிப்பிற்கு செடிகள் மற்றும் வேளாண் இடுபொருட்கள் வழங்கப்படுகிறது. இவ்வினத்தின்கீழ் சேலம் மாவட்டத்திற்கு, 10 எக்டர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.1-250 இல்ட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. செயல் விளக்கப் பாத்திகள் அமைத்தல்.**

மூலிகை மற்றும் மருத்துவப் பயிர்கள் சாகுபடி குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளிக்கும் பொருட்டு 120 செயல் விளக்க பாத்திகள் அமைக்கப்பட இந்நிதியாண்டில் ரூ. 0-900 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2004 ஜூலை 23]

**3. சிறுதளைகள் அமைக்க இடுபொருட்கள் வழங்குதல் (மினிகிட் விநியோகம்)**

இத்திட்டத்தின்கீழ் ஒரு சிறுதளை (0.01 எக்டேர் பரப்பு) தொகுப்பிற்கு ரூ.3,500/- வீதம் நிதி உதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் சேலம் மாவட்டத்திற்கு 30 எண்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ரூ.1-050 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறே நறுமண சுவைப் பயிர்கள் அபிவிருத்தி திட்டமும் பின்வரும் இனங்களில் செயல்படுத்தப்படுகிறது:—

**1. பரப்பு விரிவாக்கம்.**

நறுமண சுவைப் பயிர்களான மஞ்சள், மிளகாய், சுருமிளகு, வெனிலா போன்றவற்றின் சாகுபடி பரப்பை அதிகரிக்கும் நோக்கோடு 25 விழுக்காடு மானியத்தில் செடிகள் வழங்கப்படுகிறது. இந்நிதியாண்டில் சேலம் மாவட்டத்திற்கு 230 ஹெக்டேர் பரப்பு நிர்ணயிக்கப்பட்டு ரூ. 6,750/- இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. செயல் விளக்கம்.**

இத்திட்டத்தில் 210 செயல் விளக்க பாத்திகள் அமைக்க இந்நிதியாண்டில் ரூ. 1,699 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. தோட்டக்கலைப் பண்ணைகளில் நறுமண சுவைப் பயிர்ச் செடிகள் உற்பத்திக்காக அடிப்படை கட்டமைப்பு வசதி ஏற்படுத்துதல்.**

இவ்வினத்தின்கீழ் சேலம் மாவட்டத்திற்கு ரூ. 5.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளிக்கப்பட்டுள்ளது.

**89—**

**சொட்டு நீர்ப்பாசனம்**

**வினா எண் 44210—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

*2003-2004 ஆம் ஆண்டுகளில் சேலம் மாவட்டத்திற்கு சொட்டு நீர்ப்பாசனத் திட்டத்திற்கு அரசு எவ்வளவு நிதி ஒதுக்கியுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2003-2004 ஆம் ஆண்டிற்கு சேலம் மாவட்டத்திற்கு சொட்டு நீர், தெளிப்பு நீர்ப்பாசனத்திற்கு கீழ்க்கண்டவாறு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது:

| **மத்திய நிதி உதவி திட்டம்** | **(இலட்சத்தில்)** |
|---|---|
| சொட்டு நீர்ப்பாசனத் திட்டம் | ரூ. 9.17 இலட்சம். |
| தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டம் | ரூ. 3.69 இலட்சம். |
| **மாநிலத் திட்டம்.** | |
| சொட்டு நீர்ப்பாசனத் திட்டம் | ரூ. 125 இலட்சம். |
| தெளிப்பு நீர்ப்பாசனத் திட்டம். | |

**90—**

## வேப்பங்கன்றுகள் வளர்த்தல்

**வினா எண் 45452—திரு ப. அரசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தும் மரம் வளர்க்கும் திட்டத்தில் வேப்பங்கன்றுகளை மட்டுமே வள்ர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தும் மரம் வளர்க்கும் திட்டத்தில் வேப்பங்கன்றுகளை மட்டுமே வளர்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் விரிவான தரிசு நிலத் திட்டத்தின்கீழ் பல்வேறு மரக்கன்றுகளை நடும் திட்டத்தின்கீழ் வேப்பங்கன்றுகளும் நடவு செய்யப்பட்டு வருகின்றன.



2004 ஜூலை 23]

**91—**

## மயானத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 5479—திரு. மா.ப. ரோகிணி (எ) கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதியிலுள்ள சில இடங்களில் மயானத்திற்கு தடுப்புச்சுவர் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பேரூர் தொகுதியில் பின்வரும் பேரூராட்சிகள் இருக்கின்றன. (1) பேரூர், (2) வேடப்பட்டி, (3) குறிச்சி, (4) குனியமுத்தூர், (5) மதுக்கரை, (6) செட்டிபாளையம். மேற்கண்ட 6 பேரூராட்சிகளில் குறிச்சி பேரூராட்சியில் மட்டும் மயானத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் எரிமேடை ஆகியவை அமைக்கப்பட்டுள்ளன. இதர பேரூராட்சிகளில் போதிய நிதி வசதியின்மையால் தற்போது இப்பணியை செய்ய இயலாது.

**92—**

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 27207—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி. குகைப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்படாமல் நிலுவையிலுள்ள பணி எப்போது நிறைவு பெறும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி, குகைப் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின் கட்டுமானப் பணி முடிக்கப்பட்டு 15-5-2003 நாள் முதல் இத்தொட்டியிலிருந்து பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

**93—**

## படப்பிடிப்பு நடத்த அனுமதி

**வினா எண் 31176—திரு. ராதா ரவி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) உதகமண்டலத்தில் குறிப்பிட்ட இரண்டு இடங்களில் மட்டுமே படப்பிடிப்புக்கு அனுமதிக்கப்படுவதை மாற்றி அனைத்து இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த அனுமதி அளிக்க வகை செய்யும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உதகமண்டலத்தில் தமிழகம் கட்டடத்தைத் தவிர, அனைத்து அரசின் படப்பிடிப்பு இடங்களுக்கும் மற்றும் வனப்பிரிவு இடங்களுக்கும் மட்டும் முதன்மை தலைமை வனப் பாதுகாவலரின் தடையின்மை சான்றிதழுடன் செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநரால் அனுமதி ஆணை வழங்கப்படுகிறது.

**94—**

## சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்

**வினா எண் 35635—திருமதி மல்லிகா சின்னசாமி:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியில் கல்லூரி சாலையிலுள்ள குப்பைக் கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றி, அப்பகுதி மக்களின் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி பேரூராட்சியின் குப்பைக் கூளங்களை பேரூராட்சி தோன்றிய காலத்தில் இருந்து முசிறி கிராமம் கிழக்கு புல எண் 11/3-ல் 4.27 ஏக்கர் நிலத்தில் சேகரித்து வரப்படுகிறது. இந்த இடத்தினை முசிறி கோட்டாட்சியர் அவர்களிடமிருந்து கலவை உரக்கிடங்கு பயன்பாட்டிற்கு என தெரிவித்து நிலம் கிரயத்திற்கு பெறப்பட்டுள்ளது. இந்நிலம் வாங்கியபோது இப்பகுதி பேரூராட்சியின் குடியிருப்புப் பகுதிக்கு அப்பாற்பட்டு இருந்துள்ளது. கடந்த ஏழு, எட்டு ஆண்டுகளாக கலவை உரக்கிடங்கினை சுற்றிலும் குடியிருப்புப் பகுதி விஸ்தரிப்பு ஆகியுள்ளது. கலவை உரக்கிடங்கில் தற்போது கலவை உரம் ஏதும் தயாரிக்கப்படுவதில்லை. ஏனெனில், மனிதக் கழிவுகளை மனிதனால் அப்புறப்படுத்தும் பணி அறவே நிறுத்தம் செய்து விட்டபடியால் வெறும் குப்பைக் கூளங்கள் மட்டுமே சேகரிப்படுகிறது. உரக்கிடங்கிற்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது. குப்பைக் கூளங்களை குடியிருப்புப் பகுதிக்கு அப்பாற்பட்ட மாற்று இடத்தில் சேகரிக்க பேரூராட்சிக்குச் சொந்தமான இடமோ அல்லது புறம்போக்கு இடமோ ஏதும் இல்லை. இதனால், கலவை உரக்கிடங்கினை சுற்றிலும் உள்ள பகுதி மக்களின் சுகாதாரம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு ஏதும் இல்லை. எனவே, மேற்படி குப்பைக் கிடங்கை வேறு இடத்திற்கு மாற்றும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**95—**

## காப்பாளர் பணி நியமனம்

**வினா எண் 37770—திரு. சோ. இராசேந்திரன்:** *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2004 ஜூலை 23

(அ) விருதுநகர் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த இல்லத்தில் காப்பாளர் நியமிக்கப்படுவாரா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 7 நினைவகங்களில் காப்பாளர் (caretaker) பணியிடங்கள் காலியாக உள்ளன. இத்துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் வரவேற்பாளர்/வழிகாட்டியாகப் பணிபுரிந்து வருபவர்களைப் பதவி உயர்வு மூலம் நிரப்புதல் வேண்டும். அதனால் ஏற்படும் வரவேற்பாளர்/வழிகாட்டி காலியிடங்களை நேரடி நியமனம் மூலம்தான் மேற்கொள்ள இயலும். தற்போது நேரடி நியமனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடை நீக்கப்பட்டவுடன் வழிகாட்டிகளை (Guide) காப்பாளர்களாக பதவி உயர்வு அளிக்க அரசால் பரிசீலனை செய்யப்படும். நினைவகங்களில் பணிபுரியும் வழிகாட்டிகள் காப்பாளராகப் பதவி உயர்வு செய்ய வேண்டி தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் இறுதியாணை பிறப்பிக்கப்பட்டதும் நினைவகங்களில் காலியாகவுள்ள காப்பாளர் பணியிடங்களை நிரப்ப அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**96—**

## காப்பாளர் பணியிடத்தை நிரப்புதல்

**வினா எண் 37771—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எட்டயபுரம் மகாகவி பாரதியார் பிறந்த இல்லத்தில் காப்பாளர் பணியை நிரப்ப அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 7 நினைவகங்களில் காப்பாளர் (caretaker) பணியிடங்கள் காலியாக உள்ளன. இத்துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் வரவேற்பாளர்/வழிகாட்டியாகப் பணிபுரிந்து வருபவர்களைப் பதவி உயர்வு மூலம் நிரப்புதல் வேண்டும். அதனால் ஏற்படும் வரவேற்பாளர்/வழிகாட்டி காலியிடங்களை நேரடி நியமனம் மூலம்தான் மேற்கொள்ள இயலும். தற்போது நேரடி நியமனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடை நீக்கப்பட்டவுடன் வழிகாட்டிகளை (Guide) காப்பாளர்களாக பதவி உயர்வு அளிக்க அரசால் பரிசீலனை செய்யப்படும். நினைவகங்களில் பணிபுரியும் வழிகாட்டிகள் காப்பாளராகப் பதவி உயர்வு செய்ய வேண்டி தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் இறுதியாணை பிறப்பிக்கப்பட்டதும் நினைவகங்களில் காலியாகவுள்ள காப்பாளர் பணியிடங்களை நிரப்ப அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**97—**

## காப்பாளர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 37772—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி, காந்தி மணிமண்டபத்தில் காப்பாளர் பணியிடம் காலியாக உள்ளதை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செய்தி—மக்கள் தொடர்புத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள 7 நினைவகங்களில் காப்பாளர் (caretaker)

பணியிடங்கள் காலியாக உள்ளன. இத்துறையில் உள்ள பல்வேறு அலுவலகங்களில் வரவேற்பாளர்/வழிகாட்டியாகப் பணிபுரிந்து வருபவர்களைப் பதவி உயர்வு மூலம் நிரப்புதல் வேண்டும். அதனால் ஏற்படும் வரவேற்பாளர்/வழிகாட்டி காலியிடங்களை நேரடி நியமனம் மூலம்தான் மேற்கொள்ள இயலும். தற்போது நேரடி நியமனங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்தத் தடை நீக்கப்பட்டவுடன் வழிகாட்டிகளை (Guide) காப்பாளர்களாக பதவி உயர்வு அளிக்க அரசால் பரிசீலனை செய்யப்படும். நினைவகங்களில் பணிபுரியும் வழிகாட்டிகள் காப்பாளராகப் பதவி உயர்வு செய்ய வேண்டி தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இவ்வழக்கில் இறுதியாணை பிறப்பிக்கப்பட்டதும் நினைவகங்களில் காலியாகவுள்ள காப்பாளர் பணியிடங்களை நிரப்ப அரசால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**98—**

## திரையரங்கு கட்டணம் வசூல்

**வினா எண் 42961—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு நிர்ணயிக்கும் கட்டணத்திற்கு அதிகமாக வசூலிக்கும் தமிழக திரையரங்குகளின் உரிமையாளர்கள் மீது அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரசு நிர்ணயிக்கும் கட்டணத்திற்கு அதிகமாக வசூல் செய்யும் திரையரங்க உரிமதாரர்கள் மீது 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் (ஒழுங்கு முறை) விதி எண். 83-ன்படியும் மற்றும் 'சி' படிவ உரிம நிபந்தனை 6-ன்படியும் உரிய நடவடிக்கை எடுக்கப்படுகின்றன. இத்தகைய குற்றம் புரியும் திரையரங்க உரிமதாரர்கள் மீது உரிமம் வழங்கும் அதிகாரியால் (மாவட்ட ஆட்சித் தலைவர்கள்) அபராதம் வசூலித்தல், இணக்கத் தொகை வசூலித்தல் மற்றும் 'சி' படிவ உரிமம் தற்காலிக நிறுத்தம் செய்தல் போன்ற தண்டனைகள் விதிக்கப்படுகின்றன.



**99—**

## சுற்றுச் சுவர் அமைத்தல்

**வினா எண் 44859—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரம், எருமாபாளையம், குப்பைமேட்டைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சியின் நிதிநிலைமை சரியில்லாத காரணத்தால் சேலம் மாநகராட்சி, எருமாபாளையம், குப்பைமேட்டைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க இயலாது. எனினும் சட்டமன்ற/பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக நிதிஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் சுற்றுச்சுவர் கட்டுவது குறித்து பரிசீலனை செய்யலாம்.

**100—**

## பயிற்சி மேம்பாட்டிற்கு நிதியுதவி

**வினா எண் 38294—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் இளைஞர்களின் செயல்பாடுகள் மற்றும் பயிற்சி மேம்பாட்டிற்கு நிதி உதவி வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை வழங்கப்படுகிறது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் இளைஞர்களின் செயல்பாடுகள் மற்றும் பயிற்சி மேம்பாட்டிற்கு நிதி உதவி வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

## பட்டியல் 4

1—

### சாலை மேம்பாட்டுப் பணிகள்

**வினா எண் 15759—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஒன்றியத்தில் நபார்டு திட்டத்தின்கீழ், சாலை மேம்பாட்டுப் பணிகளை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின்மூலம் நிறைவேற்ற, அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மிகவும் பழுதடைந்த பகுதிகளான மொத்தம் 14.8 கி.மீ. நீளமுள்ள சாலையை, நபார்டு ஆர்.ஐ.டி.எப். 8 திட்டம் 41-ல் எடுத்து, மேம்பாடு செய்வதற்கு அரசின் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வேலைக்கு ரூ.98.00 இலட்சத்திற்குத் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு, 15-11-2002 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளிக்கு ஒப்புதல் அளிக்கப்பெற்றவுடன், வேலை செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.



2004 ஜூலை 23]

2—

### சாலையைச் செப்பனிடுதல்

**வினா எண் 17900—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி உட்கோட்டம், மதுரை-தேனி சாலையிலிருந்து பிரிந்து, வலங்காகுளம் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது, இத்துறையின் பராமரிப்பில் உள்ள இதர மாவட்டச் சாலையான மதுரை-தேனி சாலையில் கி.மீ. 28/2-ல் பிரிந்து, வலங்காகுளம் செல்லும் சாலை கி.மீ. 0/0-2/0 ஆகும். இச்சாலையில் கி.மீ. 1/0-2/0 வரை இதர மாவட்டச் சாலைகள் மேம்பாடு திட்டம் I-ல் ரூ.4.80 இலட்சத்திற்குப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கி.மீ. 0/0-1/0 வரை சாலையினைச் செப்பனிட, இதர மாவட்டச் சாலைகள் மேம்பாடு திட்டம் III-ல் ரூ.5.50 இலட்சத்திற்குக் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளது.

3—

### கணிப்பொறி வழங்குதல்

**வினா எண் 25261—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்குக் கணிப்பொறி வழங்கி விரைவாக நகல்கள், சான்றுகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜுலை 23

**விடை—**

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் சார்பதிவகம் பதிவுத் துறை, கணினிமயமாக்கல் திட்டம்-III-ன்படி, நடப்பு நிதி ஆண்டில் கணினிமயமாக்கப்பட உள்ளது. கணினிமயமாக்கப்பட்டவுடன், வில்லங்கச் சான்றுகள், சான்றிட்ட நகல்கள் ஆகியவை உடனுக்குடன் வழங்கப்படும்.

**4—**

**பரிசு கோரப்படாத தொகைகள்**

**வினா எண் 32131—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுகளின் பரிசு கிடைத்தும், அதனைப் பெறாத தொகைகள் உள்ளனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

1993-94 ஆம் ஆண்டு முதல் 2002-03 ஆம் ஆண்டு வரையிலான காலத்தில் நடைபெற்ற பரிசுச் சீட்டு குலுக்கல்களில் பரிசு கிடைத்தும், அதனைக் கோரிப் பெறாத இனங்களின்கீழான மொத்தத் தொகை, ரூ.23,84,66,440/- ஆகும். ஆண்டுவாரியான தொகை விவரங்கள் இணைப்பு-I-ல் அளிக்கப்பட்டுள்ளன.

2. பொதுவாக, பரிசு கோரிப் பெறப்படும் விண்ணப்பங்களைப் பொறுத்தவரை, பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு, கருவூலங்களிலிருந்து தொகை பெறப்பட்டு, அவ்விண்ணப்பங்கள் தீர்வு செய்யப்பட்டு வந்தன. குலுக்கல்களில் பரிசு கிடைத்தும் கோரப்படாத இனங்களுக்கு என்று தனியாக தொகை ஏதும் பராமரிக்கப்படுவதில்லை. அவ்வாறு கோரிக்கைகள், தக்க விதிகளுக்குட்பட்டு அனுமதிக்கப்படும்பொழுது, போதிய நிதி ஒதுக்கம் செய்யப்பட்டு பட்டுவாடா செய்யப்படும்.



2004 ஜுலை 23]

**இணைப்பு-1**

1993-94 ஆம் ஆண்டு முதல் 2002-03 ஆம் ஆண்டு வரை குலுக்கல்களில் பரிசு விழுந்தும் அதனைக் கோரிப் பெறாத பரிசுத் தொகையின் ஆண்டு வாரியான விவரங்கள்:

| வ.எண் | ஆண்டு | பரிசு கோரப்படாத தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1 | 1993-94 | 66,17,495 |
| 2 | 1994-95 | 1,16,42,615 |
| 3 | 1995-96 | 82,36,530 |
| 4 | 1996-97 | 3,23,75,045 |
| 5 | 1997-98 | 2,00,14,270 |
| 6 | 1998-99 | 3,74,61,864 |
| 7 | 1999-2000 | 4,26,48,240 |
| 8 | 2000-01 | 3,91,07,350 |
| 9 | 2001-02 | 2,31,15,064 |
| 10 | 2002-03 | 1,72,47,967 |
| | மொத்தம் | **23,84,66,440** |

**இணைப்பு-2**

**விளக்கக் குறிப்பு**

தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டு (ஒழுங்கு முறை) விதிகள், 2002, விதி எண் 16 துணை விதி 4-ன்படி, குலுக்கல் முடிந்த 60 நாட்களுக்குள் பரிசு விழுந்த சீட்டின் உரிமையாளர் பரிசு பெறுவதற்கான கோரிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும். முகவர்களுக்கு மட்டும் பரிசைப் பெற மேற்கண்ட 60 நாட்களுக்கு மேல், மேலும் 15 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படுகிறது. அந்தக் கால அவகாசத்திற்குப் பின், பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

[2004 ஜூலை 23

துணை விதி (15)-ன்படி மேற்குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் கோரப்படாத பரிசுத் தொகைகள் அனைத்தும் அரசுக்குச் சொந்தமாகிவிடும். எனவே, விதிமுறைகளுக்குட்பட்டு கோரப்படும் பரிசுத் தொகைகள் மட்டும் அரசுக் கணக்கிலிருந்து முறைப்படி கருவூலங்களில் இருந்து பெற்று வழங்கப்படுகின்றன. கோரப்படாத தொகைகள் ஏதும் தனியாக பராமரிக்கப்படுவதில்லை என்பதால் இவ்வினங்களின்கீழ் மொத்தத் தொகை ஏதும், தனிக் கணக்கில் அரசின் கையிருப்பில் இல்லை.

**5—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 26915—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென் சங்கம்பாளையம் ஊராட்சியில், 15 தெரு விளக்குகள் தேவைப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தெரு விளக்குகள் அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட தென் சங்கம்பாளையம் பகுதிக்குத் தெரு மின் விளக்கு அமைக்க, விண்ணப்பம் ஏதும் இதுநாள்வரையிலும் பெறப்படவில்லை.

(ஆ) தெரு மின் விளக்கு அமைக்க, விண்ணப்பம் பெறப்பட்டவுடன் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, மதிப்பீடு தொகை செலுத்த தொடர்புடைய பஞ்சாயத்திற்குத் தெரிவிக்கப்படும். மதிப்பீட்டுத் தொகை பெறப்பட்டவுடன் தெரு மின் விளக்கு அமைக்க உரிய வாரிய நடவடிக்கை எடுக்கப்படும்.



2004 ஜூலை 23]

**6—**

## மின் கட்டண வசூல் மையம்

**வினா எண் 41301—திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒரத்தநாடு ஒன்றியம், மேலஉளூர் ஊராட்சியில், மின் கட்டணம் வசூல் செய்ய அலுவலகம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

ஒரத்தநாடு பிரிவு அலுவலகத்திலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் உள்ள மேலஉளூர் கிராமத்தில் மின் கட்டண வசூல் மையம், மேலஉளூர் ஊராட்சி மன்றக் கட்டடத்தில் பிரதி மாதம் 5 ஆம் தேதி செயல்பட்டு வருகிறது.

**7—**

## வேலைவாய்ப்பு

**வினா எண் 43434—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் பகுதியில் கிடைக்கும் இயற்கை எரிவாயு மூலம் மின்சாரம் தயாரிக்கும் தொழிற்சாலைகளில், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரிய விதிமுறைகளின்படி, ஆரம்ப நிலை பணிகளுக்கு மட்டுமே, வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாக பட்டியல்

[2004 ஜூலை 23

பெறப்பட்டு, நேரடி ஆள்சேர்ப்புமூலம் தேர்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தற்போது, 23-11-2001 தேதியிட்ட அரசு ஆணை எம்.எஸ். எண் 463, நிதித் துறையின்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நேரடி ஆள்சேர்ப்புக்கு, நிரந்தர வாரிய நிலை ஆணை எண் 73 (செயலகக் கிளை), நாள் 6-3-2002-ன்படி தடை விதிக்கப்பட்டுள்ளது.

8—

## கோயில் திருப்பணி

**வினா எண் 10816—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், காவேரிபுரம் ஊராட்சி, பாலவாடி கிராமத்திலுள்ள புராதன ஜலகண்டேஸ்வரர், சித்தேஸ்வரர் திருக்கோயில்களின் பழுதடைந்துள்ள கட்டடங்களைச் சீர்செய்து செப்பனிட, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேட்டூர் வட்டம், காவேரிபுரம் கிராமம், பாலவாடி, அருள்மிகு ஜலகண்டேஸ்வரர் திருக்கோயிலுக்கு 2.00 ஏக்கர் புன்செய் நிலம் உள்ளது. இவை தவிர, வேறு சொத்துக்கள் இல்லை. மேற்படி நிலத்தின் மூலமாகவோ, உண்டியல் மற்றும் இதர வகையிலோ, இத்திருக்கோயிலுக்கு வருமானம் வரப் பெறவில்லை. இதேபோல், பாலவாடி அருள்மிகு சித்தேஸ்வரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களோ, இதர சொத்துக்களோ ஏதும் இல்லாததால், இத்திருக்கோயிலுக்கும் எவ்வகை வருமானமும் வரப் பெறவில்லை. மேற்கண்ட இரண்டு கோயில்களுக்கும் திருப்பணி செய்திட, தலா ரூ.10.00 இலட்சம் வரை செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.



2004 ஜூலை 23]

திருக்கோயிலுக்கு எவ்வித வருமானமும் இல்லாததால், திருக்கோயில் நிதியிலிருந்து திருப்பணிகளைச் செய்திட வழிவகை ஏதும் இல்லை. எனவே, இவ்விரண்டு திருக்கோயில்களுக்கும் திருப்பணிக் குழு அமைத்துத் திருப்பணிகளை உபயப் பணியாகச் செய்திட, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9—

## அன்னதானத் திட்டம்

**வினா எண் 41609—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி கோயில்களில், ஏதாவது ஒன்றை அன்னதானத் திட்டத்தில் சேர்க்கும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை வட்டம் மற்றும் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் தொகுதியிலுள்ள எந்தத் திருக்கோயில்களிலும் அன்னதானத் திட்டம் செயல்படுத்த, போதிய வருவாய் மற்றும் தினசரி பக்தர்கள் வருகை அதிகம் இல்லை என்பதால், வால்பாறை தொகுதியில் எந்தவொரு திருக்கோயிலிலும் அன்னதானத் திட்டம் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

10—

## கோயில் திருப்பணி

**வினா எண் 41984—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

சேலம் மாவட்டம், மேச்சேரியிலுள்ள அருள்மிகு பத்திரகாளியம்மன் கோயிலின் திருப்பணி எந்நிலையில் உள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், மேச்சேரியிலுள்ள அருள்மிகு பத்திரகாளியம்மன் கோயிலின் திருப்பணி வேலைகள் விவரம் பின்வருமாறு:

**உபயப் பணிகள்:**

1. ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டும் பணி, ரூ.68,25,000/- மதிப்பீட்டில் உபயப் பணியாக இறையருள் நற்பணி மன்றத்தினரால் செய்ய துவங்கப்பட்டு, கட்டி முடிக்கப்பட்டு, வர்ண பூச்சு வேலைகள் மட்டும் எஞ்சியுள்ளன.

2. மேற்கு நுழைவு வாயில் அமைக்கும் பணி, ரூ.98,000/- மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

3. தெற்கு நுழைவு வாயில் அமைக்கும் பணி, ரூ.88,000/-மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளது.

4. வசந்த மண்டபம், ரூ.4,77,000/- மதிப்பீட்டில் உபயதாரர் மூலம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**திருக்கோயில் நிதி மூலம் நடைபெறும் பணிகள்:**

1. திருக்கோயில் பிரகார மதிற்சுவர் மற்றும் மண்டபம் அமைத்தல் பணி, ரூ.16,47,486/- மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றது. 60 பணிகள் முடிவு பெற்றுள்ளன.

2. இராஜகோபுரம் வலது மற்றும் இடதுபுற பாதுகாப்புச் சுவர் அமைக்கும் பணிகள், முறையே ரூ.92,000/- மற்றும் ரூ.90,000/- மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

3. வெளிப் பிரகாரத்தில் கருங்கல் பரவுதல் மற்றும் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத்தொட்டி அமைத்தல், ரூ.2,40,000/- மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்டுள்ளன.



2004 ஜூலை 23]

இராஜகோபுரத்தில் வர்ணம் பூசுதலும், மீதமுள்ள திருக்கோயில் பிரகார மதிற்சுவர் மற்றும் மண்டபப் பணிகள் இன்னும் 6 மாதத்தில் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளன.

11—

## நடுநிலைப் பள்ளிக்குக் குடிநீர் வசதி

**வினா எண் 20881—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, வழுதலம்பட்டு திருமுருகன் அரசு நடுநிலைப் பள்ளிக்கு, அரசு, குடிநீர் வசதி ஏற்படுத்தித் தர முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, திருமுருகன் அரசு நடுநிலைப் பள்ளி, வழுதலம்பட்டு என்ற பெயரில் பள்ளி இல்லை. ஆர்.சி. துவக்கப் பள்ளி, வழுதலம்பட்டு என்ற பள்ளியில் குடிநீர் வசதி ஏற்கெனவே உள்ளது. உதவி பெறும் திருமுருகன் நடுநிலைப் பள்ளி, வி. புதுக்குப்பம் என்ற பெயரில் பள்ளி உள்ளது. இப்பள்ளியிலும், குடிநீர் வசதி ஏற்கெனவே உள்ளது. மேற்படி 2 பள்ளிகளிலுமே குடிநீர் வசதி, ஏற்கெனவே உள்ளதால் இவற்றுக்குப் புதிதாக அரசு, குடிநீர் வசதி ஏற்படுத்தித் தரவேண்டிய நிலையில் இல்லை.

12—

## பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 20937—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், சக்கரப்ப நாயக்கனூர் பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித் தர, அரசு முன்வருமா?

[2004 ஜூலை 23

விடை—

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், சக்கரப்ப நாயக்கனூர் பஞ்சாயத்து ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு 2002-2003 ஆம் நிதியாண்டில் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில், இரண்டு வகுப்பறைக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பள்ளி மாணவர்களுக்குப் போதுமான கட்டட வசதி உள்ளது.

13—

**நூல் நிலையம் அமைத்தல்**

**வினா எண் 32691—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் அல்லது இச்சடியில் நூல் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, புதுக்கோட்டை ஒன்றியம், வடவாளம் ஊராட்சி, வடவாளம் கிராமத்தில் 26-8-1997 முதல் ஊர்ப்புற நூலகம் செயல்பட்டு வருகிறது. "இச்சடி" என்ற கிராமம், வடவாளம் பஞ்சாயத்துடன் சேர்ந்தது ஆகும். இக்கிராமத்தின் மக்கள் தொகை சுமார் 150 மட்டுமே ஆகும். எனவே, மக்கள் தொகையின் அடிப்படையில் இக்கிராமத்தில் பகுதிநேர நூலகம்கூட திறக்க இயலாது.

14—

**நூலகம் அமைத்தல்**

**வினா எண் 32864—திரு. ஏ. பூவராகமூர்த்தி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) அச்சிறுப்பாக்கம் தொகுதி, சித்தாமூரில் நூலகம் ஒன்றை அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், அச்சிறுப்பாக்கம் தொகுதி, சித்தாமூரில் பகுதிநேர நூலகம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

15—

**நூலகத்தை விரிவுபடுத்துதல்**

**வினா எண் 33776—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகர், நாடிமுத்து நகரிலுள்ள நூலகத்தை விரிவுப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை நகர், நாடிமுத்து நகரிலுள்ள நூலகக் கட்டடம், தற்போது போதிய இடவசதியுடன் உள்ளதால், அதனை விரிவுபடுத்த திட்டம் ஏதும் இல்லை.

16—

**பள்ளியைத் தரம் உயர்த்துதல்**

**வினா எண் 35013—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, குன்னம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்றி அமைத்திட, அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) அரசாணை (நிலை) எண் 119, பள்ளிக் கல்வி, நாள் 1-10-2003-ன்படி சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், குன்னம் பெரம்பூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியை, நடுநிலைப் பள்ளியாக நிலை உயர்த்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**17—**

## நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 35692—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருகோகர்ணம், மகாராஜபுரம் நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருகோகர்ணம், மகாராஜபுரம் நூலகத்திற்கு காலிமனை கிடைக்கப்பெறாததால், சொந்தக் கட்டடம் கட்ட இயலவில்லை. அப்பகுதி மக்கள் காலிமனை இடம் வழங்கினால், கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**18—**

## பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 36730—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில், திருக்கழுக்குன்றம் ஊராட்சி ஒன்றியத்தில், குன்னத்தூர் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட, அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கற்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் ஒன்றியத்தில் உள்ள குன்னத்தூர் கிராமத்தில், ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இன்றைய நிலையில் குன்னத்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில், 117 மாணவ மாணவியர் பயின்று வருகின்றனர். இப்பள்ளியை நடுநிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த கோரிக்கை ஏதும் பெறப்படவில்லை. குன்னத்தூர் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு மூன்று கட்டடங்கள் உள்ளன. மேற்படி பள்ளியில், 400 மாணவ மாணவியர் பயிலும் அளவுக்குப் போதுமான கட்டட வசதியும், இடவசதியும் உள்ளன. எனவே, தற்போதைய நிலையில் இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடத்திற்கான தேவை ஏற்படவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**19—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 39119—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சியில் நூலகம் அமைக்க வேண்டுமெனில், 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்த அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

நூலகத்தில் உறுப்பினர் ஆவதற்கு நகரப் பகுதிகளில் காப்புத் தொகை ரூ.15/-ம் ஆண்டு சந்தாத் தொகை ரூ.10/-ம் செலுத்த வேண்டும். கிராமப் பகுதிகளில் காப்புத் தொகை ரூ.10/-ம் ஆண்டு சந்தா ரூ.5/-ம் செலுத்த வேண்டும். மேற்கண்ட தொகையைக் கொண்டுதான், ஒரு நூலகம் திறந்து செயல்படுத்த, தொடரும் செலவினங்களான, ஊழியர் சம்பளம், மின் கட்டணம், வாடகை, நாளிதழ்கள், பருவ இதழ்கள், பதிவேடுகள், எழுதுபொருட்கள் முதலியனவும், தொடராச் செலவினங்களான தளவாடங்கள், நூலடுக்குகள் முதலியன வாங்கப்படுகின்றன. எனவே, பொதுமக்கள் ஒத்துழைப்பு உள்ள இடங்களில், நூலகம் திறக்க ஆவன செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு ஒத்துழைப்பு அளிக்கும் இனங்களில் 200 உறுப்பினர்கள் சேருவதும், ஒரு நிபந்தனையாகும். எனவே, ஊராட்சியில் நூலகம் அமைக்க 200 உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையைத் தளர்த்துவதற்கான சாத்தியக்கூறு இல்லை.

**20—**

## நடமாடும் நூல்நிலையம்

**வினா எண் 42301—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டில் துவக்கப்பட்ட நடமாடும் நூல்நிலையம், இவ்வாண்டு எத்தனை வாசகர்களை உறுப்பினராகச் சேர்த்துள்ளது?

(ஆ) பயன்பெறும் பகுதிகள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) செங்கற்பட்டில் துவக்கப்பட்ட நடமாடும் நூல்நிலையம், இவ்வாண்டு 132 வாசகர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளது. இதுவரை சேர்ந்த உறுப்பினர்கள் 597.

(ஆ) செங்கற்பட்டில் நடமாடும் நூல்நிலையத்தால் ஒரு மாதத்தில் 34 ஊர்கள் பயன்பெறுகின்றன. மேலும், ஒரு நாளைக்குச் சராசரியாக 5 ஊர்களுக்கு நடமாடும் நூல்நிலைய வண்டி செல்கிறது.



**21—**

## நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 43092—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டையிலுள்ள நூலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கந்தர்வக்கோட்டை கிளை நூலகத்திற்கு, 18-6-2003-ல் 3 சென்ட் இடம், பத்திரப்பதிவு செய்து தரப்பட்டுள்ளது தற்போது, நூலக நிதி வசதி திருப்திகரமாக இல்லை. எனவே, நிதிநிலை திருப்திகரமானதும், கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**22—**

## நூலகத்திற்குக் கணினிகள் வழங்குதல்

**வினா எண் 47387—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொல்கத்தாவிலுள்ள இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளையிலிருந்து பொது நூலக வளர்ச்சிக்குப் பெறப்பட்ட இணை மானிய நிதியிலிருந்து நாகப்பட்டினம் மாவட்ட மைய நூலகத்திற்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் கணினிகள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொல்கத்தாவிலுள்ள இராஜாராம் மோகன்ராய் நூலக அறக்கட்டளை இணை மானிய நிதியிலிருந்து நாகப்பட்டின மாவட்ட மைய நூலகத்திற்கு ரூ.5 இலட்சம் மதிப்பில் கணினிகள் வாங்கப்பட்டு, அவை 26-6-2003-ல் அமைக்கப்பட்டுவிட்டன.

[2004 ஜூலை 23

23—

## இலங்கை அகதிகளுக்குச் செலவழிக்கப்பட்ட தொகை

**வினா எண் 50720—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் இலங்கை அகதிகளுக்கு உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகச்சாலை பொருள்களுக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இச்செலவுகள் அனைத்தும் மைய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படுகின்றனவா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் இலங்கை அகதிகளுக்கு உடைகள், கூடாரச் செலவுகள், பண்டகச்சாலை ஆகியவற்றிற்கான செலவு விவரம் கீழ்க்கண்டவாறு:

| வ. எண் | விவரம் | செலவுத் தொகை |
|---|---|---|
| (1) | உடைகள் வழங்கல் | ரூ.3,27,09,844 |
| (2) | மண்டபம், கொட்டப்பட்டு மற்றும் நாகியம்பாடி முகாம் கட்டடங்கள் பழுது பார்த்து, தண்ணீர் வசதிகள் அமைத்தது | ரூ. 17,22,700 |
| (3) | பண்டகச்சாலையில் மானிய விலையில் அரிசி விநியோகம் | ரூ.5,67,71,337 |
| | மொத்தம் | ரூ.9,12,03,881 |

(ஆ) ஆம்.

2002-2003 நிதியாண்டில் செலவிடப்பட்ட தொகை அனைத்தும் மைய அரசிடமிருந்து திரும்பப் பெறப்பட்டுவிட்டது.



2004 ஜூலை 23]

24—

## துணை சுகாதார மையங்களுக்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 43700—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சேத்தங்குடி ஊராட்சி மற்றும் கோணயாம்பட்டினம் பகுதியிலுள்ள துணை சுகாதார மையங்களுக்குக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் துணை சுகாதார நிலையம், விளந்திடசமுத்திரம் ஆகும். சேந்தங்குடி என்ற ஊராட்சி, விளந்திடசமுத்திரம் துணை சுகாதார நிலையத்தைச் சேர்ந்ததாகும். சீர்காழி தொகுதி, திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் துணை சுகாதார நிலையம், கீழாமுவர்கரையாகும். கோணயம்பட்டினம் என்ற பகுதி, கீழாமுவர்கரை துணை சுகாதார நிலையத்தைச் சேர்ந்த பகுதியாகும். விளந்திடசமுத்திரம், கீழாமுவர்கரை ஆகிய இரண்டு துணை சுகாதார நிலையங்களுக்கு அரசுக் கட்டடம் கட்ட, நிலம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு, இடம் கிடைத்தவுடன் துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

25—

## துணை சுகாதார நிலையங்களுக்குக் கட்டடங்கள்

**வினா எண் 43702—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழக்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) சீர்காழி தொகுதி, திருநகரி ஊராட்சி, திருவாலி ஊராட்சி மற்றும் பெருந்தோட்டம் கிழக்குப் பகுதி ஆகிய இடங்களில் துணை சுகாதார மையக் கட்டடங்கள் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ், தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிற (1) திருநகரி, (2) திருவாலி, (3) பெருந்தோட்டம் ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்கு அரசுக் கட்டடங்கள் கட்ட தேவையான இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், கட்டடங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**26—**

## சத்துணவுக் கூடத்திற்குக் கட்டடம்

**வினா எண் 32213—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மங்கைமடம் ஊராட்சி, எம்பாவை ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், மங்கைமடம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு, 1996-97 ஆம் ஆண்டில் ஆர்.சி.சி. கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது சத்துணவு, அக்கட்டடத்தில் இருந்து சமைக்கப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 23]

**27—**

## சத்துணவுக் கூடத்திற்குக் கட்டடம்

**வினா எண் 32216—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கீழசட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர, அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், கீழசட்டநாதபுரம் ஊராட்சி, நிம்மேலி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவு சமையல் கட்டடம், வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டு திட்டத்தின்கீழ், கட்டித்தர ஆவன செய்யப்படும்.

**28—**

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32217—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சுரக்காடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், சட்டநாதபுரம் ஊராட்சி, சுரக்காடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில

[2004 ஜூலை 23

1995-96 ஆம் ஆண்டு மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ஆர்சிசி. சத்துணவு சமையல் கூடக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டு, தற்போது அதில்தான் சத்துணவு சமைக்கப்பட்டு வருகிறது.

**29—**

### சத்துணவுக் கூடத்திற்குக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 32223—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், புளியந்துறை, பளையபாளையம் ஆகிய ஊராட்சியிலுள்ள ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஊராட்சி ஒன்றியம், புளியந்துறை, பளையபாளையம் ஆகிய ஊராட்சிகளிலுள்ள ஒன்றியத் தொடக்கப் பள்ளிகளுக்குச் சத்துணவு மைய நிரந்தரக் கட்டடங்கள் கட்டி வழங்கப்பட்டுள்ளன.

**30—**

### சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 32226—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கடவாசல் ஊராட்சியிலுள்ள ராமகிருஷ்ணா தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர, அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கடவாசல் ஊராட்சியிலுள்ள ராமகிருஷ்ணா நடுநிலைப் பள்ளிக்குத் தனியார் பள்ளி நிர்வாகம், சத்துணவு மையக் கட்டடம் கட்டிப் பராமரித்து வருகிறது. எனவே, அரசு நிதியில் கட்டடம் கட்ட அவசியம் இல்லை.

**31—**

### சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32231—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கீழகரைமேடு ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கீழகரைமேடு ஊராட்சி தொடக்கப் பள்ளியில் சத்துணவு சமையல் கூடம் இல்லை. ஊட்டச்சத்து மையத்தில் சமையல் செய்யப்பட்டு வருகிறது. வரும் நிதியாண்டில், முன்னுரிமை அடிப்படையில், பணி எடுத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**32—**

### சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா எண் 32235—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், படவிளாகம் ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், படவிளாகம் ஆதிதிராவிடர் நலத் துறை பள்ளிக்கு, 2001-2002 ஆம் ஆண்டு ஆர்.சி.சி. கான்கிரீட் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது சத்துணவு சமையல், அதில்தான் சமைக்கப்பட்டு வருகிறது.

33—

சத்துணவுக் கூடம் கட்டுதல்

வினா எண் 32237—திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சேந்தங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், விளந்திடசமுத்திரம் ஊராட்சி, சேந்தங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு, 1996-97 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சத்துணவு சமையல் கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட்டு, தற்போது அதில்தான் சமைக்கப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 23]

34—

சத்துணவுக் கூடம் கட்டுதல்

வினா எண் 32243—திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருப்பங்கூர் ஊராட்சி, தேவிமேனேற் தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூட்டடம் கட்டித்தர, அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருப்பங்கூர் உதவி பெறும் பள்ளிக்குப் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், கட்டடம் கட்டித்தர நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

35—

சத்துணவுக் கூடம் கட்டுதல்

வினா எண் 32245—திரு. நா. சந்திரமோகன்: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தென்னலங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், காரைமேடு ஊராட்சி, தென்னலங்குடி ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு, 2001-2002 ஆம் ஆண்டு கான்கிரீட் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது, அதில்தான் சமையல் சமைக்கப்பட்டு வருகிறது.

36—

## சத்துணவுக் கூடம் அமைத்தல்

**வினா எண் 32249—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தில்லைநத்தம், விளந்திடசமுத்திரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தில்லைநத்தம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்கு, 1996-97 ஆம் ஆண்டு ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், சத்துணவு சமையல் கூடம் கட்டிகொடுக்கப்பட்டு, உணவு சமையல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது.

37—

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32253—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கன்னியாக்குடி ஊராட்சியில் உதவி பெறும் தொடக்கப் பள்ளிக்குப் புதிய சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், கன்னியாக்குடி உதவி பெறும் நடுநிலைப் பள்ளிக்கு, 2002-2003 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தி கீழ் ஆர்.சி.சி. கான்கிரீட் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது, சத்துணவு சமையல் அந்தக் கட்டடத்தில்தான் சமைக்கப்பட்டு வருகிறது.



38—

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32255—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வெள்ளப்பள்ளம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில், சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுத்துறை ஊராட்சி வெள்ளம்பள்ளம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளது. வரும் நிதியாண்டில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

39—

## சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 32258—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், காந்திநகர் ஊராட்சியிலுள்ள ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சி, தாழந்தோண்டியில் (காந்திநகர்), இயங்கிவரும் சத்துணவு மையத்திற்கு நிரந்தர நல்ல கட்டடம் உள்ளது. புதிய கட்டடம் தேவையில்லை.

**40—**

## சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 32295—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஆச்சான்புரம் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளிக்குச் சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித்தர, அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, ஆச்சான்புரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு நிரந்தரக் கட்டடம் உள்ளது. புதிய கட்டடம் தேவையில்லை.

**41—**

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 3337—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், வைகுந்தம் ஊராட்சி, குண்டல்பட்டி அருந்ததியர்களுக்கு அரசு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க ஆவன செய்யுமா?



2004 ஜூலை 23]

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், வைகுந்தம் கிராமம் ச.எண் 115/1-ல், 0.23 ஏக்கர் நிலத்தில் குண்டல்பட்டி கிராம அருந்ததியர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**42—**

## இலவச விட்டுமனைப் பட்டா

**வினா எண் 5523—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை அருகே ஜல்லிப்பட்டி பஞ்சாயத்தைச் சார்ந்த ஓணாக்கல்லூர் கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அருகில் உள்ள நிலத்தைத் தேர்வு செய்து அரசு பட்டா வழங்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், ஜல்லிப்பட்டி கிராமம், ஓணாக்கல்லூரில் வசிக்கும் ஆதிதிராவிட மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க 2.02.5 எக்டேர் நிலம் பொள்ளாச்சி தனி வட்டாட்சியரது தீர்ப்பு எண் 20/92-93-ன்படி கையகப்படுத்தப்பட்டு மேற்படி சாலையில் 153 மனையிடங்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

43—

## பழங்குடியினர் சாதிச் சான்றிதழ்

**வினா எண் 7545—திருமதி செ. சுந்தராம்பாள்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்தில் சின்னதண்டா, பெரியதண்டா, நாய்க்கன் தண்டா, நீதிபுரம் ஆகிய இடங்களில் உள்ள லம்பாடியர் இனத்தைச் சேர்ந்தவர்களுக்குப் பழங்குடியினர் சான்றிதழ் வழங்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

"லம்பாடி" இனம், மைய அரசு வெளியிட்டுள்ள பழங்குடியினர் பட்டியலில் இடம் பெறவில்லை. இவ்வினத்தை மேற்படி பட்டியலில் சேர்த்து மைய அரசு அறிவிக்கை செய்த பின்னரே, இவர்களுக்குப் பழங்குடியினர் சாதிச் சான்று வழங்க இயலும்.

44—

## ஆதிதிராவிடர் நலப் பள்ளிக் கட்டடங்கள் பராமரித்தல்

**வினா எண் 24179—திரு. துரை கி. சரவணன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தொகுதி, கீரைப்பாளையம் மற்றும் காட்டுமன்னார்குடி ஒன்றியத்திலுள்ள ஆதிதிராவிட நலப் பள்ளிக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சீர்படுத்திட நடவடிக்கை எடுக்கப்படுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் கீரைப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்தில் நான்கு ஆதிதிராவிட நலப் பள்ளிகளும், காட்டுமன்னார்கோயில் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு ஆதிதிராவிட நலப் பள்ளிகளும் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. மேலும், பழுதின் தன்மைக்கேற்பவும், நிதிநிலைமைக்கு ஏற்பவும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

45—

## மயானக் கொட்டகை கட்டுதல்

**வினா எண் 34536—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, உமையாள்பதி மேலத்தெரு ஆதிதிராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், உமையாள்பதி மேலத்தெரு ஆதிதிராவிட மக்களுக்கு மயானக் கொட்டகை, வரும் நிதி ஆண்டில் பாராளுமன்ற உறுப்பினர் நிதியில் கட்டிக்கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

46—

## கூடுதல் வகுப்பறை கட்டுதல்

**வினா எண் 35413—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

சீர்காழி தொகுதி, தெண்ணாம்பட்டினம் ஆதிதிராவிட ஆரம்பப் பள்ளியில் வகுப்பறை கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, தெண்ணாம்பட்டினம் ஆதிதிராவிடர் நலத் துறை ஆரம்பப் பள்ளியில், 57 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். இப்பள்ளியில் இரண்டு ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர். இப்பள்ளிக்கு இரண்டு கட்டடங்கள் உள்ளன. இவை, தற்போதுள்ள மாணவர்கள் எண்ணிக்கைக்குப் போதுமானதாக உள்ளதால் கூடுதல் வகுப்பறை கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

47—

**கூடுதல் வகுப்பறை கட்டுதல்**

**வினா எண் 35414—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கீழவரவக்குடி ஆதிதிராவிட ஆரம்பப் பள்ளிக்கு வகுப்பறை கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கீழவரவக்குடி ஆதிதிராவிடர் நலத் தொடக்கப் பள்ளியில் தற்போது 65 மாணவ மாணவியர் கல்வி பயின்று வருகின்றனர். தற்போதுள்ள கட்டடம் மாணவர்களுக்குப் போதுமானதாகும்.

(ஆ) தற்போதுள்ள கட்டடம் போதுமானதாக இருப்பதால், இப்பள்ளிக்கு வகுப்பறை கட்டிக்கொடுக்க வேண்டிய அவசியம் தற்போது இல்லை.



2004 ஜூலை 23]

48—

**ஆதிதிராவிடர் மாணவர்களுக்குத் தட்டச்சுப் பயிற்சி**

**வினா எண் 36442—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டு ஆதிதிராவிட மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ், எத்தனை மாணவர்களுக்கு அரசு தட்டச்சுப் பயிற்சி அளித்தது?

(ஆ) பயிற்சியின்போது, அவர்களுக்கு அரசு வழங்கிய உதவித் தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டு ஆதிதிராவிடர் மாணவர்களுக்குத் தொழிற்பயிற்சித் திட்டத்தின்கீழ் 148 மாணவர்களுக்கு, அரசு, தட்டச்சுப் பயிற்சி அளித்தது.

(ஆ) பயிற்சியின்போது அவர்களுக்கு அரசு வழங்கிய உதவித் தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.150/- ஆகும்.

49—

**ஆதிதிராவிடர் மாணவர் நல விடுதி கட்டுதல்**

**வினா எண் 38683—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரத்தில் ஆதிதிராவிட மாணவர் நல விடுதி கட்டித்தரும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, சுப்பிரமணியபுரத்தில் ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி ஏதும் இயங்காத நிலையில் விடுதி கட்டுவது குறித்தான வினாவிற்கு இடமில்லை.

**50—**

## அறிவியல் ஆய்வுக்கூடம் அமைத்தல்

**வினா எண் 40499—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக்கூடங்கள் அமைத்துத்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நல உயர்நிலைப் பள்ளி ஏதும் இல்லாத நிலையில் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வுக்கூடம் அமைத்துத்தரும் வினாவிற்கு இடமில்லை.

**51—**

## விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள் விவரம்

**வினா எண் 42060—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

செங்கற்பட்டு தொகுதியிலுள்ள ஆதிதிராவிட நலத் துறையின் மாணவர் விடுதிகளில் தங்கிப் பயில்வோர் எத்தனைப் பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டு தொகுதியில் அமைந்துள்ள ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதிகளில் 263 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர்.

**52—**

## ஆதிதிராவிடர் மாணவ மாணவியருக்குத் தங்கும் விடுதிகள்

**வினா எண் 42065—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் பள்ளி மாணவ, மாணவியரின் தங்கும் விடுதிகள் எத்தனை?

*(ஆ)* 2001-2002, 2002-2003-ல் தங்கிப் படித்தவர்கள் எத்தனைப் பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ)* காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள ஆதிதிராவிடர் நலப் பள்ளி மாணவ மாணவியர் தங்கும் விடுதிகள் 39 ஆகும்.

*(ஆ)* 2001-2002-ல் தங்கிப் படித்தவர்கள் - 2,290 பேர்

2002-2003-ல் தங்கிப் படித்தவர்கள் - 2,232 பேர்

**53—**

## விட்டுமனைப் பட்டா வழங்குதல்

**வினா எண் 45987—திரு. ப. அரசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

அறந்தாங்கி தொகுதி, பொன்பேத்தி ஊராட்சி, இறையாமங்கலம் கிராம ஆதிதிராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி வட்டம், இறையாமங்கலம் கிராமத்தில் 68 ஆதிதிராவிடர் குடும்பங்கள் உள்ளன. அதில் 28 குடும்பங்களுக்கு தார்சு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டு பயனாளிகள் குடியிருந்து வருகின்றனர். 16 குடும்பங்கள் தங்களது மனைகளில் ஓட்டு வீடு கட்டிக் குடியிருந்து வருகின்றனர். 24 குடும்பங்கள் தங்களது மனைகளில் கூரை வீடு கட்டிக் குடியிருந்து வருகின்றனர். வீட்டுமனை கோரி இந்தக் கிராமத்திலுள்ள ஆதிதிராவிடர்கள் யாரும் மனு ஏதும் செய்யவில்லை. எனவே, வீட்டுமனை வழங்கக் கருத்துரு நிலுவையில் இல்லை.

**54—**

## மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 49419—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதிதிராவிட நலத் துறையால், வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் மாணவர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 2003-04 ஆம் ஆண்டில் 150 ஆதிதிராவிடர் நல மாணவ மாணவியர் விடுதிகளுக்கு ரூ.47.25 கோடி மதிப்பீட்டில் அரசுக் கட்டடங்கள் கட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை



2004 ஜூலை 23]

அரசாணை (நிலை) எண் 95, நாள் 27-6-2003 மற்றும் அரசாணை எண் 195, நாள் 5-9-2003 ஆகியவற்றில் உரிய ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

(ஆ) தற்போது கட்டடம் கட்டும் பணிகள் துவக்கப்பட்டுள்ளன.

**55—**

## கால்நடை வளர்ப்பை ஊக்குவித்தல்

**வினா எண் 14407—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் விவசாயக் கடன் உதவி அளித்து, கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பாப்பாக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க கடன் நிதியுதவியை, ஏற்கெனவே வழங்கி வருகின்றன. கடந்த 4 ஆண்டுகளில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்கும்பொருட்டு, வழங்கிய கடன்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

| வருடம் | கடன் வழங்கிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெயர் | பயனாளிகள் | தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1999-2000 | அரிகேசவநல்லூர், முக்கூடல், புதுப்பட்டி | 66 | 5.85 |
| 2000-2001 | புதுப்பட்டி | 3 | 0.75 |
| 2001-2002 | அரிகேசவநல்லூர், முக்கூடல் | 32 | 5.24 |

| | | | |
|---|---|---|---|
| 2002-2003 | அரிகேசவநல்லூர், முக்கூடல், புதுப்பட்டி. | 102 | 11.37 |

56—

## கூட்டுறவு சிறப்பு அங்காடி மூலம் விற்பனை

**வினா எண் 17064—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கூட்டுறவு சிறப்பங்காடி மூலம் 'ஏ' கிரேடு புழுங்கல் அரிசி கிலோ ரூ.7 மற்றும் அயோடின் உப்பு, தரமான ஊட்டி டீ ஆகியவை விற்பனை மூலம் அரசுக்கு இலாபம் வருகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் கூட்டுறவு சிறப்பங்காடிகள் மூலம் 'ஏ' தரம் புழுங்கல் அரிசி, அயோடின் உப்பு, ஊட்டி தேயிலை ஆகிய பொருட்களின் விற்பனையால் 31-08-2003 முடிய கூட்டுறவுச் சங்கங்கள் அடைந்த இலாபம் பின்வருமாறு:—

| வ. எண் | பொருட்களின் விவரம் | முதல் | காலம் வரை | விற்கப்பட்டது. (மெடன்) | இலாபத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| 1. | 'ஏ' தரம் அரிசி | ஜூன் 2001 | பிப்ரவரி 2002 | 2046 | 7.16 |
| 2. | அயோடின் உப்பு | மே 2002 | மார்ச் 2003 | 19791 | 87.61 |
| | | மார்ச் 2003 | ஆகஸ்ட் 2003 | 8370 | 37.67 |
| 3. | ஊட்டி தேயிலை | ஆகஸ்ட் 2001 | மார்ச் 2003 | 4241 | 508.92 |
| | | ஏப்ரல் 2003 | ஆகஸ்ட் 2003 | 1089 | 130.68 |



57—

## விவசாயிகளுக்குக் கடன் வழங்குதல்

**வினா எண் 30726—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பாச்சாரப்பாளையம் கிராமத்திலுள்ள விவசாயிகள், இங்குள்ள கூட்டுறவு வங்கியில் சிட்டா அடங்கல் கொடுத்தும் இரண்டு வருடங்கள் கழித்தும் இப்பகுதி மக்களுக்கு எவ்வித கூட்டுறவுக் கடனும் வழங்கப்படவில்லையாதலால், இவர்களுக்குக் கடன் வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி வட்டத்தில் உள்ள பாச்சாரப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைந்துள்ள பாச்சாரப்பாளையம் கிராமத்தில், கடந்த மூன்று ஆண்டுகளாக முன் கடனை பைசல் செய்து புதிய சிட்டா அடங்கல் தாக்கல் செய்த கீழ்க்கண்ட 143 நபர்களுக்கு மறு கடன் வழங்கப்பட்டுள்ளது. கரும்பு, வாழை மற்றும் மரவள்ளி போன்ற இனங்களுக்கு, பயிரிட கடன் வழங்கப்பட்டுள்ளது.

| கடன் வழங்கிய வருடம் | நபர்கள் | நிலப்பரப்பு (ஏக்கர்) | வழங்கிய கடன் தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 2000-01 | 33 | 36.50 | 3,11,499.00 |
| 2001-02 | 24 | 37.80 | 2,97,170.00 |
| 2002-03 | 86 | 146.60 | 15,18,010.00 |
| கூடுதல் .. | 143 | 220.90 | 21,26,679.00 |

[2004 ஜூலை 23

மேலும், பாச்சாரப்பாளையம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைந்துள்ள பாச்சாரப்பாளையம் கிராமத்தில் சிட்டா அடங்கல் கொடுத்து கடன் கோரிய அனைத்து விவசாயிகளுக்கும், வங்கி விதிமுறைகளை அனுசரித்து கடன் வழங்கப்பட்டுள்ளது.

**58—**

## பகுதிநேரக் கடை அமைத்தல்

**வினா எண் 32183—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், வில்லிபாளையம் பொது விநியோகக் கடையைப் பிரித்து பிள்ளைக்களத்தூருக்கு மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள வில்லிபாளையம் தாய் நியாய விலைக் கடையிலிருந்து ஜங்கமநாயக்கன்பட்டியில் 344 குடும்ப அட்டைகளுடன் ஏற்கெனவே ஒரு பகுதிநேரக் கடை 29-10-1999 முதல் செயல்பட்டு வருகிறது. வில்லிபாளையம் தாய் நியாய விலைக் கடையிலிருந்து 2.5 கி.மீ. தொலைவில் உள்ள பிள்ளைக்களத்தூர் பகுதியில் 130 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. பகுதிநேரக் கடைக்கு குடும்ப அட்டைகள் பிரிக்கப்பட்ட பின்னர் தாய்க் கடையில் குறைந்தது 500 குடும்ப அட்டைகள் இருக்க வேண்டும். மற்றும், பகுதிநேரக் கடையுடன் குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால், பிள்ளைக்களத்தூர் பகுதியில் இரண்டாவது பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.



2004 ஜூலை 23]

**59—**

## கூட்டுறவு வங்கியில் கடன்

**வினா எண் 34006—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருக்கழுக்குன்றம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் எத்தனை வகையான கடன்கள் வழங்கப்படுகின்றன?

(ஆ) கடந்த ஆண்டு எவ்வளவு பேருக்குக் கடன் வழங்கப்பட்டது? வழங்கப்பட்ட கடன் மதிப்பு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) திருக்கழுக்குன்றம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் கீழ்க்கண்ட வகையான கடன்கள் வழங்கப்படுகின்றன:

1. குறுகிய காலக் கடன் (பயிர்க் கடன்)
2. மத்திய காலக் கடன்
3. நகைக் கடன்
4. நுகர்பொருள் வாங்கக் கடன்
5. பண்ணைசாராக் கடன்
6. வைப்பின்மீது கடன்
7. மகளிர் சிறுவணிகக் கடன்
8. மகளிர் சுயஉதவிக் குழு கடன்

(ஆ) திருக்கழுக்குன்றம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் 2001-02 ஆம் ஆண்டில் 3735 நபர்களுக்கு ரூ.495.78 இலட்சமும், 2002-2003 ஆம் ஆண்டில் 3947 நபர்களுக்கு ரூ.466.78 இலட்சமும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

60—

### கூட்டுறவு விவசாய வங்கியில் கடன்

**வினா எண் 34053—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியிலுள்ள மேலேரிப்பாக்கம் கூட்டுறவு விவசாய வங்கியில் எத்தனைப் பேருக்குக் கடன் வழங்கப்பட்டது?

(ஆ) கடன் வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மேலேரிப்பாக்கம் கூட்டுறவு விவசாய வங்கியில் 2002-2003 ஆம் ஆண்டில் 173 பேருக்கு குறுகிய காலக் கடனும், 350 பேருக்கு நகைக் கடனும் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் மேலேரிப்பாக்கம் கூட்டுறவு விவசாய வங்கியில், குறுகிய காலக் கடன் ரூ.26.15 இலட்சமும், நகைக் கடன் ரூ.19.28 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளது.

61—

### தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 37319—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், வெள்ளாளக்குண்டம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் (PACB-ல்) நுகர் கடன், 1996-2001-ல் 24 இலட்ச ரூபாய் வழங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளனவா?



(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை அரசு எடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கடன் வழங்கியதில் முறைகேடுகள்' தொடர்பாக, வங்கிப் பணியாளர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

62—

### கூட்டுறவு வேளாண்மை வங்கியின் வளர்ச்சித் திட்டங்கள்

**வினா எண் 37729—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, பச்சூர் ஊராட்சியில் உள்ள கூட்டுறவு வேளாண்மை வங்கியின் வளர்ச்சித் திட்டங்களின் விவரங்கள் என்ன?

(ஆ) அரசு மானியக் கடன் வழங்குவதை நடைமுறைப்படுத்த, அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) நாட்ராம்பள்ளி தொகுதியைச் சார்ந்த பச்சூர் ஊராட்சியில் உள்ள சி.2497 பச்சூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயல்படுத்திவரும் கடன் திட்ட விவரங்களும், இவ்வாண்டில் (2003-2004) செயல்படுத்த உள்ள திட்டக் குறியீடுகளும் கீழே அளிக்கப்பட்டுள்ளன:

| வரிசை எண் | கடன் திட்டம் | திட்டக் குறியீடு (Programme) ரூ. இலட்சத்தில் |
|---|---|---|
| 1. | குறுகிய காலக் கடன்கள் (பயிர்க் கடன்) | 80.00 |
| 2. | மத்திய காலக் கடன்கள் | 15.00 |
| 3. | நகைக் கடன்கள் | 220.00 |

இவற்றுடன். இவ்வங்கி, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்குப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன்களை வழங்கி வருகின்றது.

(ஆ) நாட்றாம்பள்ளி தொகுதியிலுள்ள சி.2497 பச்சூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, 1978 ஆம் ஆண்டு முதல் மானியத்துடன்கூடிய கடன்களை வழங்கி வருகின்றது. 2002-2003 ஆம் ஆண்டில், பச்சூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, 11 மகளிர் சுயஉதவிக் குழுவைச் சார்ந்த 186 உறுப்பினர்களுக்கு ரூ.6.06 இலட்சம் மானியத்துடன் ரூ.12.17 இலட்சத்திற்குக் கடன் வழங்கியுள்ளது. மேலும், 2003-2004 ஆம் ஆண்டில் 16 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு மானியத்துடன் ரூ.14.85 இலட்சம்வரை, கடன்வழங்க திட்டமிட்டு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

**63—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் புதுப்பித்தல்

**வினா எண் 39555—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை ஒன்றியம், குளத்தூர் நாயக்கர்பட்டியில் உள்ள தி.1685 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக் கட்டடம் பழுதடைந்துள்ளது அரசின் கவனத்திற்குத் தெரியுமா?



(ஆ) ஆம் எனில், கட்டடத்தைப் புதுப்பித்துத் தர, அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் நாயக்கர்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டடம், 1984-85 ஆம் ஆண்டில், ரூ. 99,954 செலவில் கட்டப்பட்டது. காலப்போக்கில், வங்கி செயல்படும் கட்டடத்தின் மாடிக்குச் செல்லும் படிகள் மற்றும் சுற்றுச் சுவர் பழுதடைந்துவிட்டன. இதனைச் சீரமைக்க ரூ.20,000/- ஆகும் என, வங்கியால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வங்கியின் 2001-2002 ஆம் ஆண்டுக்கான இறுதித் தணிக்கையின்படி, குவிந்த நட்டமாக ரூ.41.45 இலட்சம் உள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு உத்தேச நிதிநிலை அறிக்கைகளின்படி, குவிந்த நட்டம் ரூ.44 இலட்சம் உள்ளது. மேலும் இவ்வங்கி, புதுக்கோட்டை மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு ரூ.105.75 இலட்சம் செலுத்த வேண்டியுள்ளது. மேற்கூறிய நிலையில், வங்கிக்குச் சொந்த நிதியாதாரங்கள் ஏதுமில்லாததாலும், வங்கியானது தனது சொந்த நிதியிலிருந்து பழுதடைந்த கட்டடத்தைச் சீரமைக்க இயலாத நிலையில் உள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கிக்கு ரூ.105.75 இலட்சம் செலுத்த வேண்டிய நிலையிலுள்ள நிலையில், இவ்வங்கிக்குக் கடன் வழங்க இயலாது என்று அவ்வங்கியும் தெரிவித்துள்ளது.

**64—**

## சிந்தாமணி கூட்டுறவு அங்காடி

**வினா எண் 42504—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் இயங்கிவரும் சிந்தாமணி கூட்டுறவு அங்காடியில், முறைகேடுகள் நடைபெற்று வருவது, அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2004 ஜூலை 23

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையின், சிந்தாமணி வால்பாறை கிளையில், அதில் பணியாற்றிய திருமதி ஏ.ப்பி. மணிமேகலை ரூ.0.83 இலட்சம் அளவுக்கு முறைகேடுகள் புரிந்துள்ளார். இத்தொகையினை வசூலிக்க சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, துணைப் பதிவாளர் அலுவலகத்தில் தாவா நடவடிக்கை (ARC No. 1167/03, நாள் 15-11-2003) எடுக்கப்பட்டுள்ளது. மேலும், இவருக்குச் சொந்தமான ரூ.1.25 இலட்சத்திற்கு மதிப்புள்ள வீட்டைத் தீர்ப்புக்குமுன் ஜப்தி செய்யப்பட்டுள்ளது. மேலும், இப்பணியாளர்மீது ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. முறைகேடு செய்த தொகையினை வசூலிக்க, இதர நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**65—**

## சுற்றுப்புறச் சூழல் பாதுகாத்தல்

**வினா எண் 32139—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் சிமெண்ட் ஆலைகளைச் சுற்றியுள்ள கிராமங்களின் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க, அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் :**

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துத் தொழிற்சாலைகளும், சிமெண்ட் தயாரிக்கும் செயல்முறைகளிலிருந்து வெளிவரும் தூசி மாசினைக் கட்டுப்படுத்த, மின் அணு வீழ்படிப்பான் (Electro Static Precipitator),



பை வடிப்பான் (Bag filter) போன்ற நவீன மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை அமைத்து இயக்கி வருகின்றன. தொழிற்சாலைகளிலிருந்து புகைப்போக்கி வழியாக வெளியேறும் துகள்களின் அளவைக் கண்காணிக்கும்வகையில் புகைப்போக்கி தொடர் கண்காணிப்புக் கருவிகள் (online stack monitor), தொழிற்சாலைகளால் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. மேலும், தொழிற்சாலைகளைச் சுற்றியுள்ள பகுதிகளில் காற்றின் தன்மையைக் (Ambient air quality) கண்காணிக்கும்வகையில் கருவிகள் (High volume sampler) அமைக்கப்பட்டு, காற்றின் தரம் கண்காணிக்கப்படுகின்றது. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியமும், அவ்வப்போது புகை மாதிரி மற்றும் சுற்றுச்சூழல் காற்று மாதிரிகளை எடுத்து ஆய்வுசெய்து கண்காணிக்கின்றது. புகைப்போக்கியிலிருந்து வெளிவரும் புகை மற்றும் சுற்றுச்சூழல் காற்றின் தரம், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் நிர்ணயித்த தர அளவைவிட அதிகமாக இருக்கும்பட்சத்தில், சம்பந்தப்பட்ட தொழிற்சாலைமீது, வாரியம் நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், சிமெண்ட் தொழிற்சாலைகளைச் சுற்றிலும், அடர்ந்த மரங்களை வளர்க்க வேண்டும் என்று வாரியம் அறிவுறுத்தி வருகிறது. அதன்படி, தொழிற்சாலைகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. சிமெண்ட் தொழிற்சாலைகள் அனைத்தும், அந்தந்த மாவட்ட சுற்றுச்சூழல் நலப் பொறியாளர் அவர்களால், அடிக்கடி ஆய்வு செய்யப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருவதால் தமிழ்நாட்டில் சிமெண்ட் ஆலைகளைச் சுற்றியுள்ள கிராமங்களின் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**66—**

## குடிநீர்த் தொட்டி அமைத்தல்

**வினா எண் 41407—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி, கோவிந்தாபுரம் ஊராட்சி, அங்குத்திச் சுனையில் காட்டு விலங்குகளின் குடிநீருக்காகத் தொட்டி அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் வனக் கோட்டத்தில் உள்ள கோவிந்தாபுரம் ஊராட்சியில், கோவிந்தாபுரம் காப்புக் காட்டில் உள்ள அங்குத்திச் சுனையில், வன உயிரினங்களின் குடிநீருக்காகப் புதியதாக தொட்டி அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**67—**

## தொலைபேசி வசதி

**வினா எண் 35654—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, கோயம்பேடு புதிய பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் உபயோகத்திற்குத் தொலைபேசி வசதி, போதுமானதாக உள்ளதா?

(ஆ) இல்லையெனில், அரசு எடுத்த முயற்சி என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சென்னை, கோயம்பேடு பேருந்து நிலைய வளாகத்தில் பி.எஸ்.என்.எல்., தனது அலுவலகத்தில், பொதுமக்கள் தேவைக்குப் பல தொலைபேசிகளை வைத்துள்ளது. மேலும் பல தொலைபேசிகளைப் பேருந்து நிலையத்தின் முக்கிய இடங்களில் பொருத்தியுள்ளது. இதற்கும் மேலாக, அனைத்துக் கடைகளிலும் மக்கள் உபயோகத்திற்காகத் தொலைபேசி வசதிகள் உள்ளன. ஆக மொத்தம், 54 தொலைபேசிகள் (எஸ்.டி.டி.19, பி.சி.ஓ.35) உள்ளன. தற்போதுள்ள இந்தத் தொலைபேசி வசதி போதுமானதாகும்.



**68—**

## சுற்றுச் சுவர் கட்டுதல்

**வினா எண் 12545—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டையிலுள்ள பால் பண்ணைக்குச் சுற்றுச் சுவர் கட்டிக்கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

இல்லை; புதுக்கோட்டை பால் பண்ணையைச் சுற்றி, தற்போது முள் கம்பி வேலி உள்ளது. சுற்றுச் சுவர் கட்ட, போதிய பொருளாதார வசதி இல்லாததால், சுற்றுச் சுவர் கட்டும் திட்டம், தற்போது இல்லை.

**69—**

## குளிர்பதனக் கிடங்கை நவினப்படுத்துதல்

**வினா எண் 47141—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு துறைமுகத்தில் உள்ள குளிர்பதனக் கிடங்கை நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, பழையாறு துறைமுகத்தில் உள்ள குளிர்பதனக் கிடங்கை நவீனப்படுத்தும் திட்டம் அரசிடம் ஏதுமில்லை.

[2004 ஜூலை 23

(ஆ) இக்கேள்வி எழ வாய்ப்பில்லை.

70—

## திட்டப் பணிகளின் விவரம்

**வினா எண் 42115—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில், 2003-2004-ல் சுற்றுலாத் துறையின் மூலம் நிறைவேற்றப்படவுள்ள பணிகளின் விவரம் என்ன?

(ஆ) அதற்கான நிதி ஒதுக்கீடு எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதியில், 2003-2004-ல் சுற்றுலாத் துறையின்மூலம் நிறைவேற்றப்படவுள்ள திட்டப் பணிகள் எதுவும் தற்பொழுது இல்லை.

71—

## பொருட்காட்சி அமைத்தல்

**வினா எண் 47110—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் சுற்றுலாத் துறைமூலம் பொருட்காட்சி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் பொருட்காட்சி நடத்துவது, செய்தித் துறையால் நடைபெறுவதாகும். செய்தித் துறையால் நடைபெறும் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறை கலந்து கொண்டு அரங்கம் அமைத்து, தமிழ்நாட்டின் சுற்றுலா வளம், துறையின் சாதனை மற்றும் செயல்பாடுகளைச் சுற்றுலாப் பயணிகளுக்கும், பொதுமக்களுக்கும் எடுத்துரைக்கப்படுகிறது. வால்பாறையில் சுற்றுலாத் துறையின்மூலம் பொருட்காட்சி நடத்துவது தொடர்பாக, எவ்விதச் செயற்குறிப்பும் தற்பொழுது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

72—

## விற்பனை வளாகம் கட்டுதல்

**வினா எண் 23828—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், உத்தமசோழபுரத்தில், விற்பனை வளாகம் மற்றும் விற்பனைக் குழுமம் அலுவலகம் கட்டும் பணி முடிவு பெற்றுள்ளதா?

(ஆ) இல்லை எனில், இப்பணி எப்போது முடிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், வீரபாண்டி ஒன்றியம், உத்தமசோழபுரத்தில், புதிய கட்டடம் கட்டப்பட்டு, விற்பனைக் குழு மற்றும் ஒழுங்குமுறை விற்பனைக் கூட அலுவலகம், 16-9-2002 முதல் செயல்பட்டு வருகிறது.

[2004 ஜூலை 23

(ஆ) வினா எழவில்லை.

73—

## நான்கு சக்கர வாகனம்

**வினா எண் 36008—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூட அதிகாரிகளுக்கு, புதிய நான்கு சக்கர வாகனம் (ஈப்பு) வாங்கிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரிகளுக்கு, புதிய நான்கு சக்கர வாகனம் (ஈப்பு) வாங்கிக் கொடுக்க, அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) வினா எழாது.

74—

## நெற்களம் அமைத்தல்

**வினா எண் 40702—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சி, ஏனாங்குடி ஆதிதிராவிடர் தெருவில், நெற்களம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, அகணி ஊராட்சி, ஏனாங்குடி ஆதிதிராவிடர் தெருவில், 2003-2004 ஆம் நிதியாண்டில், நெற்களம் கட்டித்தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

75—

## காய்கறிகள் ஏற்றுமதி செய்தல்

**வினா எண் 42559—திரு. டி. மணி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்குக் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றனவா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த நாட்டிற்கு அனுப்பப்படுகிறது?

(இ) அதன்மூலம் மாநில அரசுக்குக் கிடைக்கும் வருவாய் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) மலேசியா, சிங்கப்பூர், ரஷ்யா, புருனே, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இலங்கை, இந்தோனேசியா, ஹாங்காங், மொரிசியஸ், மடகாஸ்கர், இஸ்ரேல், ஸ்பெயின், ஆஸ்திரேலியா, லாட்வியா, ஐக்கிய அரபு நாடுகள், தென் ஆப்பிரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி, பஹரின், மாலத்தீவுகள், கத்தார், சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், குவைத், கென்யா மற்றும் நார்வே ஆகிய நாடுகளுக்குக் காய்கறிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(இ) மாநில அரசுக்கென்று வருவாய் ஏதும் இல்லை. இருப்பினும், விவசாயிகள் பயனடைவதுடன் நமது நாட்டிற்குக் காய்கறி ஏற்றுமதி மூலமாக அந்நியச்செலாவணி கிடைத்து வருகிறது.

[2004 ஜூலை 23

**76—**

**விதை உற்பத்தி செய்தல்**

**வினா எண் 43311—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், டேனிஷ்பேட்டை விதைப் பண்ணையில் 2001-2002 ஆம் ஆண்டு, சிறு தானியம் உற்பத்தி எத்தனை டன் செய்யப்பட்டது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

2001-2002 ஆம் ஆண்டு டேனிஷ்பேட்டை அரசு விதைப் பண்ணையில், 1.50 ஏக்கர் பரப்பில் ஜி.பி.யூ. 28 இராகி பயிரில் 1.250 மெட்ரிக் டன் ஆதார விதை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

**77—**

**குடிநீர்க் குழாய் அமைத்தல்**

**வினா எண் 4249—திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், சக்கராமநல்லூர் பஞ்சாயத்து, மயிலாபுரம் கிராமத்தில், குடிநீர்க் குழாய் அதிகப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், சக்கராமநல்லூர் பேரூராட்சிக்குட்பட்ட மயிலாபுரம் கிராமத்தில், போதிய ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு, போதுமான அளவு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. எனவே, மயிலாபுரம் கிராமத்தில் குடிநீர்க் குழாய் அதிகப்படுத்தும் திட்டம் ஏதுமில்லை.

**78—**

**வாடகை சீருந்து நிறுத்தம் அமைத்தல்**

**வினா எண் 9122—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டம், குன்னூர் நகராட்சி பாலத்தின் அருகே வாடகை சீருந்து நிறுத்தம் அமைக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

குன்னூர் நகராட்சி பேருந்து நிலையத்தின் அருகே சீருந்து நிறுத்தம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**79—**

**குடிநீர் வசதி செய்தல்**

**வினா எண் 10216—திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி பேரூராட்சியில் கடுமையான குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதை அரசு அறியுமா?

[2004 ஜூலை 23

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இக்குறை நீக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவள்ளூர் மாவட்டம். பூந்தமல்லி பேரூராட்சி குடிநீர்ப் பற்றாக்குறையை நீக்க ஸ்ரீபெரும்புதூர்-பூவிருந்தவல்லி-பாலாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம், அரசு ஆணை எண் 160, நாள் 8-11-2000-ன்படி, திட்ட மதிப்பீடு ரூ.9.46 கோடியில் நடைபெற்று வருகிறது.

**80—**

## தொகுப்பு விடுகள் கட்டுதல்

**வினா எண் 15547—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சீதக்கமங்களம் ஊராட்சி, 25, மேலராமன்சேத்தி கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், சீதக்கமங்களம் ஊராட்சியில் 85 தொகுப்பு வீடுகள் கட்டி கொடுக்கப்பட்டுள்ளன. இதில், 25, மேலராமன்சேத்தி கிராமத்தில், 1988-89 ஆம் ஆண்டில் 61 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

**81—**

## கிராம நிர்வாக அலுவலகம் கட்டுதல்

**வினா எண் 23391—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கோட்டை கருங்குளம் பகுதி-II கிராம சாவடியை மிட்டாதார்குளம் கிராமத்தில் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டத்தில், ராதாபுரம் ஒன்றியத்தைச் சேர்ந்த கோட்டை கருங்குளம் பகுதி-II கிராம நிர்வாக அலுவலகம், கோட்டை கருங்குளம் கிராமத்தில் கட்டப்பட்டு வருகிறது. மேற்படி கிராமம் மிட்டாதார்குளம், வடிவம்மன்பட்டி, புதுக்குறிச்சி ஆகிய குக்கிராமங்களுக்கு மத்தியிலும், பேருந்து வசதி கொண்டதாகவும் உள்ளது. மேற்படி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலகம் கட்டுமாறு, கோட்டை கருங்குளம் ஊராட்சித் தலைவர் தெரிவித்துள்ளார். ஊராட்சித் தலைவர் தெரிவித்த இடத்தில் கிராம நிர்வாக அலுவலகம் கட்டுமாறு, சட்டமன்ற உறுப்பினர் தெரிவித்திருப்பதாக திருநெல்வேலி மாவட்ட திட்ட அலுவலர் கூறியுள்ளார். எனவே, கோட்டை கருங்குளம் பகுதி-II கிராம நிர்வாக அலுவலகத்தை, மிட்டாதார்குளத்தில் கட்ட இயலாது என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

**82—**

## பெஞ்சுகளைப் பழுதுபார்த்தல்

**வினா எண் 25696—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள வேட்டைக்காரன்புதூர் பேரூராட்சியிலுள்ள பள்ளிகளிலுள்ள பெஞ்சுகள் உடைந்து உள்ளதை அரசு பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) பேரூராட்சியில் தற்போது போதிய நிதி வசதி இல்லாததால், நிதிநிலை சீரான பின்னர் மேற்படி பள்ளிகளிலுள்ள பெஞ்சுகளைப் பழுதுபார்க்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) கேள்வி எழவில்லை.

**83—**

## கிராம நிர்வாக அலுவலகம் கட்டுதல்

**வினா எண் 26120—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, வேலம்பட்டி ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகம் (விஏஓ) கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியம், வேலம்பட்டி ஊராட்சி கிராம நிர்வாக அலுவலகம் கட்டுவதற்கு 5-1-2004 அன்று ரூ.70,000/- மதிப்பீட்டில், பெண்ணாகரம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், நிதி ஒதுக்கீடு செய்துள்ளமையால் நடப்பு நிதியாண்டில் (2003-2004) இப்பணி நிறைவு செய்யப்படும்.



2004 ஜூலை 23]

**84—**

## தொகுப்பு விடுகள் கட்டுதல்

**வினா எண் 26155—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்தரஅள்ளியில் மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பத்தரஅள்ளியில் 1986-87 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆம் ஆண்டுவரை, ஆதிதிராவிடர்களுக்கு 102 வீடுகளும், இதரர்களுக்கு 16 வீடுகளும் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் நிதியாண்டில், மேற்படி கிராமத்தில் தொகுப்பு வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை.

**85—**

## தொகுப்பு விடுகள்

**வினா எண் 26357—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மாங்கரையில் ஆதிதிராவிடர்களுக்குப் புதிய தொகுப்பு வீடுகள் அமைக்க, அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் ஒன்றியம், மாங்கரை கிராமத்தில் ஆதிதிராவிடர் பயனாளிகளுக்கு, 1985-86 ஆம் ஆண்டில் 26 ஓட்டு வீடுகளும், 1998-99 ஆம் ஆண்டில் 15 தொகுப்பு வீடுகளும் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் மேற்படி கிராமத்தில் தொகுப்பு வீடுகள் ஏதும் கட்டப்படவில்லை.

**86—**

## தெரு விளக்குகள் அமைத்தல்

**வினா எண் 28748—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, தாய்முடி எஸ்டேட் பகுதியில் தெரு விளக்குகள் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பேரூராட்சி, தாய்முடி எஸ்டேட் பகுதிகளில் 5 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டு, நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும், 30 எண்ணிக்கை மின் விளக்குகள் பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து அமைத்துக் கொடுக்க, மதிப்பீடுகள் பெறப்பட்டு நடவடிக்கையில் உள்ளது.



2004 ஜூலை 23]

**87—**

## சாக்கடை வசதி செய்தல்

**வினா எண் 29024—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், நடுவனேரி வேம்படிதாளம் பகுதியில், சாக்கடை வசதி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம், நடுவனேரி பகுதியில் எஸ்.ஜி.ஆர்.ஒய். திட்டத்தில் 2003-04 ஆம் நிதி ஆண்டில் ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில், சாக்கடை வசதி செய்து தரப்பட்டுள்ளது.

**88—**

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 29312—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், 56, வள்ளுவக்குடியில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித்தர அரசிடம் எண்ணம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி ஒன்றியம், 56, வள்ளுவக்குடியில் உள்ள பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு இதுவரை தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. எனினும், 2000-2001 ஆம் ஆண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ், வள்ளுவக்குடி வடக்கு தெரு, ஆதிதிராவிட மக்களுக்கு 10 தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.*

89—

**கிராம நிர்வாக அலுவலகம் கட்டுதல்**

**வினா எண் 29391—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சோதியக்குடி ஊராட்சியில் கிராம நிர்வாக அலுவலகம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், கொள்ளிடம் ஒன்றியம், சோதியக்குடி ஊராட்சி, சோதியக்குடியில் 2002-2003 ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், ரூ.70,000/- மதிப்பீட்டில் கிராம நிர்வாக அலுவலகம் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.*



90—

**தொற்றுநோய் பரவாமல் தடுத்தல்**

**வினா எண் 32856—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலைப்பேட்டை நகரம், இராஜேந்திரா சாலை சந்தையிலும் முன்பக்கமும் மாட்டிறைச்சி கடை உள்ளதால், தொற்று நோய்கள் பரவக்கூடிய நிலையில் உள்ளது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், உடன் நடவடிக்கை எடுக்கப்படுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகரம், இராஜேந்திரா சாலையில் இருந்த 8 மாட்டிறைச்சிக் கடைகள், நவம்பர் 2002-ல் நகராட்சியால் அகற்றப்பட்டுவிட்டன. தற்போது நகராட்சிக்குச் சொந்தமான கட்டடத்தில் ஒரு கடையும், நகராட்சி இடத்தில் ஒரு கடையும், ஆக இரண்டு கடைகள் மட்டும் சந்தையின் முன்பக்கம் நடத்தப்பட்டு வருகின்றன. இக்கடைகளில் தொற்று நோய்கள் பரவக்கூடிய நிலை ஏதும் ஏற்படவில்லை.*

91—

**குப்பைக் கழிவுகள் அகற்றுதல்**

**வினா எண் 33083—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை நகரில் உள்ள சந்தைப்பேட்டையில் கழிவுகளும், குப்பைகளும் தேங்கி, மக்களுக்குச் சுகாதாரக் கேடாக இருப்பது அரசுக்குத் தெரியுமா?*

*(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை நகராட்சி வாரச் சந்தை நடைபெறும் சந்தைப்பேட்டையில் ஏற்படும் திடக்கழிவுகள் (குப்பைக் கழிவுகள்) அவ்வப்போது அப்புறப்படுத்தப்படுகின்றன. மேலும், பிரதி வாரம் செவ்வாய்க்கிழமை, கூட்டுத் துப்புரவுப் பணியின்மூலமாகவும் நகராட்சியால் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. தேக்க நிலை ஏதும் இல்லை.

**92—**

## குடிநீர் விநியோகம் செய்தல்

**வினா எண் 34659—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, பாப்பாபட்டி-காட்டுவளவு கசாப்புகாரர்காடு ரோடு பாலத்திற்குத் தெற்குப் பகுதி (தாசன்வளவு) ஆகிய இடங்களில், ஆழ்துளைக் கிணறு அமைத்து குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட 12-வது வார்டு, தாசன்வளவில் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, அப்பகுதி பொதுமக்களுக்குக் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், அப்பகுதிக்கு, காவிரி பைப்லைன் போட்டு பொது குடிநீர்க் குழாய்மூலம் காவிரி நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது தட்டுப்பாடின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.



**93—**

## கழிப்பிடக் கட்டடங்கள் புதுப்பித்தல்

**வினா எண் 35691—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கழிப்பிடக் கட்டடங்களைப் புதுப்பித்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கழிப்பிடக் கட்டடங்கள், நகராட்சி நிதியிலிருந்து தண்ணீர் வசதியுடன் புதுப்பிக்கப்பட்டு வருகின்றன.

**94—**

## மயானத்திற்குச் சுற்றுச் சுவர் மற்றும் கூரை அமைத்தல்

**வினா எண் 37762—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி ஒன்றியம், பச்சூர் ஊராட்சியில், மாமுடிமானப்பள்ளி கிராமத்தில், சுடுகாடு நிலத்தில், தனியார் ஆக்கிரமிப்புகளை அகற்றி சுற்றுச் சுவர் எழுப்பி, கூரையும் (எரியூட்டுவதற்கு) அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், பச்சூர் ஊராட்சியைச் சேர்ந்த மாமுடிமானப்பள்ளி கிராமத்திலுள்ள சுடுகாட்டில் ஆக்கிரமிப்புகள் நீக்கம் செய்யப்பட்டன. ஆனால், அம்மயானத்திற்குச் சுற்றுச் சுவர் மற்றும் கூரை (எரியூட்டுவதற்கான இடம்) அமைக்க ஊராட்சியில் தற்போது நிதி வசதி இல்லை.

**95—**

## இலவசத் தொகுப்பு வீடுகள் வழங்குதல்

**வினா எண் 38367—செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதி, பாப்பனபள்ளி கிராமப் பஞ்சாயத்தில், இலவசத் தொகுப்பு வீடுகள் வழங்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 2003-04 ஆம் நிதியாண்டில், வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த பாப்பன்பள்ளி கிராம ஊராட்சியில் 10 ஆதிதிராவிடர் இன பயனாளிகளுக்குத் தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**96—**

## சமத்துவபுரம் அமைத்தல்

**வினா எண் 40997—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதி, கல்வராயன்மலை ஒன்றியத்தில், புதியதாக ஒரு சமத்துவபுரம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை.

**97—**

## தொகுப்பு வீடுகள் புதுப்பித்தல்

**வினா எண் 41323—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதியில், 1972-ல் எடக்குடி ஊராட்சியில் கட்டப்பட்ட காலனி வீடுகளைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் உள்ள பழுதினை நீக்கி சரிசெய்ய, மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில்

[2004 ஜூலை 23

இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளைச் சரி செய்ய, தற்போது வாய்ப்பு இல்லை.

98—

**விளையாட்டில் இளைஞர்களுக்கு விழிப்புணர்ச்சி**

**வினா எண் 46358—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் விளையாட்டில் இளைஞர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த, துறைமூலம் விளம்பரம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் விளையாட்டில் இளைஞர்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்த, துறைமூலம் விளம்பரம் செய்ய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

99—

**விளையாட்டு மைதானம் சீரமைத்தல்**

**வினா எண் 46899—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள விளையாட்டு மைதானத்தைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?



2004 ஜூலை 23]

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் உள்ள விளையாட்டு மைதானம், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் கட்டுப்பாட்டில் இல்லாததால், மேற்படி மைதானத்தைச் சீரமைக்க செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

100—

**நீச்சல் குளம் அமைத்தல்**

**வினா எண் 48901—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் நீச்சல் குளம் அமைக்க, அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் நீச்சல் குளம் அமைக்கும் திட்டம், அரசின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

[2004 ஜூலை 23

## பட்டியல் 5

1—

### பத்திரப் பதிவுகள்

**வினா எண் 9593—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டு வரை எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் எவ்வளவு பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்:**

எடப்பாடி சார்பதிவாளர் அலுவலகத்தில் 2000-2001 ஆம் ஆண்டில் 2162 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2—

### கொள்முதல் நிலையங்கள்

**வினா எண் 17134—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் எத்தனை இடங்களில் அரசு நேரடி கொள்முதல் நிலையம் உள்ளது?

(ஆ) அவற்றில் எத்தனை இடங்களில் அரசு நெல் கொள்முதல் கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) தஞ்சை மண்டலத்தில் 130 ஊர்களில் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன.



(ஆ) 83 இடங்களில் அரசு நெல் கொள்முதல் கட்டடம் கட்டிக் கொடுத்துள்ளது.

3—

### நியாய விலைக் கடைகள்

**வினா எண் 21203—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் நியாய விலைக் கடை திறக்கக் கோரி 2001-2002-ல் எத்தனை மனுக்கள் வந்துள்ளன?

(ஆ) அதில் எத்தனை கடைகள் திறக்கப்பட்டு உள்ளன?

(இ) இன்னும் நிலுவையில் உள்ள மனுக்கள் எத்தனை என்பதை அரசு தெரிவிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் 2001-2002 ஆம் ஆண்டில் பகுதிநேர நியாய விலைக் கடைகள் துவக்கக் கோரி 8 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன.

(ஆ) 2001-2002-ல் முழுநேர நியாய விலைக் கடைகள் ஏதும் திறக்கப்படவில்லை. 4 பகுதிநேர நியாய விலைக் கடைகள் கீழ்க்காணும் இடங்களில் திறக்கப்பட்டுள்ளன:

| | | |
|---|---|---|
| (1) இருப்பாளி முலப்பாகை | : | 13-9-2001 |
| (2) தொப்பைக்காடு | : | 21-9-2001 |
| (3) மட்டம்பட்டி | : | 12-10-2001 |
| (4) தானமூர்த்தியூர் | : | 03-10-2002 |

(இ) எஞ்சிய 4 இனங்களில் அரசு விதிகளின்படி சாத்தியக்கூறுகள் இல்லை என்பதால் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன.

4—

## நியாய விலைக் கடைகள்

**வினா எண் 33463—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் மகளிர் அமைப்பு சார்பில் எத்தனை நியாய விலைக் கடைகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

சேலம் மாவட்டத்தில் ஓமலூர் வட்டத்தில் ஒன்பது நியாய விலைக் கடைகளும், மேட்டூர் வட்டத்தில் ஒரு நியாய விலைக் கடையும் ஆக மொத்தம் 10 நியாய விலைக் கடைகள் மகளிர் அமைப்பு சார்பில் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன.

5—

## நெல் கொள்முதல் விவரம்

**வினா எண் 34320—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் எவ்வளவு மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது?

(ஆ) ரகங்கள் வாரியாக விவரம் அறிவிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) குறுவை 2001 பருவத்தில் நெல் கொள்முதல் இல்லை. சம்பா 2001 பருவத்தில் 13645 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. குருவை, சம்பா 2002 பருவத்தில் நெல் கொள்முதல் ஏதுமில்லை.





(ஆ) சம்பா 2001 பருவத்தில் கீழ்க்கண்ட ரகங்கள் நெல் கொள்முதல் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| "ஏ" ரகம் | - | 12201 மெ.டன் |
| "சி" ரகம் | - | 1444 மெ.டன் |
| கூடுதல் | | 13645 மெ.டன் |

6—

## பொது விநியோகம்

**வினா எண் 44366—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரிலுள்ள நியாய விலைக் கடைகளின் மூலமாக வழங்கப்படும் சர்க்கரை, அரிசி, மண்ணெண்ணெய் ஆகிய அனைத்து பொருட்களையும் ஒரே இடத்தில் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகரத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொது விநியோகத் திட்டத்தின்கீழ் சர்க்கரை, அரிசி மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனைத்தும் சீர்காழி நகராட்சி எல்லையில் உள்ள அனைத்து அங்காடிகளிலும் மண்ணெண்ணெய் மட்டும் பங்க் மூலமும் வழங்கப்படுகிறது.

7—

## மின் இணைப்பு வழங்குதல்

**வினா எண் 33102—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட இடங்கள் எத்தனை?

(ஆ) அதன் விபரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் 31-3-2003 வரை 4016 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும், 2003-2004 ஆம் ஆண்டில் 30-6-2003 வரை 89 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கும், ஆக மொத்தம் 30-6-2003 வரை 4105 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்ட எண்ணிக்கை விபரம்.

| தாலுகா | 31-3-2003 வரை வழங்கப்பட்டவை | 2003-04-ல் 30-6-2003 வரை வழங்கப்பட்டவை | 30-6-2003 வரை மொத்தம் மின் இணைப்பு வழங்கப்பட்ட மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| புதுக்கோட்டை | 809 | 12 | 821 |
| திருமயம் | 711 | 13 | 724 |
| குளத்தூர் | 398 | 28 | 426 |
| கந்தர்வக்கோட்டை | 339 | 9 | 348 |
| ஆலங்குடி | 595 | 10 | 605 |
| அறந்தாங்கி | 440 | 8 | 448 |
| ஆவுடையார்கோயில் | 60 | 0 | 60 |



| | | | |
|---|---|---|---|
| இலுப்பூர் | 439 | 9 | 448 |
| மணமேல்குடி | 225 | 0 | 225 |
| மொத்தம் | 4016 | 89 | 4105 |

**8—**

## மரபுசாரா எரிசக்தி

**வினா எண் 41834—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காற்று, சூரிய வெப்பம், உயிரினக் கழிவு இவற்றின் மூலம் கிடைக்கும் எரிசக்தி போன்ற மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களை மேம்படுத்த அரசு எடுத்து வரும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் யாவை?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(1) தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனமும் காற்று, உயிரினக் கழிவு போன்ற ஆதாரங்களிலிருந்து மரபுசாரா எரிசக்தியாக மின்சாரம் தயாரிப்பதைப் பெரிதும் ஊக்கப்படுத்தி வருகின்றன. காற்றாலை மின் சக்தியினை தமிழக மின் வாரியத்திற்கு விற்கவும், முதலீட்டாளருக்கு சொந்தமான/சார்புடைய தொழில் நிறுவனங்களுக்கு கொண்டு சென்று பயன்படுத்தவும் மற்றும் சேமிப்புச் செய்துகொள்ளவும் அனுமதிக்கப்படுகிறது. மேற்கண்ட சலுகைகளைப் பயன்படுத்திக் கொண்டு தனியார் நிறுவனங்கள் 2002-2003 ஆம் ஆண்டில் 13.5 மெ.வாட் அளவிற்கும், 2003-2004 முதல் அரையாண்டில் 110 மெகாவாட் அளவிற்கும் காற்றாலை மின்திட்டங்களை நிறுவியுள்ளனர்.

(2) தனியார் துறை நிறுவனங்கள் சூரிய வெப்பத்தின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்ய இதுவரை 150 கிலோ வாட் அளவுக்கே மின் திட்டங்களை நிறுவியுள்ளன. திட்ட முதலீட்டின் அளவு அதிகமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனமும் கயத்தார்

[2004 ஜூலை 23

என்ற இடத்தில் ஒரு 1.5 கிலோவாட் திறன் கொண்ட ஆலையை நிறுவி இயக்கி வருகிறது. சூரிய ஒளியின் மூலம் குறைவான அடக்க விலையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுமெனில் மேலும் இத்திட்டங்கள் வளர்ச்சி பெறும்.

(3) கோழி எச்சத்தைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கும் இரண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் 40 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

9—

## கோயில் நில ஆக்கிரமிப்பு

**வினா எண் 20527—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பழயனூர் கோயில் இடத்தை சில தனியார் ஆக்கிரமித்து உபயோகித்து வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அவ்விடத்தை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, பழயனூர் கோட்டூர் அருள்மிகு மாகாளியம்மன் திருக்கோயில் மற்றும் அருள்மிகு பள்ளியம்மன் திருக்கோயில் நிலங்களில் தனியார் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை. இரண்டு திருக்கோயில்களுக்கும் சொந்தமான நிலங்களில் ஒரு பகுதி மட்டும் மயானத்திற்கு செல்லும் பாதையாகவே நீண்டகாலமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.



2004 ஜூலை 23]

10—

## திருக்கோயிலில் பக்தர்களுக்கு வசதி

**வினா எண் 40951—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வள்ளிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன. மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி நீரினை மின் மோட்டார் மூலம் மலைக்கோயிலுக்கு கொண்டு சென்று தேவையான குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. மலையேறும் வழியிலும் பக்தர்களுக்கு ஆங்காங்கே குடிநீர்க் குழாய் அமைக்கப்பட்டுள்ளது. தேவையான கழிப்பறை மற்றும் குளியல் அறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மேலும், மலைக்கோயிலுக்கு செல்லும் பக்தர்கள் நலன் கருதி மின் விளக்கு வசதியுடன் படிக்கட்டுகள் மற்றும் தார்ச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

11—

## திருமண மண்டபத்தை செப்பனிடுதல்

**வினா எண் 46299—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறையிலுள்ள சுப்ரமணிய சுவாமி கோயில் திருமண மண்டபத்தைச் செப்பனிட்டு சமையல் அறை, கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், வால்பாறை அருள்மிகு சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் இரண்டு கழிப்பிடங்கள் ஏற்கெனவே உள்ளன. திருமண மண்டபத்தை செப்பனிட்டு சமையல் அறை, குளியலறை வசதிகள் செய்ய உத்தேசமாக ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் உபயதாரர்கள் மூலம் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**12—**

## பெற்றோர்-ஆசிரியர் கழகம்

**வினா எண் 32041—திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிகளில் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் தலைவராக நியமிக்கப்படுவதற்கு என்னென்ன தகுதிகள் நிர்ணயிக்கப்படுகின்றன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 242, கல்வி, நாள் 28-3-94-ல் ஒப்புதல் அளித்துள்ள பள்ளி பெற்றோர்-ஆசிரியர் கழக விதிகளில் விதி எண் (10) 1 மற்றும் (11) 1 ஆகியவற்றில், கழகத்தின் பெற்றோர்/பாதுகாவலரிலிருந்து பொதுக் குழுவால் தலைவர் தேர்ந்தெடுக்கப்படுவார் எனவும், மேலும் பள்ளிக்கு இடம், கட்டடங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்குச் சொந்தப் பணத்தையும், உழைப்பையும் கொடுக்கும் தொண்டுள்ளம் படைத்தவர்களையும் பள்ளிப் பெற்றோர் ஆசிரியர் கழகப் பொதுக் குழுவால் ஏகமனதாகப் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டால், அவரைத் தலைவராக ஏற்றுக் கொள்ளலாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



**13—**

## இலவச சீருடைத் திட்டம்

**வினா எண் 33109—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதியில் இலவச சீருடைத் திட்டம் மூலம் பயன்பெற்ற மாணவ/மாணவியர்கள் எத்தனை பேர்?

(ஆ) அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை தொகுதியில் இலவச சீருடைத் திட்டம் மூலம் 15,633 மாணவர்களும் மற்றும் 15,425 மாணவியர்களும் பயனடைந்துள்ளனர்.

(ஆ) இலவச சீருடை வழங்கும் திட்டத்தின்படி 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சத்துணவு உண்ணும் மாணவ/மாணவியர்க்கு ஒரு ஜோடி இலவச சீருடை வழங்கப்படுகிறது.

**14—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 37139—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, முத்துக்கிருஷ்ணாபுரம் கிராமத்தில் நூலகம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, முத்துகிருஷ்ணாபுரம் கிராமத்தில் ஏற்கெனவே ஒரு பகுதிநேர நூலகம் செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**15—**

**ஊராட்சியில் நூலகம் உருவாக்குதல்**

**வினா எண் 39122—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஊராட்சியில் நூலகம் உருவாக்க 2 புரவலர்கள் ரூ.1000/- செலுத்தவேண்டும் என்கிற நிலையை மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

ஒரு நூலகம் திறந்து செயல்படுத்த நூல்கள், தளவாடங்கள், நாளிதழ், பருவ இதழ், எழுதுபொருட்கள், பதிவேடுகள் வாங்குதல், கட்டட வாடகை, மின்சார செலவினம், சில்லறைச் செலவினம், ஊழியர் சம்பளம் என பல்வேறு செலவினங்கள் உள்ளன. இச்செலவினங்கள் முழுவதையும் நூலக ஆணைக் குழுவால் மேற்கொள்வது பல மாவட்டங்களில் சிரமமாகும். இந்நிலையில் பொதுமக்கள் ஒத்துழைப்பு உள்ள இடங்களில் மட்டுமே இத்தகைய நூலகங்கள் திறக்கப்படுகின்றன. எனவே, நூலகம் அமைக்க 2 புரவலர்கள் என்ற நிலையை மாற்றுவது சிரமமாகும். மேலும் புரவலர்களாக சேருபவர்கள் வழங்கும் நன்கொடை தொகை ரூ.1,000/- நீண்ட கால வைப்பில் முதலீடு செய்யப்பட்டு அதன் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து சம்பந்தப்பட்ட நூலகத்திற்கு பருவ இதழ்கள் வாங்குவதற்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. தவிர புரவலர் நன்கொடை வழங்குபவர்களுக்கு பட்டயமும், நற்சான்றிதழும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்படுகிறார்கள். இந்நிலையில் மேற்படி நிலையை மாற்றியமைக்க சாத்தியக்கூறு இல்லை.



2004 ஜூலை 23]

**16—**

**ஊர்ப்புற நூலகங்கள் விவரம்**

**வினா எண் 42292—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2000-2001 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஊர்ப்புற நூலகங்களில் காஞ்சிபுரம் மாவட்டத்தைத் தவிர மற்ற மாவட்டங்களில் அமைக்கப்பட்டவை எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

2000-2001 ஆம் ஆண்டில் எந்த மாவட்டத்திலும் ஊர்ப்புற நூலகங்கள் அமைக்கப்படவில்லை.

**17—**

**கிராமப்புற பகுதிநேர நூலகம்**

**வினா எண் 43887—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், மோகனூர் ஊராட்சி ஒன்றியம், கூடுதுறை கிராமத்தில் பகுதிநேர கிராமப்புற நூலகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாடு பொது நூலக விதிகளின்படி 1000 மக்கள் தொகைக்கு மேலுள்ள இடங்களில் பகுதிநேர நூலகமும் 5000 மக்கள் தொகைக்கு மேல் 50,000 மக்கள்தொகைக்குள் உள்ள இடங்களில் ஊர்ப்புற நூலகம்/கிளை நூலகம் திறக்க வழிவகை உள்ளது. ஆனால் கூடுதுறை கிராமத்தின் மக்கள் தொகை 345 ஆகும். எனவே,

[2004 ஜூலை 23

மக்கள்தொகையின் அடிப்படையிலும், நூலகம் திறப்பதற்கு உரிய நிபந்தனைகள் ஏதும் பூர்த்தி செய்யப்படாததாலும் கூடுதுறை கிராமத்தில் நூலகம் திறக்க தற்போது வாய்ப்பு இல்லை.

**18—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 30686–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், வடவாளம் ஊராட்சி, இச்சடியில் ஒரு சுகாதார மையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், இச்சடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**19—**

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவர்கள்

**வினா எண் 31397–திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருத்துவர்கள் பற்றாக்குறை இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது மருத்துவர்கள் நிரப்பப்படுவார்கள்?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, நாட்ராம்பள்ளி வட்டார மற்றும் முதன்மை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட மூன்று மருத்துவர் பணியிடங்களிலும் மூன்று மருத்துவர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மருத்துவர் பற்றாக்குறை ஏதுமில்லை.

**20—**

## ஆரம்ப சுகாதார நிலையம் மேம்படுத்துதல்

**வினா எண் 31885–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், வீரப்பட்டியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், வீரப்பட்டி கிராமத்தில் துணை சுகாதார நிலையம்தான் உள்ளது. இதனை ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

[2004 ஜூலை 23

21—

## ஒன்றிய மருந்தகங்களை தரம் உயர்த்துதல்

**வினா எண் 35248—திரு. சி. இராசேந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவோணம் ஒன்றியத்தில் உள்ள ஒன்றிய மருத்துவமனைகளை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக மாற்றும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவோணம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகை 74,955 (1991 கணக்கெடுப்பு) ஆகும். இந்த ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே 1) திருவோணம், 2) சிலாத்தூர், 3) அதம்பை, 4) வெங்கரை ஆகியன செயல்படுகின்றன. மத்திய அரசின் இலக்கின்படி 30,000 மக்கள்தொகைக்கு சமவெளிப் பகுதிகளில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. திருவோணம் ஊராட்சி ஒன்றிய மக்கள்தொகைக்கு தற்போதுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளது. எனவே, தஞ்சாவூர் மாவட்டம், திருவோணம் ஊராட்சி ஒன்றிய கட்டுப்பாட்டில் நெய்வேலி (தெற்கு) பின்னையூர் மற்றும் திருநல்லூர் கிராமங்களில் செயல்படும் ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாக நிலை உயர்த்தும் சாத்தியக்கூறுகள் இல்லை.

22—

## ஆய்வக உதவியாளர் பணியமர்த்துதல்

**வினா எண் 35309—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி அரசு மருத்துவமனைக்கு நிரந்தர ஆய்வக உதவியாளர் (Permanent Lab Assistant) பணியமர்த்த அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

எடப்பாடி அரசு மருத்துவமனையில் ஆய்வக நுட்பனர் நிலை-II நிரந்தர பணியிடத்தில் பணிபுரிகிறார். இம்மருத்துவமனைக்கு ஆய்வக உதவியாளர் பணியிடம் ஒப்பளிக்கப்படவில்லை.

23—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 41148—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் பிறந்த குழந்தைகள் எத்தனை?

(ஆ) அங்கு காலியாக உள்ள மருத்துவ அலுவலர் பணியிடங்கள் எத்தனை?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2001-2002 ஆம் ஆண்டில் பிறந்துள்ள குழந்தைகள் எண்ணிக்கை 159 ஆகும்.

(ஆ) மகுடஞ்சாவடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒப்பளிக்கப்பட்ட மருத்துவ அலுவலர் பணியிடங்கள் 3 ஆகும். இதில் 1 பணியிடம் காலியாக உள்ளது.

24—

### ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 42403—திரு. கே.எஸ். தென்னரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருள்மிகு சமயபுரம் மாரியம்மன் திருக்கோயிலுக்கு அருகில் ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், சமயபுரம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

25—

### ஆரம்ப சுகாதார நிலையத்தில் பெண் மருத்துவர் நியமனம்

**வினா எண் 43298—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதலாக பெண் மருத்துவர் நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெத்தநாயக்கனூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட இரு மருத்துவர் பணியிடங்களில் ஒரு பெண் மருத்துவர் மற்றும் ஒரு ஆண் மருத்துவர் பணி புரிந்து வருகின்றனர். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மேலும் கூடுதலாக பெண் மருத்துவர்களை நியமனம் செய்யும் திட்டம் ஏதும் இல்லை.





26—

### மருத்துவர்களுக்கு குடியிருப்பு வளாகம் அமைத்தல்

**வினா எண் 46232—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர் மற்றும் ஊழியர்களுக்கு குடியிருப்பு வளாகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குக் குடியிருப்பு கட்டடங்கள் கட்ட அரசால் நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, சீர்காழி தொகுதி, வள்ளுவக்குடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் பணிபுரியும் மருத்துவர் மற்றும் ஊழியர்களுக்கு குடியிருப்பு கட்டடங்கள் கட்ட தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

27—

### ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 49152—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், சக்கிமங்கலம் கிராமத்திலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், சமயநல்லூர் தொகுதி, மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், இராஜாக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கீழ் இயங்குவது சக்கிமங்கலம் துணை சுகாதார நிலையமாகும். இந்த துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எனவே இந்தத் துணை சுகாதார நிலையத்திற்கு சுற்றுச்சுவர் கட்டித் தரும் சாத்தியக்கூறு இல்லை.

**28—**

## ஆதரவற்ற முதியோர் உதவித் திட்டத்தில் பயனடைந்தோர் விவரம்

**வினா எண் 30685—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2001-2002-ல் புதுக்கோட்டை தொகுதியில் ஆதரவற்ற முதியோர் உதவித் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

2001-2002-ல் புதுக்கோட்டை தொகுதியில் ஆதரவற்ற முதியோர் உதவித் திட்டத்தின் மூலம் பயன்பெற்ற பயனாளிகளின் விவரம் (மாதம் ஒன்றுக்கு) சராசரியாக பின்வருமாறு:—

| வ.எண் | திட்டத்தின் விவரம் | நபர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முதியோர் உதவித் தொகை | 2321 |
| 2 | உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை | 303 |
| 3 | விதவை உதவித் தொகை | 1842 |
| 4 | ஆதரவற்ற விவசாயக்கூலி உதவித் தொகை | 208 |
| 5. | கணவனால் கைவிடப்பட்டோர் உதவித் தொகை | 350 |
| | மொத்தம் | 5024 |





**29—**

## சத்துணவுக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 32232—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தென்னாம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித் தர அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தென்னாம்பட்டினம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்கு 2001-2002 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது, சமையல் அந்தக் கட்டடத்தில்தான் சமைக்கப்பட்டு வருகிறது.

**30—**

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32248—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தில்லைவிடங்கன் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசுக்கு திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், தில்லைவிடங்கன் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு 1996-97 ஆம் ஆண்டு ரூ.40,000/- மதிப்பீட்டில் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சத்துணவு சமையல் கூடம் கட்டித்தரப்பட்டுள்ளது.

31—

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32252—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருப்பன்கூர் ஊராட்சி டிஇஎல்சி. தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டித்தர அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சீர்காழி ஒன்றியம், திருப்பன்கூர் ஊராட்சி டி.இ.எல்.சி. தொடக்கப் பள்ளிக்கு 2000-2001 ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கட்டடம் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது, சத்துணவு சமையல் அந்தக் கட்டடத்தில் சமைக்கப்பட்டு வருகிறது.

32—

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32286—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருக்கருகாவூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கும், கீரநல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கும் நிரந்தர சத்துணவு சமையல் கட்டடம் உள்ளது.

33—

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32293—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, தர்க்காஸ் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசுக்குத் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, தர்க்காஸ் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் இல்லை. கீற்றுக்கொட்டகையில் சமைக்கப்பட்டு வருகிறது. நிதிநிலைக்கேற்ப நடப்பு நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32302—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், சொடியம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சொடியம்பாளையம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு நிதிநிலைக்கேற்ப நடப்பு நிதியாண்டில் புதிய கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**35—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32304—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, புளியந்துரை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசுக்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புளியந்துரை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நல்ல சத்துணவுக் கூட கட்டடம் உள்ளது. புதிய கட்டடம் தேவையில்லை.

**36—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32307—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) சீர்காழி தொகுதி, சியாளம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, சியாளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நல்ல சத்துணவுக் கூட கட்டடம் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

**37—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32308—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமைலாடி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருமைலாடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு புதிய சத்துணவுக் கூட கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**38—**

**சத்துணவுக் கூடம் கட்டுதல்**

**வினா எண் 32311—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) சீர்காழி தொகுதி, ராதா நல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசுக்கு திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, ராதா நல்லூர் ஊராட்சி ஒன்றிய, தொடக்கப் பள்ளியில் சத்துணவு மைய கட்டடம் இல்லை. பள்ளியிலேயே நடத்தப்படுகிறது. நிதிநிலைக்கேற்ப நடப்பு நிதியாண்டில். முன்னுரிமை அடிப்படையில் புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

39—

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32318–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மணலாசரம் ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கட்டடம் கட்டித்தர அரசுக்கு திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, மணலாசரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நல்ல சத்துணவுக் கூட கட்டடம் உள்ளது. புதிய கட்டடம் கட்ட தேவையில்லை.

40—

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32320–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) சீர்காழி தொகுதி, கேவரொடை ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கேவரொடை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் நல்ல சத்துணவுக் கூட கட்டடம் உள்ளது. புதிய கட்டடம் கட்ட தேவையில்லை.

41—

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 32321–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி. வெள்ளக்குளம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வேட்டங்குடி ஊராட்சி, வெள்ளக்குளத்தில் இயங்கிவரும் சத்துணவு மையத்திற்கு நிரந்தரக் கட்டடம் உள்ளது. புதியதாக கட்டடம் தேவை இல்லை.

42—

## போக்குவரத்துக் கழக விபத்துக்கள் விவரம்

**வினா எண் 28305–திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு எவ்வளவு விபத்துக்கள் ஏற்பட்டுள்ளது?

(ஆ) இதனால் உயிரிழப்பு என்ன?

(இ) அரசின் பொருள் இழப்பு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) 2000-2001 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்கு ஏற்பட்ட விபத்துகள் 770.

(ஆ) உயிரிழப்புகள் 120.

(இ) அரசின் பொருள் இழப்பு ரூ.14,61,700/-

**43—**

## பருத்தி ஏலம் விவரம்

**வினா எண் 21244—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கம், கொங்கணாபுரம் கிளையில் 2001-2002 ஆம் ஆண்டு எவ்வளவு மதிப்புள்ள பருத்தி ஏலம் விடப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கொங்கணாபுரம் கிளையில், 2001-2002 ஆம் ஆண்டில், 13,847.842 மெட்ரிக் டன் அளவு உள்ள பருத்தி ரூ.2,999.04 இலட்சம் மதிப்பிற்கு ஏலம் விடப்பட்டுள்ளது.





**44—**

## விவசாய விளைபொருள் உற்பத்திக் கூடம்

**வினா எண் 23057—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம், பள்ளப்பட்டி விற்பனை கூட்டுறவு சங்கத்திலுள்ள காலி கிடங்குகளைப் பயன்படுத்தி விவசாய விளைபொருள் உற்பத்திக்கூடம் அமைக்கும் திட்டம் பற்றி அரசு பரிசீலிக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம், பள்ளப்பட்டியில், சேலம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமையகத்தில் திறந்தவெளிக் கிடங்கு ஒன்று தற்போது காலியாக உள்ளது. விவசாயிகளின் விளைபொருட்கள் விற்பனைக்குக் கொண்டு வரும் காலங்களில் இக்கிடங்கில் விளைபொருட்களை வைத்து உறுப்பினர்களுக்கு விற்பனை செய்து கொடுக்கவும், இக்கிடங்கு காலியாக இருக்கும் சமயங்களில் தொழிற் கூட்டுறவுச் சங்கமான "சேகோசர்வ்"ற்கு வாடகைக்கு விடப்பட்டும் வருகின்றன. எனவே, இவ்விற்பனைச் சங்கத்தில் விவசாய விளைபொருள் உற்பத்திக்கூடம் ஏதும் அமைக்கும் திட்டம் தற்போது இல்லை.

**45—**

## கிராம அங்காடிக்கு புதிய கட்டடம்

**வினா எண் 29650—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், தி. புதுப்பட்டி ஊராட்சி வடக்கு நல்லியம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள கிராம அங்காடிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு அவன செய்யுமா?

(ஆ) அதன் விவரம் என்ன?

[2004 ஜூலை 23

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தொகுதி. தி. புதுப்பட்டி ஊராட்சி, வடக்கு நல்லியம்பட்டி நியாய விலைக் கடை, தி. புதுப்பட்டி என்ற நியாய விலைக் கடையின் பகுதிநேரக் கடையாகும். பகுதிநேரக் கடை அமைக்க ஊர் மக்களே இலவச கட்டட வசதி செய்து தர வேண்டும் என்ற வரையறைக்குட்பட்டு அனுமதி அளிக்கப்படுகிறது. எனவே, மேற்கண்ட பகுதிநேரக் கடைக்கு அரசு நலத் திட்டங்களின்கீழ் கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

**46—**

**நியாய விலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா எண் 29669–திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, சுரைக்காய்பட்டி கிராமத்தில் பொது விநியோகக் கடை கட்டும் திட்டம் செயல்படுத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவில்பட்டி தொகுதி, சுரைக்காய்பட்டி பகுதியில், இளம்புவனம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் 231 குடும்ப அட்டைகளுடன் ஒரு முழுநேரக் கடை வாடகை கட்டடத்தில் செயல்படுகிறது. இக்கடைக்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு 2003-2004 ஆம் நிதியாண்டில் நிதி ஏதும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இருப்பினும், சுரைக்காய்பட்டி நியாய விலைக்



2004 ஜூலை 23]

கடைக்கு கட்டடம் கட்ட உரிய முன்மொழிவினை தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அனுப்பி வைக்க தூத்துக்குடி மண்டல இணைப் பதிவாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

**47—**

**நியாய விலைக் கடைக்குக் கட்டடம்**

**வினா எண் 32766–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் திருக்கருகாவூர் ஊராட்சிக்கு நியாய விலைக் கடை கட்டடம் கட்டித் தருவதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் ஊராட்சியில் செயல்படும் திருக்கருகாவூர் கூட்டுறவு நியாய விலைக் கடை அரசு திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட புதிய கட்டடத்தில் 3-10-2002 முதல் செயல்பட்டு வருகிறது.

**48—**

**அங்காடிக்கு புதிய கட்டடம்**

**வினா எண் 35596–டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், இடையன்கொல்லைப்பட்டியில் அங்காடி புதிதாக கட்டித் தந்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், இடையன்கொல்லைப்பட்டியில் கூட்டுறவு நியாய விலைக் கடை ஏதும் இல்லாத நிலையில் புதியதாக கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) எழவில்லை.

**49—**

## தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி

**வினா எண் 37318—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் (P.A.C.B.-யில்) அடமான கடன் வழங்கியதில் முறைகேடுகள் நடந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியில் அடமான கடன் வழங்கியதில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.





**50—**

## கிடங்குகள் கட்ட கடன் வழங்குதல்

**வினா எண் 38386— திரு.செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கிடங்குகள் கட்ட கடன் வசதி வழங்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், 2002-2003 ஆம் ஆண்டில் எவ்வளவு நபர்களுக்கு கடன் வழங்கப்பட்டது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கிடங்குகள் கட்ட கடன் மற்றும் மானியம் வழங்கப்படுவதில்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**51—**

## சிந்தாமணி கூட்டுறவு அங்காடி

**வினா எண் 42503—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி மேல்பகுதியில் இயங்கி வரும் சிந்தாமணி கூட்டுறவு அங்காடி நஷ்டத்தில் இயங்கி வருவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் இயங்கி வரும் சிந்தாமணி கூட்டுறவு சிறப்பு அங்காடி லாபத்தில் செயல்படுகிறது. இக்கடையில் மாதம் ஒன்றுக்கு ரூ.2.00 இலட்சம் வரை வியாபாரம் நடைபெற்று வருகின்றது. தற்போது நடைபெற்று வரும் வியாபாரத்தை மேலும் அதிகரிக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**52—**

## விற்பனை கட்டடம் அமைத்தல்

**வினா எண் 43612—திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கு (ஏ.சி.எம்.எஸ்.) அவிநாசி பேரூராட்சியின் மையப் பகுதியில் விற்பனை கட்டடம் (மார்க்கெட்டிங் பில்டிங்) அமைத்துத் தர நடப்பாண்டில் அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) அவிநாசி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்திற்கென அவிநாசி பேரூராட்சியின் மையப் பகுதியில் சங்கத்திற்கு சொந்தமாக காலி நிலம் (Vacant Land) ஏதுமில்லாததால், மேற்படி சங்கத்திற்கு நடப்பாண்டில் விற்பனைக் கட்டடம் அமைத்துத் தர சாத்தியமில்லை.

(ஆ) எழவில்லை.



2004 ஜூலை 23]

**53—**

## பகுதிநேர நியாய விலைக் கடைக்கு கட்டடம்

**வினா எண் 44062—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சியில் மூலக்கடையில் தனியார் கட்டடத்தில் இயங்கி வரும் பகுதிநேர நியாய விலைக் கடைக்கு நாயக்கர் தெருவில் ஒதுக்கியுள்ள நிலத்தில் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இருப்பாளி ஊராட்சியில், குருக்கப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் 737 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் மூலக்கடை பகுதிநேர நியாய விலைக் கடை ஊர் மக்களால் இலவசமாக வழங்கப்பட்டுள்ள கட்டடத்தில் தற்போது செயல்படுகிறது. இருப்பினும், ஊர் மக்கள் தானமாக வழங்கியுள்ள நிலத்தில் மூலக்கடை பகுதிநேரக் கடைக்கு அரசு நிதியுதவியில் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**54—**

## கால்நடை மருத்துவமனை அமைத்தல்

**வினா எண் 21080—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, கொல்லம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடப்பாண்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி ஊராட்சி, கொல்லம்பட்டியில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் தற்போது அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.

**55—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 24300—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிளியனூர் ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செய்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழாது.





**56—**

**கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாக தரம் உயர்த்துதல்**

**வினா எண் 32035—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியத்தில் தி. புத்தூர் கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாக தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை (நிலை) எண் 107, கால்நடை பராமரிப்பு (ம) மீன் வளத் (கா.ப. 2) துறை, நாள்: 23-10-2003-ல் திருச்சி மாவட்டம், முசிறி கோட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுகைக்குட்பட்ட தி. புத்தூரில் (T. Puthur) உள்ள கால்நடை கிளை நிலையத்தினை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.

**57—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 36674—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாச்சலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம் முதனையில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) விருத்தாச்சலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம் முதனையில் கால்நடை மருத்துவனை அமைக்க அரசிடம் தற்போது செயற்குறிப்பு எதுவும் இல்லை.

(ஆ) எழாது.

**58—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்**

**வினா எண் 36676—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விருத்தாச்சலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

விருத்தாச்சலம் தொகுதி, கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

**59—**

**கால்நடை கிளை மருந்தகம் அமைத்தல்**

**வினா எண் 44632—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, வாராப்பூர் ஊராட்சியில் புதிய கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?





(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய கால்நடை கிளை நிலையம் துவக்கிட மாநிலத் திட்டக் குழு தடை ஆணை விதித்துள்ளதாலும், புதிய பணியிடங்களை ஒப்பளிப்பதற்கு அரசு தடை விதித்துள்ளதாலும், புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை கோட்டம், வாராப்பூர் ஊராட்சியில் புதியதாக கால்நடை கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஏதும் தற்போது இல்லை.

**60—**

**தேயிலை தொழிற்சாலை**

**வினா எண் 38745—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குன்னூரிலுள்ள தமிழ்நாடு தேயிலை தோட்டக் கழகத்திற்குரிய தேயிலை தொழிற்சாலையின் 2001-2002 ஆம் ஆண்டு வருமானம் எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

குன்னூரிலுள்ள தமிழ்நாடு தேயிலை தோட்டக்கழகத்தின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் மொத்தம் எட்டு தொழிற்சாலைகளின் வருமானம் 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.46.997 கோடியும் மற்றும் 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.44.0201 கோடி ஆகவும் இருந்தது.

[2004 ஜூலை 23

61—

### பால் கூட்டுறவு சங்கத்திற்கு புதிய கட்டடம்

**வினா எண் 37300–திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம் காட்டுக்குளம் ஊராட்சியில் பால் கூட்டுறவு சங்கத்துக்கு புதிய கட்டட வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம் டி.ஆர்.டி. 999. காட்டுக்குளம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு அடிமனை எதுவும் சொந்தமாக இல்லாததால், சங்கத்திற்கு சொந்தமாக அலுவலகக் கட்டடம் கட்டித் தர வாய்ப்பில்லை.

62—

### பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம்

**வினா எண் 43943–திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், வில்லிபாளையம், எஸ்.எம்.டி. 131. புளியம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம் ஈ.டி.265. வில்லிபாளையம் மற்றும் எஸ்.எம்.டி. 131. புளியம்பட்டி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு அடிமனை எதுவும் சொந்தமாக இல்லாததாலும், இச்சங்கங்களின் கட்டட நிதியில் போதுமான இருப்பு இல்லாததாலும், சொந்தமாக அலுவலகக் கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

63—

### பால் உற்பத்தியாளர் சங்கத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 43946–திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், மேல்சாத்தம்பூர் கிராமத்தில் பால் உற்பத்தியாளர் சங்கம் வாடகை கட்டடத்தில் இயங்கி வருவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், இ.டி. 311. மேல்சாத்தம்பூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இச்சங்கத்திற்கு அடிமனை எதுவும் சொந்தமாக இல்லாததாலும் கட்டட நிதியில் போதுமான இருப்பு இல்லாததாலும் சங்கத்திற்கு சொந்தமான அலுவலகக் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

[2004 ஜூலை 23

64—

### மீன் அங்காடி அமைத்தல்

**வினா எண் 32062–திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பரா—

நீலகிரி மாவட்டத்தில் தரமான மீன்கள் கிடைக்க ஏற்பாடு செய்யப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

உதகையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் வண்ண மீன் காட்சியகம் அமைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு காட்சியகம் அமைக்கப்பட்ட பிறகு மீன் அங்காடி அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

65—

### மீன் குஞ்சு உற்பத்தி

**வினா எண் 48654–திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் நீர்த்தேக்கங்கள், சிறுபாசன குளங்கள், கிராம குளங்கள் மற்றும் குட்டைகளில் தரமான மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படவுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்காடு தொகுதியில் நீர்நிலைகளில் மீன் குஞ்சு உற்பத்தி செய்யும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.



2004 ஜூலை 23]

(ஆ) இவ்வினா எழாது.

66—

### குளிர் காப்பு மீன் பெட்டிகள் வழங்குதல்

**வினா எண் 48657–திரு. கா.தி. இளையகண்ணு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதியில் சுகாதார முறையில் மீன் விற்பனை செய்வதற்கு குளிர் காப்பு பெட்டிகள் மீன் விற்பனையாளர்களுக்கு வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுகாதார முறையில் மீன் விற்பனை செய்வதற்கு குளிர் காப்பு மீன் பெட்டிகளை மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு வழங்கும் திட்டம் தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவக் கூட்டுறவு இணையத்தில் உள்ளது. ஏற்காடு தொகுதியில் உள்ள மீனவ கூட்டுறவு சங்கங்களின் உறுப்பினர்களான சிறு மீன் விற்பனையாளர்களிடமிருந்து முறையாக மனு பெறப்படும்பட்சத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

67—

### தென்னை மரங்களுக்கு உதவித் தொகை

**வினா எண் 36099–திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்ராம்பள்ளி தொகுதியில் உள்ள விவசாயிகளுக்கு தென்னை மரங்களுக்கு அரசு அறிவித்த உதவித் தொகை உடனடியாக சென்று அடைய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு, துயர் துடைப்பு நிதியாக, முழுவதும் பாதிக்கப்பட்ட மரங்களுக்கு மரம் ஒன்றிற்கு ரூ.150/- வீதமும், பகுதி பாதிப்பு ஏற்பட்ட மரங்களுக்கு மரம் ஒன்றுக்கு ரூ.50/- வீதமும், வேலூர் மாவட்டத்திற்கு மொத்த நிவராணத் தொகையாக ரூ.91,68,450 ஒதுக்கீடு செய்யப்பட்டு, நாட்ராம்பள்ளி தொகுதியில் 1391 பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு ரூ.69,550 வழங்கப்பட்டுள்ளது. இந்நிவாரணத் தொகை பயனாளி ஒருவருக்கு 350 மரங்களுக்கு மிகைப்படாமல் வழங்கப்படும்.

**68—**

## விதைகள் சேமிப்புக் கிடங்கு அமைத்தல்

**வினா எண் 39565—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கல்வராயன்மலை ஒன்றியத்தில் உள்ள வெள்ளிமலையில் விதைகள் சேமிப்புக் கிடங்கு ஒன்று கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கல்வராயன்மலை ஒன்றியம், வெள்ளிமலை பகுதிக்கு அருகில் உள்ள சின்னசேலத்தில் பிரதான வேளாண்மை விரிவாக்க மையம் ஒன்றும், வடக்கு நந்தலில் துணை வேளாண்மை விரிவாக்க



மையம் ஒன்றும் செயல்பட்டு வருகிறது. மேற்படி மையங்களில் பருவங்களுக்கு ஏற்ப தரமான விதைகள் இருப்பு வைக்கப்பட்டு கட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு விதைகள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஆகவே வெள்ளிமலையில் தனியே விதைகளை சேமிப்பதற்கு புதிய கிடங்கு அமைக்கும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**69—**

## வேளாண்மை கருத்தரங்கு

**வினா எண் 41108—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி விவசாயிகளின் குறைகளை அறிய வேட்டைக்காரன் புதூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதியில் கருத்தரங்கம் ஏற்பாடு செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வேட்டைக்காரன் புதூர் கிராமத்தில் வேளாண்மை கருத்தரங்கு 3-12-2003 அன்று சட்டமன்ற உறுப்பினர் திரு. கோவை தங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

**70—**

## களர் நிலச் சீர்திருத்தத் திட்டம்

**வினா எண் 42122—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) களர் நிலச் சீர்திருத்தத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதி எவ்வளவு?

(ஆ) இது மத்திய அரசு நிதியா, அல்லது மாநில அரசு நிதியா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) களர் நிலச் சீர்திருத்தத் திட்டத்திற்கு 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.138.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இது மாநில அரசு நிதியில் செயல்படுத்தப்படும் திட்டமாகும்.

**71—**

## தென்னை மர விவசாயிகளுக்கு கடனுதவி

**வினா எண் 42566—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் தென்னை மரங்கள் பட்டுப்போய் விட்டதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவுச் சங்கம் மூலம் கடனுதவி வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வறட்சியால் தென்னை மரங்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவு சங்கம் மூலம் கடனுதவி வழங்கும் தனித் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை. இருப்பினும், மைய அரசால் வழங்கப்படும் இயற்கை இடர்பாடுகள் நிவாரண நிதியின்கீழ், 2002 ஆம் ஆண்டிற்கு கோவை மாவட்டத்திற்கு, வறட்சியால் பாதிப்படைந்த தென்னை விவசாயிகளுக்கு துயர் துடைப்பு நிவாரணமாக ரூ.8,48,16,400/- ஒதுக்கீடு செய்யப்பட்டு அதில் ரூ.8,28,60,200/- பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும் சாதாரணமாக விவசாயிகள் தகுதி அடிப்படையில் பெறக்கூடிய கடன்களைப் பெறலாம்.



**72—**

## தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் மானியம்

**வினா எண் 42609—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் மானியம் பெற்ற விவசாயிகள் (2001-2002, 2002-2003 ஆம் ஆண்டின்) விவரம் யாது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தென்னை வளர்ச்சி வாரியம், கொச்சி மூலம் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தென்னை வளர்ச்சி திட்டத்தின் மூலம் 2001-2002 ஆம் ஆண்டிற்கு மானியம் பெற்ற விவசாயிகளின் எண்ணிக்கை 11570 பேர் ஆகும். 2002-2003 ஆம் ஆண்டு மானியம் பெற்ற விவசாயிகள் எண்ணிக்கை 8,472 பேர் ஆகும்.

**73—**

## தென்னை மரங்களுக்கு நிவாரணம்

**வினா எண் 42610—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியினால் பாதிக்கப்பட்ட தென்னை மரத்திற்கு உதவித் தொகையாக மத்திய அரசு வழங்கிய தொகை எவ்வளவு?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு நிவாரணம் அளிப்பதற்கென மைய அரசின் நிதியுதவியாக ரூ.30.50 கோடி அனுமதி அளித்து அரசு ஆணை எண் 11, வருவாய்த் துறை, நாள் 25-01-2003-ல் ஆணை வெளியிடப்பட்டது. அனுமதி வழங்கப்பட்ட தொகையிலிருந்து முழுவதும் பாதிப்படைந்த தென்னை மரம் ஒன்றிற்கு ரூ.150/- வீதமும், பகுதி பாதிப்படைந்த தென்னை மரம் ஒன்றிற்கு ரூ.50/- வீதமும், நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட வறட்சி நிவாரணத்தால், தென்னை பயிரிடும் 50,655 சிறு விவசாயிகளும், 34,488 குறு விவசாயிகளும், 20,410 பெரிய விவசாயிகளும், ஆக மொத்தம் 1,05,553 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இதில் 8,506 பெண் விவசாயிகளும் 4601 ஆதிதிராவிடர்/பழங்குடியினர் விவசாயிகளும் அடங்குவர்.

**74—**

## மாற்றுப் பயிர்த் திட்டம்

**வினா எண் 48270—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாற்றுப் பயிர்த் திட்டம் எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தமிழகத்தில் தற்போது நிலவும் வறட்சியின் காரணமாகவும், நீர் ஆதாரங்கள் மூலம் பெறப்படும் நீர் வரத்து குறைவின் காரணமாகவும், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருவதனை கருத்தில் கொண்டு



நீர் அதிகம் தேவைப்படும் நெல் மற்றும் கரும்பு போன்ற பயிர்களின் சாகுபடியினைக் குறைத்து, அதற்கு மாற்றுப் பயிராக நீர் குறைவாகவும் வறட்சி நிலையினை தாங்கி வளரக்கூடிய பயிர்களான சிறுதானியங்கள், பயறு வகைகள் எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிகள் போன்றவைகளைச் சாகுபடி செய்ய, வேளாண்தொழில்நுட்பங்கள் விவசாயிகளிடையே அனைத்து மாவட்டங்களிலும் வேளாண்மைத் துறையின் களப் பணியாளர்கள் மூலம் பரவலாக்கம் செய்யப்பட்டு வருகிறது. குறிப்பாக காவிரி டெல்டா பகுதிகளில் மேட்டூர் நீர்த்தேக்கம் பாசனத்திற்கு திறக்கப்படாத நிலையில் குறுவை நெல் பயிருக்கு மாற்றுப் பயிராக களப் பணியாளர்கள் மூலம் தொழில்நுட்பங்கள் கூறப்பட்டு உழவர்களுக்கு லாபம் ஈட்டக்கூடிய நிலையில் மாற்றுப் பயிர் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**75—**

## தொகுப்பு வீடுகள் பழுதுபார்த்தல்

**வினா எண் 4129—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி ஒன்றியம், அம்மன்குட்டூர் அருந்ததியர் தெருவிலுள்ள காலனி வீடுகள் பழுதடைந்துள்ளது என அரசுக்குப் புகார் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவ்வீடுகளை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

[2004 ஜூலை 23

76—

## நகராட்சித் திரை அரங்கம்

**வினா எண் 14809—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேட்டூர் நகராட்சிக்குச் சொந்தமான திரையரங்கம், நீண்ட நாட்களாக மூடி உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மேட்டூர் நகராட்சிக்குச் சொந்தமான நிரந்தரமாக அமைக்கப்பட்ட திரையரங்கம் தொடர்ந்து நடத்திட உரிமம் புதுப்பிக்கப்பட்டு, உரிமதாரர் தொடர்ந்து நடத்தி வருகிறார்.

மேலும், நகராட்சிக்குச் சொந்தமான காலி மனையில் தற்காலிகமான திரையரங்கம் (Touring Theatre) நடத்தி வந்த உரிமதாரர், திரையரங்கு நடத்த இயலவில்லை எனக் கூறி *31-3-2002* முதல் காலி செய்து விட்டார். இதன் அருகில் நகராட்சிக்குச் சொந்தமான எருக் கிடங்கு இருப்பதால் இந்நிலம் எவ்விதப் பயன்பாட்டிற்கும் ஏற்றதாக இல்லை. இவ்விடத்தினை எவரும் ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க நகராட்சியில் முள்வேலி அமைத்து பாதுகாக்கப்பட்டுள்ளது.

77—

## கிணறுகளை ஆழப்படுத்துதல்

**வினா எண் 16525—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் புதிய குழாய்க் கிணறு அமைக்கவும் வறண்டு போன கிணறுகளை ஆழப்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி தொகுதி, பத்தமடை பேரூராட்சியில் புதிய ஆழ்குழாய்க் கிணறு அமைக்கவும், வறண்டு போன கிணறுகளை ஆழப்படுத்தவும் பேரூராட்சியில் நிதி வசதி இல்லை. எனவே, தற்போது செய்யும் உத்தேசம் இல்லை.

78—

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 17117—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, இடங்கணசாலையில் வசிக்கும் ஆதிதிராவிடர் மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதியில் உள்ள இடங்கணசாலை பகுதி பேரூராட்சி ஆகும். பேரூராட்சிப் பகுதிகளில் தொகுப்பு வீடுகள் கட்டும் திட்டம் நடைமுறையில் இல்லை.

79—

## வடிகால் வசதி

**வினா எண் 24289—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் பேரூராட்சியில் நடப்பாண்டில் அரசு முறையான சாக்கடை வசதியை செய்து தருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பெண்ணாகரம் பேரூராட்சி எல்லையில் 18 வார்டுகள் உள்ளன. பெரும்பாலான பகுதிகளில் சாக்கடை வசதி செய்யப்பட வேண்டியுள்ளது. தற்போது 2002-2003 ஆம் ஆண்டு 11-வது நிதிக் குழு திட்டத்தில் இரண்டு இடங்களில் ரூபாய் 71,000/-க்கு வடிகால் கட்டும் பணி நடைபெற்று அது முடியும் தறுவாயில் உள்ளது. 2002-2003 ஆம் ஆண்டு தேசிய குடிசைப் பகுதி மேம்பாடு திட்டத்தில் ரூபாய் 50,000/- மதிப்பீட்டில் எட்டியாம்பட்டி கிராமத்தில் வடிகால் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சி முழுவதும் வடிகால் கட்டி முடிக்க பேரூராட்சி பொது நிதி வசதி இல்லை.

80—

## குடிநீர்த் திட்டத்திற்கு மானியம்

**வினா எண் 24311—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு மூலதன மானியம் 2002-2003 நடப்பாண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு மூலதன மானியம் 2002-2003 நடப்பாண்டிற்கு ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. எனினும் இப்பணிக்காக ரூ.4.50 கோடி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளை முழுமையாக நிறைவேற்ற மீதித் தொகையை தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சி நிதி நிறுவனத்திடம் கடனாகப் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

81—

## கழிவு நீர் வாய்க்கால் அமைத்தல்

**வினா எண் 25654—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகராட்சி 40-வது கோட்டம் பச்சப்பட்டி ஆறுமுக நகர் பகுதிகளில் கழிவு நீர் வாய்க்கால் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சி 40-வது கோட்டத்திலுள்ள ஆறுமுக நகர் அனுமதியற்ற மனைப் பிரிவு ஆகும். இங்கு சாலைகள் யாவும் மாநகராட்சிக்கு ஒப்படை செய்யப்படவில்லை. எனினும் மழைக்காலங்களில் குமரகிரி ஏரி பகுதியில் இருந்து வெளியேறும் மழை நீர், கழிவு நீருடன் கலந்து ஆறுமுக நகரின் சாலைகளில் ஓடுவதாலும், தண்ணீர் தேங்கி நிற்பதாலும் சுகாதாரக் கேடு ஏற்படுவதால் அவசர அவசியத்தைக் கருத்தில் கொண்டு பொதுமக்களின் நலன் கருதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியின் மூலம் ரூ.6.82 இலட்சம் மதிப்பீட்டில் கால்வாய் மற்றும் சிறு பாலம் கட்டப்பட்டுள்ளது.

82—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 27054—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி, பத்தமடை பேரூராட்சி, கரிசூழ்தான்மங்கலம் கிராமத்திற்கு குடிநீர் விநியோகம் செய்ய விசைப்பம்பு மூலம் கிணறுகள் அமைத்து விநியோகம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி மாவட்டம், பத்தமடை பேரூராட்சி கரிசூழ்தான்மங்கலம் கிராமத்திற்கு விசைப்பம்பு அமைக்க தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்ட நிதியில் (TUFIDCO) பணி தேர்வு செய்யப்பட்டு அதற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டு நிர்வாக அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி நிதி கிடைக்கப் பெற்றதும், மேற்படிப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் மேறகொள்ளப்படும்.

83—

## குடிநீர்க் கட்டணம்

**வினா எண் 27199—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சியில் குடிநீர்க் கட்டணம் மூலம் வருவாயைப் பெருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?



விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாநகராட்சியில் குடிநீர்க் கட்டணம் மூலம் வருவாயைப் பெருக்க அம்மாநகராட்சி மன்ற 30-12-2002 ஆம் தேதிய தீர்மானம் எண் 212-ன்படி புதிய குடிநீர்க் கட்டணம் உயர்வு செய்து பொதுமக்களின் பார்வைக்காகவும், ஆட்சேபனைகள் மற்றும் கருத்துருக்கள் ஏதேனும் இருந்தால் தெரிவிப்பதற்காகவும் விளம்பரம் செய்யப்பட்டதில் பொதுமக்களிடம் இருந்து எவ்வித ஆட்சேபனையும் வரப்பெறாததால் 1-1-2003 முதல் மாமன்ற தீர்மான எண் 301. நாள் 2-3-2003-ன்படி உயர்த்தப்பட்ட குடிநீர்க் கட்டணத்தை வசூல் செய்திட அமல்படுத்தப்பட்டுள்ளது.

84—

## தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 32858—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை நகரத்தில் பகுதி 14-ல் யூஜிஆர் நகரிலிருந்து தெற்கே தார்ச் சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை நகரில் பகுதி 14-இல் யூஜி.ஆர். நகரிலிருந்து தெற்கே செல்லும் சாலை அனுமதியற்ற மனைப் பிரிவில் அமைந்துள்ளது. ஆகவே நகராட்சியால் இப்பகுதிக்கு தார்ச் சாலை அமைக்க இயலாது.

[2004 ஜூலை 23

85—

"மாவட்ட, விளம்பர ஒருங்கிணைப்புக் குழு" கூட்டம்

**வினா எண் 35663—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில், இந்த ஆண்டு "மாவட்ட விளம்பர ஒருங்கிணைப்புக் குழு" கூட்டம் நடைபெற்றதா?

(ஆ) அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் மற்றும் அதன் நடவடிக்கைகள் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம். இந்த ஆண்டு (2003) சேலத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மற்றும் மாவட்ட விளம்பரக் கூட்டம் நடைபெற்றது.

(ஆ) அந்தக் கூட்டத்தில் அரசின் திட்டங்கள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் குறித்த தகவல்கள் மற்றும் நலத் திட்ட உதவிகள் பெறுவதற்கான தகுதிகள் போன்றவற்றை மாவட்டத்திலுள்ள மக்கள் அறிந்து பயன் பெறும் வகையில் பல்வேறு துறைகளின் மூலம் விளம்பரப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

86—

கிராம சபா கூட்ட விவரம்

**வினா எண் 37787—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2003 ஆம் ஆண்டு ஜனவரி 26 ஆம் தேதி சேலம் மாவட்டத்தில் எத்தனை கிராமங்களில் "கிராம சபா கூட்டம்" நடைபெற்றது?

(ஆ) இதில் எவ்வளவு பொதுமக்கள் கலந்து கொண்டனர்?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 26-1-2003 அன்று சேலம் மாவட்டத்தில் மொத்தமுள்ள 385 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபா கூட்டங்கள் நடைபெற்றன.

(ஆ) கிராம சபா கூட்டங்களில் 1,42,175 பேர் கலந்து கொண்டனர். அதில் 79,085 ஆண் மற்றும் 63,090 பெண் உறுப்பினர்கள் ஆவர்.

87—

கிராம சபா கூட்ட விவரம்

**வினா எண் 37898—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2003 ஆம் ஆண்டு ஜனவரி 26, இந்தியக் குடியரசு தினந்தன்று எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம், எடப்பாடி மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள எத்தனை கிராமங்களில் கிராம சபா கூட்டம் நடைபெற்றது?

(ஆ) இதில் பொதுமக்கள் எவ்வளவு பேர் பங்கேற்றனர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) 26-1-2003 குடியரசு தினத்தன்று எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 9 கிராம ஊராட்சிகளிலும், எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 10 ஊராட்சிகள் மற்றும் மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 12 ஊராட்சிகளிலும் கிராம சபைக் கூட்டங்கள் நடைபெற்றன.

(ஆ) 1. மேற்படி கிராம சபைக் கூட்டங்களில் கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் ஆண்கள் 2714 பேர்களும், பெண்கள் 2410 பேர்களும், மொத்தம் 5124 பேர்கள் கலந்து கொண்டனர்.

2. எடப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில், ஆண்கள் 2750 பேர்களும், பெண்கள் 3555 பேர்களும், மொத்தம் 6305 பேர்கள் கலந்து கொண்டனர்.

3. மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியத்தில், ஆண்கள் 2433 பேர்களும், பெண்கள் 2519 பேர்களும், ஆக மொத்தம் 4952 பேர்கள் கலந்து கொண்டனர்.

**88—**

## பாதையோரக் கடைகள் அமைத்தல்

**வினா எண் 38280—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகராட்சி புதிய பஸ் நிலையம் அருகே பாதையோரம் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாநகராட்சி புதிய பஸ் நிலையம் அருகே பாதையோரக் கடைகள் அமைக்கும் திட்டம் தற்போது ஏதும் இல்லை.

**89—**

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 38638—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



சேலம் மாநகராட்சி, 54 கோட்டம், ராஜம்மாள் கல்யாண மண்டபம் பின்புற குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வினா சம்பந்தப்பட்ட பகுதியில் 200 அடி தூரத்திற்கு பகிர்மான குழாய் அமைக்கப்பட்டு 3 பொது குடிநீர்க் குழாய்கள் மூலமாகவும், வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்புகள் மூலமாகவும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. மேலும் அப்பகுதியில் பழுதடைந்திருந்த ஆழ்துளைக் கிணறு பழுதுபார்க்கப்பட்டு குடிநீர் விநியோகம் தற்போது நல்ல முறையில் செய்யப்பட்டு வருவதால் குடிநீர்ப் பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது.

**90—**

## சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 40710—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரம், வார்டு 2-ல் பணங்காட்டுத் தெருவில் சமுதாயக் கூடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சியின் பணங்காட்டுத் தெருவில் அரசுக்கு சொந்தமான இடமில்லை என்பதால் அப்பகுதியில் சமுதாயக் கூடம் கட்ட இயலாது.

91—

## கிராம நிர்வாக அலுவலகம்

**வினா எண் 44052—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் புதிதாக கிராம நிர்வாக அலுவலகம் எத்தனை கட்டப்பட்டது?

(ஆ) இதற்கு அரசு எவ்வளவு நிதி வழங்கியுள்ளது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2001-2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் ரூ.96.36 இலட்சம் செலவில் 160 கிராம நிர்வாக அலுவலகங்கள் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

92—

## நிலத்தடி நீர் பாதுகாப்பு

**வினா எண் 44860—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாநகரம், கிச்சிப்பாளையம் அருகே உள்ள குப்பைமேட்டினால் நிலத்தடி நீர் மாசுபடுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): இம்மாநகராட்சி நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்ட நாள் முதல், அதாவது 60 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கிச்சிப்பாளையம் அருகே உள்ள எருமாபாளையம் குப்பைக் கிடங்கு குப்பைகளை சேகரிக்கும் இடமாகவும் மற்றும் உரக்கிடங்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. எனினும் இதன் காரணமாக நிலத்தடி நீர் மாசுபடுவதாக எவ்விதப் புகாரும் இதுவரை வரப்பெறவில்லை. தவிர சேகரமாகும் கழிவுகளை மாநகராட்சிக்குச் சொந்தமான பனைமரத்துப்பட்டி பகுதியில் நிலப்பரப்பிற்கு கொண்டு சென்று அங்கு நிறுவப்படவுள்ள உயிரியல் எரிவாய்வு தயார் செய்யும் முறைக்கு பயன்படுத்தப்படவுள்ளது.

93—

## குடிநீர் விநியோகம்

**வினா எண் 45931—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் 5 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் வழங்கப்படுவது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தினந்தோறும் குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பருவ மழை பொய்த்ததன் காரணமாக அனைவருக்கும் சமமாக குடிநீர் விநியோகிக்கும் பொருட்டு சிறுவாணி (ம) பில்லூர் குடிநீர்த் திட்டத்தின்கீழ் 14-2-2003 முதல் நான்கு நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. 16-12-2003-ல் சிறுவாணி அணையில் இருந்த நீர்மட்டத்தின்படி (867.81 மீ.) கிடப்பு இருப்பு நீரின்

மட்டத்திலிருந்து (Dead Storage Level) சுமார் 4.41 மீ. மட்டுமே பயன்படுத்தக்கூடிய நீரின் அளவாக இருந்ததால் இந்த நீராதரத்தினை வைத்து தினந்தோறும் குடிநீர் வழங்கப்படும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**94—**

### பொது சுகாதார கழிப்பிடக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 46422—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரத்தில் 21-வது வார்டு அகர திருக்கோலக்காத் தெருவிற்கு பொது சுகாதார கழிப்பிடக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 21-வது வார்டு பகுதியிலுள்ள அகர திருக்கோலக்காத் தெருவில் நகராட்சிக்கோ, அரசுக்கோ சொந்தமான இடமில்லை என்பதால் பொது சுகாதார கழிப்பிடக் கட்டடம் கட்ட இயலாது.*

**95—**

### ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைத்தல்

**வினா எண் 46879—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகராட்சி 24-வது வார்டு கோவில் பத்து காமராசபுரம் மற்றும் 2-வது வார்டு ஊழியக்காரன் தோப்பு ஆதிதிராவிடர் தெருவில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?*





*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 23-வது வார்டு காமராசபுரம் பகுதியில் வால்மீகி அம்பேத்கர் ஆவாஸ் யோஜனா (VAMBAY) திட்டத்தில் சமுதாயக்கூடத்திற்கு பின்புறம் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டப்பட்டு வருகிறது. 2-வது வார்டு ஊழியக்காரன் தோப்பில் அரசுக்குச் சொந்தமான இடமில்லை என்பதால் அப்பகுதியில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்ட இயலாது.*

**96—**

### ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டுதல்

**வினா எண் 46881—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி நகராட்சி 3-வது வார்டு கோவிலான்தெருவில், 21-வது வார்டு அகர திருக்கோலக்காத் தெரு மற்றும் கோவிந்தராஜ் நகரில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சி கோவிலான்தெரு, அகர திருக்கோலக்காத் தெரு மற்றும் கோவிந்தராஜ் நகர் ஆகிய பகுதிகளில் அரசுக்குச் சொந்தமான இடமில்லை என்பதால் அப்பகுதிகளில் ஒருங்கிணைந்த சுகாதார வளாகம் கட்ட இயலாது.*

[2004 ஜூலை 23

97—

## நாய்கள் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டுத் திட்டம்

**வினா எண் 48029—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாநகரில் சாலைகளில் திரியும் நாய்களை விஷ ஊசி மூலம் கொல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத்திற்கு ஊறு விளைவிக்கும் வகையில் உள்ள நாய்கள், வெறிநாய் தாக்குதலுக்குள்ளான நாய்கள் மற்றும் குணப்படுத்த முடியாத நோய்கள் தாக்கியுள்ள நாய்கள் பிடிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் நாய்கள் இனப்பெருக்கக் கட்டுப்பாட்டுத் திட்டம் (Animal Birth Control Programme) மூலமாகவும் அவற்றின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

98—

## குடிநீர் மற்றும் சாலை வசதிகள் செய்தல்

**வினா எண் 48058—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, கம்பாலப்பட்டி ஊராட்சி, ஆனைமலை ஒன்றியம், அமணநங்காபுரம் கிராமத்திற்கு குடிநீர் மற்றும் சாலை வசதி செய்து தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* 2002-03 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தில் ரூபாய் ஒரு இலட்சம் மதிப்பீட்டில் ஆழ்குழாய்க் கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்திக் குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூபாய் மூன்று இலட்சம் மதிப்பீட்டில் தார்ச் சாலை அமைக்கப்பட்டுள்ளது.

99—

## ஔவையாருக்கு விழா நடத்துதல்

**வினா எண் 48169—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஔவையாருக்கு விழா நடத்த அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* ஔவையாருக்கு விழா நடத்துவது குறித்த கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. இந்திய நாட்டின் விடுதலைக்காகவும், தமிழ்மொழி மேன்மையைக் காக்கவும், அருந்தொண்டாற்றிய தலைவர்களையும், அறிஞர் பெருமக்களையும் போற்றிப் புகழ்ந்திட அவர்தம் பெருமையை நாட்டு மக்கள் அறிந்திடச் செய்யும் வகையில் அவர்களது பிறந்த நாளினையொட்டி அவர்களது திருவுருவச் சிலைகளுக்கு அரசின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை செய்யப்படும் நிகழ்ச்சி ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது. மேலும், சில விழாக்கள் மாவட்டங்களிலும் கொண்டாடப்பட்டு வருகின்றன. இச்சூழ்நிலையில் ஔவையாருக்கு அரசு விழா நடத்தும் கருத்துரு அரசின் பரிசீலனையில் இல்லை.

100—

### தார்ச் சாலை அமைத்தல்

**வினா எண் 48970—திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மதுரை மாநகராட்சி, 2-வது வட்டம், பி.பி. குளம் வருமான வரி அலுவலகம் அருகிலுள்ள சேக்கிழார் தெருவிற்கு தார்ச் சாலை அமைத்துத் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை மாநகராட்சி, 2-வது வட்டம், பி.பி.குளம், வருமான வரி அலுவலகம் அருகில் உள்ள சேக்கிழார் தெருப் பகுதியில் பாதாளச் சாக்கடை அமைக்கும் பணி நடைபெற உள்ளதால் அப்பணி முடிவுற்ற பின்னர் தார்ச் சாலை அமைக்கப்படும்.

## பட்டியல் 6

1—

### பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் விவரம்

**வினா எண் 44136—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், சேலம் (கி) பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களில் சீட்டு நிதிச் சட்டத்தின்கீழ், கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவை எத்தனை?

(ஆ) நிறுவனத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டவை எத்தனை?



**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) சேலம் (கி) பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களில் கம்பெனி சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட சீட்டு கம்பெனிகள் 423 உள்ளன.

(ஆ) சேலம் (கி) பதிவு மாவட்டத்தில் நிறுவனங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட சீட்டு நிறுவனங்கள் 10 உள்ளன.

2—

### பள்ளிக்கு மின் வசதி செய்தல்

**வினா எண் 33166—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், வடக்கு செட்டியாபட்டி பள்ளிக்கு மின்சார வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், வடக்கு செட்டியாபட்டியில் அமைந்துள்ள பள்ளிக்கு மின்னிணைப்பு கோரி விண்ணப்பம் எதுவும் இதுநாள் வரை மின் வாரியத்தால் பெறப்படவில்லை. பள்ளிக்கு மிக அருகில் மின் பாதை அமைந்துள்ளதால் மின்னிணைப்பு கோரி விண்ணப்பம் அளிக்கப்பட்டால் "ஒரு நாள் மின்னிணைப்பு" திட்ட அடிப்படையில் விண்ணப்பம் பெறப்பட்ட அன்றையதினமே மின்னிணைப்பு வழங்க ஆவன செய்யப்படும்.

**3—**

## மின் திட்டம்

**வினா எண் 33781—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) பட்டுக்கோட்டை தொகுதி, வாடியக்காடு 110 கி.வா. மின் திட்டம் வேலை நடைபெறுகிறதா?*

*(ஆ) எப்போது முடிக்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) ஆம், வாடியக்காடு கிராமத்தில் (மதுக்கூர்) 66/11 கி.வோ. என்ற தரத்தில் இருந்த துணை மின் நிலையம் கடந்த 18—6—2003 அன்று 10 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின் மாற்றியுடன் 110/11 கி.வோ. தரம் உள்ளதாக உயர்த்தப்பட்டுள்ளது. மற்றும் 18—7—2003 அன்று கூடுதலாக 16 எம்.வி.ஏ. திறன் கொண்ட மின்மாற்றி (110/33 கி.வோ.) ஒன்றும் இயக்கி வைக்கப்பட்டுள்ளது.*

*மதுக்கூர் (வாடியக்காடு) மின் நிலையத்திலிருந்து 11 கி.வோ. மின் அழுத்தத்தை கொண்ட நான்கு மின்னூட்டிகள் மூலம் மதுக்கூர் நகர்ப்பகுதி, அத்திவெட்டி, பெரியக்கோட்டை, தரமங்கோட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளுக்கு மின் விநியோகம் செய்யப்படுகிறது. வாடியக்காடு கிராமம் பகுதிக்கு பெரியக்கோட்டை மின்னூட்டியின் மூலம் உயர் மின் அழுத்தத்துடன் கூடிய மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.*

**4—**

## மாற்று வழிப்பாதையில் மின்சாரம் அளித்தல்

**வினா எண் 37127—திரு. தி. வேல் முருகன்:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



*(அ) பண்ருட்டி தொகுதி, நத்தம் கிராமத்திலுள்ள மின்சாரம் மாற்று வழிப்பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத்துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, நத்தம் கிராமத்திற்கு தற்பொழுது திருவாமூர் 22 கிலோ வோல்ட் உயர் அழுத்த மின் பாதை வழியாக தடங்கல் இல்லா மின் விநியோகம் செய்யப்படுகின்றது. ஆதலால் அக்கிராமத்திற்கு மாற்று வழிப்பாதையில் மின்சாரம் அளிப்பதற்கு அவசியம் இல்லை.*

**5—**

## துணை மின் நிலையங்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு வாகனம் வழங்குதல்

**வினா எண் 40561—திருமதி காசாம்பு பூமாலை:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு மின்சார வாரிய துணை நிலையங்களுக்கும், உதவி செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கும் வாகனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வாரிய நிலை ஆணை (தலைவர்) எண்.6 (தொழில் நுட்ப கிளை) தேதி 11-1-88 பிரகாரம் துணை மின் நிலையங்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் அலுவலகங்களுக்கு தகுதிகள் அறிந்து சம்பந்தப்பட்ட தலைமைப்*

பொறியாளர்கள் முறையீடுகளின் பேரிலும் ஒப்பந்தப்புள்ளி குழுவினரால் கீழ்க்கண்டவாறு ஒதுக்கீடுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

சென்னை மண்டலத்தில் இரண்டு உதவி செயற்பொறியாளர்களுக்கு ஒரு ஜீப்பும், மற்ற மண்டலங்களில் மூன்று உதவி செயற் பொறியாளர்களுக்கு ஒரு ஜீப்பும் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

செயற்பொறியாளர்/இயக்கம்/230 கே.வி. துணை மின் நிலையம் அவர்களுக்கு ஒரு இலகுவகை வாகனம் ஒதுக்கப்படுகிறது. மின் பாதைகள்/ உட்கோட்டத்திற்கு ஒரு கனரக வாகனமும் ஒரு இலகு வகை வாகனமும் ஒதுக்கப்படுகின்றன.

மேற்கூறிய இலகுவகை வாகனங்களும் கனரக வாகனமும் துணை மின் நிலையங்களில் எப்போதும் நிறுத்தப்படுகின்றன. எனவே, அவைகள் துணை மின் நிலையங்களின் அவசர வேலைகளுக்கு பயன் படுத்தப்படுகின்றன.

110 கே.வி. துணை மின் நிலையம் பொறுப்பிலிருக்கும் உதவி செயற்பொறியாளர்களுக்கு ஒதுக்கப்படும் வாகனங்கள் அந்தந்த துணை மின் நிலையங்களில் இரவு நேரங்களில் நிறுத்தப்படுகின்றன. அவை அவசர காலங்களுக்கு உபயோகப்படுத்தப்படுகின்றன. மேலும்,

1) தற்போது புழக்கத்திலிருக்கும் வாகனங்கள் பயனற்றதாக உள்ள போதும்

2) புதியதாக துணை கோட்டங்கள் உருவாகும்போதும், வாரிய சட்டதிட்டங்களுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளி குழுவின் ஒப்புதலின் பேரில் வாகனங்கள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன.

6—

## இளநிலைப் பொறியாளருக்கு குடியிருப்பு வசதி

**வினா எண் 41473—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கொரட்டி மின் பகிர்மான நிலையத்தின் குடியிருப்பில் இளநிலைப் பொறியாளர் ஏன் தங்குவதில்லை என்பதை அரசு பரிசீலிக்குமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், கொரட்டி 33/11 கே.வி. துணை மின் நிலையத்தில் நான்கு (4) மின் பாதை ஆய்வாளர்களுக்கான குடியிருப்புகளும், நான்கு (4) உதவியாளர்களுக்கான குடியிருப்புகளும் (Quarters) அமைக்கப்பட்டு குடியிருந்து வருகிறார்கள். கொரட்டி 33/11 கே.வி. துணை மின் நிலைய வளாகத்தில் இளநிலைப் பொறியாளருக்கு குடியிருப்பு இல்லை. இளநிலைப் பொறியாளர் பொது மக்கள் அணுகும் தூரத்தில் தங்கி வருகிறார்.

7—

## சட்ட விழிப்புணர்வு ஏற்படுத்துதல்

**வினா எண் 49755—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ள படிப்பறிவு இல்லாத பொதுமக்களிடம் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராமப்புறங்களிலுள்ள படிப்பறிவு இல்லாத பொதுமக்களிடம் சட்ட விழிப்புணர்வை ஏற்படுத்த சென்னை, மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் கோவை அரசு சட்டக் கல்லூரி மாணவர்களால் கோவை மாவட்டத்தில் பல கிராமங்களிலும் சட்ட விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது.

[2004 ஜுலை 23

8—

## அருள்மிகு மரகதவல்லி முக்தீசுவரர் ஆலயச் சிறப்பைத் தெரிவித்தல்

**வினா எண் 34878—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மதுரை மாரியம்மன் கோயிலின் அருகிலுள்ள மரகதவல்லி முக்தீசுவரர் ஆலயத்தில் குறிப்பிட்ட காலங்களில் சூரிய ஒளி மூலவர் மீது படுவதும் மக்கள் வழிபடுவதும் அரசு அறியுமா?*

*(ஆ) இதனை மேலும் விரிவாக மக்கள் அறியச் செய்ய அரசு முயற்சி எடுக்குமா?*

*(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*(அ), (ஆ) மற்றும் (இ) மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு மரகதவல்லி முக்தீசுவரர் கோயிலில் அர்த்த மண்டபம் முன், மேல் உள்ள மூன்று துவாரங்கள் வழியாக மார்ச்சு மாதம் 11-ஆம் தேதி முதல் 23-ஆம் தேதி வரையிலும், செப்டம்பர் மாதம் 19-ஆம் தேதி முதல் 30-ஆம் தேதி வரையிலும், சூரிய ஒளிக்கதிர்கள் காலை 6-30 மணியளவில் கருவறைக்குள் பிரவேசித்து காலை 7-00 மணிக்குள் கருவறையிலிருந்து ஒளிக்கதிர்கள் வெளியேறிவிடும். அச்சமயம் சுவாமியின் மீது ஒளிக்கதிர்கள் படரும் நேரத்தில் அபிஷேகமும் பின்பு தீபாராதனையும் நடைபெறும் மேற்கண்ட காலத்தில் பக்தர்களுக்கு விசேஷ பிரசாதம் வழங்கப்படும். மேற்படி விவரங்கள் அனைத்தும் திருக்கோயிலில் உள்ள அறிவிப்பு பலகையில் நிரந்தரமாக பக்தர்கள் பார்க்கும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளன. மேற்படி காலங்களில் பத்திரிகையாளர்களுக்கு தகவல் தரப்பட்டு அதன் விவரம் அனைத்து செய்தித்தாள்களிலும் வெளியிடப்படுகிறது. இதனால் பொதுமக்கள் கூடி நின்று பார்க்கும் வண்ணம் வசதி செய்யப்பட்டு அனைவரும் தரிசனம் செய்யும் வண்ணம் வரிசை ஒழுங்குமுறைப்படுத்தப்படுகிறது. மேற்படி காலங்களில் பக்தர்களின் வருகையும் அதிகரித்துள்ளது.*



2004 ஜுலை 23]

9—

## கோயில் ஊரணிக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 41450—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*உசிலம்பட்டி தொகுதி, குறவக்குடி ஊராட்சி, பத்திரகாளியம்மன் கோயில் ஊரணிக்கு சுற்றுச்சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், குறவக்குடி ஊராட்சியில் உள்ள பத்திரகாளியம்மன் கோயில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயில். எனவே துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத கோயிலுக்குச் சொந்தமான ஊரணிக்கு சுற்றுச்சுவர் கட்டுவதற்கு நிதி வசதி செய்திட இயலாது.*

10—

## கோயிலுக்குச் சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 46304—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையிலுள்ள சுப்ரமணிய சுவாமி கோயிலுக்கு தடுப்புச்சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

*இத்திருக்கோயில் வெளிப்பகுதி முழுவதும் சுற்றுச்சுவர் அமைக்கப்பட்டுள்ளது. உட்பகுதியில் சுற்றுச்சுவர் அமைத்துக் கொடுக்க உபயதாரர்கள் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இதற்கென*

[2004 ஜூலை 23

உத்தேசமாக ரூ.11.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்கொள்ள வரைபடங்கள் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகிறது. உபயதாரர்கள் முன்வரும் நிலையில், மதிப்பீடு மற்றும் வரைபடங்கள் அங்கீகரித்து பணி மேற்கொள்ளப்படும்.

**11—**

## கலைக் கல்லூரி துவக்குதல்

**வினா எண் 12199—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) அரசு கலைக் கல்லூரி துவக்கப்படாத முதல் நிலை நகராட்சிகள் எத்தனை?*

*(ஆ) வட்ட தலைநகராக உள்ள நகராட்சி பகுதியில் கலைக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) 23 முதல் நிலை நகராட்சிகளில் அரசு கலைக் கல்லூரிகள் துவக்கப்படவில்லை.*

(ஆ) புதிய கலைக் கல்லூரிகளை பல்கலைக்கழகங்களே தனது உறுப்புக் கல்லூரிகளாகத் துவக்கும். எனவே, தேவையின் அடிப்படையில், வட்டத் தலைநகரமாக உள்ள நகராட்சிப் பகுதிகளில் கலைக் கல்லூரிகள் அமைப்பது குறித்து பல்கலைக்கழகங்கள் பரிசீலிக்கும். தற்போதுள்ள நிதிநிலைமையில் பல்கலைக் கழகங்களால் புதிய கல்லூரிகளை துவக்க இயலாது. எனினும், அப்பகுதிகளில் கலைக் கல்லூரிகளைத் துவக்க பல்கலைக்கழகங்கள் பரிந்துரை செய்தால் அப்பரிந்துரைகளின் மீது அரசின் அப்போதுள்ள நிதிநிலைக்கு ஏற்ப அரசு முடிவு எடுக்கும்.

**12—**

## வெளிநாட்டு மொழிநூல்கள் விவரம்

**வினா எண் 12422—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

*(அ) தமிழக அரசு ஆவணக் காப்பகத்தில் பாதுகாக்கப்பட்டுள்ள வெளிநாட்டு (ஆங்கிலம் தவிர) புத்தகங்கள் எத்தனை மொழிகளில் உள்ளன?*

*(ஆ) அவைகளில் அரிய கருத்துகளுள்ள புத்தகங்களை மொழி பெயர்ப்பு செய்து அரசு சார்பாக வெளியிடப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகத்தில் பிரஞ்ச், டச்சு, இத்தாலி மற்றும் இலத்தீன் மொழி நூல்கள் மொத்தம் 200 உள்ளன.*

*(ஆ) உத்தேசம் எதுவுமில்லை.*

**13—**

## பள்ளியை தரம் உயர்த்துதல்

**வினா எண் 12579—திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் பேரூராட்சி, 14-வது வார்டில் இருக்கும் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக மாற்ற இந்நிதியாண்டில் அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு.செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் ஒன்றியத்தில் 14-வது வார்டில் பாராக்கல்லூர் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியின் மாணவர்கள் எண்ணிக்கை 178 ஆகும். இதே ஊரில் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி ஒன்றும், மகளிர் உயர்நிலைப் பள்ளி ஒன்றும் ஏற்கெனவே உள்ளது என்பதாலும் இப்பள்ளியை இக்கல்வி ஆண்டில் நடுநிலைப் பள்ளியாக தரம் உயர்த்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.*

14—

## ஆரம்பப் பள்ளி துவக்குதல்

**வினா எண் 19094—திரு. ப. நீலகண்டன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதியில் ஆற்காடு, திமிரி ஒன்றியங்களில் இந்நிதியாண்டில் (2002-2003) புதிதாக ஆரம்பப் பள்ளி துவக்க தேர்வு செய்யப்பட்ட இடங்கள் எவை?

**விடை—**

**மாண்புமிகு திரு.செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், ஆற்காடு மற்றும் திமிரி ஒன்றியங்களில் இருந்து கருத்துருக்கள் ஏதும் பெறப்படாத நிலையில் 2002-2003 ஆம் கல்வியாண்டில் புதிதாக ஆரம்பப் பள்ளி துவங்க ஆணை ஏதும் வழங்கப்படவில்லை.

15—

## கல்லூரிகளில் அறக்கட்டளை தொகைகள்

**வினா எண் 20310—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1991-96 ஆம் ஆண்டு காலத்தில் கல்லூரி மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் அறக்கட்டளைகள் கல்லூரிகள் நிறுவப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கல்லூரிகளில் எவ்வளவு தொகை இட்டு வைக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1991-96 ஆம் ஆண்டு காலத்தில் கல்லூரி மாணவ, மாணவியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கீழ்க்காணும் 11 அரசு கலைக் கல்லூரியில், ரூ.3,03,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து மூவாயிரம் மட்டும்)



மற்றும் 3 அரசு உதவி பெறும் கலைக் கல்லூரியில் ரூ.2,45,000/- (ரூபாய் இரண்டு இலட்சத்து நாற்பத்தைந்தாயிரம்) அறக்கட்டளை தொகைகள் இட்டு வைக்கப்பட்டுள்ளன.

| | | ரூபாய் |
|---|---|---|
| (அ) அரசு கல்லூரிகள்— | | |
| (1) | தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் கலைக் கல்லூரி, மயிலாடுதுறை | 3,000 |
| (2) | அரசு மகளிர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை | 25,000 |
| (3) | பெரியார் ஈ.வெ.ரா கல்லூரி, திருச்சி | 25,000/- |
| (4) | அரசு கலைக் கல்லூரி, நந்தனம், சென்னை-35 | 25,000/- |
| (5) | பாரதி மகளிர் கல்லூரி, வடசென்னை, சென்னை-108 | 25,000/- |
| (6) | இராணி மேரிக் கல்லூரி, சென்னை-4 | 25,000/- |
| (7) | காயிதே மில்லத் அரசினர் மகளிர் கல்லூரி, சென்னை-2 | 85,000/- |
| (8) | கல்வியியல் மேம்பாட்டு நிறுவனம், சைதை, சென்னை-15 | 5,000/- |
| (9) | அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கல்லூரி, வாலாசாப்பேட்டை | 50,000/- |
| (10) | உலகநாத நாராயணசாமி அரசினர் கலைக் கல்லூரி, பொன்னேரி | 20,000/- |
| (11) | அரசு கலைக் கல்லூரி, பரமக்குடி | 15,000/- |
| (ஆ) உதவி பெறும் கல்லூரிகள் | | |
| (1) | தமிழ்வேள் உமாமகேஸ்வரனார் கரந்தை கலைக் கல்லூரி, தஞ்சாவூர் | 1,00,000/- |
| (2) | நீதிபதி பஷீர் அகமது சையது மகளிர் கல்லூரி, சென்னை-18 | 25,000/- |
| (3) | பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30 | 1,20,000/- |

இவ்வறக்கட்டளை காப்புத் தொகையிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையிலிருந்து அறக்கட்டளை நன்கொடையாளர்களின் நிபந்தனைப்படி மாணவ, மாணவியர்க்கு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரில் பரிசுத் தொகைகள்/பொருட்கள் வழங்கப்படுகிறது.

**16—**

## உறைவிடப் பள்ளி முகாம்கள் அமைத்தல்

**வினா எண் 38295—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாநகராட்சிப் பகுதியில் 2003-2004 ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் உறைவிடப் பள்ளி முகாம்கள் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* சேலம் மாநகராட்சிப் பகுதியில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் உண்டு உறைவிடப் பள்ளி முகாம்கள் அளிக்கும் திட்டம் பரிசீலனையில் இல்லை. இப்பகுதியில் 1. அன்பு இல்லம், 2. அமலா அன்புக்கரங்கள், 3. நேசக்கரங்கள் போன்ற அரசுசாரா நிறுவனங்கள் நடத்தும் உண்டு உறைவிடப் பள்ளிகள் நல்லமுறையில் நடைபெறுகின்றன. எனவே, சேலம் மாநகர் பகுதியில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்துகின்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

**17—**

## நடுநிலைப் பள்ளியில் அடிப்படை வசதி செய்தல்

**வினா எண் 38652—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 1-வது தொகுதியிலுள்ள சஞ்சீவராயன்பேட்டை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி வரும் ஆண்டில் செய்து கொடுக்கப்படுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் 1-வது தொகுதியிலுள்ள சஞ்சீவராயன்பேட்டை துவக்கப் பள்ளியில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் கழிப்பிட வசதி ரூ.20,000/- செலவில் செய்து தரப்பட்டுள்ளது. மேலும் பள்ளிக்கு குடிநீர் வசதி சத்துணவு அறையில் ரூ.35,000/- மதிப்பில் செய்து தரப்பட்டுள்ளது.

**18—**

## வேலைவாய்ப்பு வழிகாட்டல் மையங்கள் அமைத்தல்

**வினா எண் 38656—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சேலம் மாவட்டத்தில் உள்ள அரசு கல்லூரிகளில் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வழிகாட்டல் (Career-Guidance Cell) மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், பயனடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்

*(ஆ)* 20 பேர்

**19—**

## நூலகம் அமைத்தல்

**வினா எண் 47294—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலை தொகுதி, உடுக்கம்பாளையம் ஊராட்சியில் புதிதாக நூலகம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில் எப்போது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) உடுமலை தொகுதி, உடுக்கம்பாளையம் ஊராட்சியில் 4-9-97 முதல் ஊர்ப்புற நூலகம் ஒன்று ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**20—**

## பள்ளியுடன் நூலகங்களை இணைத்தல்

**வினா எண் 47376—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள எல்.எம்.சி. மேல்நிலைப் பள்ளியுடன் நூலகங்களை இணைக்கும் திட்டம் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளி மாணவர்களிடையே பொது நூலகங்களில் படிக்கும் ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு ஒவ்வொரு பொது நூலகமும் அதன் அருகிலுள்ள மேல்நிலை, உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஒன்றினை தத்தெடுக்க வேண்டும் என்று அரசாணை (2டி) எண்38, பள்ளிக் கல்வி, நாள்:11-6-2002ல் ஆணையிடப்பட்டுள்ளது அதன்படி சீர்காழி தொகுதி, சீர்காழி நகரிலுள்ள எல்.எம்.சி. மேல்நிலைப் பள்ளியினை 28-11-2002-ல் சீர்காழி கிளை நூலகத்துடன் இணைக்கப்பட்டு, நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

**21—**

## நடுநிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டுதல்

**வினா எண் 48000—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி ஆதிபெரமனூரின் நடுநிலைப் பள்ளிக்கு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி ஆதிபெரமனூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்கு 2002-2003 ஆம் ஆண்டில் அனைவருக்கும் கல்வி திட்டத்தின்கீழ் மூன்று வகுப்பறை கட்டடம் ரூ.4.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

**22—**

## கண்காணிப்பாளர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 49365—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், இடைப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கண்காணிப்பாளர் பதவியிடம் நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், இடைப்பாடி, அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் காலியாக இருந்த பதவி உயர்த்தப்பட்ட கண்காணிப்பாளர் பணியிடம் 12-12-2003 அன்று நிரப்பப்பட்டு விட்டது.

**23—**

## மருத்துவமனைகளில் ஆலோசனை மையம் தொடங்குதல்

**வினா எண் 28319—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தற்கொலைகளின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் ஆலோசனை மையம் தொடங்கும் திட்டம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் தற்கொலைகளின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் அந்த நபர்களுக்கு ஆலோசனை வழங்கும் மையம் தொடங்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**24—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 39447—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, முசிறி ஒன்றியம், பெரமங்கலம் ஊராட்சி, பெரமங்கலத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மக்கள்தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் *1413* ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி ஊராட்சி ஒன்றியம், பெரமங்கலம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**25—**

## ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்தல்

**வினா எண் 39449—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், திருப்பஞ்சிலி ஊராட்சி, திருப்பஞ்சிலியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மக்கள் தொகைக்கு ஏற்ப போதுமான அளவில் *1413* ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுவதால் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், திருப்பஞ்சிலி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் இல்லை.

**26—**

## கிராம புனர் வாழ்வுத் திட்ட விவரம்

**வினா எண் 20355—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் கிராம புனர் வாழ்வுத் திட்டம் (கிராமின் புனர்வாஸ் யோஜனா) செயல்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனால் பயன் அடைந்தோர் எத்தனை பேர்?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்டத்தில் கிராம புனர் வாழ்வுத் திட்டம் *6-5-2003* அன்று ஆரம்பிக்கப்பட்டது. அன்றைய தினம் சேலத்தில் நடைபெற்ற முகாமின் பயனாளிகளின் விவரம் பின்வருமாறு—

பயனாளிகளின் எண்ணிக்கை

| | | |
|---|---|---|
| (1) மூன்று சக்கர வண்டி | - | 82 நபர்கள் |
| (2) சக்கர நாற்காலி | - | 33 நபர்கள் |
| (3) கால் தாங்கிகள் | - | 136 நபர்கள் |
| (4) காதொலி கருவிகள் | - | 25 நபர்கள் |
| (5) அடையாள அட்டைகள் | - | 152 நபர்கள் |

அடுத்த கட்டமாக கீழ்க்கண்ட நான்கு முகாம்கள் நடைபெற்று பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர்—

| வ.எண் | முகாம் நடந்த இடம் | நாள் | அடையாள அட்டைகள் வழங்கிய எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | மேட்டூர் | 3-6-2003 | 856 |
| 2 | ஆத்தூர் | 4-6-2003 | 682 |
| 3 | எடப்பாடி | 24-6-2003 | 586 |
| 4 | சேலம் | 25-6-2003 | 374 |
| | மொத்தம் | - | 2498 |

27—

## பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் நிதியுதவி அளித்தல்

**வினா எண் 41426—திரு. மா.ப. ரோகிணி (என்கிற) கிருஷ்ணகுமார்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரூர் தொகுதி பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு திட்டத்தில் தகுதி வாய்ந்தவர்கள் மதுக்கரை வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் விண்ணப்பம் கொடுத்தும் இதுவரை நிதியுதவி கிடைக்கவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கிடைக்கும்?



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) பேரூர் தொகுதியில் இத்திட்டத்தின்கீழ் 2002-2003ஆம் ஆண்டில் 62 விண்ணப்பங்களுக்கும், 2003-2004ஆம் ஆண்டில் 32 விண்ணப்பங்களுக்கும் ஆக மொத்தம் 94 விண்ணப்பங்களுக்கு நிதியுதவி இன்னும் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளன.

(ஆ) நிலுவை விண்ணப்பங்களுக்கு முதுநிலையின் அடிப்படையில் 2003—2004ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப நிதியுதவி அளிக்கப்படும்.

28—

## அருந்ததியர் இனத்தவர்களுக்கு பட்டா வழங்குதல்

**வினா எண் 33753—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், கொம்பேடு கிராமத்தில் நிலையாக வசிக்கும் அருந்ததியர் இனத்தவர் வீடு கட்டிக் கொண்டுள்ள இடத்தை பட்டா வழங்க அரசிடம் கருத்துரு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொம்பேடு கிராமத்தில் மொத்தம் ஒன்பது குடும்பங்கள் உள்ளன. இதில் ஐந்து குடும்பங்கள் பட்டா இடத்தில் வீடு கட்டி வசித்து வருகின்றன. மீதி நான்கு குடும்பங்கள் ஏரி புறம்போக்கில் கூரை வீடு கட்டி வசித்து வருகின்றனர். இவர்கள் நீர்நிலை புறம்போக்கில் வீடு கட்டி உள்ளதால், இக்குடும்பங்களுக்கு வீட்டுமனை ஒப்படை செய்ய இயலாது.

**29—**

**தீண்டாமையை ஒழிக்க நடவடிக்கை**

**வினா எண் 34047—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் தீண்டாமை இன்னும் சில மாவட்டங்களில் உள்ளது என கூறப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அரசு இதை இல்லாமல் செய்ய ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தீண்டாமை என்னும் கொடிய பழக்கத்தை அறவே ஒழிக்கவும், இது தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒளி, ஒலி கருவிகளுடன் கூடிய நடமாடும் விளம்பரப் பிரிவு ஒன்று 1983-ஆம் ஆண்டு முதல் சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. இப்பிரிவு காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், கடலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், சேலம், நாமக்கல், தருமபுரி, ஈரோடு, கோவை மற்றும் நீலகிரி மாவட்டங்களை மேற்பார்வையிட்டு வருகின்றது. பிற மாவட்டங்களிலும் தீண்டாமை ஒழிப்பை சிறப்பாக செயல்படுத்தும் வகையில், கூடுதலாக ஒரு நடமாடும் விளம்பரப் பிரிவு, திருச்சிராப்பள்ளியை தலைமையிடமாகக் கொண்டு 1989 முதல் செயல்பட்டு வருகின்றது. புதிய சரித்திரம், வாழு வாழவிடு, காலம் மாறிப் போச்சு ஆகிய திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு கிராமங்களில் தொலைக்காட்சி மூலம் ஒளிப்பரப்பப்படுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் பொதுமக்கள் ஒற்றுமையுடன் தீண்டாமை என்ற கொடிய பழக்கம் இல்லாமல் வாழ்கின்ற ஒரு கிராமம் தேர்வு செய்யப்பட்டு, அந்த கிராமத்திற்கு ஒரு இலட்சம் பரிசு வழங்கப்பட்டு வருகிறது. மனித நேய வாரவிழா, வில்லுப்பாட்டு நிகழ்ச்சி, சமபந்தி போஜனம் போன்ற செயல்பாடுகள் மூலமாகவும் தீண்டாமை எண்ணத்தைப் போக்க வகை செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கைகள் மூலமாக தீண்டாமைப் பழக்கம் முற்றிலுமாக ஒழிக்கப்பட்டு வருகிறது.





**30—**

**புதிய வகுப்பறை கட்டுதல்**

**வினா எண் 35130—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, செம்மங்குடி ஆதிதிராவிட தொடக்கப் பள்ளியில் புதிய வகுப்பறை கட்டி மேஜை, நாற்காலிகள் வாங்கிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, செம்மங்குடி ஆதிதிராவிடர் நல தொடக்கப் பள்ளியில் தற்போது 64 மாணவ/மாணவியர் படித்து வருகின்றனர். 3 ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது ஆசிரியர்களுக்கும், மாணவ, மாணவியர்களுக்கும் தேவையான கட்டடம் மற்றும் மரச்சாமான்கள் போதுமானதாக உள்ளது.

**31—**

**வகுப்பறை கட்டுதல்**

**வினா எண் 35424—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளிக்கு போதுமான அளவு வகுப்பறை கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா—

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, கொண்டல் ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிக்கு 2003-2004-ஆம் நிதியாண்டில் மத்திய சிறப்பு நிதி

தொகுப்பிலிருந்து (Special Central Assistance) ரூ.6.60 இலட்சம் செலவில் இரண்டு வகுப்பறைகள் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, கட்டுமானப் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**32—**

## பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுதல்

**வினா எண் 43008—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) புதுக்கோட்டை தொகுதி, கோமாபுரம் ஊராட்சி கோமாபுரத்தில் ஆதிதிராவிடர் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி, கந்தர்வக்கோட்டை வட்டம், கோமாபுரம் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலப் பள்ளி ஏதும் இல்லை. எனவே மேற்படி ஊரில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்டுவது குறித்த வினாவிற்கு இடமில்லை.

**33—**

## ஆதிதிராவிட மாணவ, மாணவியர் பயனாளிகள் விவரம்

**வினா எண் 46124—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நல மாணவ, மாணவியர் உணவுக் கட்டணம் ரூ.225-லிருந்து ரூ.300 ஆக உயர்த்தியதில் எத்தனை பேர் பயனடைந்துள்ளனர்?*





**விடை—**

**மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்:**

மாணவர்கள் 1,129 பேரும், மாணவியர்கள் 335 பேரும் ஆக மொத்தம் 1,464 பேர் பயனடைந்துள்ளனர்.

**34—**

## நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்டுதல்

**வினா எண் 4746—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*எடப்பாடி தொகுதி, எடப்பாடி நகராட்சி, கவுண்டம்பட்டியில் உள்ள நியாய விலைக் கடைக்கு கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், எடப்பாடி நகராட்சிப் பகுதியில் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையின்கீழ் 1,427 குடும்ப அட்டைகளுடன் கவுண்டம்பட்டியில் செயல்படும் நியாய விலைக் கடை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இக்கடைக்கு கட்டடம் கட்ட எடப்பாடி நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தினை ஒதுக்கீடு செய்ய எடப்பாடி நகராட்சி நிர்வாகத்தினை தொடர்பு கொண்டதில், இவ்விடத்தினை ஒதுக்க இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளதாலும் வேறு காலியிடம் ஏதும் இல்லாததாலும் அரசால் கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது.

[2004 ஜூலை 23

35—

## ஆடு வளர்க்க கடன் வழங்குதல்

**வினா எண் 32645—திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரூர் தொகுதி ஊத்தங்கரை வட்டம், திருவனப்பட்டி ஊராட்சி, திருவனப்பட்டி காலனியைச் சேர்ந்தவர்கள் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்தவர்களாதலால் அங்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆடு வளர்க்க கடன் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது இத்திட்டம் ஏதும் இல்லை. திருவனப்பட்டி கிராமத்திற்கு சேவை செய்யும் ஆனந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியானது 5-5-1999 முதல் துவங்கப்பட்டு 4 ஆண்டுகளே ஆன நிலையில் போதிய சொந்த நிதி ஆதாரம் இல்லை. தருமபுரி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி தற்போது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதியுதவி வழங்குவது நிறுத்தப்பட்ட நிலையில், ஆனந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி ஆடு வளர்க்க கடன் வழங்க இயலாத நிலையில் உள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

36—

## கறவை மாட்டுக் கடன் வழங்குதல்

**வினா எண் 33632—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) பண்ருட்டி தொகுதி, அன்னதானம்பேட்டை கிராமத்தில் கறவை மாட்டுக் கடன் வழங்கிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அன்னதானம்பேட்டை கிராமம், குறிஞ்சிப்பாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி மற்றும் கடலூர் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி ஆகியவற்றின் விவகார எல்லையில் உள்ளது. இந்த இரண்டு வங்கிகளும், கறவை மாடு வாங்குவதற்கு துணை விதிகளுக்குட்பட்டும் வங்கியியல் நெறிமுறைகளுக்குட்பட்டு கடன்கள் வழங்கலாம். எனினும் 2000—2001, 2001—2002 மற்றும் 2002—2003 ஆகிய ஆண்டுகளில் குறிஞ்சிப்பாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், கறவை மாட்டுக் கடன் கோரி விண்ணப்பம் பெறப்படாத நிலையில் அதன் உறுப்பினர்களுக்கு கறவை மாட்டுக்கடன் ஏதும் வழங்கவில்லை.

கடலூர் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் கீழ்க்கண்டவாறு கடந்த மூன்று ஆண்டுகளில் கறவை மாடு வாங்க கடன் வழங்கப்பட்டுள்ளது.

| வருடம் | கறவை மாடு வாங்க வழங்கப்பட்ட கடன் தொகை | |
|---|---|---|
| | பயனாளிகள் எண்ணிக்கை | தொகை (ரூ. லட்சம்) |
| 2000-01 | 86 | 48.62 |
| 2001-02 | 67 | 52.68 |
| 2002-03 | 82 | 36.58 |

மேற்படி கடலூர் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிலும் அன்னதானம்பேட்டை கிராமத்தில் கறவைமாடு கடன் கோரி யாரும் விண்ணப்பிக்கவில்லை. எனவே உறுப்பினர்கள் மேற்படி வங்கிகளில் கறவை மாடு கடன் கோரி விண்ணப்பம் அளித்தால் மேற்படி வங்கிகளின் விதிமுறைகளுக்குட்பட்டு கறவை மாட்டுக் கடன் வழங்கப்படும்.

**37—**

**கடல் மீன் கூட்டுறவுச் சங்கம் மூலம் பொருட்கள் வழங்குதல்**

**வினா எண் 35183—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம் தாண்டவன்குளம் ஊராட்சி, கொட்டாயமேடு மீன்வர்களுக்கு கடல் மீன் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக அத்தியாவசியப் பொருட்கள் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், தாண்டவன்குளம் ஊராட்சி, கொட்டாயமேடு பகுதி தாண்டவன்குளம் நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. தாண்டவன்குளம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் தாண்டவன்குளம் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. 112 குடும்ப அட்டைகளுடன் 2.5 கி.மீ. தொலைவில் உள்ள கொட்டாயமேடு பகுதி தாண்டவன்குளம் நியாயவிலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளது. கொட்டாயமேடு மீனவர்களுக்கு கடல் மீன் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக அத்தியாவசியப் பொருட்களை வழங்க வழிவகை இல்லை. மேலும் கொட்டாயமேடு பகுதியில் போதிய குடும்ப அட்டைகள் இல்லாததால் அப்பகுதியில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.*



**38—**

**குறுகிய காலக் கடன் விவரம்**

**வினா எண் 35750—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*2002 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் ஒரே தவணையில் கடன் தீர்வுத் திட்டத்தின்கீழ் குறுகிய காலக் கடன் எவ்வளவு பேருக்கு வழங்கப்பட்டது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*சேலம் மாவட்டத்தில் ஒரே தவணை தீர்வுத் திட்டத்தின்கீழ் 2002 ஆம் ஆண்டில் 2485 நபர்கள் பயனடைந்துள்ளனர்.*

**39—**

**கடன் உதவி வழங்குதல்**

**வினா எண் 38390—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சேலம் மாவட்டத்தில் நுகர்வோர் தொழில்களுக்கான கடன் உதவி வழங்கப்பட்டுள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் ரூ.441.05 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.*

40—

## கிராம அங்காடிக்கு கட்டடம் கட்டுதல்

**வினா எண் 38423—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சட்டமன்ற தொகுதி மைவயல் கிராம அங்காடிக்கு கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி சட்டமன்றத் தொகுதியில் மைவயல் நியாய விலைக் கடை அரசர்குளம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் பகுதிநேரக் கடையாக செயல்பட்டு வருகிறது. பகுதிநேர நியாய விலைக் கடைக்கு ஊர்மக்களே இலவச கட்டட வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதால் அரசு திட்டங்களின்கீழ் பகுதிநேரக் கடைக்கு சொந்த கட்டடம் கட்ட சாத்திய கூறுகள் இல்லை.

41—

## மதுபானக் கடைகளை நடத்தும் திட்டம்

**வினா எண் 39742—திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுபானக் கடைகளை கூட்டுறவு பண்டகசாலைகளுக்கு ஒதுக்கீடு செய்து விற்பனை செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், தற்போது தமிழ்நாட்டில் எத்தனை கடைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் மாநிலத்தில் "டாஸ்மாக்" தவிர மற்ற நிறுவனங்கள் மதுபானக் கடைகள் நடத்த வாய்ப்பில்லை.

42—

## கேளிக்கை வரி ஏய்ப்பு குறித்து நடவடிக்கை

**வினா எண் 42960—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திரையரங்குகளில் கேளிக்கை வரி ஏமாற்றியுள்ளதாக 2002 ஆம் ஆண்டு டிசம்பர் வரை எத்தனை திரையரங்குகளின் மீது அரசு நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

திரையரங்குகளில் கேளிக்கை வரி சம்பந்தமாக 1-4-2002 முதல் 31-12-2002 வரை 36,503 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு 3174 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

43—

## நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுதல்

**வினா எண் 43340—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்றாம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியம், தோரணம்பதி-கொரட்டி வேளாண்மை கூட்டுறவு வங்கி கட்டடத்தில் இயங்கி வரும் நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தோரணம்பதி மற்றும் கொரட்டி தனித்தனி வருவாய் கிராமங்கள். இரு வருவாய் கிராமங்களின் பெயர்களை இணைத்து தோரணம்பதி, கொரட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி செயல்பட்டு வருகிறது. தோரணம்பதி மற்றும் கொரட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி நடத்தும் தோரணம்பதி முழுநேரக் கடை 632 குடும்ப அட்டைகளுடன் வங்கியின் சொந்தக் கட்டடத்தில் வாடகையின்றி செயல்பட்டு வருகிறது. அதே வங்கியின்கீழ் செயல்படும் கொரட்டி முழுநேர நியாய விலைக் கடை 523 குடும்ப அட்டைகளுடன் ஜே.வி.வி.டி. திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்படுகிறது. இதனால் இக்கடைகளுக்கு அரசு நிதியில் கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**44—**

### கூட்டுறவு வங்கி கிளை திறத்தல்

**வினா எண் 44548—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசலில் கும்பகோணம் மத்திய கூட்டுறவு வங்கி கிளை ஒன்றை புதியதாக திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை

(ஆ) கேள்வி எழவில்லை



**45—**

### நியாய விலைக் கடைகள் அமைத்தல்

**வினா எண் 44609—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல் ஊராட்சி, வழுதலைக்குடி கிராமத்திலும், சீர்காழி ஒன்றியம் ஆதமங்கலம் ஊராட்சியிலும் நியாய விலை கிளைக் கடைகள் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, திருக்கருகாவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் 584 குடும்ப அட்டைகளுடன் செயல்படும் ராதாநல்லூர் நியாய விலைக் கடையில் வழுதலைக்குடி பகுதி மக்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். வழுதலைக்குடிக்கும் ராதாநல்லூர் நியாய விலைக் கடைக்கும் இடைப்பட்ட தொலைவு 1½ கி.மீ. ஆகும். மருதாங்குடி நியாய விலைக் கடையில் ஆதமங்கலத்தை சேர்ந்த 92 குடும்ப அட்டைதாரர்கள் அத்தியாவசியப் பொருட்களை பெற்று வருகின்றனர். மருதாங்குடி நியாய விலைக் கடைக்கும் ஆதமங்கலம் பகுதிக்கும் இடைப்பட்ட தொலைவு 1½ கி.மீ. ஆகும். பகுதி நேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் மற்றும் இரண்டு நியாய விலைக் கடைகளுக்குமிடையே குறைந்தது 2 கி.மீ. தொலைவு இருக்க வேண்டும் ஆகிய நிபந்தனைகள் நிறைவு பெறாததால் வழுதலைக்குடி மற்றும் ஆதமங்கலம் ஆகிய பகுதிகளில் பகுதி நேரக் கடை அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

46—

### திரையரங்குகள் மீது நடவடிக்கை எடுத்தல்

**வினா எண் 44910—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001—02 ஆம் ஆண்டில் சேலம் வணிக வரிக் கோட்டத்திற்கு உட்பட்ட திரையரங்குகள் எத்தனை தணிக்கையிடப்பட்டது?

(ஆ) இதில் குறைகள் கண்டுபிடிக்கப்பட்டது எத்தனை?

(இ) இதன் மூலம் பெறப்பட்ட இணைக்கத் தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2001—02 ஆம் ஆண்டில் சேலம் வணிக வரிக் கோட்டத்தில் 40.50 திரையரங்குகள் தணிக்கை செய்யப்பட்டன.

(ஆ) அவற்றில் 279 குறைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

(இ) இதன் மூலம் ரூ.2.37 இலட்சம் இணைக்கத் தொகையாக பெறப்பட்டது.

47—

### பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்தல்

**வினா எண் 45350—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பனமங்கலத்தில் பகுதிநேர நியாய விலைக் கடை துவங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட 165 குடும்ப அட்டைகளுடன் உள்ள பனமங்கலம் பகுதி 819 குடும்ப அட்டைகளுடன் உள்ள கோவில் பத்து நியாய விலைக் கடையில் இணைக்கப்பட்டுள்ளது. பகுதிநேரக் கடை அமைக்க குறைந்தது 200 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை நிறைவு பெறாததால் பனமங்கலத்தில் பகுதிநேரக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

48—

### நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுதல்

**வினா எண் 48279—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, திருமல் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, திருமல் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடை திருமல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் முழுநேரக் கடையாக 328 குடும்ப அட்டைகளுடன் 17-11-77 முதல் வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில், மேற்படி நியாய விலைக் கடைக்கு அரசு திட்டத்தின்கீழ் புதிய கட்டடம் கட்ட சாத்தியக்கூறுகள் இல்லை.

[2004 ஜூலை 23

49—

## நியாயவிலைக் கடைகளின் விவரம்

**வினா எண் 51604—திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகரில் முழுநேர மற்றும் பகுதிநேர நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

*29-2-2004-ல் சேலம் மாவட்டத்தில் நிறுவனங்கள் வாரியாக நடத்தப்படும் நியாய விலைக் கடைகளின் விபரம் பின்வருமாறு:*

| | முழுநேர நியாய விலைக் கடைகள் | பகுதிநேர நியாய விலைக் கடைகள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. கூட்டுறவு நிறுவனங்கள் | 1,038 | 185 | 1,223 |
| 2. பெண்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகள் | 10 | .. | 10 |
| 3. நடமாடும் நியாய விலைக் கடைகள் | .. | .. | 5 |
| மொத்தம் | 1,048 | 185 | 1,238 |

50—

## கால்நடை மருத்துவமனைக்கு மருந்துகள் வழங்குதல்

**வினா எண் 16571—திரு. இ. கணேசன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

*2000-2001ஆம் ஆண்டு சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு கால்நடை மருத்துவமனைக்கு எவ்வளவு மதிப்புள்ள மருந்துகள் அரசு வழங்கியுள்ளது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*2000-2001 ஆம் ஆண்டு சேலம் மாவட்டம் எடப்பாடி அரசு கால்நடை மருத்துவமனைக்கு ரூ.77,900/- மதிப்புள்ள மருந்துகள் வழங்கப்பட்டுள்ளன.*

51—

## குடியிருப்புகள் வழங்குதல்

**வினா எண் 14979—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேட்டூர் நகரில் நீண்டகாலமாக வீட்டுவசதி வாரிய குடியிருப்புகளில் வாடகைக்கு குடியிருந்து வரும் ஆசிரியர்களுக்கு அவர்கள் வாழும் குடியிருப்புகளை அரசு நிர்ணயிக்கும் விலையில் அவர்களுக்கே வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) விலைக்கு விற்க இயலாது.

(ஆ) வினா எழவில்லை.

[2004 ஜூலை 23

52—

## இலவச வீடுகள் கட்டிக்கொடுத்தல்

**வினா எண் 33348—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்டறம்பள்ளி தொகுதி தோக்கியம் ஊராட்சியில் 5 வீடுகள் எரிந்து வீடு இழந்த மக்களுக்கு அரசு முன்னுரிமை கொடுத்து இலவச வீடுகள் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை

(ஆ) வினா எழவில்லை.

சட்டமன்ற வினாவில் கூறப்பட்டுள்ள தோக்கியம், நாட்டறம்பள்ளி சட்டமன்ற தொகுதியில் உள்ள ஊராட்சியாகும், தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பணிகள் தற்போது மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள குடிசைப்பகுதிகளில் மட்டுமே செயல்படுத்தப்படுகிறது. எனவே சட்டமன்ற வினாவில் கூறப்பட்டுள்ள தோக்கியம் ஊராட்சி பகுதியில் இலவச வீடுகள் அமைக்க தற்போது குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் இயலாது.

53—

## அரசு அலுவலர்களுக்கு வாடகை குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 37690—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) எடப்பாடி தொகுதி கொங்கணாபுரம் பேரூராட்சி பகுதியில் அரசு பணியாளர்கள் குடியிருப்பிற்காக நகர்ப்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் குடியிருப்புகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது நகர்ப்புற வளர்ச்சித் திட்டம், செயல்பாட்டில் இல்லை. மாவட்ட தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடம் இவற்றில் மட்டுமே தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே எடப்பாடி தொகுதி கொங்கணாபுரம் பேரூராட்சி பகுதியில் அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம் செயல்படுத்த இயலாது.

(ஆ) எழவில்லை.

54—

## அரசு அலுவலர்களுக்கு வாடகை குடியிருப்பு கட்டுதல்

**வினா எண் 37691—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சியில் அரசு பணியாளர்கள் குடியிருப்பதற்கு நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின்கீழ் குடியிருப்புகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆமெனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்:**

(அ) தற்போது நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் செயல்பாட்டில் இல்லை. மாவட்ட தலைமையிடம் மற்றும் வருவாய்க் கோட்டத் தலைமையிடம்

இவற்றில் மட்டுமே தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே எடப்பாடி தொகுதி, பூலாம்பட்டி பேரூராட்சி பகுதியில் அரசு அலுவலர் வாடகை குடியிருப்பு திட்டம் செயல்படுத்த இயலாது.

(ஆ) எழவில்லை.

**55—**

**வீட்டு வசதிக் கடன் வழங்க செய்யப்பட்ட குறியீடு**

**வினா எண் 39335—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் அரசு பொறுப்புறுதியின் பேரில் காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வீட்டு வசதி கடன் வழங்க எத்தனை கோடி நிதி வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டது?

(ஆ) பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட தொகை எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. அனிதா ஆர் ராதாகிருஷ்ணன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.**

(அ) 2001-2002-ஆம் ஆண்டிற்கு காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு வீடு கட்ட கடன் வழங்க தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தால் நிர்ணயம் செய்யப்பட்ட குறியீடு ரூ.1345/- இலட்சம்.

(ஆ) பயனீட்டாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.1171.25 இலட்சம்.

**56—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 6972—திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கன்னியாகுமரி மாவட்டம், ஆயக்கோடு ஊராட்சி, கூட்டு குடிநீர்த் திட்டம் அமல்படுத்தப்பட்டதா? நிலை என்ன?

(ஆ) இதனால் பயன் பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு? இதற்கு ஏற்படும் செலவு என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டார் ஊராட்சி ஒன்றியம், ஆயக்கோடு ஊராட்சியில் உள்ள ஆயக்கோடு, மணவிளை, மலவிளை, புல்லை ஆகிய நான்கு குடியிருப்புகளும் அடங்கிய கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு மக்களுக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

(ஆ) ரூ.18.75 இலட்சம் செலவில் நிறைவேற்றப்பட்ட இத்திட்டத்தின் மூலம் 3474 நபர்கள் பயன் பெறுகின்றனர்.

**57—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா எண் 11786—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன் மகாதேவி பேரூராட்சி, ஜெயந்தி நகர் 3 தெருக்களிலும் தார்ச் சாலை அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேரன்மகாதேவி பேரூராட்சி ஜெயந்தி நகரில் உள்ள தெரு 24.5 மீட்டர் நீளமும் 4 மீட்டர் அகலமும் உள்ளது. தற்போது மெட்டல் சாலையாகவும் இங்கு சுமார் 50 வீடுகளும் உள்ளன. மேலும்

இத்தார்ச் சாலை அமைக்க ரூ.2.00 லட்சம் செலவாகும். தற்போது பேரூராட்சியில் போதுமான நிதி வசதி இல்லாததால் இப்பணி மேற்கொள்ள இயலவில்லை.

**58—**

**கூட்டுக் குடிநீர்த் திட்டம்**

**வினா எண் 11831—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேரன்மகாதேவி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, புங்கம்பட்டி கிராமத்தை கீழப்பாவூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் இணைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேரன்மகாதேவி, கடையம் ஒன்றியம், தெற்கு மடத்தூர் ஊராட்சி, புங்கம்பட்டி குடியிருப்புக்கு தனி மின் விசை திட்டம் நிறைவேற்றப்பட்டு பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. ஐந்தாம் கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டமானது கீழப்பாவூர் RTP ஐந்தாம்கட்டளை மற்றும் 21 குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்ட திட்டமாகும். இக்குடியிருப்பு ஐந்தாம் கட்டளை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை.

**59—**

**ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்**

**வினா எண் 12141—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சி, 4-வது வார்டு பங்களா கடைத் தெரு, வடக்கோரம், அக்ரோ சர்வீஸ் சமீபம் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வீரவநல்லூர் பேரூராட்சி, 4-வது வார்டு பங்களா கடை பஜார் தெருவில் 1996 ஆம் ஆண்டு 10-வது நிதிக் குழுத் திட்டத்தின்கீழ் ஆழ்குழாய்க் கிணறு எண் 14 அமைக்கப்பட்டு நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**60—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 12144—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடையம் ஒன்றியம், புங்கம்பட்டி கிராமத்திற்கு கூடுதலாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடையம் ஊராட்சி ஒன்றியம், புங்கம்பட்டி குடியிருப்பில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு மக்கள் பயனுக்கு கொண்டு வரப்பட்டு, மேற்கொண்டு பராமரிப்பிற்காக ஊராட்சியிடம் 8/2002-ல் ஒப்படைக்கப்பட்டுவிட்டது.

[2004 ஜூலை 23

61—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 12738—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, இடங்கணசாலை பேரூராட்சி, நாப்பாளையம் தரைமட்டத் தொட்டி கட்டி இதுவரை குடிநீர் ஏற்றவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அங்குள்ள தரைமட்டத் தொட்டிக்கு நீரேற்று குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சிக்குட்பட்ட 1-வது வார்டு நாப்பாளையம் தரைமட்ட நீர்த்தேக்கத் தொட்டி ஆழ்துளை கிணற்றில் நீர் வறண்டு விட்டதால் நீர் ஏற்ற முடியவில்லை. மேலும் மேற்படி பகுதிக்கு தற்பொழுது இருப்பாளி புளோரைடு திட்டத்தின்கீழ் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட்டு தட்டுப்பாடின்றி குடிநீர் சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

62—

## தொகுப்பு வீடுகள்கட்டுதல்

**வினா எண் 15570—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சுரக்காயூர் ஊராட்சி கீழத்தெருவிற்கு தொகுப்பு வீடுகள் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



2004 ஜூலை 23]

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஒன்றியம், சுரக்காயூர் ஊராட்சியில் இதுவரை 59 தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கப் பட்டுள்ளன. அதில் சுரக்காயூர் கிழக்கு ஆதிதிராவிடர் தெருவிற்கு 1990-91 ஆம் ஆண்டில் 20 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

63—

## தொகுப்பு வீடுகள் கட்டுதல்

**வினா எண் 15580—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சி மாதாகோவில் தெருவிற்கு காலனி வீடுகள் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவாரூர் மாவட்டம், குடவாசல் ஊராட்சி ஒன்றியம், சேங்காலிபுரம் ஊராட்சியில் 75 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. இதில் சேங்காலிபுரம் ஊராட்சி, மாதாகோவில் தெருவில் 35 தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

64—

## குடிநீர் தட்டுப்பாட்டை போக்குதல்

**வினா எண் 16398—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அ) திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி 10-வது வார்டு நெடுவிளை தெற்குத் தெருவில் குடிநீர் பிரச்சினை ஏற்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சி நெடுவிளை தெற்குத் தெருவில் பாதுகாக்கப்பட்ட பொது குடிநீர் குழாய் மூலம் 1½ குதிரைத் திறன் மின் விசைப்பம்பு அமைத்தும், சின்டெக்ஸ் தொட்டி மூலமும் குடிநீர் தினசரி சப்ளை செய்யப்பட்டு வருகிறது.

**65—**

**சமுதாய நலக் கூடம், பயணிகள் நிழற்குடை அமைத்தல்**

**வினா எண் 16407—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிக்குட்பட்ட ஆர்.சி. நந்தன்குளம் கிராமத்தில் சமுதாய நலக் கூடமும், பயணிகள் நிழற்குடையும் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் வட்டம், திசையன்விளை பேரூராட்சிப் பகுதி மக்களுக்கு அவர்கள் வசிக்கும் இடத்திலிருந்து சுமார் 200 மீட்டர் தூரத்தில் நாங்குநேரி-திசையன்விளை சாலையில் பெட்டைகுளம் விலக்கு பாதையில் ஒரு பயணிகள் நிழற்குடை அமைக்கப்பட்டு பொதுமக்கள் அதைப் பயன்படுத்தி வருகிறார்கள். மேலும் நிழற்குடை அவசியம் எழவில்லை. மேலும், ஆர்.சி. நந்தகுளம் குக்கிராமமாக உள்ளதால், சமுதாயக் கூடம் அமைப்பதற்கான அவசியம் இல்லை.



**66—**

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 21918—திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி மேடற அள்ளி ஊராட்சி, சோளப்பாடியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க குழாய்க் கிணறு (Bore Well) போடப்பட்டு பணி துவங்கப்படாமலிருப்பது அரசு கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, நல்லம்பள்ளி ஒன்றியம், மேடற அள்ளி ஊராட்சி, சோளப்பாடி குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 680 ஆகும். இக்குடியிருப்பில் இரண்டு கையிறைப்பான்கள் செயலில் உள்ளன. மேலும் 2001-02 ஆம் நிதியாண்டில் ரூ.5.46 இலட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசைப்பம்பு திட்டம் நிறைவேற்றப்பட்டு 4/2002 அன்று ஊராட்சி வசம் பராமரிப்பிற்காக ஒப்படைக்கப்பட்டு தற்போது செயலில் உள்ளது.

[2004 ஜூலை 23

67—

**மழைநீர் சேகரிப்பு திட்டம்**

**வினா எண் 23512—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மழைநீர் சேகரிப்பு திட்டத்தில் பொதுமக்களையும் ஈடுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மழைநீர் சேகரிப்பு குறித்த முக்கியத்துவத்தினை பொதுமக்களுக்கு உணர்த்த 2002 ஆம் ஆண்டு விழிப்புணர்ச்சி மற்றும் பயிற்சி முகாம்கள் அனைத்து நகர மற்றும் கிராமப்புறங்களில் நடத்தப்பட்டது. பொதுமக்கள் தங்களது குடியிருப்புகளில் பெய்யும் நீரை திறந்தவெளிக் கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணறுகளில் சேமித்து உபயோகிக்கவும், அறிவுறுத்தப்படுகிறது. மழை நீர் சேகரிப்பு திட்டத்தின் கீழ் நகர மற்றும் கிராமப்புறங்களிலுள்ள குளம், குட்டை ஆக்கிரமிப்பின்றி காப்பாற்றிடவும், மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புக்களாக இவற்றினை மாற்றியமைக்கவும் பொது மக்கள் இதில் ஈடுபடும்படி கோரியும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் சுயஉதவிக் குழுக்கள் மூலமாகவும் இந்த மழை நீர் சேகரிப்பு விழிப்புணர்வு மக்களைச் சென்றடையும் வண்ணம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

இதைத் தொடர்ந்து மழை நீர் சேகரிப்பை அனைத்து தனியார் கட்டடங்கள், அரசுக் கட்டடங்கள், பல மாடிக் கட்டடங்கள், தொழிற்சாலைகள், வீடுகள் ஆகியவற்றில் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டி,



1) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் கட்டட விதிகள், 1972,

2) தமிழ் நாடு மாவட்ட பலமாடி (ம) பொது கட்டட விதிகள், 1973 மற்றும்

3) சென்னை மாநகராட்சி கட்டட விதிகள் 1972 மற்றும் மதுரை மாநகராட்சி கட்டட விதிகள் 2002 விதிகள் ஆகியவற்றிற்குத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்படி 10–10–2003–க்குள் அனைத்து கட்டடங்களிலும், மழை நீர் சேகரிப்பு வசதிகள் கட்டாயமாக ஏற்படுத்த வேண்டும்.

இதன் விளைவாக, தமிழ்நாட்டில் மழை நீர் சேகரிப்பு திட்டம் சட்டபூர்வமாக கட்டாயமாக்கப்பட்டு தற்போது 99% மேல் வீடுகள், அரசுக் கட்டடங்கள், தனியார் கட்டடங்கள் ஆகியவற்றில் மழை நீர் சேகரிப்பு திட்டம் செயலாக்கப்பட்டுள்ளது.

68—

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்**

**வினா எண் 24303–திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கிருஷ்ணாபுரம் பேரூராட்சி பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி கிருஷ்ணாபுரம் பேரூராட்சிப் பகுதியில் 13 ஆழ்துளைக் கிணறுகளும், ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியும் இருப்பதால், புதிதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் திட்டம ஏதும் இல்லை.

[2004 ஜூலை 23

69—

### சமத்துவபுரத்தில் வீடுகளை பயனாளிகளுக்கு ஒப்படைத்தல்

**வினா எண் 28496—டாக்டர் ஆர். கோவிந்தசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருத்தாசலம் தொகுதி, விருத்தாசலம் ஒன்றியம், பள்ளிப்பட்டு என்ற இடத்தில் அமைக்கப்பட்டுள்ள சமத்துவபுரத்தில் நிறைய வீடுகள் காலியாகவே உள்ளன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், மேற்படி வீடுகளை பயனாளிகளுக்கு ஒப்படைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், விருத்தாசலம் ஒன்றியம், பள்ளிப்பட்டு சமத்துவபுரத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான குழு பயனாளிகளை தேர்வு செய்து 100 வீடுகளுக்கு பயனாளிகள் பட்டியல் பெறப்பட்டு வீடுகள் கட்டி முடிக்கப்பட்டது. கட்டி முடிக்கப்பட்ட வீடுகளை பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.

70—

### சாலை மற்றும் குடிநீர் வசதி செய்தல்

**வினா எண் 31054—திரு. வெ. ஏழுமலை:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி பேரூராட்சியில் மந்தைவெளி பகுதியிலுள்ள நரிக்குறவர்களுக்கு சாலை மற்றும் குடிநீர் வசதி செய்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?



2004 ஜூலை 23]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செஞ்சி பேரூராட்சிப் பகுதிக்குட்பட்ட மந்தைவெளி பகுதியில் 25 நரிக்குறவர் குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். மேற்படி பகுதியில் ஜல்லி சாலை அமைக்கப்பட்டுள்ளது. தற்போதைக்கு போதுமானதாக உள்ளது. மேற்படி பகுதியில் 2002—2003 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின் மூலம் ஓர் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு மார்க்—2 கைப்பம்பு பொருத்தப்பட்டு உள்ளது. இதில் போதுமான குடிநீர் கிடைக்கிறது. மேலும் மேற்படி பகுதியில் தெரு மின் விளக்கு வசதியும் பேரூராட்சியிலிருந்து செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

71—

### கொசு ஒழிப்புத் திட்டம்

**வினா எண் 33777—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகரில் கொசுத் தொல்லையை ஒழிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பட்டுக்கோட்டை நகரினை ஆறு பிரிவாகப் பிரித்து பத்து துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு வாரம் ஒரு முறை அனைத்துத் தெருக்களிலும் கொசுத் தடுப்பு மருந்து பட்டுக்கோட்டை நகராட்சியால் தெளிக்கப்பட்டு வருகிறது. தற்போது பிரிமிபாஸ் மீதைல்—50/இ.சி என்ற

[2004 ஜூலை 23

கொசு ஒழிப்பு மருந்து அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தில் வாங்கப்பட்டு, கொசு ஒழிப்புப் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நகரிலுள்ள பெரிய மற்றும் சிறிய சாக்கடை வாய்க்கால்கள், தூர் வாரும் பணியும் துரிதமாக நடைபெற்று வருகிறது. இப்பணியின் மூலம் கொசு உற்பத்தி வெகுவாகக் குறைக்கப்பட்டு வருகிறது.

72—

## ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

**வினா எண் 34654–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதி இடங்கணசாலை பேரூராட்சி கே.கே. நகர் பழனிச்சாமி வீட்டுக்கு அருகில் அய்யனாரப்பன் கோயில் அருகில் நல்லண்ணம்பட்டி தழுவக்காரர் வட்டம் பகுதி ஆகிய இடங்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், இடங்கணசாலை பேரூராட்சி, கழுவக்காரர் வட்டம், 2002—2003 ஆம் ஆண்டு வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு மேற்படி பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. கே.கே. நகர் பழனிச்சாமி வீட்டிற்கு அருகில் அய்யனாரப்பன் கோயில் பகுதியில் புதியதாக ஆழ்துளைக் கிணறு அமைக்கப் பேரூராட்சியில் போதிய நிதி வசதி இல்லை. எனவே தற்போது மேற்படி ஆழ்துளைக் கிணறு அமைக்க வழிவகையில்லை.



2004 ஜூலை 23]

73—

## திரையரங்குகள்

**வினா எண் 35664–திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்தில் எத்தனை திரையரங்குகள் இயங்கி வருகிறது?

(ஆ) இந்த திரையரங்குகளில் அடிப்படை வசதிகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டத்தில் தற்போது 107 திரையரங்குகள் இயங்கி வருகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | நிரந்தர திரையரங்குகள் | 81 |
| 2. | அரை நிரந்தர திரையரங்குகள் | 9 |
| 3. | நடமாடும் திரையரங்கம் | 17 |
| | மொத்தம் | 107 |

(ஆ) சேலம் மாவட்டத்தில் இயங்கி வரும் திரையரங்குகளில் அடிப்படை வசதிகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திரையரங்குகள் வருவாய் துறையினரால் அடிக்கடி திடீர் தணிக்கை செய்யப்பட்டு, அடிப்படை வசதிகளில் குறைகள் ஏதும் காணப்பட்டால் அவைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்யப்படுகிறது.

74—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 37123—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி - நத்தம் கிராமத்தில் நொண்டிக்குப்பம் பகுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்து தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த நத்தம் ஊராட்சியிலுள்ள நத்தம் குடியிருப்பின் ஒரு பகுதி நொண்டிக்குப்பம். இக்குடியிருப்பின் மக்கட்தொகை 2055 ஆகும். இதற்கேற்ப இக்குடியிருப்பில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய குடிநீர்த் திட்டத்தின் மூலமும் தனியாக ஆழ்துளைக் கிணறு அமைத்து மின்னிறைப்பான் மூலமும் நேரிடையாகவும் குடிநீர் வழங்கப்படுகிறது.

75—

## மீன் அங்காடியை சீர் செய்தல்

**வினா எண் 40458—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரத்தில் 8-வது வட்டத்திலுள்ள மீன் அங்காடி பராமரிப்பின்றி சுகாதார கேடு உள்ளதால், சீர் செய்ய அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திருவொற்றியூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட எர்ணாவூர் கிராமம் 8-வது வட்டத்திலுள்ள விம்கோ நகர் பகுதியிலுள்ள மீன் அங்காடிக்கு மாற்றாக மார்க்கெட் கடைகளுக்கு எதிர்புறமுள்ள தனியார் நிலம் தேர்வு செய்யப்பட்டு, புதிய மீன் அங்காடி கட்டுவதற்கு திருவொற்றியூர் நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தற்காலிகமாக வைக்கப்பட்டுள்ள மீன் கடைகளின் கழிவுப் பொருட்கள் தற்போது உடனுக்குடன் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது.

76—

## தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 40682—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், பெரியாலூர் ஆதிதிராவிடர் காலனியில் உள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

[2004 ஜூலை 23

77—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 41445—திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் பகுதிக்கு கூடுதல் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியம், கருமாத்தூர் ஊராட்சியைச் சார்ந்த கருமாத்தூர் குடியிருப்பிற்கு 1999 ஆம் ஆண்டு 60,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டு கருமாத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. இந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இக்குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகைக்கு போதுமானதாக உள்ளதாலும், திட்டம் நல்ல முறையில் செயல்படுவதாலும் கூடுதல் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவது பரிசீலனையில் இல்லை.

78—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுதல்

**வினா எண் 41447—திரு. லா. சந்தானம் :** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டிதொகுதி, தும்மக்குண்டுக்கு கூடுதல் மேல்நிலைத் தொட்டி கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி ஒன்றியம், தும்மக்குண்டு ஊராட்சியைச் சேர்ந்த தும்மக்குண்டு குடியிருப்பின் தற்போதைய மக்கட் தொகை 1000 ஆகும். தும்மக்குண்டு குடியிருப்பில் ஏற்கனவே உள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியே மேற்கண்ட மக்கள் தொகைக்கு போதுமானதாகும். இக்குடியிருப்பிற்கு சேடப்பட்டி—ஆண்டிப்பட்டி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் கீழ் குடிநீர் வழங்க பணிகள் நடைபெற்று வருகிறது.

79—

## தொகுப்பு விடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 41551—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அமரசிம்மேந்திரபுரம் ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

80—

### தொகுப்பு விடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 41554—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், சுப்பிரமணியபுரம் ஊராட்சி, கூகனூர் குடியிருப்பு ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

81—

### தொகுப்பு விடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 41563—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், ஊர்வணி ஊராட்சி, பள்ளத்திவயல் ஆதிதிராவிடர் காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத்தர அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

82—

### தொகுப்பு விடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 41565—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அரசர்குளம் கிழக்கு ஊராட்சி, அம்பேத்கர் ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

83—

## தொகுப்பு விடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 41627—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் தொகுதி, அனந்தநல்லூர் ஊராட்சி, கொத்தன் தெருவில் கட்டப்பட்ட காலனி வீடுகளை பழுதுபார்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

84—

## தொகுப்பு விடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 41657—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோவில் ஒன்றியம், களபம் ஆதிதிராவிடர் காலனி தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத்தர அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

85—

## தொகுப்பு விடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 42248—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், மேல்மங்கலம் ஊராட்சி, இடையன்கோட்டை ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

86—

## தொகுப்பு விடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 42250—திரு. ப. அரசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி ஒன்றியம், அழகர்குளம் வடக்கு ஆதிதிராவிட காலனியிலுள்ள தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரிசெய்ய மத்திய/மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகளை சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**87—**

## தொகுப்பு வீடுகளைக் கட்டுதல்

**வினா எண் 43840—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, செய்யாம் பாளையம் அருந்ததியர் காலனி மக்களுக்கு இலவச வீடுகள் கட்டித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், செய்யாம்பாளையம் அருந்ததியர் காலனி மக்களுக்கு 2002-2003 ஆம் ஆண்டில், 5 தொகுப்பு வீடுகள் கட்டித்தரப்பட்டுள்ளன.



**88—**

## தொகுப்பு வீடுகளை கட்டுதல்

**வினா எண் 43852—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் கிராமம், அருந்ததியர் காலனி மக்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், நல்லூர் கிராம அருந்ததியர் காலனிக்கு இதுவரை 25 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

**89—**

## தொகுப்பு வீடுகளை பழுதுபார்த்தல்

**வினா எண் 43855—திரு. அ. இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை ஊராட்சி ஒன்றியம், செய்யாம்பாளையம் காலனி வீடுகள் மோசமான நிலையிலுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பழுதடைந்துள்ள தொகுப்பு வீடுகளில் பழுதினை நீக்கி சரி செய்ய மத்திய மாநில அரசுத் திட்டம் ஏதும் தற்போது நடைமுறையில் இல்லை. எனவே, பழுதடைந்த தொகுப்பு வீடுகள் சரி செய்ய தற்போது வாய்ப்பு இல்லை.

**90—**

## தொகுப்பு விடுகளை கட்டுதல்

**வினா எண் 43857—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மாணிக்கநத்தம், பெரியசூரம்பாளையம், செருக்கலை புதுப்பாளையம், குஞ்சம்பாளையம், கருக்கம்பாளையம் ஆகிய காலனி மக்களுக்கு தொகுப்பு வீடுகள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், மாணிக்கநத்தம் காலனியில் இதுவரை 25 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. சிராப்பள்ளி ஊராட்சி, குஞ்சம்பாளையம், பெரியசூரம்பாளையம் காலனியில் இதுவரை 60 வீடுகள் கட்டப்பட்டுள்ளன. செருக்கலை ஊராட்சி, புதுப்பாளையம், கருக்கம்பாளையும் காலனியில் இதுவரை 50 தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.





**91—**

## சமுதாயக் கூடம் கட்டுதல்

**வினா எண் 46400—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி 3-வது வார்டு மனத்திடல் தெருவில் சமுதாயக்கூடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, 3—வது வார்டு பகுதியில் இந்நகராட்சிக்கு சொந்தமாகவோ, அரசுக்குச் சொந்தமாகவோ இடமில்லை என்பதால் சமுதாயக் கூடம் கட்ட இயலவில்லை.

**92—**

## சுற்றுச்சுவர் கட்டுதல்

**வினா எண் 46426—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, சீர்காழி நகர் 23—வது வார்டு சமுதாயக்கூடத்திற்கு சுற்றுச்சுவர் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2003-2004-ல் ரூ.2.00 இலட்சத்திற்கு சுற்றுச்சுவர் அமைக்க பரிந்துரை செய்துள்ளார். சுற்றுச்சுவர் கட்ட மதிப்பீடு தயார் செய்து மாவட்ட ஆட்சியர் நாகப்பட்டினம் அவர்களது நிர்வாக அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. உத்தரவு கிடைக்கப்பெற்றதும் டெண்டர் பெற்று பணி துவங்கப்படும்.

93—

## ஒளிநகல், நிகரி இயந்திரங்கள் வழங்குதல்

**வினா எண் 48223–திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலுள்ள செய்தித் துறை அலுவலகங்களுக்கு ஒளிநகல், நிகரி இயந்திரங்கள் (போட்டோ காப்பியர் மற்றும் பேக்ஸ் மெஷின்) எப்போது வழங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலுள்ள செய்தித் துறை அலுவலகங்களுக்கு ஒளிநகல் மற்றும் நிகரி இயந்திரங்கள் (போட்டோ காப்பியர் மற்றும் பேக்ஸ் மெஷின்) வாங்கி வழங்கப்பட்டு விட்டது.



2004 ஜூலை 23]

94—

## தொகுப்பு வீடுகளை கட்டுதல்

**வினா எண் 48581–திரு. ப. பொன்னம்பலம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், பனைக்குளம் ஊராட்சி, திருக்கானை கிராமத்தில் வாழும் ஆதிதிராவிட மக்களுக்குத் தொகுப்பு வீடுகள் கட்டித் தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியம், பனைக்குளம் ஊராட்சிக்கு 2003—2004 ஆம் நிதியாண்டில் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் 10 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் பனைக்குளம் கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு 2 வீடுகளும், திருக்கானை கிராமத்தில் வசிக்கும் ஆதிதிராவிடர்களுக்கு 8 தொகுப்பு வீடுகளும் ஆக மொத்தம் 10 தொகுப்பு வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு சம்பந்தப்பட்ட பயனாளிகளால் வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

95—

## உடற்பயிற்சி கருவிகள் வழங்குதல்

**வினா எண் 43175–திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பம் கிராமத்திலுள்ள இளைஞர்களுக்கு உடற்பயிற்சி கருவிகளை அளித்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) பண்ருட்டி தொகுதி, முத்தரசன்குப்பம் கிராமத்திலுள்ள இளைஞர்களுக்கு உடற்பயிற்சி கருவிகளை அளித்திட புதியதாக திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**96—**

**விளையாட்டு மைதானம் அமைத்தல்**

**வினா எண் 46904—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தாய்முடி எம்.டி பகுதியில் விளையாட்டு மைதானம் ஏற்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தாய்முடி எம்.டி பகுதியில் விளையாட்டு மைதானம் ஏற்படுத்திட செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.





**97—**

**கால்பந்து விளையாட்டு போட்டி நடத்துதல்**

**வினா எண் 46905—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை விளையாட்டு மைதானத்தில், மாவட்ட அளவில் உள்ள கால்பந்து விளையாட்டு நடத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை விளையாட்டு மைதானத்தில், மாவட்ட அளவில் உள்ள கால்பந்து விளையாட்டு நடத்திடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

**98—**

**கபடி போட்டி நடத்துதல்**

**வினா எண் 46907—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் பெண்களுக்கு கபடி போட்டி நடத்தப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறையில் பெண்களுக்கு கபடி போட்டி தனியாக நடத்திடும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.

99—

**உடற்பயிற்சி மைதானம் அமைத்தல்**

**வினா எண் 48468—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், குன்னிப்பாளையம் கிராமத்தில் இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மைதானம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நாமக்கல் மாவட்டம், கபிலர் மலை தொகுதி, மோகனூர் ஒன்றியம், குன்னிப்பாளையம் கிராமத்தில் இளைஞர் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி மைதானம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) நிலை எழவில்லை.



2004 ஜூலை 23]

100—

**சமுதாயப் பணிகள், கருத்தரங்கு நடத்துதல்**

**வினா எண் 48898—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளைஞர்களை நல்வழிப்படுத்த நலக்குழு அமைத்தல் சமூகப் பணியாற்றுதல் போன்ற சமுதாயப் பணிகள் ஆற்ற அறிவுபூர்வமான கருத்தரங்கு நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இன்பத்தமிழன், விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர்:**

(அ) இளைஞர்களை நல்வழிப்படுத்த நலக்குழு அமைத்தல், சமூகப் பணியாற்றுதல் போன்ற சமுதாயப் பணிகள் ஆற்ற அறிவுபூர்வமான கருத்தரங்கு நடத்தப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

## பட்டியல் 7

1—

**நேரடி கொள்முதல் நிலையத்திற்கு சொந்தக் கட்டடம்**

**வினா எண் 17519—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் அரசு நேரடி கொள்முதல் நிலையங்கள் பெருமளவில் தனியார் வாடகை கட்டடங்களிலேயே இயங்கி வருவதால், சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்தில் கீழ்க்கண்ட ஆறு இடங்களில் மட்டுமே தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினால் நேரடி நெல் கொள்முதல் நிலைய சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு இயங்கி வருகின்றன. (1) நாங்கூர் (2) வள்ளுவக்குடி (3) கிழையூர் (4) எடக்குடி (வடக்கு) (5) மாதானம் (6) பனங்காட்டான்குடி மேற்கண்ட ஆறு இடங்களைத் தவிர மற்ற எந்த இடங்களிலும் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.*

**2—**

## நேரடி கொள்முதல் திட்டம்

**வினா எண் 47074—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மண்டல விநியோக மையம் நேரிடையாக விவசாயிகளிடமே கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நடப்பு சம்பா (2004) பருவத்தில் மத்திய அரசின் உத்தரவின்படியும் மாநில அரசின் கொள்கையின்படி 15-12-2003 அன்று முதல் பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டம் (Decentralised Procurement) அறிமுகப்படுத்தப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இதன்படி கொள்முதல் விவசாயிகளிடமே நேரிடையாக செய்யப்படுகிறது.



**3—**

## சீட்டு நிறுவனங்கள் பற்றிய விவரம்

**வினா எண் 52245—திரு. செ. வெங்கடாஜலம்:** *மாண்புமிகு நிதி மற்றும் உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சேலம் மாவட்டத்தில் சீட்டு நிறுவனங்கள் எவ்வளவு உள்ளன?*

*(ஆ) நடத்தும் சீட்டுக்களின் எண்ணிக்கை 2003-04 ஆம் ஆண்டில் எவ்வளவு? மற்றும் காப்பீட்டுத் தொகை எவ்வளவு?*

**விடை—**

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி மற்றும் உணவு அமைச்சர்:**

*(அ) சேலம் மாவட்டத்தில் 2003-04 ஆம் ஆண்டில் 66 சீட்டு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.*

*(ஆ) 2003-04 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட சீட்டுக்களின் எண்ணிக்கை 494. காப்பீட்டுத் தொகை ரூ.4,26,18,000/-*

**4—**

## சட்ட ஆட்சிமொழி ஆணையம்

**வினா எண் 50070—திரு. பி.கே. சேகர்பாபு:** *மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சட்டத் துறையில் சட்ட ஆட்சிமொழி ஆணையம் செயல்பட்டு வருகிறதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் பணி விவரம் என்ன?*

விடை—

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) சட்ட ஆட்சிமொழி ஆணையம் 1965-ல் அமைக்கப்பட்டது. பின்னர், 1976-லும், 1978-லும் மாற்றியமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட ஆணையம் 19-4-1992 வரை செயல்பட்டது. ஆணையத்தின் பணிகளை நேரடியாகவும் திறம்படவும் செயல்படுத்தும் நோக்குடன் சட்டத் துறையின் 9-10-1992 நாளிட்ட அரசாணை (நிலை) எண் 299-ன்படி அந்த ஆணையம் சட்டத் துறையின் "சட்ட ஆட்சிமொழி பிரிவாக" (Official Language (LegislativeWing) மாற்றப்பட்டது. அதன்படி, இப்பிரிவு தற்போது சட்டத் துறையில் கூடுதல் செயலாளர் தலைமையில், சட்டத் துறை செயலாளரின் கட்டுப்பாட்டின்கீழ் செவ்வனே செயல்பட்டு வருகிறது.

(ஆ) (i) தமிழில் சட்டச் சொல் அகராதியை அறுதி செய்து வெளியிடுதல்,

(ii) மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும், அவற்றின் கீழ் இயற்றப்படும் விதிகளையும் தமிழில் மொழி பெயர்த்தல்,

(iii) மாநிலச் சட்டங்களையும், அவசரச் சட்டங்களையும் அவற்றின்கீழ் இயற்றப்படும் விதிகளையும் அறிவிக்கைகளையும் தமிழில் மொழி பெயர்த்தல், மற்றும்

(iv) இம்மாநில அரசால் குறித்துரைக்கப்படும் மொழி பெயர்ப்பு தொடர்பான பிற பணிகள் இப்பிரிவின் பணிகளாகும்.

5—

## அறநிலையத் துறை அலுவலகம் துவக்குதல்

**வினா எண் 34977—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் அறநிலையத் துறை அலுவலகம் புதியதாக துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வினா எழ வாய்ப்பில்லை.

6—

## சுற்றுலாப் பயணிகளுக்கு வசதி

**வினா எண் 36911—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் நந்தனார்க்காக நந்தி விலகிய சிவலோக நாதர் கோயிலுக்கு சுற்றுலாப் பயணிகள், யாத்திரிகர்கள் அதிகமாக வருவதால், அங்கு குடிநீர் வசதி, மின்சார வசதி கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

விடை—

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில், நந்தனார்க்காக நந்தி விலகிய சிவலோகநாதர் கோயிலுக்கு சுற்றுலாப் பயணிகள், யாத்திரிகர்கள் அதிகமாக வருவதால், அங்கு குடிநீர் வசதி, மின்சார வசதி கொடுப்பதற்கு அரசிடம் திட்டம் ஏதுமில்லை. தற்பொழுது சேவார்த்திகள் வசதிக்காக எவர்சில்வர் டப்பாவில் ஜீரோ-பி பொருத்தப்பட்டு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தேவைக்கேற்ப அவ்வப்பொழுது அத்தியாவசியமான கூடங்களில் மின் வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

7—

## அன்பு இல்லம்

**வினா எண் 39361—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இந்து சமய மற்றும் அறநிலையத் துறை மூலம் செங்கற்பட்டு அருள்மிகு சக்தி விநாயகர் ஆலய வருவாயிலிருந்து நடத்தப்பெறும் அன்பு இல்லத்தில் (அனாதை ஆசிரமம்) எத்தனை மாணவர்களுக்கு உணவு, உடை அளிக்கப்பட்டு வருகிறது?

(ஆ) அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு எவ்வளவு செலவாகிறது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) இந்து சமய அறநிலையத் துறை மூலம் செங்கற்பட்டு அருள்மிகு சக்தி விநாயகர் திருக்கோயிலில் செயல்பட்டு வந்த அன்பு இல்லம் 1990 மே மாதத்தில் மூடப்பட்டு விட்டதால், தற்போது அன்பு இல்லம் ஏதும் இத்திருக்கோயிலில் செயல்படவில்லை.

8—

## திருக்கோயில்களில் திருப்பணி

**வினா எண் 49335—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2002-2003 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்தில் வருமானம் இல்லாத எத்தனை திருக்கோயில்களில் அரசு திருப்பணி செய்துள்ளது?





**விடை—**

**மாண்புமிகு திரு. பி.சி. ராமசாமி, இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆளுகையின் கீழுள்ள 4 கிராமப்புறத் திருக்கோயில்களும், துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத ஆதிதிராவிடர்கள் வாழும் பகுதியில் உள்ள 3 திருக்கோயில்களில் 2002-2003 ஆம் ஆண்டில் திருப்பணி நடந்துள்ளது.

9—

## இடைநிலை ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 14706—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் ஆசிரியர் பயிற்சி பெற்ற அனைவரையும் நிரப்புவது குறித்து அரசு திட்டம் வகுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் புதிதாக அனுமதிக்கப்படுபவை மற்றும் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வேலைவாய்ப்பு அலுவலகத்தில் இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று பதிவு செய்துள்ள நாடுநர்களை நேர்முகத் தேர்விற்கு அழைத்து அந்தந்த மாவட்டங்களில் நியமனம் செய்யப்படுகிறது. இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற அனைவரையும் நியமனம் செய்வது இயலாது. புதிதாக அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் மற்றும் காலிப்பணியிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் பட்டியல் பெறப்பட்டு மாவட்ட வாரியாக நியமனம் செய்யப்படுகிறது.

10—

## ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியம்

**வினா எண் 26828—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) அரசு பொதுத்தேர்வு பத்தாம் வகுப்பு விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் தொகை ஒரு விடைத்தாளுக்கு ரூ.2.75 குறைவு என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதிகப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு தேர்வுத் துறையால் நடத்தப்படும் 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளுக்கான விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களுக்கு மார்ச் 1994 முதல் ஒரு விடைத்தாளுக்கு உழைப்பூதியம் ரூ.2.00 வீதம் வழங்கப்பட்டது. பின்னர் மார்ச் 1998 முதல் ஒரு வினாத்தாளுக்கு உழைப்பூதியம் ரூ.2.75 என உயர்த்தப்பட்டது. தற்போதுள்ள அரசின் நிதிநெருக்கடி காரணமாக 10 ஆம் வகுப்பு விடைத்தாள் திருத்தும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் உழைப்பூதியத்தை உயர்த்த இயலாத நிலை உள்ளது.

**11—**

## ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 35035—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, ஓதவந்தாங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் ஒரு ஆசிரியர் மட்டும் பணிபுரிவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், காலியாக உள்ள ஆசிரியர் பணியிடத்தை நிரப்ப அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) சீர்காழி தொகுதி, ஓதவந்தாங்குடி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் 110 மாணவ/மாணவியர் பயின்று வருகின்றனர். 3 ஆசிரியர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டு 3 ஆசிரியர்கல் பணிபுரிந்து வருகிறார்கள். காலிப்பணியிடம் ஏதும் இல்லை.



2004 ஜூலை 23]

(ஆ) வினா எழவில்லை.

**12—**

## ஆசிரியர் பணியிடம் நிரப்புதல்

**வினா எண் 35046—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, எருக்கூர் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் காலியாக உள்ள 2 ஆசிரியர்களின் பணியிடத்தை நிரப்ப அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

சீர்காழி தொகுதி, எருக்கூர் தொடக்கப் பள்ளி ஆதிதிராவிடர் நலப் பள்ளியாக உள்ளது. 52 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இரண்டு ஆசிரியர் பணியிடங்கள் அரசால் அனுமதிக்கப்பட்டு இரண்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். காலிப் பணியிடம் இல்லை.

**13—**

## நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்துதல்

**வினா எண் 38681—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆயிங்குடி தெற்கு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக உயர்த்தும் கருத்து அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

அறந்தாங்கி தொகுதி, ஆயிங்குடிதெற்கு நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாக அரசாணை எண் 84 பள்ளிக் கல்வித் துறை நாள் 20-6-2003-ன் மூலம் தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

[2004 ஜூலை 23

14—

## நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 39301—திரு. ப. அரசன்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆயிங்குடி தெற்கு நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி தொகுதி, ஆயிங்குடி தெற்கு நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 84, பள்ளிக் கல்வி - நாள் 10-6-2003-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

15—

## பாடத் திட்டத்தில் மனவளக்கலை பாடத் திட்டத்தைச் சேர்த்தல்

**வினா எண் 48646—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப் பள்ளிகளில் மனவளக்கலை என்னும் பாடத் திட்டத்தை சேர்க்கும் கருத்துரு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய பாடத் திட்டத்தில், உடற்கல்வி மற்றும் உடல்நலக் கல்வி ஆகிய பாடத் திட்டங்களில் ஏற்கெனவே மனவளக் கலை என்னும் தலைப்பில் ஒரு பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் தலைப்பில் உடற்கல்வியில் மாணவர்களுக்கு யோகப் பயிற்சிக்கான உடற்பயிற்சிகளும், சுயக் கட்டுப்பாடு, ஒழுக்கம், தியானம் முதலியவை



2004 ஜூலை 23]

போதிக்கப்படுகின்றன. உடல்நலக் கல்வியில் பள்ளி முழு நலக் கல்வித் திட்டம் என்ற பெயரில் 1 முதல் 12 வகுப்புகளுக்கான பாடத்திட்டம் தயார் செய்யப்பட்டு அனைத்துப் பள்ளிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இதில் "வகுப்பறையில் மனநலம்" என்ற தலைப்பில் மனநல வளர்ச்சியைக் கற்றிடும் வாய்ப்புகள் பற்றிய விவரங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், யோகாசனம் கற்றல் மற்றும் கற்பித்தல் குறித்தும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன.

16—

## கோட்டைகளை சீரமைக்கும் பணி

**வினா எண் 48786—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எந்தெந்த கோட்டைகளை மறுசீர் அமைப்பு செய்ய அரசு உத்தேசித்து உள்ளது?

(ஆ) அவற்றின் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் 11 கோட்டைகள் உள்ளன. அவை பின்வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆலம்பாறை கோட்டை | ஆலம்பாறை | மதுராந்தகம் வட்டம் |
| 2. | கருங்குழி கோட்டை | கருங்குழி | மதுராந்தகம் வட்டம் |
| 3. | வந்தவாசி கோட்டை | வந்தவாசி | வந்தவாசி வட்டம் |
| 4. | ஜெகதேவி கோட்டை | ஜெகதேவி பாளையம் | கிருஷ்ணகிரி வட்டம் |
| 5. | தியாகதுர்கம் கோட்டை | தியாகதுர்கம் | கள்ளக்குறிச்சி வட்டம் |
| 6. | டேனிசுக் கோட்டை | தரங்கம்பாடி | மயிலாடுதுறை வட்டம் |

| | | |
|---|---|---|
| 7. மனோரா | சரபேந்திரஜா பட்டினம் | புதுக்கோட்டை வட்டம் |
| 8. கட்டபொம்மன் | கமுதி கோட்டை | முதுகுளத்தூர் வட்டம் |
| 9. மருதுபாண்டியர் | அரண்மனை கோட்டை | காரைக்குடி சிறுவயல் வட்டம் |
| 10. கட்டபொம்மன் | பாஞ்சாலங்குறிச்சி கோட்டை | ஒட்டபிடாரம் வட்டம் |
| 11. உதயகிரி கோட்டை | பத்மநாபபுரம்நகர் மற்றும் டில்லிநாய் கல்லறை | கல்குளம் வட்டம் |

(அ) அவற்றில் நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி டேனிசுக் கோட்டை, தஞ்சை மாவட்டம், சரபேந்திரராஜபட்டினம், மனோரா நினைவுச் சின்னம் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம் உதயகிரிக் கோட்டை ஆகிய 3 (மூன்று) கோட்டைகளில் மறுசீர் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது.

(ஆ) நாகப்பட்டினம் மாவட்டம் தரங்கபாடி டேனிசுக் கோட்டை ரூ.38.78 இலட்சம் மதிப்பீட்டிலும், தஞ்சை மாவட்டம், சரபேந்திரராஜபட்டினம், மனோரா நினைவுச் சின்னம் ரூ. 13.78 இலட்சம் மதிப்பீட்டிலும் மற்றும் கன்னியாகுமரி மாவட்டம், உதயகிரிக் கோட்டை மறுசீரமைப்புப் பணிக்கு ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டிலும் 11-வது நிதிக்குழு மானியத்தின் பரிந்துரையின்படி நிதி அரசால் ஒப்பளிக்கப்பட்டு பணிகள் பொதுப் பணித் துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**17—**

## பட்டதாரி ஆசிரியர்களை வேலையில் அமர்த்தல்

**வினா எண் 50345—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கும் பட்டதாரி ஆசிரியர்களை வேலையில் அமர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) ஒவ்வொரு கல்வியாண்டிலும், அரசுப் பள்ளிகளில் காலி ஏற்படும் பணியிடங்களில், விதிகளின்படி நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்யப்படவேண்டிய பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்வுகள் நடத்தப்பட்டு, அதில் தேர்ச்சிபெற்ற நபர்களுக்கு விதிகளின்படி நியமனம் அளிக்கப்படுவது தற்போது நடைமுறையில் உள்ளது.

**18—**

## அரசு பொதுமருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்குதல்

**வினா எண் 18572—திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரில் உள்ள அரசு பொது மருத்துவமனைக்கு அமரர் ஊர்தி வழங்கிட அரசு ஆவன செய்யுமா? ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகரிலுள்ள அரசு வட்ட மருத்துவமனையில் மூன்று அவசர ஊர்திகள் நல்ல நிலையில் இயங்கி வருகின்றன. இந்த மூன்று வண்டிகளில் ஒன்றினை அமரர் ஊர்தியாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**19—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 32910—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜுலை 23

(அ) சீர்காழி தொகுதி, அகர எலத்தூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்படாமல் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, குன்னம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள அகர எலத்தூர் துணை சுகாதார நிலையம் முதலில் வாடகை கட்டடத்தில் இயங்கி வந்தது. இங்கு போதிய இடவசதி இல்லாததால் கிராம சுகாதார செவிலியர் அதன் அருகில் தங்கி பணிபுரிந்து வருகிறார்.

மேற்கண்ட துணை சுகாதார நிலையத்திற்கு டேனிடா திட்டத்தில் புதிய கட்டடம் கட்டப்பட்டு ஏப்ரல் 2003 முதல் கிராம சுகாதார செவிலியர் துணை சுகாதார நிலையத்தில் தங்கி பணிபுரிந்து வருகிறார்.

**20—**

## யானைக்கால் நோய் விவரம்

**வினா எண் 40251—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் யானைக்கால் நோய் கடந்த ஐந்து ஆண்டுகளில் குறைந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆண்டு வாரியாக எத்தனை சதவிகிதம் குறைந்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் யானைக்கால் நோய் கண்டவர்களின் விவரம் ஆண்டு வாரியாக கீழே தரப்பட்டுள்ளது:





| ஆண்டு | 1998 | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|---|
| யானைக்கால் நோய் கண்டவர்கள் | 3928 | 3447 | 3899 | 3960 | 3772 |
| சதவீதம் | 100% | 87.8% | 99% | 100.8% | 96% |

2002 ஆம் ஆண்டில் யானைக்கால் நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1998 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளில் 4% குறைந்துள்ளது. ஆனால், அதே சமயம், யானைக்கால் நோய் ஒட்டுண்ணியால் (Microfilaria cases) பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அம்மாவட்டத்தில் 86% புதிய நோயாளிகள் உருவாகாமல் தடுக்கப்பட்டுள்ளனர். 2002 ஆம் வருடத்தில் யானைக்கால் நோய் ஒட்டுண்ணியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1998 ஆம் ஆண்டு முதல் ஐந்து ஆண்டுகளில் 14% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

| ஆண்டு | யானைக்கால் நோய் ஒட்டுண்ணியால் பாதிக்கப்பட்டவர்கள் | சதவீதம் |
|---|---|---|
| 1998 | 570 | 100% |
| 1999 | 187 | 33% |
| 2000 | 272 | 48% |
| 2001 | 212 | 37% |
| 2002 | 78 | 14% |

**21—**

## அறுவை சிகிச்சை அரங்கிற்கு உபகரணங்கள்

**வினா எண் 41266—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு மருத்துவமனையிலுள்ள அறுவை சிகிச்சை அரங்கிற்கு தேவையான உபகரணங்கள் இல்லையென்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவற்றை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அனைத்து அரசு மருத்துவமனைகளுக்கும் தேவைப் பட்டியல் பெறப்பட்டதன் அடிப்படையில் அறுவை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் உபகரணங்கள் தேவைப்படின், தக்க விளக்கங்களுடன் தேவைப் பட்டியல் பெறப்பட்டால் தருவித்து வழங்கப்படும்.

**22—**

## தாய் சேய் நல விடுதி அமைத்தல்

**வினா எண் 43493—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்தூர் கிராமத்தில் பொதுமக்கள் நலன் கருதி தாய் சேய் நல விடுதி கட்டித் தர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மைய அரசு புதியதாக துணை சுகாதார நிலையம் அமைக்கும் பணியினை நிறுத்தி உள்ளது. உடுமலைப்பேட்டை தொகுதியில் ஏற்கெனவே 31 துணை சுகாதார நிலையங்கள் இயங்கி வருவதால், உடுமலைப்பேட்டை தொகுதி, மடத்தூர் கிராமத்தில் புதியதாக துணை சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு ஏதும் இல்லை.



**23—**

## துணை சுகாதார நிலையம்

**வினா எண் 43677—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் ஊராட்சியில் துணை சுகாதார நிலையம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் ஊராட்சியில் ஏற்கெனவே ஒரு துணை சுகாதார நிலையம் இயங்கி வருகிறது. இந்த ஊராட்சியில் மேலும் ஒரு துணை சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் இல்லை.

**24—**

## துணை சுகாதார மையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 43686—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருமுல்லைவாசல் ஊராட்சியில் உள்ள தொடுவாய் மற்றும் ராதாநல்லூர் ஆகிய கிராமங்களில் இயங்கும் துணை சுகாதார மையத்திற்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், திருமுல்லைவாசல் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குட்பட்ட தொடுவாய் மற்றும் ராதாநல்லூர் ஆகிய இடங்களில் தனியார் வாடகை கட்டடத்தில் இயங்குகிற துணை சுகாதார நிலையங்களுக்கு அரசு கட்டடம் கட்ட தேவையான இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்ட பிறகு அரசு கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**25—**

### துணை சுகாதார மையங்களுக்குக் கட்டடம்

**வினா எண் 43688—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வடகால், எடமணல், கற்பள்ளம், கோபாலசமுத்திரம், அரசூர், புதுப்பட்டினம், கொடியம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் இயங்கும் துணை சுகாதார மையங்களுக்குக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதியில் அடங்கிய வடகால், எடமணல், கற்பள்ளம், கோபாலசமுத்திரம், அரசூர், புதுப்பட்டினம், கொடியம்பாளையம் ஆகிய ஊராட்சிகளில் இயங்கும் துணை சுகாதார நிலையங்கள் வாடகை கட்டடங்களில் தான் இயங்கி வருகின்றன. துணை சுகாதார நிலையங்கள் கட்ட இடம் தேர்வு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இடங்கள் பெறப்பட்டதும் துணை சுகாதார நிலைய கட்டங்கள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.





**26—**

### துணை சுகாதார மையக் கட்டடம் அமைத்தல்

**வினா எண் 43707—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, மகேந்திரபள்ளி, ஆரப்பள்ளம் மற்றும் அளக்குடி ஊராட்சிகளில் துணை சுகாதார மையக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் தனியார் வாடகை கட்டடங்களில் இயங்கும் (1) மகேந்திரப்பள்ளி (2) ஆரப்பள்ளம் (3) அளக்குடி துணை சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டவுடன் புதிய துணை சுகாதார நிலையம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**27—**

### ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் அமைத்தல்

**வினா எண் 45846—திரு. ப. அரசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, அத்தாணி, சிங்கவனம், நாகுடி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்டித் தரும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு சுற்றுச்சுவர் கட்ட அரசால் தற்போது நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யப்படவில்லை. எனவே, அறந்தாங்கி தொகுதி, அத்தாணி, சிங்கவனம், நாகுடி ஆகிய ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு தற்போது சுற்றுச்சுவர் கட்டித்தர சாத்தியக்கூறுகள் இல்லை.

**28—**

## துணை சுகாதார நிலையத்திற்குக் கட்டடம்

**வினா எண் 46146—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமைலாடி பகுதியில் உள்ள துணை சுகாதார நிலையத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டித் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஆரம்ப சுகாதார நிலையத்தின் கட்டுப்பாட்டின்கீழ் தனியார் வாடகை கட்டடத்தில் இயங்குகிற திருமைலாடி துணை சுகாதார நிலையத்திற்கு அரசு கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இடம் கிடைத்தவுடன் துணை சுகாதார நிலையம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



**29—**

## இரத்த வங்கி செயல்படுதல்

**வினா எண் 46728—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரம், கோவை அரசு பெரிய மருத்துவமனையில் ஞாயிற்றுக்கிழமை நாட்களிலும் இரத்த வங்கி செயல்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரத்த வங்கி ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களிலும் செயல்பட்டு வருகிறது.

**30—**

## கண் அறுவை சிகிச்சை விவரம்

**வினா எண் 50868—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு தொகுதியில் கடந்த இரண்டு ஆண்டுகளில் கண் அறுவை சிகிச்சை எவ்வளவு பேருக்கு செய்யப்பட்டது?

(ஆ) இலவசமாக எவ்வளவு பேருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது?

[2004 ஜூலை 23

**விடை—**

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

*(அ) செங்கற்பட்டு தொகுதியில் 2002-2003 ஆம் ஆண்டில் 1057 பேருக்கும், 2003-2004 ஆம் ஆண்டில் 1401 பேருக்கும், கண் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.*

*(ஆ) 2002-2003 ஆம் ஆண்டில் 814 பேருக்கும், 2003-2004 ஆம் ஆண்டில் 930 பேருக்கும் இலவசமாக மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.*

**31—**

## பள்ளிக்குத் தடுப்புச் சுவர் அமைத்தல்

**வினா எண் 38780—திரு. லா. சந்தானம்:** *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் பஞ்சாயத்து, வடக்கம்பட்டி அரசு கள்ளர் பள்ளி சுற்றி மழைத் தண்ணீரை தடுக்க தடுப்புச் சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, கருமாத்தூர் பஞ்சாயத்து வடக்கம்பட்டி அரசு கள்ளர் பள்ளிக்கு மழை நீரை தடுக்க தடுப்புச் சுவர் கட்டித்தரும் செய்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**32—**

## சமையல் கூடம் கட்டும் திட்டம்

**வினா எண் 30652—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆர்ப்பள்ளம் ஊராட்சியில், ஊராட்சி சமையல் கூடம் கட்டும் திட்டம் அரசுக்கு உண்டா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம்,* ஆர்ப்பள்ளம் ஊராட்சியில் பள்ளி சத்துணவு மையம் பழுதான நிலையில் உள்ளது. இதனை பழுது நீக்கம் செய்ய ரூ.18,000/— மதிப்பீட்டில் வறுமை ஒழிப்புத் திட்டத்தில், நடப்பு நிதி ஆண்டில் பணி மேற்கொள்ளப்படும்.

**33—**

## சத்துணவு கட்டடம் கட்டுதல்

**வினா எண் 32336அ—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஊராட்சி, அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவு கட்டடம் கட்டித்தர அரசுக்கு திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, புதுப்பட்டினம் ஒன்றியம், அரசு உயர்நிலைப் பள்ளிக்கு சத்துணவு கட்டடம் இல்லை. தற்காலிக ஏற்பாடாக பள்ளிக் கட்டடத்தில் சமைத்து மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற பின்னர் கட்டடம் கட்ட உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

34—

### சத்துணவுக் கூடம் கட்டித் தருதல்

**வினா எண் 32338—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிட ஒன்றியம், திருமுல்லைவாசல், கோதண்டபுரம் ஆகிய ஊராட்சியிலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சத்துணவு கட்டடம் கட்டித்தர அரசிடம் திட்டம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருமுல்லைவாசல், அரசு மேல்நிலைப் பள்ளிக்கு சமையல் கூடம் இல்லை. நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்ற பின் கட்டடம் கட்ட உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். கோதண்டபுரம் இராமகிருஷ்ணா மேல்நிலைப் பள்ளிக்கு சத்துணவு கட்டடம் நமக்கு நாமே திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளது.

35—

### சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்கும் திட்டம்

**வினா எண் 32355—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) சீர்காழி நகரிலுள்ள தென்பாதி யு.டி.பி. குருஞானசம்பந்தர் உதவிபெறும் நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக்கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி ஒன்றியம், குருஞானசம்பந்தர் உதவிபெறும் நடுநிலைப் பள்ளிக்கு சத்துணவு சமையல் கூடம் 2003-2004 ஆம் ஆண்டு பள்ளியின் நிர்வாகத்தினால் ஆர்.சி.சி. கான்கிரீட் கட்டடமாக கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது.

36—

### பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

**வினா எண் 41269—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழக அரசின் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2002 ஆம் ஆண்டு எவ்வளவு பேர் பயன் பெற்றனர்?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

2002 ஆம் ஆண்டில் பெண் குழந்தை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 5293 (திட்டம் 1-ல் 13, திட்டம் 2-ல்-5280) பயனாளிகள் பயனடைந்துள்ளனர்.

37—

### பாலர் பள்ளி அமைத்தல்

**வினா எண் 41490—திரு. எஸ். நடராஜன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி கிராம ஊராட்சி, குள்ளக்கிழவன் வட்டத்தில் பாலர் பள்ளி அமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்பத்தூர் வட்டம், ஏலகிரி ஊராட்சிக்குட்பட்ட குள்ளக்கிழவன் வட்டத்தில் பாலர் பள்ளி 25-3-2004 முதல் துவக்கப்பட்டு இயங்கி வருகிறது.

**38—**

## சத்துணவுக் கூடம் இயக்குதல்

**வினா எண் 43019—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஒன்றியம், தச்சங்குறிச்சி ஊராட்சி பள்ளியில் இயங்காமல் உள்ள சத்துணவுக் கூடத்தினை மீண்டும் இயக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், தச்சங்குறிச்சி கிராமத்தில் செயல்பட்டுவரும் தொடக்கப் பள்ளியில் 1-7-1982 முதல் தொடர்ந்து சத்துணவு மையம் செயல்பட்டு வருகிறது. இம்மையத்திற்கென புதியதாக கட்டப்பட்டுள்ள சத்துணவு மைய சமையல் கூடம் 1-1-2004 முதல் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**39—**

## சத்துணவுக் கூடத்தைப் புதுப்பித்தல்

**வினா எண் 47498—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, குரல்குட்டை மலையாண்டி பட்டினம் சத்துணவுக் கூடத்தைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை தொகுதி, குரல்குட்டை மலையாண்டிபட்டினம் சத்துணவுக் கூடத்தைத் தற்போது சிறு சேமிப்பு ஊக்க நிதியிலிருந்து ரூ.50,000/— மதிப்பீட்டில் பழுதுபார்க்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது.

**40—**

## சத்துணவுக் கூடம் கட்டுதல்

**வினா எண் 50116—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோவில் பேரூராட்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன் கோவில் பேரூராட்சி அரசு ஆண்கள், மேல்நிலைப் பள்ளிக்கு புதிய சமையல்கூடம் நடப்பு நிதியாண்டில், ரூ.50,000/— மதிப்பீட்டில் வறுமை ஒழிப்புத் திட்டத்தில் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**41—**

## மாசுக் கட்டுப்பாட்டுக் கருவி வழங்குதல்

**வினா எண் 53423—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) உடுமலை நகரில் புதிதாக போக்குவரத்து அலுவலகம் துவக்கப்பட்டு உள்ளது. அங்கு சுமோக் மீட்டர் (smoke meter) பொருத்தப்படாமல் உள்ளது அரசு கவனத்திற்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழகம் முழுவதும் மாசுக் கட்டுப்பாட்டுக் கருவிகளுடன் சோதனை செய்யும் பணி தனியார் துறைக்கு வழங்க முடிவு செய்யப் பட்டுள்ளது. மேலும் மேற்படி கருவிகள் கணினிமயமாக்கப்பட வேண்டும் என்ற முடிவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்துறையில் ஏற்கெனவே, வாங்கப்பட்ட 42 x 2 கருவிகளில் அதிகமானவைகள் பழுதடைந்து விட்டன. பழுது பார்க்கும் செலவுகள் அதிகரித்துள்ளது. பயன்பாடும் குறைவாகவே உள்ளது. எனவே, புதிதாக அமைக்கப்பட்ட உடுமலைப் பேட்டை பகுதி அலுவலகத்திற்கு மாசுக் கட்டுப்பாட்டுக் கருவி (smoke meter) வழங்குவது தற்போது ஏற்க இயலாத நிலை உள்ளது. தனியார் துறை மூலமாக மேற்படி கருவிகளை நிறுவினால் போக்குவரத்துத் துறையால் போதிய உரிமம் வழங்கப்படும்.

(ஆ) வினா எழாது.

**42—**

## பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 13969—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, கடையம் ஊராட்சி ஒன்றியத்தில் பாய்முடை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**43—**

## பனை ஓலை தொழிற்பயிற்சி நிலையம்

**வினா எண் 16541—திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேரன்மகாதேவி தொகுதி, வீரவநல்லூர் பேரூராட்சியில் பனை ஓலை தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**44—**

## தொழில் தொடங்க சிறப்புப் பயிற்சி அளித்தல்

**வினா எண் 25038—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

எடப்பாடி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் இனத்தைச் சார்ந்த இளைஞர்களுக்கு தொழில் தொடங்கி சிறப்புப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

[2004 ஜூலை 23

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகியோர் தொழில் தொடங்க மாவட்ட தொழில் மையத்தில் விண்ணப்பிக்கும்பொழுது அவர்களுக்கு வங்கிக் கடனுதவி பெற்றுக் கொடுத்து, வியாபார தொழில் மற்றும் சேவை தொழில் துவங்குவோர்களுக்கு 10 நாட்கள் பயிற்சியும், தொழில்சாலைகள் அமைக்கும் நபர்களுக்கு 20 நாட்கள் பயிற்சியும் தொழில் வணிக இயக்ககத்தால் அளிக்கப்பட்டு வருகிறது.

**45—**

## கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு

**வினா எண் 36108—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் செயல்படும் சிறு தொழில் நிறுவனங்களில் கிராமப்புற மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பெரும்பாலான சிறு தொழில் நிறுவனங்கள் நகர்ப்புறங்களில்தான் வளர்ச்சி அடைந்திருக்கிறது. அதனால் கிராமத்தில் உள்ள மக்களுக்கு வேலைவாய்ப்பு இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு இந்த அரசு ஊரகப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும், ஊரகப் பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தவும், கிராமப்புறங்களில் அதிகமாக உற்பத்தியாகும் விவசாய உற்பத்திப் பொருட்களைக் கொண்டு வேளாண்சார்/உணவுப் பதப்படுத்தும் தொழில்களை அமைக்க ஊக்குவிக்கும் பொருட்டு புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் என்ற புதிய திட்டம் ஒன்றை அரசு ஆணை எண் 32, சிறு தொழில் துறை, நாள் 28-6-2002-ல் அறிவித்துள்ளது. இத்திட்டம் மாநிலத்திலுள்ள 385 வட்டாரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 20-2-2004 அன்றைய நிலவரப்படி புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 85 திட்டங்கள்



2004 ஜூலை 23]

உற்பத்தி துவங்கியுள்ளன. இதனால், 3,399 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**46—**

## மகளிருக்கான தொழிற்பேட்டை

**வினா எண் 36418—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், திருமுல்லைவாயிலில் துவக்கப்பட்டுள்ள மகளிருக்கான தொழிற்பேட்டையின் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், வெள்ளானூர் கிராமத்தில் திருமுல்லைவாயில் தொழில்பேட்டைக்காக 290.84 ஏக்கர் நிலத்தில், 273.36 ஏக்கர் நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு, அதில் 218.46 ஏக்கர் நிலங்களை மேம்படுத்தப்படுவதற்காக ரூபாய் 610 இலட்சம் ஒப்புதல் பெறப்பட்டது. அதில் 342 மனைகள் மேம்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 4-7-2003 அன்று துவங்கப்பட்டது. இதுவரை 230 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, 194 மகளிர் மனுதாரர்களுக்கு 270 மேம்பாட்டு மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் 28 ஒதுக்கீட்டாளர்களுக்கு 48 மனைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**47—**

## பெண் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 36424—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் பெண் தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) மகளிர் தொழில் முனைவோர் சுயதொழில் தேர்ச்சி திறன் பெற 2001-2006 ஆம் ஆண்டுகளில் 5 இலட்சம் மகளிருக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின்கீழ் 2001-2002 ஆம் ஆண்டு முதல் 2005-2006 ஆம் ஆண்டு முடிய ஓராண்டுக்கு 25,000 மகளிர் தொழில் முனைவோர் என்ற வீதத்தில் ஐந்து ஆண்டுகளில் 1,25,000 மகளிருக்கு தொழில் வணிகத் துறை மூலம் பயிற்சி அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது. 25,000 மகளிருள் 5000 மகளிர் பாரத பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழும் 20,000 மகளிர் சுயநிதி உதவிக் குழுக்களிலிருந்தும் பயிற்சி பெறுவர். ஒரு நபருக்கு ரூ.40/ உதவித் தொகையுடன் இப்பயிற்சி 7 நாட்களுக்கு வழங்கப்படுகிறது.*

*2001-2002 ஆம் ஆண்டில் 25,000 என நிர்ணயிக்கப்பட்ட இலக்கில் 25.259 மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களுள் 10,942 மகளிர் தொழில் நிறுவனங்கள் துவக்கியுள்ளனர். 2002-2003 ஆம் ஆண்டு 25,139 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அதில், 5,139 மகளிருக்கு பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவும், தொழில் நுட்ப கல்வி பயின்றுள்ள 8,334 மகளிருக்கும் மற்றும் 11,666 மகளிருக்கு சுயநிதி உதவிக் குழுக்களிலிருந்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 8,845 தொழில் நிறுவனங்கள் துவங்கப்பட்டுள்ளன. 2003-2004 ஆம் ஆண்டில் 20,000 மகளிருக்கு பயிற்சி அளிக்க அரசு ஆணை எண் 90, சிறு தொழில் (வளர்ச்சி) துறை, நாள் 28-10-2003 மூலம் ரூ. 80.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை இத்திட்டத்திற்காக மாவட்டங்களிடையே. பங்கீடு செய்யப்பட்டுள்ளது. பொது மேலாளர்கள், மாவட்டத் தொழில் மையம் மற்றும் மண்டல இணை இயக்குநர், சென்னை ஆகியோருக்கு சுயநிதி உதவிக் குழுக்களிலிருந்து 11,000 மகளிருக்கும் மற்றும் தொழில் நுட்ப கல்வி பயின்றுள்ள மகளிர் 9,000 பேர்களுக்கும் பயிற்சி அளித்து அவர்கள் தொழில் தொடங்க உதவி செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. 2003-2004 ஆம் ஆண்டில் 14,,575 மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. அதாவது 2,629 மகளிருக்கு பாரதப் பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாகவும் தொழில் நுட்ப கல்வி பயின்றுள்ள 3,527 மகளிருக்கும் மறறும் 8,419 மகளிருக்கும் சுயநிதி உதவி குழுக்களிலிருந்தும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.*



**48—**

## குடிசைத் தொழில் தொடங்குதல்

**வினா எண் 40271—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) செங்கற்பட்டு தொகுதியில் பனை மற்றும் தென்னையிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களை உற்பத்தி செய்யும் குடிசைத் தொழில் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு தொடங்கப்படுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

*(அ) இல்லை*

*(ஆ) எழவில்லை.*

**49—**

## சுயதொழில் தொடங்க கடன்

**வினா எண் 41022—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) 2001-2002 ஆம் ஆண்டில் எடப்பாடி தொகுதியில் பிரதமர் நிதியுதவித் திட்டத்தின்கீழ் சுயதொழில் தொடங்க கடன் கோரி விண்ணப்பித்தவர்கள் எவ்வளவு பேர்?*

*(ஆ) அதில் எவ்வளவு நபர்கள் தேர்வு செய்யப்பட்டு கடன் வழங்கப்பட்டது?*

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் எடப்பாடி சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் கடன் கோரி 96 நபர்கள் 2001-2002-ல் விண்ணப்பித்தனர்.

(ஆ) இவர்களுள் 86 நபர்கள் தேர்வு செய்யப்பட்டு வங்கிகளுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. 28 நபர்களுக்கு ரூ.9.45 இலட்சம் வங்கிகளால் கடனுதவி அளிக்கப்பட்டது.

50—

## தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்

**வினா எண் 41767—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோபிசெட்டிபாளையம் பகுதியில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோபிசெட்டிபாளையம் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது சிட்கோவின் பரிசீலனையில் இல்லை. போதுமான நிதி ஆதாரங்களுடனும், தொழிற்திட்டங்களுடனும் தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர் முன்வந்தால், புதிதாக தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படும்.



51—

## சிறு தொழில் துவங்க கடனுதவி

**வினா எண் 43236—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள மூடிய ஆலைகளில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களில் படித்த இளைஞர்களுக்கு சிறு தொழில் துவங்கவும், கடன் உதவி வழங்கவும் அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) தற்பொழுது தமிழ்நாடு அரசு பாரதப் பிரதமரின் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் எட்டாவது வகுப்பு தேர்ச்சி பெற்ற 18 முதல் 35 வயது வரை உள்ள படித்த இளைஞர்களுக்கு சிறு தொழில் துவங்கவும், வங்கி மூலம் கடன் வழங்கவும், அரசு மாவட்டத் தொழில் மையம் மூலம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

(ஆ) கோவை மாவட்டத்தில் மூடிய ஆலைகளில் பணிபுரிந்து வந்த தொழிலாளர்களில் படித்த தகுதியுள்ள இளைஞர்கள் தனியாகவோ, கூட்டாகவோ சிறு தொழில் துவங்க கோவை மாவட்டத் தொழில் மையத்தை அணுகினால் மாவட்டத் தொழில் மையம் தேவையான உதவிகளையும் ஆலோசனைகளையும் அளிக்கும்.

52—

## சிறப்பு விற்பனை நிலையம்

**வினா எண் 43819—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தேவைப்படும் கைவினை பொருட்களின் சிறப்பு விற்பனை நிலையம் இரத்தினகிரி மற்றும் வள்ளிமலையில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

பண நெருக்கடி காரணமாக இரத்தினகிரி மற்றும் வள்ளிமலையில் விற்பனை நிலையம் துவக்குவதற்கு வழிவகையில்லை.

**53—**

## மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வழங்குதல்

**வினா எண் 48628—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை, வாளவாடி கிராமத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தேங்காய் களம் அமைக்க, கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை, வாளவாடி கிராமத்தில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு தேங்காய் களம் அமைக்க கடன் வழங்க கருத்துரு இல்லை. ஏற்கெனவே, இதற்காக வங்கிகள் மூலம் கடன் வழங்கியதில் இலாபகரமாக இல்லை என்று அறியப்பட்டுள்ளது. எனினும் இத்தொழிலுக்காக வங்கிகள் மகளிர் சுயஉதவிக் குழு மூலம் கடன் வழங்க முன்வந்தால் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை பரிசீலிக்கும்.

**54—**

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் தொழில்கள்

**வினா எண் 49129—திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) தமிழ்நாட்டில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் 2002-2003-ல் எத்தனை தொழில்கள் ஆரம்பிக்கப்பட்டன?

(ஆ) இத்திட்டத்திற்கு மாநில அரசு செய்யும் உதவிகள் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) 2002-2003 ஆம் ஆண்டில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் 12 அலகுகள் மொத்தம் ரூ.9.26 கோடி திட்ட மதிப்பீட்டில் உற்பத்தியை துவக்கியுள்ளன. மேலும் 12-3-2004 வரை 91 அலகுகள் மொத்தம் ரூ.60.38 கோடி திட்ட முதலீட்டில் உற்பத்தியை துவக்கியுள்ளன.

(ஆ) புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் துவங்கப்படும் தொழில்களுக்கு தமிழக அரசு கீழ்க்கண்ட சலுகைகளை வழங்குகிறது:—

(1) மாநிலத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலும் அமைக்கப்படும் தொழில்களுக்கு இயந்திர தளவாடங்கள் மீதான முதலீட்டில் 15% அதிகபட்சம் ரூ.15.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

(2) குறைந்த அழுத்த மின் மானியம், உற்பத்தி துவங்கிய நாள் அல்லது மின் இணைப்பு பெற்ற நாள் இதில் எது பிந்தியதோ அந்நாளிலிருந்து வசூலிக்கப்பட்ட மின் கட்டணத்திற்கு முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 30%, 20% மற்றும் 10% மானியமாக வழங்கப்படும்.

(3) தொழிற்சாலைகளில் நிறுவப்படும் மின்னாக்கியின் மதிப்பில் 15% அதிகபட்சம் ரூ. 5 இலட்சம் வரை மின்னாக்கி மானியமாக வழங்கப்படும்.

(4) 50% க்கு மேல் மகளிரை பணியில் அமர்த்தும் தொழில்களுக்கு கூடுதல் மானியமாக நிலை முதலீட்டில் 5% அதிகபட்சம் ரூ.5.00 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

இதைத் தவிர் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் துவங்கப்படும் அலகுகளுக்கு நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் பெறுதல், நிர்ணயிக்கப்பட்டுள்ள விதிகளின்படி தேவையான அனுமதி பெறுதல் மற்றும் புதிய மின் இணைப்பு பெறுதல் ஆகியவற்றிற்கு தேவையான உதவிகள் மற்றும் வழிகாட்டுதல்களையும் மாவட்ட ஆட்சியர்களும் தொழில் மையத்தின் பொது மேலாளர்களும் அளித்து வருகிறார்கள்.

[2004 ஜுலை 23

55—

### தொழிற்பேட்டைகளில் மனைகளுக்கு முன்பணத் தொகை

**வினா எண் 51438—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புதிய தொழிற்பேட்டை அமைக்க ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய முன்பணத் தொகை 25 சதவீதத்தில் இருந்து 10 சதவீதமாக குறைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

புதிய தொழிற்பேட்டைகளில் ஒதுக்கீடு செய்யப்படும் மனைகளுக்கு செலுத்தப்பட வேண்டிய முன்பணத் தொகை 2.5 சதவீதத்திலிருந்து 15 சதவீதமாக 22-1-2003 முதல் குறைக்கப்பட்டுள்ளது.

56—

### கூட்டுறவு வங்கிக் கணக்கு

**வினா எண் 34600—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 2001-2002 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு வங்கிதளில் எத்தனை வங்கிகளின் வங்கி கணக்குகளில் முறைகேடுகள் நடந்ததாக அரசு கண்டுபிடித்துள்ளது?

(ஆ) அதன் அடிப்படையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

விடை—

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி, வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) 2001-2002 ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள 8 கூட்டுறவு வங்கிகளில் முறைகேடுகள் நடந்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



2004 ஜுலை 23]

(ஆ) காஞ்சிபுரம் மாவட்ட 8 கூட்டுறவு வங்கிகளில் நடைபெற்ற முறைகேடுகளுக்குரிவர்கள் மீதான நடவடிக்கைகள் பின்வருமாறு:—

| வ. எண். | தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியின் பெயர் | முறைகேடுகள் விவரம் | முறைகேடுகள் செய்தவர்கள் | கூட்டுறவுத்துறையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 1 | அய்யப்பன்தாங்கல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | முறைகேடுகள் தொடர்பாக ரூ.4,63,000-க்கு தண்டத் தீர்வை வழங்கப்பட்டது. | செயலர், விற்பனையாளர் மற்றும் எழுத்தர் | தண்டனைத் தீர்வைக்கான வட்டி 7696.00 வசூலிக்கப்பட்டு விட்டது. விடுபட்டுப் போன ரூ.50,000-க்கு தண்ட அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. செயலர் இறந்து, விட்டதாலும், அவர் மனைவிவழக்கு தொடர்ந்துள்ளதாலும், பெரும்பான்மையான தொகை வசூலிக்கப்பட்டு விட்டதால் குற்றவியல் நடவடிக்கை கைவிடப்பட்டது. விற்பனையாளர் மற்றும் எழுத்தர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2 | தேவரியம்பாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | ரூ.4,03,350-க்கு முறைகேடு நடந்துள்ளது. | செயலர், மற்றும் வங்கி பணியாளர்கள் | செயலர் இறந்துவிட்டார். அவர் நிதிப்பயன்களிலிருந்து நிதியிழப்பு ரூ.4,03,350-க்கு வசூலிக்கப் பட்டது. வட்டி ரூ. 9,905 வசூலிக்கப்பட்டது குற்றவியல் நடவடிக்கை கைவிடப்பட்டது. வங்கிப் பணியாளர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |
| 3 | வயலக்காவூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | ரூ. 2,56,472 நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது | செயலர், திரு. தேவசேனாபதி, எழுத்தர் ரவிச்சந்திரன் | செயலர் மற்றும் எழுத்தர் மீது குற்றப்புலனாய்வு நடைபெற்று வருகிறது. ரூ.4,55,22-க்கு செயலர், எழுத்தர், தனி அலுவலர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது |
| 4 | செவிலிமேடு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | ரூ.1,36,470.50 | திரு.பொன்னுரங்கன்,செயலர், | குற்றவியல் நடவடிக்கை வழக்கு பதிவு செய்யப்பட்டு புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. துணைப் பதிவாளர், காஞ்சிபுரத்தில் தண்டத் தீர்வை அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | மகால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | ரூ.32,429 | செயலர் | நிதியிழப்புத் தொகை வங்கிச் செயலரிடம் வசூலிக்கப்பட்டு விட்டது. ஒழுங்கு நடவடிக்கை எடுக்க தனி அலுவலரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| 6 | தாமல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | ரூ.3,00,000 | செயலர், திரு. பக்தவச்சலம், தனி அலுவலர் திரு. ஆர். இராஜகோபால் | குற்றவியல் நடவடிக்கை தொடர அரசு கூடுதல் வழக்கறிஞரின் கருத்து கேட்கப்பட்டுள்ளது. சார் பதிவாளர் மீது தண்டத்தீர்வை அறிவிப்பு வழங்கப்பட்டு 13–10–2003 வரை ரூ.1,76,311 வசூலிக்கப்பட்டுள்ளது. |
| 7 | பிச்சிவாக்கம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | .. | ... | விசாரணை நடைபெற்று வருகிறது. |
| 8 | கடுகுபட்டு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி | ரூ.31,514.73 | முன்னாள் செயலர் திரு. டி. பார்த்திபன் | தண்டத்தீர்வை நடவடிக்கை எடுக்கப்பட்டு ரூ.31,514.73 வசூலிக்கப்பட்டு விட்டது. 21–7–2003 அன்று தள்ளுபடி செய்து இறுதி ஆணை பிறப்பிக்கப்பட்டது. செயலர் மீது தனி அலுவலரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு பணியிறக்கம் செய்து எழுத்தாக ஆணை வழங்கப்பட்டுள்ளது. |

**57—**

## கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாக தரம் உயர்த்துதல்

**வினா எண் 32036—திருமதி மல்லிகா சின்னசாமி:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எதுமலை கால்நடை கிளை நிலையத்தை மருந்தகமாக தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) முசிறி தொகுதி, மண்ணச்சநல்லூர் ஒன்றியம், எதுமலை கால்நடை கிளை நிலையத்தை கால்நடை மருந்தகமாக தரம் உயர்த்துவதற்கு தகுதியின் அடிப்படையில் ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

**58—**

## கால்நடை மேம்பாட்டுத் திட்டம்

**வினா எண் 41842—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

டேனிடா நிதியுதவி பெறும் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் உடுமலைப்பேட்டை மடத்துக்குளம் போன்ற ஒன்றியங்களில் செயல்படுத்த அரசு ஆணையிடுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

டேனிடா நிதியுதவி பெற்று நடைபெற்று வந்த தமிழ்நாடு கால்நடை மேம்பாட்டுத் திட்டப் பணிகள் 31-01-2004-ல் முடிவடைந்துவிட்டதால் இத்திட்டத்தை உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**59—**

## கறவை மாடு வழங்குதல்

**வினா எண் 43031—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து மகளிர் மன்றங்களுக்கும் கறவை மாடு வழங்கி மகளிரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கி வரும் அனைத்து மகளிர் மன்றங்களுக்கும் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**60—**

### கால்நடை கிளை மருந்தகம் அமைத்தல்

**வினா எண் 44630—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, திருமலைராயசத்திரம் ஊராட்சியில் கால்நடை கிளை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதியில், திருமலைராயசத்திரம் எனும் ஊராட்சி எதுவும் இல்லை. ஆனால், குன்னாண்டார் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், வந்தனாக்குறிச்சி ஊராட்சியில், திருமலைராயபுரம் எனும் கிராமத்தில் ஒரு கால்நடை கிளை நிலையம் செயல்படுகிறது. இதன் அருகில் 3 கிலோ மீட்டர் தொலைவில் உப்பிலியக்குடி மற்றும் செம்பாட்டூர் என்னும் இடங்களில் கால்நடை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. 11 கி.மீ. தொலைவில் கீரனூர் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகின்றது. எனினும் திருமலைராயபுரம் மற்றும் அதற்கு அருகில் அமைந்துள்ள கிராமங்களில்



உள்ள கால்நடைகளின் மொத்த எண்ணிக்கை 12,604 எனக் கணக்கிடப்பட்டுள்ளதால், இக்கிளை நிலையத்தினைத் தரம் உயர்த்தி 2004—2005 ஆம் ஆண்டில் கால்நடை மருந்தகங்கள் அமைப்பது குறித்து பரிசீலிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**61—**

### கால்நடை கிளை மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்துதல்

**வினா எண் 44631—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்பு துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை தொகுதி, அண்டக்குளம் கால்நடை கிளை மருந்தகத்தை மருத்துவமனையாக தரம் உயர்த்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை தொகுதி மற்றும் கோட்டம், குன்னாண்டார் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த அண்டக்குளம் கிராமத்தில் தற்போது கால்நடை கிளை நிலையம் மட்டுமே செயல்பட்டு வருகிறது. இக்கிராமத்திற்கு அருகில் 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் 3 கால்நடை கிளை நிலையங்கள் உள்ளன. மேலும் அண்டக்குளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் 10000-க்கும் குறைவாக, அதாவது 5,678 கால்நடைகளே உள்ளன, 8 கிலோ மீட்டர் தொலைவிற்கு மேற்பட்டும், 10,000 கால்நடைகளுக்கு அதிகமாக உள்ள இடங்களில் செயல்பட்டு வரும் கால்நடை கிளை நிலையங்கள்தான் கால்நடை மருந்தகமாகவும், பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்துப்படுகின்றன. அண்டக்குளம் கிராம கால்நடை கிளை நிலையம் இந்த வரைமுறைகளை நிறைவு செய்யாததால் அதனை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட இயலாது.

[2004 ஜூலை 23

62—

**கால்நடை மருத்துவமனையில் உறைவிந்து சேமிப்பு வங்கி**

**வினா எண் 50635—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி நகரில் உள்ள கால்நடை மருத்துவமனை வளாகத்தில் உறைவிந்து சேமிப்பு வங்கி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் மொத்தம் 14 உறைவிந்து சேமிப்பு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. சீர்காழி தொகுதி, நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் செயற்கைமுறை கருவூட்டல் பணிக்குத் தேவையான திரவ நைட்ரஜன், தஞ்சாவூர் கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தித் துணை இயக்குநர் அலுவலகத்தாலும், தேவையான உறைவிந்து குச்சிகள் மற்றும் உறைகள் ஈச்சங்கோட்டை உயரின கால்நடை பெருக்குப் பண்ணையில் இருந்தும் சீர்காழி நகரில் உள்ள கால்நடை மருத்துவமனைக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, புதியதாக சீர்காழி கால்நடை மருத்துவமனையில் ஒரு உறைவிந்து வங்கி தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) எழாது.

63—

**சந்தன மரங்கள் விவரம்**

**வினா எண் 39282—திரு. ப. அரசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வனத் துறையால் வளர்க்கப்பட்டு பாதுகாக்கப்படும் சந்தன மரங்கள் எத்தனை?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

வனத் துறையால் வளர்க்கப்பட்டு பாதுகாக்கப்படும் வகையில் சில சந்தன மரங்களாகவும் சில மரக் கன்றுகளாகவும் உள்ளன. அதன் விவரம் பின்வருமாறு:—

| வ.எண் | மண்டலத்தின் பெயர் | சந்தன மரம் | சந்தன மரக் கன்றுகள் |
|---|---|---|---|
| 1. | சென்னை (ஆராய்ச்சி) | 2,651 | .. |
| 2. | தருமபுரி மண்டலம் | 13,549 | .. |
| 3. | சேலம் | 20,366 | 72 |
| 4. | திண்டுக்கல் | 5,102 | 7,900 |
| 5. | மதுரை | 45 | .. |
| | மொத்தம் | 41,713 | 7,972 |

64—

**சிறுத்தை மற்றும் யானை தாக்கி உயிரிழந்தவர்களுக்கு நிவாரணம்**

**வினா எண் 41604—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் 03-04-2003-ல் சிறுத்தைப் புலியால் ஒரு பெண்ணும், 15-04-2003 அன்று யானை அடித்து ஒரு ஆணும் இறந்துவிட்டனர் என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன? எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* ஆம்.

*(ஆ) 03-04-2003* அன்று வால்பாறை சரகம், பாலாஜி எஸ்டேட்டில் சிறுத்தை தாக்கி உயிரிழந்த திருமதி தேவகி என்பவரின் கணவர் திரு. பழனிச்சாமி என்பவருக்கு நிவாரணமாக ரூ. 1,00,000 (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மற்றும் *15-04-2003* அன்று மானாம்பள்ளி சரகம், குரங்குமுடி எஸ்டேட் ஏலக்காய் சோலைப் பகுதியில் காட்டு யானை தாக்கி இறந்த திரு. அப்பாவு என்பவரது மனைவி திருமதி மீனாட்சி என்பவருக்கு நிவாரணமாக ரூ. 1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) ஒப்பளிப்பு செய்து முறையே *05-11-2003* மற்றும் *03-02-2004* ஆகிய தேதியிட்ட காசோலைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

**65—**

## மின் வேலி அமைத்தல்

**வினா எண் 41608—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியிலுள்ள எஸ்டேட்டுகளில் குடியிருக்கின்ற பகுதிகளுக்கு யானை வராமல் தடுக்க மின் வேலி அமைக்க அரசு முன்வருமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியிலுள்ள எஸ்டேட்டுகளில் குடியிருக்கின்ற பகுதிகளுக்கு யானைகள் வராமல் தடுக்க மின் வேலி அமைக்க திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.



**66—**

## முதலைப் பண்ணையில் முதலைகள் விவரம்

**வினா எண் 41976—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* ஒகேனக்கல் முதலைப் பண்ணையில் எத்தனை முதலைகள் உள்ளன?

*(ஆ)* இதற்காக பிரதி மாதம் செலவு எவ்வளவு?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

*(அ) 154* முதலைகள் உள்ளன.

*(ஆ) 2003-2004* ஆம் ஆண்டில் மாதத்திற்கு ரூ. *34,552/-* மட்டும் (ரூபாய் முப்பத்து நான்காயிரத்து ஐநூற்று ஐம்பத்தி இரண்டு மட்டும்) சராசரி மாத உணவிற்காக செலவு மேற்கொள்ளப்பட்டது.

**67—**

## புலிகள் நடமாட்டத்தைத் தடுத்தல்

**வினா எண் 46290—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில் அப்பர் பார்லே எஸ்டேட் பகுதி மற்றும் எஸ்டேட் குடியிருப்பு பகுதிகளுக்குள் சிறுத்தைப் புலிகள் நடமாடுவதைத் தடுக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், நடவடிக்கை எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதியில், அப்பர் பார்லே எஸ்டேட் மற்றும் தொழிலாளர்கள் குடியிருப்பு பகுதிகளுக்குள் சிறுத்தைப் புலிகள் போன்ற வன உயிரினங்கள் நடமாட்டம் குறித்து தகவல் கிடைக்கப்பெற்றதும், வனத் துறையினர் உடன் விரைந்து சென்று அவைகளை பிடிக்க கூண்டுகள் வைக்கின்றனர். கூண்டினுள் அகப்படும் வன உயிரினங்கள் பல கிலோ மீட்டர் தொலைவுக்கப்பால் அடர்ந்த காட்டுப் பகுதிக்குள் விடப்படுகின்றன. இவ்வாறு பலமுறை செய்யப்பட்டுள்ளது. 25-05-2003 அன்று அப்பர் பார்லே எஸ்டேட் மக்கள் குடியிருப்பு பகுதியில் கூண்டு வைத்து பிடித்த சிறுத்தையையும், 20-06-2003 அன்று ஆளியாறு பகுதியில் கூண்டு வைத்து பிடித்த புலியையும் டாப்சிலிப் கரியன்சோலை பகுதியில் விடப்பட்டுள்ளன. இதற்கென வன உயிரின வல்லுநர்களைக் கொண்ட சிறப்புக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

**68—**

### பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியம்

**வினா எண் 35512—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு பனைமரத் தொழிலாளர்கள் நல வாரியத்தில் உறுப்பினர்களாக சேர்க்கப் பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்?

(இ) அவர்களுக்கு என்ன பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) 390 பேர்.



(இ) வாரியத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு, வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு திருமண உதவித் தொகை, மகப்பேறு உதவித் தொகை, அவர்களது பிள்ளைகளுக்கு கல்வி உதவித் தொகை இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகியவற்றிற்காக வாரிசுதாரர்களுக்கு நிவாரண உதவித் தொகை ஆகியவை வழங்கப்படுகின்றன.

**69—**

### முடிதிருத்துவோர் நல வாரியம்

**வினா எண் 35518—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு முடிதிருத்துவோர் நல வாரியத்தில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு பேர்?

(இ) அவர்களுக்கு என்ன பாதுகாப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன?

விடை—

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) 997 பேர்.

(இ) வாரியத் திட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளவாறு கல்வி உதவித் தொகை, திருமண உதவித் தொகை மகப்பேறு உதவித் தொகை, இயற்கை மரணம், விபத்து மரணம் ஆகியவற்றிற்காக உதவித் தொகை வழங்கப்படுகின்றது.

70—

## பால் உற்பத்தியாளர் ஒன்றியம்

**வினா எண் 21761—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டுவரும் பால் உற்பத்தியாளர் ஒன்றியம் நாளொன்றுக்கு எத்தனை லிட்டர் பால் உற்பத்தி செய்து வருகிறது?

(ஆ) பால் உற்பத்தியை பெருக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் பால் உற்பத்தியாளர் ஒன்றியம், நாளொன்றுக்கு சராசரியாக 19,700 லிட்டர் பால் உற்பத்தி செய்து வருகிறது.

(ஆ) நீலகிரி மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க தற்போது பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இது நாள்வரை பால் சேகரம் செய்யப்படாது விடுபட்ட தொலைதூர குக்கிராம பகுதிகளிலும், பால் உற்பத்தி மிகவும் குறைந்து இருந்த காரணத்தால் பால் கொள்முதல் செய்வதை நிறுத்தி இருந்த பகுதிகளிலும், தனியார் பால் சேகரம் செய்யும் பகுதிகளிலும் பால் உற்பத்தியாளர்களின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அருகிலுள்ள செயலிழந்து போன சங்க பகுதிகளிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு புதிதாக பால் சேகரிப்பு மையங்கள் அமைத்தும், சங்கங்களில் உறுப்பினராக இல்லாது கால்நடைகளை வளர்த்து பால் உற்பத்தி செய்து தனியாருக்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களை சந்தித்தும் சங்கங்களின் உறுப்பினர்களை அழைத்து கூட்டங்கள் நடத்தியும் பால் உற்பத்தியை பெருக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கூடுதலான பகுதிகளில் பால் சேகரம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும் தாட்கோ திட்டத்தின்கீழ் சுயஉதவிக் குழுக்களுக்கு கால்நடை வாங்க கடன் உதவிகள் வழங்க, சுயஉதவிக் குழுக்களில் உள்ள பால் உற்பத்தியாளர்களை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக சேர்த்து பால் உற்பத்தியை அதிகரிக்க சுயஉதவிக் குழுக்களுடன் சிறப்புக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகிறது. ஒன்றியத்தின் மூலம், கால்நடைகளுக்கு 24 மணி நேரம் அவசர சிகிச்சையும், 15 நாட்களுக்கு ஒருமுறை வழித்தட சிகிச்சையும் அளிப்பதன் மூலம் கால்நடைகளின் உடல்நலம் காக்கப்பட்டு பாலுற்பத்தி குறையாவண்ணம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் நிதியுதவி மூலம் தரம் குன்றிய கால்நடைகளின் தரம் உயர்த்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. உயர்ரக கலப்பின கால்நடை அபிவிருத்திக்கு கால்நடை செயற்கை கருவூட்டல் செய்யப்படுகிறது. மலைப்பகுதி மேம்பாட்டுத்திட்ட நிதியுதவியுடன் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டு கன்றுகள் உடல் நலம் பேணப்படுகிறது. கோமாரி நோய் தடுப்பூசி திட்டம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.



71—

## ஆவின் மில்க் ஈட்டிய லாபம்

**வினா எண் 31631—திரு. என்.கே. பெருமாள்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை ஆவின் மில்க் கடந்த ஆண்டில் ஈட்டிய லாபமும், விற்கப்பட்ட பொருள்கள் என்ன என்பதையும் அரசு அறிவிக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் ஏப்ரல் 2001 முதல் மார்ச் 2002 முடிய ரூ. 63.76 இலட்சம் நட்டமடைந்துள்ளது. ஏப்ரல் 2002 முதல் மார்ச் 2003 முடிய ரூ. 9.99 இலட்சம் நட்டமடைந்துள்ளது. ஏப்ரல் 2003 முதல் டிசம்பர் 2003 முடிய ரூ. 66.54 இலட்சம் நிகர இலாபமடைந்துள்ளது. மேலும் ஏப்ரல் 2002 முதல் மார்ச் 2003 முடிய மாதம் வாரியாக ஒன்றியம் அடைந்த இலாப/நட்டம் விபரங்கள் வருமாறு:

| மாதங்கள் | ரூபாய் இலட்சத்தில் | |
|---|---|---|
| ஏப்ரல் 2002(-) | 1.85 நட்டம் | |
| மே 2002(-) | 17.58 நட்டம் | |
| ஜூன் 2002(-) | 14.57 நட்டம் | 50.53 நட்டம் |
| ஜூலை 2002(-) | 12.24 நட்டம் | |
| ஆகஸ்டு 2002(-) | 4.29 நட்டம். | |
| செப்டம்பர் 2002 | 1.67 இலாபம் | |
| அக்டோபர் 2002 | 2.16 இலாபம் | |
| நவம்பர் 2002 | 0.50 இலாபம் | |
| டிசம்பர் 2002 | 8.90 இலாபம் | 40.54 இலாபம் |
| ஜனவரி 2003 | 8.92 இலாபம் | |
| பிப்ரவரி 2003 | 9.91 இலாபம் | |
| மார்ச் 2003 | 8.48 இலாபம் | |

| | |
|---|---|
| ஏப்ரல் 2002 முதல் ஆகஸ்டு 2002 முடிய நட்டம் | 50.53 |
| செப்டம்பர் 2002 முதல் மார்ச் 2003 முடிய இலாபம் | 40.54 |
| நிகர நட்டம் (-) | 9.99 |

72—

## ஆவின் பால் பூத்து தொடங்குதல்

**வினா எண் 35638—டாக்டர் திருமதி ஆ. கருப்பாயி:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் ஆவின் பால் பூத்து தொடங்க கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் ஆவின் பால் பூத்து தொடங்க தற்போது சாத்தியக்கூறுகள் இல்லை.

73—

## பால் கொள்முதல்

**வினா எண் 41931—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் ஒரு நாளைக்கு எத்தனை லிட்டர் பால் கொள்முதல் செய்கிறது?

(ஆ) இம்மாவட்டத்தில் தொகுதி வாரியாக மொத்த கொள்முதல் எவ்வளவு?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) காஞ்சிபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் 12-01-2004 ஆம் நாள் நிலவரப்படி நாளொன்றுக்கு 16,800 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) மேற்கண்ட 16,800 லிட்டர் பால் காஞ்சிபுரம் மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு தொகுதிவாரியாக கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (1) மதுராந்தகம் தொகுதி | 1,850 | லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| (2) அச்சரபாக்கம் தொகுதி | 3,450 | லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| (3) உத்திரமேரூர் தொகுதி | 4,820 | லிட்டர் நாள் ஒன்றுக்கு |
| (4) காஞ்சிபுரம் தொகுதி | 4,830 | லிட்டர் நாள் ஒன்றுக்கு |

(5) செங்கல்பட்டு தொகுதி 1,550 லிட்டர் நாள் ஒன்றுக்கு

(6) திருப்போரூர் தொகுதி 300 லிட்டர் நாள் ஒன்றுக்கு

மொத்தம் .. 16,800 லிட்டர்

74—

## பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய கட்டடம் கட்டுதல்

**வினா எண் 44440—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராணிப்பேட்டை தொகுதி, தாதிரெட்டிப்பள்ளி மற்றும் மேல்பாடி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு புதிய கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்:**

இராணிப்பேட்டை தொகுதி, காட்பாடி வட்டத்தில் அமைந்துள்ள டிபிடி 548 தாதிரெட்டிப்பள்ளி பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு அடிமனை எதுவும் சொந்தமாக இல்லாததாலும், கட்டடம் கட்ட போதிய நிதி ஆதாரம் இல்லாததாலும், அதுபோல் டிபிடி 1343 மேல்பாடி பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு கட்டடம் கட்ட போதிய நிதி ஆதாரம் இல்லாததாலும், மேற்படி சங்கங்களுக்கு சொந்தமாக கட்டடம் கட்டித்தர வாய்ப்பில்லை.

75—

## பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம்

**வினா எண் 31718—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) சேலத்திலுள்ள எருமைப்பாளையம் சிறு தொழில் சாயம் ஏற்றும் தொழிற்சாலைகள் கூட்டமைப்பு நிறுவனத்தின் மூலம் துவங்கப்படவுள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் துவங்கப்பட்டுவிட்டதா?

(ஆ) இல்லையெனில் அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலத்தில் உள்ள எருமைப்பாளையம் சிறு தொழில் சாயமேற்றும் தொழிற்சாலைகள் கூட்டமைப்பு நிறுவனத்தின் மூலம் துவக்கப்படவுள்ள பொது கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையக் கட்டடப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. கட்டடப் பணி முடிவுற்ற பின்னர் எஞ்சிய வேலைகள் முடிக்கப்பட்டு ஆலை இயங்க தொடங்கும்.

76—

## தனி அலுவலர்களுக்கு ஊதியம் வழங்குதல்

**வினா எண் 37938—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர்களாக அரசு அதிகாரிகளை நியமிப்பதால் ஏற்படும் நட்டத்தைப் போக்க அரசே ஊதியம் வழங்க ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்:**

(அ) கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி அலுவலர்களை நியமனம் செய்யும்போது சங்கத்தின் நிதி நிலைமை மற்றும் தனி அலுவலருக்கு சம்பளம் வழங்கும் திறன் ஆகியவைகளை கருத்தில் கொண்டுதான் அரசு அலுவலர்கள், தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்படுகிறார்கள். நிதிநிலைமை சரியில்லாத சங்கங்களுக்கு

[2004 ஜூலை 23

தனி அலுவலர்கள் (கூடுதல் முழு பொறுப்பில்) நியமனம் செய்யப்படுகிறார்கள். இவர்களுக்கு நிதிநிலைமை சரியில்லாத சங்கங்கள் சம்பளம் வழங்குவதில்லை. அவர்களுக்கு நிதித் திறன் உள்ள சங்கங்கள்தான் சம்பளம் வழங்குகின்றன.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**77—**

## மீனவர்களுக்கு இலவச வீடுகள்

**வினா எண் 36667—திரு. கே. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம், பேரூராட்சியில் உள்ள வெண்புருஷம், தேவனேரி குப்பம் மீனவர்களுக்கு இலவச வீடுகட்டிக் கொடுக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

மாமல்லபுரம் பேரூராட்சியில் உள்ள வெண்புருஷம் மீனவ கிராமத்தில் இலவச வீடுகள் குறித்த விதிமுறைகளுக்குட்பட்ட 35 மீனவ குடும்பங்களுக்கும், தேவனேரி மீனவ கிராமத்தில் 85 மீனவ குடும்பங்களுக்கும் ஏற்கெனவே வீடுகள் ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இம்மீனவ கிராமங்களுக்கு ஏற்கெனவே வீடுகள் ஒப்பளிக்கப்பட்டதால் இவ்வாண்டு இக்கிராமங்களுக்கும் வீடுகள் ஏதும் ஒப்பளிக்கப்படவில்லை.

**78—**

## மீனவர்களுக்கு வீடுகள்

**வினா எண் 41855—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்களுக்கான வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் உடுமலைப்பேட்டை வட்டம், கொழுமம் பகுதியிலுள்ள அனைத்து மீனவர்களுக்கும் வீடு கட்டித்தர அரசு முன்வருமா?



2004 ஜூலை 23]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்ட மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் நாளது தேதியில் 193 உறுப்பினர்கள் இருந்து வருகின்றனர். இவர்களில் 37 உறுப்பினர்களுக்கு வீடு இல்லை என கண்டறியப்பட்டு, கோவை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின்கீழ் இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் வீடு கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த 37 உறுப்பினர்களில் கொழுமம் பகுதியில் 34 உறுப்பினர்கள் உள்ளனர்.

**79—**

## மீனவர் அடுக்குமாடி குடியிருப்பை செப்பனிடல்

**வினா எண் 49102—திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் தொகுதியிலுள்ள திருச்சினாங்குப்பம் மீனவர்கள் குடியிருக்கும் அடுக்குமாடி குடியிருப்பை செப்பனிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன் வளத் துறை அமைச்சர்:**

(அ) மீனவர் இலவச வீடுகள் பழுதுபார்க்கும் திட்டம் எதுவும் தற்போது அரசு செயல்படுத்தவில்லை.

(ஆ) வினா எழாது.

**80—**

## மீனவர் அடுக்குமாடி குடியிருப்பை செப்பனிடல்

**வினா எண் 46365—திரு. செ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2004 ஜூலை 23

(அ) சேலம் மாவட்டத்தில் சுற்றுலா வழிகாட்டிகள் அமர்த்தப்பட்டுள்ளனரா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சுற்றுலாத் துறையின் மூலம் சேலம் மாவட்டத்தில் சுற்றுலா வழிகாட்டிகள் அமர்த்தப்படவில்லை.

**81—**

**விவசாய நடைமுறைப் பயிற்சி**

**வினா எண் 22741—திருமதி காசாம்பு பூமாலை:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு விவசாய நடைமுறைப் பயிற்சி அளிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சங்கராபுரம் தொகுதியிலுள்ள வேலையில்லாப் பட்டதாரிக்கு உகந்த விவசாய நடைமுறைப் பயிற்சியை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டில் தென்னாற்காடு மாவட்டம் விருத்தாசலத்தில் இயங்கி வரும் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் ஆண்டு முழுவதும் கற்றுக் கொள்ளலாம்.

**82—**

**பூச்சிகளை அகற்ற புதிய வகை கருவிகள்**

**வினா எண் 31156—திரு. ராதாரவி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2004 ஜூலை 23]

(அ) விவசாயிகளின் சேமிப்பு தானியங்களில் உருவாகும் பூச்சிகளை அகற்ற புதிய கருவிகள் கண்டுபிடிக்க ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

விவசாயிகளின் சேமிப்பு தானியங்களில் உருவாகும் பூச்சிகளை அகற்ற புதிய கருவிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குழாய் வடிவப் பொறி, பயறு வண்டுகளைப் பிடித்தழிக்க சிறப்பு குழாய் வடிவப் பொறி, பூச்சிகளை தானாகவே அகற்றும் புதிய சேமிப்புக்கலன் ஆகியவை நடைமுறையிலுள்ளன. மேலும் நவீன புதிய வகை கருவிகளை கண்டுபிடிக்க ஆராய்ச்சிகளை தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**83—**

**அரசு மானியத்துடன் உழவு செய்தல்**

**வினா எண் 42979—திரு. சோ. இராசேந்திரன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள குறிப்பாக மானாவாரி பகுதி விவசாயிகளின் நிலங்களை அரசே மானியத்துடன் உழவு செய்திட நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு மானியத்துடன் உழவு செய்திட அரசிடம் கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழாது.

[2004 ஜூலை 23

84—

## மண் பரிசோதனைக் கூடம் அமைத்தல்

**வினா எண் 46805–திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) சீர்காழி தொகுதி, வைத்தீஸ்வரன்கோயில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான மண் பரிசோதனைக் கூடம் அமைத்துக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ப. அண்ணாவி, வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 19 மண் ஆய்வுக்கூடங்கள், 16 நடமாடும் மண் ஆய்வுக்கூடங்கள் வேளாண்மைத் துறையின்கீழ் கீழ்க்கண்ட இடங்களை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. மேலும் இவைகள் முறையே மாவட்டம் முழுவதும் உள்ள நிலங்களில் விவசாயிகள் எடுத்துவரும் மண் மாதிரிகளை ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்கி வருகின்றன.

| மண் ஆய்வுக்கூடம் | நடமாடும் மண் ஆய்வுக்கூடம் |
|---|---|
| 1. காஞ்சிபுரம் | 1. காஞ்சிபுரம் |
| 2. கடலூர் | 2. கடலூர் |
| 3. தருமபுரி | 3. தருமபுரி |
| 4. கோயம்புத்தூர் | 4. கோயம்புத்தூர் |
| 5. திண்டுக்கல் | 5. ஈரோடு |
| 6. ஈரோடு | 6. நாகர்கோயில் |
| 7. நாகர்கோயில் | 7. மதுரை |
| 8. மதுரை | 8. ஊட்டி |
| 9. ஊட்டி | 9. குடுமியான்மலை |
| 10. குடுமியான்மலை | 10. பரமக்குடி |
| 11. பரமக்குடி | 11. சேலம் |
| 12. சேலம் | 12. திருச்சி |
| 13. சிவகங்கை | 13. ஆடுதுறை |
| 14. தேனி | 14. கோவில்பட்டி |
| 15. திருச்சி | 15. வேலூர் |
| 16. ஆடுதுறை | 16. அருப்புக்கோட்டை |
| 17. திருநெல்வேலி | |
| 18. கோவில்பட்டி | |
| 19. வேலூர் | |





இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சீர்காழி தொகுதி வைத்தீஸ்வரன் கோவில் பகுதியில் ஏற்கெனவே ஆடுதுறையில் உள்ள மண் ஆய்வுக்கூடம் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக்கூடம் ஆகியவற்றின் திட்டப் பணிகள் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கும் சேர்த்து செயல்பட்டு வருகிறது. மேலும் ஒரு மண் ஆய்வுக்கூடம் மற்றும் நடமாடும் மண் ஆய்வுக்கூடம் அமைக்க ஆகும் செலவு விவரம் பின்வருமாறு:

மண் ஆய்வுக்கூடம்:

| | |
|---|---|
| தொடராச் செலவினம் | ரூ.23.00 இலட்சம் |
| தொடர் செலவினம் | ரூ. 18.00 இலட்சம் |
| | ரூ. 41.00 இலட்சம் |

நடமாடும் மண் ஆய்வுக்கூடம்

| | |
|---|---|
| தொடராச் செலவினம் | ரூ. 22.00 இலட்சம் |
| தொடர் செலவினம் | ரூ. 15.00 இலட்சம் |
| | ரூ. 37.00 இலட்சம் |

2. எனவே சீர்காழி தொகுதி வைத்தீஸ்வரன் கோயில் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கென புது ஆய்வகம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

85—

### அறிவிப்பு சங்கை ஒலிக்க வைத்தல்

**வினா எண் 7316–திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ)* திருநெல்வேலி மாநகராட்சி, மைய அலுவலகம், பாளையங்கோட்டை, மேலப்பாளையம் வார்டு அலுவலங்களில் உள்ள அறிவிப்பு சங்கு ஒலிக்காமல் உள்ளதை அரசு அறியுமா?

*(ஆ)* ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* திருநெல்வேலி மாநகராட்சி, பாளையங்கோட்டை வார்டு அலுவலகத்திலுள்ள அறிவிப்பு சங்கை இயக்க வைக்கக்கூடிய பழமையான மோட்டார் பழுதடைந்து விட்டதால் அதை சீர்படுத்தினாலும் உரிய பயன் கிடைக்காடு என்பதாலும் தற்போது அறிவிப்பு சங்கை வைக்க அவசியம் இல்லை என்பதாலும் அதனை இயங்க வைக்க நடவடிக்கை ஏதும் அவசியமில்லை என கருதப்படுகிறது.

86—

### காவிரி குடிநீர் வழங்கல்

**வினா எண் 12222–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ)* எடப்பாடி தொகுதி, மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பகுட்டை கிராமம், விலாமரத்துக்காடு மற்றும் பாலிக்கண்ணன்காடு மக்களுக்கு காவிரி குடிநீர் கிடைக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், காவிரி குடிநீர் கிடைக்க அரசு ஆவன செய்யுமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், மகுடஞ்சாவடி ஒன்றியம், தப்பகுட்டை ஊராட்சியை சேர்ந்த விலாமரத்துக்காடு மற்றும் பாலிக்கண்ணன்காடு ஆகிய குடியிருப்புகள் இருப்பாளி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் மகுடஞ்சாவடி ஒன்றியத்தில் 175 மற்றும் கிராமங்கள் மற்றும் இடங்கணசாலை பேரூராட்சிக்கு காவிரி குடிநீர் வழங்கும் திட்டத்தில் சேர்க்கப்பட்டு, திட்டப் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு 15-7-2003 முதல் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.*

87—

### கூட்டுக் குடிநீர் திட்டம்

**வினா எண் 13198–திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

*(அ)* வெள்ளக்கோயில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், ஓதலையூர் ஊராட்சியில் உள்ள எ. சத்திரம் சேனாதிபதிபாளையம், மல்லம்பாளையம், புது காலனி, கோட்டார்பட்டி, ஆணங்கூர் ஆகிய கிராமங்களுக்கு குடிநீர் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வெள்ளக்கோயில் தொகுதி, மூலனூர் ஒன்றியம், ஓதலையூர் ஊராட்சியில் உள்ள எ.சத்திரம், சேனாதிபதிபாளையம், மல்லம்பாளைம், புது காலனி, கோட்டார்பட்டி, ஆணங்கூர் ஆகிய கிராமங்களுக்கு 2002—2003 ஆம் நிதியாண்டில் குடிநீர் வழங்க கோட்டார்பட்டி மற்றும் 8 குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் முடிவுற்று தற்போது பயனுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

88—

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 19380—திரு. அ.இரா. மலையப்பசாமி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியம், கோதூர் ஊராட்சியிலுள்ள உத்திகாபாளையம் மக்கள் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இன்றி சிரமப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், நடவடிக்கை என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், பரமத்தி ஒன்றியம், கோதூர் ஊராட்சியிலுள்ள உத்திகாபாளையம் குடியிருப்பிற்கு ஆர். புதுப்பாளையம், காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் தொட்டி மூலம் காவிரி நீர் விநியோகம் செய்யப்படுகிறது. மேலும் 2002—2003 ஆம் ஆண்டில் சிறு மின்விசைத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

89—

## ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்

**வினா எண் 21612—திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம், பூலாம்பட்டி பேரூராட்சிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள குடியிருப்புகள் எத்தனை உள்ளன?

(ஆ) அவற்றிற்கு வறட்சி நிவாரண நிதியில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி, கொங்கணாபுரம் மற்றும் பூலாம்பட்டி பேரூராட்சிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையுள்ள குடியிருப்புகள் விவரம்.

**கொங்கணாபுரம் பேரூராட்சி:**

1. 4-வது வார்டு சங்ககிரி
   மெயின் ரோடு பகுதியில் 50 வீடுகள்
2. 9-வது வார்டு கலராமணி அருந்ததியர் பகுதியில் 30 வீடுகள்
3. 6-வது வார்டு ரங்கம்பாளையம் குடித்தெரு 75 வீடுகள்
4. 8-வது வார்டு ரங்கம்பாளையம் வள்ளுவர் தெரு 100 வீடுகள்

**பூலாம்பட்டி பேரூராட்சி:**

1. வார்டு எண் 11 பில்லுக்குறிச்சி காலனி 100 வீடுகள்
2. அனைப்புளிக்காடு வார்டு எண் 15-100 வீடுகள்
3. 9-வது வார்டு ஆதிதிராவிடர் காலனி 200 வீடுகள்
4. 12-வது வார்டு கண்டிக் கவுண்டனூர் 100 வீடுகள்
5. 10-வது வார்டு காசிகாடு 75 வீடுகள்
6. 14-வது வார்டு மோளப்பாறை 150 வீடுகள்

(ஆ) மேற்கண்ட இடங்கள் குடிநீர்ப் பற்றாக்குறை உள்ள பகுதிகளாக கண்டறிப்பட்டுள்ளன. மேற்படி இடத்திற்கு தலா ரூ.1.00 இலட்சம் மதிப்புள்ள போர்வெல் மின் பவர் பம்பு அமைத்தால் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கலாம். பேரூராட்சியில் நிதிப் பற்றாக்குறையாக உள்ளது. எனவே, வறட்சி நிவாரணத் திட்டம் அல்லது நிதி கிடைக்கப்பெறும் பட்சத்தில் மேற்படி பணிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

[2004 ஜூலை 23

90—

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

**வினா எண் 22012–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன் அள்ளி ஊராட்சி, புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி கட்டடம் அருகில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க அரசு ஆணை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சநாயக்கன்அள்ளி ஊராட்சி, புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 150 ஆகும். புதுப்பட்டிக்கு குடிநீர்த் திட்டம் நடப்பு நிதியாண்டில் (2003—2004) மேற்கொள்ளப்பட உள்ளது. இத்திட்டத்துடன் புதுப்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கும் குடிநீர் வசதி செய்துதர தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

91—

## மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 22410–திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி தொகுதி, எடப்பாடி ஒன்றியம், ஆவணிப் பேரூர் கீழ்முகம் ஊராட்சி அண்ணா நகர், காமராஜ் நகர் பகுதியில் குடிநீர்த் தட்டுப்பாடு உள்ளது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?



2004 ஜூலை 23]

(ஆ) ஆமெனில், அந்த பகுதிகளுக்கு குடிநீர் விநியோகிக்க எல்லை மாரியம்மன் கோயில் அருகில் மேல்நிலைத் தொட்டி கட்டி குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், எடப்பாடி தொகுதி. எடப்பாடி ஒன்றியத்தில் ஆவணிப் பேரூர், கீழ்முகம் ஊராட்சியில் உள்ள அண்ணா நகர், இராசிபுரம் எடப்பாடி கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிலை I—ன் மூலம் கட்டப்பட்ட ஒரு மேல்நிலைத் தொட்டி மூலமும், காமராஜ் நகர் பகுதியில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள மேல்நிலைத் தொட்டியின் மூலமும் தேவைக்குப் போதுமான அளவு காவிரி குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, அந்தப் பகுதிகளுக்கு மேலும் ஒரு மேல்நிலைத் தொட்டி கட்டுவது பரிசீலனையில் இல்லை.

92—

## சிறு தொட்டி அமைத்தல்

**வினா எண் 25192–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம், தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, சித்திரப்பட்டி விநாயகர் கோயில் அருகில் சிறு தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, மஞ்சாரஅள்ளி ஊராட்சி, சித்திரப்பட்டி விநாயகர் கோயில் என்பது சித்திரப்பட்டி குடியிருப்பின் ஒரு பகுதியாகும். சித்திரப்பட்டி குடியிருப்பில் நான்கு கையிறைப்பான் திட்டமும் 30,000 லிட்டர்

கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய விசைப்பம்பு திட்டம் செயலில் உள்ளது. எனவே சித்திரப்பட்டி விநாயகர் கோயில் அருகில் தனியாக சிறு தொட்டி அமைப்பது பரிசீலனையில் இல்லை.

93—

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 25772–திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, செஞ்சிமலைக்காடு பகுதியில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, கலப்பம்பாடி ஊராட்சி, செஞ்சிமலைக்காடு குடியிருப்பின் மக்கட்தொகை 25 ஆகும். இக்குடியிருப்பின் மக்கட்தொகை மிகவும் குறைவாக உள்ளது. தற்போதைய மக்கட்தொகைக்கு வாரிய விதிமுறைகளின்படி மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி அமைக்க இயலாது.

94—

## ஆற்றின் குறுக்கே புதிய பாலம்

**வினா எண் 29107–திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை நல்லகாத்திலிருந்து ஸ்டேன்மோர் மருத்துவமனைக்கு செல்லும் வழியிலுள்ள ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பேரூராட்சி நல்லகாத்து எஸ்டேட்டிலிருந்து ஸ்டேன்மோர் மருத்துவமனைக்கு செல்ல ஆற்றின் குறுக்கே 2002-2003 ஆம் ஆண்டு பொது நிதியின்கீழ் ரூ.2,25,000/– மதிப்பீட்டில் பாலம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது பகுதிவாழ் மக்களின் பயன்பாட்டில் உள்ளது.

95—

## குடிதண்ணீர் விநியோகம்

**வினா எண் 29311—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் ஊராட்சியில் குடிதண்ணீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், திருக்கருகாவூர் குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய திட்டம் 1996—1997 ஆம் ஆண்டு முடிக்கப்பட்டு பயனில் உள்ளது. கோடை காலங்களில் நீர் உறிஞ்சு கிணற்றில் போதுமான நீர் இல்லாததால், குளத்தூர் குடியிருப்பு நீர் உறிஞ்சு கிணற்றிலிருந்து குடிநீர்க் குழாய் பதிக்கப்பட்டு, போதுமான அளவு குடிநீர் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

96—

## கழிவுநீர் வடிகால் அமைத்தல்

**வினா எண் 30853—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள கலைஞர் நகரில் கழிவுநீர் கால்வாய் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, வால்பாறை பேரூராட்சி ,கலைஞர் நகர்ப் பகுதியில் வடிகால் கட்டும் பணி 22-3-2003-ல் பணி முடிக்கப்பட்டது. கோவை மாவட்டம், வால்பாறை தொகுதி, வால்பாறை பேரூராட்சிக்குட்பட்ட 9-வது வார்டு கலைஞர் நகர்ப் பகுதியில் தங்கவேல் வீடு முதல் சிடிசி மணி வீடு வரை, பேரூராட்சி மூலம் கழிவு நீர் வடிகால் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, முடிக்கப்பட்டுள்ளது. கலைஞர் நகர்ப் பகுதியில் கழிவு நீர் வடிகால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

97—

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்தல்

**வினா எண் 37121—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி-சாத்தமாம்பட்டு கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி, விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த கீழமாம்பட்டு ஊராட்சியிலுள்ள சாத்தமாம்பட்டு குடியிருப்பிற்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய மின்விசைத் திட்டத்தின் மூலம் அத்தியாவசியத் தேவைகளுக்குப் போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

98—

## குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 37122—திரு. தி. வேல் முருகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி-பனிக்கன் குப்பம் ஊராட்சியைச் சேர்ந்த தி. புதுப்பிள்ளையார்குப்பம் கிராமத்தில் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், பண்ருட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த பனிக்கன்குப்பம் ஊராட்சியிலுள்ள புதுப்பிள்ளையார்குப்பம் குடியிருப்பிற்கு மக்கள் பங்கேற்புடன்கூடிய பகுதி சீரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 5.50 இலட்சம் செலவில், 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன்கூடிய குடிநீர்த் திட்டம் ஜூலை 2003-ல் முடிக்கப்பட்டு, போதுமான அளவு குடிநீர் வழங்கப்படுகிறது.

99—

### திருமண மண்டபம் கட்டுதல்

**வினா எண் 37502—திரு. அ. நடராஜன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குத்தாலம் பேரூராட்சியில் அரசின் சமன்பாட்டு நிதியிலிருந்து திருமண மண்டபம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

பேரூராட்சிகளுக்கு மாநில நிதிப் பகிர்வின்கீழ் வழங்கப்படும் நிதியுதவியில் ஓர் அங்கமான அரசின் சமன்பாட்டு நிதியிலிருந்து வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ள அரசால் கொள்கை அளவில் முடிவு எதுவும் இந்நாள் வரை எடுக்கப்படவில்லை. எனவே நாகப்பட்டினம் மாவட்டம், குத்தாலம் பேரூராட்சியில் அரசின் சமன்பாட்டு நிதியிலிருந்து திருமண மண்டபம் கட்டிக்கொடுக்க வழிவகை இல்லை.

100—

### கழிப்பிடக் கட்டடம் கட்டுதல்

**வினா எண் 37805—திரு. நா. சந்திரமோகன்:** மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* சீர்காழி நகராட்சியில் 21-வது வார்டு பங்களா குளத்துமேட்டுத் தெருவில் கழிப்பிடக் கட்டடம் கட்டிக்கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன், செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் (ஆ) சீர்காழி நகராட்சியில் 21-வது வார்டு பங்களா குளத்துமேட்டுத் தெருவில் நகராட்சிக்குச் சொந்தமான இடமோ,



அரசுக்குச் சொந்தமான இடமோ இல்லை என்பதால் கழிப்பிடக் கட்டடம் கட்டிக்கொடுக்க இயலாது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9(1)-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை இப்பேரவையின் எட்டாவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. சி. சிவசாமி

திரு. வி. ஜெயராமன்

திருமதி சி.எம். சூரியகலா

திரு. லா. சந்தானம்

டாக்டர் தே. குமாரதாஸ்

திரு. செ.கு. தமிழரசன்

### (ஆ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (நீக்கச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. *(ஆம்)*

மறுப்போர் "இல்லை" என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.



### (ஆ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2004

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. *(ஆம்)*

மறுப்போர் "இல்லை" என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்

[2004 ஜூலை 23

## 5. வரவு–செலவுத் திட்டம், 2004–2005, பொது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதம். திரு. எச். ராஜா.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிப்ரவரி மாதம் சட்டமன்றம் கூடிய பிறகு, நீண்ட நாட்களுக்குப் பிறகு இப்போது மீண்டும் சட்டமன்றமானது கூடியிருக்கிறது. ஆனால் இந்தக் கூட்டத் தொடர், நேற்றையதினத்தை ஒதுக்கிவிட்டுப் பார்த்தால் 7 நாட்கள் மட்டுமே சட்டமன்றம் செயல்படக்கூடிய ஒரு குறுகிய காலக் கூட்டத் தொடராக இருக்கிறது. அகில இந்திய அளவிலே Presiding Officers' Conference–ல், கிட்டத்தட்ட 100 நாட்களுக்காவது தமிழகம் போன்ற மாநிலங்களில் சட்டமன்றமானது நடத்தப்பட வேண்டும் என்கிற ஒரு consensus உருவானது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், சட்டமன்றக் காலத்தினை நீட்டித்து குறைந்தது 30, 35 நாட்களாவது நடக்கின்ற அளவிலே செய்வது நல்லது. ஏனென்றால் ஒரே நாளில் 25, 26 மானியக் கோரிக்கைகளிலே உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துகளைச் சொல்லி அவற்றை நிறைவேற்றுவது என்பது முடியாத காரியம். மேலும், இன்றைக்கும்கூட சட்டமன்றத்தின்மீது மக்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அதாவது, எந்த ஒரு பிரச்சினையைப் பற்றி அவர்கள் மனுக் கொடுப்பதாக இருந்தாலும், அதைச் சட்டமன்றத்தில் எழுப்புங்கள் என்கின்ற அவர்களுடைய கோரிக்கை, மக்களுக்கு சட்டமன்றத்திமீது இருக்கின்ற நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. எனவே, அதிக நாட்கள் நடத்தாமல், மிகக் குறைந்த நாட்கள், ஒரு வாரம், 10 நாட்கள் என்று இருக்குமானால் மக்களுக்கு சட்டமன்றத்தின்மீது இருக்கின்ற நம்பிக்கை குறையும். அது நல்லதல்ல என்ற காரணத்தினாலே, சட்டமன்றம் நடத்துகின்ற நாட்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 10–05

கடந்த சட்டமன்றம் கூடிய பிறகு இந்த இடைப்பட்ட காலத்திலே, தேர்தல்கள் நடத்தப்பட்டு நாட்டிலே மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. மத்தியிலேயும் சரி மாநிலத்திலேயும் சரி, ஆட்சி மாற்றங்கள் தேர்தல்கள் மூலமாக ஏற்படுவது என்பது இயல்பு; சகஜமானது. It is a part of democracy. ஆனால், இன்று எப்படிப்பட்ட ஒரு



அரசாங்கம் மத்தியிலே அமைந்திருக்கிறது என்பதை மக்கள் பார்க்கும்போது, நிச்சயமாக நாங்கள் இப்படி ஓர் ஆட்சியை எதிர்பார்க்கவில்லையே என்கின்ற அதிர்ச்சியில்தான் இப்பொழுது மக்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி ஒரு மோசமானதொரு ஆட்சி; மத்தியிலே இருக்கின்ற ஓர் அமைச்சரேகூட 'காணாமல் போனவர், தேடப்படுபவர்' என்று காவல் துறையினர் வந்து வீட்டிலே நோட்டீஸ் ஒட்டுகின்ற அளவிற்கு ஒரு மோசமான அரசானது மத்தியிலே ஏற்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, நாம் 'மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு' என்கின்ற முறையிலே மக்கள் தீர்ப்பை ஏற்றாலும், அங்கு இருக்கின்ற தவறான நடவடிக்கைகளைச் சுட்டிக்காட்டாமல் இருந்திட முடியாது. ஆனால், tainted Ministers நீக்கப்பட வேண்டுமென்று ஒரு நாள் தர்ணா நடத்தினாலே 'மக்களிடம் சென்று வாக்குகளைக் கேட்டு வெற்றி பெறச் செய்யுங்கள், உங்களுக்காக மன்றத்தில் நாங்கள் பேசுவோம் என்று சொல்லி வெற்றி பெற்ற பிறகு, பாராளுமன்றத்திலே தர்ணா நடத்துவார்களேயானால், அவர்களுக்கு எதிராக மக்கள் தர்ணா நடத்த வேண்டியிருக்கும்' என்று திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. மு. கருணாநிதி அவர்கள் பல தேசிய தலைவர்களுக்கு, உலகு போற்றுகின்ற தலைவர்களுக்கெல்லாம் அறிவுரை கூறியவர், இங்கு மன்றத்திலே ஒரு நாள்கூட வரவில்லை என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) தமிழக மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

எதிர்க்கட்சியினர் நம்முடைய கோரிக்கையினை அரசாங்கத்தின் மூலமாக நிறைவேற்றச் செய்வதற்கு, அதற்கான அழுத்தங்கள் கொடுப்பதற்கு, அரசாங்கத்தை நிர்ப்பந்தப்படுத்துவதற்குக்கூட எதிர்க்கட்சிகளுக்கு உரிமை இருக்கிறது. ஆகவே, எதிர்க்கட்சியினர் அவையைப் புறக்கணிப்பது என்கின்ற தங்களுடைய நிலைப்பாட்டினை மாற்றிக்கொண்டு, அவைக்கு வந்து விவாதத்திலே கலந்துகொள்ள வேண்டுமென்று நான் எதிர்க்கட்சியினரைக் கேட்டுக்கொள்கிறேன்.

2004–05 நிதிநிலை அறிக்கையிலே, 2008–09–க்குள் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்கிடுவதற்கான இலக்கு நிர்ணயிக்கப் பட்டிருப்பது பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அதோடுகூட, நிதிப் பற்றாக்குறை மாநில மொத்த உற்பத்தியினுடைய மதிப்பிலே 3 சதவிகிதமாகக் குறைக்கப்படும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. சென்ற பட்ஜெட் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, தேர்தலுக்குப் பிறகு அரசாங்கம் பல்வேறு விதமான சலுகைகளை வழங்கியிருக்கின்றது. இலவச மின்சாரம், வீட்டிற்கு, குடிசை வீடுகளுக்கு ஒரு விளக்குக்கான இலவச மின்சாரம்

மற்றும் பள்ளிக்கூடத்திலே படிக்கின்ற பிற்படுத்தப்பட்ட குழந்தைகளுக்கு சைக்கிள் வழங்குவது அல்லது பஸ் கட்டணத்திலே சலுகைகள் என்கின்ற சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. ஆனால், இந்தச் சலுகைகளினுடைய impact இந்த பட்ஜெட்டிலே என்ன என்பது ஒட்டுமொத்தமாக இன்னமும் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப் படவில்லை; மன்றத்தின் முன்பாக வைக்கப்படவில்லை. எனவே, இதில் இருக்கின்ற பற்றாக்குறை எந்த அளவிற்குப் போகும் என்று நமக்குத் தெரியவில்லை. ஏன் என்றால், வருவாய்க் கணக்கிலே பற்றாக்குறை ரூபாய் 3336 கோடியாகவும், நிதிப் பற்றாக்குறை ரூபாய் 6922 கோடியாகவும் மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது நம்முடைய 2008–09–க்கான 3 சதவிகிதம் இலக்கை—இப்பொழுது 3.86 ஆக இருக்கிறது—இந்த roll back–க்குப் பிறகு இதனுடைய impact–ஆக எவ்வளவு percentage அதிகரிக்கும், அதைக் குறித்த காலத்திற்குள் நாம் குறைக்க முடியுமா? 2008–09–க்குள்ளாக Revenue Deficit–ஐ zero-வுக்குக் கொண்டுவர முடியுமா என்று எனக்குத் தெரியவில்லை. இந்த roll back–க்கான impact என்ன என்பதை நிதியமைச்சர் அவர்கள் அவைக்குத் தெரிவித்த பிறகுதான் அதை நம்மால் கூற முடியும். அதோடுகூட, uncovered deficit–ஆக 590.47 கோடி ரூபாயானது விடப்பட்டிருக்கிறது. இது இந்த roll back மூலமாக அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது. அதற்கு அரசாங்கம் அதிகமான நிதியினை எப்படி வசூலிக்க இருக்கிறது? அதன் மூலமாக விலைவாசி உயர்வதற்கான ஒரு அச்சமும், அபாயமும் இருக்கிறது. ஏன் என்றால், any uncovered deficit would lead to inflationary trends. ஆகவே, இதற்கான அரசாங்கத்தினுடைய திட்டங்கள் தெரிந்த பிறகு என்னுடைய கருத்துகளை நான் கூற விரும்புகிறேன்.

இந்த பட்ஜெட்டில் வேலைக்கு உணவளிக்கும் திட்டம்...

முற்பகல் 10–10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ராஜா அவர்கள், இந்தப் பற்றாக்குறையை எப்படிச் சரி செய்யப் போகிறீர்கள் என்ற வினாவை எழுப்பி, அதற்கு அரசினுடைய நிலைப்பாட்டைத் தெரிந்த பிறகு தனது பதிலுரையைக் கூறுவதாகக் கூறினார்கள். கிட்டத்தட்ட அரிசிக்கான உதவித் தொகையாக 125 கோடி ரூபாயும், பேருந்து பயணச் சீட்டுக்கு உதவித் தொகையாக 51 கோடி ரூபாயும், இலவச மின்சாரத்திற்குக் கூடுதலாக 22.12 கோடி ரூபாயும், முட்டை வழங்குதலிலே 39.59 கோடி





ரூபாயும், வீட்டிற்குப் பயன்படுத்தப்படும் மின்சார பயனாளிகளுக்கு அளித்த சலுகையின் மூலமாக 720.42 கோடி ரூபாயும், அதைப் போலவே இலவச மிதிவண்டி, பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், மிகப் பிற்படுத்தப் பட்டவர்களுக்கும் வழங்கியதன் மூலம் 47.36 கோடி ரூபாயும், விவசாயிகளுக்கான வட்டியினைத் தள்ளுபடி செய்ததில் 200 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 1,205.49 கோடி ரூபாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழைகளின் நலன் கருதி, (மேசையைத் தட்டும் ஒலி) மக்களின் நலன் கருதி அறிவித்த தற்போதைய சலுகைகளினால் அரசுக்கு இந்தச் செலவு ஏற்பட உள்ளது.

இதோடு அல்லாமல், 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தினுடைய மொத்தப் பற்றாக்குறை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதைப்போல 590.47 கோடி ரூபாய் என்பதை அவை அறியும். ஒட்டுமொத்தமாக இரண்டையும் சேர்க்கின்றபோது, 1,795.96 கோடி ரூபாய் பற்றாக்குறை உருவாகின்றது. இந்த நிலையில்தான் மைய அரசு தற்போது மத்திய வரி வருவாயின் பங்கிலிருந்து 3,709.82 கோடி ரூபாய் என 2004–2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதன் அது தற்போது 4,430.84 கோடி ரூபாய் எனக் குறிப்பிடப்படுகிறது. இன்னும் 721.02 கோடி ரூபாய் நமக்கு மூலமாக நமது மாநில அரசுக்கு, அதிகப்படியான பணம் கிடைக்கும். அது மட்டுமல்லாமல், Commercial Taxes Department மூலமாக, புது வரியே போடாமல், வரி வசூலில் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் காரணமாகவும், வரி ஏய்ப்பைத் தடுப்பதில் எடுக்கின்ற நடவடிக்கைகள் மூலமாகவும் மற்றும் சில வரிச் சீர்திருத்தங்கள் மூலமாகவும் குறைந்தபட்சமாக 400 கோடி ரூபாய், அதிகபட்சமாக 900 கோடி ரூபாய் என்ற அளவிற்கு வருவாயைப் பெருக்க வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதோடு அல்லாமல், அனைத்துத் துறைகளிலும் நாம் மேற்கொள்கின்ற செலவினத்தில் 5 சதவிகித்தைக் குறைக்க வேண்டும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு முடிவு எடுத்ததன் காரணமாக, அந்தச் சிக்கன நடவடிக்கை மூலமாக 450 கோடி ரூபாய் தற்போது சேமிப்பை நாம் உருவாக்கியிருக்கிறோம்.

இதுமட்டுமல்லாமல், இன்னும் சிலவற்றையும் நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். உதாரணமாக, Registration Department மூலமாக சில சீர்திருத்தங்களை, அதாவது கட்டணச் சீர்திருத்தங்களை மேற்கொள்கிற அடிப்படையில் நமக்கு 400 கோடி ரூபாய் வருவாய் வரவிருக்கிறது. அதிலேகூட, நாங்கள் எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ளவில்லை. அதிலே 400 கோடி ரூபாய் வருவாய் வரவிருக்கிறது.

வீட்டு வசதி வாரியத்திலே, கிட்டத்தட்ட ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் பல இடங்களில் வீட்டு வசதி வாரியத்திற்குத் தேவையான இடங்கள் எல்லாம் தேவைக்கு அதிகமாக அந்தக் காலத்தில் வாங்கி வீணே இருக்கின்ற காரணத்தினாலும், அவை அப்படியே இருக்கின்ற காரணத்தினால் ஆக்கிரமிப்புக்கு அவை உள்ளாக்கப்பட்டு, வீட்டு வ்சதி வாரியத்திற்கும் நலன் இல்லை, அரசுக்கும் நலன் இல்லை என்ற நிலையில் இருக்கிற காரணத்தினாலும், அவற்றையெல்லாம் விற்றுப் பணமாக மாற்ற முயற்சிக்கின்றபோது, அதிலே 200 கோடி ரூபாய் அளவிற்கு வருவாயை உருவாக்க வழிவகை காணப்பட்டிருக்கின்றது.

ஒட்டுமொத்தமாக இப்படி 1,500 கோடி ரூபாய் கூடுதலாக வர இருந்தாலும்கூட, எச்சரிக்கையாக அதை மிகக் குறைந்த ஒரு கணக்காக, 400 கோடி ரூபாய் அளவிற்கு வருவாயைப் பெறுவதற்கு வழிவகைகள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன். அதுமட்டுமல்லாமல் TUFIDCO நிறுவனத்தின் மூலமாக நமக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கும் வழிவகை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இப்படிப்பட்ட நடவடிக்கைகளின் காரணமாக, ஏற்கெனவே நான் கூறியிருந்த 590.47 கோடி ரூபாய் பற்றாக்குறையும் போய், தற்போது அம்மா அவர்கள் ஏழைகளின் நலன் கருதி அறிவித்த சலுகைகளினால் ஏற்பட்டிருக்கின்ற அந்த 1,700 கோடிக்கு மேல் உள்ள அதாவது 1,795.96 கோடி ரூபாய், அதையும் ஈடுகட்டி surplus என்ற நிலைக்கு–நாங்கள், நிதிச் சீர்திருத்தம், நிதி நிர்வாகச் செம்மை ஆகிய அணுகுமுறைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2 மாத காலமாக மேற்கொண்ட காரணத்தினால் பற்றாக்குறை என்பதே இல்லை, surplus என்ற நிலைக்கு நாங்கள்–வந்துவிட்டோம் என்பதனைக் கூற விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–15

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. புதிய வரிகள் இல்லாமல் அரசு மேற்கொண்டிருக்கின்ற சலுகைகளை நாம் எதிர்கொள்ள முடியும் என்று சொன்னால், அது மிக்க மகிழ்ச்சி, வரவேற்கிறேன்.

அடுத்ததாக, 'வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலம் ரூபாய் 341.92 கோடியிலே வறிய குடும்பங்களுக்கு உணவு மற்றும் வேலைப் பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்துள்ளதாகக்' குறிப்பிடப்பட்டு இருக்கிறது.





ஆனால், இந்த வேலைக்கு உணவுத் திட்டத்திலே நாம் மாவட்டங்களிலே பார்க்கின்ற குறைபாட்டினை, விதிமீறலினை நான் அரசாங்கத்தின் முன்பாகக் கொண்டு வர விரும்புகிறேன். ஏனென்றால், ஒருசில இடங்களிலே Contractor–கள் இந்த அரிசியைப் பெற்று, அவர்கள் ரேஷன் கடையிலிருந்து எடுத்துச் செல்வது – பல இடங்களிலே– பிடிக்கப்பட்டிருக்கிறது. சிவகங்கை மாவட்டத்திலே சில இடங்களிலே நாம் போராடி, வேலையை நிறுத்திக்கூட இருக்கிறோம், திருவாடானை தொகுதியிலே. கிராம சபையைக் கூட்டி, அந்தப் பகுதியிலுள்ள பணிக்கு, வறிய குடும்பங்களை, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற குடும்பங்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு வேலை கொடுப்பதற்காகத்தான் இந்த வேலைக்கு உணவுத் திட்டமானது கொண்டு வரப்பட்டிருக்கிறது. அரிசியை இயந்திரம் சாப்பிடாது. ஆனால், இயந்திரத்தை வைத்து வேலைகள் செய்யப்படுகின்ற பல்வேறு உதாரணங்களை நேரிலே பார்க்க முடிந்தது. இதுபற்றி ஏற்கெனவே வெளியிலும் நாம் பேசியிருக்கின்ற காரணத்தினாலே, இந்தத் திட்டம் முழுமையாக அதனுடைய targeted group–ற்குப் போய்ச் சேர வேண்டுமானால், எந்த இடத்திலும் contractor மூலமாக, இயந்திரங்கள் மூலமாகச் செயல்படுத்தப்படக் கூடாது. அதற்கு அரசாங்கம் முழுக்கவனம் மேற்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறைக்கான–

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் தவறுகள் எங்கும் நடக்காமல், செம்மையுடன் அப்பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கொள்கை; அரசினுடைய நடவடிக்கைகள் ஏதேனும் சில இடங்களில் அப்படிப்பட்ட தவறுகள் நடந்து இருப்பது அரசுக்குச் சுட்டிக்காட்டப்படுமேயென்றால் அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எச். ராஜா:** காவல் துறைக்கான நிதியொதுக்கீடு ரூபாய் 1,262 கோடியிலிருந்து, ரூபாய் 1,327 கோடியாக அதிகரிக்கப்பட்டிக்கிறது; வரவேற்கத்தக்க ஒன்று. ஏனென்றால் பாதுகாப்புப் பணியிலே முழு நேரமும் ஈடுபடக்கூடியவர்கள் அவர்கள். நேற்றையமுன்தினம் சென்னையிலே 9 இடங்களிலே கொள்ளை நடந்திருக்கிறது. நேற்றையதினம் ஸ்ரீபெரும்புதூரிலே 17 வயதுப் பெண் பவித்ரா கழுத்து நெறித்துக் கொல்லப்பட்டிருக்கிறார். இம்மாதிரியான சம்பவங்கள் நடக்காமல் இருப்பதற்குக் காவல் துறையினுடைய பணிகள்

செம்மைப்படுத்தப்பட வேண்டும் என்பதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

அதேபோல, வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, எவ்வளவுதான் அதிகமான நிதி ஒதுக்கினாலும், அரசாங்கம் மாற்றுப் பயிர்களுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டாலும்கூட, நீர்வளத்தை நாம் பெறாமல், நிச்சயமாக வேளாண்மைத் துறையினை முன்னேற்றிட முடியாது. இந்த விஷயத்திலே, காவிரிப் பிரச்சினையிலே, தங்களால் நடக்காதவற்றிற்கு எல்லாம்...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே சில இடங்களில் criminal நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டு, பல தவறுகளை, குற்றங்களை அவர்கள் புரிந்திருப்பது குறித்தும், காவல் துறை அதுகுறித்து எச்சரிக்கையாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது குறித்தும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதுகுறித்துக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். அது மட்டுமல்ல, எங்கேனும் ஒரு சில இடங்களில் இப்படித் தவறுகள் நடக்கின்றபோது, அதைக் களைந்து, முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்பதில் வேறு எவரையும்விட நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகவும் அக்கறை கொண்டவர் என்பதை நாடு அறியும்(மேசையைத் தட்டும் ஒலி). இந்தியாவிலேயே சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் முதல் நிலை மாநிலம் என்ற பெருமையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையில் உள்ள அரசு பெற்றிருக்கிறது(மேசையைத் தட்டும் ஒலி). இந்தக் குற்றங்களைச் செய்திருக்கின்ற அந்தக் குற்றவாளிகள் விரைவிலே பிடிக்கப்படுவார்கள், கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள்; உன்னிப்போடு மாண்புமிகு அம்மா அவர்கள் கடுமையான நடவடிக்கைகளை இவை குறித்து எடுத்து வருகிறார்கள்.

*முற்பகல் 10–20*

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது மாற்றுப் பயிர்த் திட்டத்தைப் பற்றிக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். குறைந்த அளவு நீரைப் பயன்படுத்திடும் மாற்றுப் பயிர்த் திட்டத்திலே அதிக அக்கறை கொள்ள வேண்டும். விவசாயப் பெருமக்கள் மத்தியிலே விழிப்புணர்வை உருவாக்க வேண்டுமென்ற தொலைநோக்குப் பார்வையோடு, போர்க்கால அடைப்படையிலே தமிழகத்தின்



முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக் கின்றார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொண்டு, அதனுடைய அடிப்படையிலேதான் ஜெட்ரோபா என்று சொல்லப்படுகிற காட்டாமணக்கு பயிரிட வேண்டும் என்பதையும், குறைந்த நீரைப் பயன்படுத்தி sweet sorghum என்று சொல்லப்படுகிற சர்க்கரைச் சோளத்தைப் பயிரிட வேண்டுமென்றும்...(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நிதியமைச்சர் அவர்களுக்கு ரொம்பப் பிடித்தமானது. *(சிரிப்பு)*

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, alternative crop-ஐப் பற்றிய விவாதமோ, அது பற்றிய நடவடிக்கைகளோ வரவேற்கத்தக்கது. நான் அதுபற்றி எதுவும் குறிப்பிட வரவில்லை. ஆனால், குறைந்த நீரை வைத்துப் பயிரிடுவதற்காக நாம் முயற்சிகளை மேற்கொள்ளும்போதும்கூட தேவையான அளவு நீர் ஆதாரம் இல்லையென்று சொன்னால் அதையும் நம்மால் அடைய முடியாத ஒரு சூழ்நிலை ஏற்படும். அதிலும் முக்கியமாக இப்போது வேளாண்மைத் துறை நம்பிக்கொண்டிருப்பது, மிக அதிகப் பங்கிலே, காவிரி நதி நீர் நமக்கு, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டும். அதை வைத்துத்தான் தமிழகத்தினுடைய நெற்களஞ்சியமாக இருக்கின்ற காவிரி டெல்டா பகுதியிலே நாம் சாகுபடி செய்வதற்கு முடியும். இதற்கு, புதிய ஆட்சி பொறுப்பேற்ற பிறகு இன்று வரையிலும்கூட காவிரி ஆணையத்தைக் கூட்டாமல் இருப்பது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதொரு நடவடிக்கை ஆகும். ஏனென்று சொன்னால், மாநிலங்கள் இப்போது, தடியெடுத்தவன் தண்டல்காரன் என்கின்ற நிலையிலே போவதை மத்திய அரசாங்கம் பார்த்துக்கொண்டே இருக்குமோ என்று நமக்குத் தோன்றுகிறது. பிரதம மந்திரியினுடைய authority is devalued. A Prime Minister's authority is not respected in this country. அவருடைய கட்சியைச் சேர்ந்த ஒரு முதலமைச்சரே, மற்ற மாநிலங்களோடு மேற்கொண்டிருக்கிற ஒப்பந்தத்தைச் சட்டமன்றத்திலே ரத்துச் செய்கிறார். உண்மையிலேயே பிரதமர் அவர்கள் அவருடைய authority-ஐ exercise பண்ண வேண்டுமென்று சொன்னால், அந்த Chief Minister–ஐ நீக்கியிருந்தால் சரியாக இருந்திருக்கும். ஆனால், அவ்வாறு செய்யாத காரணத்தினாலே இப்போது ஒவ்வொரு மாநிலமும் இதே நிலையை மேற்கொள்ளுமோ என்கின்ற பயமானது நமக்கு ஏற்படுகின்றது. தற்காலிகத் தீர்வாக, காவிரிப் பிரச்சினைக்கு காவிரி ஆணையத்தை உடனடியாகக் கூட்டி,

[திரு. எச். ராஜா] [2004 ஜூலை 23

அதிலே ஒரு distress sharing formula–பற்றாக்குறையைப் பகிர்ந்து கொள்கின்ற ஒரு முறையானது–ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்கு முக்கியமாக நாம் வலியுறுத்த வேண்டிய விஷயம், காவிரியிலே எந்த ஓர் அணையிலும் நீர் வருமானாலும்கூட, அது கிருஷ்ணராஜசாகராக இருந்தாலும், கபினியாக இருந்தாலும், முதல் flow-வில் ஆழாக்குத் தண்ணீர்தான் வந்தது என்றாலும், அதிலே தமிழகத்திற்கு எவ்வளவு பங்கு என்பதை நிர்ணயிக்காத வரை இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு இருக்காது. ஏனென்று சொன்னால், கபினி அபாய அளவைத் தாண்டிய பிறகு இனிமேலும் அவர்களால் சேமித்து வைத்துக்கொள்ள முடியாது என்கின்ற காரணத்தால், அவர்களுடைய அணையைக் காப்பாற்றிக்கொள்வதற்காகத்தான் சாக்கடையாக, கசிவுநீர் வடிகாலாக தமிழகத்திற்குக் காவிரியிலே தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆனால், உடனேயே மத்தியிலே நாற்பதும் நாங்கள் வெற்றி பெற்றுவிட்டோம் என்று சொல்லிக்கொள்பவர்கள் எல்லாம், அதற்காக பிரதமருக்கும், சோனியா காந்தி அவர்களுக்கும் நன்றி செலுத்தி கடிதம் எழுதுகிறார்கள். இதே காலகட்டத்தில் சென்ற ஆண்டு கிருஷ்ணராஜசாகரிலே இருந்ததைவிட 1½ மடங்குத் தண்ணீர் இருக்கிறது. அப்படியானால் அதிலிருந்து ஏன் திறந்து விடப்படவில்லை? ஆகவே, ஒரு இடைக்கால நிவாரணமாக, நாம் பற்றாக்குறையைப் பகிர்ந்துகொள்கின்ற ஒரு formula evolve பண்ண வேண்டும் என்று சொன்னால், CRA உடனடியாக அழைக்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதுபற்றிக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். தமிழக அரசும், சட்டமன்றமும்கூட இதை வலியுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஆனால், இந்த நதிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக இருக்கக்கூடியது தேசிய நதிநீர் இணைப்புதான். அந்தத் திட்டத்திற்காக, ஏற்கெனவே தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசிலே சுரேஷ் பிரபு தலைமையிலே Committee-யானது போடப்பட்டு, அது நாடு முழுவதும் சுற்றுப் பயணம் செய்து நீர் வள நிபுணர்கள், பொறியியல் வல்லுநர்கள், விவசாயப் பிரதிநிதிகளைச் சந்தித்து 5 இலட்சத்து 60 ஆயிரம் கோடி ரூபாயிலே திட்டம் தீட்டி, அது ஆகஸ்டு மாதம் 15 ஆம் தேதி துவங்கும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

*முற்பகல் 10–25*

ஆட்சியாளர்கள் மாறியிருக்கிறார்கள். பாரதிய ஜனதா கட்சி இருந்த இடத்திலே இன்று காங்கிரஸ் கட்சி இருக்கலாம். காங்கிரஸ் இருந்த இடத்திலே பாரதிய ஜனதா கட்சி இருக்கலாம். ஆனால் அரசாங்கம்



2004 ஜூலை 23] [திரு. எச். ராஜா]

அதுதானே? நிர்வாகிகள் அவர்கள்தானே? நிபுணர்கள் அவர்கள்தானே? ஆகவே, விட்ட இடத்திலேயிருந்து தொடங்குவதற்கு இவர்களுக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? நிச்சயமாக தமிழக விவசாயிகளுடைய பிரச்சினை தீருவதற்கு, நிரந்தரமாக நதிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இப்போது இருக்கின்ற U.P.A. அரசாங்கம் நடவடிக்கை எடுக்காது. ஏன் என்று சொன்னால், தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கமானது முதலிலே இந்தத் திட்டம்பற்றி விவாதித்தபோது மூன்று அரசாங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்தன; பீகார், மேற்கு வங்கம், கேரளா. இன்று கேரளா மற்றும் மேற்கு வங்கத்தைச் சார்ந்த 62 இடதுசாரி எம்.பி.–க்களும், பீகாரைச் சார்ந்த லாலு பிரசாத் யாதவினுடைய கட்சியினுடைய 23 எம்.பி.–க்களும், ஆக 85 எம்.பி.–க்கள் இந்த தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு எதிரிகள். இவர்கள் தயவிலே இருக்கின்ற ஓர் ஆட்சி இந்த நதிநீர்த் திட்டத்தினைக் கொண்டு வரமுடியாது என்ற காரணத்தினால்தான், மக்களைத் திசை திருப்புவதற்காக, அவர்களுடைய CMP–யிலே – I don't know whether it is Common Minimum Programme or Communist Maximum Problem. Whatever it is. Anyhow it is CMP. ஆகவே, CMP–யிலே – மக்களைத் திசை திருப்புவதற்காக, இதற்காக ஒரு Comprehensive Assessment-க்கு Committee போடு என்று சொல்கிறார்கள். இது முதல் தேதி படத்திலே என்.எஸ். கிருஷ்ணன் சொன்னது மாதிரி ஆகிவிடக் கூடாது என்று நான் கவலைப்படுகிறேன்.

அதேபோல், (குறுக்கீடு) எனக்குப் பாட வராது. நீங்கள் பாடுங்கள். (சிரிப்பு) ஊரக வளர்ச்சி, வேலைவாய்ப்பைப் பொறுத்தவரை...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலே தற்போது அமைந்திருக்கின்ற ஆட்சி தமிழக உழவர் பெருமக்களின் நலனுக்குப் புறம்பான ஆட்சி என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாகத் தமிழகத்தின் சார்பிலே டெல்லியிலே இருக்கிற தி.மு.க. தலைமையிலான 12 அமைச்சர்களும் தமிழ்நாட்டு மக்களுக்கு ஒரு மாபெரும் துரோகத்தை இழைத்துவிட்டார்கள் என்பதனை இந்த அவை மூலமாக நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நதிநீர் இணைப்புத் திட்டம் என்பது தமிழகத்தினுடைய கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு உள்ள ஒரே பதில் என்பதால் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று கூறி, வலியுறுத்தி, மைய

அரசிடம் பல முறை கேட்டிருக்கிறார்கள். *1984* ஆம் ஆண்டிலேயே மாநிலங்களவையிலே நதிநீர் இணைப்பு பற்றி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வலியுறுத்தி, அதையெல்லாம் தொடர்ந்துதான் இந்த நதிநீர் இணைப்பு குறித்து திரு. சுரேஷ் பிரபு அவர்களுடைய தலைமையிலே பி.ஜே.பி. அரசு அந்தக் குழுவை அமைத்தது. கிட்டத்தட்ட *50* சதவிகிதப் பணிகள் முடிந்துவிட்டன. கங்கையுடன் மகாநதியை இணைத்து, மகாநதியோடு கோதாவரி, கிருஷ்ணா, துங்கபத்ரா, வடபெண்ணை, பாலாறு, தென் பெண்ணை, காவிரி என்று இணைக்கின்றபோதுதான் தமிழகத்திற்கு நிரந்தர விமோசனம் கிட்டும் என்பது மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய ஆணித்தரமான அணுகுமுறை. அதை பி.ஜே.பி. அரசு ஏற்று, அதைச் செயல்வடிவிற்குக் கொண்டு வருவதற்காக சட்ட ரீதியாக இந்தக் குழுவை அமைத்திருந்தது. இதிலே வேடிக்கை என்னவென்றால், தமிழகத்தினுடைய நலனில் சிறிதும் அக்கறை இல்லாத *12* அமைச்சர்கள் டெல்லியிலே இருக்கிறார்கள். அவர்கள் இந்தக் குழுவினுடைய பணிக்காலத்தைத் தொடருவதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தக் குழு *2002* ஆம் ஆண்டு டிசம்பர் *13* ஆம் தேதி அமைக்கப்பட்டது. அதனுடைய பதவிக்காலம் கடந்த ஜூன் மாதம் *30* ஆம் தேதியுடன் முடிந்துவிட்டது. பதவிக்காலத்தை நீட்டித்திருக்க வேண்டும். தமிழக மக்களுக்குத் துரோகம் செய்கின்ற முறையில், தமிழக மக்களை வஞ்சிக்கின்ற முறையில் டெல்லியிலே இருக்கின்ற அரசு, திரு. மன்மோகன் சிங்கினுடைய அரசு, தி.மு.க. தலைமையிலான *12* அமைச்சர்களை டெல்லியிலே கொண்டிருக்கிற அரசு, இந்த நதிநீர் இணைப்புத் திட்டத்தினுடைய குழுவின் பதவிக்காலத்தை நீட்டிக்காமல், அது காலாவதியாகக்கூடிய நிலையை மேற்கொண்டு தமிழகத்திற்கு மாபெரும் துரோகத்தை இழைத்துவிட்டார்கள். இதுகுறித்து உச்ச நீதிமன்றத்தில்கூட திரு. ராதாகிருஷ்ணன் என்ற வழக்கறிஞர் மைய அரசுக்கு எதிர்ப்பாக ஒரு வழக்கைத் தொடர்ந்திருக்கிறார் என்பதையும் நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 10–30*

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்று நிச்சயம். இந்த தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்தைச் செயல்படுத்த முதல் கல்லை அரசாங்கம் எடுத்து வைக்குமானால், அது U.P.A. சர்க்காரினுடைய சமாதிக் கல்லாக இருக்கும் என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். காரணம், 85 எம்.பி.-க்கள் அனுமதிக்கமாட்டார்கள்,





R.J.D. and the Left. ஆகவேதான் அவர்கள் அது காலாவதியாவதற்காக முயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். *(குறுக்கீடு)* R.J.D.- Rashtriya Janata Dal.

ஊரக வேலைவாய்ப்பினைப் பொறுத்தவரை, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு *564* கோடி ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே ஒரு மௌனப் புரட்சியை இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதிலே இரு வேறு கருத்துகள் இருக்க முடியாது. ஆனால், இதிலே பல்வேறு மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சார்ந்தவர்களோடு interact பண்ணும்போது, அவர்கள் வங்கிகளிலே பெறுகின்ற கடனைத் தங்களுக்குள்ளே பிரித்துக்கொண்டு, அதற்கு வட்டி வாங்கிக் கொண்டிருக்கின்ற பழக்கத்தையும் பல சுய உதவிக் குழுக்களிடம் பார்க்க முடிந்தது. ஆகவே, இந்த மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலமாக economic activities நடைபெறுமானால்தான் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும். ஒரு நல்லது நடக்கின்றது; சேமிக்கின்ற பழக்கமானது மகளிர் மத்தியிலே அதிகமாகியிருக்கிறது. அவர்கள் பொது விஷயங்களைக் கலந்து பேசுகின்ற பழக்கம் ஏற்பட்டிருக்கின்றது என்கின்ற வரையிலே இது வரவேற்கத்தக்கதாக இருந்தாலும், இவர்கள் தொழில்கள் தொடங்குவதற்கு, பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பது குறைவாக இருக்கிறது. எனவே, மாநில அரசாங்கம் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பெருவாரியாக பயிற்சியினைக் கொடுப்பதற்கான நடைமுறையை மேற்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, குடிநீர் வழங்கலைப் பொறுத்தவரை...

***மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியதுபோல, தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ஏற்கெனவே மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு, தொழில் தொடங்குவதற்குண்டான பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தக்க நிதி ஒதுக்கீடு செய்து, அந்தப் பயிற்சியானது வழங்கப்பட்டு வருகிறது என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எச். ராஜா:** கடந்த *3* ஆண்டுகளிலே பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களானது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. *2004–2005* ஆம் ஆண்டிலும்கூட, *200* கோடி ரூபாய் முதலீட்டில் *8* நகராட்சிகள் மற்றும்

42 பேரூராட்சிகளில் குடிநீர் வழங்கலை மேம்படுத்துவதற்கான 50 குடிநீர் வழங்கல் மேம்பாட்டுத் திட்டங்களை மேற்கொள்ளப் போவதாக நிதிநிலை அறிக்கையிலே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

2001–2002 பட்ஜெட்டிலே, திருச்சி–இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளப்படும் என்கின்ற குறிப்பானது அதிலே சொல்லப்பட்டிருந்தது. புதுக்கோட்டையைச் சார்ந்த பொன்னமராவதி, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர், கல்லல், தேவகோட்டை போன்ற பகுதிகளிலே நிலத்தடி நீர் இல்லாத காரணத்தாலும், அல்லது இருக்கின்ற நிலத்தடி நீர் உவர் நீராக இருக்கின்ற காரணத்தாலும் பல்வேறு கிராமங்களில் குடிநீர் இல்லாமல் அவர்கள் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தக் கூட்டுக் குடிநீர் திட்டத்திலே திருச்சி–இராமநாதபுரம் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத்தாள் தீர்வையைப் பொறுத்தவரை, அரசாங்கம் நல்லதொரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. ஏனென்றால், பல்வேறு சொத்துகள் மாற்றம் செய்யப்படும்போது, அவற்றைப் பத்திரமாக register செய்வதை விட்டுவிட்டு, power வைத்துக்கொண்டே வியாபாரம் செய்துகொண்டிருக்கின்ற, பல ஆண்டுக்கணக்காக வைத்துக் கொண்டிருக்கின்ற பழக்கமானது முத்திரைத்தாள் தீர்வை அதிகமாக இருந்த காரணத்தினாலே இருந்து வந்தது. ஆகவே, முத்திரைத்தாள் தீர்வையை 13 சதவிகிதத்திலிருந்து, 8 சதவிகிதமாகக் குறைத்திருப்பதை பாரதிய ஜனதா கட்சி வரவேற்கிறது(மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல, Settlement, Release, Partition, Dissolution of partnership ஆகியவற்றிற்கு 4 சதவிகிதமாக இருந்த முத்திரைத் தீர்வையை ஒரு சதவிகிதமாகவும்—அதுவும் subject to maximum of Rs.10,000/-- அதேபோல, Registration Fee ஒரு சதவிகிதத்திலிருந்து அதிகபட்சம் 2000 ரூபாயாகவும் குறைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதிலும் நல்லதொரு அம்சம் இதிலே குறிப்பிடப்பட்டிருப்பது என்னவென்று சொன்னால், முத்திரைத் தீர்வையைக் குறைத்தும்கூட, முத்திரைத் தீர்வையின் மூலமாக வருகின்ற வரி வருமானம் குறையவில்லை என்பது, இது சரியான நடவடிக்கை என்பதை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

அனைவருக்கும் கல்வித் திட்டமானது தேசிய ஜனநாயக் கூட்டணி அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. இன்றையதினம் மத்திய



அரசாங்கம் அதற்காக எல்லா Central Tax- லேயும் 2 சதவிகிதம் Cess போட்டிருக்கிறது. மத்திய நிதியமைச்சர்கூடச் சொன்னார்; இது முழுவதுமாக கல்விக்காகப் பயன்படுத்தப்படும் என்று. போன முறை கல்விக்காக ஒதுக்கிய நிதியிலே 1000 கோடி ரூபாய் அதிகரிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த Cess மூலமாக 4000 கோடி ரூபாய் வருமென நிதியமைச்சரே சொல்லியிருக்கிறார். ஆகவே, இதிலே there is more deception than transparency. இருந்தாலும்கூட நாம் 2010–க்குள்ளாக Universalisation of Education - 14 வயது நிரம்பிய அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி தரவேண்டும் என்ற இலக்கை நோக்கிச் சென்று கொண்டிருக்கும்போது, கும்பகோணத்திலே ஒரு பள்ளிக்கூடத்திலே நடந்துவிட்ட கோரச் சம்பவமானது அனைவரையும் விழிப்படையச் செய்திருக்கிறது. ஏனென்று சொன்னால், நான் நேரடியாகச் சென்று பார்த்தபோது, 2400 சதுர அடி இருக்கின்ற ஒரு இடத்திலே மூன்று பள்ளிக்கூடங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அதிலேயும் மாடியிலே கீத்துக் கொட்டகை போடப்பட்டு, வழிகள் congested-ஆக இருந்ததனால்தான் இவ்வளவு பெரிய உயிர்ச் சேதமானது ஏற்பட்டிருக்கிறது. கூரைக் கட்டடங்கள் அனைத்தும் மாற்றப்பட வேண்டுமென அரசாங்கம் முயற்சி எடுப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இது கல்விப் பணியினைப் பாதித்துவிடாமல், அதற்கான உரிய காலகட்டம் கொடுத்து, அதிலும் முன்னுரிமை எதற்குத் தர வேண்டுமென்று சொன்னால், எவையெல்லாம் தரையிலே கூரைக் கொட்டகையாக இல்லாமல் அடுக்கு மாடியிலே இருக்கின்றனவோ அவை உடனடியாக நீக்கப்பட வேண்டும் எனவும், தரையிலே கூரைக் கொட்டகையிலே நடக்கின்ற பள்ளிக்கூடங்களுக்குச் சற்றுக் கால அவகாசம் கொடுத்து கல்விப் பணி நின்றுவிடாமல் அரசாங்கம் முயற்சி மேற்கொள்ள வேண்டுமெனவும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

2001–2002 பட்ஜெட்டிலே பேசும்போது, உடற்கல்விக்காக ஒரு பல்கலைக்கழகம் தொடங்க வேண்டுமென நான் ஒரு கோரிக்கையினை வைத்திருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்போது உடற்கல்விக்காகத் தனிப் பல்கலைக்கழகமானது தொடங்கப்படும் என அறிவித்திருப்பது இந்த பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் அதை வரவேற்கிறேன். அதிலே ஒரு additional கோரிக்கை. அதையும் நிறைவேற்றித்தர வேண்டுமென நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று

சொன்னால், காரைக்குடியிலே இருக்கிற Alagappa College of Physical Education மிகத் தொன்மையானது. 1955–லேயிருந்து கிட்டத்தட்ட 50 ஆண்டுகளாகச் செயலாற்றிக் கொண்டிருக்கிற ஒரு கல்லூரி. அது மாத்திரமல்ல, நாடு முழுவதும், இந்தியாவிலேயே மூன்று, நான்கு உடற்கல்விக் கல்லூரிகள்தான் மிகப் பிரசித்தி பெற்றவை. நம்முடைய YMCA. அதே மாதிரியாக Karaikudi Alagappa College of Physical Education, Periyanayakam Maruthi College of Physical Education போன்ற கல்லூரிகள். இந்த Alagappa College of Physical Education-க்கு மிகப் பெரிய அளவிலே infrastructure இருக்கிறது. எவ்வளவு வேண்டுமானாலும் நிலங்கள் இருக்கின்றன. எனவே, எல்லாப் பல்கலைக்கழகங்களும் சென்னையிலே அமையாமல், இந்த உடற்கல்விப் பல்கலைக்கழகத்தை காரைக்குடியிலே அமைப்பதற்கு அரசாங்கம் அனுமதி தர வேண்டும். அதை அங்கு அமைத்துக் கொடுக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே எனக்குக் கவலை அளிக்கத்தக்க ஓரிரு விஷயங்கள் நிதி ஒதுக்கீட்டிலே இருப்பதையும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். மொத்தச் செலவினங்களில் general services-க்கானது 11,306 கோடி ரூபாயிலிருந்து, ரூ.12,869 கோடியாக உயர்ந்திருக்கிறது. அதாவது 1,563 கோடி ரூபாய் அதிகரித்து இருக்கிறது. ஆனால் social sector-லே அது கிட்டத்தட்ட அதே அளவிலேயே இருக்கிறது, 9,357 கோடி ரூபாயிலேயிருந்து 9,384 கோடி ரூபாய் என்ற அளவிலே இருக்கிறது. அதேபோல, economic services-க்கு 4,464 கோடி ரூபாயாக இருந்தது, இப்போது 4,446 கோடி ரூபாயாகக் குறைந்திருக்கிறது. இதிலே water supply, sanitation, housing and urban development-க்கான நிதி ஒதுக்கீடு 499 கோடி ரூபாயாக சென்ற ஆண்டு இருந்தது, இப்போது 403 கோடி ரூபாயாகக் குறைந்து இருக்கிறது. அதேபோல social welfare and nutrition-க்கு 2,154 கோடி ரூபாயாக இருந்தது, இப்போது 1,773 கோடி ரூபாயாகக் குறைந்து இருக்கிறது. கிராமப்புற மேம்பாட்டுக்கு— rural development—ஊரக வளர்ச்சி, 818 கோடி ரூபாயாக இருந்தது, 612 கோடி ரூபாயாகக் குறைந்து இருக்கிறது. அதேபோல, welfare of Scheduled Castes, Scheduled Tribes and other Backward Communities, 555 கோடி ரூபாயாக இருந்தது, 572 கோடி ரூபாயாக ஆகியிருக்கிறது. பட்ஜெட்டிலே குறிப்பிடப்பட்டிருக்கிற முக்கியமான நோக்கமாக social security ring... (மணியடிக்கப்பெற்றது)





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித்துளிக்குள் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எச். ராஜா:** ஒரு நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். மக்களுக்கு சமூகப் பாதுகாப்பு வளையத்தினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய நோக்கமாக இருக்கும்போது, பட்ஜெட்டிலே it is not reflected. ஏனென்றால் எல்லா social welfare sectors-க்கும் நிதி மிகக் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது சென்ற ஆண்டைவிடக் குறைவாக இருக்கிறது. எனவே, இந்தப் பகுதிகளுக்கான நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு இந்த 2004–2005 ஆம் ஆண்டுக்கான...

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில திட்டங்கள், உதாரணமாகக் குடிநீர்த் திட்டங்கள் போன்ற திட்டங்களுக்கு எல்லாம், non- budgetary allocations உண்டு. TUFIDCO அல்லது TUFISIL, HUDCO போன்ற அமைப்புகளிடமிருந்து கடன் பெற்று, அதன் மூலமாகப் பல திட்டங்களை நிறைவேற்றுவது இதிலே குறிப்பிடப்படவில்லை. Social sector-ஐப் பொறுத்தவரைக்கும் பல்வேறு துறைகளிலும் ஒதுக்கப்பட்டுள்ள அந்த ஒதுக்கீடுகளைக் கணக்கெடுத்துப் பார்த்தால், அது சரியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–40

**திரு. எச். ராஜா:** சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு குறைவாக இருக்கின்ற நிதி ஒதுக்கீட்டைத்தான் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைத்ததோடு, நம்முடைய அறந்தாங்கி தொகுதியிலே மணமேல்குடி வட்டம் பிரிக்கப்பட்டு 7 ஆண்டுகள் ஆகியும், இன்னும் அங்கு வட்டாட்சியர் அலுவலகம் இல்லை. எனவே, அதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொண்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம்.ஏ. ஹக்கீம்.

[2004 ஜூலை 23

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கையின்மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சார்பிலே இந்த விவாதத்திலே பங்கு கொள்வதற்கு முதலில் என்னை அனுமதித்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய பணிவான, மனங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஓர் உறுப்பினர் பேசியதிலே மற்றோர் உறுப்பினர் குறுக்கிட முடியாது. அதில் அபிப்பிராயம் தெரிவிப்பது என்பது சரியாக வராது. இருந்தாலும்கூட, கூட்டுச் சேர்ந்த காரணத்தினாலே ஏதேனும் சில குழப்பங்கள் ஏற்பட்டால், ஒருவருக்கொருவர் அதைத் தெளிவாகத் திருத்திக் கொள்வதற்கும், தவிர்த்துக் கொள்வதற்கும் பரஸ்பர மன உணர்வு ஒன்றுபட்டிருக்கிறது என்ற அடிப்படையில் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் பேசுகிறபோது சொன்னார்; நான் அப்போதுகூட திரும்பச் சொன்னேன், உத்தரப்பிரதேசத்துச் சமாச்சாரத்தை. அவர், இல்லை இல்லை, ஆர்.ஜே.டி.தான் என்று ராஷ்டிரீய ஜனதா தளத்தைத் திரும்பச் சொன்னார். நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு ஒரு காலத்திலும் ஒத்துவர மாட்டார்கள்; 85 எம்.பி.–க்கள் உத்தரப்பிரதேசத்திலே இருக்கிறார்கள். முதல் கல்லை எடுத்து வைத்தால் அது சமாதியாக மாறிவிடும் என்று அவருடைய அச்சத்தைத் தெரிவிக்கிறபோது சொன்னார். Samajwadi Party என்று நான் சொன்னேன். அது இப்போதுகூட சரியாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். முலாயம் சிங் கட்சியினுடைய பெயர் சமாஜ்வாதி கட்சி. லாலு பிரசாத்தினுடைய கட்சிதான் ராஷ்டிரீய ஜனதா தளம். அது பீஹார். இது உத்தரப்பிரதேசம். அவர் intellectual, மிகப் பெரிய கெட்டிக்காரர் ராஜா. எனக்கு நன்றாகத் தெரியும். Slip of the tongue என்ற அடிப்படையில் அதில் தவறு இருக்குமோ என்று...

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது slip of the tongue–ஏ இல்லை. லாலு பிரசாத்தினுடைய Government–தான் பீஹாரிலே oppose பண்ணியது. நான் சொன்ன 85, U.P. Members இல்லை. 23 R.J.D. Members. 62 இடதுசாரிகள். அதுதான் 85.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** இடதுசாரிகள், அதைச் சொல்லுங்கள். ஆகவே...



2004 ஜூலை 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதைப் பக்கத்திலே அப்பொழுதே பேசி முடித்திருக்க வேண்டியதுதானே? (சிரிப்பு)

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** ராஜா உட்கார்ந்த உடனேயே நான் பேசத் தொடங்கிய காரணத்தினால் முடியவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரியில்லாத ஒரு பட்ஜெட்டைத் தந்த...(குறுக்கீடு) இடதுசாரிகள் என்ற உடனேயே எங்கள் சீனியர் எழுந்துவிட்டார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹக்கீம், உட்காருங்கள்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ராஜா அவர்கள் குறிப்பிடுவதுபோல, இந்த நதிநீர்த் திட்ட இணைப்பிற்கு இடதுசாரிகள் எந்தவிதத்திலும் குறுக்கிடவில்லை. அவர்கள் இதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய Common Minimum Programme–லேகூட இந்த நதிநீர்த் திட்டத்தை வலியுறுத்தி நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரியேயில்லாத ஒரு பட்ஜெட்டை, கடுமையான நிதி நெருக்கடி என்று சொல்லப்பட்ட காலமெல்லாம் போய், சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட சம்பளத்தை ஏற்றுவது தப்பு என்று சொல்லப் பட்ட நெருக்கடியான காலமெல்லாம் போய், எந்த நிதியொக்கீட்டைக் கூடுதலாகக் கேட்டாலும், தர இயலாது என்று நிதியமைச்சர் திரும்பத் திரும்பச் சொல்லிய காலமெல்லாம் போய், அந்தக் கஷ்டத்தையெல்லாம் கடந்து, முடிந்து, வெற்றிகரமான பாதைக்கு நம்மை அழைத்து வந்த புரட்சித் தலைவியினுடைய அரசாங்கம், வரியேயில்லாத ஓர் அற்புதமான பட்ஜெட்டை மாண்புமிகு நிதியமைச்சர் வாயிலாகத் தந்து மக்களின் மனதைக் குளிர வைத்தமைக்கு, மக்கள் மனம் குளிர்ந்து, உணர்ந்து, அதைப் பிரதிபலிக்க வேண்டிய காலகட்டங்களில் தவறியிருந்தாலும், அதை உறுதியாக 2006–ல் கண்டிப்பாகப் பிரதிபலிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு, (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் மக்களைச் சந்திக்கக்கூடிய வாய்ப்பாக இந்த பட்ஜெட் ஓர் உயர்ந்த துணையாக இருக்கும் என்ற நம்பிக்கையையும் தெரிவித்து, என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்களை நான் இந்தக் காலக்கட்டத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2004 ஜூலை 23

*முற்பகல் 10–45*

மத்திய அரசாங்கம் ஒன்று வந்திருக்கிறது என்பதைச் சொல்லி— ஏனென்றால், தவிர்க்கப்பட முடியாத அரசியல் விவாதங்கள்தான். ஒரு தலைவர் இந்தத் தேர்தலுக்குப் பிறகு, தங்களுக்குக் கிடைத்த மகத்தான வெற்றிக்குப் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடுகிறபோது, ஒரு பெரிய தலைவர்—அந்தத் தலைவருடைய கட்சிக்காரர்கள் இங்கே இல்லாமல் போய் விட்டார்களே என்ற வருத்தம் எனக்கு ஒரு பக்கம் உண்டு— பார்லிமென்டையே கேக்காகச் செய்து, பிறந்த நாளன்று பார்லிமென்டை வெட்டிச் சாப்பிட்டு விட்டார்கள். பார்லிமென்ட் கட்டடத்தைக் கேக்காகப் பண்ணிவிட்டார்கள், Birthday cake, பார்லிமென்ட் கட்டடமே. வயது முதிர்ந்த அந்தத் தலைவர் ஒரு கத்தியை எடுத்து அந்த பார்லிமென்ட் கட்டடத்தை நான்காக வெட்டி, அதைக் கூறு போட்டு, சுற்றியிருந்த கட்சிக்காரர்களிடமெல்லாம், ஆளுக்கு கொஞ்சமாகச் சாப்பிடுங்கப்பா, எதிர்காலத்திலே பார்லிமென்டை நாம்தான் சாப்பிடப் போகிறோம், ஆகையினால் யாரும் நம்மை ஏதும் கேட்க முடியாது, ஒரு கடுமையான நிர்ப்பந்தத்திலே ஒரு சர்க்காரை உட்கார வைத்திருக்கிறோம். அதற்கு லாகானைப் போட்டு இழுத்து நம்முடைய இஷ்டப்படி சாப்பிடுவோம்; சாப்பிடுங்கப்பா என்று சொல்லிவிட்டார். அப்படிப்பட்ட ஒரு நெருக்கடியான பார்லிமென்ட் இன்றைக்கு இருக்கிறது.

'மந்திரிகளாக வரவே மாட்டோம்'—சென்னையிலேயிருந்து அறிக்கை கொடுத்தார்கள். டெல்லிக்கு போன உடனேயே அமைச்சர்களாகச் சேர்வது என்று முடிவு செய்து விட்டோம் என்று ஓர் அறிக்கையும் வந்தது. அதைத் தொடர்ந்து உடனே சொன்னபடி, பேசியபடி, ஒப்பந்தப்படி, எழுதிக் கொண்டபடி, இன்னின்ன இலாகாக்கள், இப்படி, இப்படி, பேரனுக்கு, மருமகனுக்கு, மச்சானுக்கு, எங்களைச் சேர்ந்தவர்களுக்கென்று பங்கு போடுகிற வேலையையும் பத்திரம் எழுதிய வேலையையும் பகிரென்று பட்டவர்த்தனமாக வெளியே வந்து, நாட்டு மக்கள் கேட்டு, அதைக் கொச்சைப்படுத்திப் பேசுகிற அளவிற்கு நிலவரத்தைக் கொண்டு வந்துவிட்டு, இலாகாக்களைப் பிடித்துக்கொண்டு அரசியலைத் தொடக்கியிருக்கக்கூடிய காலகட்டத்தில் அந்த அரசியலை இந்த இடத்திலே இந்த விவாதத்திலே வைத்துச் சொல்வதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், அப்படியெல்லாம் இருக்கிறவர்கள் ஒரு பட்ஜெட்டை அங்கே அறிவித்திருக்கிற காலகட்டத்தில், பதவிகளைப் பங்கு



2004 ஜூலை 23] [திரு. எம்.ஏ. ஹக்கீம்]

போட்டுக்கொள்வதிலும் தங்களுக்கு இன்ன இலாகா இப்படி வரவேண்டும். தங்களுடைய சொந்த பந்தத்திற்கு, தங்களைச் சார்ந்தவர்களுக்கு இப்படி இருந்தால்தான் எதிர்காலத்தில் மிகச் செழிப்பாக, சிறப்பாக, வலுவாக, உண்டு கொழுத்து உட்கார்ந்திருக்கலாம் என்று திட்டம் போட்டு உள்ளே நுழைந்தவர்கள், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொன்ன மாதிரி, 12 அமைச்சர்கள் சேர்ந்து துரோகத்தைச் செய்து விட்டார்கள் என்று இப்போது சொன்னார்களே, நதிநீர் இணைப்பிற்கு, அதே அடிப்படையில்தான் இங்கே நான் கேட்க விரும்புகிறேன்.

தமிழகத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு, கூட்டுறவுக் கடன்களை, வட்டியினைத் தள்ள வேண்டுமென்று, கடுமையான நிதிநிலை இருக்கக்கூடிய நேரத்திலே ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய காலகட்டத்தில், கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியில், ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறபோது புரட்சித் தலைவி வந்து உட்கார்ந்த உடனேயே முதல் கையெழுத்திட்டார், 310 கோடி ரூபாய்க்குக் கடனை, வட்டியைத் தள்ளுபடி செய்கிறேன் என்று (மேசையைத் தட்டும் ஒலி) முதல் கையெழுத்து; அவ்வளவு கஷ்டத்திலும்.

இரண்டாவதாக, இப்போது இந்த பட்ஜெட்டின் வாயிலாக, விவசாயிகளுக்கு என்று இவ்வளவு பெரிய சலுகைகள் அளிக்கப்பட்ட இந்தக் காலகட்டத்திலும், இந்தத் தேர்தலுக்குப் பிறகும்கூட, இன்னமும் விவசாயிகளுக்கு, இப்போது நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள், 200 கோடி ரூபாய் கடன் தள்ளுபடிக்கு இப்போது உத்தரவிடப்பட்டிருக்கிறது.

சாதாரண மக்களின் குடிசைகளுக்கு இலவச மின்சாரம். என்னைப் போன்ற நடுத்தர வர்க்கம், தமிழகத்திலே இருக்கின்ற பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் இன்றைக்கு மின்சாரத்தை மிகக் குறைந்த விலையில் வழங்குவதன் மூலம் இந்த 'அரசாங்கத்திற்கு ஏற்படக்கூடிய இழப்பு என்பது 720 கோடி ரூபாய் என்பதை நிதியமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இந்த இரண்டிற்கு மாத்திரமே நெருக்கி இப்போது ஆயிரம் கோடி ரூபாய், இவ்வளவு பெரிய நஷ்டம் ஏற்பட்டாலும், நாட்டு மக்களுக்கு அதைச் செய்கிறோம்; நாங்கள் அதைச் செய்யக் கடமைப்பட்டவர்கள். எந்த ஒரு கஷ்டத்தையும் தாங்கிக்கொள்வதற்கும், பொருளாதாரத்தைச் சரிசமப்படுத்தி, நிலைப்படுத்திக்கொள்வதற்கும் முடியும் என்ற நம்பிக்கையில் இது அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய சர்க்கார், பல இலட்சம்

கோடி ரூபாய்க்குத் திட்டம் போடக்கூடிய மத்திய சர்க்கார், தமிழகத்தைச் சேர்ந்த ஒரு நிதியமைச்சர் பட்ஜெட்டைத் தாக்கல் செய்கிறபோது, இன்றைக்குத் தெரிவித்திருக்கிறார்–விவசாயிகளுக்காக மத்திய அரசாங்கம் செய்திருக்கின்ற மகத்தான நன்மை, இந்த நாடு முழுக்க இருக்கக்கூடிய நீர்நிலைகள்; எப்படிப்பட்ட கஷ்டத்திலே நாட்டிலே இருக்கிற மக்கள் குடிதண்ணீருக்கு, உபயோகப்படுத்தக்கூடிய சாதாரணத் தண்ணீருக்காக அலைகிறார்கள், கஷ்டப்படுகிறார்கள் என்பதையெல்லாம் இங்கேயிருக்கின்ற அத்தனை பேரும் மாறி, மாறி விவசாய மக்களுக்காகப் பேசுகின்றபோது, ஏன் சாதாரண நகர்ப்புறத்தில், கிராமப்புறத்தில் வாழுகின்ற சாதாரண மக்களுடைய குடிநீர்ப் பற்றாக்குறை, வறட்சியை, பாதிக்கப்பட்ட நிலைமையைப் பற்றிப் பேசுகின்றபோது, நாம் எல்லோரும் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், மத்திய சர்க்கார்—மாண்புமிகு நிதியமைச்சர், டெல்லியிலே சொல்லியிருக்கிறார். இந்தத் தண்ணீர்ப் பிரச்சினையை, குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பது என்று சொன்னால், இந்த வறட்சிக்கு ஒரு மாற்றுத் திட்டம், ஓர் அற்புதமான திட்டம் இருக்கிறது. பெரிய அளவிலே கஷ்டப்பட வேண்டுமென்கின்ற அவசியமேயில்லை.

*முற்பகல் 10–50*

இந்தியா முழுக்க 10 இலட்சம் குளம், குட்டைகள், ஏரிகள் இருப்பதாக நிதியமைச்சர் தெரிவித்திருக்கிறார். இந்த 10 இலட்சம் குளம், குட்டைகள், ஏரிகளைத் தூர்வாரி சரிப்படுத்தினாலே தண்ணீர்ப் பிரச்சினையை தேசம் முழுக்கச் சமாளித்துவிட முடியும் என்று தெரிவித்து இருக்கிறார். அவர் தெரிவித்து அதற்கு ஒதுக்கி இருக்கிற நிதி எவ்வளவு தெரியுமா? ரூ.100 கோடி. விவசாயத்திற்கு, விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி பண்ணுவதற்கு, 30 மாநிலங்கள் அடங்கி இருக்கிற இந்தியாவில் தமிழ்நாடு என்று சொல்லப்படுகிற இந்த ஒரு மாநிலத்தில் விவசாயிகளின் கஷ்டங்களைப் போக்குவதற்கு மீண்டும் கடன் தள்ளுபடி என்று புரட்சித் தலைவி ஒதுக்கித் தந்திருப்பது ரூ.200 கோடி. 102 கோடி மக்கள் வாழ்கிற பாரத நாட்டில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மாண்புமிகு நிதி அமைச்சர், காரைக்குடி இளவரசர் ஒதுக்கி இருக்கிற தொகை ரூ.100 கோடி. யார் மக்கள் பக்கம்? யார் ஏழைகளைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்? யார் கஷ்டங்களைப் பற்றிச் சிந்திக்கிறார்கள்? ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம். இந்த நாட்டு மக்களுக்கு நாங்கள் தெரிவிக்க விரும்புவது இதுதான். அதிலும் நிதி அமைச்சர் அவர்கள் என்ன பண்ணி இருக்கிறார் தெரியுமா? முதல்கட்டமாக மூன்றே மூன்று மாவட்டங்களை அல்லது 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாம். இந்தியா முழுக்க



பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு என்ன வழி என்றால் 5 மாவட்டங்களைத் தேர்ந்தெடுத்து, அதற்கு அப்புறம் இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வழிமுறைகளைக் கண்டு, ஆய்ந்து, அறிந்து சொல்லப் போகிறார்கள். இது எப்படி இருக்கிறது? இந்த நாட்டினுடைய கஷ்டத்தைத் தீர்க்கின்ற விதத்திலா இருக்கிறது? இன்னமும் கடன், எதிர்பார்ப்புகள், இன்னமும் வெளிநாட்டிலே இருந்து கொண்டுவந்து கொட்டப்படும் என்ற நம்பிக்கை. இதை மாத்திரமே வைத்துக்கொண்டு திட்டங்களை வெளியிடக்கூடிய இடத்தில் அங்கேயே குளறுபடிகள், அங்கேயே குழப்பங்கள் பெருகத் தொடங்கிவிட்டன என்பதற்கான அடையாளங்களை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். அச்சம். மாநிலங்களுக்கு இவர்கள் எப்படி நிதியுதவி செய்யப் போகிறார்கள்? நம்முடைய கஷ்டங்களை எப்படித் தீர்க்கப் போகிறார்கள்? இப்படிப்பட்ட திட்டங்களை வாரி வழங்கக்கூடிய, உதவிகளைச் செய்யக்கூடிய காலகட்டங்களில், மத்திய சர்க்கார் மாநில சர்க்காருக்கு எந்த அளவில் உதவி செய்ய முடியும் என்று பார்க்கப் போனால், First, it is a must - A stability - stability of the Central Government is a must. ஒரு நிலையான சர்க்கார், Strong Centre, இந்திரா காந்தி காலத்திலே இருந்தது; ராஜீவ் காந்தி காலத்திலே இருந்தது. அதற்குப் பின்னாலே Strong Centre என்று சொல்லப்படக்கூடிய இடத்தில் எந்த ஒரு Single Party Majority-யும் அமைவதற்கு முடியவில்லை. மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் கவனித்துக் கொண்டே இருக்கிறார், கூட்டணி சேர்ந்த காரணத்தால் அதையும் சொல்ல வருவோம் என்று. But, it is an Allied Government. Allied Government என்று சொன்னாலும்கூட, mutual understanding, mutual respect–பரஸ்பர உணர்வு, பரஸ்பர மரியாதையை ஒத்துக்கொண்டவர்களாக இருந்த காரணத்தால், அடல் பிகாரி வாஜ்பாயினுடைய தலைமையிலே இருந்த அரசாங்கத்திற்குப் பிரச்சினை இல்லாமல், சிக்கல் இல்லாமல் இவர்களாக advance-ஆகக் கலைத்து வந்துவிட்டார்களே தவிர, அப்படியே போயிருந்தால் நிச்சயமாக full term. அதிலே யாருக்கும் எந்தவிதமான ஐயமும் இல்லை. சந்தேகம் ஏற்படுவதற்கு சந்தர்ப்பங்கள் இல்லை. ஒரு நிலையான, வலுவான சர்க்கார் இருந்தாலொழிய, அந்த நாட்டின் தேசிய பிரச்சினைகளை, அந்த தேசத்துப் பிரச்சினைகளை, மக்களின் கஷ்டங்களை நிவர்த்தி பண்ண வரக்கூடிய காலகட்டங்களில் ஏராளமான விவகாரங்கள் எழும். இன்றைக்கு அவர் என்ன சொல்லுகிறார்? Tele-communication, Insurance, Passenger Flight-- Airports, எல்லாவற்றுக்குமே வெளிநாட்டு மூலதனம், Foreign Direct Investment, எடுத்த எடுப்பிலேயே. அதுதான் இன்றைக்கு இந்த தேசத்தைக் காப்பாற்ற முடியும் என்று வருகிறார்கள்.

[திரு. எம்.ஏ. ஹக்கீம்] [2004 ஜூலை 23

வருகிற மாத்திரத்திலே, எடுத்த எடுப்பிலேயே, இங்கே உட்கார்ந்து இருந்த கட்சிக்காரர்களெல்லாம் இப்பொழுது இருந்திருந்தார்களென்றால் அவர்களை வைத்துக்கொண்டு நன்றாகக் கேட்டிருக்கலாம்.

Leftist parties என்று சொன்னவுடனேயே நம்முடைய மரியாதைக்குரிய Forward Bloc கட்சியினுடைய உறுப்பினர், பெரியவர் திரு. சந்தானம் எழுந்தார். அந்த Left வேறு. திரு. சந்தானம் இருக்கிற Left வேறு. நீங்கள் எங்களோடு சேர்ந்த Left. அந்த Left, Marxist Communist கட்சியுடன் உட்கார்ந்து இருக்கும். Marxist இப்பொழுது எங்கே இருக்கிறது தெரியுமா? வெளியே சேரக்கூடாத இடத்திலே சேர்ந்து, போகக்கூடாத இடத்திற்குப் போய், போராட்டத்தைத் தொடங்கி இருப்பதாகச் சொல்லக்கூடியவர்கள், நமக்கு எதிராகப் போராடிக்கொண்டு இருப்பதாக நான் நினைக்கவில்லை. டெல்லியிலே திரு. சிதம்பரம் அவர்கள் போட்டு இருக்கக்கூடிய பட்ஜெட்டுக்கு எதிரான போராட்டத்தைத்தான் இன்றைக்கு அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள். அதற்கு ஒரு சின்ன அடையாளந்தான், ஆட்சேபனை இல்லாத சமாச்சாரந்தான் 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிற ஒரு செய்தி. செய்திதானே தவிர யார்மீதும் குற்றச்சாட்டு அல்ல. ஆகையால் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அனுமதியோடு அந்தச் செய்தியை நான் சொல்லுகிறேன். 16-7-2004 அன்று 'இந்து' பத்திரிகையில் இந்தச் செய்தி வந்திருக்கிறது.

*முற்பகல் 10–55*

"Don't take us for granted"-- Sitaram Yechuri. அவர் சொல்லியிருக்கிறார்: "We will not be responsible, if the Congress-led Government fall at the Centre and they must ensure that they are not responsible for the fall of the Government in the future. We are the watchdog of the administration. Hereafter, in future, we will act not as barking dogs, but the biting dogs." (குறுக்கீடு) அது உறுதியாகிவிட்டது. நாங்கள் காவல் நாய்களாக இருப்போம். சொல்லியிருப்பது, Left Communist—மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய Polit bureau உறுப்பினர் Sitaram Yechuri- No.2 leader- next to Mr. Harkishen Singh Surjeet. Harkishen Singh Surjeet–க்கு அடுத்தபடியாக, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மிகப் பெரிய தலைவர்—Spokesman of the party—அவரே சொல்லியிருக்கிறார்: "Don't take us for granted. We will not be responsible, if this Government falls and they must give a surety. They must ensure to the other



2004 ஜூலை 23] [திரு. எம்.ஏ. ஹக்கீம்]

parties, allied parties that they are not responsible for the fall of this Congress-led Government. What does it mean? இதற்கு என்ன அர்த்தம்? அவர்களே சொல்லியிருக்கிறார்கள்: We are not the barking dogs, but the biting dogs. கம்யூனிஸ்டுகள் சொல்லிவிட்டார்கள்: "டெல்லியிலே இருக்கிற சர்க்கார் கவிழ்ந்தால் நாங்கள் பொறுப்பாளிகள் அல்ல; நீங்களே கவிழ்த்துக் கொண்டு, நீங்களே நாசமாய்ப் போனால், கம்யூனிஸ்டுகளைக் குற்றஞ்சாட்டாதீர்கள். இனிமேல் இந்த அரசாங்கத்தை நாங்கள் முழுக்க ஏற்றுக்கொள்வது என்பது கஷ்டம். எனவே, கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பொறுத்தவரை இடதுசாரிகளைப் பொறுத்தவரை 'மத்திய சர்க்காரைக் கண்காணிக்கின்ற நாய்களாக, குரைக்கிற நாய்களாக இருக்கமாட்டோம், இனி கடிக்கிற நாய்களாகத்தான் இருப்போம்' என்று கம்யூனிஸ்டுகள் அறிக்கையைக் கொடுத்துவிட்டார்கள்.

எனக்கு ஒரு பயம். என் பக்கத்திலே பூராவுமே கம்யூனிஸ்டுகள். (சிரிப்பு) முன்னால் அங்கே கருணாகரன் உட்கார்ந்து இருப்பார். இந்தப் பக்கம் அண்ணன் நன்மாறன். இந்தப் பக்கம் என் பக்கத்திலே என் மாமன், கோவில்பட்டி இராசேந்திரன். பின் பக்கத்திலே என்னுடைய அருமைக்குரிய நண்பர் முரளிக்குப் பக்கத்திலே அரூர் கிருஷ்ணமூர்த்தி. பக்கத்திலே என் சகோதரி பாலபாரதி. சுற்றிலும் கம்யூனிஸ்டுகளாக இருக்கின்ற காரணத்தால், biting dogs என்கிறபோது, நான் பேரவைத் தலைவரைப் பணிவோடு கேட்டுக்கொள்வேன், எங்களைப் பத்திரமாகப் பாதுகாக்க வேண்டியது உங்களுடைய கடமை. ஏனென்றால், அவர்கள் படுகோபத்திலே இருக்கிறார்கள். காங்கிரசின் மீதுள்ள கோபத்திலே, எங்களைக் கடித்துவிடக் கூடாது. ஏனென்றால், நான் பழைய காங்கிரஸ்காரன். (சிரிப்பு) அந்தப் பழைய கோபம் ஏதாவது ஒன்றிரண்டு இருந்து, அந்தக் கோபத்திலே வந்துவிடக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். அரசாங்கத்தை எதிர்க்கிறீர்கள். எந்த அரசாங்கத்தை? நீங்களே போய்த் தாங்கிப் பிடித்த அரசாங்கத்தை. பிறகு, தமிழ்நாட்டிலே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களோ, புரட்சித் தலைவி அவர்களோ, இங்கே என்ன பட்ஜெட், எப்படிக் கொடுத்தாலும், அதை எப்படி நீங்கள் ஏற்றுக்கொள்கிற மனோபாவத்திற்கு வருவீர்கள்? எப்படி இருப்பீர்கள்? அங்கே என்ன நடந்து கொண்டிருக்கிறது? அதையெல்லாம் வைத்துத்தான் இன்றைக்குக் கேட்கிறோம். இவர்களுக்குப் பக்கத்திலே போய் இன்றைக்குக் கூட்டுச் சேர்கிறவர், வரவே மாட்டேன் என்று சொல்லிவிட்டு, வருகிறேன் என்று உள்ளே நுழைந்திருக்கிறவர், அவர், அவருக்குத் தேவையானவற்றை—எனக்குக் கப்பல்; என் பேரனுக்கு Tele-communication, தொலைக்காட்சி. எங்கள் குடும்பத்திற்கு, எங்களுக்கு,

எங்களைச் சார்ந்தவர்களுக்கெல்லாம் வேண்டும்; நதிநீர் இணைப்பு, அதுவெல்லாம் வேண்டாம் ஐயா; அதை யாரய்யா கேட்டார்கள்? நதியாவது, நீராவது, இணைப்பாவது! அதெல்லாம் வேண்டாம். தொலைக்காட்சி, தொலைக்காட்சிப் பெட்டி, தொலை தூரம், கப்பல், Vigilance, C.B.I., ரோடு, அள்ளிச் சாப்பிடுவதற்கு மொத்தமாகப் போட்டு, குடும்பத்தோடு எடுத்துக்கொண்டு ஓடுவதற்கு, எது, எதெல்லாம் இலாகாவோ, எல்லாவற்றையும் வாங்கியாகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) அது இந்த நாட்டிற்குச் செய்கிற நன்மை இல்லையா? அது இந்த நாட்டுக்குச் செய்கிற நன்மை. நதியாவது, நீராவது, இணைப்பாவது!

கபினியிலே மழை எக்கச்சக்கமாகப் பெய்து dam full-ஆகி, dam breach–ஆகிவிடும் என்று சொல்லிவிட்டான். அவசரம், அவசரமாக அதிகாரிகள் தண்ணீரைத் திறந்துவிட, அங்கே இருக்கிற எதிர்க்கட்சிகள் பூராவும் தரம்சிங், கர்நாடக முதலமைச்சர் அவர்களிடம் போய்க் கேட்கிறார்கள்: "யாரைக் கேட்டுக்கொண்டு தண்ணீரைத் திறந்துவிட்டாய்?" "நானா ஐயா திறந்தேன்; அணை உடைந்துவிடும் என்று அதிகாரிகள் திறந்துவிட்டார்கள் ஐயா;" "அதுதானே கேட்டேன்; அளவுக்கு அதிகமாகக் கொடுத்து விடாதே; உரிமையைக் கேட்டுக் கொண்டு அங்கேயிருந்து உள்ளே ஓடி வந்துவிடுவார்கள்; நிறுத்தி வை தண்ணீரை." இப்போது என்ன ஆகிவிட்டது, இரண்டு நாட்களாக? நேற்றிலிருந்து பழையபடி தண்ணீர் குறைகிறதாம். இங்கே இருக்கிறவர் உடனே, பிரதமருக்கு, நண்பர் மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் சொன்னது மாதிரி, தபால் எழுதியாகிவிட்டது. "நன்றி, நாங்கள் கேட்டுக்கொண்டதற்கேற்பத் திறந்து விட்டதற்கு நன்றி." அங்கே இருக்கிறவர்கள் பூராவும் சிரிக்கிறார்கள், உட்கார்ந்திருக்கிறவர்கள் எல்லாம். "நீங்கள் கேட்டுக் கொண்டு திறக்கவில்லை; அணையைப் பாதுகாப்பதற்காகத் திறந்தோம்; அத்தோடு நிறுத்திவிடுங்கள்." இது இந்தப் பக்கத்தில். இனிமேல் இதைப் பற்றிப் பேசுவதற்கு, சிந்திப்பதற்கு நாட்டு மக்கள் மத்தியிலே ஆட்கள் இருக்கமாட்டார்கள் என்று கருதுகிறீர்களா? நாளை இந்த தேசத்திற்கு, நாட்டிற்குத் தெரியும். உண்மைகளை மறைத்துக்கொள்வதற்காக நடத்தப்படுகிற நாடகங்களை நாளை இந்த நாட்டு மக்கள் மத்தியிலே தெரிய வைப்போம்.

எப்படி இருக்கிறார்கள் என்பதற்கு ஒரு சின்ன அடையாளம்தான் பி.ஜே.பி.–யினுடைய உறுப்பினர் பேசுகிறபோது சொன்னது, பஞ்சாப் முதலமைச்சரால் ரவி–பியாஸ் நதிநீர் ஒப்பந்தம் உடைக்கப்படுகிறது. உடைக்கப்படுகிறது என்று சொன்னால், ராஜஸ்தானுக்குத் தண்ணீர் இல்லை; ஹரியானாவுக்கு இல்லை.





*முற்பகல் 11–00*

இதை யார் சொல்வது? பஞ்சாப் காங்கிரஸ் முதலமைச்சர். இங்கே திறந்துவிட்டதாகச் சொல்லக்கூடிய கதை அளக்கிறவர்கள். அங்கே, திருமதி சோனியா அவர்கள், காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர், அங்கே இருக்கிற அந்த முதலமைச்சரைத் தடுக்க முடிகிறதா? கண்டிக்க முடிகிறதா? இது தேசத்தின் ஒற்றுமையைப் பாதிக்காதா? இதைத்தான் புரட்சித் தலைவி அவர்கள் சொன்னார்கள். இந்த நடவடிக்கைகளால் நாட்டின் ஐக்கியத்திற்கு எதிர்காலத்தில் ஆபத்து வரும். ஒரு மாநிலத்திற்கு ஒரு மாநிலம் தண்ணீர் கொடுக்கின்ற விஷயத்தில் உரிமை என்ற பேரால் நீங்கள் எதையோ ஒன்றை மறைத்துக் கொண்டு, சிலரை வாட விடுவதன் மூலம் இந்த தேசத்தின் ஐக்கியத்திற்கு ஆபத்து. அந்தக் காலத்தில் இந்திரா காந்தி அம்மா சொல்வார்கள்: "We are proud to be Indians; Let us be worthy of India; The consolidation, amalgamation of the feelings of the people - இந்த நாட்டிற்குத் தேவை, ஒற்றுமைப்படுத்தப்பட்ட மக்களின் ஐக்கிய உணர்வு. Constitution of India என்று, அரசியல் சட்டத்தில் பேசுகிறவர்கள் எல்லாம், நாட்டின் அரசியல் ஜனநாயகத்தைப் பற்றிப் பேசுகிறவர்கள், நாட்டின் ஒற்றுமையைப் பற்றிச் சொல்கிறவர்கள், இந்த உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மக்கள் மத்தியிலே சொல்லக்கூடியவர்கள் பெரிய மனிதர்கள், பெரிய தலைவர்கள். "Unity in Diversity--பண்டிட் ஜவஹர்லால் நேரு அன்றைக்குச் சொன்னார். "Unity in Diversity"—அந்த வேற்றுமையில் ஒருமைப்பாட்டைக் கண்ட தேசம் இன்றைக்கு இல்லை. அதைத்தான் மாண்புமிகு எங்களுடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நேற்று பத்திரிகையாளர்களுக்குப் பேட்டி கொடுக்கிறபோதுகூட தெளிவுபடுத்திச் சொல்லி இருக்கிறார்கள், இந்தத் தேசத்தின் ஐக்கியத்திற்கு, ஒற்றுமைக்கு சவால் விட்டுக் கொண்டிருக்கிறீர்கள் என்று.

கர்நாடகத்திலே அன்றைக்கு கிருஷ்ணா, இன்றைக்கு தரம் சிங். இன்றைக்கு பஞ்சாபினுடைய முதலமைச்சர் அம்ரீந்தர் சிங்; அவரும் தண்ணீர் திறக்க முடியாது, தர முடியாது என்கிறார். ஒப்பந்தம் உடைக்கப்படுகிறது. தேசத்தின் ஐக்கியம் பாதுகாக்கப்படக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதை இந்த நாடு இன்றைக்குப் பார்த்துக் கொண்டிருக்கிறது. இதையெல்லாம் வைத்துத்தான் தமிழ்நாட்டில், இங்கே இருக்கின்ற இந்தக் கடுமையான பிரச்சினைகளுக்கு மத்தியில், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கஷ்டங்களை எல்லாம் தாங்கி, இந்த வேதனைகளை எல்லாம் உணர்ந்தவராகத்தான்

உங்களுக்கும், எனக்கும் தீர்வுகளை தமிழகத்தின் எதிர்காலத்திற்குமாகச்
செய்து மக்களைச் சந்திக்க வருகிறார். யார் மீதோ உள்ள கோபம்;
இல்லை, உணர்வுகளுக்கு ஏற்பட்ட ஏதோ ஒரு தயக்கம். அதை எப்படிச்
சந்திக்கிறோம், எப்படி எதிர்த்து வெளியே வருகிறோம் என்ற ஓர்
ஆற்றலைக் காட்டுகிற இடத்தில் ஓர் அற்புதமான தலைமைக்குப் பக்கத்தில்
நாங்கள் இருக்கிறோம் என்ற நம்பிக்கையோடு இன்றைக்கு இருக்கிறோம்.
எந்த அடிப்படையில், 4 மாதங்களுக்கு முன், 5 மாதங்களுக்குமுன் நிதி
அமைச்சர் இதைத் தயார் பண்ணும்போதே, இதை எப்படி, எந்த யூகத்தில்,
எந்தத் தொலைநோக்கு பார்வையிலே பார்த்தார் என்று தெரியவில்லை.

> "இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
> இடும்பை படாஅ தவர்."

இது அப்போதே உங்கள் மனதில் ஏதோ பட்டிருக்கிறது. துன்பமோ,
துயரமோ வருகிறபோது துவளாது, மிரளாது, எந்தத் துன்பத்தையும்
எதிர்நோக்கி, எந்தச் சவாலையும் சந்தித்து வெற்றிகரமாக மக்களை
அழைத்துச் செல்லக்கூடியவர்கள் கெட்டிக்காரத்தனமான தலைவர்கள்,
அவர்கள்தான் வரலாற்றுத் தலைவர்கள் என்பதை உணர்ந்து அன்றைக்கே
குறளை முதல் பக்கத்திலேயே, இதைப் பிரதியாக அச்சடித்துக்
கொடுக்கிறபோதே எந்த அரசியல் சூழ்நிலைகள், எந்தச் சறுக்கல்கள்,
எப்படிப்பட்ட மிகப் பெரிய தோல்வியைத் தந்தாலும் அதைச் சந்தித்து
சரித்திரச் சாதனையாக மாற்றக்கூடிய அரசியல் வலுவும், திடமும்
கொண்ட புரட்சித் தலைவியினுடைய தலைமையில் (மேசையைத்
தட்டும் ஒலி) எதையும் எதிர்நோக்கக்கூடியவர்களாக நாங்கள்
இருக்கிறோம். ஒரு ஒழுக்கமான, கட்டுப்பாடான ஓர் அற்புதமான
Regiment. அந்த Regiment-ஐக் கொண்டு போகக்கூடிய ஒரு தலைவிக்கு
அரசியலிலே திடீர் என்று ஒரு புயல் வேறுவிதமாக அடித்தாலும் அதைச்
சந்தித்து ஒரு சரித்திரத்தைப் படைக்கக்கூடிய ஆற்றல் படைத்தவராக
இருக்கிறார். ஏனென்றால் எங்களுக்கு ரொம்பப் பெரிய நம்பிக்கையையும்,
இந்த நாட்டு மக்கள் மத்தியில் நாளை எதையும் எதிர்நோக்கக்கூடிய
ஆற்றலையும் நாங்கள் இயல்பாகவே, வலுவாகவே பெற்று இருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர் ராஜா பேசும்போது சொன்னார். மத்திய
சர்க்காரில் ஒரு மந்திரியைக் காணோம் என்று நான்கு நாட்களாகத்
தேடிக் கொண்டிருக்கிறார்கள். இந்த தேசத்திற்கு எவ்வளவு பெரிய
ஆபத்து என்பது இப்போதுதான் தெரியும். போலீஸே தேடிக்
கொண்டிருக்கிறது, மந்திரியைக் காணோம் என்று. மந்திரி கூடவே சில





போலீஸ் போகும். அது என்ன ஆச்சு என்று தெரியவில்லை. நாடு
எப்படி இருக்கிறது, பாருங்கள்! ஏன் ஐயா, மந்திரியைக் காணோம்
என்று கேட்டால், மந்திரியைக் கொலை கேஸுக்காகத் தேடிக்
கொண்டிருக்கிறோம் என்கிறார்கள்; அடேங்கப்பா. ஓர் இம்மியளவு
தவறு என்று மனதில் பட்டாலும் அமைச்சரை உடனே தூக்கி எறிந்து
வைத்துவிட்டு, அடுத்தவரைப் போட்டு அப்பழுக்கற்ற ஆட்சியை
நடத்துகிற புரட்சித் தலைவியையே நாங்கள் பார்க்கிறபோது (மேசையைத்
தட்டும் ஒலி) அடேங்கப்பா என்று பார்க்கிறோம் என்று சொன்னால்,
காணாமல் போன மந்திரிகளாக வரக்கூடிய கட்சிக்கா ஓட்டுப் போட்டு,
போலீஸே காணவில்லை என்று தேடுகிற மந்திரியையா ஆட்சியிலே
அமர்த்தி வைத்து, ஒரு Super Prime Minister, ஒரு Ordinary Prime
Minister இந்த நாட்டுக்கு! (சிரிப்பு) – Ordinary Prime Minister வாயையே
திறப்பதில்லை. ஒரே வரியிலே சொல்லிவிட்டார், எதுவாக இருந்தாலும்
அங்கு போய்க் கேட்டுக்கொள்ளுங்கள். கையெழுத்துப் போடுவது
மாத்திரம்தான் என் பொறுப்பு. Super Prime Minister
கும்பகோணத்திற்கு வந்தார்கள், இறங்கினார்கள், பார்த்தார்கள்,
சுற்றினார்கள், 1½ கோடி ரூபாய் உடனடியாக நிவாரணமாக
வழங்கப்படுகிறது. எல்லோரும் நீங்கள் எப்படிச் சொல்லலாம் என்றார்கள்.
நான்தான் சொல்ல வேண்டும். பிரதமருக்கு எந்த அதிகாரமும் இல்லை
என்று நானே தெரிவித்து விட்டேன். ஆகையால் நான்தான்
இதையெல்லாம் சொல்ல வேண்டும்; சொல்லிவிட்டார்கள்.
சொன்னதற்குப் பிறகாவது நாட்டினுடைய பிரதமர் ஏதாவது அதற்கு
correction கொடுப்பாரா என்று பார்த்தால், "அவர் சொல்லிவிட்டார்,
அவர்தான் சொல்வதற்கு அதிகாரம் படைத்தவர், அவர்தான் ஓதுக்க
வேண்டும்", முடிந்துவிட்டது. ஓர் அற்புதமான அமைச்சரவை. பூராவும்
கொலைகாரனும், கொள்ளைக்காரனும், கற்பழிப்பு கேஸிலே
தேடுகிறவனுமாகப் போய் இன்றைக்கு டெல்லியிலே அதிகாரத்திலே
போய் உட்கார்ந்து விட்டார்கள் என்று பேப்பரில் எழுதுவதைப்
பார்த்தால் இதெல்லாம் எங்கே போய் முடியப் போகிறது? இது எதிலே
போய் நடக்கும்? Criminals—திரும்பத் திரும்ப, இல்லை என்று
மறுக்கிறார்களா? கிடையாது. They have also accepted. ஆளும்
கட்சியாக இருக்கிறவர்கள் ஒத்துக்கொண்டு அமர்ந்து இருக்கிறார்கள்.
இந்த அரசியல் நியாயங்களை மக்கள் மத்தியிலே நாளை எடுத்துச்
சொல்கிறபோது கேட்பார்களா? இந்த நாடு எப்படி ஒத்துக்கொள்ளும்,
எப்படி இதைச் சகித்துக்கொள்ள முடியும் என்பதற்காகச் சொல்கிறோம்.

[திரு. எம்.ஏ. ஹக்கீம்]

முற்பகல் 11–05 [2004 ஜூலை 23

இங்கு இருக்கிற இந்த அவையின் வாயிலாக தமிழ்நாட்டு மக்களுக்கு
மாத்திரம் அல்ல. தேசம் முழுக்க இருக்கிற மக்களுக்கே இதைக் கேட்க
வேண்டுமென்ற அவசியம் வருகிறது. அங்கே ஆளும் கட்சிக்
கூட்டணியிலே உட்கார்ந்து இருக்கிற இடத்திலே ஒரு எம்.பி. ஒரு 302
கேஸ். கொலை கேஸ். அவருக்கு Sessions Court-லே bail. கொடுத்த
மாத்திரத்திலே High Court தலையிட்டு, bail கொடுத்தது தப்பு என்று
bail கொடுத்த Judge-ஐயே suspend பண்ணுகிறார்கள். ஆளும்
கூட்டணி, யார் அந்தக் கட்சி, யார் அந்த எம்.பி.? லாலு பிரசாத்
யாதவ், இரயில்வே அமைச்சருடைய ராஷ்ட்ரீய ஜனதா தளத்தினுடைய
கட்சியைச் சேர்ந்த ஒரு எம்.பி. அவருக்குத்தான் 302 கேஸ். Sessions
Court-லே bail. But that bail was rejected by the High Court.
இன்றைக்கு Supreme Court சிபு சோரன் கேஸிலே, மத்திய சர்க்கார்
மந்திரி கேஸிலே என்ன சொல்கிறது, "ஆளைப் பிடி, விடாதே." கீழே
இருக்கக்கூடிய High Court வரைக்கும் போயாச்சு நடவடிக்கை. High
Court Judge, Chief Judge-ஐக் கேள். கீழே இருக்கிற Judges. நீ ஓர்
உத்தரவு போட வேண்டுமென்றால் கேள்—அவர் இன்றைக்கு Anticipatory
bail கேட்டாலும் சரி, நீ அந்த Chief Judge-ஐ தான் கேட்க வேண்டும்.
நிலைமை எவ்வளவு மோசமாகப் போய்க்கொண்டிருக்கிறது?
அப்படியானால், The public morality has been demoralised—public
morality has been demoralised by Mrs. Sonia Gandhi's Congress-led
Manmohan Singh's Government. எந்தச் சூழ்நிலையிலும் தமிழகத்திலே
இன்றைக்கு ஒரு கட்டுப்பாடான— கட்டுப்பாடான என்று சொன்னால்,
எவராலும் இந்தக் கறை, அந்தக் கறை என்று சொல்ல முடியாத அளவில்
மிக விழிப்பாக, கவனமாக ஒரு அமைச்சரவையை வைத்துக்கொண்டு
கட்டுப்பாடான ஒரு அரசாங்கத்தை நடத்தக்கூடிய ஆற்றல் படைத்த
தலைவியாக இருக்கக்கூடிய புரட்சித் தலைவிக்குத்தான் இந்த
அரசாங்கத்தை, இவர்களைச் சேர்ந்தவர்களைக் கேட்பதற்கு உரிமை
இருக்கிறது.(மேசையைத் தட்டும் ஒலி) அவர்களின்மீது கடுமையான
விமர்சனத்தை நடத்துவதற்கும் எங்கள் தாய்க்கு உரிமை இருக்கிறது.
சிலபேர் இந்த வார்த்தைகளைச் சொன்ன மாத்திரத்திலே, இவர் எப்படி
அதையெல்லாம் பேசலாம், கேட்கலாம் என்று இன்றைக்குக் காலையிலே
செய்திகளைப் படித்த மாத்திரத்திலே கேட்கிறார்கள் பாருங்கள்,
அவர்களுக்கு எல்லாம் நாங்கள் அதைத்தான் தெரிவிக்க விரும்புகிறோம்.
இவையெல்லாம் இன்றைக்கு இந்த நாட்டில் இந்த அவையில்
விவாதிக்கப்படக்கூடிய பிரச்சினைகளாக வருகிறபோது, டெல்லியிலே



2004 ஜூலை 23] [திரு. எம்.ஏ. ஹக்கீம்]

இருக்கிற அரசாங்கத்தின் வாயிலாக எதிர்காலத்தில் தமிழகத்திற்கு நல்ல
நியாயங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. அந்த
நியாயங்களை எப்படிப் போராடிப் பெறப் போகிறோம்? எப்படி அந்த
நியாயங்களுக்காக இந்த நாட்டு மக்களைத் திரட்டப் போகிறோம்
என்பதுதான் முக்கியம்.

இன்றைக்கு இங்கே வந்தவர்கள், 7 நாட்கள் போதாது, 10 நாட்கள்
போதாது என்று சொல்லி இதைக் காரணமாகக் காட்டி உண்ணாவிரதம்
என்ற பெயரில் ஓடிப் போய் உட்கார்ந்து கொண்டு அரசியல் நடத்த
விரும்புகின்றீர்களே, நீங்கள் எல்லாம். இன்றைக்குத் தமிழ்நாட்டுக்கு இந்த
வஞ்சனையைச் செய்து இருக்கிறார்கள், இல்லை, இந்த அரசாங்கத்தால்
இந்தத் தேசத்திற்கே ஒரு மிகப் பெரிய அவமானம், தலைகுனிவு
ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பற்றிய சிந்தனையை
நீங்கள் மனதிலே வைத்திருந்து, அதை இந்த நாட்டு மக்கள் மத்தியிலே
உங்கள் வேதனையாக அல்ல, உங்களுடைய விம்முகின்ற குரலாகக்கூட
நீங்கள் வெளியே வெளிப்படுத்தி, அதை ஒழுங்குபடுத்துவதற்கு உங்கள்
கட்சியிலே உங்கள் தலைவர்கள் வெளியே வரவில்லை. மாறாக
உங்களுடைய காட்டத்தை, எரிச்சலை, வெறுப்பை நீங்கள்
வெளிக்காட்டுகிற விதத்திலே தமிழகத்தினுடைய அரசாங்கத்திற்கு
எதிராகவே இன்னமும் இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டு
தமிழ்நாட்டிற்கு எதுவும் வரவிடாமல் தடுக்க வேண்டும் என்பதற்காகவே
நீங்கள் முழுக்க உங்கள் அரசியல் நடவடிக்கைகளை மேற்கொண்டால்,
இந்த நாட்டு மக்கள் அதற்கு உரிய தீர்ப்பையும் அளிப்பதற்கு வெகு
சீக்கிரத்தில் அந்த முடிவை எடுத்துக்கொண்டு வரக்கூடிய காலம் வரும்.
ஆனால் அதற்குள்ளாக மத்திய சர்க்கார் கவிழ்ந்து விடக்கூடாது என்பதில்
நாங்கள் கவனமாக இருக்கிறோம்.

முற்பகல் 11–10

உங்களுடைய போட்டியால், உங்களுடைய எரிச்சலால்,
உங்களுக்குள்ளே இருக்கக்கூடிய அரசியல் பொறாமையால். ஒரு வரி—
"The Law and Order is not in good position"—உத்தரப்பிரதேசம்,
முலாயம்சிங் பற்றிச் சொன்னது. உடனே அவர் அடித்துவிட்டார்.
மூன்றாவது அணியில் இருந்து இந்த அணிக்கு ஆதரவு கொடுத்துகொண்டு
இருக்கிறேன். ஜாக்கிரதை. யாராவது தப்பும், தவறுமாக என்
அரசாங்கத்தைப் பற்றிப் பேசினால் மத்திய சர்க்காருக்குப் பிரச்சினை
வந்துவிடும். இதெல்லாம் எதற்காக நடந்து கொண்டிருக்கிறது என்றால்
பாரதிய ஜனதா கட்சி நிராகரிக்கப்பட்டது எனக்குத் தெரிகிறது.

மக்கள் பாரதிய ஜனதா கட்சி ஆட்சிக்கு வர வேண்டாம் என்று நிராகரித்து விட்டார்கள். அது எங்களுக்குப் புரிகிறது. சோனியா காந்தியினுடைய காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்று தீர்ப்பு அளிக்கவில்லை. அது ரொம்ப முக்கியம். இன்னும் வாஜ்பாய் அவர்கள் சொன்ன term–ல் சொல்லப் போனால் 145 பேர் காங்கிரஸ் எம்.பி., 137 பேர் B.J.P. எம்பி., 8 பேர்தான் வித்தியாசம். கூட்டணி என்று வைத்தால் பாரதிய ஜனதா கட்சிக்கு 188, இதை அவர் பேச வேண்டும். இருந்தாலும் பரவாயில்லை. ஆனால், காங்கிரஸ் கட்சிக்கு 218 பேர்—alliance; ராஷ்ட்ரீய ஜனதா தளம் உள்பட. மரியாதைக்குரிய திராவிட முன்னேற்றக் கழகம், இங்கே இருக்கக்கூடிய பாட்டாளி மக்கள் கட்சி, இவர்கள் எல்லாம் சேர்ந்து உள்ளே நுழைந்தவர்கள். Third party. அவர் யார்? இன்னும் இந்த அரசியல் குழப்பம் இந்த நாட்டின் எதிர்காலத்தை எப்படிச் சிதைத்து விடும் என்பதற்கு அடையாளம். ஆபத்தில், ஆத்திரத்தில், கோபத்தில், வெறுப்பில், எரிச்சலில், நிதானம் தவறிப் போய் மத்திய சர்க்கார் கவிழ்ந்து விடுமோ என்று அச்சத்தில் தவிக்கிறார்கள். அண்ணா திமுக–காரர்கள் என்று யாரும் தவறாகப் பத்திரிகையாளர்கள் குறிப்பிட்டு விடக் கூடாது. நாட்டு மக்கள் நினைத்துவிடக் கூடாது.

Third Front. The Leftist parties in Delhi—மரியாதைக்குரிய பெரியவர் சந்தானம் சொன்னாரே, அந்த Third Front, மார்க்சிஸ்ட் பார்ட்டி, சி.பி.ஐ. பகுஜன் சமாஜ்வாடி கட்சி—முலாயம் சிங் யாதவ் இவர்கள் எல்லோருமாகச் சேர்ந்து Third Front; இவர்கள்தான். தேர்தலை எப்படிச் சந்தித்தவர்கள்? மேற்கு வங்காளத்திலே. சோனியா காந்தியை வெற்றி பெறவிடக்கூடாது என்று தடுத்தவர்கள் யார்? கம்யூனிஸ்ட்கள். கேரளத்திலே காங்கிரஸ் routed. செய்தவர்கள் யார்? கம்யூனிஸ்ட்கள். ஆனால், டெல்லியில் காங்கிரஸ் ஆட்சி வருவதற்கு துணையாக வருவோம் Speaker—சோம்நாத் சேட்டர்ஜி—Honourable Somnath Chatterji — Marxist—நீங்கள் யார்? காங்கிரசைத் தேர்தல் களத்தில் தோற்கடித்தவர்கள். இப்போது நீங்கள் யார்? அவர்களுக்கு ஆதரவாக ஆட்சியை அமைக்கச் சொல்லி, சபாநாயகர் பொறுப்பில் இருப்பவர்கள். Total complications; Total political contradictions; These complications and contradictions never go agreeable with one track. So, it has impact on the part of the Government in the days to come.

இந்த அரசியல் விளைவுகள், எதிரொலிகள் எல்லாம், நிச்சயமாக இந்த அரசாங்கத்தின்மீது இருக்கத்தான் செய்யும்; பாயத்தான் செய்யும். தவறான முடிவுகளை வெகு விரைவிலே எடுத்துக்கொள்ளக்கூடிய ஆபத்தான அரசியல் நடக்கத்தான் செய்யும். அப்படி வரக்கூடிய



காலகட்டங்களில்தான் அரசாங்கத்திற்கு ஆபத்து என்பதையும் சேர்த்து உணர்த்தும் நிலைமை இன்றைக்கு எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதையெல்லாம் மனதிலே வைத்துக்கொண்டுதான் ஒரு நல்ல அற்புதமான ராஜதந்திரியாக, ஒரு நல்ல அற்புதமான அரசியல் ஞானியாக, எந்த நெருக்கடிகள், எந்தக் காலச் சூழ்நிலை எப்படி வந்தாலும் அதைச் சந்தித்து, புரட்சித் தலைவரால் உருவாக்கப்பட்டு, கோடானுகோடி தொண்டர்களால் இன்றைக்குக் காக்கப்பட்டு புரட்சித் தலைவியினுடைய அரசியல் தலைமை இன்றைக்குத் தோழர்களை, தொண்டர்களை அரவணைத்து, நாளை எதிர்காலத்தில் வெற்றிகரமாக எந்த ஒரு காலகட்டத்திலும், மீண்டும் தர்மத்தை வெல்ல வைத்து வரலாறு படைக்கின்ற வெற்றியை உருவாக்க முடியும் என்கிற அந்தத் தாயினுடைய தலைமையில் நம்பிக்கையோடு வெற்றி நடை போடக்கூடியவர்களாக இருக்கிற நாங்கள்; ஒன்றைத் தெளிவாகத் திரும்பவும் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அடுத்தும், அடுத்து வரக்கூடிய காலகட்டத்திலேயும் நிறைவான பட்ஜெட்டாக, இதே மாதிரியாக எதிர்பார்க்கக்கூடிய இடத்தில், கஷ்டம் இல்லாத, நஷ்டம் இல்லாத, அதே நேரத்தில் எந்தப் பொருளாதார சிக்கலுக்கும் சூழலுக்கும் தமிழகத்தை ஆட்படுத்தி விடாத, ஓர் அற்புதமான எதிர்காலத்தைத் தரக்கூடிய நம்பிக்கை மிகுந்த தாயினுடைய தலைமையை பாராட்டக்கூடிய நேரத்திலே ஒன்றை, கடனாக, நன்றிக் கடனாக, ஏன் என்றால் எங்களுக்கு என்று இருக்கக்கூடிய சில பிரச்சினைகளையும் சேர்த்து இந்த நேரத்தில் நினைவுபடுத்தும் வாய்ப்பாக எடுத்து இதை நான்நினைவுபடுத்த ஆசைப்படுகிறேன். நாளை (குறுக்கீடு) இல்லை, இல்லை. அதெல்லாம் இல்லை. அம்மா இல்லாததனால் கேட்டுவிடலாம் என்று பார்த்தேன். (குறுக்கீடுகள்) தொகுதி. அதைச் சொல்லிவிடுகிறேன்.

நாளைக்கு High Court திறக்கிறார்கள் மதுரையில். 3 தடவை High Court-க்கு நிதி ஒதுக்குங்கள், ஒதுக்குங்கள் என்று திரும்பத் திரும்பப் பேசினேன். பதிவாகி இருக்கிறது. அதற்குப் பிறகு 36 கோடி ரூபாய் மிச்சம் இருந்தது, ஒதுக்கிவிட்டீர்கள். அம்மா சொன்னார்கள். அப்புறம் கட்டடத்தைக் கட்டியாகிவிட்டது. போகின்ற நீதிபதிகள் பூராவும் பார்த்துவிட்டு, "அடேயப்பா மைசூர் மகாராஜா பேலஸ் மாதிரி அபாரமாக இருக்கிறது" என்று, அவ்வளவு அற்புதமான உயர் நீதிமன்றத்தை மதுரைக்குக் கட்டிக்கொடுத்த புரட்சித் தலைவிக்கும், துணை நின்ற இந்த அமைச்சரவைக்கும், இந்த அரசுக்கும் மதுரை மாநகர மக்களின், மதுரை மாவட்ட மக்கள், மதுரையைச் சேர்ந்த அந்த உயர் நீதிமன்றக் கிளைக்குச் சம்பந்தப்பட்ட அந்த 14 மாவட்ட மக்களின்

சார்பாக என்னுடைய மனங்கனிந்த நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்பட்டவனாக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–15*

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது ரூ.36 கோடி. ரூ.36 கோடி என்பது தவறு. மாண்புமிகு அம்மா அவர்கள் முழுவதுமாக ஒதுக்கிய தொகை ரூ.56 கோடி என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானா குறைத்துச் சொல்வேன்? தவறிப் போய்ச் சொன்னாலும் அரைக் கோடியைக் கூட்டிச் சொன்னாலும் சொல்வேனே தவிர, குறைப்பேனா? அமைச்சரிடம் சொல்கிறேன். முதலில் ரூ.18 கோடி கொடுத்து முடிந்து வேலை பாதியில் நின்று விட்டது. அந்தக் காலகட்டத்தில்தான் திருப்பி வரும்போது வேலைகள் கொஞ்சம் சுணக்கமாக இருக்கிறது, வேலைகள் விரைவாக நடைபெறவில்லை. ஆகையாலே மிச்சம் இருக்கிற பணத்தை வெகுவிரைவிலே நீங்கள் ஒதுக்கிக் கொடுக்கவேண்டுமென்று அதைக் கேட்டுக்கொண்டோம். அந்தக் காலகட்டத்தில்தான் நீதிபதிகளுக்கு உண்டான—Promoted Judges, அவர்களுக்கு உண்டான—சம்பளம்கூட வரவில்லை, இன்னும் கொஞ்சம் பாக்கியிருக்கிறது, உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டார்கள் என்ற கோரிக்கையை வைத்தேன். உடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதைக் கேட்டார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய உதவியோடு உடனடியாக அதுவும் தரப்பட்டது. The Sub-Judges, Munsiffs...

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை நிலை நீதிபதிகளுடைய கோரிக்கைகள் நீண்ட நாள் நிலுவையில் இருந்த சூழ்நிலையில் அந்தக் கோரிக்கைகளைக்கூடத் தாயுள்ளத்தோடு பரிசீலித்து, மாண்புமிகு அம்மா அவர்கள், அரசுக்குக் கடுமையான நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, வருடத்திற்கு Pay revision மூலம் 4–1/2 கோடி ரூபாய் செலவு ஏற்படுகின்ற வகையிலே அந்த உத்தரவை அளித்திருக்கிறார்கள்.

**திரு. எம்.ஏ. ஹக்கீம்:** என்னுடைய மனங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இப்போதுகூட எனக்கு நினைவிருக்கிறது. அந்த நினைவை வைத்துச் சொல்கிறேன். பேசிக்கொண்டே இருந்தேன்.



நன்றியைத் தெரிவித்துக்கொண்டே இருந்தேன். எல்லோருக்கும் கேட்டதையெல்லாம் கொடுக்கிறீர்கள், நீதிபதிகளுக்குச் சம்பளத்தை உயர்த்திவிட்டீர்கள், படியெல்லாம் உயர்கிறது, எல்லாம் நடக்கிறது, எம்.எல்.ஏ.-க்கள் கஷ்டப்படுகிறோம், அதைக் கொஞ்சம் தயவுசெய்து கவனிக்க வேண்டுமென்று அந்தக் காலகட்டத்தில்கூட நான் சொன்னேன், அதற்காக. ஏனென்று சொன்னால், தாராளமாக, இலவச மின்சாரம் போய்க் கொண்டிருக்கிறது, முட்டை போட்டுக் கொண்டிருக்கிறீர்கள், செருப்புக்குக் காசு கிடையாது இப்போதெல்லாம். கோயிலுக்குள்ளே எப்படி வேண்டுமானாலும் போய் நுழையலாம், எப்படி வேண்டுமானாலும் வரலாம். இப்போது ரொம்ப அபாரமான சலுகைகள். இந்தச் சலுகைகளை எல்லாம் பார்த்தீர்கள் என்று சொன்னால், ராஜா வீட்டுப் பிள்ளைக்குக்கூட இது கிடைக்காது. ராஜா வீட்டுக் கன்றுக்குட்டி என்று சொல்வார்களே, (குறுக்கீடு) உங்கள் வீட்டைச் சொல்லவில்லை, பொதுவாக, Kings, அந்தக் காலத்து ராஜாக்கள். அவ்வளவு அபாரமான சலுகைகளை அம்மா அவர்கள் அள்ளி, வாரி, வாரிக் கொடுத்திருக்கிறார்கள். சலுகைகளை எல்லாம் மொத்தமாகப் பார்த்தால், சில கட்சித் தலைவர்களே சொன்னது மாதிரி, தாங்குமா, எங்கே ஐயா இருக்கிறது இந்தக் காசு அப்படியென்று! அவர்களுக்கு என்னவென்றால், எதுவுமே தர வேண்டாம், அடுத்த தேர்தலிலே நாங்களே ஓடிப் போய் விடுகிறோம் என்கிறார்கள். இது தேர்தலுக்காக அல்ல. பொது மக்களுடைய நன்மைக்காக. ஆசை, எது விருப்பம், எது தேவை, சரி, ஏற்றுக்கொள்ளத் தயார், அதைச் செய்தார்கள். இவ்வளவு தாராளமாக, 1700 கோடி ரூபாய், 1795 கோடியே 96 இலட்சம், நிதி அமைச்சர் இப்போது சொன்னார்கள் என்று நினைக்கிறேன். அந்த அளவுக்கு நிறையத் திட்டங்கள் வாரி வழங்கப்பட்டிருக்கின்றன.

அடுத்து, எம்.எல்.ஏ.—க்கள் கோரிக்கை. ஒரு கோடி ரூபாய் தொகுதி மேம்பாட்டு நிதி என்று இந்தக் காலகட்டத்திலாவது—இந்தக் காலகட்டத்திலாவது தாங்கள் அறிவித்தால் (குறுக்கீடு)—ஒரு கோடி என்பது குறைவாக இருக்கும் என்று பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் சொல்கிறார்கள். இருந்தாலும் – அந்த ஒரு கோடியைத் தயவுசெய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நீண்ட நாள் தவணையான சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பளப் பாக்கி. ரொம்ப நாளாக பழைய சம்பளத்தை எல்லாம் கணக்குப் பார்த்தால் ஓரளவுக்குச் சரியாக வரும். நிதியமைச்சர் அவர்கள் அதற்கு ஏற்பாடு பண்ணலாம் என்கின்ற மாதிரி சொல்கிறார். ரொம்ப சந்தோஷம். அம்மாவிடம், உயர்ந்த, கனிந்த மனத்தோடு, அந்தத்

தாயிடத்தில் பேசி, நிறைய, கை நிறையச் சம்பளம் தாருங்கள் என்று கேட்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இப்போதுதான் தெரிகிறதோ? (சிரிப்பு) முதலிலேயே ஆரவாரமாகப் பண்ணினால்தானே! நான் மாத்திரம் பேசிக்கொண்டே இருந்தால், என்ன நினைப்பார்? இவன்தான் கேட்கிறான், மற்றவர்கள் எல்லாம் வேண்டாம் என்றுதானே சொல்கிறார்கள், அப்படியென்று வராதா? (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) ரொம்ப மகிழ்ச்சி. அம்மா அவர்கள் அதற்கு உறுதுணையாக இருப்பார்கள். நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் தங்களது இசைவை மனப்பூர்வமாக, அவர்கள் மன உணர்வில், முகத்தில், தெளிவில் காட்டியிருக்கின்ற காரணத்தினால், பரிபூரணமாக அதை ஏற்றுக்கொண்டவனாக, என்னுடைய பணிவான ஒரு வேண்டுகோள்.

*முற்பகல் 11–20*

மதுரைக்கு High Court என்று வருகிறபோது, இவ்வளவு உதவி செய்கிறீர்கள் நீங்கள். High Court-ஐ வைத்து இலட்சக்கணக்கான கூட்டம் அங்கு வரும். ஆஸ்பத்திரி, நகைக் கடை, ஜவுளிக் கடை, ஏராளமான அளவில். மதுரை என்பது தெற்கே, சென்னைக்கு அடுத்த மிகப் பெரிய Political Capital என்றால் அதுதான். State Capital சென்னை. ஆனால் எல்லா விதத்திலும் மதுரை; ஆலயத்திற்கு; இராமேஸ்வரத்திற்குப் போனால் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வரவேண்டும். கன்னியாகுமரிக்குப் போனால் மீனாட்சி அம்மன் கோயிலுக்கு வரவேண்டும். ஐயப்பன் கோயிலுக்குப் போனாலும் மீனாட்சியை, முருகனை—திருப்பரங்குன்றத்திலிருந்து முருகனைத் தரிசித்துவிட்டுத்தான் எல்லா ஊர்களுக்கும் செல்வார்கள். அப்படிப்பட்ட மதுரை, வறட்சியால் கொஞ்சம் பாதிக்கப்பட்டிருக்கிறது. தண்ணீர்ப் பிரச்சினை. நான் ஏற்கெனவே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள், எங்களுடைய ஆய்வுக் கூட்டத்திலே கலந்துகொள்கிறபோது பேசியிருக்கிறேன். பல முறை சொன்னேன். ஆனால் அங்கிருக்கிற I.A.S. அதிகாரிகள், அங்கே Corporation Commissioner, Collector கொஞ்சம் அவசரத்தில் அதைச் சரியான முறையில் அரசுக்குத் தெரிவிக்காமல் விட்டுவிட்டார்கள். எப்படியென்றால், மதுரையில் வறட்சி இல்லை என்கிற மாதிரி ஓர் அறிக்கையைக் கொடுத்துவிட்டார்கள். அது இல்லை. வறட்சி, குடிநீர்ப் பிரச்சினை, மழை இல்லை, பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று நான் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை வைத்துக் கொண்டு ஆய்வுக் கூட்டத்தில்



பேசினேன். பிறகு அவர்கள் ஒப்புக்கொண்டார்கள், அந்த இரண்டு I.A.S. அதிகாரிகள் மாத்திரமல்ல, எல்லா நிருவாகத் துறையைச் சேர்ந்தவர்களும் ஏற்றுக் கொண்டார்கள், 'ஆமாம், இந்தப் பற்றாக்குறை இருக்கிறது, இதை நிறைவுபடுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது' என்று.

மதுரை மாநகரத்தில் 72 divisions—ஒரு division–க்கு குறைந்தபட்சம் 4 ஆழ்துளைக் கிணறுகள் என்று வைத்தால்கூட, மொத்தத்திற்கு 300–க்கும் குறைவாகத்தான் வரும். ஒரு இலட்சம் என்ற கணக்கில் வைத்தால்கூட, 3 கோடியைத் தாண்டாது. அந்த மாநகரத்தின் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்குகிற விதத்தில், வெளியேயிருந்து இலட்சக்கணக்கான மக்கள் வருகிற காரணத்தால் அந்த பாதிப்பை உணர்ந்து அந்த மாநகரத்திற்கு, எங்கள் மக்களுக்கு அந்த நன்மையைச் சேர்த்துச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த நல்ல வாய்ப்பினை, இந்த விவாதத்திலே கலந்துகொள்ளக்கூடிய முதல் வாய்ப்பினை எனக்கு அளித்த மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், இங்கிருக்கிற மரியாதைக்குரிய, கண்ணியத்திற்குரிய பேரவைத் தலைவருக்கும் மீண்டும் என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியைக் காணிக்கையாக்கி, என்னுடைய உரையை நிறைவாக்கி, விடைபெற்றுக் கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: திரு. கு. அன்பழகன்.

**திரு. கு. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில் ஏழை, எளிய மக்களின் இன்னல் போக்கி, ஏற்றம் தந்த அந்த அற்புதத் திட்டத்தில், ஆன்ற வல்லுநர்கள் போற்றும் புரட்சித் திட்டத்தில், இலட்சோப இலட்சம் தொண்டர்களில் ஒருவனான என்னையும் ஒரு பொருட்டாகக் கருதி, பேச வைத்தமைக்காக, பொன்மனத் தலைவி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஆயிரம் கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

கடந்த மூன்று ஆண்டுக் காலத்திற்கு முன்னால், இந்த நாட்டை ஆண்ட கையாலாகாத கருணாநிதி ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டினால் கஜானாவை காலியாக்கி, தமிழகத்தை திவாலாக்கி விட்டுப் போனபின், ஆட்சிக்கு வந்த எங்கள் தங்கத் தலைவி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெஞ்சுறுதியோடு, நேர்மைத் திறத்தோடு நிருவாகத்தைத்

சீர்படுத்தி, செம்மைப்படுத்தி கஜானாவை நிரப்பி, இன்றைக்கு இந்த மாபெரும் 2004–2005 ஆம் ஆண்டு பட்ஜெட் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

கடந்த மூன்று ஆண்டுகளில் இயற்கை இடர்ப்பாடுகளினால் மக்கள் வறட்சி, வறுமை இவற்றால் துவண்டுவிடக் கூடாது என்பதற்காக, மாதம் 30 கிலோ அரிசி வழங்கி, இலவச polyester வேட்டி, சேலைகளை வழங்கி ஒரு மாபெரும் சாதனையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கடந்த காலத்திலே நடத்தி வந்திருப்பதை எண்ணிப் பார்க்கிறபோது தமிழகத்தினுடைய மக்கள் பெரும் மகிழ்ச்சியடைகிறார்கள்.

இந்த ஆண்டுத் திட்டத்தில், 2002–2007 ஆகிய இந்த 10–வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திற்கு சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் வளர்ச்சித் திட்டம் ஒன்றினைச் செயல்படுத்துவதற்கு மத்திய திட்டக் குழுவின் அனுமதியைப் பெற்றுள்ள நம்முடைய பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி அரசைப் பாராட்டுகிறோம். ஆக, அந்த வகையில் இந்த வரவு—செலவுத் திட்டத்திற்கு சுமார் ரூ.8001 கோடி கேட்டு வளர்ச்சிப் பணி இன்றைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இப்படி ஒவ்வொரு திட்டமாக எடுத்துக்கொள்வோமேயானால், ரூபாய் 720 கோடிக்கு மேல் செலவு செய்து புதிய வீராணம் திட்டத்தை, சென்னை நகர மக்களின் குடிதண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கும் மாபெரும் திட்டத்தை இன்றைக்குச் செயல்படுத்தி, சென்னை நகர மக்கள் நல்ல குடிதண்ணீரைப் பெற்று வருகிறார்கள்.

முற்பகல் 11–25

வேளாண்மைத் திட்டம். இந்த ஆண்டு வேளாண்மைத் திட்டத்திலே சுமார் ஒன்பது வகையான திட்டங்களைச் செயல்படுத்துகின்ற நோக்கமாக மாற்றுப் பயிர்த் திட்டம், ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம், திறன்மிக்க நீர்ப் பயன்பாட்டை ஊக்குவித்தல் திட்டம், துல்லிய பண்ணையியல் திட்டம், புதிய தொழில்நுட்பங்களை மேற்கொள்ளும் திட்டம், தாராளச் சந்தை மூலம் நல்ல விலை கிடைக்கச் செய்கின்ற திட்டம், ஊரகப் பண்ணைசாராத் துறைகளில் கவனம் செலுத்தும் திட்டம், கூட்டுறவுக் கடன் கட்டமைப்புக்குப் புத்துயிர் அளிக்கும் திட்டம் போன்ற திட்டங்களை இன்றைக்குச் செயல்படுத்தி, இவை போன்ற அணுகுமுறைகளைக் கையாண்டு வேளாண்மைத் துறையை முதன்மைத் துறையாக மாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.



மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, பல பகுதிகளில் வேளாண் ஏற்றுமதி மண்டலங்களையும் ஏற்படுத்தி வந்திருக்கிறது. வகைப்படுத்தப்பட்ட மலர் வகைகளுக்காக நம்முடைய தருமபுரி மாவட்டத்திலே ஓசூரில் வேளாண் ஏற்றுமதி மண்டலத்தை சுமார் 25 கோடி ரூபாயில் தொடக்கி வைத்து, அதேபோன்று நம்முடைய நீலகிரிப் பகுதியிலும் மலர்களுக்கென ரூபாய் 11 கோடியிலும் திட்டம் செயல்படுத்தி இன்றைக்கு மலர்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்ற வகையிலே திட்டங்களைத் தீட்டி வந்திருக்கிறார்கள்.

இதேபோன்றுதான் உணவுப் பூங்கா. எங்களுடைய திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை, எனது தொகுதியில் சுமார் ரூபாய் 13 கோடியில் உணவுப் பூங்கா அமைக்க உத்தரவிட்ட, என்னுடைய உத்தமத் தலைவிக்கு, இலட்சியத் தலைவிக்கு இலட்சம் கோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான்கூட நினைத்தேன், இந்த உணவுப் பூங்கா எந்த வகையிலே எங்கள் பகுதிக்குப் பயன்படப் போகிறது என்று. பக்கத்திலே இருக்கிற விருதுநகர் பகுதியிலே இருக்கிற தனியார் உணவுப் பூங்காவைப் போய்ப் பார்த்தபோதுதான் அந்தச் சிறப்பு தெரியவந்தது. வெண்டைக்காயை ஒரு நாளைக்குப் பிடுங்காவிட்டால் முற்றிவிடும். அதேபோன்று முருங்கைக்காயும், கத்திரிக்காயும் இப்படிப் பல்வேறு வகைப்பட்ட காய்கறிகளை எல்லாம் ஓரிரு தினங்களிலே அவற்றைப் பிடுங்கி விலைக்கு அனுமதிக்காவிட்டால் அந்தக் காய்கள் எல்லாம் முற்றி, விவசாயிகளுடைய வயிற்றிலே ஒரு எரிச்சலை, ஒரு ஏமாற்றத்தைக் கொண்டு வந்து விடும். இப்படிப்பட்ட உணவுப் பூங்கா அமைத்ததன் காரணத்தினால், அங்கே விளைகின்ற அந்தக் காய்கறி வகைகளை எல்லாம் உணவுப் பூங்காவிலே பதப்படுத்தி, நல்ல விலை வருகின்றபோது விற்க வகை செய்கின்ற இந்த மாபெரும் திட்டத்தை மக்கள் பாராட்டுவார்கள், போற்றுவார்கள்.

அதேபோன்றுதான், நம்முடைய ஈரோட்டிலும்கூட 36.32 கோடி ரூபாயில் மஞ்சள் வணிக வளாகம். இன்றைக்கு அதைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாரி வழங்கியிருக்கிறார்கள். ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தில், வரும் வேளாண் பருவத்தில் 1.50 இலட்சம் ஏக்கரில் மர வகை மற்றும் தீவனப் பயிர்கள் சாகுபடிக்கு சுமார் ரூ.34 கோடி ஒதுக்கியுள்ளமைக்கு, தமிழகத்தைப் பாலைவனச் சோலையாக மாற்றிய ஆற்றலுக்கு, புகழ்பெற்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–30

இந்த ஆண்டு பண்ணை பம்புசெட்டுகளுக்காகப் புதியதாக சுமார் 45 ஆயிரம் மின் இணைப்புகளைக் கொடுத்து விவசாயப் பெருங்குடி மக்களுடைய வாழ்விலே மிகப் பெரிய உன்னதத்தை ஏற்படுத்த உறுதி செய்யப்பட்டுள்ளதைப் பார்க்கின்றபொழுதும், பாராட்டுதலுக்கும், போற்றுதலுக்குமுரிய இந்த மாபெரும் வரவு–செலவுத் திட்டத்தை மக்கள் பாராட்டுவார்கள்.

அதேபோன்றுதான் மாநில அளவிலே கால்நடை மற்றும் எருமை இனப் பெருக்கத்தை மேம்படுத்த சுமார் 64.62 இலட்சம்; எருமை இனப் பெருக்கத்தை மேம்படுத்த செயற்கை முறையிலே கருவூட்டல் செய்து அந்தக் கால்நடைகளைப் பெருக்கி, பால் சம்பந்தமான, பால் உற்பத்தித் திறனை வளர்த்திருக்கிறார்கள். இப்படி ஒவ்வொன்றாகச் சொல்லி மாளமுடியாத அளவிற்கு வேளாண் தொழிலிலே புதுமையைக் புகுத்தி வந்திருக்கிறது நம்முடைய அரசு.

அதேபோன்றுதான் விளையாட்டுகளுக்கான கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கவும், விளையாட்டு வீரர்களுடைய உடல் திறனைக் கண்டறிவதற்கும் ரூ.48.14 கோடி ஆக நிதி உயர்த்தப்பட்டு உலகம் போற்றும் வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இந்தத் திட்டத்திலே மிகப் பெரிய ஊக்கத்தை அளித்துள்ளது.

அதேபோன்றுதான் நம்முடைய நெடுஞ்சாலைத் துறையிலும்கூட; தமிழகத்திலே இருக்கக்கூடிய நெடுஞ்சாலைகளில் அரசு மாபெரும் சாதனையைச் செய்திருக்கிறது என்று சொல்லலாம். சுமார் 2,149 கிலோ மீட்டர் நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட நெடுஞ்சாலைகள், சர்க்கரை ஆலைச் சாலைகள் ஆகியவற்றை மேலும் மேலும் புதுப்பிக்க ரூபாய் 221.32 கோடியை ஒதுக்கி இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையிலே மிகப் பெரிய ஓர் உன்னதத்தை நமது மாநிலம் அடைந்திருக்கிறது.

இதேபோல கூட்டுக் குடிநீர்த் திட்டம். திருச்சி மாவட்டத்திலே 677 ஊரகக் குடியிருப்புகளுக்கு நல்ல குடிதண்ணீர் வழங்கத் திட்டம் தீட்டி, அதற்கென சுமார் 69.20 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள். நாகை, தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களுக்கும் 133.5 கோடி ரூபாயை ஒதுக்கி, 642 ஊரகக் குடியிருப்புகளுக்கு நல்ல குடிதண்ணீரை வழங்கி மக்களை இன்றைக்கு மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார்கள். மதுரை,





தேனி மாவட்டங்களில் ரூபாய் 74 கோடி நிதியொதுக்கி சுமார் 406 ஊரகக் குடியிருப்புகளுக்கு வாழ்விலே மகிழ்ச்சி தரக்கூடிய அளவிற்கு, அந்தக் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்கி, ஒரு மாபெரும் மகிழ்ச்சி வெள்ளத்தை மதுரைப் பகுதி மக்களுக்கு ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

அதேபோல திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் சுமார் ரூபாய் 85.4 கோடியில் 816 ஊரகக் குடியிருப்புகளின் தாகத்தை நிரந்தரமாக நீக்கி ஒரு மாபெரும் திட்டத்தை, காவிரி கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைக் கொண்டு வந்து சாதித்திருக்கிறது இந்த அரசு.

அதேபோல நெல்லை, விருதுநகர், சங்கரன்கோயில், சிவகாசி போன்ற பகுதிகளில் குடிநீர்ப் பிரச்சினைக்கு நிரந்தரமாகத் தீர்வு காண்பதற்காக ரூ.78.70 கோடி ஒதுக்கி, ஒரு மாபெரும் சரித்திரத்தை நடத்தியிருக்கிறார்கள். அதேபோல நாமக்கல் மாவட்டத்திலே 1,399 ஊரகக் குடியிருப்புகளுக்கு ரூபாய் 126.85 கோடி ஒதுக்கி நாமக்கல் மாவட்டத்து மக்களிடையே மகிழ்ச்சி வெள்ளத்தை ஏற்படுத்தி இருக்கிறது இந்த அரசு. இப்படி ஒட்டுமொத்தமாகத் தமிழகத்தை, 'வான் பொய்ப்பின் தான் பொய்க்கவில்லை' எனக் காத்து வருகின்ற தமிழகத்தினுடைய தமிழ்த் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஆயிரம் கோடி நன்றிகளைக் காணிக்கையாக்குகிறோம்.

ஆதிதிராவிடர் நலன். ஆதிதிராவிடர்களுடைய விடிவெள்ளியாகத் திகழும் அம்மா அவர்களுடைய சீரிய திட்டம் இலவச சைக்கிள் திட்டம். இந்த இலவச சைக்கிள் திட்டம் மாத்திரமல்லாமல், சுமார் 1.43 இலட்சம் மக்களுக்கு வறுமை ஒழிப்புத் திட்டத்தின்கீழ் சுமார் ரூ.65.99 கோடி நிதியொதுக்கி ஆதிதிராவிடர்களுடைய வறுமையைப் போக்கி இருக்கிறார்கள்.

முற்பகல் 11–35

அதேபோல ரூ.70 கோடி மதிப்பீட்டில் 7000 பெண்களுக்கு— சொந்த நிலம் வைப்பதற்கு, ஒரு பெண்ணுக்கு 5 ஏக்கர் வீதம் 7000 பெண்களுக்கு— நிலம் வாங்கிக் கொடுக்க உத்தரவிட்ட நம்முடைய தமிழகத்தினுடைய தன்னிகர் இல்லாத தலைவி, புரட்சித் தலைவி அவர்களை ஆதிதிராவிட மக்கள், வணங்கும் தெய்வமாக வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள். இவ்வளவையும் செய்து ஆதிதிராவிடர் வழிபடும் ஏழாயிரத்திற்கும் மேற்பட்ட கோயில்களுக்கு ரூ.25,000 ஒதுக்கி—'கோயில் விளங்க குடி விளங்கும்' என்று சொல்வார்கள்; அந்த வகையிலே ஆதிதிராவிடர்கள் வழிபடுகின்ற அந்தக் கோயில்களுக்கும் இருபத்தி ஐந்தாயிரத்தை ஒதுக்கி— இன்றைக்கு ஒரு மாபெரும் சாதனையையும் செய்திருக்கிறார்கள்.

[திரு. கு. அன்பழகன்] [2004 ஜூலை 23

அடுத்து, பிற்பட்டோர் நலம். இதேபோன்றுதான், எப்படி ஆதிதிராவிட மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கி அந்த மக்களைப் பேணிக் காத்தார்களோ, அதேபோன்றுதான் பிற்பட்ட இனத்தைச் சார்ந்த ஏழை எளியவர்களுக்கும் சைக்கிள் வழங்கும் திட்டத்தையும் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கி அவர்களையும் வாழவைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு திட்டங்களை எல்லாம் கொண்டு வந்து புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதனைகளைச் செய்திருக்கிறார்கள். நம்முடைய 2004–2005 ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டத்திலே ஏழை எளியவர்கள் போற்றக்கூடிய, ஏழை எளியவர்கள் பாராட்டக்கூடிய மாபெரும் அம்சங்கள் இருப்பதைக் கண்டு மக்கள் போற்றுகிறார்கள்.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்படி நெருக்கடியான கட்டத்திலும்கூட, இன்றைக்கு இலவச மின்சாரத்தைத் தந்திருக்கிறரர்கள். தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் அத்தனை பேரும் இன்றைக்குப் பாராட்டுகிறார்கள், போற்றுகிறார்கள்.

அனைவருக்கும் ரேஷன். அனைவருக்கும் ரேஷன் என்ற தலைப்பிலே 'எச்' முத்திரையை நீக்கிவிட்டு, இன்றைக்கு இலவச உணவுப் பொருட்களை வாங்குகின்ற ஒரு முக்கிய அம்சத்தை, இப்பொழுது அனைவருக்கும் ரேஷன் கார்டு என்ற திட்டத்தைக் கொண்டு வந்தமைக்காகப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத் தமிழகத்தினுடைய மக்களின் சார்பாகவும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் பாராட்டுதலையும், போற்றுதலையும் தெரிவித்துக்கொள்கிறோம். இப்படி, எல்லாமே இலவசம் என்ற அடிப்படையிலே மாபெரும் சாதனைகளைச் செய்து கொண்டிருக்கிறது நம்முடைய அரசு. வருங்காலத்திலே புரட்சித் தலைவியினுடைய புகழுக்கும், புரட்சித் தலைவியினுடைய செல்வாக்கிற்கும், புரட்சித் தலைவியினுடைய ஒவ்வொரு நடவடிக்கைக்கும் அண்ணா தி.மு.க. தொண்டர்களில் இலட்சோப இலட்சம் தொண்டர்களில் நாங்களுமாக இருந்து, புரட்சித் தலைவியினுடைய வெற்றிக்கு அரும்பாடுபட்டு வருவோம் என்பதை இந்த அருமையான சந்தர்ப்பத்திலே தொவித்துக்கொண்டு, இந்தத் திட்டத்திலே பேச வைத்தமைக்காக நன்றியைக் கூறி, விடைபெறுகிறேன். நன்றி.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)



2004 ஜூலை 23]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

***திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நல்லதொரு நிதிநிலை அறிக்கையைப் படைப்பதற்கு வழிகாட்டியாக விளங்கிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு ஏழை எளிய மக்களின் சார்பில் கோடானு கோடி நன்றியை அவர் இருக்கும் திசை நோக்கிச் சமர்ப்பிக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தாயின் வார்த்தைகள் உறுதிமொழிப் பத்திரங்கள். அவர் கூறும் ஆணைகள் அசரீரி வார்த்தைகள். அவரது சிந்தனைகள் தூய்மையானவை. அவருடைய இதயத்திற்கும், ஏமாற்றத்திற்கும் இடையே உள்ள தூரம், வானத்திற்கும், பூமிக்கும் இடையே உள்ள தூரம். எத்தனை இடையூறுகள் ஏற்பட்டாலும் தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கிக் காட்டுவார். நிகழ்கால இலாபத்தை மட்டும் பார்க்காமல், எதிர்காலத்தை ஒளிமயமாக்க உழைப்பவர். இதய தெய்வம் அம்மா அவர்களது வழிகாட்டுதலில் படைக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கை, புதிய வரிகள் இல்லாத பல வரிச் சலுகைகள் உள்ள நிதிநிலை அறிக்கையாக அமைந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலைவனத்தின் இடையே தேன்கூடு கட்ட முயன்ற தேனீக்கள் பல காத தூரம் சென்று வண்ண மலர்களைத் தேடிப் பிடித்து, கண்ணுக்குப் புலப்படாத பல்சுவைத் தேன் துகள்களைத் தேடிப் பிடித்துக் கொண்டு வந்து அழகிய தேன்கூட்டை உருவாக்குவது போன்று கடந்த ஆட்சி காலத்தில் பாலைவனமாக இருந்த அரசின் நிதிநிலையை இன்றைக்கு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழி காட்டுதலோடு சுவை மிகுந்த தேன் துளிகள் நிறைந்த தேன் கூடு போன்று இந்த நிதிநிலை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கின்றது.

முற்பகல் 11–40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருவ நிலை தவறி, மழை பொய்த்துப் போன காரணத்தால் விவசாயிகள் செலுத்த வேண்டிய நில வரியை அனைத்து மாவட்டங்களிலும் தள்ளுபடி செய்த முதலமைச்சர் அம்மா அவர்கள் உள்ளூர் வரி, உள்ளூர் தலமேல் வரி, தலவரி ஆகியவற்றையும் தள்ளுபடி செய்ததால் 60 கோடி ரூபாய்

[திரு. பி.கே. சேகர்பாபு] [2004 ஜூலை 23

அளவிற்கு வரி இழப்பு ஏற்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர்ந்து மூன்று ஆண்டுகளாகப் பருவ மழை பொய்த்துப் போய் குடிக்கவும் நீரின்றி விவசாயம் பாதிக்கப்பட்டு அல்லலுற்ற மக்களைத் தனது சீரிய முயற்சியால் பல்வேறு சிக்கல்களிலிருந்து விடுவித்தவர் இதய தெய்வம் அம்மா அவர்கள். கடந்த காலத்தில் தன்னைத்தானே மூதறிஞர் என்று சொல்லிக் கொண்டவர் ஆட்சியில், மத்திய அரசுக்கு இணையாக ஊதியத்தை உயர்த்திவிட்டோம் என்றவர்கள், மொத்தப் பணத்தில் 40 சதவிகிதப் பணத்தை இரண்டு தவணைகளில் கொடுத்துவிட்டு, மீதிப் பணத்தை 2003–ல் பெற்றுக்கொள்ளுங்கள் என்றார்கள். அதுமாத்திரமல்ல, ஓய்வுபெற்ற அரசு பணியாளர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய 1,090 கோடி ரூபாய் 2003 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதிக்குப் பிறகு கொடுக்கப்படும் என்று அறிவித்துவிட்டார்கள்.

நெய்வேலியிலிருந்து மத்திய அரசு எடுத்துக்கொண்ட நிலக்கரிக்காகத் தரப்படும் உரிமைத் தொகை 250 கோடி ரூபாயை போகிற போக்கில் 2001 மார்ச் மாதத்திலேயே 2003 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை வர வேண்டிய பணத்தைச் சேர்த்துப்பெற்று செலவழித்த பெரிய மனிதர்கள்தான்; இந்த நாடு இன்னும் அவர்களை மறக்கவில்லை. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படி பிற்காலத்தில் வர வேண்டிய வருவாயை முன்கூட்டியே பெற்றுக்கொண்டும், ஓய்வுபெற வேண்டிய நேரத்தில் வர வேண்டிய தொகையை மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு தருவதாகச் சொல்லியும், ஊரான் வீட்டுப் பணத்திலேயே ஆட்சி நடத்தியவர்கள், அரசு ஊழியர்களுக்குக்கூட குறுகிய காலக் கடன் வாங்கிச் சம்பளம் கொடுத்து காலம் கழித்தவர் இந்த மூதறிஞர்கள், இன்றைக்குப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியைப் பற்றி வக்கணை பேசுகிறார்கள்.

1999 முதல் 2004 நாடாளுமன்றத் தேர்தலுக்கு சமீப காலம் வரை மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருந்த தி.மு.க. காவிரி நீரைப் பெறுவதில் அக்கறை காட்டாததன் காரணமாக மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சியில் சரிவு ஏற்பட்டது. ஆனால், அவரது குடும்பத் தொலைக்காட்சி நிறுவனத்தில் தமிழ் மொழியில் மட்டும் இருந்த ஒளிபரப்பு, 11 சேனல்களாக வளர்ச்சி அடைந்துள்ளது. உண்மையிலேயே தமிழக மக்கள்மீதும் தமிழ்நாட்டின்மீதும் அக்கறை இருந்திருந்தால், மத்தியிலும், மாநிலத்திலும் ஒருசேர மூன்று ஆண்டு காலம் ஆட்சியில் இருந்த காலத்தில் குறைந்தபட்சம் தமிழகத்தின் பொருளாதார



2004 ஜூலை 23] [திரு. பி.கே. சேகர்பாபு]

வளர்ச்சியில் சரிவு ஏற்படாமலாவது காப்பாற்றியிருக்கலாம் அல்லவா? இன்றைக்கு மத்தியிலே பல கட்சிகளைக் கொண்ட கூட்டணி அமைச்சரவை ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலிருந்து 7 கட்சிகளைச் சேர்ந்த 12 பேர் மந்திரிகளாக உள்ளார்கள். ஆனால், பீகார் மாநிலத்தை ஆளுகின்ற அக்கட்சியின் தலைவர், மத்தியிலே மந்திரியாக இருந்துகொண்டு 3 ஆயிரம் கோடி ரூபாயை தன்னுடைய மாநிலத்திற்குப் பெற்றிருக்கின்றார். ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கி, பெருமாளை பெத்த பெருமாளாக்கும் கருணாநிதி, பேரனை மந்திரி ஆக்குவதற்கு பகீரத முயற்சிகளைச் செய்த திருவாளர் கருணாநிதி, தமிழகத்திற்குப் போதிய நிதியைப் பெற்றுத் தருவதில் அக்கறை காட்டாதது ஏன்? 11 டி.வி. சேனல்களை 14 டி.வி. சேனல்களாக்க முயற்சிக்கின்ற கூட்டம், தமிழக வளர்ச்சிக்கு இதுவரையில் அவர்கள் காட்டிய அக்கறை என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையற்ற செலவுகளைக் குறைத்து, அத்தியாவசிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கி, பல நல்ல திட்டங்களைச் செயலாக்கி வரும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி, சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்காக கடந்த 55 ஆண்டு கால வரலாற்றில் கண்டிராத வகையில்—குடிநீர்த் தட்டுப்பாட்டைச் சமாளிப்பதற்காக நாள்தோறும் சுமார் ஒரு கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு வந்தது—புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 720 கோடி செலவிலான புதிய வீராணம் திட்டத்தை இதே மாமன்றத்திலே கடந்த ஆண்டு அறிவித்தார். அப்படி அறிவிக்கப்படுகின்றபோது இந்தப் புதிய வீராணம் திட்டமானது நிறைவேறாது என்று இதே மாமன்றத்திலே கூக்குரலிட்டார்கள். அவர்களின் கற்பனைக் குதிரைகளுக்குக் கடிவாளம் போட்டு, வீராணம் திட்டத்தை நிறைவேற்றி, இன்று நாள் ஒன்றுக்கு சுமார் 7 கோடி லிட்டர் தண்ணீர் வீராணத்திலிருந்து சென்னை மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதனால், ஒரு நாள் குடிநீர் வழங்குவதற்குண்டாகிய செலவு ரூபாய் ஒரு கோடியே பத்து இலட்சத்திலிருந்து இன்றைக்கு ரூபாய் எழுபது இலட்சமாக குறைக்கப்பட்டிருக்கிறது. சென்னை மாநகரின் குடிநீர்ப் பஞ்சமும் தீர்க்கப்பட்டிருக்கிறது. இப்படி சென்னை மாநகர மக்களின் குடிநீர்ப் பஞ்சம் என்பது தொடர்கதையாக இருப்பதை அறிந்த புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதற்காகத்தான் கடல் நீரைக் குடிநீராக்கும் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவித்திருக்கின்றார்கள்.

[திரு. பி.கே. சேகர்பாபு] [2004 ஜூலை 23

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசித்த வயிற்றுக்குச் சோறு அளித்த விவசாயிகள் பட்டினியால் வாடக்கூடாது என்பதற்காக வேளாண்மைத் துறையில் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வியத்தகு சாதனை படைத்து வருகிறார்.

முற்பகல் 11–45

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் தே. குமாரதாஸ்) தலைமை)

பருவமழை பொய்த்துப் போன காலத்தில் குறைந்த நீரைக் கொண்டு அதிக வருவாய் தரும் பணப் பயிர்களைச் சாகுபடி செய்யும் திட்டங்களைச் செயல்படுத்தினார். விவசாயிகள் பயன் பெறும் வகையில் மலர்களை ஏற்றுமதி செய்வதற்காக ஓசூரில் 2.56 கோடி ரூபாய் செலவிலும், நீலகிரியில் 16 கோடி ரூபாய் செலவிலும் வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. 6 தென் மாவட்ட மண்டலங்களை உள்ளடக்கி தேனியில் ரூபாய் 25 கோடி மதிப்பில் மாம்பழ ஏற்றுமதிக்கென ஒரு வேளாண் மண்டலம் அமைக்கப்பட்டு வருகிறது. இப்படி நடப்பு ஆண்டில் வேளாண்மைக்காக 882.41 கோடி ரூபாய் திட்ட ஒதுக்கீடாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கது.

மாண்புமிகு பேரவை தற்காலிகத் தலைவர் அவர்களே, கங்கை, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை, குண்டாறு ஆகிய ஆறுகளை, தீபகற்ப நதி இணைப்புத் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொண்டு பணிகளை விரைவுபடுத்துமாறு நதிகள் இணைப்புக்கான பணிக் குழுத் தலைவர் திரு. சுரேஷ் பிரபுவிடம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கேட்டுக்கொண்டார். ஆனால் சமீபத்தில் அமைந்த தி.மு.க. அரசு, அதற்குண்டான காலக்கெடு முடிந்த பிறகு, அதை நீட்டிக்காமல் காழ்ப்புணர்ச்சியோடு அந்தக் குழுவையே கலைத்துவிட்டது. இப்படிப்பட்டவர்கள் இந்த நாட்டு விவசாயிகள் பற்றி எந்தக் கவலையும் படப்போவதில்லை. வெளிநாட்டுப் பங்கு மூலதனத்தை அதிகரிக்கச் செய்வதில் அக்கறை காட்டுபவர்கள் எதிர்காலத்தில் உண்ண உணவையும், குடிக்கக் குடிநீரையும் வெளிநாட்டிலிருந்தே இறக்குமதி செய்தாலும் ஆச்சரியப்பட வேண்டியதில்லை. அதற்கும் இங்கே ஜால்ரா அடிப்பவர்கள் வேக, வேகமாக தலையாட்டுவார்கள்.

“எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு”



2004 ஜூலை 23] [திரு. பி.கே. சேகர்பாபு]

என்ற பொய்யாமொழி வார்த்தையை மெய்யாக்கும் வகையில் அம்மா அவர்கள், ‘அனைவருக்கும் கல்வி’ என்பதைச் செயல்படுத்தும் வகையில் நடப்பாண்டில் வரவு–செலவுத் திட்டத்தில் 4,202.77 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கியிருக்கின்றார். இது வரவேற்கத்தக்கது. இந்த ஆண்டு நவம்பர் மாத இறுதிக்குள் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பதே இல்லாத நிலையை உருவாக்கும் வகையில் முதலமைச்சர் அம்மா அவர்கள் 22,817 ஆசிரியர் பணியிடங்களைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கின்றார். கடந்த 3 ஆண்டு காலத்தில் 22,178 ஆசிரியர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதை நினைவுகூர விரும்புகின்றேன். மேலும் பள்ளி இறுதி ஆண்டு படிக்கும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சீர்மரபினர் மாணவிகளுக்கு இலவச சைக்கிள் வழங்கும் திட்டத்தையும் அறிமுகப்படுத்தியிருக்கின்றார். எதிர்காலத் தமிழகம், கல்லாமை என்ற நிலை இல்லாமை என்ற சொற்றொடருக்கு ஏற்ப உருவாக வேண்டும் என்பதே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இலட்சியம் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தற்காலிகத் தலைவர் அவர்களே, சில தினங்களுக்கு முன் கும்பகோணத்தில் துரதிர்ஷ்டவசமாக ஒரு பள்ளிக் கூரையில் பிடித்த தீ 93 இளம் பிஞ்சுகளின் உயிரைப் பறித்த துயரச் சம்பவம் நடந்தது. இந்தத் துயரச் சம்பவத்தைக் கேள்விப்பட்டவுடன் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரிதும் கவலையடைந்தார்கள். அந்தத் தகவல் கிடைத்தவுடன் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆறுதல் கூறி, இத்தகைய கொடுஞ்செயல் எங்கும் இனி நிகழக்கூடாது என்ற அடிப்படையில், கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்தார். அதில்கூட ஆதாயம் தேட முயன்றார்கள் பல பெரிய மனிதர்கள். சுயநலம், பொதுநலத்தை வென்றுவிடும் என்பதை நாம் இப்பொழுது பார்க்க முடிகிறது.

தருமபுரி மாவட்டத்தில் ஒரு சமுதாயத்திற்குச் சொந்தமான அறக்கட்டளை மூலம் நடத்தப்படுகின்ற ஒரு பள்ளி. இது முழுக்க, முழுக்க ஓலைக் கூரைகளால் அமைக்கப்பட்டுள்ளது. அதன் கூரையை மாற்றுவதற்கு அந்த நிறுவனத் தலைவர் அரசு கொடுத்த கால அவகாசம் போதாது என்கிறார். பல்கலைக்கழகத்திற்குப் பெயர் வைப்பதற்கு முன்பே நிதி வசூல் செய்து நிலம் வாங்கியவர் பள்ளிக்கூடத்திற்கு நிரந்தரமான

[திரு. பி.கே. சேகர்பாபு] [2004 ஜூலை 23

கூரை வேய்வதற்கு நிதி இல்லை என்கிறார். இதுதான் தைலாபுரத்து அரசியல் வேதாந்திகளுடைய இன்றைய நிலை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களின் வாழ்வில் பொருளாதார முன்னேற்றம் ஏற்பட்டால்தான் பெண் உரிமை நிலைநாட்டப்படும் என்பதை முன்னிலைப்படுத்தி பெண்ணினப் பேரொளி டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1992 ஆம் ஆண்டு தொடங்கிய சுய உதவிக் குழு இயக்கம் புது உத்வேகத்தை அடைந்து, தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பரவி உள்ளது. முன்னர் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பெண்கள் இப்பொழுது ஆண்களுக்குச் சரிசமமாகத் தலைநிமிர்ந்து நிற்கின்ற காட்சியைத் தமிழகம் காண்கின்றது. நடப்பு ஆண்டில் 5 இலட்சம் மகளிரைக் கூடுதலாகச் சேர்த்து மேலும் 25,000 சுய உதவிக் குழுக்கள் அமைப்பதற்கு ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். ஆண்களுக்கு நிகராகப் பங்கேற்று, சிறந்த முறையில் பெண்கள் சிறப்பாகச் செயல்படுவார்கள் என்பதும் இதனால் நிரூபிக்கப்படும்.

முற்பகல் 11–50

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இப்படி ஒவ்வொரு செயலிலும் எங்கள் தாய் எதிர்காலத்தை ஊடுருவிப் பார்க்கிறார்கள். மற்றவர்கள் நிகழ்காலத்தை, இலாபத்தை மட்டுமே பார்க்கிறார்கள். எங்கள் தாய் முடிவற்ற எதிர்காலத்தை ஒளிமயமாக்க உழைக்கிறார்கள். மற்றவர்கள் தங்கள் சுயநலத்திற்காகத் தந்திரத்தைக் கையாண்டு ஒரு நாளைய வெற்றிக்காக ஒட்டுமொத்தத் தமிழகத்தை இருளில் தள்ளப் பார்க்கிறார்கள். யார் சிறந்தவர்கள் என்பதை வருங்காலத்தின் தமிழக வரலாறு நிச்சயம் சொல்லும்; தர்மம்தான் மீண்டும், மீண்டும் என்றென்றும் வெல்லும் என்று கூறிக்கொண்டு, பொதுவாக தலைசிறந்த அறிவு என்னவென்றால், உறுதியாகத் தீர்மானித்தல் என்றான் மாவீரன் நெப்போலியன். எங்கள் தாய் எதையும் உறுதியாகத் தீர்மானிக்கும் ஆற்றல் பெற்றவர்கள். எத்தனை இடையூறுகள் ஏற்பட்டாலும், தமிழகத்தை முதன்மையான மாநிலமாக (மேசையைத் தட்டும் ஒலி) ஆக்கியே காட்டுவார்கள் என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொண்டு, நல்லதொரு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)



2004 ஜூலை 23]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** செல்வி சி. கனகதாரா.

***செல்வி சி. கனகதாரா:** மாண்புமிகு பேரவை மாற்றுத் துணைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாற்றுத் துணைத் தலைவர் என்றுதானே சொன்னீர்கள்? ஏமாற்றுத் தலைவர் என்று சொல்லாமல் இருந்தால் நல்லது. (சிரிப்பு)

**செல்வி சி. கனகதாரா:** உலகத்தில் வாழ்கின்ற கடையேழு வள்ளல்களையும் எளிதாக வென்றிட்ட எங்கள் தாயே, வாழ்கின்ற வள்ளலே, தர்மத்தின் தலைவியே, நீவீர் அமர்ந்திருக்கும் திசை நோக்கி வணங்கி முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்ற என்னைப் பணித்தமைக்கு தங்களுக்கு நன்றி கூறி, வேலூர் மாவட்டத்திலே பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் என்னை வெற்றி பெறச் செய்த என் தொகுதி மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு எனது உரையினைத் துவங்குகின்றேன்.

மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கையைப் பல முறை படித்துப் பார்த்தேன். இந்த நிதிநிலை அறிக்கையானது, வாடுகின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், ஏழைகளே இல்லை என்ற ஏற்றத்தினைக் கண்டிடவும், ஏழையெளிய மக்களின் நலத்தினைக் காத்திடவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சிந்தனையில் உதித்திட்ட ஒரு சிந்தனை மலர் ஆகும் என்பதைப் பெருமையோடு சுட்டிக்காட்ட இந்த மாமன்றத்திலே கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து 3 ஆண்டுகளாகப் பருவ மழை பொய்த்து, அதன் விளைவாக 2002–2003 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கடுமையான வறட்சியின் காரணமாகத் தமிழகத்தினுடைய நிதிநிலை மிகவும் சீரழிந்து போனது. இந்த அபாயகரமான சிக்கல் ஏற்பட்டபோதிலும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் சீர்மிகு தலைமையில் சட்டம், ஒழுங்கை நிர்வகிப்பதில் அவர்கள் மேற்கொண்ட தனிக் கவனத்தால் தமிழகம் இன்றைக்கும் இடர்ப்பாடற்ற ஓர் அமைதி நிலவும் பூங்காவாகப் போற்றப்பட்டு வருகிறது என்பதை மிகப் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேபோல இந்த நிதிநிலை அறிக்கையிலே அனைவருக்கும் வளர்ச்சி என்பதே முக்கியக் குறிக்கோளாக முன் வைக்கப்பட்டிருக்கிறது. 2003–2004 ஆம் ஆண்டுக்கான வளர்ச்சியில் அனைத்துத் துறைகளிலுமே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாய்ப்புகளை வழங்கி, ஊக்கம் உள்ளதாக இருப்பதை அறிந்து, அனைத்துத் தரப்பு மக்களும் மகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறார்கள். 2003–2004 ஆம் ஆண்டில் மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பின் வளர்ச்சியிலே 2002–2003 ஆம் ஆண்டில் இருப்பதைவிடத் தற்போது விலை நிலவர அடிப்படையில் 7.16 சதவிகிதமாக இருக்கிறது என்பதையும், வறட்சியின் சீரழிவினால் ஏற்பட்ட தமிழகத்தின் பொருளாதாரத்தை மீண்டும் தூக்கி உயர்த்தி அமைத்துள்ளார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விழைகிறேன்.

முற்பகல் 11–55

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கழனியிலே காலூன்றி கரம் நோக உழைக்கும் அனைத்து விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கிட்ட தானைத் தலைவி, தங்கத் தலைவியை உளமாரப் போற்றுகின்றேன்.

தமிழகத்திலுள்ள அனைத்து கிராமங்களிலும் முழுமையான வளர்ச்சியினை உறுதி செய்யும் நோக்கமுடன் மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்ட 'நமது கிராமம்' என்று பெயரிடப்பட்ட புதியதொரு திட்டத்தை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கின்றேன். இந்தத் திட்டம் சுமார் 200 கோடி ரூபாய் செலவில், இந்தத் துணிகர முயற்சி, செயல்படுத்தப்படும் என்பதையும் பெருமையுடன் சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

அதிகார உரிமை மற்றும் வறுமைக் குறைப்பு, ஒட்டுமொத்த ஊரகக் கட்டமைப்பு மேம்பாடு, ஏழை எளியோருக்கான வீட்டு வசதி, ஊரகச் சாலைகளின் மேம்பாடு, ஊரகத்துப் பகுதிகளில் குடிநீர் வழங்கல், ஊரகத்தின் வேலைவாய்ப்பு, நீர்நிலைகளைப் பராமரிப்பதில் அதிகக் கவனம்; புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு வித்திட்டது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மிகப் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையில் மிகவும் குறிப்பிடத்தக்க ஒன்று, நெடுஞ்சாலைகள் மேம்பாடு. தற்போது, திட்டமிட்ட முறையிலே மேற்கொள்ளப்பட்டு வருவதையும், தமிழ்நாடு சாலைத் துறைக்கு மட்டும் ரூபாய் 2,160 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் காண்கின்றபொழுது மனம் மிக்க மகிழ்ச்சி அடைகிறது.

அதேபோல, ஆற்காடு மற்றும் திருவாரூருக்கு இடையே 399 கிலோ மீட்டர் நீளத்திற்கும், நாகப்பட்டினத்திற்கும், தூத்துக்குடிக்கும் இடையே 330 கிலோ மீட்டர் நீளத்திற்கும் மாநில நெடுஞ்சாலைகள் அமைக்கவும், மாநிலம் மற்றும் மாவட்டங்களிலுள்ள சாலைகளைத் தரம் உயர்த்திடவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு புதியதொரு திட்டத்தை உருவாக்கித் தந்திருக்கிறது என்பதைப் பார்க்கின்றபொழுது, கிராமப்புறச் சாலைகள், நகர்ப்புறச் சாலைகள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் நூற்றுக்கு நூறு சதவிகிதம் விரிவுபடுத்தப்பட்டு, செப்பனிடப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு வருகிறது என்பதை நான் பணிந்து தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிகக் கடுமையான வறட்சிக் காலத்தில்கூட, எங்கள் இனிய தலைவியின் ஆட்சியிலே, தமிழகத்திலே உள்ள 28,000–க்கும் மேற்பட்ட நியாய விலைக் கடைகளின் மூலமாக எவ்விதத் தங்குதடையுமின்றி பொது விநியோகத் திட்டத்தின் மூலமாக அரிசி கிலோ ஒன்றுக்கு மூன்று ரூபாய் ஐம்பது பைசா என்ற விலைக்கே நிர்ணயம் செய்தமையை நான் மனமார வாழ்த்திப் போற்றுகின்றேன்.

தமிழகத்தின் பஞ்சத்தைப் போக்க வந்த எங்கள் பாருலக ஜான்சி ராணியாம், ஏழைகளின் ஈர மழையாம், எதிரிகளின் தலையினைச் சாய்த்திட்ட இடி முழக்கமாம் எங்கள் தங்கத் தலைவி, தானைத் தலைவி, பருவ மழை பொய்த்துவிட்ட போதிலும், வருண பகவான் நம்மை வஞ்சித்திட்ட போதிலும், 2003 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் ஏறத்தாழ 10 இலட்சம் நிலமற்ற ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்பத்திற்கு 30 கிலோ வீதம் இலவசமாக அரிசி வழங்கிய ஒரே தலைவி, உன்னதத் தலைவி, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா ஆவார்கள் என்பதை இந்த நேரத்திலே, இந்தத் தருணத்திலே மிகப் பெருமையோடு சுட்டிக்காட்ட விழைகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'ஏற்றது ஒரு கருத்தை எனது உள்ளம் என்றால்
எவர் வரினும் நில்லேன், அஞ்சேன்.'

இதுவே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தாரக மந்திரமாகும்.

இப்போது, டில்லியிலே 13 கட்சிகளின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி என்ற பெயரிலே ஓர் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஆட்சி, காங்கிரஸ் கட்சி மத்தியிலே செயல்பட்டுக் கொண்டிருக்கிறதா, செயல்படாமல் இருக்கிறதா என்பது எவருக்கும் புரியாத புதிராக இருக்கிறது. **

நண்பகல் 12–00

தமிழகத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் முற்றிலும் இலவச மின்சாரம் பெற்றிடத் தற்போது புரட்சித் தலைவி அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதன்படி விவசாய பம்புசெட்டுகளுக்கும், குடிசைவாழ் மக்களுக்கும் தமிழ்நாடு மின்சார ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை முழுமையாக, தமிழக அரசே நேரடியாகச் செலுத்திடும் என்பதையும், இனி வரும் காலங்களில் விவசாய பம்புசெட்டுகளுக்கான இணைப்புகளுக்கும் குடிசைகளுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டியதில்லை என்பதையும் தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இதை ஏழை, எளிய மக்கள் அனைவரும் பாராட்டி வரவேற்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ள மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த நிதிநிலை அறிக்கையில் சத்துணவு கண்ட சரித்திர நாயகன், சொல்லால் அடித்தால் சுருங்கிப் போகும் என்று கருதி, கல்லால் அடித்தால் கரிந்து போகும் என்று கருதி சத்துணவுக்கு எம்.ஜி.ஆர். பெயரை இட்ட எங்கள் புரட்சித் தலைவி, புரட்சித் தலைவரின் பொன்மனத் தலைவியாம் நன்மனத் தலைவி தமிழ்நாட்டிற்கு அன்னம் பாலிக்கும் எங்கள் அமுத சுரபியாம்; ஒவ்வொரு குழந்தைக்கும் சரிவிகித சத்துணவு பெறவேண்டி, வாரத்தில் ஒரு நாள் முட்டையும், வாரத்தில் ஒரு நாள் உருளைக்கிழங்கும், மேலும் இரண்டு நாள் பருப்பு வகைகளும் வழங்கிட புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இதைத் தமிழகமே பாராட்டுகிறது. ஏழை, எளிய மக்கள் உள்ளத்திலே பால் வார்த்ததைப்போல இருக்கிறது. ஆனால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் முட்டை வாங்கினார்கள். முட்டை வாங்கியதிலே ஊழல். முட்டையை லாரிகளிலே எடுத்துக் கொண்டு வந்ததிலே ஊழல். முட்டையை விற்றதிலே ஊழல். முட்டையை வீட்டுக்கு எடுத்துக் கொண்டு போய்ப் போட்டதிலே ஊழல்; ஊழலாக இருந்தது.

ஆகவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அன்னைக்கு அன்னையாய், ஆண்டாண்டு காலம் ஆள வேண்டும், பாரும் பைந்தமிழும் உள்ளவரை, பாரோர் வியக்க, தாயாய், தமிழாய், தரணியில் வந்திட்ட எங்கள் பொன்மனத் தலைவி ஒருவரே காவிரி டெல்டாவைக் காப்பாற்றிய கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்து கொண்டு வருகிறார் என்பதை இந்த நேரத்திலே நான் பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பசி வந்தால் பத்தும் பறந்து போகும் என்று சொல்வார்கள். என்றாலும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் எனது உரையைத் தொடர அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பயங்கரவாதிகள் கையில் சிக்குண்டு சீரழிந்து தவித்த தமிழகத்தைக் காப்பாற்ற வேண்டி, தன் உயிரையும் பணயம் வைத்து, மாவீரன் அலெக்சாண்டரைப் போன்று, அஞ்சா நெஞ்சன் மாவீரன் நெப்போலியனைப் போன்று, தமிழகத்தை அமைதிப் பூங்காவாக்கி, தீவிரவாதம், அது எத்தகைய வடிவில் வந்தாலும் இரும்புக் கரம் கொண்டு தமிழக முதல்வர் அவர்கள் அதைத் தடுத்திட்டார் என்பதையும் எவரேனும் மறுத்திட முடியுமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடித்தளத்து மக்களைக் காத்து, அறிவியல் தமிழை வளர்த்து, வான் மழை போற்றும் தேசியத் தலைவியாம் எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையிலே தமிழக மக்களுடைய தேவையை உணர்ந்து, எதிர்பார்க்கப்படும் திட்டங்களை நிறைவேற்றுகின்ற அரசாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளமைக்கு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு விட்டுச் சென்ற கடுமையான நிதிச் சீரழிவின் காரணமாக தமிழக நிதிநிலை மோசமாகப் பாதிக்கப்பட்டபோதிலும், இந்தச் சீரழிவை சரிப்படுத்தும் அதே

வேளையில் மக்கள் நலன் காக்கப்பட வேண்டும் என்பதே புரட்சித் தலைவியுடைய உன்னத நோக்கமாக இருந்தது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்றார் பேரறிஞர் அண்ணா. இவர்களுக்கோ எதையும் தாங்காத இதயம்தான் உள்ளது. காரணம், அளவிற்கு மிஞ்சிய பதவி ஆசை. ஒன்று, பதவி தனக்கு வேண்டும். இல்லையென்றால் தன் குடும்பத்திற்குப் பதவி வேண்டும். இதுவே பதவி பகாசுரர்களின் அரசியல் சித்தாந்தமாக இருந்து கொண்டு வருகிறது.

*பிற்பகல் 12–05*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சி நண்பர்கள் கூறுகின்றபோது, இந்த மாமன்றத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த புகழேந்தி அவர்கள் இல்லை என்று சொன்னாலும்—இந்த நிதிநிலை அறிக்கையைப் பார்த்து அது மணக்காத காகிதப் பூ என்று சொன்னார்— இந்த நேரத்தில் அவருக்கு நான் ஒன்றைச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். எதிர்க்கட்சித் தலைவர்கள் பாலைவனத்திலே நின்றுகொண்டு பார்த்தால் இந்தப் பூஞ்சோலையோ, அங்கு பூத்துக் குலுங்கும் வண்ண, வண்ண மலர்களோ அவர்கள் கண்களுக்குத் தெரியாது. அங்கே பொங்கி வருகின்ற நீருற்றுகளும் அவர்கள் கண்களுக்குத் தெரிவதில்லை. அங்கே அவர்களுக்குத் தெரிவதெல்லாம் கானல் நீர் ஒன்றுதான். ஆகவே, மொத்தத்தில் சுருக்கமாகக் கூறுமிடத்து, இந்த நிதிநிலை அறிக்கையானது தங்கக் குடத்தின் மேல் வைத்திட்ட வைர மணி பதித்த ஒரு நல்ல பொக்கிஷம், பெட்டகம் என்பதைக் கூறிக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியினுடைய பிரச்சினைகளை இந்த மாமன்றத்திலே பல முறை எடுத்து வைத்திருந்த போதிலும், மீண்டும் எனது தொகுதியினுடைய பிரச்சினைகளை இந்த மாமன்றத்தில் வைக்க முன்வருகின்றேன்.

இந்தியாவிலே தமிழகத்தை முதன்மை மாநிலமாக மாற்றிக் காட்டுவேன் என்று சூளுரைத்தார் எங்கள் அன்னை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேலூர் மாநகருக்கு வருகை தந்தபோது பத்தரப்பள்ளி அணையைக் கட்டுவதற்காகக் கால்கோள் நாட்டிவிட்டு வந்துவிட்டார்கள். அந்தச் சீரான திட்டத்தினை, சீர்மிகு திட்டத்தினை, உடனடியாக, போர்க்கால அடிப்படையிலே செய்து



முடிக்க வேண்டுமென்று மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்று கேட்டால், என்னுடைய தொகுதியிலே தோல் பதனிடும் தொழிற்சாலைகள் யாவும் மூடிக் கிடக்கின்றன. அதற்கு அடுத்தாற்போல் உள்ள பீடி செய்யும் தொழிற்சாலைகள் நலிவுற்று இருக்கின்றன. 5,000 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள சிறுகுறு விவசாய மக்களின் ஜீவாதார உரிமையாகும் இது. எனது தொகுதியை பொன் விளையும் பூமியாக மாற்றுவதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணைக்கிணங்க பத்தரப்பள்ளி அணையானது உடனடியாகக் கட்டிக் கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இந்த மாமன்றத்திலே, அன்பின் வடிவம், கருணையின் உருவம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பெரியகம்மேஸ்வரம்–சாத்தம்பாக்கம் அருகில், பாலாற்றுக் கரையின்மீது புதியதொரு பாலத்தைக் கட்டி முடிக்க ஆணை வழங்கியுள்ளார்கள். மழைக் காலங்களில் போக்குவரத்து மிகவும் பாதிக்கப்படுகிறது. கிராமத்துப் பெண்கள் வேலை செய்வதற்கு வெளியூர் போக முடியாத நிலையில் இருந்து வருகிறார்கள். ஆகவே மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அம்மாவின் ஆணையேற்று பெரியகம்மேஸ்வரம்–சாத்தம்பாக்கம் அருகில் புதியதொரு மேம்பாலத்தை கட்டித் தர வேண்டுமென்று இரு கரம் கூப்பி வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு என்னுடைய தொகுதியினை தற்போது புரட்சித் தலைவி அம்மா அவர்கள் Third Grade Municipality–ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அதற்காக எனது தொகுதி மக்களும், நானும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானு கோடி நன்றியினைப் பொற்பாதங்களில் இட்டு சமர்ப்பித்துக்கொள்கிறோம். பாதாளச் சாக்கடை அமைத்து, கழிவு நீர்க் கால்வாய்களைச் சீரமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

சென்று விடுமா திங்கள், தீராத பெரும்புயல், வந்துவிடும் அனலாக, கொன்றுவிடும் புழுவாக வெந்த புண்ணில் வேல் எறிவது போல் இருந்தது. 38 வருட காலம் ஓர் ஏழை ஆசிரியையாகவும், மூன்று இலட்சம் ஆசிரியப் பெருமக்களுக்கு ஆசிரியப் பிரதிநிதியாகவும் இருந்து விட்டேன். அந்தப் பொன்னான காலத்திலே இதுபோன்ற ஒரு கொடிய தீயினைக் கண்ணாலும் பார்த்தது இல்லை; கேட்டதும் இல்லை. ஆனாலும் உங்கள்

முன்னால், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஓவென்று கதறி அழ வேண்டும்போல் தோன்றுகிறது.

எங்கள் பேரணாம்பட்டிலுள்ள ஆதிதிராவிட மேல்நிலைப் பள்ளியை, இட நெருக்கடியைத் தவிர்க்க ஆண்கள் மேல்நிலைப் பள்ளியாகவும், பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகவும் இரண்டாகப் பிரிக்கவும், அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்கும், அழிஞ்சிக்குப்பத்திலுள்ள உயர்நிலைப் பள்ளிக்கும் நபார்டு வங்கித் திட்டத்தோடு கூடுதல் கட்டடங்களைக் கட்டிக் கொடுக்க எங்களுக்கு உதவி புரிய வேண்டுமென்றும் இந்த நேரத்திலே இரு கரம் கூப்பி வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

இதுகாறும் எனது தொகுதியிலே பெண்களுக்கென்று கல்லூரி இல்லாமல் இருக்கிறது. அறியாமை, இயலாமை ஆகியவற்றைப் போக்க வந்த எங்கள் புரட்சித் தலைவியின் பொற்கால ஆட்சியிலே பேரணாம்பட்டுக்கு ஒரு பெண்கள் கல்லூரியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பசி வந்தால் பத்தும் பறந்துபோகும் என்ற சூழ்நிலையிலேயும் இதுகாறும் எனது உரையினைக் கேட்டு அமர்ந்திருந்த அனைவருக்கும் எனது நன்றியினைக் கூறி, விடைபெற விழைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்.

*பிற்பகல் 12–10*

***திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2001, மே திங்களிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றபோது, கஜானா காலி, சிரழிந்த நிருவாகம் என்றிருந்த தமிழகத்தை, கசப்பான மருந்து கொடுத்து நோயாளிகளைச் சரி செய்வதுபோல கடுமையான நடவடிக்கைகளால் இன்று தமிழகம் முதன்மை மாநிலமாக முன்னோக்கிச் செல்ல, இரவு, பகலாக அயராது உழைத்து வரும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, 2004–2005 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கைமீது எனது கருத்துகளைப் பதிய வைக்க விரும்புகிறேன்.

கடந்த 3 ஆண்டுகளாக ஜாதிக் கலவரம், இனக் கலவரம் ஏதுமின்றி, மக்கள் பாதுகாப்பாக வாழ மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி





அம்மா அவர்கள், காவல் துறையை நவீனப்படுத்தியும், பலப்படுத்தியும் வந்துள்ளார்கள். 2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே காவல் துறைக்கு ரூ.1327.15 கோடியும், நவீனப்படுத்துவதற்காக ரூ.112 கோடியும் ஒதுக்கியுள்ளதை நான் பெரிதும் வரவேற்கின்றேன். காவல் துறையுடன் பின்னிப் பிணைந்துள்ள சிறைத் துறை மற்றும் நீதித் துறைக்கு எந்த ஓர் அரசும் செய்திராத சீர்திருத்த நடவடிக்கைக்கும், கணினிமயமாக்கலுக்கும் நிதி ஒதுக்கீடு செய்துள்ளதையும் நான் பெரிதும் வரவேற்கிறேன். விவசாயிகள் நிறைந்த மாநிலமான நம்முடைய தமிழகத்தைத் தலைசிறந்த வேளாண் உற்பத்தியில் முதலிடம் நோக்கிப் பீடுநடை போட வைத்ததற்காகவும், விவசாயிகளுக்கு 60 கோடி வரித் தள்ளுபடி செய்தும், 100 ஏக்கருக்கும் மேற்பட்ட ஆயக்கட்டைக் கொண்ட ஏரிகளைத் தூர்வாருவதற்காக ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்தும், தரிசு நில மேம்பாடு திட்டம், சொட்டு நீர்ப்பாசனத் திட்டம், நீர்வரத்து வாய்க்கால்களைத் தூர் வாரி, விஞ்ஞான ரீதியாக நிலத்தடி நீரை உயர்த்த நடவடிக்கை எடுத்து வருவதையும் பொது மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

மக்களிடையே மழை நீரைச் சேமிக்க வேண்டுமென்ற ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தி, மக்களிடையே பெரியதொரு விழிப்புணர்வையும், மாற்றத்தையும் ஏற்படுத்தி இருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

போக்குவரத்துச் சாலைகள் நன்றாக இருந்தால்தான், ஒரு நாட்டின் பொருளாதாரம் மேன்மையடையும் என்கின்ற கருத்தின் அடிப்படையிலே 6,492 கிலோ மீட்டர் சாலைகளை மேம்படுத்துவதற்காக ரூ.336.05 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை நான் பெரிதும் வரவேற்கின்றேன். சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்று வரை ஒட்டுமொத்தமாக இந்த அளவுக்கு எந்த ஓர் ஆட்சியிலும் சாலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து மேம்பாடு செய்யவில்லை என்பதை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், என் தொகுதியை எடுத்துக் கொண்டாலே போதும். மாண்புமிகு அம்மாவினுடைய அரசு நிதி ஒதுக்கீடு செய்து இன்றைக்கு 80 சதவிகித சாலைகளில் பணிகள் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்திலே என்னுடைய தொகுதி மக்கள் சார்பாகவும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கிராமப்புறங்களை மேம்படுத்த வேண்டுமென்ற அரசினுடைய எண்ணத்திற்கு மற்றொரு உதாரணம், கிராமப்புறச் சாலைகளை மேம்படுத்துவதற்காக ரூ.300 கோடி ஒதுக்கியுள்ளதை மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். அதே நேரத்தில் சாலைகளைப் பராமரிப்பதற்காக இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ.413 கோடி ஒதுக்கியுள்ளதையும் மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற முதுமொழிக்கேற்ப, மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, சுகாதாரத் துறையை மேம்படுத்த வேண்டுமென்பதற்காக நிதிநிலை அறிக்கையிலே இந்த நிதியாண்டிலே ரூ.500 கோடி திட்டத்தை உலக வங்கியுடன் சேர்ந்து செயல்படுத்த உள்ளதை நான் பெரிதும் வரவேற்கிறேன். முதன்முதலாக ஆதிதிராவிடர் கோயில்களைப் புனரமைக்க வேண்டுமென்பதற்காக, மிகவும் பின்தங்கிய நிலையிலே இருக்கின்ற அந்த மக்களுடைய வாழ்க்கைத் திறனை உயர்த்துவதற்காக 6,000 திருக்கோயில்களுக்கு தலா ரூபாய் 25,000 ஒதுக்கியுள்ளதை நான் பெருமனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் என்னுடைய தொகுதிக்கு உட்பட்ட பகுதியிலே 23 கோயில்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தந்திருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுக்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சார்பாக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். கிராம மக்களின் வளர்ச்சியே தமிழகத்தின் வளர்ச்சி என முழுமூச்சுடன் அயராது உழைத்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய எண்ணத்தில் உதித்த திட்டம்தான் 'நமது கிராமத்' திட்டம். தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமமும் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் காணுவதற்கும், ஜனநாயக அதிகாரப் பகிர்வு மற்றும் பங்கேற்பு முறையில் அமைந்த திட்டம்தான் இந்த 'நமது கிராமத்' திட்டம். இதற்காக, கடும் நிதி நெருக்கடியிலும் ரூபாய் 200 கோடி செலவு செய்து இத்திட்டத்தை அமல்படுத்த முதல் தவணையாக ரூபாய் 52.21 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதைக் கிராம மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

*பிற்பகல் 12–15*

வேளாண்மையையே பிரதானத் தொழிலாகக் கொண்ட விவசாயிகள் பயன்படுத்தும் மின் மோட்டார்கள் குறைந்த மின் அழுத்தத்தால் பாதிக்கப்படுவதைத் தடுக்க, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை





அறிக்கையிலே ஊரகப் பகுதிகளில் மின் வழங்கல் தரத்தை மேம்படுத்த 22 மின் நிலையங்களில் உள்ள மின் மாற்றிகளின் திறனை உயர்த்தி, 2,172 புதிய மின் மாற்றிகளை நிறுவிடவும், இந்த நிதிநிலை அறிக்கையிலே 192.58 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது, நாட்டினுடைய நலன் ஒன்றே தனது குறிக்கோள் என மீண்டும் நிரூபித்திருக்கின்ற வகையிலே இந்தச் செயல்பாடுகள் இருக்கின்றன என்பதை விவசாய மக்களின் கருத்தாக இங்கே நான் பதிய வைக்க விரும்புகின்றேன்.

வருடத்திற்கு 40,000 விவசாய மின் இணைப்புகள் 1996 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு வந்தது. ஆனால், முந்தைய தி.மு.க. அரசு முற்றிலும் மின் இணைப்பு வழங்காமல் விட்டுவிட்டது. 1,60,000 விவசாயிகளை தி.மு.க. அரசு ஏமாற்றியது. இந்த அவல நிலையையெல்லாம் போக்கி மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு 45,000 புதிய மின் இணைப்புகள் வழங்கிட உறுதி செய்துள்ளதை விவசாயிகள் பெரிதும் வரவேற்கின்றனர்.

கிராம மக்களின் வேலைவாய்ப்பைப் பெருக்குகின்ற வகையிலும், கிராமப்புறத்திலே புதிய தொழில்களைத் தொடங்குகின்ற வகையிலும் அரசால் ஏற்படுத்தப்பட்ட புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே 20 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை நான் பெரிதும் வரவேற்கின்றேன்.

தமிழகம் முதலிடம் நோக்கிச் செல்லும் பாதைக்கு வழி வகுத்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும் இந்த நேரத்திலே காணிக்கையாகச் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏழை எளியோரையும், நலிந்தோரையும் ஏற்றமுறச் செய்ய அயராது உழைக்கும் கழக அரசின் மைல் கல்லாக வேளாண் ஏற்றுமதி மண்டலங்களை ஏற்படுத்தி, ஓசூரில் வேளாண் உற்பத்தி மண்டலம் அமைப்பதற்காக ரூபாய் 25 கோடியும், நீலகிரியில் ரூபாய் 11 கோடியும், தேனி மாவட்டத்தில் ரூபாய் 25 கோடியும், நிலக்கோட்டையிலே உணவுப் பூங்கா அமைக்க 13 கோடி ரூபாயும், மஞ்சள் வணிக வளாகம் அமைப்பதற்காக ரூபாய் 36.32 கோடியும் ஒதுக்கியுள்ளதை விவசாயிகள் பெரிதும் வரவேற்கின்றனர். ஒட்டுமொத்தத்திலே வேளாண்மைத் துறைக்காக 882.41 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதை நான் மனதார வரவேற்கின்றேன்.

பெண்ணுரிமைக்கு உதாரணமாகத் திகழும் மாண்புமிகு அம்மா அவர்கள், தாயின் பெயரை, குழந்தைகளுக்கு initial–ஆகப் போடலாம்

என்ற உரிமையைப் பெற்றுத் தந்து, 33 சதவிகித இட ஒதுக்கீடு கிடைப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வரும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, பெண்களின் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

1992–லே அம்மாவால் தொடங்கப்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்கள், இப்போது ஒரு மாபெரும் இயக்கமாக உருவாகி மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த நிதிநிலை அறிக்கையிலே மகளிர் திட்டத்திற்காக ரூபாய் 20 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளதை நான் வரவேற்கிறேன்.

மரம் இன்றி மழை இல்லை. எனவே, ஊரகச் சாலைகள் மற்றும் தேசிய, மாநில, மாவட்ட நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் மரக் கன்றுகளை நட்டு, கன்றுகளைப் பராமரிக்கும் பணியை மகளிர் குழுக்களிடம் ஒப்படைத்தால் மிகச் சிறப்பாகப் பராமரிப்பார்கள். இதை வனத் துறையின் ஒத்துழைப்புடன் செய்தால் மிக நன்றாக இருக்கும் என்ற கருத்தை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஒரு பெண் கல்வி கற்றால் ஒரு குடும்பமே கல்வி கற்றது போலாகும். அதேபோன்று, ஒரு குடும்பம் கல்வி கற்றால் ஒரு நாடே, ஒரு சமுதாயமே கல்வி அடைகின்ற வகையிலே, இப்போது பெண் கல்வியை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகப் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்காக இலவசமாக சைக்கிள் வழங்க ஆணையிட்டுள்ளதை மிகவும் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு ஒரு சிறிய கருத்து. இங்கே O.C. வகுப்பைச் சார்ந்த ஒரு சில மாணவிகளே ஒவ்வொரு பள்ளியிலும் இருக்கின்றார்கள். ஏற்கெனவே ஆதிதிராவிட மாணவிகளுக்கும், தற்போது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கும் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது. ஆகையினால், இந்த இதர வகுப்பினருக்கும் சைக்கிள் வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆவன செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–20

2004–2005 ஆம் ஆண்டில் 364 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், 30 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும்,





30 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்த, உயரிய இந்தத் திட்டத்தை அளித்த அம்மா அவர்களுக்கு இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகிறேன். 22 ஆயிரம் ஆசிரியப் பணியிடங்களை நிரப்ப உத்தரவிட்டும், காலத்தின் மாறுதலுக்கேற்ப, கிராமப்புற மாணவர்களுக்கு கணினித் திட்டத்தைக் கற்க வழி செய்திட்டதையும், பள்ளிகளுக்கு நிரந்தரக் கட்டடம் மற்றும் கல்விக்கான செலவிற்காக ரூ.4202.77 கோடி ஒதுக்கியுள்ளதையும் நான் பெரிதும் வரவேற்கிறேன்.

கடந்த மூன்று ஆண்டு காலமாக கடுமையான வறட்சியைச் சந்தித்தபோதும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏற்பட்ட குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்க 9,900 குடிநீர் வழங்கல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, 8,877 திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்று நிதிநிலை அறிக்கையிலே கூறப்பட்டுள்ளது. இதை நான் பெரிதளவில் வரவேற்கிறேன். மேலும், கிராமப்புறங்களிலே பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வழங்குவதற்கு நிதிநிலை அறிக்கையிலே 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, 6,500 குடியிருப்புகளுக்குக் குடிநீர் கிடைக்க வழிவகை செய்துள்ளதை நான் பெரிதும் வரவேற்கிறேன். மக்களின்மீது இந்த அரசு எந்த அளவிற்கு அக்கறை காட்டுகின்றது என்பதற்கு இந்த ஒரு எடுத்துக்காட்டே போதுமானதாகும்.

இந்த அளவிற்கு அரசு குடிநீருக்காக நிதி ஒதுக்கீடு செய்தும், கிராமப்புறங்களில் குடிநீர்ப் பற்றாக்குறை இருப்பதற்குக் காரணம், குடிதண்ணீர்த் திட்டங்களைப் பராமரிக்க வேண்டிய கிராம ஊராட்சிகள் இதில் அதிக அக்கறை காட்டாததுதான் காரணம். எனவே, கிராமப்புறக் குடிநீர் வழங்கல் மற்றும் பராமரித்தலை ஊராட்சி ஒன்றியங்களில் ஒப்படைத்தால் இந்தப் பணி சிறப்பாக இருக்கும் என்ற என்னுடைய கருத்தை இந்த நேரத்திலே வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தரம் உயர்ந்த 'பாலிகாட்' சேலைகள், வேட்டிகளை மீண்டும் வழங்க 173 கோடி ரூபாயை அரசு ஒதுக்கியுள்ளதற்காக மக்கள் அரசுக்குப் பாராட்டுதலைத் தெரிவித்திருக்கின்றார்கள். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த நிலமற்ற பெண்களுக்கு நிலம் வழங்குவதற்காக, 7 ஆயிரம் நிலமற்ற பெண்களுக்கு 70 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தப் புதிய திட்டத்தை அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு, மிகவும் பின்தங்கிய

[திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்] [2004 ஜூலை 23

நிலையிலே இருக்கின்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்கள்மீது எந்த அளவிற்கு அக்கறை இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைகின்றது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எல்லோரும் எல்லாமும் பெறவேண்டுமென்ற உயரிய எண்ணத்திலே மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் இலவச மின்சாரம்; அனைத்துக் குடும்பங்களுக்கும் அரிசி வழங்கப்படும் என இப்படிப் பல்வேறு சலுகைகளை மீண்டும் அறிவித்திருப்பது பொது மக்களிடையே பெரிய வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற எனது தொகுதியைச் சேர்ந்த மக்களுக்காக இந்த நேரத்திலே என்னுடைய கோரிக்கையை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என் தொகுதியிலே இருக்கின்ற மிகப் பெரிய ஏரி மேல்மலையனூர் ஏரி. வில்வாரணி அணைக்கட்டிலிருந்து, மேல்மலையனூருக்குக் கால்வாய் இருக்கிறது. அதைச் சீரமைத்து, இந்த மேல்மலையனூர் ஏரியை ஆழப்படுத்திக் கொடுத்தால், அங்குள்ள விவசாய மக்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும். அடுத்து, மொனப்பா ஏரி என்று ஒரு ஏரி இருக்கிறது. அந்த ஏரி இயற்கையிலேயே மலையின் இடையிலே அமைக்கப்பட்ட ஏரி. சிறிதளவு மழை பெய்தாலும்கூட, அரை மணி நேரத்திலே நீர் நிரம்பிவிடக்கூடிய ஒரு இயற்கைச் சூழலிலே அந்த ஏரி இருக்கிறது. இந்த இரண்டு ஏரிகளையும் தூர் வாரி, கரையை அகலப்படுத்திக் கொடுத்தால், விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த ஏரிகள் இரண்டையும் சீரமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்து தரவேண்டும். என் தொகுதியிலே உள்ள மக்கள் தொகையில் பாதிப் பேர் இதனால் பயனடைவார்கள் என்பதை என்னுடைய கருத்தாக இந்த நேரத்திலே கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மேல்மலையனூரிலே மிகவும் பிரசித்தி பெற்ற ஆலயம் மேல்மலையனூர் அங்காளம்மன் ஆலயம். அங்கே இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கின்றார்கள். அவர்கள் அங்கு வந்து தங்குவதற்குக் கட்டட வசதியோ அல்லது கழிவறை வசதிகளோ, குளியலறை வசதிகளோ போதுமானதாக இல்லை. மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் சுற்றுலாத் துறையின் வாயிலாகவோ அல்லது ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாகவோ இந்தக் கட்டட வசதியினை



2004 ஜூலை 23] [திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்]

அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டு, இந்த நேரத்திலே மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இதைக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, என்னுடைய தொகுதியின் வழியாகச் செல்லும் ஆற்காடு–விழுப்புரம் சாலையையும், அவலூர்பேட்டையிலிருந்து மேல்மலையனூர் செல்லும் சாலையையும் இரு வழிச் சாலைகளாக அமைத்துத் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கோரிக்கையாக வைக்கின்றேன். அடுத்து, நீண்ட நாள் கோரிக்கையாக, சென்ற இரண்டு முறைகூடச் சட்டமன்றத்திலே நான் கேட்டிருக்கின்றேன். இலட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்கிறார்கள். ஆலயத்திற்கு வருகின்ற பக்தர்களுக்கு போதுமான பாதுகாப்பு வசதி இல்லை. அதற்காகக் காவல் நிலையம் வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களிடத்திலே தெரிவித்திருக்கிறேன். அவர்களும் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதனைப் பரிசீலித்து உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களிடத்தில் என்னுடைய பணிவான கோரிக்கையாக நான் வைத்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று அம்மா அவர்களுடைய அறிவிப்பிலே ஒன்றியத்திற்கு ஒரு மருத்துவமனை என்று அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய தொகுதியைச் சார்ந்த செஞ்சி ஒன்றியத்திலே அனந்தபுரம் கிராமத்திற்கு 30 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனையாக அறிவிக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே இந்த நேரத்திலே நான் கோரிக்கையாக வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–25

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்ற சொல்லுக்கேற்ப நமது இளைஞர்கள் இன்றைக்கு இந்தியா முழுவதும் சென்று, வேலைக்குச் செல்கின்றார்கள். குறிப்பாக இப்போது தமிழகத்திலிருந்து இராணுவத்திற்கு அதிக அளவிலே நமது இளைஞர்கள் துடிப்புடன் சேருவதற்கு வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மொழி ஒரு பிரச்சினையாக உள்ளதாக ஒரு இராணுவ அதிகாரி பத்திரிகையிலே பேட்டி கொடுத்திருந்தார். அதை நான் படித்துப் பார்த்தேன். இந்தி படிக்க வேண்டாம் என்று எதிர்ப்புத் தெரிவித்த தாத்தா ஒருவர் தன் பேரனுக்குப் பதவி வாங்கிக் கொடுத்து டெல்லிக்குச் சென்றிருந்தபோது, பேரன் பேசிய இந்தியைக் கேட்டு மனம் மகிழ்ந்ததை நான் பத்திரிகையிலே

[திருமதி தமிழ்மொழி ராஜதத்தன்] [2004 ஜூலை 23

படித்தேன். வசதி படைத்தவர்கள் வீட்டுப் பிள்ளைகள் இந்தி படித்து விடுகிறார்கள். வசதியற்ற படித்த ஏழை மாணவர்கள் இந்தியாவிலே பல மாநிலங்களுக்கு குறிப்பாக, டெல்லி, பம்பாய் போன்ற இடங்களுக்கு வேலைக்காகச் செல்லும்போது எல்லாம் மொழி ஒரு பிரச்சினையாக அவர்களுக்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்திவிடுகிறது. இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஏதாவது ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சொந்தங்களும். வாரிசுகளும் பதவிக்கு வரவேண்டும். மக்களைச் சந்திக்காமலேயே பதவிக்கு வருவது, அதிக வருவாய் உள்ள இலாகாக்களைப் பெற பேரம் பேசுவதிலும், சண்டையிடுவதிலும் காட்டுகின்ற அக்கறை, மக்கள் நலனுக்காகக் குரல் கொடுக்க எங்கே போய்விட்டது என்று தெரியவில்லை. மக்கள் இதைப் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். பல வளமான இலாகாக்களைப் பெற்ற அமைச்சர்கள் தங்களுடைய சுய இலாபத்திற்காக, அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக, தமிழக முதல்வர் எடுக்கின்ற அத்தனை மக்கள் நலத் திட்டங்களுக்கும் முட்டுக்கட்டையாக எதிர்ப்புத் தெரிவிப்பதும், செயல்பட விடாமல் முடக்குவதையுமே மக்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். கண்டிப்பாக இதற்கு மக்கள் ஒரு நாளைக்கு பதிலடி கொடுக்கத்தான் போகிறார்கள். விரைவில் அந்தக் காலமும் வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

சொந்தங்களும், வாரிசுகளும் பதவிக்கு வர வேண்டுமென்று நினைக்கின்ற தலைவர்கள் மத்தியில், சாதாரணத் தொண்டன்கூட நாட்டை ஆளமுடியும் என்பதை நிரூபித்து, மக்களுக்காக நான், மக்களுக்காகத்தான் இந்த அரசு என்று இன்றைக்கு மக்களுக்காக வாழ்ந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவி அவர்கள் சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தலைமையின்கீழ் உள்ள ஆட்சியிலே, அவர்களின் தலைமையிலே, இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாகப் பணியாற்றுவதை நாங்கள் பெருமையாக இந்த நேரத்திலே நினைக்கின்றோம். இந்த 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது, பேசுவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். சக்திவேல் முருகன்.



2004 ஜூலை 23]

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்தில் பங்குகொள்ள வாய்ப்பு நல்கிய பேரவைத் தலைவரான தங்களுக்கும், இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கும் முதற்கண் எனது மேலான நன்றியை, பணிவுடன் வணங்கித் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே 1996–2001 ஆண்டு காலத்தில் கடந்த ஆட்சியாளர்கள் பொது நிதியை முறையாக நிர்வகிக்காமல், சுருக்கமாகச் சொல்வது என்றால், ஒரு பாட்டு நினைவுக்கு வருகிறது.

'வரவு எட்டணா, செலவு பத்தணா,
அதிகம் இரண்டணா, கடைசியில் துந்தணா'

என்று சொல்லுகின்ற அந்தப் பாட்டின் வரிகளுக்கு ஏற்ப, கடந்த ஆட்சியாளர்கள் 4,000 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட கடன் சுமையையும், அரசுப் பணியாளர்களுக்கு வழங்க வேண்டிய ரூபாய் 1,800 கோடியையும் அம்மா அவர்கள்அரசு மீது சுமத்தியும், நெய்வேலி லிக்னைட் உரிமத் தொகையை முன்கூட்டியே மார்ச் 2001 ஆம் ஆண்டிலேயே பெற்று, அதன் மூலம் ரூ.250 கோடியையும் இப்படிப் பல வழிகளில் அம்மாவின் அரசுமீது நிதிச் சுமையை ஏற்படுத்தி, செயலிழக்கச் செய்யும் சூழ்நிலையிலிருந்தது. அம்மா அவர்களின் உறுதியான முடிவாலும், முழுமையான ஈடுபாட்டுடன், தெளிவான சிந்தனையுடன் அரசின் நிதிநிலையைச் சீர்செய்து, மூன்றாண்டு காலத்திற்குள் குறிப்பிடத்தக்க நிதிநிலைமையில் திருப்பத்தை ஏற்படுத்தியது தன்னிகரற்ற வகையில் நிதிநிலைமையில் தலைவியாகிய அம்மா அவர்களின் ஆற்றல்மிகு தலைமையின்கீழ் இந்த அரசு சாதித்த சாதனையாகும்.

பிற்பகல் 12–30

மாண்புமிகு அம்மா அவர்களின் 15 அம்சத் திட்டத்தின் வாயிலாக, அனைவருக்கும் சுகாதாரமான மற்றும் வளமான வாழ்க்கைக்கான வாய்ப்புகளை அளிக்கும் வகையில் மாற்றுப் பயிர்த் திட்டம், நீரைத் திறமையாகப் பயன்படுத்துதல், துல்லிய பண்ணை முறை, புதிய பாசன ஆதாரங்களை உருவாக்குதல், வீட்டுப் பண்ணைத் திட்டத்தை ஊக்குவித்தல், மீனவ மேம்பாடு, தொழிலாளர் மேம்பாடு, ஊரகக் கட்டமைப்பு வசதி மேம்பாடு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு, 2003–2004 ஆம் ஆண்டில் காணப்பட்ட பொருளாதார

முன்னேற்றம் மேலும் வலுப்படுத்தப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதை வரவேற்கின்றேன். மேலும், தகவல் தொழில் நுட்பம், சுற்றுலா மேம்பாடு போன்றவற்றில் அம்மா அரசு பெற்றுள்ள core competence மேம்படுத்தப்படும் என்று அறிவித்துள்ளதை மனதார வரவேற்கிறேன். இந்த நிதிநிலை அறிக்கையில், வரவு–செலவுத் திட்டம் ரூ.8001 கோடி அளவிற்கான திட்டங்களை உள்ளடக்கியுள்ளது. 2001–2002 ஆம் ஆண்டு ஒதுக்கீடான ரூ.5,200 கோடியுடன் ஒப்பிடும்போது, மாநில அரசு வளர்ச்சிப் பணி குறித்த செலவு பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளது. இது அம்மா அரசின் மாபெரும் சாதனையாகும் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன்; மனதார வரவேற்கிறேன்.

கடந்த மூன்றாண்டு காலத்தில் மோசமான பருவ நிலையால் 2002–2003–ல் தமிழ்நாடு கண்ட வரலாறு காணாத வறட்சியை அம்மா அரசு தைரியமாக எதிர்கொண்டு விவசாயிகளுக்குப் பல்வேறு நிவாரணப் பணிகளை அளித்தது. குறிப்பாக, அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் விவசாயிகள் செலுத்த வேண்டிய வட்டி மற்றும் அபராத வட்டி ரூ.310.50 கோடி தொகையைத் தள்ளுபடி செய்யும் வகையில் அம்மா அவர்கள் அறிவித்தார்கள். இதற்காக அம்மாவின் அரசு 47.83 இலட்சம் விவசாயிகள் பயன்படும் வகையில் ரூ.324.32 கோடி நிதியுதவிகளை அம்மா அரசு அறிவித்துச் செயல்பட்டதன் மூலம், விவசாயிகளின் அடுத்த சாகுபடிக்கான பணியை மேற்கொள்ள உதவியதை யாராலும் மறுக்க முடியாது.

அம்மா அவர்களின் அரசு ரூ.341.92 கோடி செலவில் வேலைக்கு உணவுத் திட்டத்தின் மூலம் ஊரகப் பகுதிகளில் தேவையின் அடிப்படையில் வறிய குடும்பங்களுக்கு உணவு மற்றும் வேலைப் பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்துள்ளதை மனதாரப் பாராட்டுகிறேன்; வரவேற்கின்றேன். குடும்பம் ஒவ்வொன்றுக்கும் இலவசமாக 30 கிலோ அரிசி வழங்கி ரூ.115.94 கோடி செலவில் செயல்படுத்தப்பட்டது உணவுப் பாதுகாப்பு அளிக்கும் சிறப்புத் திட்டம். இத்திட்டத்தின் மூலம் அம்மாவின் அரசு 115.94 கோடி ரூபாய் செலவு செய்து 9.71 இலட்சம் குடும்பங்களுக்குப் பயனளித்தது மிகவும் வரவேற்கத்தக்கது; மனதார வரவேற்கின்றேன்.

வறட்சி நிவாரணம் கருதி, 2002–2003 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அம்மாவின் அரசு ரூ.163.11 கோடியை வழங்கியதோடு மட்டுமல்லாமல் 2003–2004 ஆம் ஆண்டில் சென்னை உட்பட



வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டங்களுக்கு ரூ.84.48 கோடி செலவிற்கு ஏற்பளிக்கப்பட்டுள்ளதை மனதார வரவேற்கின்றேன். அம்மா அவர்களின் அரசில் தமிழகம் அமைதிப் பூங்காவாகத் திகழும் வகையில் காவல் துறைக்காக நிதியொதுக்கீடு ரூ.1,262.60 கோடி என்று உள்ளது, 2004–2005 ஆம் ஆண்டிற்கு ரூ.1,377.15 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. காவல் துறையை நவீனப்படுத்துவதற்கான திட்டத்தின்கீழ் ரூ.112 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதையும் இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதை மனதார வரவேற்கின்றேன். நீதி நிர்வாகத்தை மேம்படுத்தவும் 2001–2002–ல் ரூ.140.99 கோடி என இருந்ததை, நடப்பு நிதியாண்டில் ரூ.171.89 கோடியாக உயர்த்தி அறிவித்ததை மனதார வரவேற்கிறேன்.

அம்மாவின் அரசு பாசன நீர்த் தட்டுப்பாட்டைக் கருத்திற்கொண்டு அதிக நீர் பயன்படுத்தப்படும் பயிர்ச் சாகுபடியை மேம்படுத்தி, விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தோட்டக்கலைப் பயிர்கள் மற்றும் மலர்கள் சாகுபடி, வீரிய ஒட்டு ரகக் காய்கறிகள், தாவர எரிபொருள் மரங்கள் மற்றும் மூலிகைப் பொருட்கள் சாகுபடி செய்ய முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மாதிரித் தோட்டக்கலைக் கிராமங்கள் ஏற்படுத்தி, நவீன வேளாண் தொழில்நுட்பங்களில் வயல்வெளிப் பயிற்சி அளிக்கப்படும் என்பதை மனதார வரவேற்கிறேன்.

அம்மாவின் அரசு மலர்கள் சாகுபடிக்காக ஓசூர் மற்றும் நீலகிரி பகுதிகளில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைத்ததையும், மாம்பழ ஏற்றுமதிக்கென 6 தென் மாவட்டங்களை உள்ளடக்கும் வகையில் தேனியில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் அமைத்ததையும் மற்றும் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் உணவுப் பூங்கா அமைக்கப்பட உள்ளது என்பதையும், ஈரோடு அருகில் மஞ்சள் வணிக வளாகம் அமைக்கப்பட உள்ளது என்ற அறிவிப்பையும் மனதார வரவேற்கிறேன்.

பிற்பகல் 12–35

2003–2004 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு 707.95 என உள்ளதை, நடப்பு நிதி ஆண்டில், 2004–2005 ஆம் ஆண்டில் 882.41 கோடியாக வேளாண் நலன் கருதி உயர்த்தி, திட்டங்கள் அறிவித்துள்ளதை மனதார வரவேற்கிறேன்.

அம்மாவின் அரசு விவசாயிகளின் அரசு என்பதை உறுதி செய்யும் வகையில் நடப்பு நிதியாண்டில் 45,000 பண்ணை பம்புசெட்டுகளுக்குப் புதிதாக மின் இணைப்பு வழங்க உறுதி செய்துள்ளதை வரவேற்கிறேன்.

காவிரி டெல்டா பகுதிகளின் கடைமடை மாவட்டங்களான நாகப்பட்டினம், திருவாரூர், கடலூர் மற்றும் தஞ்சாவூர் ஆகிய மாவட்ட விவசாயிகள் பயன்பெறும் வகையில் சிறப்பு ஒதுக்கீடாக 15,000 இணைப்புகளும் இதில் அடங்கும் என்ற இந்த அறிவிப்பை மனதார வரவேற்கிறேன்.

அம்மாவின் அரசு மனிதர்களுக்கு மட்டும் அல்லாமல், கால்நடை சிறப்புப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் கடந்த 2 ஆண்டுகளில் 9,432 கால்நடை சுகாதார முகாம்கள் நடத்தியுள்ளது. கால்நடை மற்றும் எருமை இனங்கள் இனப்பெருக்கத்தை மேம்படுத்த 64.62 இலட்சம் செயற்கை முறையில் கருவூட்டலைச் செயல்படுத்தி, இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக சாதனை படைத்துள்ளது அம்மா அரசின் மற்றொரு சாதனையாகும் என்று மனதாரச் சொல்லி வரவேற்கிறேன்.

அம்மாவின் அரசு டானிடா நிதியுதவி பெறும் கால்நடை மேம்பாட்டுத் திட்டம் தற்போது செயல்படும் 17 மாவட்டங்களுடன் மேலும் 6 மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டு வருகிறது. ரூபாய் 3.87 கோடி செலவில் தற்போது உள்ள துணை மையங்களை மேம்படுத்தி 75 கால்நடை மருந்தகங்களை அமைக்கும் திட்டம் மிகவும் வரவேற்கப்படக்கூடிய ஒன்றாகும் என்பதை இந்தத் தருணத்தில் மனதார வரவேற்றுக் கூறுகின்றேன்.

பாசனத்தைப் பொறுத்தமட்டில், காவிரி நீர் எப்படியாவது வரவேண்டும் என்பதற்காக இன்று வரை எல்லாவித நடவடிக்கைகளையும் எடுத்துவரும் அம்மாவின் அரசின் நடவடிக்கைகளை மனசாட்சி உள்ளவர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

நதிகளைத் தேசியமயமாக்கி, அவற்றின் இணைப்புகள் மூலம் நதிநீர்ப் பிரச்சினை தீர வேண்டும் என முதல்வர் அம்மா அவர்கள் 1984 ஆம் ஆண்டு மாநிலங்களவை உறுப்பினரான காலம்தொட்டு முதல் முறையாகக் கோரிக்கை வைத்து இன்று வரை அம்மா அவர்கள் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி வருகிறார்கள். அம்மா அவர்கள் அதை இந்த நிதிநிலை அறிக்கையிலும் வலியுறுத்தி இருப்பதை மனதார வரவேற்கிறேன். ஆனால், மைய அரசு தனது நிதிநிலை அறிக்கையில்



முதல்கட்ட நிதிகூட அதற்கு ஒதுக்காததை வருத்தத்துடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் 100 ஏக்கருக்கு மேற்பட்ட ஆயக்கட்டு உள்ள குளங்களைத் தூர்வாரி மேம்படுத்தும் வகையில் 2004–2005–ல் 100 கோடி ஒதுக்கியிருப்பதை வரவேற்கிறேன். 2003–2004–ல் ஒதுக்கிய ரூ.912.45 கோடியை இந்த ஆண்டில் ரூ.967.45 கோடியாக உயர்த்தியிருப்பது வேளாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரசு இது என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

மீனவர்கள் நலன் கருதி, மீனவர்கள் மீன் பிடிக்க இயலாத பருவ காலங்களில் கடல்சார் மீனவர்களுக்கு உதவ நிவாரணத் திட்டத்திற்கான ரூபாய் 29 கோடியை, நடப்பு நிதியாண்டில் மீனவர்களுக்காக 4000 வீடுகள் கட்டும் பணிக்காக ரூ.15.65 கோடியை அம்மாவின் அரசு ஒதுக்கியுள்ளது என்பதனை மனதார வரவேற்கிறேன்.

வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் ஊரகக் குடும்பங்களுக்குப் புதிய வீடுகள் கட்டுதல் மற்றும் கச்சா வீடுகளை நிலையுயர்த்த ரூ.79.66 கோடி ஒதுக்கியும், நடப்பு ஆண்டில் 36,426 வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் எனவும், 18,691 கச்சா வீடுகள் நிலையுயர்த்தப்படும் எனவும் அம்மாவின் அரசு அறிவித்துள்ள திட்டங்களை வரவேற்கிறேன்.

ஊரகச் சாலைகளின் தரத்தினை மேம்படுத்த கடந்த காலங்களைவிட அதிக முக்கியத்துவம் அம்மா அவர்களின் அரசு கொடுத்திருக்கின்றது. நெடுஞ்சாலைத் துறைக்குரிய மாவட்டச் சாலைகள் 41,125 கிலோ மீட்டர். இதில் 4,273 கிலோ மீட்டர் சாலைகள் 2003–2004 ஆம் நிதியாண்டில் தரம் உயர்த்தப்பட்டன. 6,492 கிலோ மீட்டர் ஏனைய மாவட்டச் சாலைகள், அதிலும் குறிப்பாகப் பேருந்துகள் ஓடும் சாலைகளைச் சீரமைக்க நடப்பாண்டில் ரூ.336.05 கோடி செலவிலான சிறப்புத் திட்டத்திற்கு அம்மாவின் அரசு அனுமதி வழங்கியுள்ளதை வரவேற்கிறேன். மேலும் 12 ஆண்டுகளுக்கு மேல், மீண்டும் பல ஆண்டுகளாக எந்த அமைப்பினாலும் பராமரிக்கப்படாத 5,850 கிலோ மீட்டர் நீளமுள்ள ஊராட்சி மற்றும் ஊராட்சி ஒன்றியச் சாலைகள் தரம் உயர்த்தப்படுவதன்மூலம், பழுதுபார்ப்புப் பணி செய்வதற்கு மற்றொரு பெருந்திட்டம் ரூ.300 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற அறிவிப்பை மனதார வரவேற்கிறேன்.

2001 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை அம்மாவின் அரசு 13,365 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கியுள்ளது என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதில் பெருமைப்படுகிறேன். 14,449 கைப்பம்புகள் சிறு விசைப்பம்புகளாக மாற்றப்பட்டுள்ளன. அம்மாவின் அரசால் மாணவ, மாணவியர் நலன் கருதி ஊரகப் பகுதியில் உள்ள 14,550 அரசு பள்ளிகளுக்கும், 1,226 தொடக்க சுகாதார நிலையங்களுக்கும் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டிப் பெருமை அடைகின்றேன்.

பிற்பகல் 12–40

1992–ல் இதய தெய்வம் அம்மா அவர்கள் தொடங்கிய சுய உதவிக் குழு இயக்கம், ஊரகப் பகுதிகளுக்கு அதிகார உரிமையும், சுய வேலைவாய்ப்புகளும் அளிக்கின்ற மாபெரும் திட்டமாக உருவெடுத்து உள்ளது.

ரூபாய் 393.64 கோடி சேமிப்புடன் சுமார் 25 இலட்சம் பயனீட்டாளர்களைக் கொண்ட 1.52 இலட்சம் சுய உதவிக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த சுய உதவிக் குழுக்கள் பயன்பெறும் வகையில் அம்மாவின் அரசு ரூ.564 கோடியை சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கியுள்ளது என்பதனை மனதார வரவேற்கின்றேன். இவ்வளர்ச்சிக்கு மூல முதல் காரணம் எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் என்பதை யாராலும் மறுக்க முடியாது, மறைக்க முடியாது. இந்த சுய உதவிக் குழுக்களின் பரிணாம வளர்ச்சிக்கு அம்மாதான் காரணம் என்பதை இந்த நேரத்தில் சொல்லி, இந்த நிதி ஒதுக்கீட்டை மனதார வரவேற்கின்றேன்.

அம்மா அவர்கள் குடிநீர்ப் பிரச்சினை தீர ரூ.69.20 கோடி செலவில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 674 குடியிருப்புகள் பயன்பெறும் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

ரூ.133.05 கோடி செலவில் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங்கள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

ரூ.74 கோடி செலவில் மதுரை மற்றும் தேனி மாவட்டங்களில் உசிலம்பட்டி நகராட்சி மற்றும் 406 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;





ரூ.78.70 கோடி செலவில் எங்களுடைய மாவட்டமான திருநெல்வேலி மாவட்டம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் சங்கரன்கோயில், சிவகாசி நகராட்சிகள் பயன்பெறும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

ரூ.98.85 கோடி செலவில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் 890 ஊரகக் குடியிருப்புகள் பயன்பெறும் வகையிலான ஊரகக் கூட்டுக் குடிநீர்த் திட்டம்;

ரூ.126.85 கோடி செலவில் நாமக்கல் மாவட்டத்தில் 6 பேரூராட்சிகள் மற்றும் 1,399 ஊரகக் குடியிருப்புகள் பயனடையும் வகையில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய திட்டங்களை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்ததை நன்றியுடன் வரவேற்கின்றேன்.

இரண்டாவது தேசிய தொழிலாளர் ஆணையத்தின் அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டிற்குப் பொருத்தமான தொழிலாளர் சட்டங்கள், விதிமுறைகள் மற்றும் விதிகளை ஆய்வு செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தக்க ஆலோசனைக்குப்பின், தொழிலாளர் துறைச் சீர்திருத்தங்கள் குறித்த செயல் திட்டம் வகுக்கப்படும் என்பதோடு, தொழிலாளர்களின் நியாயமான நலனைப் பாதுகாக்கும் அதே சமயத்தில் மாநிலத்தில் வேலைவாய்ப்பினைப் பெருக்குவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருப்பதை நானும் தொழிலாளி வர்க்கத்தினைச் சேர்ந்தவன் என்ற முறையில் மனதார வரவேற்கின்றேன்.

பஞ்சாலையில் பணிபுரியும் தொழிலாளர் சம்பள உயர்வு பற்றிய வழக்கு "விரைவுத் தீர்ப்பாயம்" மூலம் விரைவில் தொழிலாளர்களுக்கு நல்ல தீர்ப்பு கிடைக்கவும், எங்கள் மதுரா கோட்ஸ் ஆலையில் பல ஆண்டுக் காலமாக முடிக்கப்படாமல் இருக்கின்ற மில் தொழிலாளர் சம்பளப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவும், மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர் சம்பளப் பிரச்சினையை நல்ல முடிவுக்குக் கொண்டு வரவும் அம்மாவின் அரசு உதவ வேண்டுமென்று பணிவுடன் வேண்டுகின்றேன். மாஞ்சோலைத் தேயிலைத் தோட்டத் தொழிலாளர் பிரச்சினையைப் பற்றி இந்த நேரத்தில், ஏன் நான் சொல்லுகின்றேன் என்றால், இன்றுதான் தாமிரபரணி ஆற்றில் 17 உயிர்களை, கடந்த ஆட்சியாளர்கள் பலி வாங்கிய அந்தக் கறுப்பு நாள். எனது தொகுதியில் இன்று அங்கே பல்வேறு கூட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந்த நேரத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
கும்பகோணத்தில் இயற்கையின் சீற்றத்தால் கொடூரமான ஒரு சம்பவம்
நடைபெற்றது. யாராலும் அதைப் பற்றி, அந்தத் துயரத்தைப் பற்றிச்
சொல்ல முடியாது. அதே நேரத்தில் முதல்வராக இருக்கின்ற
எங்களுடைய அம்மா அவர்கள் உடனடியாக அந்த ஸ்தலத்திற்குச்
சென்று, ஒரு முதல்வர் அவர்கள் என்னவெல்லாம் செய்ய முடியுமோ,
அதையும் தாண்டி மனிதாபிமானத்தோடு செய்ய வேண்டிய அத்துணை
வேலைகளையும், அத்துணை திட்டங்களையும், எதிர்காலத்தில் இதுபோல்
நடக்கக் கூடாது என்பதற்காகப் பல்வேறு திட்டங்களையும்
அறிவித்தார்கள். ஒரு நாட்டினுடைய முதல்வர் செய்ய வேண்டிய
கடமையையும், ஒரு நாட்டினுடைய முதல்வர் செய்கின்ற அத்துணை
பணிகளையும் செய்தார்கள். அத்துணை திட்டங்களையும் அறிவித்து
இருக்கின்றார்கள்.

இந்த நேரத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.
இன்று எத்தனையோ பேர்கள் கும்பகோணத்திற்கு அரசியல்
நடத்துவதற்காகச் செல்கின்ற இந்த நேரத்தில், எனது தொகுதியில்
இருக்கின்ற மனத்தாங்கலைச் சொல்கின்றேன். தாமிரபரணி ஆற்றிலே
17 பேர் கடந்த ஆட்சியில் இதே நாளில் சம்பள உயர்வு கேட்ட
காரணத்திற்காக ஆற்றிலே அடித்துக் கொல்லப்பட்டார்கள். பல்வேறு
சின்னஞ்சிறு சிறார்கள் ஆற்றிலே நீந்த முடியாமல், ஆற்றிலே கழுத்தளவிற்கு
உள்ள நீரிலேகூட நடந்து செல்ல முடியாமல், அவர்களுக்கு நீச்சல்
தெரியாமல் சின்னஞ்சிறார்கள் இறந்து போனார்கள். 17 பேரில் பல
பேர் சின்னஞ்சிறு குழந்தைகள். இன்றைக்கு, கும்பகோணம்
பிரச்சினைக்காக, எதிர்க்கட்சியிலே இருக்கிறவர்கள் அஞ்சலி
செலுத்துவதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால்,
அன்று ஆளுங்கட்சியாக இருந்தவர்கள், ஒரு நாள்கூட தாமிரபரணி
ஆற்றிலே பலி கொள்ளப்பட்ட 17 உயிர்களுக்காக அங்கே போய் அஞ்சலி
செலுத்த, இன்று வரை, செல்லவில்லை. அதற்குப் பிறகு நடந்த
கண்டனக் கூட்டம், ஒரு வார காலத்திலே நடந்த கண்டனக் கூட்டத்தில்,
அனைத்துக் கட்சிகளும் கலந்து கொண்ட நேரத்திலேகூட, திராவிட
முன்னேற்றக் கழகம், அந்த அஞ்சலிக் கூட்டத்திலோ அல்லது அதற்குப்
பிறகு நடந்த எந்தக் கூட்டத்திலுமோ கலந்துகொள்ளவில்லை என்பதை
எனது தொகுதி மக்களின் சார்பிலே வேதனையோடு இந்த அவையிலே
நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எதற்காக நான்
இதைச் சொல்கிறேன் என்று சொன்னால், உண்மையிலேயே
அவர்களுக்குக் குழந்தைகள்மேல் பற்று கிடையாது. ஏதோ இன்று





அரசியலுக்காகச் செல்கிறார்கள் என்பதைத்தான் நான் மிக வருத்தத்தோடு
தெரிவித்துக்கொள்கிறேன். இன்று என்னுடைய தொகுதி முழுவதும்
அந்த 17 பேர் உயிர்நீத்த அந்த நினைவுநாளாகக் கொண்டாடுவதால்தான்
இதைச் சொல்கிறேன். கடந்த ஆட்சியாளர்களுடைய திறமையின்மை
காரணமாகத்தான் 17 சின்னஞ்சிறு உயிர்கள் அந்தத் தாமிரபரணி
ஆற்றில் அடித்துக் கொல்லப்பட்டார்கள் என்பதையும் இந்த நேரத்திலே
நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12–45

அடுத்து, பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடையும்,
முதியோர்களுக்கு முதியோர் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்கு இலவச
சேலைகளும், இலவச வேட்டிகளும் கைத்தறி நெசவாளர்களிடமிருந்தே
வாங்கப்பட்டு வருகின்றன. இதனால் மாநிலத்தில் உள்ள கைத்தறி
நெசவாளர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பு உறுதி
செய்யப்பட்டுள்ளது. உயர்தரம் வாய்ந்த பாலிகாட் சேலைகள்,
வேட்டிகளை, இதுவரையிலும் எந்த அரசும் வழங்காத தரமான வேட்டி
சேலைகளை அனைவரும் மகிழும் வண்ணம், ஏழையெளிய மக்கள்
மகிழும் வண்ணம், 1.1 கோடி பெண்கள் மற்றும் 1.1 கோடி ஆண்களுக்கு
இலவசமாக வழங்கும் திட்டம் பெருவாரியான ஏழையெளிய மக்கள்
மற்றும் நடுத்தர மக்களிடம் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்திட்டம்,
கைத்தறி மற்றும் விசைத்தறித் தொழிலாளர்களுக்குத் தொடர்ந்து
வேலைவாய்ப்பை அளிப்பதோடு மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலுள்ள
2.2 கோடி மக்களுக்கு ஆடைப் பாதுகாப்பு வசதியையும் அளிக்கிறது.
இத்திட்டம் 2004–2005–லும் தொடர்ந்து செயல்படும் என்று
அறிவித்ததோடு மட்டுமல்லாமல், வரவு–செலவுத் திட்டத்தில் ரூபாய்
173 கோடி நிதியொதுக்கி யுள்ளதற்காக ஏழையெளிய மக்கள், புரட்சித்
தலைவி அம்மாவை மனதார வாழ்த்துகிறார்கள்.

தகவல் தொழில்நுட்பம்–தகவல் தொழில்நுட்பத்தைக் கையாளும்
பணிகள் துறையின் (ITES) ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்கு 2000–
2001–ல் இருந்த 11 சதவிகிதம் 2002–2003–ல் 17 சதவிகிதமாக வியத்தகு
வகையில் வளர்ச்சியடைந்துள்ளது. இந்தச் சாதனையை மேலும்
வலுப்படுத்த, தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என
அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. இது அம்மா ஆட்சியின் சாதனையில்
மேலும் ஒரு மைல் கல் ஆகும்.

மாண்புமிகு முதலமைச்சர் அம்மாவின் தொழில்ரீதியான மற்றும் தொலைநோக்கு சுற்றுலா மேம்பாட்டுக் கொள்கையினால், தமிழ்நாடு கவர்ச்சிமிகு சுற்றுலாத் தலம் என்ற பெருமையினைப் பெற்றுள்ளது. 2000–2001 ஆம் ஆண்டில் வரவு–செலவுத் திட்டத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கென ரூபாய் 5 கோடி என்றிருக்க, 2004–2005 ஆம் ஆண்டில் இது ரூபாய் 30.35 கோடியெனப் பெருமளவு உயர்த்தப்பட்டுள்ளதை மனதார வரவேற்கிறேன்.

அனைவருக்கும் கல்வி: 2004–2005 ஆம் ஆண்டில் 364 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 30 நடுநிலை மற்றும் 30 உயர்நிலைப் பள்ளிகள் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப்படும் என்ற இந்த அறிவிப்பினை வரவேற்கிறேன்.

பள்ளிக் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு, திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 3,937.29 கோடியாக இருந்ததை, 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தில், ரூபாய் 4,202.77 கோடியாக உயர்த்தியுள்ளதை வரவேற்கிறேன். இதன்மூலம், கல்வியின்மேல் அம்மா அரசு கொண்ட அக்கறை, ஈடுபாடு அனைவருக்கும் தெரியும். உயர் கல்விக்கான மொத்த நிதி ஒதுக்கீடு நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 614.70 கோடி என்றிருக்க, அது 2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 649.81 கோடி என நிர்ணயிக்கப்பட்டுள்ளதை வரவேற்கிறேன்.

2003–2004 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுக்கென ஒதுக்கீடு ரூபாய் 27.27 கோடியாக இருந்தது. இன்று 2004–2005 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 48.14 கோடியாக, பெருமளவு உயர்த்தப் பட்டுள்ளதை நான் வரவேற்கிறேன்.

நேரு ஸ்டேடியம், உலகம் வியக்கத்தக்க வகையில், ஆறே மாதத்தில் முடித்தது புரட்சித் தலைவி அம்மாவின் அரசு. ஆசியப் போட்டிகள் மற்றும் பல்வேறு சாதனைகளையும் நிகழ்த்தும் விளையாட்டு வீரர்களை அழைத்து கௌரவப்படுத்தியும், ஊக்கப்படுத்தியும், அதோடு நிற்காமல், நம் தமிழ்நாட்டில் உடற்பயிற்சிக் கல்வி மற்றும் விளையாட்டிற்கான தனித்தொரு பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்படும் எனவும் அறிவித்திருப்பது அம்மா அரசுதான். இந்த அரசுதான் விளையாட்டு வீரர்களின் வாழ்வில் ஒளி ஏற்றச் செய்யும் அரசு ஆகும். விளையாட்டு வீரர்களின் பொற்காலம் எதுவென்று சொன்னால், அது அம்மா ஆட்சிக் காலம் என்றால், அது யாராலும் மறுக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை என்பதை



இந்த நேரத்திலே தெரிவித்துக் கொண்டு, எனக்கு முன்னாலே பேசிய அண்ணாச்சி காரைக்குடி ராஜா அவர்கள், காரைக்குடியில் அந்தப் பல்கலைக்கழகம் வேண்டுமென்று கேட்டார்கள். நான் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பாதம் தொட்டு வணங்கிக் கேட்டுக்கொள்வது, கபடிக்குப் பெயர் பெற்றது திருநெல்வேலி; கால்பந்துக்குப் பெயர் பெற்றது ஒன்றுபட்ட திருநெல்வேலி; மற்றும் விளையாட்டுகளுக்கு உயிர் கொடுத்தது திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள், பல்வேறு பெரியவர்கள். இன்று விளையாட்டுத் துறையிலே ஒலிம்பிக் வரை பல்வேறு பிரிவுகளில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் இருக்கின்றார்கள். எனவே, அம்மா அவர்களுடைய ஆட்சியில் அந்தப் பல்கலைக்கழகத்தை எங்களுடைய திருநெல்வேலி மாவட்டத்தில் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி வேண்டுகின்றேன்.

*பிற்பகல் 12–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** காரைக்குடியிலே ஏற்கெனவே ஒரு பல்கலைக்கழகம் இருக்கிறது, அழகப்பா பல்கலைக்கழகம்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் என்னுடைய கோரிக்கையை அனுமதித்ததற்கு நன்றி கூறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. நான் கேட்டால் திருமங்கலத்திற்குத்தான் கேட்பேன்.

**திரு. எம். சக்திவேல் முருகன்:** அடுத்து சுகாதாரத் துறையில் நம்முடைய அரசு வியத்தகு சாதனைகளைச் செய்து உள்ளது. 2000 ஆம் ஆண்டில் குழந்தை இறப்பு விகிதம் (IMR) ஆயிரத்துக்கு 51 என்ற நிலையிலிருந்து 2002 ஆம் ஆண்டில் ஆயிரத்துக்கு 44 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. அதேபோன்று, இந்தக் கால அளவில் பிறப்பு விகிதம் ஆயிரம் மக்கள் தொகைக்கு (CBR) 19.3 என்ற அளவிலிருந்து 18.5 என்ற அளவிற்குக் குறைந்துள்ளது. இது நம்முடைய அரசின் சுகாதாரத் துறையின் திறமையை எடுத்துக் காட்டுகிறது.

அம்மாவின் அரசு பொறுப்பு ஏற்றதிலிருந்து ரூ.86.25 கோடி மொத்தச் செலவில் 746 சுகாதாரத் துணை மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளதோடு, 93 ஆரம்ப சுகாதார மையங்கள், 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனைகளாக நிலை உயர்த்தப்பட்டுள்ளன. MRI, C.T. Scan, ECG, EEG, Ultra–sound மற்றும் X–ray போன்ற வசதிகள்

கொண்ட 7 வட்டார நோய் அறி மையங்கள் ரூபாய் 21 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மாநில அளவில் 73 விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அம்மா ஆட்சியில் மனித வாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருப்பதை மனதார வரவேற்கின்றேன். 571 சிறப்பு சுகாதார முகாம்கள் நடத்தப்பட்டு 11.38 இலட்சம் மக்கள் பயனடைந்துள்ளனர்.

56.65 இலட்சம் மாணவர்கள் பயனடையும் வகையில், 2003–2004 ஆம் ஆண்டில் பள்ளி மருத்துவ முகாம் திட்டம்; இச்செயல்பாட்டின் மூலம் நோயற்ற சமுதாயம் காண முயற்சி எடுக்கும் நிலையைக் காண முடிகிறது.

அரசின் அனைத்துச் சட்டம் மற்றும் சட்டம் சாராக் குழுக்களிலும் பெண்களுக்கு 33 சதவிகிதப் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யத் தக்க நடவடிக்கை எடுத்துள்ள நாட்டிலுள்ள ஒருசில மாநிலங்களுள் நம்முடைய தமிழ்நாடு முன்னணியில் இருக்கின்றது. தமிழ்நாட்டில்தான் தமிழ்நாடு அரசு தேர்வாணையத் தலைவர், தமிழ்நாடு அரசு தலைமைச் செயலாளர், தற்போது தமிழ்நாடு அரசு உள் துறைச் செயலாளர் போன்ற மிகப் பெரிய தலைமைப் பதவிகளை எல்லாம் என்னுடைய தாயினுடைய ஆட்சியில், எங்களுடைய அன்னையினுடைய ஆட்சியில் பெண்கள் நிர்வகித்து வருகின்றார்கள். அனைத்து மகளிர் அதிரடிப்படை நிறுவப்பட்டது மற்றும் முதல் மகளிர் காவல் படை உருவாக்கப்பட்டது ஆகிய நடவடிக்கைகள் மகளிர் ஆண்களுக்கு நிகராகப் பங்கேற்று ஆண்களைவிடச் சிறந்த முறையில் செயல்படுவர் என்பதை நிரூபிக்கின்ற வகையில் ஆணும், பெண்ணும் இங்கே சமம் என்னும் சமத்துவத் தமிழகத்தை ஏற்படுத்திய அம்மாவை வணங்குகின்றேன்.

2004–2005 ஆம் ஆண்டில் ரூபாய் 31.50 கோடி செலவில் 100 புதிய மாணவரில்லங்கள் கட்டப்படுவதையும், பதினோராம் வகுப்பில் பயிலும் ஆதிதிராவிட, பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட மாணவியருக்கு இலவச சைக்கிள்களை இந்தியாவிலேயே முதல் முறையாக வழங்கி வரவு–செலவுத் திட்டத்தில் ரூ.8 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளதையும், ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் நலனுக்கான மொத்த நிதி ஒதுக்கீடு திருத்த மதிப்பீட்டில் ரூபாய் 429.09 கோடியாக இருந்ததை இந்த 2004–2005 ஆம் ஆண்டில் ரூ.448.91 கோடியாக உயர்த்தியதை ஆதிதிராவிட மக்களின் மேல் இந்த அரசு





அக்கறை கொண்டுள்ளது என்பதை அறிவிக்கின்ற வகையில் இந்த நிதிநிலையை நீங்கள் அறிவித்து இருப்பதையும் மனதார வரவேற்கின்றேன்.

2002–2003 ஆம் ஆண்டில் கடும் வறட்சி ஏற்பட்டது. 2003 ஆம் ஆண்டில் பருவ மழை பொய்த்தது. அதற்கு முந்தைய ஆண்டைவிட மேலாக, 2004 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10 ஆம் நாளன்று 2003 ஆம் ஆண்டு ஜூலைத் திங்களிலிருந்து 2004 ஆம் ஆண்டு ஜூன் வரையிலான பசலி 1413–ல் விவசாயிகள் செலுத்த வேண்டிய நில வரியை அனைத்து மாவட்டங்களிலும் முழுவதுமாகத் தள்ளுபடி செய்து அம்மா அவர்கள் விவசாயிகளின் மேல் அக்கறை கொண்டு அறிவித்தார்கள். உள்ளூர் தல வரி, உள்ளூர் தல மேல் வரி ஆகியவற்றையும் தள்ளுபடி செய்தார்கள். விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்ற இந்த உதவி காரணமாக, ரூ.60 கோடி அளவில் அரசுக்கு வரி இழப்பு ஏற்படும் என்றாலும் விவசாயிகள் மேல் அக்கறையாக இந்த அரசு இருக்கிறது என்பதைக் காட்டுகின்ற வகையில் இந்த வரிகளைத் தள்ளுபடி செய்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களின் நிலைமாறாத, கடும் உழைப்பு இல்லையெனில், 1996–2001–ல் கடந்த ஆட்சியாளர்கள் விட்ட நிதிநிலைச் சீரழிவு படுகுழியில் தள்ளப்பட்ட தமிழ்நாட்டை மீட்பதற்கு இயலாமல் போயிருக்கும். நிதிநிலை அறிக்கையில் சுட்டிக்காட்டியதைப் போல உண்மையான தலைவர் பாதகமான ஒரு சூழ்நிலையில்தான் தன்னை நிலைநிறுத்திக்கொள்வார். மக்கள் நலமும், வளமும் பெற வேண்டும் என்பதற்கான முயற்சிகளிலிருந்து சற்றும் வழுவாது, ஒவ்வொரு தடையையும் தாண்டி மீண்டும் சுமார் 1,800 கோடி ரூபாய் பொது மக்களின் நன்மைக்காகப் பல்வேறு சலுகைகளையும் அம்மா அவர்கள் அறிவித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் முன்னின்று நம்மை வழி நடத்தி தங்கத் தமிழகத்தைக் காத்து வருகின்ற காவல் தெய்வமாக உள்ளார்கள் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–55

அண்ணன் ஹக்கீம் அவர்கள் காலையிலே ஒரு குறளைச் சொன்னார்கள். நிதிநிலை அறிக்கையில் எங்களுடைய நிதி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல,

"இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்
கிடும்பை படாஅ தவர்"

என்ற குறளுக்கேற்ப, துன்பம் வருங்கால் அதற்கு இரையாகாது, தளரா உள்ளத்துடன் எதிர்நோக்குபவர்முன், அத்துன்பமே நலிவுற்றுத் துயருற்று அஞ்சிப் பின்வாங்கிச் சென்று விடும் என்பதுபோல், எந்தத் துன்பத்தையும் அம்மா, நீங்கள் தாங்கி நிற்கிறீர்கள். அந்தத் துன்பங்கள் எல்லாம் அம்மா, உங்களிடம் பின்வாங்கிச் செல்லும். கடவுள் இருப்பது உண்மையென்றால், தருமம் ஜெயிப்பது உண்மையென்றால், நீதி வெல்லும் என்பது உண்மையென்றால், தாயே எதிர்காலத்தில் (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் உங்கள் பக்கம் என்றும் இருப்பார்கள் என்று வணங்கி, 2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பினை வழங்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியையும், வணக்கத்தையும் சொல்லி உரையை முடிக்கிற வேளையிலே, என்னுடைய தொகுதியைப் பற்றி ஓரிரு கோரிக்கைகளைப் பேரவைத் தலைவர் வாயிலாக முன்வைக்க விரும்புகிறேன்.

என்னுடைய தொகுதியில் 1965 ஆம் ஆண்டு இனாம் ஒழிப்புத் திட்டத்தின்கீழ் விடுதலையான சிவந்திபுரம் என்ற 12,000 கிராம மக்கள் வாழும் ஊராட்சியில் இன்று வரை அந்தக் குடியிருப்புகளுக்குப் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கிறது. சுமார் 4,000 பட்டாக்கள் வழங்க தயார் நிலையில் இருக்கிற இந்த நேரத்தில் ஆதீனத்துகாரர்களுடைய முறையீட்டால், Supreme Court வரை சென்று அங்கேயும் தள்ளுபடி செய்யப்பட்டு, அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு ஆகியது. பட்டா தயார் செய்யப்பட்டு, சுமார் 4,000 பட்டாக்கள், ஒரே கிராமத்திற்குக் குடியிருப்புப் பட்டா வழங்கப்படும் சூழ்நிலையில் மீண்டும் ஆதீனம் Supreme Court வரை சென்று தள்ளுபடி செய்த அந்த வழக்கை, Supreme Court வரை அவர்கள் சென்றும், முறையிட்டும் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்கை மீண்டும் அம்பாசமுத்திரம் சிவில் கோர்ட்டிலே தாக்கல் செய்து ஒரு தடையாணையை வாங்கியதால் பட்டா வழங்கப்படாமல் அங்கே நின்று கொண்டிருக்கிறது. எனவே, நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு, Supreme Court-லே நம்முடைய அரசுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வழங்கப்பட்டதன் அடிப்படையில், ஒரே கிராமத்தில் அந்த 4,000 குடியிருப்புப் பட்டாக்கள் வழங்கக்கூடிய சாதனை படைத்த அரசாக, 1965 ஆம் ஆண்டு முதல் என்னுடைய தொகுதி மக்கள் கேட்கிற அந்தக் கோரிக்கையை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, எந்த அரசாலும் நிறைவேற்ற முடியாத அத்தனை சாதனைகளையும் நிறைவேற்றுகிற அரசு, ஓடாத கண்டதேவித் தேரை எல்லாம் ஓட்டுகிற ஒரே தகுதி படைத்த அரசு புரட்சித் தலைவி அம்மா





அவர்கள் அரசுதான் என்பதை நிரூபிக்கிற அரசு, இந்தப் பட்டாக்களை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகப் பணிவோடு வேண்டுகிறேன்.

ஆன்மீகத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிற அம்மா அவர்களுடைய அரசு, என்னுடைய தொகுதியில் உள்ள பாப்பான்குளம் கருத்தலிங்கேஸ்வரர் ஆலயத் தேரையும், அம்பாசமுத்திரம் கிருஷ்ணன் கோயில் தேரையும் புதுப்பித்துத் தர பணிவுடன் வேண்டுகிறேன். ஓடிக்கொண்டிருக்கிற ஆழ்வார்குறிச்சி சிவசைலநாதர் கோயில் தேர்ச் சக்கரங்களையும், ஓடிக் கொண்டிருக்கிற பாபநாசம், பாபநாசர்–உலகம்மன் கோயில் தேர்ச் சக்கரங்களையும் பழுது நீக்கித் தர மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகப் பணிவுடன் வேண்டுகிறேன்.

365 நாட்களும் குற்றாலத்திற்குச் சென்று குளிக்க முடியவில்லை என்று சொன்னாலும்கூட, உடனடியாக அவர்கள் நினைத்துப் பார்ப்பது அம்பாசமுத்திரம் தொகுதியிலுள்ள அகஸ்தியர் அருவியையும், மணிமுத்தாறு அருவியையும்தான். தற்போதுகூட நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் குற்றாலத்திற்கு வந்துவிட்டு, அந்த மணிமுத்தாறு அருவிக்குக்கூட குளிக்க வந்திருந்தார்கள். அப்போது அவர்கள் அந்தச் சாலையை நேரடியாகப் பார்த்தார்கள். அந்தச் சாலை, நிலப்பரப்பை ஒட்டியுள்ள சாலை. (குறுக்கீடு) ஆமாம். எங்களுடைய மண்ணின் மைந்தர் ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்களும் உடன் வந்தார்கள். (சிரிப்பு) எனவே, அந்த அருவிகள் இரண்டும் நிலப்பரப்பை...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்களைக் குளிப்பாட்டுகிற வேலையில் நல்ல தேர்ச்சி பெற்று இருக்கிறீர்கள். (சிரிப்பு)

**திரு. எம். சக்திவேல் முருகன்:** எனவே, அந்தச் சாலை மலைக்கு உள்ளே, அடர்ந்த காடுகளுக்கு உள்ளே–அருவிகள் அல்ல; நிலப்பரப்பை ஒட்டி 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு உள்ள அந்த அருவிகள் இரண்டுக்கும், — 365 நாட்களும் வற்றாத தாமிரபரணி ஆற்றிலே உள்ள அந்த அருவிகள் இரண்டுக்கும் செல்கிற சாலை மிகவும் பழுதடைந்து இருக்கிறது. ஆனால் வனத் துறைக் கட்டுப்பாட்டில் இருக்கிறது. நிலப்பரப்பில் மக்கள் வாழ்கிற பகுதியில்தான் இந்த அருவிகள் இருக்கின்றன. பேரூராட்சி மூலம் 10 இலட்சம் ரூபாய்க்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டு, டெண்டர் விடப்பட்டு 1½ ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் வனத் துறையின் ஆட்சேபனை காரணமாக

அந்தச் சாலை போடப்படாமல் இருக்கிறது. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வனத் துறை மூலம் அந்தச் சாலையை அமைப்பதற்குத் தடையில்லாச் சான்றிதழ் பெற்றுத் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

அடுத்து, 1992 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் எங்களுடைய தொகுதியிலுள்ள முண்டந்துறை–காரையாறு ஆற்றுப் பாலம் அறவே துண்டாக்கப்பட்டது. அந்த நேரத்திலே அந்த வெள்ளப் பெருக்கிலே 32 பேர் உயிரிழந்த செய்தியைக் கேட்டவுடன் எங்களுடைய தங்கத் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் எங்களுடைய பகுதிக்கே அன்றைக்கு நேரடியாக வந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆறுதல் கூறியதோடு, அந்தப் பகுதியிலே நிவாரண உதவிகள் செய்தார்கள். அன்று 76 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இந்த பாலம், – – 1992–ல் தயாரிக்கப்பட்ட அந்தப் பாலம் இன்று — 3¼ கோடி ரூபாயைத் தாண்டி estimate செல்கிறது. இந்தப் பாலம் இப்போது military பாலத்தில் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந்தப் பாலத்தைக் கடந்துதான் சேர்வலார் EB Power House, காரையார் Power House, காணிக் குடியிருப்புப் பள்ளிக்கூடம், பிரசித்தி பெற்ற சொரிமுத்து அய்யனார் கோயில் ஆகியவற்றிற்குச் செல்ல வேண்டி உள்ளது. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக இந்தப் பாலத்தை எங்களுடைய தென் மாவட்டத்தில், அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தருமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

*பிற்பகல் 1–00*

அடுத்து, எனது தொகுதியில் இல்லத்தார்கள் என்ற வகுப்பினர் மிகவும் அதிகமாக வாழ்கின்றார்கள். அவர்களுடைய மாநிலச் சங்கம் நம்முடைய இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு மாநிலப் பொதுக் குழு மூலம் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அவர்களை மிகவும் பின்தங்கியவர்கள் பட்டியலில் சேர்க்க வேண்டும் என்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். கேரளத்தில் அவர்கள் S.C. பிரிவில் இருக்கின்றார்கள். இங்கே B.C. பிரிவில் இருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுடைய அரசு அவர்களை M.B.C. பிரிவில் சேர்க்குமாறு பணிவோடு வேண்டுகிறேன்.





இன்னொன்று, எங்கள் பகுதி மக்களின் நீண்ட காலக் கோரிக்கை, பாபநாசம்—திருவனந்தபுரம் மலைவழிச் சாலை. எனது பகுதியில், எனது தொகுதியில் வர்த்தகம் மிகவும் நலிந்து போய், பொருளாதார நலிவு தற்போது ஏற்பட்டு உள்ளது. 24 கிலோ மீட்டர் தூரம் மட்டும் சாலை அமைத்தால் திருவனந்தபுரம் சென்றுவிட முடியும். 1 மணி நேரப் பயணத்தில் இந்தப் பயணம் அமைந்துவிடும். இதை அமைத்தால் எங்கள் பகுதி வர்த்தகம் முன்னேறுவதோடு மட்டுமல்லாமல், காடுகளும் பாதுகாக்கப்படும். நான் ஏற்கெனவே பேசிவிட்டேன். இதை எதற்காக இந்தப் பேரவையில் பேசுகிறேன் என்று சொன்னால், தற்போது நடந்த கூட்டத்திலேகூட ஏதோ அவர்கள் ஆட்சியிலே அவர்கள் நிறைவேற்றிவிட்டதுபோலவும், நம்முடைய ஆட்சி வந்தபின் அதை நிறுத்தியதுபோலவும் ஒரு மாயையை என்னுடைய தொகுதியிலே அவர்கள் ஏற்படுத்துகின்றார்கள். உண்மையில் நான், வனத் துறை— எல்லாப் பகுதியிலும் சென்ற பிறகு–நம்முடைய ஆட்சி வந்த பிறகு எதையும் நிறுத்தவில்லை. ஏற்கெனவே அவர்கள்தான் நிறுத்தியிருக்கின்றார்கள். அது Reserve Forest என்பதால் நிறுத்தி இருக்கின்றார்கள். எனவே, அங்கே அவர்கள் ஏதோ முழுவதும் முடித்து வைத்துவிட்டதுபோலவும், நம்முடைய ஆட்சி வந்ததும் நிறுத்திவிட்டதுபோலவும், உண்மைக்கு மாறான பிரச்சாரத்தைச் செய்கின்றார்கள். உண்மையிலேயே அதற்கு வாய்ப்பு இருக்குமானால், வனத் துறை அமைச்சர் அவர்கள், இந்த பாபநாசம்–திருவனந்தபுரம் மலைவழிச் சாலை அமைவதற்குத் தடையின்மைச் சான்றிதழ் வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகப் பணிவோடு வேண்டுகின்றேன்.

இந்த நேரத்தில், 2004–2005 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பங்குகொள்ள வாய்ப்பளித்த எங்களுடைய பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எங்களுடைய நெஞ்சத்திலே நீங்காத இடம் பெற்ற இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும் எனது நன்றியைக் கூறி, மீண்டும் சொல்கிறேன், கடவுள் என்பவர் உண்டு என்று சொன்னால், நீதி ஜெயிக்கும் என்பது உண்மையானால், தர்மம் வெல்லும் என்பது உண்மையானால், இந்தப் புரட்சித் தலைவி அம்மா ஆட்சி, உயிர் உள்ளவரை தொடர்ந்து நீடித்துக்கொண்டே இருக்கும் என்று மீண்டும் கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அருள். *(குறுக்கீடு)* திரு. அரசன்.

[2004 ஜூலை 23

*திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளையாட்டுப் பல்கலைக்கழகம் குறித்து ஒரு சின்ன யோசனை. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களிலே யார், யார் விளையாட்டுப் பல்கலைக்கழகம் வேண்டும் என்று விரும்புகிறார்களோ, அவர்களுக்கு ஒரு 100 மீட்டர் ஓட்டப் பந்தயம் வைத்து அதிலே முதலாவதாக வருபவருக்கு அந்த விளையாட்டுப் பல்கலைக்கழகத்தை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிச்சயமாக நீங்கள் ஜெயிக்கப் போவது இல்லை. (சிரிப்பு)

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியின் அடையாளமாக தமிழர்களின் முகவரியாக தமிழகத்தின் நம்பிக்கை நட்சத்திரமாக வாழ்ந்துகொண்டு இருக்கும் எங்களின் அன்னையே, 6 கோடி தமிழர்களுக்கு மட்டும் அல்லாமல், உலகம் எல்லாம் வாழ்ந்து கொண்டிருக்கும், உலகத் தமிழர்களின் உரிமைக்காகவும் குரல் கொடுத்து வரும் எங்களின் இதய சிம்மாசனத்தில் நிரந்தரமாக வீற்றிருக்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நெஞ்சம் நிறைந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1—05

கடந்த கால தி.மு.க. ஆட்சியில் நிலைகுலைந்து, சீரழிந்து போன நிதிநிலையை, தனது ஓய்வறியா உழைப்பின் மூலம் சரி செய்து, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் சென்று கொண்டிருக்கும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று இந்த நாட்டையே மீளாத் துயரத்தில் ஆழ்த்திக் கொண்டு இருக்கின்ற மாபெரும் சம்பவமான, அண்மையில் நடைபெற்ற கும்பகோணம் பள்ளி தீ விபத்துச் சம்பவத்தை நினைத்துப் பார்க்கின்றபோது, உலக நாடுகளில் இருக்கின்ற பெரும்பான்மையான தலைவர்கள் எல்லாம் இன்று கண்ணீர் அஞ்சலி செலுத்திக் கொண்டே இருக்கின்ற ஒரு நிலையை அனைத்துப் பத்திரிகைத் துறை மூலமாக நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், படித்துக் கொண்டிருக்கிறோம்.

அந்தச் சூழ்நிலையில் அச்சம்பவம் ஏற்பட்ட சில மணி நேரத்தில், அந்த மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர் மூலமாக, இந்த அரசுக்குத் தெரிந்த சில நிமிடங்களிலேயே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், பாதிக்கப்பட்ட பகுதிக்கு உடனடியாகச் செல்லவேண்டுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சரை உடனடியாக அந்தப் பகுதிக்கு அனுப்பி வைத்து, அதற்குப் பிறகு தானும் அப்பகுதிக்கு உடனடியாகச் சென்று, அன்றைக்கே அந்த விபத்தினைக் கண்டு, உயிரிழந்த அந்தக் குழந்தை உள்ளங்களை எல்லாம், கருகிக் கிடந்த அந்தக் குழந்தைகளை எல்லாம் பார்த்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கண்ணீர் விட்டு அழுத அந்தக் காட்சிகளை இன்றும் நாம் நினைத்துக் கொண்டிருக்கின்றோம். அந்த அளவுக்கு அந்தப் பள்ளிக் குழந்தைகள் இறப்புச் சம்பவத்தை நேரில் கண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆழ்ந்த துயரத்தோடு, அவர்களை இழந்து வாடுகின்ற குடும்பங்களுக்கு ஆறுதல் சொல்லியும், எத்தனை கோடி கொடுத்தாலும் தகாது என்று அறிந்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அன்று 90 குழந்தைகள் உயிரிழந்ததற்கு தலா ரூபாய் 1 இலட்சம் வீதமும், மிகுந்த காயத்தினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு தலா ரூபாய் 25 ஆயிரமும், சிறிய காயங்கள் ஏற்பட்ட குழந்தைகளுக்கு தலா ரூபாய் 10 ஆயிரமும் வழங்கி, அந்தக் குழந்தைகளை இழந்து வாடும் அந்தக் குடும்பத்தார்கள் வீட்டுக்குச் சென்று ஆறுதல் சொல்லி, நான் உங்களுக்காக இருக்கிறேன், நிச்சயமாக உங்கள் குடும்பத்தை நன்றாக நான் காப்பாற்றுவேன் என்று உறுதியளித்து, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழக முதல்வர் என்ற முறையிலேயும், மனித நேயத்தோடும் அவர் நடந்து வந்த பாதையை நாம் எண்ணிப் பார்க்கின்றபோது, இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கின்ற, மத்தியிலே ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற பாரதப் பிரதமர் திரு. மன்மோகன் சிங் அவர்கள், அவர் பிரதமராக இருந்து கொண்டு, அவர் ஆண்டு கொண்டிருக்கின்ற நாட்டில் உள்ளடங்கிய ஒரு மாநிலமான தமிழகத்திலே இதுபோன்ற ஒரு கோரச் சம்பவம் நடந்துவிட்டதை அறிந்து, அவர் ஓர் அறிக்கையோடு விட்டுவிட்டு, அவர் அமர்ந்துவிட்ட சம்பவத்தை எண்ணிப் பார்க்கின்றோம். இந்தத் தமிழகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழை, எளிய சமுதாய மக்களின்மீது இந்த மத்திய அரசுக்கு எந்த அளவுக்கு நல்லெண்ணம் உள்ளது என்பதை நாம் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும்.





உலக நாடுகள், அமெரிக்கா, ஜப்பான், பல்வேறு உலக நாடுகள்கூட அந்தந்த நாடுகளிலே இந்தச் சம்பவத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, தீர்மானமும் நிறைவேற்றியிருக்கின்ற வேளையில், இந்த நாட்டை ஆண்டு கொண்டிருக்கின்ற பாரதப் பிரதமர், இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, வருகை தந்து, இந்த மாநிலத்திலே உயிரிழந்த அந்தக்

[திரு. பி.எஸ். அருள்] [2004 ஜூலை 23

குழந்தைகளுடைய சடலங்களுக்கு இறுதி அஞ்சலிகூடச் செலுத்த வராததை இந்தத் தமிழக மக்கள் அனைவரும் கண்டிப்பதோடு, ஏதோ பாரதப் பிரதமர், திருமதி சோனியா காந்திதான் இந்த நாட்டினுடைய பிரதமர் என்ற ஒரு மாயையை உருவாக்குகின்ற நோக்கத்தோடு அவர் இந்தத் தமிழகத்திற்கு வந்து, அங்கும், இங்கும் ஓடி, அந்தக் குழந்தைகளைப் பெற்றெடுத்தவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறுவது போன்ற ஒரு நிகழ்ச்சியினை வீடியோவில் பதிவு செய்த படத்தினைப் பார்க்கின்ற வகையிலே, மத்தியிலே ஆட்சி செய்து கொண்டிருக்கிறவர்களை, ஏழை, எளிய மக்களாகிய தமிழக மக்களை ஏமாற்றுகின்ற நோக்கத்தோடு ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற மத்திய அரசை, நாம் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையிலே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தத் தீ விபத்துச் சம்பவம் நடந்தவுடன் அவர் எடுத்த ஒவ்வொரு நடவடிக்கையையும் பார்க்கின்றபோது, உண்மையிலேயே உலக நாடுகளே வியந்து புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பாராட்டிக் கொண்டிருக்கின்றன. அவர் சென்றவுடன் அந்தக் குழந்தைகளைப் பார்க்கின்றபோது, அவர் தாயுள்ளத்தோடு கதறி அழுத காட்சியைக் காண முடிந்ததோடு, அந்த விபத்து ஏற்படுவதற்குக் காரணமாக இருந்த அந்தப் பள்ளியினுடைய நிர்வாகத்தின்மீதும், அது சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளின்மீதும் போர்க்கால அடிப்படையிலே அவர் எடுத்த நடவடிக்கையினை இன்று நாம் பார்க்கின்றபோது ஒவ்வொரு குடிமகனும், முதல்வர் என்றால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் போல இருக்க வேண்டும் என்ற ஒரு நிலைப்பாட்டினை சராசரி மனிதன்கூட இன்று சொல்லிக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையைப் பெற்றிருக்கிறார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1–10

கடுமையான உத்தரவுகள். பள்ளி நிருவாக தாளாளர் கைது. நிருவாகிகள் கைது. பல்வேறு அரசு அலுவலர்கள் கைது. கிட்டத்தட்ட 15–க்கும் மேற்பட்டவர்கள்மீது கைது நடவடிக்கை எடுத்து, இந்தப் பள்ளி நிருவாகம், குழந்தைகள் படிக்கின்ற பள்ளிகளெல்லாம் இப்படித்தான் இருக்கவேண்டுமென்று ஒழுங்குபடுத்துகின்ற ஒரு நிலையை புரட்சித் தலைவி அவர்கள் இன்று எடுத்திருக்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கின்றபோது, உண்மையிலேயே நம்மைப் போன்றவர்களெல்லாம் பெருமைப்பட்டாக வேண்டும். காரணம், உடனடியாக விசாரணை கமிஷன். நீதியரசர் திருமிகு சம்பத் அவர்களை வைத்து நீதி விசாரணையை மேற்கொண்டு, அந்த நீதி விசாரணையைக் குறுகிய



2004 ஜூலை 23] [திரு. பி.எஸ். அருள்]

காலத்திற்குள் முடிக்க வேண்டும் என்ற உத்தரவை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பிறப்பித்திருக்கிறார்கள்.

மேலும், தமிழகத்திலே கூரைகள் வேய்ந்த பள்ளிகளே இருக்கக்கூடாது என்ற அவசர உத்தரவு ஒன்றை அளித்து, இன்று மாணவ, மாணவிகளுடைய நலனில் அக்கறை கொண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருப்பதைப் பார்க்கின்றபோது, இந்த நாட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழை, எளிய மக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் உன்னதமான உண்மை.

அந்த அளவிற்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக மக்களின்மீதும், விவசாயப் பெருங்குடி மக்களின்மீதும், அடித்தட்டு மக்களின்மீதும் அன்பு செலுத்தி நல்லாட்சி செய்து கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மத எல்லைகளைத் தாண்டி, சாதி எல்லைகளைத் தாண்டி, மனித நேய உணர்வோடு ஏழை, எளிய மக்களின் வாழ்க்கையில் வசந்தம் வீசிடும் வகையில் புரட்சிகரமான திட்டங்களைத் தீட்டி நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். சாதியின் பெயரால் சிலருக்குச் சலுகைகள் கிடைக்கும்போது மற்றவர்களின் மன உணர்வுகளையும் புரிந்துகொண்டு, ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த பிளஸ் 1, பிளஸ் 2 படிக்கின்ற மாணவிகளுக்கு வழங்கியதைப் போலவே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவிகளுக்கும் அரசின் சார்பில் இலவச சைக்கிள் வழங்கப்படும் என அம்மா அறிவித்ததை உள்ளன்போடு வரவேற்று, நாம் மகிழ்கின்றோம்.

"மக்கள் என்ன நினைக்கின்றார்களோ அதைச் செயல்படுத்தும் அரசுதான் மக்கள் நலன் காக்கும் அரசு" என்பதற்கிணங்க, இன்றைக்கு அம்மா அவர்கள் குடும்ப அட்டையில் இருந்த 'எச்' முத்திரையை நீக்கி உத்தரவிட்டதையும், ரேஷன் கடைகளில் கூப்பன் முறையை அறவே நீக்கி, குடும்ப அட்டையைக் கொண்டு போனாலே அரிசியைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலைப்பாட்டையும், பொது மக்கள் மிகுந்த உற்சாகத்தோடு வரவேற்றுள்ளனர் என்பதையும் இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்து, மதக் கலாச்சாரத்தில் தங்களின் குடும்ப குலதெய்வங்களுக்கு, இஷ்ட தேவதைகளுக்குப் பிரார்த்தனை நிறைவேற்றி, முடி எடுத்து, ஆடு, மாடு, கோழிகள் பலியிடுவதைத் தங்கள் பாரம்பரிய சடங்காக நடத்திக் கொண்டிருந்த தமிழக மக்களிடையே, விலங்குகள் பலியிடுதலைத் தடை

செய்தல் சட்டத்தை ரத்துச் செய்ததையும், இன்றைக்குத் தமிழகக் கிராமத்துப் பொது மக்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றுள்ளனர்.

விவசாயிகளுக்குத் தொடர்ந்து இலவச மின்சாரம், பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இலவச பஸ் பாஸ், குடும்ப அட்டை இல்லாதவர்களுக்குப் புதிய குடும்ப அட்டை, ஆண்டவன் சன்னிதானத்தில் இறைவனை வழிபடப் போகும் பக்தர்களின் காலணிகளுக்கு வசூலிக்கப்படும் கட்டணம் ரத்து, திருக்கோயிலுக்கு வரும் பக்தர்களின் இரு சக்கர வாகனம், மூன்று சக்கர வாகனங்களுக்கு வசூலிக்கப்படும் கட்டணம் ரத்து, போன்ற புரட்சிகரமான அறிவிப்புகளால் ஒட்டுமொத்தத் தமிழ்ச் சமுதாயமும் மகிழ்ச்சியடைந்துள்ளது.

தி.மு.க. ஆட்சியில் ஏற்பட்ட நிருவாகச் சீர்கேடுகளின் விளைவாகத் தமிழகத்தின் நிதிநிலைமை சீரழிந்த நிலையில் இருந்ததால்,

> "நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
> வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்பதற்கிணங்க, தமிழகத்தின் நிதிநிலைமையைச் சீராக்குவதற்கு அம்மா அவர்கள் கசப்பான மருந்தைக் கொடுத்தார்கள். அதன் விளைவாக, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் உண்மை நிலவரம் தெரிந்தும், யாரோ சிலரைத் திருப்திப்படுத்தப் போராட்டமும் நடத்தினார்கள். இந்திய நாட்டின் உச்ச நீதிமன்றம் வரைகூடச் சிலர் சென்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் நடவடிக்கையை உச்ச நீதிமன்றமே பாராட்டியது. நமது ஜனநாயகப் பண்புகளில் அசைக்க முடியாத ஒன்று உண்டு என்றால், அதுதான் Rule of Law—சட்டத்தின் ஆட்சி. சட்டமும் தன் கடமையைச் செய்தது. கைது, சிறை வாழ்வு என்றெல்லாம் சென்றாலும்கூட, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள் மீண்டும் அனைவருக்கும் பணியை வழங்கினார்கள். இப்படிப்பட்ட குழப்பமான நிலை ஏற்படக் காரணமே கடந்த கால தி.மு.க. ஆட்சியின் நிருவாகச் சீர்கேடுகள்தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1—15*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்பதற்கிணங்க, தமிழகத்தில் கல்விக்குத் தலையாய முன்னுரிமை கொடுக்கப்பட்டு, 2004–2005 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 4,202 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் கல்வி என்ற அடிப்படையில் செயல்பட்டு வரும் அம்மா



அவர்கள், உள்ளங்கை ரேகையின் உருமாற்றம் உலகிற்குத் தெரியாது என்பதற்கிணங்க, கடந்த மூன்று ஆண்டுகளில் 22,178 ஆசிரியர்கள் பணியிடங்களை நிரப்பி, கல்வித் துறையில் மாபெரும் எழுச்சியை ஏற்படுத்தியுள்ளார்கள். ஆசிரியர் பயிற்சி முடித்தவர்களுக்கு அரசுப் பணியில் சேர நிர்ணயிக்கப்பட்டிருந்த வயது வரம்பை ரத்துச் செய்தது, அனைத்துத் தரப்பினராலும் வரவேற்கப்பட்டிருக்கும் சூழ்நிலையில், மாண்புமிகு அம்மா அவர்கள் அரசுப் பள்ளிகளில் காலியாக இருக்கும் 22,817 பணியிடங்களும் நிரப்பப்படும் என்ற, 1–12–2004–க்குள் தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஆசிரியர் காலிப் பணியிடம் இல்லை என்ற நிலை உருவாக்கப்படும் என்ற அற்புதமான அறிவிப்பு, மூலையில் முடங்கிக் கிடந்த ஆசிரியர் பயிற்சி முடித்த மற்றும் பி.எட். முடித்த மாணவர்கள் உள்ளத்திலே பால் வார்த்துள்ளது.

மேலும், ஒரு கிலோ மீட்டர் வளையத்திற்குள் உள்ள குடியிருப்புப் பகுதியில் அனைவருக்கும் பயன் தரும் வகையில் ஒரு தொடக்கப் பள்ளி ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு தனிச் சிறப்பினை 2002–2003 ஆம் ஆண்டிலேயே தமிழகம் பெற்றுள்ளது. மாண்புமிகு அம்மா அவர்கள், 2004–2005 ஆம் ஆண்டில் 364 தொடக்கப் பள்ளிகள் நடுநிலைப் பள்ளிகளாகவும், 30 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும், 30 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள். தமிழகம் முழுவதும் மாணவ, மாணவியரின் அறிவு வளர்ச்சிக்கு அடையாளமாக அறிவியல் தமிழையும் இன்றைக்கு அம்மா அவர்கள் அறிமுகப்படுத்தி, அனைத்து வகுப்பு மாணவர்களும் அறிவியல் தமிழ் கற்றாக வேண்டும் என்று கட்டளையிட்டுள்ளார்கள். ஒரு காலத்தில் பணக்கார வீட்டு மாணவர்களும், சீமான்களின் செல்லப் பிள்ளைகளும் மட்டுமே பார்த்துப் பழகிய, படித்துத் தெரிந்துகொண்ட கணினிக் கல்வியை எங்களது கிராமப்புறத்து மாணவ, மாணவிகளும் அரசுப் பள்ளிகளில் படிக்கத் தொடங்கிட, பழகித் தெரிந்திட பாதை அமைத்துக் கொடுத்து அறிவியல் தமிழ் வழங்கிய அன்னையே, கிராமப்புற மாணவ, மாணவிகளின் சார்பாக எங்களது நன்றி மலர்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

"கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று பழங்காலத்தில் முன்னோர்கள் கூறுவர். இன்றைக்கு ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் கட்டி முடிக்கப்பட்டு முழுமையடையாத திருக்கோயில்களின் பணிகள் முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்திட ரூபாய் 25 ஆயிரம் வீதம் ஆறாயிரம் கோயில்களுக்கு வழங்கிய ஆன்மீக

அன்னையே, உங்களை வாழ்த்த, போற்ற வயதில்லை. வணங்குகிறேன், தாயே. 'சிரிக்கும் ஏழை முகம் காணவேண்டும்; அவர் சிந்தும் கண்ணீர் நிலை மாற வேண்டும்' என்பதற்கிணங்க, பெண்ணுரிமையைப் போற்றிப் பாதுகாக்கும் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாக நமது அம்மா அவர்கள், ஏழாயிரம் நிலமற்ற ஆதிதிராவிட சமுதாயத்தைச் சேர்ந்த பெண்களுக்கு அவர்கள் பயன்பெறும் வகையில் ரூபாய் 70 கோடி செலவில் புதிய திட்டம் ஒன்றை அறிவித்துள்ளதை மனதாரப் பாராட்டி மகிழ்கின்றோம்.

அதேபோன்று, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு, அவர்கள் தங்கிப் பயின்றிட இந்த நிதியாண்டிலேயே 100 விடுதிகள் கட்டி முடிக்கப்படும் என்ற நல்ல செய்தியும் பாராட்டுக்குரியது.

திராவிடப் பேரியக்கத்தின் தானைத் தளபதி பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதுபோல, 'மக்களிடம் அன்பு செலுத்து, மக்களிடம் செல், மக்களோடு வாழ், மக்களிடமிருந்து கற்றுக்கொள், மக்களுக்காகத் திட்டமிடு, மக்களிடையே பணியைத் தொடங்கு' என்பதற்கிணங்க, தமிழக மக்களுக்காகத் தனது வாழ்நாளையே அர்ப்பணித்துக்கொண்டு, மக்கள் பணியாற்றி வருகின்ற நமது மகத்தான தலைவியாம் அம்மா அவர்கள், இன்றைக்கு 'நமது கிராமம்' என்ற அற்புதமான திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கிராமங்களும் ஒட்டுமொத்த வளர்ச்சியை அடைவதற்காவும், குடிநீர், துப்புரவு, வடிகால் வசதி, சுகாதாரம், பெண்ணுரிமை, சத்துணவு, தூய்மை போன்ற உடல்நலம், ஆரம்பக் கல்வி, சுற்றுச்சூழல் மேம்பாடு, நீராதாரங்களின் மேலாண்மை, கிராமச் சாலைகள், தெரு விளக்குகள் போன்றவற்றைத் திட்டமிட்டுச் செயல்படுத்தும் அதிகாரம் அந்தந்தக் கிராமச் சபை மக்களிடம் கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு ஆளுமைத் தன்மை உருவாக்கப்படுகின்ற பயிற்சியினைப் தருகின்ற புரட்சிகரமான திட்டம்தான் நமது கிராமம் திட்டம்.

ஏழை, எளிய மக்களுக்காகவும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காகவும், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் ஆகியோருக்காகவும், ஆதரவற்றோர், பெண்கள், மீனவர்கள், நெசவாளர்களுக்காகவும் பல்வேறு நலத் திட்டப் பணிகளையும் அம்மா அவர்கள் ஆற்றி வருகிறார்கள். உலக வங்கியே பாராட்டும் வகையில் புதிய தொழில் கொள்கை மூலம் மாபெரும் தொழில் புரட்சியை மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.



காப்பிய நாயகி மணிமேகலை தன் கையிலிருந்த அமுதசுரபி என்ற அள்ள, அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் மூலம் ஏழை, எளிய மக்களின் பசிப் பிணியைப் போக்கினார் என்று காப்பியத்தில் படிக்கிறோம். அதேபோன்று, காவிரி டெல்டா பகுதி விவசாயிகள், பருவ நிலை, வறட்சி போன்ற கோரப்பிடியில் சிக்கித் தவித்தபோதும், நெசவாளர்கள் வறுமையில் வாடியபோதும், அவர்களின் பசிப் பிணி போக்கிய நவீன யுகத்தின் மணிமேகலையாக மாண்புமிகு அம்மா அவர்கள் திகழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

'விண்ணின் மழைத் துளி, மண்ணின் உயிர்த் துளி' என்பதை உலகுக்கு உணர்த்துகின்ற வகையில் மாபெரும் தொலைநோக்குத் திட்டமான மழை நீர் சேகரிப்புத் திட்டத்தை அறிமுகப்படுத்தி தமிழகத்தின் எதிர்காலச் சந்ததியினருக்கும் குடிநீர்ப் பற்றாக்குறையைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற உன்னத எண்ணத்தோடு, நிலத்தடி நீரின் தன்மையையும், நிலத்தடி நீரின் அளவினையும் உயர்த்தி நீராதாரத்தைப் பெருக்குகின்ற, அயல்நாட்டாரும் பாராட்டுகின்ற புரட்சிகரமான, அற்புதமான திட்டத்தை அறிமுகப்படுத்தி, தமிழகத்தில் 100 சதவிகிதம் நடைமுறைப்படுத்திக் காட்டிய நடமாடும் தெய்வம் நமது புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

பிற்பகல் 1–20

'நான் வாழ்வதற்காக என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன், நான் முறையாக வாழ்வதற்காக என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்' என்று உலக வரலாற்றில் இடம்பெற்றிருக்கும் மாவீரன் அலெக்சாண்டர் கூறுவார். அதைப்போல. நாளைய தமிழ்ச் சமுதாயம் ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் தன்மானத்தோடும், பொருளாதாரத் தன்னிறைவோடும், சுயமரியாதையோடும், சம உரிமையோடும் முறையோடு வாழ்வதற்காக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே உங்களுக்குக் கடமைப்பட்டிருக்கும் என்பதை இந்த அவையிலே மிகுந்த பெருமையோடு கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

'வெற்றி, தோல்விகள் என்னை என்றும் பாதித்ததில்லை, எப்போதுமே நான் சம நிலையோடு இருக்கிறேன்' என்று பத்திரிகையாளர்களிடம் கூறிய எங்களின் பெருமைமிகு தாயே, இந்திய நாட்டின் இளம் துறவி, வீரம் மிக்க சுவாமி விவேகானந்தர் கூறியதைப்போல, 'என் மகனே, கீழ்நோக்கிச் சென்றபடியும் துன்பத்தில் மூழ்கியபடியும் ஏராளமான

ஏழைகள் நீர் வாழும் பகுதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள், அவர்களை அணுகிச் சென்று ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் தொண்டு செய், பசியால் வாடுபவனுக்கு உணவு கொடு, அறியாமையில் உள்ளவனுக்கு உன்னால் முடிந்த அளவிற்குக் கல்வி புகட்டு. அச்சமே மரணம், அச்சத்திற்கு அப்பால் நீ போக வேண்டும்; அப்போதுதான் மற்றவரின் இதயங்கள்மீது நீ ஆட்சி செலுத்த முடியும் என்று, இன்று முதல் அச்சமற்றவனாக இரு; ஏழைகள், அறியாமை மிக்கவர்கள், நசுக்கப்பட்டவர்கள் ஆகியோருடைய நலனுக்காகப் போராடும் என்னுடைய முயற்சியை உங்களிடம் நான் ஒப்படைக்கிறேன். இந்திய நாட்டு மக்களின் நல்வாழ்வை மீட்டுத் தருவதற்காக உங்கள் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணிப்பதாக சபதம் மேற்கொள்; என் இளைஞனே. நம்பிக்கையை இழந்துவிடாதே, உனது பாதை கத்தி முனையில் நடப்பதைப்போல் மிகவும் கடினமானதுதான்; எனினும், எழுந்திரு, விழித்துக்கொள், மனம் தளராமல் நீ அடைய வேண்டிய குறிக்கோளைக் கண்டுபிடிப்பாயாக! நீங்கள் மகத்தான பணிகளைச் செய்யப் பிறந்தவர்கள் என்பதில் நம்பிக்கை கொள்ளுங்கள். சிறிய நாய்க் குட்டிகளின் குரைப்பை கேட்டு நீங்கள் அஞ்ச வேண்டாம்' தமிழ் இனத்திற்காகவும், தமிழ்ச் சமுதாயத்திற்காகவும் தனது வாழ்நாளை அர்ப்பணித்துக் கொண்ட எங்கள் அன்னையே,

> "முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
> இறையென்று வைக்கப் படும்."

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க தமிழகத்தில் நல்லாட்சி நடத்தி வரும் எங்களின் அன்பு அன்னையே, தமிழர்களின் இறைவியே, என்றென்றும் உங்களுக்காக விசுவாசமாகவும், உறுதுணையாகவும் நாங்கள் அனைவரும் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, நீங்கள் எங்கிருந்து இங்கே நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், கடைசியாக, இறுதியாக நான் சொல்லிக் கொள்வது, நீங்கள் வாழுகின்ற காலத்திலே நாங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நீங்கள் புரட்சித் தலைவி, முதல்வராக இருக்கின்ற காலத்திலே நாங்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறோம் என்ற எண்ணத்தோடு என்றென்றும் நாங்கள் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களும் உங்களுக்கு விசுவாசமாக இருப்போம் என்று இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



இறுதியாக ஒருசில கருத்துகளை மட்டும் என்னுடைய தொகுதிப் பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஒருசில நிமிடங்கள் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். கடந்த ஆண்டு நான் சட்டமன்ற கூட்டத் தொடரிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அமர்ந்திருக்கிறபோது, பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய ஒரு மனுவினைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே கொடுத்தேன். இந்த ஆண்டு, ஒரு ஆண்டு முடிவதற்குள் நான் கொடுத்திருந்த அத்தனை கோரிக்கைகளையும்—கிட்டத்தட்ட 23 கோரிக்கைகளை உள்ளடக்கிய ஒரு மனுவை—புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே இந்தச் சட்டமன்றத்திலேயே கொடுத்தேன்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களும் அதை உடனடியாக விசாரணைக்கு உட்படுத்தி, இந்த ஆண்டு, அதாவது சென்ற மாதத்திற்குள் நான் கொடுத்த அத்தனை மனுவையும் ஏற்றுக் கொண்டு, அத்தனை பணிகளையும் எங்களுக்கு முடித்துக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிறேன். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்மையான கோரிக்கைகள், தேவையான கோரிக்கைகள் எந்தச் சட்டமன்ற உறுப்பினர் கேட்டாலும் அதை வாரி வழங்குகின்ற தன்மையைப் பெற்றிருக்கிற அன்பு அன்னை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே ஆண்டில் எனக்கு 5 விடுதிகளைக் கட்டிக் கொடுத்து, ஒரு கோடியே ஐம்பத்தி ஏழரை இலட்சம் ரூபாய் செலவில் 5 மாணவர் விடுதிகளைக் கட்டிக் கொடுத்த புரட்சித் தலைவிக்கும், மேலும் ஒன்றியத்திற்கு 30 படுக்கைகள் கொண்ட ஒரு மருத்துவமனையை, சென்ற ஆண்டு கொடுத்தார்கள். அதுவும் எனது தொகுதியிலே ஒரு மருத்துவமனை இன்று 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக புரட்சித் தலைவி அவர்களுடைய கரத்தாலே தொடங்கப்பட்டு இன்று சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மிக நீளமான சாலைகள், 15 சாலைகள் போட்டுத் தரவேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே சென்ற ஆண்டு சொன்னேன். அந்த 15 சாலைகளும் இன்று போட்டு முடிக்கப்பட்டு நல்ல நிலையிலே இருந்து கொண்டிருக்கிறன. மேலும் எனது தொகுதியிலே—22 ஆதிதிராவிடர்களுக்கு—திருக்கோயில் பணிகளுக்காக 28 கோயில்களுக்கு தலா ரூ.25 ஆயிரம் வீதம் வழங்கி இருக்கிறார்கள்.

*பிற்பகல் 1–25*

அதேபோல பள்ளி கூடுதல் கட்டடங்கள் கிட்டத்தட்ட இரண்டு கோடி ரூபாய் செலவிலே, ஐந்து பள்ளிகளுக்கு, ஒவ்வொரு பள்ளிக்கும் நாற்பது இலட்சம் ரூபாய் வீதம் வழங்கியிருக்கிறார்கள்.

அதேபோல் தொகுதியிலே பெரிய ஏரி, வாலாஜா ஏரி என்ற ஓர் ஏரி இருக்கின்றது. அதனாலே கிட்டத்தட்ட இருபது ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பு பாசன விவசாயிகள் பயன்பெறுகின்ற அந்த ஏரியை வெட்டித்தர வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே நான் கோரிக்கை வைத்தேன். அதுவும் இருபது இலட்சம் ரூபாய் செலவிலே இப்பொழுது அந்தப் பணி நடந்து கொண்டிருக்கிறது.

கடைசியாக, அடிக்கடி நான் சட்டமன்றத்திலே பேசுகின்றபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும், எப்பொழுது பார்த்தாலும் இந்தச் சட்டமன்ற உறுப்பினர் பிச்சாவரத்தை விடமாட்டேன் என்கிறார் என்று சொல்வார்கள். அந்த அடிப்படையிலே எனது தொகுதியிலே இந்த ஏழை, எளிய மக்கள், சுற்றுலாப் பயணிகள், குறிப்பாக வெளிநாட்டிலிருந்து வருகின்ற சுற்றுலாப் பயணிகளைத் திருப்திபடுத்துகின்ற வகையிலே, மறைந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்ட பிச்சாவரம் சுற்றுலா மையம், பேரறிஞர் அண்ணா சுற்றுலா வளாகம் என்ற பெயரிலே அங்கே இருந்து கொண்டிருக்கிறது. அதை நான் ஒவ்வொரு கூட்டத் தொடரின்போதும் இங்கே புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய முன்னிலையிலே பேசியிருக்கிறேன். ஆனால் அதைப் பற்றி இந்தக் கூட்டத் தொடரிலே அதிகமாகப் பேசக்கூடிய சூழ்நிலை தற்போது இல்லை. காரணம் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள், மூவரும் சேர்ந்து எனக்குப் பல இலட்சங்களை ஒதுக்கீடு செய்து அதனுடைய பணிகள் அங்கே நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே குறைவான துடுப்பால் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற அந்த boat-கள் கூடுதலாக எனக்கு வேண்டும். Motor பொருத்திய boats வேண்டுமென்று சென்ற கூட்டத் தொடரில் கேட்கின்றபோது, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் உடனடியாக வழங்குவதற்குக் கோப்பு ஒன்றை அனுப்புங்கள் என்று சுற்றுலாத் துறை அமைச்சரிடத்திலே கூறினார்கள். அதற்கு ஏதோ ஒரு குழு, அங்கே சேறும், சகதியுமாக இருக்கிறது; ஆகவே,



இப்பொழுது motor பொருத்திய boat விடுவதற்கு ஏதுவாக இல்லையென்று குறிப்பிட்டார்கள். என்னைப் பொறுத்தவரையில் சனி, ஞாயிறு நாட்களிலே கிட்டதட்ட 10, 15–க்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் அங்கே வந்து விடுகிறார்கள் பஸ்ஸிலே. அங்கே 17 boat-கள்தான் இப்பொழுது நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கின்றன. ஒரு பஸ்ஸிலே வந்தவர்கள்கூட முழுவதுமாக அங்கே ஒரு மணி நேரம் உள்ளே சென்று பார்க்க முடியாத ஒரு சூழ்நிலையிலே, வருகின்றவர்கள் அடுத்த ஊருக்குச் செல்ல வேண்டுமென்று அந்த சுற்றுலாப் பயணிகளை உடனடியாக அழைத்துச் சென்று விடுகின்ற ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது, அதனால் இந்த அரசுக்கு பல்வேறு விதத்திலே வருவாய் இழப்பு.

கடலூர் மாவட்டத்திலேயே சுற்றுலாத் தலம் என்று சொன்னால், இப்பொழுது அந்தப் பிச்சாவரம் ஒன்றுதான் இருந்து கொண்டிருக்கின்றது. அதை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 'இதயக்கனி' திரைப்படம் மூலம் இந்த நாட்டிற்கே, இந்த உலகத்திற்கே எடுத்துக்காட்டாக அந்தப் பகுதியைக் காண்பித்து அந்தச் சுற்றுலா மையத்திற்கு இன்று ஜப்பானிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும், அமெரிக்காவிலிருந்தும்கூட சுற்றுலாப் பயணிகள் வருகிறார்கள். அவர்கள் வருகின்றபோது அந்தச் சாலை வசதி சரியாக இல்லையென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சுற்றுலாப் பயணிகளே குறை சொன்ன காரணத்தினால், சென்ற ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எண்பது இலட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்து (மணியடிக்கப்பெற்றது) ஆணை வழங்கி, இந்தச் சாலை முழுமையாகப் போடப்பட்டிருக்கிறது.

மேலும் ஒரே ஒரு மணித்துளி. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒன்றே ஒன்றுதான் கோரிக்கை. அது ஒன்றுதான் இன்று வரை நடைமுறைபடுத்தப்படாமல் இருக்கின்றது. 1996 ஆம் ஆண்டு நாம் ஆட்சியை விட்டுச் செல்கின்றபோது, அங்கே பாசிமுத்தான் ஓடை என்ற ஓர் ஓடையில் கிட்டத்தட்ட இருபது ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறுகின்ற, 500 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட ஒரு Shutter 1996 ஆம் ஆண்டு இடிந்து விழுந்து விட்டது முற்றிலுமாக. அதை அந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலே, ஐந்து ஆண்டுகள் திரும்பிப் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டு, நானும் கடந்த மூன்று ஆண்டுகளாகப் பல்வேறு கோரிக்கை மனுக்கள் கொடுத்திருக்கிறேன். ஆனால், அந்த செயற் பொறியாளர், அங்கே மதிப்பீடு இரண்டே கால்

கோடி ரூபாய் செலவிலே தயார் செய்யப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அங்கே கூறிக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஒன்றை மட்டும் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தனிக் கவனம் செலுத்தி, அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, இந்த நிதியாண்டிலேயே அதாவது, நாமே இந்த ஆட்சியில் அடிக்கல் நாட்டி, நம்முடைய ஆட்சிக் காலத்திலேயே அதன் திறப்பு விழாவுக்கும் ஆவன செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்திலே கோரிக்கை வைத்து, இந்த விவாதத்திலே கலந்துகொண்டு எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பினைப் பெற்றுத் தந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் எனது பணிவான, நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன். நன்றி. வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் மாலை 4–30 மணிக்குக் கூடும்.

*பின்னர் பேரவை பிற்பகல் 1–29 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.*

*பிற்பகல் 4–30*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் பிற்பகல் 4–30 மணியளவில் கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.கு. தமிழரசன்.

***திரு. செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அளித்துள்ள நிதிநிலை அறிக்கையின்மீது இந்தியக் குடியரசுக் கட்சியின் சார்பிலே என்னுடைய கருத்துகளை வழங்குகிற ஒரு நல்ல வாய்ப்பினை உருவாக்கித் தந்த உங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். பிப்ரவரி மாதம் 11 ஆம் தேதி இந்த அவையிலே அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்மீது காலத்தின் சூழலால் ஏறக்குறைய ஐந்தரை மாதங்களுக்குப் பிறகு இன்றைக்கு ஒரு விவாதம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. ஆக, ஓர் அரை ஆண்டைக் கடந்த பின்னாலேகூட ஜனநாயகத்தின் நெறிமுறையால், ஜனநாயகத்தின் பெயரிலே இருக்கின்ற மிகுந்த ஈடுபாட்டினால் இந்தப் பேரவையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பொது விவாதத்தை இங்கே



உருவாக்கி இருக்கிறார்கள். ஆனாலும்கூட இந்த நேரம் போதாது, விவாதிக்க நாட்கள் போதாது என்று சொல்கிற எதிர்க்கட்சிகள், நாள் தந்தால் வருவதில்லை, குறைத்தால் ஏன் இல்லை என்கிறார்கள். குதிரையை அப்படிக் கட்டினால் கடிக்கிறது, இப்படிக் கட்டினால் உதைக்கிறது என்று சொல்வார்களே, அதைப்போல வாய்ப்புக் கிடைக்கிறபோது வருவதில்லை, வாய்ப்பு இல்லையென்றால் ஏன் வாய்ப்பு இல்லை என்கிறார்கள். ஆக, குதர்க்கம் பேசி பொது மக்களைக் குழப்புகிற விதத்திலே ஒரு போக்கை எதிர்க்கட்சிகள் பின்பற்றினாலும்கூட ஜனநாயகத்தின் செழுமை கருதி, ஜனநாயகத்தின் அசைக்க முடியாத நம்பிக்கை கருதி, ஆறிய கஞ்சி பழங்கஞ்சி என்றாலும்கூட, ஓர் அரை ஆண்டு கடந்த பின்னாலும்கூட, இந்த ஆரோக்கியமான விவாதத்திலே இங்கே பங்குகொள்கிற, கருத்தை அளிக்கின்ற வாய்ப்பைத் தந்த உங்களுக்கு மீண்டும்கூட என்னுடைய நன்றியைச் சொல்கிறேன்.

உலகமே தமிழகத்தைப் பார்த்துக் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிற இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையிலே சட்டமன்றத்தின் முதல் நாள் கூட்டம் நிகழ்ந்தது. கும்பகோணத்தைக் குறிப்பிடாமல், கும்பகோணத்தைப் பற்றிச் சுட்டாமல் வேறு எதையும் நாம் தொடங்க முடியாது. 93 குழந்தைகளை, பச்சிளம் குழந்தைகளை, தளிர்களை அங்கே கருக விட்டுவிட்டோம். அந்தச் செய்தியைக் கேள்விப்பட்டவுடனேயே, தீ அணைவதற்கு முன்னாலேயே, தீயின் கொடூர நாக்குகள் அமைதி கொள்வதற்கு முன்பாகவே, தாயனைய தயாநிதியாய் நம்முடைய தமிழக முதலமைச்சர் அந்தத் தீ அணைவதற்கு முன்பாகவே அங்கே போய் நின்று, அவர்கள் அங்கே மேற்கொண்ட துரித நடவடிக்கைகளை இன்றைக்கு நிர்வாகத்திலே நம்பிக்கையுள்ளவர்கள், நிர்வாகத்தின் நுணுக்கங்களை அறிந்தவர்கள் நிச்சயம் பாராட்டியாக வேண்டும். ஆகவேதான், அங்கே மனித உரிமை ஆணையமே நேரிலே போய், அங்கே நீதியரசர் தங்கராஜ் அவர்கள் மிகச் சிறந்த திருப்திகரமான பணிகளை இந்த அரசு செய்திருக்கிறது என்று உள்ளம் திறந்து பாராட்டியிருக்கிறார்கள். 93 தளிர்கள் அங்கே தீக்கு ஆளானபோது அங்கேயும் அரசியல் குளிர்காய வேண்டுமென்று பலர் போனார்களே தவிர, பாரபட்சம் இல்லாமல் மனிதநேயத்தோடு, சகோதர உணர்வோடு, அதற்கு என்ன பரிகாரம் தேட வேண்டுமென்று போகவில்லை. குளிர்காய நினைத்தவர்கள் மத்தியிலே, கும்பகோணத்திலே நிகழ்ந்த அந்தக் கொடூரத் தீ விபத்துக்கு உரிய நடவடிக்கை எடுத்த தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தப் பாராட்டுகள், வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மன்றத்திலே பதிவு செய்யப்பட வேண்டும் என்பதனாலேதான் நான் இங்கே அழுத்தமாக பாராட்டிக் கொண்டிருக்கிறேன்.

[திரு. செ.கு. தமிழரசன்] [2004 ஜூலை 23

பிற்பகல் 4–35

ஒவ்வொரு நாளும் பல்லாயிரக்கணக்கான குடிசைகள் இந்தியத் துணைக் கண்டத்திலே எரிந்து கொண்டுதான் இருக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் வசிக்கிற பகுதிகளிலே, தலித் மக்கள் வசிக்கிற பகுதிகளிலே ஒவ்வொரு நாளும் அங்கொன்றும், இங்கொன்றுமாக ஆயிரக்கணக்கான குடிசைகள் எரிந்து கொண்டிருக்கின்றன.

குடிசைகள் எரிகிறபோதெல்லாம், அங்கேயெல்லாம் சிலரும் வெந்துசாகத்தான் செய்கிறார்கள். மொத்தமாகச் செத்தால்தான் நாங்கள் அழுவோம், தனித்தனியாகச் செத்தால் அதைப் பற்றிக் கவலைப்பட மாட்டோம் என்கிற வகையிலே இதிலே அரசியல் குளிர்காய்கிற பல அரசியல் கட்சிகள் இதையும் அரசியல் ஆக்குகிறார்கள்.

குடிசையே வேண்டாம். நாடு முழுவதும் குடிசையே இல்லாத நிலையைக் கொண்டுவருகிற திட்டத்தைக் கொண்டுவர வேண்டும். சில ஆண்டுகளுக்கு முன்னாலே பழவேற்காட்டிலே 13 பள்ளிக் குழந்தைகள், அங்கே சுற்றுலா போன அந்தப் பள்ளிக் குழந்தைகள் கடலிலே மூழ்கிப் போனார்கள். இறந்து போனார்கள். வேதனைக்குரிய செய்தி. கடலையே தூர்த்துவிட வேண்டும் என்று கட்சிக்காரர்கள் பேசினார்களா? விபத்து. விபத்துக்கு வேதனைப்படலாம், பரிகாரம் காணலாம், நடவடிக்கை மேற்கொள்ளலாம். அரசியல் ஆக்கக்கூடாது. அதைக்கூட அரசியல் ஆக்குகிற தன்மையிலேதான் இன்றைக்கு இந்த ஆளுங்கட்சி விமர்சனத்திற்கு உள்ளாகிறது என்கிறபோது, இந்த அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகளைப் பாராட்டுவதும், பதிவு செய்வதும் என்னுடைய உள்ளார்ந்த உணர்வு என்பதனாலே, இவற்றை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே பாராட்டுவதற்குப் பல அம்சங்கள் இருக்கின்றன. பல நடவடிக்கைகளை, பல புதிய திட்டங்களை, புதிய செயல்பாடுகளை இந்த நிதிநிலை அறிக்கை வகுத்துத் தந்திருக்கிறது. ஆனாலும்கூட, அனைத்தையும் பாராட்டி இந்த உயரிய நேரத்தை நான் வீணடித்து விடவேண்டும் என்று விரும்பாமல், சொல்ல வேண்டியவைகளைச் சுட்டிக்காட்ட வேண்டும்; அதுவும் கேட்பதற்கு, கேட்டுச் செயல்படுவதற்கு நல்ல உள்ளம் மிக்கவர்களிடம் சுட்டிக்காட்டுவதுதான் ஒரு நல்ல அரசியல் பண்பாடாக இருக்கும் என்ற வகையிலே நான் சிலவற்றைச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்.



2004 ஜூலை 23] [திரு. செ.கு. தமிழரசன்]

நம்முடைய அம்மாவினுடைய ஆட்சி ஆயிரம் கண் கொண்டு உயரிய அதிகாரத்திலே அனைத்தையும் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு ஆட்சி. பல்லாயிரம் கண்கள் கொண்டு பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு ஆட்சி. அப்படிப்பட்ட ஆட்சியில், எல்லாம் அவர்களுக்குத் தெரியும். தெரிந்தாலும்கூட, இந்த அவையிலே அவர்களுக்குச் சொல்ல வேண்டிய சில செய்திகளை, இந்த மன்றத்திலே சுட்டிக்காட்ட வேண்டியவைகளைக் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டியவைகளைக் கொண்டுவரலாம் என்ற உணர்வோடு சில பாராட்டுகளையும், சில கோரிக்கைகளையும் நான் சொல்ல விழைகின்றேன். இதிலே பாராட்டுவதற்குப் பல இருந்தாலும்கூட, ஒரு மூன்றை நான் முன்னுதாரணமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'நமது கிராமம்' என்ற ஒரு புதிய சிறப்பு அம்சம் இந்த நிதிநிலை அறிக்கையிலே வலியுறுத்தப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு கிராமத்தைத் தத்தெடுத்துக் கொண்டு, அந்தக் கிராமத்திற்கு 15 இலட்சம் ரூபாய் அளவிலே திட்ட மதிப்பீடுகளைச் செய்து அந்தக் கிராமத்திற்குத் தன்னிறைவுகளை ஏற்படுத்துவது இந்த அம்சத்தினுடைய நோக்கம். ஒரு கிராமம் வேண்டாம். ஒரு ஆண்டுக்கு 3 கிராமங்களையாவது எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு தொகுதியிலும் 3 ஒன்றியங்கள் இருந்தால், ஒரு ஒன்றியத்திற்கு ஒரு கிராமம் என்கிற வகையிலேயாவது, 3 கிராமங்களை எடுத்துக்கொள்ளுங்கள். 15 இலட்சம் ரூபாய் போதாது. 25 இலட்சம் ரூபாயோ, 30 இலட்சம் ரூபாயோ, குறைந்த அளவிற்கு ஒரு அரைக் கோடி ரூபாயாவது அந்தக் கிராமத்திற்கு ஒதுக்கி, அந்தக் கிராமத்தினுடைய அடிப்படை வசதிகளை–குடிநீர் வசதி, சுகாதார வசதி, பள்ளிக்கூட வசதி, சாலை வசதி, செத்துப் போனால் புதைப்பதற்குச் சுடுகாடுகள் இல்லாமல் இருக்கிற பல கிராமங்களுக்குச் சுடுகாட்டு வசதி, மயானப் பாதை வசதி போன்ற அடிப்படை வசதிகளை—ஏற்படுத்தி, ஆக, ஒரு ஆண்டுக்கு ஒரு தொகுதியிலே 3 கிராமங்களையாவது அரைக் கோடி ரூபாய் அளவிற்குத் திட்ட மதிப்பீடுகளை வைத்து நீங்கள் கொண்டு வருவீர்களேயானால் ஒரு பத்து ஆண்டு காலத்திலே தமிழ்நாட்டிலே அடிப்படை வசதிகள் இல்லாத கிராமங்களே இல்லை என்கிற அந்த வாய்ப்பை, அந்தச் சூழலை நாம் உருவாக்க முடியும். நம்முடைய நிதியமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களும் 'நமது கிராமம்' என்று கொண்டுவந்திருக்கிற இந்த அற்புதமான திட்டத்தை நான் பாராட்டி, இந்தத் திட்ட மதிப்பீட்டை உயர்த்துங்கள், இதன் எண்ணிக்கையை உயர்த்துங்கள், ஒன்று என்பதை மூன்று ஆக்குங்கள் ஒரு தொகுதியிலே என்ற அந்த என்னுடைய கருத்தை

நாம் மாண்புமிகு நிதி அமைச்சருடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*பிற்பகல் 4–40*

அதேபோல இன்னொரு சமூகப் புரட்சிக்கு வித்திடுகிற, ஒரு சமூக மறுமலர்ச்சிக்கு வித்திடுகிற ஒரு அடிப்படை அம்சத்தையும் இந்த நிதிநிலை அறிக்கையிலே தந்திருக்கிறீர்கள். ஒரு கிராமத்திலே, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற 25 குடும்பங்களைத் தத்தெடுத்து அவர்களுடைய சமூக வளர்ச்சிக்கு, அவர்களுடைய பொருளாதார வளர்ச்சிக்கு, அவர்களுடைய குடும்ப வளர்ச்சிக்கு இந்த அரசு மேலான உதவிகரமான திட்டத்தைக் கொண்டுவருவது என்கிற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். இது ஒரு நீண்ட தொலைநோக்குத் திட்டம். ஒரு கிராமத்திலே வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற 25 குடும்பங்களை எடுத்துக்கொள்வது என்ற இந்தத் திட்டத்தையும் நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். ஒவ்வொரு தேர்ந்தெடுக்கப்பட்ட கிராமங்களிலே இருந்தும், Below Poverty line, B.P.L. என்று சொல்லப்படுகிற வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற 25 குடும்பங்களைத் தத்தெடுத்து—ஆனால் B.P.L. என்பது இருக்கிறதே, அது கடந்த ஆட்சியிலே தேர்ந்தெடுத்த அட்டவணையாகவே இருக்கிறது. கடந்த ஆட்சியிலே கட்சிக்காரர்களை எல்லாம் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்களாகப் பட்டியல் இட்டு வைத்துவிட்டுப் போய், இன்னும் அந்த B.P.L. பட்டியல்தான் இருக்கிறது வருவாய்த் துறையிலே. உண்மையாக வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற 25 குடும்பங்களை நீங்கள் தேர்ந்தெடுக்க வேண்டும்—ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு வரையறை வகுத்து ஒரு இலட்சம் குடும்பங்களுக்கு என்று அந்தப் பட்டியல் வளருமானால் தமிழ்நாட்டில் வறுமையே இல்லை, தமிழ்நாடுதான் சமதர்ம சமுதாயத்தைப் படைப்பதிலே இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழிகாட்டியாக இருக்கிறது என்கிற ஒரு நிலைமை இந்தத் திட்டத்தின் மூலம் உருவாகலாம். தொலைநோக்குரிய இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

இதேபோல இந்த மண்ணின் மைந்தர்களுக்கு, இந்த மண்ணின் பூர்வீகக் குடிகளுக்கு, சொந்த மண்ணிலே குடிசை போடுவதற்குக்கூட இடம் இல்லாமல் சுரண்டப்படுகிற அவல நிலைக்கு ஒரு மாறுதலாக, நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். இன்னொரு திட்டத்தை, இன்னொரு அம்சத்தை இந்த ஆதிதிராவிடர்களுக்கு, 7000 ஆதிதிராவிடப் பெண்களுக்கு நிலம்



வாங்குவதற்குப் பாதி மானியத்துடன் ஒரு இலட்சத்திலிருந்து இரண்டு இலட்சம் வரை நிதி வழங்குகிற அற்புதமான திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். மண்ணின் மைந்தர்களை மீண்டும் மண்ணுக்குரியவர்களாய் மாற்றுகிற சமூக மறுமலர்ச்சியை நடைமுறைப்படுத்துகின்ற பொதுவுடைமை நோக்கிலே மிக உயரிய, பரந்த கண்ணோட்டத்தோடு இந்த அம்சம் இந்த நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. இதை நான் பாராட்டுகிறேன். 7 ஆயிரம் ஆதிதிராவிடப் பெண்கள், அதுவும் ஆண்களைவிடப் பெண்களுக்குச் சொத்து இருக்குமானால் பாதுகாப்பாக இருக்கும். அடித்தளத்துச் சமுதாயத்திலே இருக்கிற ஆண்கள் சில நேரங்களிலே மதுப் பழக்க அவலத்திற்கு உள்ளாகி சொத்தை விரயம் செய்கிற, வீணாக்குகிற வரலாறு இருக்கிறது. அப்படியெல்லாம் இந்த மண்ணின் மைந்தர்கள் சொத்தை இழந்தார்கள். இன்றைக்குப் பெண்களுக்கு இதை ஆக்கியதன் மூலம் இன்றைக்குப் பெண் குலவிளக்காக இருக்கிற நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மீண்டும் மண்ணின் மைந்தர்களுக்கு மண்ணைத் தருகிற இந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன், பாராட்டுகிறேன்.

பல திட்டங்கள் இதிலே இருக்கின்றன. பாராட்டிக்கொண்டே இருக்கலாம். நான் தொடக்கத்திலே சொன்னதுபோல, சொல்ல வேண்டியவற்றைச் சொல்வதற்கு இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதிலே சிலவற்றை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், முதல்வர் அவர்களும் தாராள மனப்பான்மையோடு கோடிக்கணக்கிலே, வரி இல்லாத, ஏழை எளிய மக்களைச் சுரண்டாத, மேலும் அவர்களுக்கு தலைச் சுமை ஏற்படுத்தாத ஒரு வகையிலே நிதிநிலை அறிக்கையைத் தந்திருக்கிறார்கள். அவர்களைக் கடுமையாகச் சுரண்டவில்லை. கடுமையான பளுவை அவர்களுக்கு ஏற்படுத்தவில்லை. அவர்களுக்குச் சுமை இல்லை. இவற்றுக்கெல்லாம் பணத்திற்கு எங்கே போவார்கள்? குறைகள் சொல்வது மட்டும் போதாது. நாம் வழி சொல்ல வேண்டும் அல்லவா? ஆகவே நான் சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். அவற்றை நீங்கள் செயல்படுத்த வேண்டும் என்பதற்காக நான் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்குச் செய்தி உலகம் என்பது, அதுவும் தொலைக்காட்சி உலகம் என்பது மனித சமுதாயத்தின் வாழ்க்கையிலே ஓர் அம்சம் ஆகிவிட்டது. தொலைக்காட்சி உலகம் ஒரு வலுவான சக்தியாக இன்றைக்குச் சமூகத்திலே வளர்ந்திருக்கிறது. தொலைக்காட்சி இல்லாத

வீடே இல்லை. குடிசைகளிலேகூட, ஏழையெளிய மக்கள்கூட, வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிறவர்கள்கூட தொலைக்காட்சியைப் பயன்படுத்துகின்ற ஒரு தன்மை இன்றைக்குச் சமூகத்திலே மனித வாழ்வோடு இரண்டற இணைந்து விட்டது. இப்படிப்பட்ட பல தொலைக்காட்சிகள், தமிழ்நாட்டிலே மட்டும் 11 சேனல்கள் இருக்கின்றன. 11 வகையான தொலைக்காட்சிகள் இருக்கின்றன. அதிலே கேபிள் இருக்கிறதே, அந்த கேபிளை யார் வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அதை ஒரு மாஃபியா கும்பல்கூட நடத்தலாம், கட்டப் பஞ்சாயத்து மூலம் நடத்தலாம். கேபிளை இன்றைக்குச் சில தனியார் நிறுவனங்கள் தங்களுடைய கைக்குள்ளே வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆகவே இந்த கேபிளை அரசு நெறிமுறைப்படுத்த வேண்டும். அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் பகிரங்கமாக ஏலம் விடலாம். மாநகராட்சிகளிலே, நகராட்சிகளிலே, ஏன் கிராமங்களிலேகூட இந்த கேபிள் டி.வி–உரிமை முறையை நீங்கள் ஏலம் விடலாம். ஏலம் விட்டால் இந்த அரசாங்கத்திற்கு ஓராண்டுக்கு மிகக் குறைந்தபட்சம் 500 கோடி ரூபாய் வரையிலே கிடைக்கும். அதைவிட, அதிலே படித்தவர்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும். அதிலேயும் இட ஒதுக்கீட்டைத் தரலாம்; reservation தரலாம். இவ்வளவு பேருக்கு இத்தனை ஒதுக்கீடு தருகிறோம், 20% தலித்துகளுக்கு, மற்ற சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு என்று அப்படிப்பட்டதொரு இட ஒதுக்கீட்டின் மூலமாகக் கூடத் தரலாம். சென்னை மாநகராட்சிக்கு மட்டும் ஆண்டொன்றுக்கு 50 கோடி ரூபாய்க்கு வருகிற வருமானம் தனியாருக்குப் போய்க் கொண்டிருக்கிறது. யார், யாரோ, இந்தத் துறையில் இருக்கிற அந்த வர்த்தகச் சூதாடிகள் இலாபத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, Cable T.V.-யை அரசாங்கம் நெறிமுறைப்படுத்தி பகிரங்க ஏலம் ஏற்படுத்தி வருவாய் ஏற்படுத்த வேண்டுமென்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 4–45*

அதேபோல, hoardings இருக்கிறதே, விளம்பரப் பலகைகள், இப்போது விளம்பர யுகம். விளம்பர யுகம் என்பதாலேதான் திருப்பித் திருப்பிப் பொய்யைச் சொல்லி, மாறி மாறி எதையோ சொல்லி, மக்களைத் திசை திருப்பி, மக்களை மாற்றி, சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லி,மக்களை ஏமாற்றிக் கொண்டிருக்கிற அரசியலைக்கூட இன்றைக்கு நாம், நாட்டிலே பார்க்க முடிகிறது. அப்படிப்பட்ட விளம்பர யுகத்திலே இன்றைக்கு hoardings இருக்கிறதே, அது கோடிக்கணக்காகப் பணம் புரளுகிற ஒரு துறை. Private land இருக்கிறது; Public land இருக்கிறது; Private land–லே hoardings இருக்குமேயானால் அவர்கள் அரசாங்கத்திற்கு வரி தர வேண்டும். யார் அந்த நிலத்திற்குச் சொந்தக்காரர்களோ, அவர்களுக்கு வாடகை தர வேண்டும், அரசாங்கத்திற்கு வரி தர வேண்டும். ஆனால் Public land–லே இப்படிப்பட்ட hoardings வருகிறபோது, அவர்கள் வரி தந்தால் போதும், வாடகை தர வேண்டிய அவசியம் இல்லை. சாலைகளிலே வைக்கப்படுகிற hoardings–க்கு எல்லாம் வாடகை கிடையாது. ஆனால், அதிலே மத்திய இரயில்வே துறையிலே சென்று நீங்கள் ஒரு hoarding வைத்தால் இரயில்வே துறைக்கு வாடகை தர வேண்டும். வாடகை தராமல் இரயில்வே அந்த இடத்தை அனுமதிக்காது. ஆனால் இங்கே மாநகராட்சிகளிலே, சென்னையிலே, கோவையிலே, மதுரையிலே, பெரிய நகராட்சிகளிலே நீங்கள் hoardings வைக்கிறபோது வரி தந்தால் போதும், அரசாங்கத்திற்கு வாடகை கிடையாது. அரசாங்கத்தினுடைய இடங்களிலே வைக்கிறார்கள். வாடகையில்லாமலேயே, இதில் ஒரு குறிப்பிட்ட சிலர் தமிழ்நாட்டிலே கோடிக்கணக்கிலே சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள். கோடிக்கணக்கிலே பலர் இதை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்திற்கு வரவேண்டிய வருவாய் தடுக்கப்படுகிறது. Private land–லே வைக்கிறபோது வாடகை தருகிறர்கள். Public land–லே வைக்கிறபோது வாடகை கிடையாது. இதை நீங்கள் முழுக்க முழுக்க எடுத்துக்கொள்ள வேண்டும். உச்ச நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்திருக்கிறது. நீங்கள் ஏன் கொடுக்கிற விண்ணப்பங்களை எல்லாம் பரிசீலிக்க முடியாது என்று தடுக்கிறீர்கள் என்று? இதற்குச் சிலர் stay வாங்கி வைத்திருக்கிறார்கள். 1998–லே இந்த மன்றத்திலேயே அன்றைக்கிருந்த ஆளுங்கட்சி ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. இதிலே வேடிக்கை என்னவென்றால், சட்டத்தைக் கொண்டு வந்ததும் ஆளுங்கட்சிதான்; அதற்கு stay வாங்கியதும் அதே கட்சியிலே உள்ளவர்கள்தான். அப்படி அதை நிறுத்தினார்கள். 3000 பேருக்கு மேலே மனுப் போட்டு அவை பரிசீலனையிலே இருக்கின்றன. ஆகவே, இந்த hoardings–ஐ நீங்களே எடுத்துக்கொள்ளுங்கள். இதிலே மட்டும் மிகக் குறைந்தபட்சம் ஒரு ஆண்டுக்கு ஒரு 300 கோடி அல்லது 400 கோடி ரூபாய் இந்த அரசாங்கத்திற்கு வருமானமாகக் கிடைக்கும். பல நல்ல திட்டங்களைத் தாராளமாக வழங்குகிற இந்த அரசு, ஏன் சிலர் சம்பாதிப்பதற்கு இவற்றையெல்லாம் மன்னித்துக் கொண்டிருக்க வேண்டும்; பொறுத்துக் கொண்டிருக்க வேண்டும்? ஆகவே, அந்த hoardings–ஐ எல்லாம் இந்த அரசாங்கமே எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை நான் ஒரு யோசனையாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

அதேபோல, மூன்றாவதாக, இது கொள்கை அளவிலே பேசப்படுகிற விஷயமாகக்கூட இருக்கலாம். இதைப் பலர் பேசுவதற்குத் தயங்கலாம். ஆனால், உண்மையைப் பேசுவதும், எதார்த்தத்தைப் பேசுவதும், தேவையைப் பேசுவதும் சரியானதே என்பதனாலே நான் இங்கே சொல்ல விரும்புகிறேன்.

கள்ளச் சாராயத்தைக் கட்டுப்படுத்துவதிலே, கள்ளச் சாராயத்தைத் தடுப்பதிலே இந்த அரசு முனைப்பாக இருக்கிறது. கொள்கை அளவிலே அதிலே இருக்கிறது. நான் பாராட்டுகிறேன். ஆனால், அதை நடைமுறைப்படுத்துவதிலே ஏராளமான சிக்கல்கள் இருக்கின்றன. இது இன்றைக்கு அல்ல, நேற்றைக்கு அல்ல. ஆயிரம் ஆண்டு காலமாக நம்முடைய பழைய இலக்கியங்களிலே கள்ளச் சாராயம் இடம் பெற்றிருக்கிறது; பேசப்படுகிறது. அது இவ்வளவு காலமாக இருந்து கொண்டிருக்கிற ஒன்றாக இருக்கிறது. ஆகவே நான் சொல்கிறேன், மலிவு விலை மதுக் கடைகளை இந்த அரசாங்கம் திறந்தால் தவறில்லை. அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தால் அது தவறில்லை. பக்கத்திலே இருக்கிற கேரளாவிலே இருக்கிறது; ஆந்திராவிலே இருக்கிறது; கர்நாடகத்திலே இருக்கிறது; பாண்டிச்சேரியிலே இருக்கிறது. இப்படி, பக்கத்திலே இருக்கிற மாநிலங்களிலே எல்லாம் இருக்கிறது. தமிழ்நாட்டில் மட்டும் ஏன் கூடாது? காந்தீயம் பேசுகிறவர்கள், மதுவிலக்குக் கொள்கையிலே நாங்கள் உறுதியானவர்கள் என்று சொல்கிறவர்கள், அதுதான் எங்களுடைய மிகப் பெரிய கொள்கை என்று சொல்கிறவர்கள், அவர்கள் ஆட்சி புரிகிற எல்லா மாநிலங்களிலேயும் இதை அனுமதித்துள்ளார்களே! தமிழ்நாட்டிலே மட்டும் ஏன் கூடாது? ஆகவே, நாம் கொஞ்சம் வறட்டுத் தன்மையை விட்டு மலிவு விலை மதுவைக் கொண்டு வந்தால் தவறில்லை. அதனாலே கள்ளச் சாராயம் இருக்காது. அது நடைமுறையில் ஒழிக்கப்படும். அதனால் சமூக அமைதி இருக்கும். கள்ளச் சாராயத்தினால்தான் கிராமப்புறங்களிலே எல்லாம் பல தகராறு, குழப்பம், மோதல், சட்டம், ஒழுங்குப் பிரச்சினை வருகிறது. ஆகவே, மலிவு விலை மதுவை இந்த அரசு கொண்டு வந்தால் அதிலே தவறில்லை. மற்றவர்கள் எல்லாம் இதைச் சொல்லி, கொள்கை பேசி, நடைமுறையிலே மாறாக இருக்கிறார்கள். நாம் ஏன் இந்த அரசு—இவ்வளவு இழப்புக்கிடையிலே இதைத் தாங்கிக் கொண்டிருக்க வேண்டும்? ஆகவே அதைக் கொண்டு வந்தால் தவறில்லை. கொண்டுவாருங்கள். அதன் மூலம் ஒரு ஆண்டிற்கு ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே அரசாங்கத்திற்கு வருமானம் வரும். அவ்வளவு பணப் புழக்கமும் வேறு எங்கோ போகிறது. ஆகவே அதைக் கொண்டுவாருங்கள் என்று நான் குறிப்பிட விரும்புகிறேன்.





பிற்பகல் 4–50

நான் இந்த நிதிநிலை அறிக்கையிலே பேசுகிறபோது எந்த மக்களின் பிரதிநிதியாக, எந்தச் சமூகத்தின் பிரதிநிதியாக இருக்கிறேனோ, அம்மக்களின் பிரச்சினைகளை நான் பேசியாக வேண்டும். அதுவும் புரட்சித் தலைவி அவர்கள் புரட்சித் தலைவருக்குப் பின்னால், ஒடுக்கப்பட்ட மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருக்கக்கூடியவர்; ஒடுக்கப்பட்ட மக்களின் பெரும் நம்பிக்கைக்கு உள்ளானவர், ஆகவேதான் நான் அதைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே ரூ.8 ஆயிரம் கோடிக்குத் திட்ட மதிப்பீடுகள் இருக்கின்றன. ரூ.8 ஆயிரம் கோடிக்குத் திட்ட மதிப்பீடுகள். நம்முடைய மத்திய, மாநில நெறிமுறைகளின்படி தமிழகத்திலே மட்டும் 20 சதவிகிதம் ஒடுக்கப்பட்ட மக்கள், நலிந்த மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். இன்றைக்கு நம்முடைய அரசாங்கத்தினுடைய மக்கட்தொகைப் புள்ளிவிவரத்தின்படி 19.7 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்கள் இருக்கிறார்கள். மலைவாழ் மக்கள் 1 சதவிகிதம் இருக்கிறார்கள். ஏறக்குறைய 20 சதவிகிதத்திற்கு மேலே; அதாவது தமிழ்நாட்டிலே நடக்கிற, நடந்து போகிற ஐவரிலே ஒருவன் தலித்–ஆக இருக்கிறான். ஐந்திலே ஒரு பங்கு தலித் சமுதாயத்தினுடைய பங்கு இருக்கிறது. ஆகவே S.C.P. என்று சொல்லப்படுகிற இந்த Special Component Plan- படி ரூ.8 ஆயிரம் கோடியிலே ஒரு ரூ.1,700 கோடிக்குத் திட்ட மதிப்பீடுகள் இந்த நலிந்த மக்களுக்காக இருந்தாக வேண்டும். ஆனால், ஏறக்குறைய ரூ.380 கோடிதான் நலிந்த மக்களுக்கான திட்ட மதிப்பீடாகக் குறிக்கப்பட்டிருக்கின்றது. பல வகையிலே, பல வேளைகளில் இந்த ரூ.1700 கோடி வேறு வகையிலே செலவழிக்கப்பட்டிருக்கலாம். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் அதை ஆழமாக அவருடைய நிர்வாகத்திலே அவர்கள் பார்த்திருப்பார்கள்; சொல்வார்கள்.

நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால், ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் புரட்சித் தலைவர் அவர்களும், புரட்சித் தலைவி அவர்களும் பல முன்னுதாரணங்களைத் தமிழ்நாட்டிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். அம்மா ஒரு தொழிற்பேட்டையை ஈரோட்டிலும், திருப்பூரிலும் உருவாக்கினார்கள். அந்தத் தொழிற்பேட்டையிலேகூட இன்றைக்குப் பல இடர்ப்பாடுகள் இருக்கின்றன; முட்டுக்கட்டைகள் இருக்கின்றன. அவர்களுக்கு நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட வேண்டும். அதைப் பற்றி ஒரு ஆய்வு செய்ய வேண்டும். பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு பல முட்டுக்கட்டைகளைப் போட்டது. இந்தியாவிலேயே

தலித்களுக்காக ஒரு தொழிற்பேட்டையை, ஒரு முன்னுதாரணமாகத் தமிழ்நாட்டிலே புரட்சித் தலைவி அவர்கள் 1993–வது ஆண்டிலே கொண்டுவந்தார்கள், 200 தொழிலதிபர்களை, தலித்துகளை ரூ.1 கோடி மதிப்பீட்டிலே உருவாக்குவது என்று. அது முட்டுக்கட்டையிலே, இடர்ப்பாட்டிலே இருக்கிறது.

நான் இன்றைக்கு என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்திலே 1986–87—லே நம்முடைய பேரவைத் தலைவர் அண்ணன் அவர்களுக்குத் தெரியும், இந்த அவையிலே பேசப்பட்ட விஷயம். அன்றைக்கு ஆதிதிராவிட மக்களுடைய அடிப்படைத் தேவைகளுக்காக, ஆதிதிராவிடக் குடியிருப்புகளிலே இருக்கிறவர்களுடைய அடிப்படைத் தேவைகளுக்காக ஒரு நிதிநிலை அறிக்கையை உருவாக்கலாம் என்று புரட்சித் தலைவர் அவர்கள் விரும்பினார்கள். அவரது உடல்நலக் குறைவினால் அது முடியாமல் போனது.

இன்றைக்கு இந்தியாவிலேயே முன்னுதாரணமாக நம்முடைய நிதியமைச்சர் அவர்களும், நம்முடைய முதல்வர் அவர்களும், நிதித் துறையிலே ஒரு ஆய்வை ஏற்படுத்தி, ஆதிதிராவிட மக்களுக்காக ஒரு தனி நிதிநிலை அறிக்கையை நீங்கள் உருவாக்க வேண்டும். Special Budget for Dalits. நாம் இந்த அவையிலே மின்சாரத் துறைக்கு என்று ஒரு தனி பட்ஜெட் போடுகிறோம். நாடாளுமன்றத்திலேகூட இரயில்வேக்கு ஒரு தனி பட்ஜெட் போடுகிறோம். இரயில்வேக்கு ஒரு தனி பட்ஜெட்; General Budget என்பது தனியாக இருக்கிறது. இந்த அவையிலேகூட General Budget இன்றைக்கு விவாதத்திலே இருக்கிறது. Electricity Budget வரும். மின்சாரத் துறைக்கு ஒரு பட்ஜெட் நாம் அனுமதிக்கிறோம். அதைப்போல ஆதிதிராவிடர் நலத் துறைக்கு இந்த Special Component Plan–ல், சிறப்புக் கூறுத் திட்டத்திலே கிடைக்கக்கூடிய இந்தத் தொகைகளை ஒரு முன்வைப்பாக வைத்து ஒரு தனி நிதிநிலை அறிக்கையை, ஆதிதிராவிட மக்களுடைய வளர்ச்சிக்கு, அரை நூற்றாண்டு கால சுதந்திர இந்தியாவிலே அவர்களுக்கு, இந்த ஆதிதிராவிடர் நலத் துறைக்குத் தனி நிதிநிலை அறிக்கை அளிக்க வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு என்ன காரணம் என்றால், ஒரு மாதத்திற்கு முன்னாலே ஒரு செய்தி; தூத்துக்குடி மாவட்டத்திலே எட்டையபுரம் வட்டத்திலே டி.சிவசண்முகபுரம் என்ற ஒரு கிராமம். ஒரு மாதத்திற்கு முன்னாலே நடந்த செய்தி. அந்தக் கிராமத்திலே அங்கிருக்கிற அருந்ததிக் குடியிருப்பு மக்கள் ஆண் நாய் வளர்க்கக் கூடாது. என்ன இது அதிசயம்? ஆண்





நாய் ஏன் வளர்க்கக் கூடாது என்று கேட்டால், அந்த ஆண் நாய் மற்ற உயர்ந்த சாதியினர் வசிக்கக் கூடிய பகுதிகளுக்குப் போய் அங்கே இருக்கிற பெண் நாய்களைக் கெடுத்துவிடுகிறது. ஆகவே, அவர்கள் ஆண் நாய் வளர்க்கக் கூடாது என்று அடக்குமுறை. புரட்சிக் கவிஞன் பாரதி பிறந்த மண்ணிலே, தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்திலே டி.சிவசண்முகபுரம் என்ற கிராமத்திலே ஆதிதிராவிட மக்கள் குடியிருப்பிலே ஆண் நாய் வளர்க்கக் கூடாது என்று அங்கே எழுதப்படாத சட்டம் நிலவுகிறது. இதை நான் சொல்லவில்லை. மனோன்மணீயம் பல்கலைக்கழகம்; நம்முடைய அரசுப் பல்கலைக்கழகம்; அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய அந்தச் செய்தி மலரிலே, அவர்கள் நடத்திய அந்த ஆய்விலே, பல்கலைக்கழக ஆய்வுக் கட்டுரையிலே இதைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

இன்னமும்கூட பாப்பாரப்பட்டியிலும், கீரிப்பட்டியிலும், நாட்டார்மங்கலத்திலும் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலையிலே நாம் இருக்கிறோம். ஆகவேதான் இப்படிப்பட்ட ஒரு சூழலிலே நான் கேட்கிறேன். ஆதிதிராவிட மக்களுக்கு ஒரு தனி நிதிநிலை அறிக்கையை, இந்தியாவுக்கே முன்னுதாரணமாக, ஓர் எடுத்துக்காட்டாக நம்முடைய தமிழக முதல்வர், ஒடுக்கப்பட்ட மக்களின் உற்ற தோழராக, கலங்கரை விளக்கமாக இருக்கக்கூடிய டாக்டர் புரட்சித் தலைவி அரசு கொண்டு வர வேண்டுமென்பதை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 4–55

தமிழ்நாட்டில் தலித்துகளின் மக்கள் தொகை 20 விழுக்காடு என்று நம்முடைய அரசாங்கப் புள்ளிவிவரமே கூறுகிறது. ஏற்கெனவே நாம் 18 + 1, 19 சதவிகிதம்–நம்முடைய நிதியமைச்சர் மற்றும் பேரவை முன்னவர் அவர்கள்கூட...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஐந்து மணித்துளிகளில் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. செ.கு. தமிழரசன்:** பேச்சை முடித்துவிடுகிறேன். ஆகவே அதைச் செயல்படுத்திட வேண்டும். நம்முடைய நிதியமைச்சர் அவர்கள்கூட, வருங்காலத்திலே இரண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியை, தலித்துக்களுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கையை மத்திய அரசிடம் வலியுறுத்தி வருகிறார். ஏனென்றால் நம்முடைய மக்கள்

[திரு. செ.கு. தமிழரசன்] [2004 ஜூலை 23

தொகை விகிதாச்சாரம் உயர்ந்திருக்கிறது. ஆகவே, 2 சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகளை உயர்த்த வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசிடம் மாண்புமிகு அவை முன்னவர் மற்றும் நிதியமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏற்கெனவே 18 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கும், 1 சதவிகிதம் மலைவாழ் மக்களுக்கும், 18 + 1 என்று இட ஒதுக்கீட்டு முறையிலே நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். இப்போது மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப இந்த இட ஒதுக்கீட்டு முறையை நீங்கள் உயர்த்திக் கொடுங்கள். 19 சதவீதமாக--இப்போது 19.7 என்று சொன்னால் 1/2 சதவிகிதத்திற்கு மேலே போகிறதாலே 20 சதவிகிதமாக வந்துவிடுகிறது. 20 சதவிகிதமாக நீங்கள் உயர்த்துங்கள். 20 சதவிகிதம் ஆதிதிராவிடர்களுக்கும், 1 சதவிகிதம் பழங்குடியினருக்கும், முடியுமானால் தலித் கிறிஸ்துவர்களுக்கு 2 சதவிகிதமும், இஸ்லாமிய சிறுபான்மை மக்களுக்கு, கிறிஸ்துவர்களுக்கு 5 சதவிகிதமும் என அப்படிப்பட்ட இட ஒதுக்கீட்டு முறையை நீங்கள் கொண்டு வாருங்கள்.

இந்த இட ஒதுக்கீட்டு முறையைப் பற்றி நான் சொல்லும்போது ஒன்றைச் சொல்ல வேண்டும். நடைமுறையிலே, நம்முடைய கல்வித் துறையிலே 1,100 பேர் பகுதி நேர, அதாவது, Guest Lecturer-களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த 1,100 பேரிலே, Guest Lecturers என்பதாலே இந்த reservation–ஐ, இட ஒதுக்கீட்டு முறையை நடைமுறைப்படுத்த முடியவில்லை. நாளைக்கு அவர்களை என்ன செய்வார்கள்? 5 ஆண்டு காலம் கழித்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்படும்போது என்ன நடக்கும்? Reservation இருக்காது. ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் நீங்கள் இதை அவசியம் நடைமுறைப்படுத்த வேண்டும்.

போலிச் சான்றிதழ்கள். போலிச் சாதிச் சான்றிதழ்கள் ஏராளமாகப் பரவிவிட்டதாக அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர்—400 போலி சாதிச் சான்றிதழ்கள் பெற்றவர்களின்மீது நடவடிக்கை எடுத்திருப்பதாகச் சொல்கிறார். ஆக, இந்த போலிச் சாதிச் சான்றிதழைப் பற்றி விசாரிக்க வேண்டும். தலித்துகளே பாவம், பாதிக்கப்பட்டவர்கள். அந்தப் பாதிக்கப்பட்டவர்களுடைய உரிமைகளையும் அடுத்தவர்கள் பறிக்கிறார்கள் என்கிறபோது, அடுத்தவர்கள் திருடுகிறார்கள் என்கிறபோது வேதனையாக இருக்கிறது. அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தரே சொல்லியிருக்கிறார். அதை விசாரிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.



2004 ஜூலை 23] [திரு. செ.கு. தமிழரசன்]

நான் இருக்கிற என்னுடைய குடியிருப்புக்குப் பக்கத்திலே பத்திரிகையாளர் குடியிருப்பு இருக்கிறது. இதை அவர்கள் சார்பாகச் சொல்ல வேண்டும் என்பதனாலே சொல்கிறேன். கொட்டிவாக்கத்தில் பத்திரிகையாளர் குடியிருப்பு இருக்கிறது. அவர்களுக்காக பிரத்தியேகமாக அந்த Journalist Colony உருவாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் வாங்கிய முழுக் கடனையும் அடைத்த பின்னாலும்கூட, இன்னும் அவர்களுக்கு மனை பத்திரம் செய்து தரப்படவில்லை. Society–க்குப் பத்திரம் செய்து தந்தால்தான் Society பத்திரிகையாளர்களுக்குப் பத்திரம் செய்து தர முடியும். பத்திரிகையாளர்கள் இதனால் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டு அவர்கள் கடன்கூடப் பெற முடியவில்லை. அவர்கள் முழுக் கடனையும் அடைத்துவிட்டும்கூட அவர்களுக்கு உரிமம் பதிவு செய்து தரப்படாததனாலே அவர்கள் பிரச்சினையை வெளியே பேச முடியாமல் கோரிக்கையைத் தந்து இருக்கிறார்கள். இதையெல்லாம் நம்முடைய அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

என்னுடைய நன்னிலம் தொகுதியிலே திருமருகல் பகுதியை ஒரு தனி வட்டமாக்க வேண்டும். திருமருகலைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு தனி தாலுகா உருவாக்க வேண்டும், ஒரு வட்டத்தை உருவாக்க வேண்டும் என்று நீண்ட காலமாக வலியுறுத்தி வருகிறேன். நாங்கள் திருமருகலை வட்டமாக்க வேண்டும் என்று நீண்ட காலமாக வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். அதைப் பரிசீலிக்க வேண்டும். 54 கிராமங்களை உள்ளடக்கிய எல்லாவிதமான தகுதியும் உள்ள அந்தத் திருமருகல் வட்டமாக்கப்படாமல் உள்ளது. அதை ஆக்க வேண்டும்.

பிற்பகல் 5–00

தமிழ்நாட்டிலேயே கல்லூரி இல்லாத ஏதாவது ஒரு தொகுதி உண்டு என்றால், அது 200 ஆண்டு காலம் பாரம்பரியமிக்க நல்ல நிலம் என்று பாராட்டப்பெற்ற என்னுடைய நன்னிலம் தொகுதியாகத்தான் இருக்க முடியும். ஒரு கல்லூரியும் என்னுடைய தொகுதியிலே இதுவரையிலும் கிடையாது. ஆக, கல்லூரி இல்லாத தொகுதியிலே முன்னணியில் இருக்கிற மிகப் பிற்பட்ட என்னுடைய அந்தத் தொகுதிக்கு ஏதோ நல்ல நிலங்கள் இருக்கிற காரணத்தால் வேளாண்மையினுடைய விரிவாக்கக் கல்லூரியையாவது அங்கு உருவாக்கலாம். அதை நீங்கள் செய்ய முன்வர வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

திருவாரூர், நாகப்பட்டினம் பிரிந்தபோது என் தொகுதியிலே இருக்கிற பல கிராமங்கள் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கும், நாகப்பட்டினத்தில் இருக்கிற பல கிராமங்கள் என்னுடைய தொகுதிக்கும் இப்படி வந்ததன் விளைவாக ஒரு காவல் நிலையத்திற்குப் போகவேண்டுமென்று சொன்னால் 50 கிலோ மீட்டர் போக வேண்டும். அது போலீசுக்கும் பிரச்சினை. காவலர்களுக்கு, குற்றம் விசாரிக்க 50 கிலோ மீட்டர் போக வேண்டும். இந்தக் கிராமத்தில் இருக்கிறவர்கள் புகார் சொல்ல 50 கிலோ மீட்டர் போக வேண்டும். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு சூழல் அவர்கள் பிரிக்கிறபோது ஏற்பட்டு விட்டது. ஆகவே, இப்போது, திருமருகல் பகுதியிலே இருக்கிற என்னுடைய திருப்புகலூர் என்று சொல்லப்படுகிற அப்பர் அவதரித்த அந்த மண்ணிலே ஒரு காவல் கிளையை, sub-centre ஆவது, துணை காவல் நிலையத்தையாவது நீங்கள் உருவாக்க வேண்டுமென்று நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.82 இலட்சம் வழங்கப்பட்டு வருகிறது. போகிற பொருளாதார வளர்ச்சிக்கேற்ப ரூ.82 இலட்சம் என்பது ஒரு குறைந்த தொகைதான். மிகப் பெரிய தொகை அல்ல. ஆகவே, மிகக் குறைந்தபட்சம் அதை ரூபாய் ஒரு கோடி அளவுக்காவது உயர்த்த வேண்டும். ரூ.1 கோடி அளவிலே உயர்த்தினால் ஓரளவுக்காவது அங்கே தொகுதியில் இருக்கிற பிரச்சினைகளைச் சீர் செய்ய முடியும் என்பதனாலே அதை நான் இங்கே எடுத்துச்சொல்ல விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய மாதச் சம்பளம் இருக்கிறதே, அந்த மாதச் சம்பளம் நிச்சயம் பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்று. ஒரு சட்டமன்ற உறுப்பினரின் கார் செலவுக்குக்கூட இப்போது வழங்குகிற அந்தத் தொகை போதாது. ஒரு எம்.எல்.ஏ. கார் வைத்துக் கொள்வாரேயானால், அந்த கார் செலவுக்குக்கூட சம்பளம் போதாது. அப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது. ஏறக்குறைய இந்தியாவிலேயே மிகக் குறைந்த சம்பளம் வாங்குகிற சட்டமன்ற உறுப்பினர்களை நாம்தான் பெற்றிருக்கிறோம். ஆகவே, அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோல் இன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்காகவும் ஒரு கோரிக்கை. அவர்களுடைய ஓய்வூதியத்தை ரூ.5000 என்பதை 10000 ரூபாயாக ஆக்கலாம். பிச., படித்தவர்கள், வழக்கறிஞராக இருக்கிறவர்கள், M.B.B.S. படித்தவர்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள். பின்பு அவர்கள் நீதிமன்றத்திற்குப் போக முடிவதில்லை. அவர்கள் உட்கார்ந்துகொண்டு டாக்டர் தொழிலையும் பார்க்க முடிவதில்லை. அவர்கள் என்ஜினியர்கள் ஆகவும் முடிவதில்லை. ஒரு முறை சட்டமன்ற உறுப்பினர் ஆகிவிட்டால், அரசியல் அவர்களைக் கவ்விக் கொள்கிறது. அதிலிருந்து அவர்கள் விடுபட முடிவதில்லை. தொழிலும் பார்க்க முடியவில்லை. ஆக, அப்படித் திண்டாடுகிற முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பலரை நாம் பார்க்க முடிகிறது. ஆகவே, மிகக் குறைந்தபட்சம் 10000 ரூபாயாவது அவர்களுக்கு ஓய்வூதியமாக இருந்தால், அவர்கள் கௌரவமான முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்க முடியும். ஆகவே, அதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும் என்பதை நான் சொல்ல விரும்புகிறேன்.





சட்டமன்ற உறுப்பினருக்காக ஒரு கார் வாங்க, வட்டி இல்லாக் கடனாக நாம் அறிவித்திருக்கிறோம். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, எந்தவிதமான பிணைப்பும் இல்லாமல், ஜாமீன் இல்லாமல், வட்டியில்லாமல் அவர்களுக்குக் காரை வாங்குவதற்கு கடன் தரப்படும் என்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கடந்த முறை சட்டப் பேரவையிலே குறிப்பிட்டார்கள். அதை இன்னமும் நடைமுறைப்படுத்த முடியவில்லை. ஆகவே, அதைத் தரலாம். இப்போது பல நிதி நிறுவனங்களே zero per cent interest-போட்டுத் தருகிறார்கள். ஆகவே, அரசாங்கம் zero per cent interest தருவதிலே தவறில்லை. ஆகவே, 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் இக்கடனை உவந்து அளிக்க வேண்டுமென்று நான் இந்த மன்றத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பல செய்திகளைச் சொல்ல வேண்டுமென்று நினைத்தாலும்கூட, நேரத்தின் அவசரம் கருதி ஒன்றிரண்டை மட்டும் சொல்ல விரும்புகிறேன். அடையாறு பகுதியிலே மலர் மருத்துவமனைக்கு எதிரிலே 100 ஆண்டு காலமாக வாழ்கின்றார்கள் ஒடுக்கப்பட்ட மக்கள். திருவண்ணாமலை கோயிலுக்குச் சொந்தமான அந்த இடத்திலே 100 ஆண்டு காலமாக வாழ்கின்ற அம்மக்கள் சில மாதங்களுக்கு முன்னாலே வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாடகைக்குத் தரலாம். இல்லாவிட்டால் அவர்களுக்கு ஏதாவது குறைந்தபட்சம் விலை நிர்ணயம் செய்து தரலாம். அறநிலையத் துறையின் திருவண்ணாமலை கோயிலுக்குச் சொந்தமானது இந்த இடம். இன்றைக்கு எளிய தலித்துகள் எல்லாம் நம்முடைய அமைச்சர்கள் வசிக்கிற இந்தப் பகுதியில் 70

ஆண்டு காலமாக 3 தலைமுறைகளாக வசித்து வருகிறார்கள். ஆகவேதான் சொல்கிறோம், குத்தகை நிலங்களுக்காக ஒரு தனிச் சட்டத்தை அரசு உருவாக்கியுள்ளது. அதை ஆய்வு செய்து இந்தக் குத்தகைச் சட்டம் இங்கே கடுமையாகச் செயல்படுத்தப்பட்டிருக்கிறதா, அதிலே முறையான நடைமுறைகள் இருக்கின்றனவா என்பதை ஆய்வு செய்து, அதிலே பல ஆண்டு காலமாக வசித்துக் கொண்டிருக்கிற அடித்தளத்து மக்களுக்கு உரிமையை நிலைநாட்ட உதவ வேண்டும்.

வேலூர் நகராட்சியிலே கழிஞ்சூர் பகுதியிலே பல ஆண்டு காலமாக ஆண்டுக்கு 16000 ரூபாய் தவறாமல் கட்டிக் கொண்டிருக்கிற ஒடுக்கப்பட்ட மக்கள், நகராட்சி நிலத்தில் பயிர் செய்து கொண்டிருக்கிறார்கள். ஒரு ஆண்டுக்கு 16000 ரூபாய் முறையாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள், கழிஞ்சூர் பகுதியிலே. அப்படி கட்டியும்கூட இன்றைக்கு அவர்கள் வெளியேற வேண்டிய நிலைமை வருகிறது. அவற்றை எல்லாம் நீங்கள் பரிசீலிக்க வேண்டும்.

நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையில், ஏழையெளிய மக்களினுடைய வயிற்றிலே அடிக்காத, அவர்களுடைய தலையிலே மேலும் கனத்தை ஏற்றாத, அவர்களுடைய கடன் சுமையை அதிகரிக்காத, அவர்களை எந்த வகையிலும் துன்புறுத்தாத ஒரு நல்ல நிதிநிலை அறிக்கை; அவர்களுக்குப் போதிய தேவைகளை நிவர்த்தி செய்கிற நிதிநிலை அறிக்கையே தவிர, அவர்களை வயிற்றில் அடிக்கிற நிதிநிலை அறிக்கை இல்லை. அப்படிப்பட்ட நிதிநிலை அறிக்கையைத் தந்த மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களையும், அதற்கு மூல காரணமாக இருந்த நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையும் மீண்டும் பாராட்டி, நன்றி கூறி அமைகிறேன்.

*பிற்பகல் 5–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

***திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் வழங்கிய 2004–2005 ஆம் ஆண்டுக்குரிய நிதிநிலை அறிக்கையின்மீது எங்களது அகில இந்திய பார்வர்ட் பிளாக் இயக்கத்தின் சார்பில் என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு எனது உளப்பூர்வமான நன்றியினையும், பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த நிதிநிலை அறிக்கை என்பது தமிழகத்திலே இருக்கின்ற அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவர்களுடைய தேவைகளை, அடிப்படை நலன்களைப் பூர்த்தி செய்கின்ற விதத்திலே அமைக்கப்பட்டிருக்கின்ற ஒரு நிதிநிலை அறிக்கையாக உள்ளது. இதிலே கலந்துகொண்டு மக்களுக்குத் தாங்கள் ஆற்றவேண்டிய ஜனநாயகக் கடமையை ஆற்றுவதுதான் ஒரு சிறந்த எதிர்க்கட்சியினுடைய மரபு. அதைவிடுத்து, இன்றைக்கு என்னுடைய நண்பர்கள் இந்த அவையைப் புறக்கணித்துவிட்டு, போட்டிச் சட்டமன்றம் நடத்துகின்ற ஒரு நிலை ஏற்பட்டிருப்பது உண்மையிலேயே வருந்தத்தக்க ஒன்று. இன்றைக்கு அவர்கள் சொல்கின்ற காரணம், குறைந்த நாட்கள், குறைந்த கால அளவு ஒதுக்கப்பட்டதுதான் என்று கூறுகிறார்கள். அப்படியிருந்தாலும்கூட, அந்தக் குறைந்த காலத்திலே தாங்கள் சொல்ல வேண்டிய கருத்துகளை எடுத்துச் சொல்வதுதான் அவர்களுடைய கடமை. இன்றைக்குத் திருக்குறளைப் பொறுத்த அளவில், அது உலகளாவிய நூலாக, எல்லோராலும் போற்றப்படுகின்ற ஒரு நூலாக இருப்பதற்குக் காரணமே, இரண்டு வரிகளிலே அத்தனை கொள்கைகளையும் அடக்கியிருக்கின்ற அளவிற்கும், அந்த இரண்டு வரிகளிலேயே தான் சொல்லவேண்டிய கருத்துகள் அனைத்தையும் சொல்கின்ற நூலாகவும் அமைந்திருக்கின்ற காரணத்தினால்தான். அதைத்தான் அறிஞர்கள் சொல்வார்கள்: ‘அணுவைத் துளைத்து எழுகடலைப் புகுத்தி குறுகத் தரித்த குறள்’ என்று. அப்படி அதற்குச் சிறப்பு ஏற்படுவதற்கே காரணம், அந்தக் குறுகிய வரிகளிலே நிறைந்த கருத்துகளைச் சொல்வதுதான். அதுபோல இங்கு சட்டமன்றத்திலே பங்கு கொண்டிருக்கின்றவர்கள், குறுகிய காலமாக இருந்தாலும் தங்களுடைய கருத்துகளைச் சுருங்கச் சொல்லி, அரசுத் தரப்பிலே ஏதாவது விடுபட்டிருந்தால் அதை எடுத்துச் சொல்கின்ற ஒரு பாங்கினைப் பெறவேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்த நாட்களுக்குப் பின்னால் பல்வேறு திட்டங்களை இந்த மக்களுடைய, தமிழக மக்களுடைய தேவைகளைக் கருதி, தமிழக மக்களுக்கு நல்ல பல காரியங்களைச் செய்ய வேண்டும் என்கின்ற உயர்ந்த நோக்கத்தோடு, தாயுள்ளத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டங்களிலே, குடும்ப அட்டையில் ‘எச்’ முத்திரையை நீக்குவது; அதுபோல எல்லா விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் வழங்குவது; இப்போது அனைத்து மக்களும் பயன்படுத்துகின்ற, வீடுகளுக்குப்

பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்குக் குறைக்கப்பட்டிருக்கின்ற அந்தக் கட்டணங்கள்; இப்போது மிகவும் பின்தங்கிய, பின்தங்கிய மாணவிகளுக்கு அளிக்கப்படுகின்ற இலவச சைக்கிள், இலவச பஸ் பாஸ்கள், இப்படிப்பட்டவையெல்லாம் மேலும் பொருளாதாரத்தை அதிகப்படுத்துகின்ற ஒரு நிலைமையை உருவாக்கியுள்ளது. இப்போது நமது இந்த நிதிநிலை அறிக்கையிலே வழங்கப்பட்டிருக்கின்ற இந்த நிதிகளிலேகூட ஏறக்குறைய 500 கோடி ரூபாய்க்கு மேலாகப் பற்றாக்குறை இருக்கிறது என்கின்ற நிலையில், இந்த அதிகப்படியான பொருளாதாரத்தையும் எப்படி ஈட்டப் போகிறோம் என்கின்ற ஐயப்பாடு தமிழகத்திலே இருக்கின்ற அனைவர் உள்ளத்திலும் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்தது. அதைத்தான் காலையிலேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் இங்கே எழுப்பினார்கள். இவற்றிற்கெல்லாம் தேவைப்படுகின்ற அதிகப்படியான பொருளாதாரத்தை எப்படிச் சீர்செய்யப் போகிறீர்கள் என்று நிதியமைச்சரிடத்திலே தன்னுடைய கருத்தை முன்வைத்தார்கள். அதற்கு மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களும், இன்னின்ன வழிகளிலே நாங்கள் அதைச் சரிசெய்து விடுவோம்; நிச்சயமாகத் தமிழகத்தினுடைய பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்படாது என்கின்ற உத்தரவாதத்தைக் கொடுத்தார்கள். ஆனால், எல்லோருக்கும் ஒரு ஐயப்பாடு உண்மையிலேயே இருந்தது. கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதாரச் சிக்கல் போல, வருகின்ற காலங்களிலும் ஏற்பட்டு விடுமோ என்கின்ற அச்சத்தைப் போக்குகின்ற அளவிலே, இன்றைக்கு நமது நிதியமைச்சர் அவர்கள் பதில் அளித்தார்கள். இதையெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான், எதிர்க்கட்சிகள் இப்படிப்பட்ட விவாதத்திலே பங்குகொள்ள வேண்டும். அதை எழுப்பவில்லையென்றால், இன்றைக்கு நிதியமைச்சர் நமக்கு அதற்குரிய பதிலை அளித்திருக்க வாய்ப்பில்லை. அந்த வாய்ப்பு இல்லாத நிலையிலே, எல்லோருக்கும் அந்த அச்ச உணர்வு இருந்துகொண்டே இருந்திருக்கும். அதைப் போக்குகின்ற அளவிலே இந்த விவாதம் அமைய வேண்டும் என்பதுதான் முக்கிய நோக்கம்.

பிற்பகல் 5–10

அதிலேகூட நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கு ஒன்றைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். நீங்கள் மத்திய அரசிலேயிருந்து சென்ற ஆண்டைக் காட்டிலும், இந்த ஆண்டு பெறுகின்ற நிதி ஏறத்தாழ 700 கோடி ரூபாய் அதிகமாகக் கிடைக்கும் என்று சொன்னீர்கள். அதை



மிகக் கவனமாகக் கையாள வேண்டும். அதை எப்படியும் பெறுவதற்கு நீங்கள் முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும். அதோடுகூட இன்றைக்குச் சட்டமன்றக் கூட்டத்தைப் புறக்கணித்திருக்கிறார்களே, 12 அமைச்சர்களை மத்திய அரசிலே பெற்றிருக்கின்ற தமிழகத்திலே இருக்கின்ற கட்சிகள்; இந்த நிதி என்பது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசுக்கு வழங்கப்படுகின்ற நிதி அல்ல; தமிழக மக்களுடைய வளர்ச்சிக்கு, தமிழக மக்களுடைய நலனுக்கு, தமிழக மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வழங்கப்படுகின்ற நிதி என்கின்ற முறையில், அவர்களும் இந்த நிதியைப் பெற்றுத் தருவதற்கு, தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்கவேண்டும் என்பதுதான் எங்களைப் போன்றவர்களுடைய கருத்தெல்லாம்.

சாதாரணமாக, இங்கே பேசியவர்கள் எல்லாம் சொன்னார்கள். தமிழகம் மட்டுமல்ல; இந்தியாவிலே இருக்கின்ற அத்தனை நல்ல உள்ளங்களையும் வருத்துகின்ற ஒரு செய்தி கும்பகோணத்திலே நடந்துவிட்டது. அந்த வருந்தத்தக்க செய்திக்கு, தமிழக அரசினுடைய முதலமைச்சர் எவ்வளவு துரிதமாக, எவ்வளவு தாயுள்ளத்தோடு, பரிவோடு அதை அணுகி, அந்த நிமிடமே அங்கு சென்று, தன்னுடைய மக்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக என்னென்ன உதவிகளைச் செய்தார்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், கடந்த காலத்திலேகூட, எங்களுடைய மதுரையிலே நாங்களெல்லாம் கல்லூரி மாணவராக இருந்த காலத்தில்—இன்றைக்குக் கூரைக் கொட்டகையிலேதான் தீப்பற்றி எரிந்தது—அன்றைக்கு ஒரு உயர்நிலைப் பள்ளியில் கட்டடமே இடிந்து விழுந்து, ஏறக்குறைய 45 பேரை பலி கொண்டது. பல பேர் உடல்களை, புதைந்த உடல்களைக்கூட எடுக்க முடியவில்லை என்கின்ற நிலை இருந்தது. அது 1964–ல் என்று கருதுகின்றேன். அன்றைக்கிருந்த அரசாங்கம், அந்தப் பள்ளி மாணவர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் செய்த உதவிகளையெல்லாம் நாம் அறிந்தவர்கள். அதையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இன்றைக்கு இந்த முதலமைச்சர் ஆற்றியிருக்கின்ற அந்தக் காரியம் என்பது, நிச்சயமாகப் பாராட்டுதலுக்குரிய ஒன்றுதான். அதைக்கூட நேற்று சட்டமன்றத்திலே இரங்கல் தீர்மானத்திலே இங்கு நமது பேரவைத் தலைவர் அவர்கள் கோடிட்டுக் காட்டியதைக்கூட எதிர்க்கட்சியிலே இருக்கின்றவர்கள் குறை சொல்லியிருந்தார்கள்; உண்மையில் நான் வேதனைப்படுகிறேன். அவர்கள் செய்த காரியத்தைத்தான் சொல்லியிருக்கிறார்களே தவிர, அது முதலமைச்சருக்குப் பாடுகின்ற துதி என்று சொல்வது முறையற்ற ஒன்று.

[திரு. லா. சந்தானம்] [2004 ஜூலை 23

அந்தச் சம்பவம் நடந்திருக்கிறது; மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தச் சம்பவம் நடைபெற்ற உடனே அந்த இடத்திற்குச் சென்றிருக்கிறார்கள்; பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி வழங்கியிருக்கிறார்கள்; சிகிச்சை அளிப்பதற்குரிய நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். இதைத்தானே பேரவைத் தலைவர் இரங்கல் தீர்மானத்திலே குறிப்பிட்டார். இது எப்படி முதலமைச்சருக்குக் துதியாக அமையும் என்பதுதான் எனக்குப் புரியவில்லை. அப்படிப்பட்ட எண்ணங்களை எல்லாம், கருத்துகளை எல்லாம் மாற்றிக்கொள்ள வேண்டும். அரசியல் என்பது வேறு. நடைமுறையிலே செய்கின்ற நல்ல காரியங்கள் என்பது வேறு. நல்ல காரியங்கள் வரும்போது அதை நன்றியோடு பாராட்டித்தான் ஆக வேண்டும். தவறுகள் நடக்கும்போது அதைத் தட்டிக் கேட்கவும் வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சிகளுடைய ஜனநாயகக் கடமையாக இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்துகள் எல்லாம்.

*பிற்பகல் 5–15*

இன்றைக்கு இந்திய நாட்டிலே ஒரு தேர்தலைச் சந்தித்து அதற்குப் பின்னால் நமது சட்டமன்றம் இன்றைக்குக் கூடுகிறது. அந்தத் தேர்தலின் மூலமாக மத்தியிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. கூடாதவர்கள், கருத்து ஒற்றுமை இல்லாதவர்கள் இன்றைக்கு அனைவருமே ஒன்று கூடிய ஒரு ஆட்சி. இருந்தாலும் அந்த ஆட்சியிலே இன்றைக்குப் பங்கு பெறுகின்ற இடதுசாரிக் கட்சிகள், அவர்கள் கொள்கைக்கும், காங்கிரஸினுடைய பொருளாதாரக் கொள்கைகளுக்கும் மிகுந்த மாறுபாடு உண்டு, வேறுபாடு உண்டு. கடந்த 45 ஆண்டு காலமாக அவர்களுடைய பொருளாதாரக் கொள்கைகளை விமர்சனம் செய்து வந்தவர்கள் இன்றைக்கு அவர்களுடைய ஆட்சிக்குத் துணை நிற்கிறார்கள். காலையிலே நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொல்லுகின்றபோதுகூட (குறுக்கீடு) திரு. ஹக்கீம் அவர்கள் சொல்லுகின்றபோது (சிரிப்பு) தயவு செய்து மன்னிக்க வேண்டும், என்னுடைய சகோதரர் திரு. லத்தீப் அவர்கள் பல ஆண்டுகளாக என்னுடன் பக்கத்தில் இருந்து பழகியவர். அந்த நினைப்பிலே நான் கூறிவிட்டேன். ஹக்கீம் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, காங்கிரஸ்காரர்கள் எங்களுடைய துணையைத்தான் நாடுகிறார்களே தவிர, அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள், இடதுசாரிகள் காங்கிரசினுடைய உதவியை நாடி நிற்கின்றனர் என்பது போலக்



2004 ஜூலை 23] [திரு. லா. சந்தானம்]

கூறியிருந்தார்கள். ஆனால் அது தவறு. இன்றைக்குக் காங்கிரஸ்காரர்கள் தாங்கள் ஆட்சியிலே இருப்பதற்காக இடதுசாரிகளுடைய உதவிகளை அவர்கள் நாடியிருக்கிறார்கள். அது எங்களுக்கு ஓரளவிலே வெற்றிதான். நானும்கூட—அந்த ஆட்சியில் பங்கு பெறுவதற்கு இந்த இடதுசாரிக் கட்சிகள் முனைப்போடு செயலாற்றிக் கொண்டு இருப்பதிலே, இருந்த நேரத்திலே நானும் அந்த இயக்கத்திலே ஒரு பங்கு வகிக்கின்றவன் என்கின்ற முறையில் அங்கே சென்று அந்த இடதுசாரி இயக்கங்கள் ஆட்சியிலே பொறுப்பேற்கின்றபோது, ‘உங்களுடைய கொள்கைகளே இல்லாமல் போய்விடுகிறது, இத்தனை ஆண்டுகளாக நீங்கள் விமர்சித்து வந்த பொருளாதாரக் கொள்கைகள் அத்தனையும் அடிபட்டுப் போகிறது, எனவே, நீங்கள் வெளியில் இருந்து ஆதரவைத் தாருங்கள், அந்த அமைச்சரவையிலே பங்கு பெறாதீர்கள்’ என்று சொன்னதிலே முதலாவது வாதாடியவன் நான்தான். அந்த அளவுக்கு அவர்கள் இவர்களுடைய தயவைத்தான் நாடியிருக்கிறார்களே தவிர, காங்கிரஸ்காரர்களுக்கு இவர்கள் துணை போகிறார்களே தவிர, அவர்கள் இவர்கள் தயவை நாடவில்லை என்பதுதான் உண்மை. இருந்தாலும் அவர்களுக்கு என்னுடைய ஓர் எச்சரிக்கை. முதலாவது வழங்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலேகூட பல மாறுபட்ட கருத்துகள் இருந்தன. அந்நிய முதலீடு இருக்கக் கூடாது என்பதுதான் அவர்களுடைய சித்தாந்தம். அதிலே இந்த நிதிநிலை அறிக்கையில் தகவல் தொலைத் தொடர்பு, அதுபோல விமானப் போக்குவரத்து, காப்பீட்டுக் கழகங்களுக்கு உரிய அந்நிய முதலீடு மிக அதிகமாக கூட்டப்பட்டிருக்கிறது. அப்படி அதிகமாகக் கூட்டப்பட்டதை நாங்கள் எதிர்க்கிறோம் என்று சொன்ன இடதுசாரிகள் ஆனால் சொன்னதோடு நின்றுவிட்டார்கள். வாக்கெடுப்பு நடத்துகின்றபோது நாங்கள் எதிர்ப்போம் என்று சொன்னவர்கள் அதைச் செய்யவில்லை. அது முதலாவது அவர்கள் செய்திருக்கிற தவறு. ஆனால் இந்தத் தவறுகள் மீண்டும் நீடிக்கக்கூடாது. தங்களுடைய கொள்கையிலிருந்து விலகிச் செல்லக் கூடாது என்பதுதான் எங்கள் போன்றவர்களுடைய கருத்து.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*பிற்பகல் 5–20*

அந்தத் தேர்தலைப் பொறுத்தளவிலே நேற்று முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக அறிக்கைக் கொடுத்திருந்தார்கள். அது தமிழ்நாட்டுக்கு நடத்தப்பட்ட தேர்தல் அல்ல. இந்தியத் துணைக் கண்டத்தின் ஆட்சியை நிர்ணயிக்கக்கூடிய தேர்தல். அந்தத்

[திரு. லா. சந்தானம்] [2004 ஜூலை 23

தேர்தலிலும்கூட நாம் ஆளுகின்ற கட்சியாக இருந்தாலும் மிகப் பெரிய ஏமாற்றத்தைச் சந்தித்துவிட்டோம். வாக்காளர் பட்டியலிலே ஏற்பட்ட குளறுபடியிலே மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்தான். என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவிலேகூட, தமிழகத்திலே மிக அதிகப்படியான வாக்காளர்கள் நீக்கப்பட்ட தொகுதி என்பது என்னுடைய உசிலம்பட்டி தொகுதிதான். ஏறக்குறைய 23,000 வாக்காளர்கள் நீக்கப்பட்டிருந்தார்கள். அதனுடைய விளைவு, வாக்கு நடைபெறுகின்ற அன்றுதான் எங்களுக்குத் தெரிந்தது. நாங்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் செல்கின்ற நேரத்தில் ஏறத்தாழ இந்த இயக்கத்தைச் சார்ந்தவர்கள் 500–க்கு மேற்பட்டவர்கள் நீக்கப்பட்டிருக்கின்ற ஒரு சூழலை அறிகின்றபோதுதான், அன்றைக்குத்தான் எங்களுக்கு அந்த உண்மை நிலையைத் தெரிந்துகொள்ள முடிந்தது. அப்படித்தான் ஒரு விபத்து நடந்துவிட்டது. அந்த விபத்தின் மூலமாக இன்றைக்கு மாறுபட்ட சூழல் ஏற்பட்டிருக்கிறது. வருகின்ற காலத்தில் அது சரி செய்யப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

காவிரி பிரச்சினை, தமிழ்நாட்டினுடைய தலையாய பிரச்சினை; தமிழ்நாட்டினுடைய நெற்களஞ்சியம் என்று சொல்[illegible] தஞ்சைத் தரணி மக்களைக் காப்பாற்றுகின்ற அந்தப் பிரச்சினை. இன்றைக்கு இங்கிருந்து கொண்டு, 'தண்ணீரைத் திறந்துவிடுங்கள்; மேட்டூர் அணையைத் திறந்துவிடுங்கள்' என்று சொல்லி, மத்திய அரசிலே பங்கு வகிக்கின்ற அனைத்துக் கட்சியினரும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இப்படிச் சொல்கின்றவர்கள், தமிழக மக்களினுடைய நலனிலே அக்கறை கொண்டவர்களாக இருந்தால், முதலமைச்சர் சொல்கின்ற ஒரு நிலையைப் புரிந்துகொள்ள வேண்டும். நான்கூட தஞ்சைப் பகுதியிலே இருக்கின்ற பல்வேறு விவசாயப் பெருமக்களைக் கேட்கின்றபோது, அவர்கள் கூறுகிறார்கள்; இன்றைக்கு மேட்டூர் அணையிலே இருக்கின்ற தண்ணீர் குறுவைச் சாகுபடிக்குப் போதுமானதாக இல்லை; நிச்சயமாக ஒரு போகம் விளைவதற்கு முடியாத ஒரு சூழ்நிலைதான். மீண்டும் தண்ணீர் வருவதற்கு வாய்ப்பு இருந்தால்தான் அந்த ஒரு போகத்தைச் செய்ய முடியும் என்கின்ற நிலையைச் சொல்கிறார்கள். அதைத்தான் முதலமைச்சர் அவர்களும் சொல்கிறார்கள். இன்றைக்கு அந்தத் தண்ணீரைத் திறந்து விட்டுவிட்டால், பின்பு அவர்கள் விவசாயப் பணிகளைத் தொடங்கிய பின்பு நடுவிலே நிறுத்தப்படுமேயானால் அந்த விவசாயிகள் எந்த நிலைக்குப் பாதிக்கப்படுவார்கள் என்பதை உணர்ந்திருக்கின்றவர்கள்; அந்த மக்கள்மீது அக்கறை கொண்டவர்கள்,



2004 ஜூலை 23] [திரு. லா. சந்தானம்]

முழுமையாக அவர்களுக்குப் பலன் கிடைக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தோடு திறப்பதற்கு ஐயப்படுகிறார்கள். ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு அந்த எண்ணமெல்லாம் இருக்கிறது. வெளியிலே இருக்கின்றவர்கள் ஏதேதோ சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். சொல்லிக் கொண்டிருப்பவர்கள், இன்றைக்கு மத்தியிலே பங்குபெற்றிருக்கின்றவர்கள், 'உடனடியாகக் காவிரி ஆணையத்தைக் கூட்டுங்கள், உடனடியாகத் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய தண்ணீரைத் தாருங்கள்' என்று சொல்வதற்கு வக்கற்றவர்கள், வழியற்றவர்கள், இன்றைக்குத் தண்ணீரைத் திறந்துவிடுங்கள் என்று சொல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்திருக்க வேண்டும். இவர்கள் பொறுப்புமிக்கவர்களாக இருந்தால், தமிழக மக்கள்மீது அக்கறையுள்ளவர்களாக இருந்தால், இன்றைக்கு உடனடியாகக் காவிரி ஆணையத்தைக் கூட்டுங்கள், அதன் மூலம் தமிழகத்திற்குத் தண்ணீரைத் தாருங்கள் என்று சொல்லியிருக்க வேண்டும். இந்தத் தண்ணீர்கூட வந்தது எப்படி? 'தினமலர்' நாளிதழ் எழுதியிருந்தது; 'மழை பெய்தது; வெள்ளம் வந்தது; அணை நிரம்பியது; நீர் வழிந்தது; அதன் மூலமாக இங்கு தண்ணீர் வந்தது.' காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததுபோல, இவர்கள் ஏதோ பிரதம மந்திரிக்குக் கடிதம் எழுதினார்களாம்; பிரதம மந்திரி உடனே கர்நாடக முதல்வரைத் தொடர்பு கொண்டாராம்; அதன்மூலம் தண்ணீர் வந்ததாம். கர்நாடக முதல்வர் என்ன சொல்கிறார்: 'நான் பிரதம மந்திரி சொல்லித் தண்ணீர் கொடுக்கவில்லை. அணை நிரம்பிவிட்டது. அதைத் தடுக்க முடியவில்லை. எங்களுக்கு வழியில்லை. அது காவிரியிலே சென்றுவிட்டது'. அந்த மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர் உண்மையான நிலையை எடுத்துச் சொல்லவேண்டிய ஓர் அவலமான நிலை. இதிலே யாருடைய தலையீடுமில்லை. ஆனால், அவர்கள் அப்படியெல்லாம் சொல்வார்கள் என்பதற்காகத்தான் நமது அமைச்சர் பெருமக்களெல்லாம் அன்றைக்குப் போய் கர்நாடகத்தினுடைய முதலமைச்சரைச் சந்தித்துப் பேசினார்கள்.

பிற்பகல் 5–25

அதுபோல, அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே நமது நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டு, தமிழகத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டார்கள். இந்த மக்கள்மீது அக்கறை இருக்கின்ற காரணத்தினால் எல்லாக் காரியங்களையும் நாமும் செய்து கொண்டிருக்கிறோம். அவர்கள் கேட்கவேண்டிய இடத்திலே

இருக்கிறார்கள். மத்திய அமைச்சரவையிலே பங்கு வகித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதை ஏன் செய்யக் கூடாது என்பதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும், அறிந்துகொள்ள வேண்டும் என்பதைத்தான் நான் இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாகச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இன்றைக்கு இந்த இடதுசாரிகள் எல்லாம் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றால், ஜனநாயகத்திற்கே விரோதமானது காங்கிரஸ் கட்சிதான். ஒரு நேரத்திலே முதன்முதலாக இடதுசாரி இயக்கத்தின் ஆட்சி கேரளாவிலே தோழர் நம்பூதிரிபாட் தலைமையிலே ஏற்படுகின்ற நேரத்தில், அந்த ஆட்சியைக் கவிழ்த்தது காங்கிரஸ்தான் என்பதை இன்றைக்குக்கூட 'தினத்தந்தி' பத்திரிகை, 'வரலாற்றுச் சுவடுகள்' என்ற பக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறார்கள். அன்றைக்குக் கேரளாவினுடைய அமைச்சராக இருந்தவர் என்ன சொல்கிறார் என்று சொன்னால், இந்தியாவில் காங்கிரஸ் கட்சி மட்டும்தான் இருக்கவேண்டும் என்று காங்கிரஸ்காரர்கள் நினைக்கிறார்கள். வேறு கட்சி ஆட்சிக்கு வருவதை அவர்கள் பொறுக்க மாட்டார்கள் என்பதை அன்றைக்கு அந்த அமைச்சரவையிலே பங்கு பெற்றிருந்த பாலகிருஷ்ண பிள்ளை என்பவர் சொல்கிறார்.

அதுபோல காங்கிரசினுடைய வரலாறு என்ன? ஏற்கெனவே ஜனதா கட்சி ஆட்சியிலேயிருந்தபோது சரண்சிங்கைத் தூண்டிவிட்டு, அவரைப் பிரித்து, அதன் மூலம் அவருக்கு ஒரு 4 மாத காலம் ஆட்சியைக் கொடுத்துவிட்டு அவருடைய இருக்கையைப் பிடுங்கியவர்கள்தான் காங்கிரஸ்காரர்கள். அதேபோல சந்திரசேகர் எப்படி ஆட்சிப் பொறுப்பிற்கு வந்து, எப்படி மாற்றப்பட்டார் என்பதையெல்லாம் இந்திய மக்கள் அறிவார்கள். எனவே, இடதுசாரிகளே உங்களுக்கு இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் உங்களை முதல் நிதிநிலை அறிக்கையிலேயே ஏமாற்றியிருக்கிறார்கள். அந்நிய முதலீட்டை விமானப் போக்குவரத்து கழகத்திலும், காப்பீட்டுக் கழகத்திலும், தகவல் தொழில்நுட்பத் துறையிலும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதற்கு நீங்கள் குரல் கொடுத்தீர்கள். உங்கள் குரலுக்காகக் குறைந்தபட்சம் ஓரிரு சதவிகிதத்தைக் குறைத்தார்களா? உங்களைத் திருப்தி செய்வதற்கு அதையாவது அவர்கள் செய்திருக்க வேண்டாமா, 46 சதவிகிதம் என்பதை 40 சதவிகிதமாகக் காப்பீட்டுக் கழகத்திலே குறைத்துக்கொள்கிறேன் என்று? அந்நிய முதலீட்டை 23—லிருந்து 46 ஆக உயர்த்தியிருக்கிறார்கள். அந்த 46—லே 6 சதவிகிதத்தையாவது குறைத்துக்கொள்கிறேன் என்ற





நிலையையாவது எடுத்தார்களா என்பதைச் சிந்தித்துப் பார்த்து, அவர்களுக்கு வருகின்ற காலத்தில் நீங்கள் ஒரு நல்ல பாடத்தைப் புகட்ட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதோடு இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தளவிலே, CENVAT வரி. நெசவாளர்களைக் காப்பாற்றுவதற்காக நாங்கள் ஏதோ செய்து விட்டோம், செய்துவிட்டோம் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே பங்குபெற்றிருக்கின்ற இதே தமிழகக் கட்சிகள் அன்றைக்கு அந்த CENVAT வரி போடுகின்ற நேரத்திலும் அமைச்சர்களாகப் பங்கு பெற்றிருந்தார்கள். அதை அன்றைக்கே வேண்டாம் என்று அவர்கள் சொல்லியிருக்க முடியும். ஆனால் அதைச் செய்யவில்லை. இந்த நெசவாளிகள் மேல் அக்கறை கொண்டவர்களாக இருந்தால் அதைத் தடுத்திருக்க வேண்டும். அதைத்தான் நம்முடைய முதலமைச்சரவர்கள் தேர்தல் நேரத்திலே மிகத் தெளிவாகக் குறிப்பிட்டார்கள். இப்படி நெசவாளர்களுக்கு ஒரு பாதகத்தை செய்துவிட்டார்கள். அவர்கள் அந்தக் கூட்டணியை விட்டு விலகிய உடனே நான் கடிதம் எழுதி, அதற்குரிய பரிகாரத்தைத் தேடுவதற்கு முயற்சி செய்து கொண்டிருக்கிறேன். இந்தத் தேர்தலிலே எங்கள் அணி மீண்டும் வெற்றி பெற்று வருமேயானால் அந்த நெசவாளர்களுடைய துயரைத் துடைப்பதற்கு CENVAT வரியை உடனடியாக நீக்குவேன் என்று குறிப்பிட்டார்கள். அதையெல்லாம் தெரிந்து கொண்டவர்கள்தான் இந்த முதலமைச்சருக்குப் பதில் சொல்ல வேண்டுமே, நாளைக்கு அதை நீக்கவில்லை என்றால் நாம் தமிழ்நாட்டிற்கு உள்ளே எப்படிச் செல்வது, அதைக் கேட்பார்களே என்பதற்காகத்தான் இன்றைக்கு நீக்கியிருக்கிறார்கள். அந்தப் பெருமை முதலமைச்சரைத்தான் சாரும். (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சரின் கோரிக்கை இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது, செய்திருக்கிறார்கள்.

அதேபோல நேற்றைக்கு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல, ஜனநாயக வரலாற்றிலே இந்தியா சுதந்திரம் பெற்றதற்குப் பின் ஒரு மத்திய அமைச்சர் ஓடி ஒளிந்து கொண்டிருக்கிற நிலை. இது இந்தியத் துணைக் கண்டத்திற்கு, உலக நாடுகள் அளவிலே தலைகுனிவை ஏற்படுத்தியிருக்கிறது. இப்படி ஒரு மிகப் பெரிய ஜனநாயக நாட்டிலே ஒரு அமைச்சர் பொறுப்பிலே இருக்கின்றவரே Criminal குற்ற வழக்கிற்காக ஓடி மறைந்து கொண்டிருக்கின்ற நிலைமை என்பது இந்தியத் துணைக்

கண்டத்தினுடைய மரியாதையையும், மதிப்பையும் உலக அரங்கிலே தாழ்த்தி இருக்கிறது என்பதுதான் உண்மை. இப்படியெல்லாம் ஒரு முரண்பாடான மத்திய அரசு இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதனாலேதான் நான் மாண்புமிகு நிதியமைச்சருக்குக்கூடச் சொல்கிறேன், மத்திய அரசிலிருந்து வருகின்ற 700 கோடியை நீங்கள் எப்படியும் பெற வேண்டும். அப்படிப் பெற்றால்தான் இந்தப் பற்றாக்குறையை நீக்க முடியும் என்பதிலே நாம் கவனமாக இருக்கவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5–30*

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்த அளவிலே எனக்குக்கூட ஓர் ஐயப்பாடு. இன்றைக்கு இந்தச் சட்டசபைக்கு வராதவர்களெல்லாம் என்ன நினைத்து வராமல் இருந்திருக்கலாம் என்று சொன்னால், இந்த நிதிநிலை அறிக்கையிலே எல்லாத் தரப்புகளுக்கும், எல்லாத் துறைகளுக்கும் எல்லா மக்களுக்கும் சென்றடைகின்ற வகையிலே ஏழையெளிய, நடுத்தர மக்கள், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அனைவருக்கும் நலத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவே; காவல் துறையா, நீதித் துறையா, சிறைத் துறையா, கல்வித் துறையா, அத்தனைக்கும் நிதி கூட்டப்பட்டு இருக்கிறதே; இதை எப்படி விமர்சிப்பது என்று புரியாமல்தான் இன்றைக்குச் சட்டமன்றத்தைப் புறக்கணித்து விட்டார்களோ என்னவோ, தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த ஆண்டு காவல் துறைக்கு, சென்ற ஆண்டைக் காட்டிலும் 65 கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. சிறைச்சாலைகளைச் சீர்செய்வதற்காக 40 கோடி ரூபாய் சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு கூடுதலாக ஒதுக்கப்பட்டிருக்கிறது. நீதித் துறைக்கு 31 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் மிகப் பெரிய பெருமையை, நாளைக்கு மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய கிளையைத் துவங்குவதன் மூலமாக இந்த அரசு பெறப் போகிறது.

அதுபோல, மீன் வளத் துறை. அவர்களுக்குத் துறைமுகம் அமைப்பதற்காக 40 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. 4 ஆயிரம் வீடுகள் கட்டுவதற்காக 15 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதுபோல, விவசாயப் பெருங்குடி மக்கள் வாழ்விலே வளம் பெறுவதற்காக மழை நீர் சேகரிப்புத் திட்டத்தைக் கொண்டு வந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலத்தடி நீரை விருத்தி செய்ய



வேண்டும் என்ற நோக்கத்தோடு குளங்களை ஆழப்படுத்துவதற்கு 100 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள்.

வனத் துறை மூலமாக சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பதற்காக 65 கோடி ரூபாயை ஒதுக்கி இருக்கிறார்கள்.

அதைப்போல 'நமது கிராமம்' என்கின்ற திட்டத்தின் மூலமாகப் பல்வேறு வீடு கட்டுகின்ற நிலைகளில் 36 ஆயிரம் குடியிருப்புகள் கட்டுவதற்கு உரிய நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள். கச்சா வீடுகள் 18 ஆயிரம் கட்டுவதற்குரிய நிதியை ஒதுக்கி இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களிலே இருக்கின்ற சாலைகளைப் பழுதுபார்ப்பதற்கு ரூ.300 கோடி ஒதுக்கி இருக்கிறார்கள். ஊரகக் குடிநீருக்கு ரூ.600 கோடி ஒதுக்கி இருக்கிறார்கள். வீராணம் திட்டத்திற்கு ரூ.700 கோடிக்கு மேலாக ஒதுக்கி இருக்கிறார்கள். மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு, கடந்த நிதி ஆண்டைக் காட்டிலும் இந்த நிதி ஆண்டிலே ரூ.43 கோடி நிதி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சுற்றுலாத் துறை. அது எல்லோரும் போய் வருகின்ற, வெளிநாடுகளிலே இருந்து வருகின்ற பயணிகளை எல்லாம் கவர வேண்டுமென்கின்ற ஒரு துறை. அதற்குக் கடந்த காலங்களிலே எல்லாம் நிதி ஒதுக்கீடே இல்லாத ஒரு நிலை இருந்தது. இன்றைக்கு அந்தத் துறைக்குக்கூட சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.25 கோடி அதிகமாக ஒதுக்கி இருக்கிறார்கள்.

அதுபோலக் கல்வித் துறை. சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.60 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. விளையாட்டுத் துறைக்கு, சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.21 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு, சென்ற ஆண்டைக் காட்டிலும் ரூ.85 கோடி அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இதுபோல சமூக நலத் துறை மற்றும் பல்வேறு துறைகளுக்கும் சென்ற நிதி ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு அதிகமாக நிதி ஒதுக்கித் தந்திருக்கின்ற மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவிப்பதோடு இத்தனையும் இந்த நிதிநிலை அறிக்கையிலே கொடுத்த தாங்கள் இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் மேம்பாட்டு நிதியை மட்டும் ஏன் ரூ.82 கோடியுடன் நிறுத்தி விட்டீர்கள்? அதையும் சற்று உயர்த்தித் தந்து இருக்கலாமே? இத்தனை துறைகளுக்கும் ஒதுக்கியவர்கள்,

உங்களுக்குப் பக்கபலமாக இருக்கின்ற, மக்களுக்குத் தொண்டு செய்கின்ற எங்களுக்கு அந்த நிதியை உயர்த்தித் தந்து இருக்கலாம். இங்கேகூட நமது முன்னாள் கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார். எல்லோரும், இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் அதை எதிர்பார்க்கிறார்கள். நமது அன்புக்குரிய திரு. செ.கு. தமிழரசன் அவர்கள் கேட்கும்போது, யாருமே இங்கே நீங்கள் கை தட்டவில்லை. கை தட்டவில்லை என்கின்றபோது உங்களுக்கு வேண்டாம் என்று நினைக்கிறார்களா என்கின்ற ஒரு எண்ணம்கூட நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்குத் தோன்றப் போகிறது. ஆகையினால், இந்த நிதியை ரூபாய் ஒரு கோடியாக உயர்த்தித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5–35

சம்பளத்தைப் பொறுத்த அளவிலே, நான் கொஞ்சம் இடதுசாரி மனப்பான்மை உள்ளவன். ஆகவே, அது உங்கள் துறையாக இருந்தாலும், அதை அரசே பார்த்து நிர்ணயிப்பதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லி, இப்படிப் பல்வேறு துறைகளுக்கும் நிதி ஒதுக்கி, தமிழக மக்களின்பால் அன்புகொண்டு, இன்றைக்குப் பல்வேறு நலத் திட்டங்களை, இந்த நிதிநிலை அறிக்கைக்குப் பின்னாலும் அறிவித்து, இன்று மக்களுக்கு வாழ்வளித்திருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், நிதியமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் நான் பாராட்டி, நல்லதொரு நிதிநிலை அறிக்கையை அளித்திருக்கிறீர்கள்; அதற்கு என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவிக்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின்மீதான விவாதத்தில் பதிலுரை அளிப்பதற்கு எனக்கு வாய்ப்பளிக்கும் பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உரையின்மீது இறுதியாகக் கருத்துகளை விளக்கி அமர்ந்திருக்கின்ற அன்புக்குரிய அண்ணன் திரு. சந்தானம் அவர்கள் பேசுகிறபோது, இந்த விவாதம் போதிய நாட்கள் நடத்தப்படாமல் இருப்பது, சட்டமன்ற உறுப்பினர்களுக்குள்ள உரிமைக்கு மாறானது என்று எதிர்க்கட்சிகள் கூறியது குறித்தும், அவர்கள்



கடைப்பிடிக்கின்ற தவறான அணுகுமுறை குறித்தும் எடுத்துப் பேசினார்கள்.

சட்டப் பேரவையைப் பொறுத்தவரைக்கும், 22–7–2004 அன்று நாம் தற்போது இந்தக் கூட்டத்தைத் துவக்கி இருக்கிறோம். 13–2–2004–இல் இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, 5 மாதங்களுக்குப் பிறகு, பல்வேறு மாற்றங்கள் அரசினுடைய திட்டங்களில் மாற்றங்கள் என்று பல்வேறு நிலைக்கு உட்பட்டபோது, 31 ஆம் தேதி மதியம் ஒன்றரை மணிக்குள் Appropriation Bill, அதை ஈடேற்றியாக வேண்டும். இது சட்ட நிலை. இந்தச் சட்ட நிலையை, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் புரியாதவர்கள் அல்லர். விவாதமின்றி முன்னளி மானியக் கோரிக்கைகள் ஈடேறியுள்ளன என்பதற்குச் சில முன்னுதாரணங்களை குறிப்பிடுகிறேன்; இதற்கு முன்னால், இப்படிப்பட்ட விவாதமின்றி Demands ஈடேற்றப்பட்டுள்ளனவா என்றால், பல முறை இப்படி நடந்திருக்கிறது. 1957–1958–இல், 48 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன. அதைப்போலவே, 1962–1963–இல், 45 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன. அதைப்போலவே, 1967–1968–இல், 47 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி முடிந்திருக்கின்றன. 1979–80–இல், 58 மானியக் கோரிக்கைகள் விவாதமின்றி ஈடேறியிருக்கின்றன. ஆனால், நாங்கள் கூறுகிறபோது, அலுவல் ஆய்வுக் குழுவிலே பேசுகிறபோது, எதிர்க்கட்சியினுடைய தலைவர்களுக்குத் தெளிவுபடுத்தினோம். பொது விவாதத்திற்கு நாட்கள் அதிகம் தேவை என்று கேட்டார்கள். பொது விவாதத்திற்கு அதிக நாட்களை எடுத்துக்கொண்டு, மானியக் கோரிக்கைகளை, 31 ஆம் தேதிக்குள் முடிக்கலாம்; பொது விவாதத்தின்போது, மானியக் கோரிக்கைகள் குறித்து இருக்கின்றவற்றை நீங்கள் பேசலாம் என்று சொன்னோம். மானியக் கோரிக்கையில் என்னென்ன திட்டத்திற்கு, எத்தகைய, எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பது குறித்த அச்சிடப்பட்ட புத்தகத்தை அவையிலே ஒவ்வொரு உறுப்பினருக்கும் முன்னரே தந்திருக்கிறோம்.

பிற்பகல் 5–40

நிதிநிலை அறிக்கை 13–2–2004 அன்றே தாக்கல் செய்து இருக்கிறோம். அதை வைத்து அவர்கள் பேசி இருக்கலாம். ஆனால் அண்ணன் சந்தானம் அவர்கள் எடுத்துச் சொன்னதைப் போல, அவைக்கு வந்து, அவையில் நாங்கள் எடுத்து வைக்கும் விவரங்களை வாதாடிச்

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 23

சந்திக்கக்கூடிய திறன் இல்லாத காரணத்தால், அச்சத்தின் காரணத்தால், (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் இந்த அவையை இன்று புறக்கணிக்கிறார்கள். நல்ல ஒரு நிதிநிலை அறிக்கை (Interruption) Sorry. இந்த நிதிநிலை அறிக்கை தாக்கல் நாள் 13–2–2004 அல்ல, 11–2–2004 என்று திருத்திக்கொள்ளவும். நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரைக்கும், அனைத்துத் தரப்பு மக்களுக்கும், அனைத்துப் பிரிவுகளுக்கும், அனைத்துத் துறைகளுக்கும் சிறப்பாக நிதி ஒதுக்கீடு செய்து, அனைவராலும் பாராட்டப்பட்ட, பத்திரிகைகள் பலவற்றால் பாராட்டப்பட்ட நிதிநிலை அறிக்கையை எப்படி விமர்சிப்பது, விமர்சிப்பதற்கு என்ன point இருக்கிறது என்றுகூட ஏற்பட்ட அச்சத்தின் காரணமாய் இந்த அவைக்கு அவர்கள் வரவில்லை என்பதுதான் உண்மை.

இன்னொரு உண்மையும் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழகமாக இருந்தாலும் சரி, அதனுடைய தற்போதைய தோழமைக் கட்சிகளாக இருந்தாலும் சரி, அவர்களுடைய அணுகுமுறை இந்தியாவிலேயே எந்த ஒரு மாநில சட்டப் பேரவையிலும் இல்லாத அளவிற்கு, ஒழுங்கீனத்தைக் கடைப்பிடித்து, சட்டமன்றப் பேரவையை நடத்த விடாமல் தடுத்து, சட்டமன்றம் நடக்கின்ற நாட்களிலும் கலாட்டா செய்து, நிகழ்வில் முழுமையாகப் பங்கேற்காமல் Zero Hour முடிந்தவுடன் சத்தம் போட்டுவிட்டு வெளியேறுவதை வாடிக்கையாக, வழக்கமாக தி.மு.க. தலைமையிலான எதிர்க்கட்சிகள் மேற்கொண்டிருந்ததை நாடு அறியும்; இந்த அவை நன்கு அறியும். அதைக் கடைப்பிடிக்கலாம் என்றுதான் அவர்கள் எண்ணி இருந்தார்கள். இந்த முறை சட்டமன்றத்தை நடத்தவிடாமல் தொல்லைகளைத் தர வேண்டும், கலாட்டா செய்ய வேண்டும் என்ற திட்டத்தைத்தான் ஆரம்பத்திலே அவர்கள் தீட்டி இருந்தார்கள். ஆனால் அவர்கள் எதிர்பார்த்த அளவிற்கு மாறாக பாராளுமன்றத்தில் நிகழ்வு நடந்துவிட்டது. பாராளுமன்றத்திலே அவர்களுடைய ஆட்சி நடக்கிறது. தமிழகத்தைச் சேர்ந்த 12 அமைச்சர்களை உள்ளடக்கிய அந்தப் பாராளுமன்றத்தில் இருக்கிற காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியிலே இப்போது இருக்கின்ற நிலை நாடு அறிந்த நிலை. பாராளுமன்றம் நல்ல முறையிலே நடக்க முடியாத அளவிற்குத் தினமும் அங்கே அமளி நடந்து கொண்டிருக்கிறது. கொலை செய்தவர்கள் என்று கூறப்படுகின்றவர்கள் எல்லாம் அமைச்சர்களாக ஆகிவிட்ட காரணத்தால், ஊழல் குற்றத்தில் ஈடுபட்டு அது ஓரளவு நிரூபிக்கப்பட்ட நிலையிலே உள்ளவர்களும்கூட அமைச்சர்கள் ஆகிவிட்ட காரணத்தால், தி.மு.க. தலைமையிலான அந்த 12 அமைச்சர்களும்



2004 ஜூலை 23] [திரு. சி. பொன்னையன்]

இருக்கின்ற அந்த டில்லியைச் சேர்ந்த அமைச்சரவையில், காங்கிரஸ் அமைச்சரவையில் ஊழல் மந்திரிகள் இருக்கின்ற காரணத்தால் பாராளுமன்றத்தில் தினமும் கலாட்டா, அந்த ஊழல் மந்திரிகளை வெளியேற்ற வேண்டும் என்று. அதற்கு தி.மு.க.–வினுடைய தலைவர் திரு. கருணாநிதி எழுதினார், அவருடைய நாளேட்டில் எழுதினார், அறிக்கையே விட்டிருக்கிறார். அதை நான் அவைக்கு படித்துக்காட்ட விரும்புகிறேன்:

பிற்பகல் 5–45

"இந்தக் காலத்திலே எந்த மன்றமும் தொடர்ச்சியாகச் செயல்பட இயலவில்லை. அது நீதிமன்றமாக இருந்தாலும் சரி, அதற்கு யார் காரணம் என்று நான் சொல்ல மாட்டேன். நீதிமன்றமாக இருந்தாலும் சரி, சட்டமன்றமாக இருந்தாலும் சரி, நாடாளுமன்றமாக இருந்தாலும் சரி அங்கே எங்களை அனுப்புங்கள் என்று மக்களிடத்திலே கேட்கப் பல பேர் வருவார்களேயல்லாமல், அனுப்பி வைக்கப்பட்ட பிறகு, அங்கே போய் முறையாகப் பணியாற்றுகிறார்களா என்றால், இல்லை. அங்கே போய் என்ன ஆற்றுகிறார்கள் என்பதை ஏடுகளில் நாள்தோறும் காணுகிறோம். வாக்களித்த மக்கள் ஒரு நாள், வாக்களிக்கப்பட்டு இப்படிப்பட்ட மன்றத்திற்குச் சென்றவர்கள், அதிலும் குறிப்பாக நாட்டை ஆளுகின்ற, நிர்வகிக்கின்ற நாடாளுமன்றத்திற்குச் சென்றவர்கள் அங்கே முறையாகப் பணியாற்றாமல் தொடர்ந்து இப்படியே நடந்துகொள்வார்களேயானால், அவர்களை அங்கே அனுப்பி வைத்தவர்கள், நாடாளுமன்றத்திற்குத்தானே உங்களை அனுப்பி வைத்தோம்; அங்கே போய் அமளி, துமளியில் ஈடுபடவா என்று கேட்டு, வாக்களித்த மக்கள் அந்த உறுப்பினர்களை தர்ணா செய்கின்ற காலம் வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை". இதை திரு. கருணாநிதி பேசி இருக்கிறார். அதுமட்டுமல்ல, அதை அவர்களாகவே எடுத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு அந்த மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இருக்கின்றது என்றும் எழுதி இருக்கிறார். இதை நான் படித்துக் காட்டுவதற்குக் காரணம், கருணாநிதி தெளிவாக இப்படிக் கூறிவிட்டு, தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள், சட்டமன்றமாக இருந்தாலும் நாடாளுமன்றமாக இருந்தாலும் அங்கு செல்ல வேண்டும். கண்ணியத்தை, கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, இவ்வளவு காலமாக 2001–லிருந்து புரட்சித் தலைவி தலைமையிலான இந்த ஆட்சிக்குத் தொல்லை கொடுக்க வேண்டுமென்ற நோக்கோடு இந்தச் சட்டப் பேரவைக்கு வந்து எத்துணை தொல்லைகளைத்

தந்தார்கள், அமளியை ஏற்படுத்தினார்கள், ஒரு நாள்கூட ஒழுங்காக எந்த நடவடிக்கைகளிலும் பங்கேற்காமல் மக்களைத் திசை திருப்பினார்கள் என்பதை நாடு அறியும். அப்படித் தொடர்ந்து செய்ய வேண்டுமென்றுதான் திரு. கருணாநிதியும், மற்றவர்களும் விரும்பினார்கள். இப்படி நாடாளுமன்ற நிகழ்ச்சிக்குப் பிறகு அமைதி காக்கப்பட வேண்டுமென்ற ஓர் அறிக்கையையும் அவர் விட்டுவிட்ட நிலையிலே இந்தச் சட்டமன்றத்திற்கு இந்த முறை வந்து கலாட்டா செய்தால், நீ இப்படி ஓர் அறிக்கை விட்டு இருக்கிறாயே, எந்த முகத்தை வைத்துக்கொண்டு உனது ஆட்கள் எல்லாம் இங்கே இப்படி கலாட்டா செய்கிறார்கள் என்று அவையில் கேட்கின்றபோது (மேசையைத் தட்டும் ஒலி) தலைக்குனிவு ஏற்பட்டுவிடும் என்ற காரணத்தால், எந்த முகத்தை வைத்துக்கொண்டு தமிழக மக்கள் மத்தியில் செல்ல முடியும் என்ற அச்சத்தின் காரணத்தால் திரு. கருணாநிதி மற்றும் அவருடைய தோழமைக் கட்சியைச் சேர்ந்தவர்கள் அவையைப் புறக்கணித்துவிட்டு அவைக்கு வெளியே இப்படி இன்று அந்தப் போட்டிச் சட்டமன்றம் என்றோ, எந்தப் பெயரிலோ அவர்கள் அந்தப் பிரச்சினையை நடத்துகிறார்கள். அதுதான் உண்மை. தமிழகத்து மக்களைப் பொறுத்தவரைக்கும் தெளிவாக இருக்கிறார்கள்.

கருணாநிதியைப் பொறுத்தவரைக்கும் வெற்றி பெற்றுவிட்டோம் என்று ஏதோ தப்பான ஒரு கணக்கிலே இருக்கிறார். அது உண்மை அல்ல. அவருக்குக் கிடைத்து இருக்கிற, இதுகாறும் கிடைத்து இருக்கிற வெற்றி எல்லாம், ஒன்று, குறுக்கு வழியில் கிடைத்த வெற்றி அல்லது அரசியல் விபத்தால் கிடைத்த வெற்றியேயொழிய, மக்களால் கிடைத்த வெற்றி அல்லவே அல்ல என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

இந்தத் தேர்தலைப் பொறுத்தவரைக்கும் மக்கள் நன்கு அறிவார்கள். மக்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குத்தான் வாக்களித்தார்கள். தவறுகள் நடக்காமல் இருந்திருந்தால் 40 இடங்களிலும் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிதான்; நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள்தான் வெற்றி பெற்று இருப்பார்கள். 43 இலட்சம் வாக்காளர்கள், புரட்சித் தலைவிக்குச் சாதகமான வாக்காளர்களை வாக்காளர்கள் பட்டியலிலிருந்து திட்டமிட்டு நீக்கிவிட்டார்கள். அது தி.மு.க. மேற்கொண்ட ஒரு மிகப் பயங்கரமான சதித் திட்டம். அந்த சதித் திட்டத்தின் காரணமாக இது நடைபெற்றது. என்னுடைய பெயரைக்கூட என்னுடைய வாக்காளர் பட்டியலிலிருந்து அவர்கள் நீக்கிவிட்டார்கள்.



அதற்குக்கூட கருணாநிதி எழுதியிருந்தார். நான் என்னுடைய பெயரை என்னுடைய வாக்காளர் பட்டியலிலிருந்து திட்டம் தீட்டி நான் நீக்கி விட்டேன் என்று அவர் உண்மைக்கு மாறான ஒன்றை எழுதியிருந்தார். அவருக்கு ஒரு நம்பிக்கை எப்போதும் உண்டு. உண்மையற்ற ஒன்றைத் திரும்பத் திரும்ப, பொய்யான ஒன்றைத் திரும்பத் திரும்ப மெய், மெய் என்று சொன்னால் பொய்யும் மெய்யாகும் என்னும் கோயபல்ஸ் தத்துவத்தில் திரு. கருணாநிதி அவர்களுக்கு அளப்பரிய நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் அடிப்படையில், நான் என்னுடைய பெயரை வாக்காளர் பட்டியலிலிருந்து திட்டமிட்டு நீக்கிவிட்டேன் என்று எழுதினார். அதற்கு இந்த சென்னை நாடாளுமன்றப் பகுதிக்குத் தேர்தல் பொறுப்பிலே இருந்த அதிகாரி எழுதியிருக்கிறார். அதை நான் அவைக்குப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 5–50*

"Mr. Karunanidhi and Arcot Veerasamy have falsely alleged that I have deleted my name .." (Interruptions) Sorry. "This is with reference to the allegations against Thiru C. Ponnaiyan, Hon'ble Minister for Finance and Food, alleging that he has sought for deletion of his name from the electoral rolls published on 23-4-2004. The records have been verified. Following is the factual position:

Hon'ble Minister for Finance and Food, Thiru C. Ponnaiyan, has not applied for any deletion from the electoral rolls in Part 71 - 8. Anna Nagar Assembly Constituency which was published on 23rd April 2004. Deletion of his name without his knowledge from the electoral rolls in Part 71 of 8. Anna Nagar Assembly Constituency done by the election staff warrants severe disciplinary action. The allegation against the Hon'ble Minister for Finance and Food, Thiru C. Ponnaiyan, is unreasonable, baseless, justifying appropriate legal action," என்று அந்த சம்பந்தப்பட்ட அதிகாரியே இப்படி ஒரு குறிப்பை அரசுக்குத் தந்திருக்கிறார். இதில் திட்டமிட்டு, அவர்கள் இப்படி 43 இலட்சம் வாக்குகளை தமிழகத்தில்—The genuine voters, loyal to our Honourable Chief Minister Puratchi Thalaivi unless deleted, we would have come off with flying colours in all the 39 constituencies in Tamilnadu. அதுதான் உண்மை நிலை. அதுமட்டும் அல்ல, ஒருபுறம் புரட்சித் தலைவிக்குச் சாதகமான 43 இலட்சம் வாக்காளர்களை—வாக்காளர்கள் பட்டியலில் இருந்து நீக்கிவிட்டார்கள். இன்னும் ஒருபுறம், அவர்களுக்கு வேண்டிய வாக்காளர்களை இரண்டு இடங்களில், மூன்று இடங்களில்,

பல இடங்களில் பதிவு செய்து, கள்ள வாக்குகளைப் போடுகிற சதித் திட்டத்தில் ஈடுபட்டு அந்தத் திட்டத்தை ஈடேற்றி விட்டார்கள். அதற்காக, அவைக்கு ஒன்றிரண்டை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 136—வது வட்டம்; அவைக்கு நான் இதைத் தருகிறேன் — அவைத் தலைவர் அவர்களுக்கு. இது ஏற்கெனவே தேர்தல் ஆணையத்திற்கும் தந்து இருக்கிற பட்டியல்.

136—வது வட்டம்; தி.மு.க.வைச் சேர்ந்த வட்டச் செயலாளர் சி.டி. இறைவனின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். இவர் முன்னாள் துணை மேயர் சி. பவள வண்ணனின் மகனும் ஆவார். இவரது வீட்டில் பெயரைப் பதிவு செய்து இருக்கிறார்கள். ராஜேந்திரன், தீபலஷ்மி, சுஜாதா, பாஸ்கரன், துரை சத்திய நாராயணன், ஜெயமணி என்ற பெயர்கள் எல்லாம் ஒரு இடம், இரு இடங்களில் அல்ல, பல இடங்களில் அடையாள அட்டை; ஒருவருக்கு இரண்டு Photo Identity Cards வாங்கி இருக்கிறார்கள். ராஜேந்திரன் என்பவர் வீட்டு எண் 9—லே வாங்கி இருக்கிறார். தீபலஷ்மியும் வீட்டு எண் 9—ல் வாங்கி இருக்கிறார். அதையே அவர்கள் ஜி 12 என்ற வீட்டில், ராஜேந்திரன் மீண்டும் ஒரு Photo Identity Card வாங்கி இருக்கிறார். தீபலஷ்மி என்பவர் ஜி 12—ல் மீண்டும் ஒரு Photo Identity Card வாங்கி இருக்கிறார். அதைப் போலவே பவளவள்ளி குடும்பத்தைச் சார்ந்தவர்கள் 139—வது வட்டச் செயலாளர் மகேஷ் குமார், அவருடைய மனைவி, தி.மு.க—வைச் சார்ந்தவர்கள். அவர்கள் 69ஏ—1 என்ற Door number-லே, மகேஷ் என்பவர் Photo Identity Card வாங்கி இருக்கிறார். 69—ஏ என்பதிலும் சுஜாதா, அவருடைய மனைவி Photo Identity Card வாங்கி இருக்கிறார். அதைப்போலவே அவர்கள் வீட்டு எண் 9—லும் அதேபோல் Photo Identity Card வாங்கி இருக்கிறார். இப்படி நான் கையில் இப்போது வைத்து இருப்பது ஏகப்பட்ட, நூற்றுக்கணக்கான தி.மு.க—வைச் சார்ந்தவர்கள். அவர்களுடைய பெயரில் இரண்டு இடங்களில், 3 இடங்களில், 4 இடங்களில் அவர்கள் Photo Identity Card சட்டப்படி எடுத்து, அவர்கள் கள்ள வோட்டைப் போட்டு இருக்கிறார்கள். இப்படிப் போலி வாக்காளர்களைச் சேர்த்து இலட்சக்கணக்கான வாக்குகளைச் சேர்த்து இருக்கிறார்கள். எங்களுக்குச் சாதகமான வாக்காளர்களை அவர்கள், எங்களுக்கு விழ வேண்டிய வாக்குகளை அவர்கள் அறவே நீக்கி அதன் மூலமாகவும் அவர்கள் வெற்றிக்கு வழி வகுத்து இருக்கிறார்கள்.





இன்னும் ஒன்றை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், இதுகுறித்து. சிவகங்கையிலே ஒரு பெரிய அட்டூழியத்தை, நாடே பொறுக்காத அட்டூழியத்தைச் செய்து இருக்கிறார்கள். அங்கு கமலஹாசன் என்ற ஒருவர் அவரது தந்தை பெயர் சிவஞானம். அவருக்குப் பல இடங்களில், பல வீட்டு முகவரியில் பெயரைப் பதிவு செய்து இருக்கிறார்கள். எலிசபத்ராணி என்பவர், அவருக்கு வீட்டு எண் 494, 387, 402, 203, 338 ஆகிய இடங்களில் பதிவு செய்து இருக்கிறார்கள். கருப்பையாவினுடைய மனைவி எருமக்காள் என்பவருக்கு Door number 309, 55, 73 சி, 14எச், 661, 13, 308, 11பி, 77, 15 என்று கிட்டத்தட்ட 20 இடங்களில் 20 மாறுபட்ட booth-களில்; அதுதான் மிக முக்கியம்; ஒரு booth-ல் அவர்கள் பதிவு செய்யவில்லை. ஒரு booth-ல் அவர்கள் பதிவு செய்துவிட்டு, இந்த booth-ல் கள்ள ஓட்டுப் போடுவது பிறகு அழித்துவிடுவது. பிறகு அடுத்த booth-ல் போய்க் கள்ள ஓட்டுப் போடுவது. இப்படி, இதையெல்லாம் நாங்கள் Election Commission—க்கும் கொடுத்து இருக்கிறோம். சரிதா என்ற ஒரு பெண்மணியின் பெயரில் மட்டும் கிட்டத்தட்ட 18 இடங்களில் அவர்கள் கள்ள ஓட்டைப் பதிவு செய்து வாக்களித்து இருக்கிறார்கள். இப்படி கள்ள ஓட்டை அவர்கள்—தி.மு.க.காரர்கள். ஒரு திமுக—காரர், இன்னொரு திமுக—காரர் வீட்டிலே போய்ப் பெயரைப் போட்டு இப்படி false entries-false entries in voters list ஏற்படுத்தியதன் மூலமும் எங்களுக்குச் சாதகமான வாக்குகளை, அவர்கள் வாக்காளர்கள் பட்டியலில் இருந்து 43 இலட்சம் வாக்குகளை நீக்கிய காரணத்தாலும் பெற்றிருக்கிற வெற்றி, அவர்கள் சூழ்ச்சியால் பெற்ற பொய்யான வெற்றி. ஆனால் மக்கள் உண்மையிலேயே புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பக்கம்தான் இருக்கிறார்கள். இந்தச் சூழ்ச்சி, சூது நடக்காமல் இருந்து இருந்தால், நடப்பது தடுக்கப்பட்டு இருந்தால், 39 இடங்களிலும் புரட்சித் தலைவி அவர்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள்தான் இன்று டெல்லியிலே இருப்பார்கள். அங்கு இருப்பவர்கள் என்றால், ஏமாற்று வேலையில், சூழ்ச்சியில் சென்று இருக்கின்றவர்கள் என்பதை அவைக்கு நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

*பிற்பகல் 5—55*

அண்ணன் சந்தானம் அவர்கள் பேசுகிறபோது இன்னுமொன்றைச் சொன்னார். காவிரி நீர்ப் பிரச்சினையைப் பற்றிச் சொன்னார். அதை அவரே தெளிவுபடுத்திவிட்டார். அது மக்களுக்குத் தெரியும் என்று

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 23

நான் நம்புகிறேன். மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். * உண்மைக்கு மாறுபட்ட --"காவிரியில் மழை நன்கு பெய்த காரணத்தால் கபினி நிறைந்து விட்டது. கபினி நிறைந்து விட்ட காரணத்தால் தேக்கி வைக்க இடமில்லாத காரணத்தால், கபினியிலிருந்து தண்ணீரைத் திறந்து விட்டார்கள்". இப்படிக் கூறியது, அவர்களுடைய பத்திரிகையிலே வந்திருக்கிறது. 'தினகரன்' பத்திரிகை அவர்களுடைய பத்திரிகை அல்லது அவர்கள் சார்புப் பத்திரிகை. அதிலே கர்நாடக மாநிலத்தினுடைய முதலமைச்சர் கூறியிருக்கிறார். கபினி அணைக்கு நீர்வரத்து அதிகமானதைத் தொடர்ந்து...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** என்பதை உண்மைக்கு மாறுபட்டது என்று மாற்றிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நன்றி. "கபினி அணைக்கு நீர்வரத்து அதிகமானதைத் தொடர்ந்து நீர்மட்டம் அதன் முழு அளவைத் தொடும் நிலை ஏற்பட்டது. அணையின் பாதுகாப்பைக் கருதி, தண்ணீரைத் திறந்துவிட வேண்டுமென்று நீர்ப்பாசனத் துறை அதிகாரிகள் கூறியதால் தண்ணீரைத் திறந்து விட்டிருக்கிறோம். தண்ணீரினுடைய நிலைப்பாடு குறைந்த பிறகு கபினியில் நீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டு விடும்". இது கர்நாடக முதலமைச்சரினுடைய அறிக்கை. வெளியிட்டிருப்பது, அவர்களுடைய பத்திரிகையே வெளியிட்டிருக்கிறது. ஆனால் தமிழகத்து மக்களை விவரம் புரியாத மக்கள் என்றே திரு. கருணாநிதி எண்ணுகிறாரோ, அவர் கட்சியினர் எண்ணுகிறார்களோ என்று தெரியவில்லை. தமிழக மக்களை ஏமாற்றுகிற நோக்கோடு, ஏதோ திரு. கருணாநிதி மற்றும் காங்கிரஸ்காரர்கள் மன்மோகன் சிங் அவர்களுக்கு அஞ்சல் எழுதிய காரணத்தால் அல்லது சோனியா காந்தி அம்மையாருக்கு அஞ்சல் எழுதிய காரணத்தால், அவர் பிரதம அமைச்சர் கூறிய காரணத்தால் தண்ணீரைத் திறந்துவிட்டோம் என்று மார்தட்டிக் கொண்டு, தமிழக மக்களைத் தொடர்ந்து ஏமாற்றுகிற இந்த ஒரு வஞ்சகமான நிகழ்வு தமிழக மக்களுக்குப் பாதிப்பைத்தான் அதிகம் உருவாக்கும் என்பதனை தி.மு.க தலைவர் உணரவேண்டும். சட்டப் பேரவைக்கு வந்தால் இவற்றையெல்லாம் சொல்லி, அவர்கள் தலைகுனிய வேண்டிய நிலை ஏற்படும், பேச முடியாத நிலை ஏற்படும், வெட்கப்பட வேண்டிய நிலை ஏற்படும் என்ற அச்சத்தின் காரணமாக திரு. கருணாநிதி

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது



2004 ஜூலை 23] [திரு. சி. பொன்னையன்]

அவர்கள், அவர்கள் இயக்கத்தைச் சார்ந்தவர்களையும் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டார்; தோழமைக் கட்சியைச் சார்ந்தவர்களையும் சட்டப் பேரவைக்குப் போகவேண்டாம் என்று சொல்லிவிட்டார் என்றே நான் கருதுகிறேன்.

அடுத்து, நதிகள் இணைப்பு. நதிகள் இணைப்பைப் பொறுத்தவரைக்கும் ஒரு முக்கியமான பிரச்சினை. காவிரியில் தண்ணீர் வரவில்லை. நதிகள் இணைக்கப்பட்டால் மகாநதி, கங்கை இணைக்கப்பட்டு, மகாநதி, கோதாவரி வழியாக கிருஷ்ணா, துங்கபத்ரா என, வட பெண்ணை, இங்கே தென் பெண்ணை, பாலாறு, காவிரி என்று இணைக்கப்படுகிறபோது, நிரந்தரமாகக் கிராமப்புறப் பொருளாதாரத்திற்கு ஓர் உய்வு ஏற்படும் என்ற நோக்கோடுதான் மாண்புமிகு அம்மா அவர்கள் நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு முக்கியத்துவத்தைத் தந்தார். பாரதீய ஜனதாவினுடைய அரசும், இதை ஏற்று, மாண்புமிகு முன்னாள் மத்திய அமைச்சர் சுரேஷ் பிரபு தலைமையிலே இதற்காக ஒரு சட்ட ரீதியான குழுவையே அமைத்தது. 12 பேர் தமிழகத்தின் சார்பிலே டெல்லியிலே அமைச்சர்களாக இருக்கிறார்கள். உண்மையிலேயே அவர்களுக்குத் தமிழ்நாட்டு மக்கள்மீது அக்கறை இருக்கும் என்றால், வாக்களித்த மக்களுக்கு அவர்கள் நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்றால், என்ன செய்திருக்க வேண்டும்? இந்த நதிகள் இணைப்புத் திட்டத்தை ஈடேற்ற நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அந்த நடவடிக்கை எதுவுமே எடுக்காமல், அந்த நதிகளினுடைய இணைப்பு சம்பந்தப்பட்ட சுரேஷ் பிரபு அவர்கள் தலைமையில் இருக்கின்ற குழு—கடந்த ஜூன் 30 ஆம் தேதியுடன் இந்தக் குழுவினுடைய பதவிக் காலம் முடிந்து விட்டது. நடந்த நிதிநிலை அறிக்கையாக இருந்தாலும் சரி, மற்றும் மைய அரசினுடைய எந்த நடவடிக்கையாக இருந்தாலும் சரி, இந்தக் குழுவை அவர்கள் புதுப்பிக்கவில்லை. 50 சதவிகித பணி முடிந்து விட்டது. அப்படி இருந்தும்கூட நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கையிலே மைய அரசு ஒரு சல்லிக் காசு நிதியைக்கூட ஒதுக்கவில்லை. பி.ஜே.பி—யினுடைய அரசு கொண்டு வந்த திட்டம் என்பதற்காக, புரட்சித் தலைவி 1984-லிருந்து வலியுறுத்தி, தற்போது தொடர்ந்து வலியுறுத்தி வரும் திட்டம் என்பதற்காகத் தமிழக மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, அந்த நதிகளினுடைய இணைப்புத் திட்டம், கங்கை-காவிரி இணைப்புத் திட்டம் ஈடேறக் கூடாது என்ற வஞ்சக எண்ணத்தின் காரணத்தினாலோ, என்னவோ எந்த நடவடிக்கையும் எடுக்காமல், இந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டுவிட்டார்கள். அதை

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 23

இந்த அவை கண்டிக்கவேண்டும்; வன்மையாகக் கண்டிக்க வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 6–00*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டு 4 ஆயிரம் கோடி அளவிற்குப் பற்றாக்குறையை நமது மாநில அரசு எதிர்கொண்டது. காரணம், ஆட்சிப் பொறுப்புக்கு அம்மா அவர்கள் வந்தபோது, தி.மு.க. வினுடைய நிதிநிலைச் சீர்கேட்டால் கஜானா காலி என்ற நிலையிலே இருந்தது. அதை ஈடுகட்டப் பல்வேறு நடவடிக்கைகளை மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்தார்கள். தமிழ்நாடு மின்சார வாரியம் 4,851.89 கோடி அளவிற்குப் பற்றாக்குறையை எதிர்கொண்டிருந்தது. இடையிலே மைய அரசு, மத்திய வரி வருவாயில் நமது பங்கை 2,946 கோடி ரூபாய் அளவிற்குக் குறைத்துவிட்டது. அதுமட்டுமல்லாமல், 782 கோடி ரூபாய் வரவேண்டிய பணத்தில் 512 கோடி ரூபாயைக் குறைத்துவிட்டது. ஆக, 1,294 கோடி ரூபாய் அளவிற்கு ஒரு நிதிச் சரிவு ஏற்பட்டது. ஆனால் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சிக்கன நடவடிக்கைகளையும், சீர்திருத்த நடவடிக்கைகளையும், எப்படி எப்படி மேற்கொண்டால் வருவாயை மிகைப்படுத்த முடியும் என்று ஆய்ந்து அதற்கேற்ப செயல்பட்டதன் காரணமாக நிதிநிலை ஓரளவிற்குச் செம்மைப்படுத்தப்பட்டது. இப்படிச் செம்மைப்படுத்துவதற்கு, புரட்சித் தலைவி அவர்கள் இந்த நடவடிக்கையை எடுக்காமல் இருந்திருந்தால் காலி என்ற நிலையில் இருந்த கஜானா படுபாதாளத்திற்குச் சென்று, financial breakdown என்ற நிலை ஏற்பட்டு, மிக இக்கட்டான நிலைக்குத் தமிழகத்தினுடைய நிதிநிலை சென்றிருக்கும். இதைத் தடுப்பதற்குப் புரட்சித் தலைவி அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்த காரணத்தால், நிதிநிலை சீராக்கப்பட்டது.

அதே நேரத்தில் புரட்சித் தலைவி அவர்களுடைய எண்ணமெல்லாம், ஏழை, எளிய மக்களுக்கும், பாமர, பாட்டாளி மக்களுக்கும் அவர்களுடைய வாழ்க்கையின் செம்மைக்குத் தேவையான நல்ல திட்டங்களை, வாழ்க்கையின் செம்மைக்குத் தேவையான உத்தரவாதங்களைத் தரவேண்டுமென்பதுதான். அதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நோக்கம். அம்மா அவர்கள் தன்னுடைய நோக்கத்தை, எண்ணத்தை ஈடேற்ற, மக்களின் வேண்டுகோளை ஏற்று, மக்களின் விருப்பத்தை ஈடேற்ற வேண்டுமென்ற நல்ல எண்ணத்தில் பல திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள்.



2004 ஜூலை 23] [திரு. சி. பொன்னையன்]

பொது விநியோக முறை விரிவாக மறு ஆய்வு செய்யப்பட்டது. 'எச்' முத்திரை மக்களுக்குப் பாதிப்பு என்று அம்மா அவர்களுக்கு மக்களிடமிருந்து மனுக்கள் வந்த பிறகு, கோரிக்கைகள் வந்த பிறகு அது நீக்கப்பட்டது. பொது விநியோக முறையில் 5 ஆயிரம் ரூபாய் மாத வருவாய் என்ற வரம்பையும் அம்மா அவர்கள் நீக்கினார்கள். பலருக்குக் குடும்ப அட்டை கிட்டாத நிலை இருந்தது. குடும்ப அட்டைகள் பெற முடியாத நிலையிலே இருந்த அனைவருக்கும் குடும்ப அட்டைகள் தரவேண்டுமென்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் நடவடிக்கையை எடுத்துக் கொண்டார்கள். அதேபோல, P.D.S.- Public Distribution System–லே Coupon System இருந்தது. அது மக்களுக்குத் தொல்லையாக இருக்கிறது என்ற கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுக்கு வந்தவுடன், மக்களின் குரலுக்கு மதிப்பு அளிக்கும் அம்மா அவர்கள் அந்த கூப்பன் முறையை எடுத்தார்கள். உழவர் பெருமக்கள், அவர்கள் சந்தித்து வருகின்ற சிரமங்களை மாண்புமிகு அம்மா அவர்களை நேரில் சந்தித்து எடுத்துக் கூறி, இலவச மின்சாரம் அவர்களுக்கு வேண்டுமென்று கேட்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் கிராமப்புறப் பொருளாதாரம் நாட்டினுடைய 70% பொருளாதாரமாக இருக்கின்ற காரணத்தால் அந்தப் பொருளாதாரத்திற்கு ஊக்கம் தரும் முகத்தான், இலவச மின்சாரம் அனைத்து விவசாயிகளுக்கும் என்ற திட்டத்தையும் மாண்புமிகு அம்மா அவர்கள் நடைமுறைக்குக் கொண்டு வந்தார்கள்.

*பிற்பகல் 6–05*

அதைப்போலவே, குடிசைகளுக்கும் முற்றிலும் இலவச மின்சாரம் என்னும் திட்டத்தையும் மக்களின் கோரிக்கைகளை ஏற்று மாண்புமிகு அம்மா அவர்கள் தந்தார்கள். வீடுகளுக்கு உள்ள மின் கட்டணம் மிக அதிகமாக உயர்த்தப்பட்டுவிட்டது என்ற குறைப்பாட்டை புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் பொது மக்கள் கூறியபோது, அதை ஆயச் சொல்லி, ஆய்ந்து, கிட்டத்தட்ட 910 கோடி ரூபாய் மின்சார வாரியத்திற்கு—அரசுக்கு இழப்பு ஏற்பட்டாலும்கூட, இது நியாயமான கோரிக்கை என்பதனை உணர்ந்த—அம்மா அவர்கள், அதையும், அவர்களுக்குத் தந்துவிட்டார்கள்.

குழந்தைகளுக்குச் சத்துணவுத் திட்டத்திலே முட்டையைத் தரவேண்டும் என்ற கோரிக்கையை ஏற்று முட்டையையும் மாண்புமிகு அம்மா அவர்கள் தந்துவிட்டார்கள். அதேபோல இலவச பஸ் பாஸ் பள்ளி மாணவர்களுக்கும் கல்லூரி மாணவர்களுக்கும் புரட்சித் தலைவி

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 23

அவர்கள் நல்கினார்கள். அதுபோலவே, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும்-அந்தக் குழந்தைகளுக்கு–11, 12–வது படிக்கின்ற குழந்தைகளுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இலவச மிதிவண்டி–சைக்கிள்–தருகின்ற திட்டத்தை அறிவித்தார்கள். இப்படிப் பல திட்டங்களை அறிவித்தபோது, 1,205 கோடி ரூபாய் அரசுக்கு இதனால் நிதிச் சுமை ஏற்பட்டது.

அதுமட்டுமல்லாமல், 590.47 கோடி ரூபாய் 2004–2005 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தின்போது பற்றாக்குறையாக இருந்தது. தற்போதைய புதிய அறிவிப்புகளின் காரணமாக 1,205.49 கோடி ரூபாய் அதிகமான கூடுதல் செலவு ஏற்பட்டது. ஒட்டுமொத்தமாக 1,795.96 கோடி ரூபாய் அரசுக்குக் கூடுதல் செலவுப் பொறுப்பு ஏற்பட்டது. இதை ஈடுகட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். நிதிப் பிரச்சினையைப் பொறுத்தவரைக்கும், அரசுக்கு ஓரளவு வருவாயைப் பெருக்குவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்கிற அம்மா, பல்வேறு முறைகளில் நிதி ஆதாரத்தைப் பெருக்கியிருக்கிறார்கள்.

மைய அரசைப் பொறுத்தவரைக்கும் 29.5 சதவிகிதம்--the share for the States from the Central Government. Central Taxes-லிருந்து 29.5 சதவிகிதம்—மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. அதிலே மாநிலங்களிலிருந்து மைய அரசுக்கு Central Taxes அதிகமாக உயர்ந்திருக்கிற காரணத்தால் அதன் மூலமாக மட்டும் 271.02 கோடி ரூபாய் தற்போது கூடுதலாக நிதி கிடைத்திருக்கிறது.

Commercial Taxes Department மூலமாக 970 கோடி ரூபாய்; Registration Department மூலமாக 415 கோடி ரூபாய்; அதைப் போல, வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக 100 கோடி ரூபாய், ஆக 1,485 கோடி ரூபாய் அதிகமாக நிதியினைப் பெறக்கூடிய சாத்தியக்கூறுகள், நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஆனாலுங்கூட, குறைந்தபட்சமாக 400 கோடி ரூபாய் இதன்மூலம் கிடைக்கும் என்பதை மட்டும் கணக்கில் எடுத்தாலும்கூட—அதிலே 400 கோடி ரூபாய் கணக்கில் கொண்டுவரப்பட்டிருக்கிறது—சிக்கன நடவடிக்கைகளை அனைத்துத் துறைகளிலும் மேற்கொள்வதன்மூலம் 450 கோடி ரூபாய் சேமிப்பைப் பெற ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படிச் செய்கின்ற காரணத்தால் 1,795.96 கோடி ரூபாய் பற்றாக்குறையில், எஞ்சியுள்ள பற்றாக்குறையான 224.94 கோடி ரூபாயை TUFIDCO, HUDCO, NABARD, L.I.C., G.I.C. போன்ற அமைப்புகளிடமிருந்து பெறுவதற்கும்



2004 ஜூலை 23] [திரு. சி. பொன்னையன்]

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால், அந்தக் கடனைக்கூடப் பெற வேண்டிய தேவை இல்லாத அளவிற்கு Commercial Taxes Department மூலமே அதிக வருவாய் பெறக்கூடிய நிலை இருக்கிறது. இப்படிப் பார்க்கின்றபோது, this way, there will not be any budgetary deficit at all என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. In fact, ஒரு உண்மை நிலையைச் சொன்னால், there will be surplus amount available with the Government in spite of all these roll backs என்ற நிலையில் நிதி நிலையைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செம்மைப்படுத்தி இருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை (மேசையைத் தட்டும் ஒலி) நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒன்றை நான் அவைக்குக் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் இயங்கும் இந்த அரசு நிதி நிலையை மிகவும் சிறப்பான முறையில் மேம்படுத்தியுள்ளது என்பதை மத்திய அரசே ஒத்துக்கொண்டு அதுகுறித்து எழுதியிருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் இதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், ஏதேதோ அவ்வப்போது மாறி, மாறிப் பேசி வருகிறார்கள். தொடர்ந்து வறட்சி இருந்தபோதிலும் திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றி, சீர்கெட்ட நிலையிலே தி.மு.க. ஆட்சியால் விடப்பட்ட நிதிநிலையைச் செம்மையாக்கி, இன்று deficit என்பதே இல்லாத ஒரு பட்ஜெட் என்ற நிலையை உருவாக்கிய பெருமை பொருளாதார சாணக்கியத்தனத்தோடு ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை மட்டும் சாரும் என்பதனைத் (மேசையைத் தட்டும் ஒலி) தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 6–10

தற்போது மாண்புமிகு அம்மா அவர்கள் சாமர்த்தியமாக நிதிநிலையைக் கையாண்டு நிதித் துறையில் எத்தகைய அணுகுமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆலோசனையை நல்கிய காரணத்தால் மாண்புமிகு அம்மா அவர்கள் பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிறார்கள். ஐயோ, சலுகைகளை இவ்வளவு அளித்துவிட்டார்களே, எப்படி ஆட்சியை நடத்தப் போகிறார்கள் என்று முதலைக் கண்ணீரை விடுகிறார்கள். சலுகைகளை அளித்தாலும் குறை சொல்கிறார்கள். சீர்திருத்தங்களைக் கொண்டுவந்தாலும் குறை சொல்கிறார்கள். இது இவர்களுடைய சுயநல அணுகுமுறை என்பதை மட்டும் நான் அவைக்கு எடுத்துச் சொல்லி, மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு ஆலோசனைகளை இங்கு எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

[திரு. சி. பொன்னையன்] [2004 ஜூலை 23

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அந்த ஆலோசனைகளை எல்லாம் கட்டாயமாகப் பரிசிலித்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை எடுத்துச் சொல்லி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தொலைநோக்குச் சிந்தனையோடு உருவான இந்த நிதிநிலை அறிக்கைக்கு அவை ஏற்பளிக்க வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் திங்கட்கிழமை (26–07–2004) காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 6–12 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

34. வணிக வரித் துறையின் 16–2–2001 ஆம் நாளிட்ட 24 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிக்கையினை இரத்து செய்தது மற்றும் சென்னை அரசினர் பொது மருத்துவமனை, சென்னை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனம், இதய நோயியல் நிறுவனத்தால் வாங்கப்பட்ட எத்திலின் ஆக்சைடு ஸ்டெரிலைசர் (Ethylene Oxide Steriliser) மீது செலுத்தத்தக்க வரிக்கு விலக்களித்தது குறித்து வணிக வரித் துறையின் 19–5–2004 ஆம் நாளிட்ட 95 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

35. மனநலம் குன்றிய மற்றும் உடல் ஊனமுற்ற குழந்தைகளின் போக்குவரத்துக்காக கும்பகோணத்திலுள்ள திருவாளர்கள் இந்திய உடல் ஊனமுற்றோர் மற்றும் மறுவாழ்வு சங்கத்தால் வாங்கப்பட்ட TN 49 U 1222 பதிவு எண் கொண்ட பள்ளி வேனின் மீது செலுத்தத்தக்க வரித்தொகை மற்றும் மேல் வரியினை தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரித் துறையின் 28–5–2004 ஆம் நாளிட்ட 100 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]



2004 ஜூலை 23]

36. 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைப் பிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டம், 14–5–2003 ஆம் நாள் முதல் நடைமுறைக்கு வருவது குறித்தும், மேற்படி சட்டத்தின்கீழ் செயல்படுவதற்காக தகுதிவாய்ந்த நபர்களுக்கு அதிகாரம் அளிப்பது குறித்தும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 14–5–2003 ஆம் நாளிட்ட 91 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு புகைப் பிடித்தலையும், எச்சில் உமிழ்வதையும் தடை செய்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/2003) 18 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

37. 2002–2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

38. 2002–2003 ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

39. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்–I) முப்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

40. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்–3) இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

41. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (மதுரை கோட்டம்–4) பதினேழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

42. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்–I) முப்பத்திரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

43. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (கோயம்புத்தூர் கோட்டம்–2) இருபதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

44. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (சேலம் கோட்டம்–2) பதினாறாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

45. 2002–2003 ஆம் ஆண்டு அரசு போக்குவரத்துக் கழகத்தின் (விழுப்புரம் கோட்டம்–3) பதினோராவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

9. கணினி துணை பாகங்கள் மற்றும் உதிரி பாகங்களின் மாநிலங்களுக்கிடையிலான விற்பனையைப் பொறுத்தவரையில் வணிகர்கள் செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்து வணிக வரித் துறையின் 12–2–2004 ஆம் நாளிட்ட 46 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

10. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (முதலாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

11. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (இரண்டாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

12. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (மூன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

13. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (நான்காவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

14. உடுக்குறியிடாத வினாக்கள்– விடைகள் (ஐந்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)





15. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (ஆறாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

16. உடுக்குறியிடாத வினாக்கள்–விடைகள் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

---

V2M, 31 'P04
P04. 58.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
சென்னை – 600 008
நூலகம்

N.T.P. SUPPLIED BY THE DEPARTMENT
PRINTED AT GOVERNMENT CENTRAL PRESS, CHENNAI-600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
112, Anna Salai,
Chennai-600 002.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.